[Issued—8 10-1979
[வெளியீடு—8-10-1979

INDEX NIL
NO 2 "

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1979 மார்ச் 9—தொகுதி XXV—எண் 1
Friday 9th Mar .. 1979 — Volume XXV—No. 1, 3 & 4
12th, 13th March 1979

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1979

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம்-கனிவளம்.

2. திரு. இ மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6 திரு. க. உரொ. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. திரு. இராம. வீரப்பன்: (செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. திரு. க. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம், இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்) தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி வேலை வாய்ப்பும் பயிற்சியும்,

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு: (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி. வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் : (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (சமூக நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.



## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

| | | |
|---|---|---|
| . | திரு. எம். வின்சென்ட்: | நிதி அமைச்சரின் பேரவைச் செயலர். |
| . | திரு. ஆனூர் ஜெகதீசன்: | கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 3. | திரு. பி. முசிரிபுத்தன்: | வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 4. | திரு. ஐசரி வேலன்: | செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 5. | திரு. எம். ஏ. ஜெயவேலு: | சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 6. | திரு. ஆ. வெள்ளைச்சாமி: | கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 7. | திரு. ப. கோ. கிட்டு: | போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 8. | திரு. இரா. அருணாசலம்: | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

*Thiru PRABHUDAS PATWARI*

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. HON. THIRU S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. HON. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

## PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. முனு ஆதி.

**பேரவைத் துணைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி. எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

**துணைச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மரூபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

**தலைமை நிருபர்.**

திரு. மா. சந்திரசேகரன்.

**விவாதப் பதிப்பாளர்,**

திரு. வி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

---

*12–2–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.*

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

| தொடர் எண் | உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பென்னகரம். |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.) |
| 8 | அர்ச்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 9 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.) |
| 10 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 11 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, சென்னை. |
| 12 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர்-மேற்கு. |
| 13 | அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.) | நாமக்கல் (செ.வ.). |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம், சென்னை. |
| 16 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதீசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 22 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 23 | ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 26 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |
| 27 | இராமச்சந்திர ரெட்டி, திரு. என். .. | ஹோசூர். |



| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 28 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.) | அருப்புக்கோட்டை. |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர். | சாத்தூர். |
| 30 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 | இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.) |
| 33 | இராமசாமி, திரு. எஸ்.ஜே. .. | சோளிங்கர். |
| 34 | இராமசாமி, திரு. கே. என்.கே. | கோபிசெட்டிப்பாளையம். |
| 35 | இராமசாமி, திரு. கொ. | சிவகாசி. |
| 36 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 37 | இராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோவில். |
| 38 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 39 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 40 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 41 | இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 42 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 43 | உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி. |
| 44 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 45 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 46 | உமாநாத், திரு. ரா. .. .. | நாகப்பட்டினம். |
| 47 | உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 48 | எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 49 | எத்ராஜ், திரு. கி. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 50 | ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பட்டு. |
| 51 | ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.) | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை. |
| 52 | கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 53 | கணேசன், திரு. இ. .. | எடப்பாடி. |
| 54 | கணேசன், திரு. எஸ். .. | பூம்புகார். |
| 55 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 56 | கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 57 | கபாலி, திரு, டி. கே. .. | மயிலாப்பூர்-சென்னை |
| 58 | கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 59 | கருணாநிதி, திரு. மு. .. | அண்ணாநகர், சென்னை |
| 60 | கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ. வ.) |
| 61 | கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 62 | கருப்பசாமி பாண்டியன் திரு. வீ. | ஆலங்குளம். |
| 63 | கலியமூர்த்தி திரு. துரை. .. | சிதம்பரம். |
| 64 | காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 65 | காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம். |
| 66 | காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 | காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 68 | கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 69 | கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | பல்லடம். |
| 70 | கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 | கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 72 | கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 | கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 74 | கிருஷ்ணன், திரு. ரா .. | வாசுதேவநல்லூர் (செ. வ. |
| 75 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 76 | குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டிபூர் (செ. வ.) |
| 77 | குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 78 | கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 79 | கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 80 | கோவிந்தராசன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 81 | கோவிந்தன், புலவர் .. | கா. செய்யாறு. |
| 82 | கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி: (2) |
|---|---|---|
| 83 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |
| 84 | சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 85 | சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 86 | சண்முகம், திரு. கூத்தக்குடி ச. | திருப்பத்தூர். |
| 87 | சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 88 | சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 | சந்திரசேகரன், திரு. ஆ. .. | கம்பம். |
| 90 | சந்திரன், திரு. ப. .. | பெரணமல்லூர். |
| 91 | சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராய நகர், சென்னை. |
| 92 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 | சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 94 | சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபனாசம் |
| 95 | சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்வளக்கு, சென்னை. |
| 96 | சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.) |
| 98 | சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 | சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி |
| 100 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 | சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 102 | சின்னசாமி, திரு. வி. கொ. .. | பவானிசாகர். |
| 103 | சின்னையா, திரு. வீ. .. | குளத்தூர் (செ. வ.) |
| 104 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 | சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 | சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 108 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 109 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 110 | சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 | சுப்பிரமணியம், திரு. ஆ. சி. .. | கடலாடி. |
| 112 | சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 | சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 114 | சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 116 | சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 117 | சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 118 | சுப்ரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 119 | சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 | சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). .. | மொடக்குறிச்சி. |
| 121 | சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 122 | சுவாமிதாஸ், திரு. அ. .. | பத்மநாபபுரம். |
| 123 | செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 124 | செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 125 | செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 | செல்வராஜ், திரு. சீனி .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 128 | செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 130 | சோமசுந்தரம், திரு. ஓ. ப. .. | பொள்ளாச்சி. |
| 131 | சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 132 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 | சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்) | ஸ்ரீரங்கம். |
| 134 | சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 135 | ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |
| 136 | தங்கவேல், திரு. ர.ச. .. | வால்பாறை (செ.வ.) |
| 137 | தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 138 | தண்டபாணி, திரு. ரா.க.சு. | காங்கேயம். |
| 139 | தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 140 | தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 142 | தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 | திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 | துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 | துரைசாமி, திரு. ப. .. .. | ராசிபுரம். |
| 148 | துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 | துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 152 | தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 | நடராசன், திரு. ஆர். .. | பேரூர். |
| 154 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 | நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 | நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 | நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர். |
| 158 | நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 160 | பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 | பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ.வ.). |
| 162 | பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர். |
| 163 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 | பழனிசாமி, திரு. சொ. நா. | அவினாசி. |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 114 | சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 116 | சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 117 | சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 118 | சுப்ரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 119 | சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 | சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). .. | மொடக்குறிச்சி. |
| 121 | சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 122 | சுவாமிதாஸ், திரு. அ. .. | பத்மநாபபுரம். |
| 123 | செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 124 | செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 125 | செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 | செல்வராஜ், திரு. சீனி .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 128 | செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 130 | சோமசுந்தரம், திரு. ஓ. ப. .. | பொள்ளாச்சி. |
| 131 | சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 132 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 | சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்) | ஸ்ரீரங்கம். |
| 134 | சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 135 | ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |
| 136 | தங்கவேல், திரு. ர.ச. .. | வால்பாறை (செ.வ.) |
| 137 | தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 138 | தண்டபாணி, திரு. ரா.க.சு. | காங்கேயம். |
| 139 | தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 140 | தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 142 | தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 | திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 | துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 | துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 | துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 | துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 152 | தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 | நடராசன், திரு. ஆர். .. | பேரூர். |
| 154 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 | நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 | நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 | நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர். |
| 158 | நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 160 | பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 | பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ.வ.). |
| 162 | பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர். |
| 163 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 | பழனிசாமி, திரு. சொ. நா. | அவினாசி. |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 169 | பாலகிருஷ்ணன், திரு. சோ. . . | முதுகுளத்தூர். |
| 170 | பாலகுரு, திரு. வெ. . . | சோழவந்தான், |
| 171 | பாலன், திரு. சு. . . . . | பெரம்பூர், சென்னை. |
| 172 | பாலாஜி, திரு. க. . . | காஞ்சிபுரம். |
| 173 | பாலுச்சாமி, திரு. அ. . . | நிலக்கோட்டை (செ.வ.). |
| 174 | புருஷோத்தமன், திரு. து. . . | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 | புஸ்பராஜு, திரு. த. | ஆலங்குடி. |
| 176 | பெரியசாமி, திரு. டி. பி. எம். | மதுரை மேற்கு. |
| 177 | பெரியசாமி, திரு. மொ. . . | மங்களூர் (செ. வ.) |
| 178 | பெரியசாமி, திரு. ரா. . . | உப்பிலியாபுரம். |
| 179 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ. வ.) |
| 180 | பெருமாள், திரு. ரா. கு. . . | விளாத்திகுளம். |
| 181 | பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை. |
| 182 | பொன்னுரங்கம், திரு. ப. . . | இராயபுரம், சென்னை. |
| 183 | பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) | திருச்செங்கோடு. |
| 184 | மணிமாறன், திரு. ஆர். . . | திருப்பூர். |
| 185 | மணிமாறன், திரு. மா. . . | நன்னிலம் (செ.வ.). |
| 186 | மணிமுடி, திரு. எஸ். . . | எழும்பூர், சென்னை. (செ. வ.) |
| 187 | மருதாசலம், திரு. க. . . | தொண்டாமுத்தூர். |
| 188 | மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) | பாளையங்கோட்டை. |
| 189 | மாணிக்கம், திரு. சி. . . . . | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 | மார்க்கபந்து, திரு. ரா. . . | அணைக்கட்டு. |
| 191 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் . . | (நியமன உறுப்பினர்). |
| 192 | மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 193 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 | முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | முசிறி. |
| 195 | முத்துசாமி, திரு. பா. கா. சி. | தர்மபுரி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 196 | முத்துசாமி, திரு. சு. . . | ஈரோடு. |
| 197 | முத்துசாமி கரையாளர், திரு.சு. | தென்காசி. |
| 198 | முத்தையா, திரு. இரா. . . | சேடப்பட்டி. |
| 199 | முத்தையா, திரு. கே. கே. . . | மருங்காபுரி. |
| 200 | முருகேசன், திரு. கூ. ச. . . | திருவரம்பூர். |
| 201 | முனிரத்தினம், திரு. இரா. ச. | கும்மிடிபூண்டி. |
| 202 | முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) . . | தாம்பரம். |
| 203 | முனுசாமி, திரு. பொ. . . | வந்தவாசி (செ.வ.). |
| 204 | மூக்கையா தேவர், திரு. பி. கே. | உசிலம்பட்டி. |
| 205 | யூசுப், திரு. யா. சை. மு. . . | ராதாபுரம். |
| 206 | ரகுமான்கான், திரு. அ. . . | சேப்பாக்கம்-சென்னை, |
| 207 | ரகுராமன், திரு. வி. . . | புவனகிரி. |
| 208 | ரகோத்தமன், திரு. கோ. . . | முகையூர். |
| 209 | ரசாக், திரு. எம். எம். ஏ. . . | கடையநல்லூர். |
| 210 | ரமணி, திரு. கு. . . . . | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 211 | ராமதாஸ், திரு. பி. . . | போடிநாயக்கனூர். |
| 212 | ராமநாதன், திரு. சி. . . | விருத்தாசலம். |
| 213 | ராமலிங்கம், திரு. ஏ. . . | காட்டுமன்னார்கோவில் (செ. வ.). |
| 214 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. . . | புதுக்கோட்டை. |
| 215 | ராஜு, திரு. செ. மெ. . . | தலைவாசல் (செ. வ.). |
| 216 | ராஜு, திரு. வி. கே. . . | அரக்கோணம் (செ.வ.). |
| 217 | லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 | லத்திப், திரு. எம், ஏ. . . | வாணியம்பாடி. |
| 219 | வடிவேல், திரு. கு. . . | கரூர். |
| 220 | வரதராஜன், திரு. என். . . | திண்டுக்கல். |
| 221 | வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 | வாசன், திரு. சீ. மு. . . | வேடசந்தூர். |
| 223 | வின்சென்ட், திரு. எம். . . (அமைச்சரின் பேரவைச் செயலர்). | நாகர்கோவில். |
| [illegible]4 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | | தொகுதி |
|---|---|---|
| | (1) | (2) |
| 225 | வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | ஆத்தூர். |
| 227 | வேங்கா கவுண்டர், திரு. பி... | வீரபாண்டி. |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 230 | ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | செங்கல்பட்டு. |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 | ஜெபமணி, திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 233 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 | ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | காட்பாடி. |
| 235 | ஜேம்ஸ், திரு. ஜே. .. | திருவட்டாறு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3 திரு. ஆர். எம். வீரப்பன்.
4 திரு. கே. நாராயணசாமி.
5 திரு. எஸ். இராகவானந்தம்.
6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*State Planning Commission.*

*Q. No. 298—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether a new Vice Chairman for the State Planning Commission has been appointed during April 1978 ;

(*b*) the details of the qualificat on of the incumbent ; and

(c) the details of the qualifications prescribed for the appointment of the post?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம். மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவராக திரு. கோவை செழியன் 1978 ஏப்ரலில் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) எம். ஏ.

(இ) பல துறைகளில் அனுபவம் பெற்றவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட கல்வித் தகுதி எதுவும் வரையறுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, திட்ட ஆணைக் குழு நிறைவேற்ற வேண்டி இதுவரை அரசுக்கு பரிந்துரை செய்த திட்டங்கள் எவை, எவை? அவற்றில் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள் எவை, எவை? அவைகளுக்கான மதிப்பீட்டுத் தொகை என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, திட்டங்கள் எவை, எவை என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அதற்கு தனிக் கேள்வி போட்டால் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலும்.

[1979 மார்ச் 9

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது அமைச்சரின் செயலர் அவர்கள் இங்கே நியமிக்கப்பட்டுள்ள துணைத் தலைவருடைய நிலைபற்றிக் குறிப்பிட்டார்கள். நியமிக்கப் பட்டுள்ள துணைத் தலைவருக்கு அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும் வழங்கப்படுகின்றது என்பது உண்மையா? அவருக்கு அளிக்கப்பட்டுவரும் மாதச் சம்பளம் என்ன? இதர சலுகைகள் யாவை?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

திரு. நா.சுந்தரராஜ் : தலைவரவர்களே, திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவருக்கு வழங்கப்படுகின்ற மாதாந்திர சம்பளம் எவ்வளவு? இதர படிகள் என்ன, என்ன?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் திட்ட ஆணைக் குழுவில் தற்போது இருக்கும் நிர்வாகிகள் யார் யார் என்று அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைவர் ; திரு. கோவை செழியன் அவர்கள் துணைத் தலைவர்; டாக்டர் என். சண்முகசுந்தரம், பார்ட் டைம் மெம்பர் ; திரு. கே. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., மெம்பர்; திரு. என். ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., மெம்பர் ; திரு. டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்., மெம்பர்; திரு. ஆர். நாகராஜன், ஐ.ஏ.எஸ்., மெம்பர் அண்ட் செயலாளர் ஆகியோர் இருக்கிறார்கள்.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, இந்தத் திட்டக் குழுவின் பொறுப்புகள் யாவை ?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, திட்ட ஆணைக்குழு சமுதாயத்திலே ஏற்படும் மாற்றங்களை கண்காணித்து, அவ்வப்போது மதிப்பிட்டு அறிந்து அவற்றைச் செயற்படுத்த அவசியமான நடவடிக்கைகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல் ; மாநிலத்தில் பொருளாதார நடவடிக்கைபற்றி அரசுக்கு ஆலோசனை அளித்தல் ; மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல், அவற்றை செயல்படுத்த பொருளாதாரத் திட்டங்களை வரையறை செய்தல், 10 ஆண்டு கால 1974 முதல் 1984 வரையில்- சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுதல் ஆகிய பணிகளைச் செய்கிறது.



1979 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 299-ஐயும், 300-யும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## நெல், அரிசி கொள்முதல்.

*வினா எண் 299—திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977–78-ம் ஆண்டுக்காக அரசாங்கம் கொள்முதல் செய்த நெல், அரிசி எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரோ.— எட்மண்ட் : (அ) 1977 குறுவை பருவத்திலும் 1978 சம்பா பருவத்திலும் 17—10—1977 முதல் 16–8–1978 வரை 3·29 இலட்சம் அரிசி டன்களுக்கு ஈடான நெல்/அரிசி கொள்முதல் மூலமும் வெளிச்சந்தையிலும் வாங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மதிப்பு ரூ. 49 கோடியாகும்.

*வினா எண். 300—திரு. ஆ. நடராஜன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1–6–1977-க்குப் பின் அரசு வெளிமாநிலங்களில் அரிசி கொள்முதல் செய்ததா?

(ஆ) எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) கோவை மாவட்டத்திற்கு அதிலிருந்து அனுப்பப்பட்ட அரிசிக்கு ரயில்வே இலாகாவுக்கு செலுத்தப்பட்ட வாடகை, அபராதத் தொகை (டெமரேஜ்) எவ்வளவு

(ஈ) அதற்கான காரணம் யாது ?

[1979 மார்ச் 9

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம். பொது
விநியோகத் தேவைக்குப் போதுமான கையிருப்பை ஏற்படுத்து
வதற்காக நெல்/அரிசி வாங்கப்பட்டது.

(ஆ) நவம்பர் 1977—லிருந்து மே 1978 முடிய 24,078
மெட்ரிக் டன் நெல்லும், 1,01,356 மெட்ரிக் டன் அரிசியும் வட
மாநிலங்களிலிருந்து அரசு வாங்கியது.

(இ) கோவை மாவட்டத்திற்கு அதிலிருந்து அனுப்பப்பட்ட
அரிசிக்கு ரயில்வே இலாகாவுக்கு வாடகையாக ரூ. 4,44,518·30 ம்
அபராதமாக (டெமரேஜ்) ரூ. 97,838·60 ம் செலுத்தப்பட்டது.

(ஈ) பிப்ரவரி 78 ல் இரயில்வே இலாகா வேகன்கள் பெரும்
அளவில் ஒரே சமயத்தில் வந்து குவிந்ததால் இரயில் நிலையங்
களில் சரக்கு தேங்க நேர்ந்தது. விலை குறைவாக இருக்கும்
போதே வாங்குவது நலம் என்று கருதியதால் குறுகிய காலத்
தில் வடமாநிலங்களில் நெல்/அரிசி வாங்கவேண்டிய அவசியம்
ஏற்பட்டது. அத்துடன் ஆந்திராவில் எதிர்பாராத வெள்ள
மும், புயலும் வந்தபடியால், வேகன்கள் தேக்கமடைந்து அவை
ஒன்றாக வந்து சேர்ந்ததாலும், கோயம்புத்தூர் இரயில் நிலை
யத்தில் வந்து சேர்ந்த சரக்குகளுக்கு உடனடியாக இரயில்வே
ரசீதுகள் வராததாலும் கால தாமதம் ஏற்பட்டதாலும் அபராதத்
தொகையும் வாடகையும் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்
பட்டது. இரயில்வே இலாகாவிடம் இந்த அபராதத் தொகையை
தள்ளுபடி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. சில சரக்கு
கள் தரப் பரிசோதனைக்குப் பிறகு விற்பனையாளருக்கு திருப்பி
அனுப்பப்பட்டபோதிலும், அவர்கள் உடனே அவைகளை எடுக்
காததாலும் வாடகை செலுத்த நேரிட்டது. இத்தொகையை
விற்பனையாளர்களிடமிருந்து திரும்பப்பெற நடவடிக்கை எடுக்
கப்பட்டு வருகிறது. தீவிர ஏற்பாடுகள் செய்து உயர்ந்த பட்சம்
எவ்வளவு சரக்கை நாள்தோறும் எடுக்க முடியுமோ அந்த அளவு
எடுத்த போதிலும், மேற்கூறப்பட்ட காரணங்களால், வாடகை,
அபராதத் தொகை செலுத்துவது தவிர்க்கமுடியாததாகிவிட்ட
தென தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தெரிவித்
துள்ளது.

திரு. மு. செல்வராஜ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள்
வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டதாகச் சொன்
னார்கள். அவ்வாறு வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல்
செய்யப்பட்ட அரிசிக்கு குவிண்டால் ஒன்றுக்கு என்ன விலை
வீதம் வாங்கப்பட்டது. அந்த நேரத்தில் போதுமான நெல்,
அரிசி தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, கொள்முதல் செய்யப்
படாமல் தேங்கிக் கிடந்தபோது வெளி மாநிலத்திலிருந்து வாங்க
வேண்டிய அவசியம் என்ன?



1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்பட்ட நெல், அரிசிக்கு என்ன விலை கொடுக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மூலக் கேள்விக்கு அது தொடர்புடையதாக இல்லாததால் என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்பதற்கு விவரம் இல்லை. என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்று அவர்கள் அறிய விரும்பினால் தனிக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துத் தரப்படும்.

அவர்கள் இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே நெல் அறுவடை செய்திருந்த நேரம், இங்கேயே தாராளமாகக் கிடைக்கக்கூடிய அளவுக்கு இருந்த போதிலும் ஏன் வெளி மாநிலத்தில்ருந்து வாங்கப்பட்டது என்று கேட்டிருக்கிறார்கள். இந்த நெல் வாங்கிய நேரம் 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அப்போது தமிழ்நாடு பூராவும் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டிருந்தது. வெள்ளம், புயல் இல்லாத இடங்களில் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக பயிர்கள் எல்லாம் சேதம் அடைந்து, அறுவடை பாதிக்கப்பட்டது. அதை உத்தேசித்து, தேவையான அளவுக்கு அரிசியை கையகப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழ்நாட்டில் அந்த நேரத்தில் கொள்முதல் செய்யும் சாத்தியக்கூறு இருக்காது என்ற அடிப்படையில் தான் வெளி மாநிலத்திலிருந்து அரிசி வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அரசு அந்த முடிவை எடுத்ததால்தான் தமிழ்நாட்டில் வெள்ளம், புயல் ஏற்பட்ட போதிலும், அறுவடை பாதிக்கப்பட்ட போதிலும், பயிர்கள் எல்லாம் சேதம் அடைந்த போதிலும் அரிசியின் விலை ஏறாமல் ஒரே தன்மையில் விற்கக்கூடிய நிலை உருவானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு குறுவை சமயத்தில் அரசு நெல் கொள்முதல் செய்யவில்லை. வியாபாரிகள் தான் நெல் கொள்முதல் செய்தார்கள். கொள்முதல் செய்யும்போது அவர்கள் இஷ்டம்போல் விலை கொடுத்தும், குறிப்பாக, அதிக எடை வைத்தும், சர்க்கார் குறிப்பிட்ட விலை கொடுக்காமலும் குறைந்த விலைக்கும் வாங்கினார்கள். இனிமேலாவது தாளடி, சம்பா பயிர் பருவத்தில் நெல்லை அரசு நேரடியாக கோள்முதல் செய்யுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மூலக் கேள்வி 1977ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்பட்ட நெல், அரிசியைப் பற்றியும் வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டது பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் அவர்

[1979 மார்ச் 9

கள் 1978ஆம் ஆண்டு குறுவை, தாளடி பற்றியும் அப்போதுள்ள கொள்முதல் பற்றியும் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். (குறுக்கீடு) 1977 குறுவை, 1978 சம்பா பற்றி கேட்கிறார்கள். 1978 குறுவை பற்றிய தகவல் என்னிடம் தற்போது இல்லை. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாக அதற்கான பதிலை சேகரித்துத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களுக்கு உடல் நிலை சரியில்லை. பதிலை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

[முற்பகல் 9–10]

திரு பொ. காளியப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977–78ம் ஆண்டிலே அரசு கொள்முதல் செய்ததில் ராமநாத புரம் மாவட்டத்திலே மில் அதிபர்களுக்கு பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும், அதற்காக அவர்கள் வழக்குப் போட்டு சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சம்பந்மப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள் என்று கூறிவிட்டார்கள். இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது அல்ல, அது மட்டும் அல்ல; நீதி மன்றத்திற்கு சென்றிருக்கும் வழக்கைப்பற்றி இந்த அரசு எந்தவிதமான பதிலையும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78ம் ஆண்டு சுமார் 40 கோடி அளவில் கொள்முதல் செய்தது தமிழ்நாட்டிற்குப் பயன் அளித்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே கொள்கையை கடைபிடித்து விவசாயிகளுக்கு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்காக இந்த ஆண்டி லும் கொள்முதல் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் ஏராளமான அரிசியும் நெல்லும், தேவைக்கு அதிகமான அளவிலே கையிருப்பில் இருக்கிறது. கையிருப்பில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலேயே வெளிக்கடைகளில் அரிசி விலை மிகவும் குறைவாக விற்கப்படுகின்றது. தமிழ்நாடு



1979 மார்ச் 9]

பொருள் வாணிப கழகத்தில் அரிசி வாங்குவோர் இல்லை என்ற நிலையும் இருக்கிற காரணத்தினால் மேலும் கொள்முதல், செய்வதாக இருந்தால், இன்னும் அதிகமான அரிசி தேக்கிவைக்கும் நிலை ஏற்படும் என்பதை மனத்தில் கொண்டு அவற்றை மேலும் பரிசீலனை செய்து தான் தனியாக அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே கடந்த ஆண்டு அரசு கொள் முதல் செய்யாததற்கு காரணம் நெல்லுக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வை நீக்கப்பட்டதால், விவசாயிகள் வெளி மாநிலங்களுக்கு கொண்டு சென்று விலையை ஏற்றிக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் நிறுத்திவைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. அதே முயற்சி இந்த ஆண்டும் தொடருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி சென்ற ஆண்டு தமிழகத்தில் விளைச்சல் அதிகமாக இருந்த காரணத்தினாலும்,விவசாய விளைபொருள் தேவைக்கதிகமாக அன்றையதினம் அரசின் கையிருப்பில் இருந்த காரணத்தினாலும் வெளி மாநிலங்களுக்கு கொண்டுபோக போதுமான நெல்லுக்கோ, அரிசிக்கோ விதித்திருந்த தீர்வையை எடுத்து விட்டால், வெளி மாநிலங்களில் நல்ல விலையில் விவசாயிகள் விற்பனை செய்து போதுமான லாபம் பெற முடியும் என்று கருதியதாலும் தான் கடந்த ஆண்டு தீர்வை முறை நீக்கப்பட்டது.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, தேவைக்கு அதிகமாக நெல்லும், அரிசியும் இருக்கிறது என்று கூறுகிறார்கள். தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்றால் எவ்வளவு இருப்பு அரசினிடம் இருக்கிறது. அரசினிடம் உள்ள சரக்கின் மதிப்பு என்ன? ரிசர்வ் பாங்கு எவ்வளவு நிதி அனுமதித்து இருக்கிறது அனுமதித்த தொகை பூராவும் செலவழிக்கப்பட்டு விட்டதா? நிர்ணயிக்கப்பட்ட விலையை விட வெளியிடங்களில் குறைவாக விற்கப்படுமேயானால் விவசாயிகளிடமிருந்து அத்தனை சரக்கையும் அரசு கொள்முதல் செய்யும் என்று இந்த ஆரசு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுமா? காப்பாற்றி யிருக்கிறதா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏராளமான கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்து எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறது? முழுவதையும் செலவழித்தாயிற்றா என்ற கேள்விகளை அவர் தனியாகக்

கேட்டால் நான் நிச்சயமாக அதற்கான பதிலை சேகரித்து தர
கடமைப்பட்டவனாக இருப்பேன். இந்த கேள்வி மூலக் கேள்வி
யில் சம்பந்தப்பட்டது அல்ல என்பதோடு, அதற்கான பதிலும்
என்னிடம் தயாராக இல்லை.

இன்னொன்றை அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள்.
அரசு நிர்ணயித்த விலையை விட குறைவான விலைக்கு வெளி
யிடங்களில் விற்கப்படுமேயானால், அதை அரசாங்கமே முன்
விவசாயிகளிடம் இருந்து மொத்தமாக கொள்முதல் செய்யும்
என்று அரசு அறிவித்ததை பற்றி உறுப்பினர்களுக்கு எந்தவித
மான சந்தேகமும் இருக்கத் தேவையில்லை. கையிருப்பைப்
பற்றி கேட்டார்கள். எவ்வளவு இருப்பு இருக்கிறது என்று
குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. காரணம் அதற்கான குறிப்பும்
என்னிடம் இல்லை. மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்வி
தொடர்பானது அல்ல, இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கேட்டு விட்ட காரணத்தினால் இருப்பு அரிசி ஏறத்
தாழ 5, 6 மாதங்களுக்கு எவ்வளவு கையிருப்புத் தேவையோ
அவ்வளவு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு <u>சோ. அழகர்சாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சரவர்கள் சொன்ன பதில் விவசாயிகளுக்கு ஒரு பெரிய
ஆபத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். முன்
பெல்லாம் விலைகள் உயர்ந்துகொண்டு போகும்போது அரசாங்
கமே நெல்லைக் கொள்முதல் செய்து மக்களுக்கு நியாயமான
விலையில் கொடுத்து வந்தது. ஆனால் இப்போது நிலைமை
மாறி இருக்கின்றது. விவசாயிகள் அதிகயாக உற்பத்தி செய்
திருக்கிறார்கள். அதனால் விலைகள் எல்லாம் கீழே போய்க்
கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்
கின்ற சூழ்நிலை இல்லை. ஆகவே எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது
எப்படி நியாயமான விலைக்கு மக்களுக்கு விற்கலாம் என்பதை
விட விவசாயிகள் சரியான விலை கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற
நிலையினைப் பார்க்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.
ஆகவே நிர்ணயிக்கப்பட்ட விலையாவது விவசாயிகளுக்கு கிடைப்ப
பதற்கு சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன் மூலமாகவோ, மத்திய
சர்க்கார் மூலமாகவோ அல்லது மாநில சர்க்காரோ கொள்
முதல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படி அந்த விவசாயி
களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையாவது கிடைப்பதற்கு ஏற்
பாடு செய்யப்படுமா என்பயை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : எவ்வளவு நீளமாகக்
கேள்வியைக் கேட்கிறீர்கள். கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்
கள்.





<u>மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு விவசாயிகள்
அபரிமிதமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்றும் அறுவடை
அதிகமாக ஆகியிருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னதற்கு நன்றி
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்குப் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாக
வும் அதன் காரணமாக மின்சாரக் கட்டணத்தைக் கூட வசூலிக்
கக் கூடாது என்று போராட்டம் ஒரு பக்கத்திலே நடந்து
கொண்டிருக்கிறது. அதற்காகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் இந்த மன்றத்திலே பேசி வருகிறார்கள் என்பதும் இந்த
மன்றத்திலே இருக்கின்றவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும்
நன்றாகத் தெரியும்.

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்
கொண்டதற்கிணங்க, அரசாங்கத்திலே நிர்ணயிக்கப்பட்ட
விலைக்கு அதாவது வெளிச்சந்தையிலே வாங்கப்படுகின்ற
விலையை விட மத்திய அரசோ மாநில அரசோ நிர்ணயிக்கின்ற
விலைக்கு நெல்லை வாங்கி விவசாயிகள் நஷ்டமடையாமல்
பார்த்துக் கொள்ளப்படும் என்கின்ற ஒரு உத்திரவாதத்தை இந்த
அரசு நிச்சயமாக அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கி
றேன்.

<u>சென்னை—மாமல்லபுரம் ஹோவர்கிராப் சர்வீஸ்.</u>

* <u>வினா எண் 301— திரு என். கிட்டப்பா</u> : மாண்புமிகு
செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை—மாமல்லபுரம் இடையே ''ஹோவர்
கிராப்'' சர்வீஸ் நடத்துவது குறித்து அரசு பரிசீலித்ததா?

(ஆ) ஆம் எனில் என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டது?

<u>மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்.</u> (அ மற்றும் ஆ).
சென்னை—மாமல்லபுரத்திற்கு இடையே ''ஹோவர்கிராப்''
சர்வீஸ் நடத்துதல் பொருளாதார வகையில் சாத்தியம் அல்ல
என்பதால் திட்டம் கைவிடப்பட்டது.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவரவர்களே, திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது அப்போது
அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. இராசாராம் அவர்கள்
இந்தத் திட்டத்திற்கான பெரிய முயற்சியை எடுத்துக்கொண்
டார்கள். இருந்தாலும் அது நடைபெற முடியவில்லை

[1979 மார்ச் 9

தற்போது கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாகவோ அல்லது அதிகமாக செலவு ஏற்படுகின்ற சூழ்நிலையின் காரணமாகவோ அந்த முயற்சியை மேற்கொள்ள முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத் தேவைப்படுகின்ற பொருளாதாரம் தான் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்படவில்லை. பொருளாதார வகையில் லாபமாக இயங்க முடியாது என்ற காரணத்தால் தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. 38 பயணிகளைக் கொண்டு செல்கின்ற ஹோவர் கிராப்டின் விலை 24 இலட்ச ரூபாய். 65 பயணிகளைக் கொண்டு செல்லுகின்ற கிராப்ட் 30 இலட்ச ரூபாய். 98 பயணிகளைக் கொண்டு செல்லுகின்ற கிராப்ட் 50 இலட்ச ரூபாய். இப்படி செலவு செய்தாலும் ஒருவருக்குக் கட்டணமாக 70 ரூபாய், 84 ரூபாய் என்று வசூலிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குச் செல்வதற்கு ஒன்றரை மணி நேரம் பிடிக்கும். ஆகவே, இவ்வளவு வசதிக் குறைவுகள் இருக்கின்ற காரணங்களை அடிப்படையாகக் வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயே கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாமல்லபுரத்திற்கும் சென்னைக்கும் இடையே பக்கிங்காம் கால்வாயினைச் சீர் செய்தாவது பயணிகளுக்கும் படகு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாமார்த்தியமாக வேறு திசைக்குக் கேள்வியைத் திருப்பி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கேள்வி கேட்கப்பட வேண்டியது துறை வேறு துறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 9]

## திருமயத்தைச் சுற்றுலா மையமாக்குதல்.

*வினா எண் 302—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தை சுற்றுலா மையமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) அங்கு ஒரு சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ)—இல்லை.

[முற்பகல் 9-20.]

திரு. நா. சுந்தரராஜ் : புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் ஊர் சரித்திரப் புகழ் பெற்ற ஊர். அந்த ஊரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும் அமைச்சர் அவர்கள் இல்லை என்ற ஓரே வார்த்தையில் முடித்திருப்பது பெருத்த வேதனையைத் தருகிறது. ஆகவே, தயவு செய்து மீண்டும் பரிசீலித்து அதை சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு அங்கே பல வசதிகளைச் செய்து கொடுத்தால் நிச்சயமாக இராமேஸ்வரத்திற்குச் செல்லக் கூடிய வட நாட்டுப் பயணிகள் அங்கு தங்கி அங்குள்ள சிறப்பு வாய்ந்த கோவில்களை தரிசனம் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அது குறித்து மீண்டும் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். அப்படி மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் தலங்களாக மாற்றுவது என்பது சில அடிப்படை விதிகளை வைத்து அந்த விதிகள் மீது சுற்றுலாத் தலங்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பல்வேறு வசதிகள் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற எண்ணிக்கை எல்லாவற்றையும் வைத்துத்தான் அத்திட்டங்களுக்கு முதல் உரிமை தரப்படுகிறது அந்த வகையில் திருமயம் இப்போது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற கருத்தில்தான் இல்லை என்ற பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்தையொட்டி, அவர்களுடைய ஆர்வத்தை உணர்ந்து திருமயம் போன்ற இடங்களையும் சுற்றுலாத் தலங்களாக ஆக்க வேண்டும் என்கிற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேரன்மாதேவியில் நீதிமன்றங்கள்.

*வினா எண் 303—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மாதேவி கோட்டாட்சி தலைமையிடத்தில் குற்றவியல் நீதிமன்றமும், சப்—கோர்ட்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

[1979 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களிடம் தினமும் இதே கஷ்டமாகிவிட்டது. கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள், சீக்கிரமாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒன்பவதாது வகுப்பு வரை பள்ளிகளில் இந்த என்.சி.சி. பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக சலுகைகளும் கிடைக்கிறது. அரசினர் இதை உணர்ந்து, அரசாங்க பாடசாலைகளிலும் இதை ஆரம்பிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் என்.சி.சி. பயிற்சி இன்னும் அதிக அளவில் கொண்டுவர வேண்டும் என்றுதான் அரசாங்கம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இதைக் கவனிப்பதற்கு என்று தனியாக டைரக்ட்ரேட் இருக்கிறது. மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தோடு தொடர்பு கொண்டு அது இயங்கி வருகிறது. அப்பிரிவுதான் பள்ளிகளின் தன்மையைப் பார்த்து, கல்லூரிகளின் தகுதியைப் பார்த்து, இதை துவக்குகின்றார்கள். என்.சி.சி. பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதிலும் மேற்படிப்பு படிப்பதிலும் சலுகைகள் ஏதாவது வழங்கப்படுகிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் கேட்டு நான் பதில் சொல்ல வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுவது எனக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். எனக்குத் தெரியும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு சுதந்திர நாட்டுக்கு அரசியல் ரீதியாக விடுதலை கிடைத்திருந்தாலும், தன்னை வலிமையாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாம் அனைவரும் உணர்வோம். இந்த நிலையில் பல இளைஞர்கள் எதிர்காலத்தில் பாதுகாப்பு உணர்ச்சியையும்,தேச பக்தியையும் வளர்ப்பதற்குரிய அடிப்படையில் இந்த என்.சி.சி. பயிற்சி எல்லா பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடத்தப்படுகிறதா ? ஆம் என்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். எனக்குத் தெரிந்த அளவில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்த ஸ்கீம் இல்லை என்று கருதுகிறேன். ஆமென்றால், பள்ளிகளில் எந்த வகுப்பிலிருந்து. எந்த வகுப்பு வரை இந்த பயிற்சி அளிக்கப்படுகிறது ? அவர்களுக்கு உத்தியோகங்களிலும் மேற்படிப்பு படிப்பதிலும் சலுகைகள், அளிக்கப்படுகிறதா, என்கின்ற விரிவான பதிலை தெரிவிக்குமாறு கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தற்போது 165 கல்லூரிகளிலும் 614 உயர்நிலைப் பள்ளிகளிலும், தேசிய மாணவர் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இதை



1979 மார்ச் 9]

விரிவாக்க வேண்டும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. என்.சி.சி. பயிற்சி வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம் பிற்காலத்தில் படைவீரர்களாக வரவேண்டும் என்ற நோக்கத்தினால் மட்டுமல்ல, அப்படி வரவேண்டுமென்றாலும் வரலாம். மாணவர்களுக்கு கட்டுப்பாடு உணர்வும் பொறுப்புகளில் தலைமை தாங்குகின்ற தகுதியும் பெற வேண்டும் என்பதற்காகத்தான்.

திரு. போ. கோபாலன் : என்.சி.சி. பயிற்சிக்காக எல்லாக் கல்லூரிகளுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா ? எத்தனை மாணவர்களுக்கு இப்போது உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு நாளைக்கும் எவ்வளவு செலவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்கான விவரம் தற்போது என்னிடம் இல்லை. மாணவர்களின் எண்ணிக்கை, கல்லூரிகள், பள்ளிகள் இவற்றில் வசதிகள் இவைகளின் அடிப்படையில்—டைரக்டரேட் ஆப் என்.சி.சி, அவர்களது முழுக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற இந்த அமைப்பை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஏற்படுத்துகின்றது. பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள் இதை இன்ஸ்பெக்ட் செய்கிறார்கள். நாம் விரும்புவது நிறைய இடங்களில் இந்தப் பயிற்சியைத் துவக்க வேண்டும் என்பதுதான். அதுதான் இப்போது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : என்.சி.சி. பிரிவு தனியார் பள்ளிகளில் அதிகமாக இருக்கிறது. உள்ளாட்சியைச் சேர்ந்த நகராட்சிப் பள்ளிகளிலும், மாநகராட்சிப் பள்ளிகளிலும் பின்தங்கிய மக்கள் அதிகமாக படிக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட வாய்ப்பை இவர்களுக்கு தர மறுக்கிறார்கள். என்னுடைய அனுபவத்திலேயே 72 ஆம் ஆண்டிலிருந்தே லாயிட் சாலை மாநகராட்சிப் பள்ளிக்கு இப்படிப்பட்ட அமைப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். இதுவரையிலும் அது அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இப்போதாவது அதற்கு உரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: என்.சி.சி. மாணவர் அமைப்பு எந்தப் பள்ளியாக இருந்தாலும் ஒரே அளவில் பார்த்துத்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது. 1972-லிருந்த ஒரு பள்ளிக்கு ஏற்படுத்த முயற்சி செய்ததாக சொன்னார்கள். அப்போது நீங்கள் தான் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது ஏன் இதைச் செய்ய முடிடவில்லை என்று தெரியவில்லை. ஆகவே, இது பொர்சின் அடிப்படையிலோ அல்லது தான் விரும்புகின்ற பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதோ என்பது அல்ல. மாநிலம்

முழுவதிற்கும் நிறைய இப்பிரிவை அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போது அதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. நாம் எந்த ஆர்வத்தோடு இருந்தாலும், இதில் ஓரளவு பகுதி பணத்தை மத்திய அரசு தரவேண்டியிருப்பதால், அவர்களுடைய ஒத்துழைப்பும், இதில் தேவைப்படுகிறது.

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர்.

*வினா எண் 305—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்பு அலுவலகங்களில், வேலைத்தேடி தங்கள் பெயரை பதிவு செய்துள்ளவர்கள், தங்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் முன்பே, குறிப்பிட்ட வயதைத் தாண்டிவிடுவதால், அவர்களுடைய வயது வரம்பை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

[முற்பகல் 9–30]

திரு. என், வரதராஜன் : தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான கேள்வி. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்வோர் எண்ணிக்கை ஏராளமாக உயர்ந்துகொண்டு, நம்மால் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்டவர்கள் வயது வரம்பை மீறி விடுகின்ற காரணத்தால், அவர்களுக்கு வேலை கிடைக்காத ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே, இதை பரிசீலனை செய்து, அவர்கள் வயதை உயர்த்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வயது வரம்பை உயர்த்துவதற்கு விரும்பாவிட்டாலும், வேலையற்றவர்களுக்குத்தான் வேலை தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.





திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான கேள்வி என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தமிழ்நாட்டிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே பணியாற்றியவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர்களுடைய பட்டியல் கலெக்டரிடம் இருக்கிறது. நேரடியாக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே வேலைக்காக பதிவு செய்து கொண்டுள்ளவர்களை அழைக்காமல், கலெக்டர் தன்னிடம் உள்ள பட்டியலிலே உள்ளவர்களை நேரடியாக அழைப்பதால், கடந்த 5, 6 ஆண்டுகளாக இந்த வேலை தேடித் தரும் நிறுவனங்களிலே பதிவு செய்து கொண்டுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பே கிடையாது. எனவே, அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, சிவில் சப்ளைஸ் கார்ப்ரேஷன், மன்னார்க்குடி கூட்டுறவு மில்க் சொசைட்டி போன்றவைகளில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பற்றி பரிசீலனை செய்து, அவர்களுடைய வயது வரம்பைத் தளர்த்தி வேலை தரும் முறையை ஏற்றுக்கொள்வார்களா என்பதை வலியுறுத்தித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வேலை இழந்தவர்களுக்கு வேலை தரவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, வற்புறுத்தி இந்த மாமன்றத்திலே உறுப்பினர்கள் பேசியதன் விளைவுதான், இந்த முறை வந்திருக்கிறது, வேலை அற்றவர்களுக்குத்தான் வேலை தேடி தரும் நிலையத்தால் வேலை தரப்படுகின்றது, இதிலே தவறு ஒன்றும் இழக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வயது வரம்பை உயர்த்துவதன் மூலம் அல்லது உயர்த்தாவிட்டாலும், வேலை இல்லாதவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்படுகின்றது. இன்னாருக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்பதில்லை. வேலை இல்லாத யாருக்கு வேலை கொடுத்தாலும், அந்த அளவிற்கு திருப்தி அடைய வேண்டியதுதான்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில அலுவலகங்களிலே பகுதிநேர ஊழியர்களாக 10, 15 ரூபாய் பெற்றுக்கொண்டு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தேடித் தரும் நிலையத்திலே வேலை கேட்டால், மறுக்கிறார்கள். ஆகவே, 2, 3 ஆண்டுகளாக இப்படி பகுதி நேர ஊழியர்களாக வேலை செய்பவர்களை, அந்தத் துறையிலேயே பர்மனென்ட் செய்ய வேண்டும். அந்த முன்னுரிமையை வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு ஒரு முறை ரினைவல் செய்ய வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அப்படி ரினைவல் செய்யாவிட்டால், ஏற்கெனவே

செய்த ரிஜிஸ்திரேஷனை ரத்து செய்துவிட்டு, புதிதாக அந்தத் தேதியிலே இருந்து ரிஜிஸ்திரேஷன் செய்ததுபோல், பதிய வேண் டிய நிலைமை இருக்கிறது. அதனால், சீனியாரிட்டியை அவர்கள் இழக்கிறார்கள், எனவே, தகுந்த காரணம் காட்டினால், பழைய ரிஜிஸ்திரேஷனையே continue செய்வதற்கு வழிவகைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பொதுவாக வேலை இல்லாதவர்களுக்கு வேலை தருகின்ற முறை யிலே தான், அந்த அலுவலகம் பணியாற்றிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரினைவ் செய்ய வேண்டும். அப்படி ரினைவ் செய்ய அவர்கள் தவறிவிட்டால் புதியதாக ரிஜிஸ்தர் செய்ய வேண்டியதுதான். அதற்காக நாம் வருத்தப்பட வேண்டியது இல்லை.

திரு. போ. கோபாலன் : சில நேர்முகத் தேர்வுகளின்போது 20, 21 வயது உள்ளவர்களோடு வயது வரம்பைக் கடக்கக் கூடிய நிலையில் உள்ளவர்களும் அந்தத் தேர்வில் கலந்திருப் பார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் இளம் வயதுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வருங்காலத்திலாவது அப்படிப் பட்ட தேர்வுகளின் போது வயது வரம்பைக் கடக்கக் கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு வேலைக்கு ஆட்களை அமர்த்துகிறபோது அவர்கள் பதிவு செய்திருக்கிற முறையை வைத்து யார் நீண்ட நாட்களுக்கு முன்னதாகப் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த அடிப்படையில் தான் அனுப்பப்படுகிறார்கள். பின்னாலே பதிவு செய்தவர்களை யாரும் அனுப்ப மாட்டார்கள். அப்படி அனுப்பியிருந்தால் அது பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சய மாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கில் குறிப்பாக பெண் ஆசிரியர்கள் 7 வருஷம், 8 வருஷம் ஆன பிறகும் கூட பதிவு செய்த இடத் திலிருந்து அழைப்பு வராமல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் அவர்களுக்காவது வேலை கொடுக்க வயது என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி அதற்கு ஏற்பாடு செய் வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய பயிற்சிக்காக நாம் செலவு செய்திருக்கிறோம். அவர்கள் விசேஷ பயிற்சி பெற்றிருக்கும்



காரணத்தால் குறிப்பாக அந்த வேலைக்குப் போக வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நல்ல முறையில் உணர்ந்து அவர்களுக்கெல்லாம் வயது வரம்பை 35 ஆக ஆக்கியிருக்கிறோம்.

## வள்ளுவர் கோட்டம் அருகே அண்ணா சிலை.

*வினா எண் 306—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாநகராட்சி யால் விளக்கு வசதி செய்து தரப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம்.எனில் அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : —

(அ) மற்றும் (ஆ) அரசு விதித்துள்ள நிபந்தனைப்படி, சிலை வைக்க ஆகும் மொத்தச் செலவில் 20 சதவீத தொகையை மாநகராட்சிக்கு, சிலையின் பராமரிப்புக்காக, சிலை வைக்க, அனுமதி கோருபவர்கள் கட்ட வேண்டும். அந்தத் தொகை கட்டப் படவில்லை. எனினும், இச்சிலைக்கு சென்னை மாநகராட்சி யால் தற்காலிகமாக விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : விளக்கு வசதி ஏற்படுத்தித் தந்திருப்பதற்காக அரசுக்கு நன்றி. அமைச்சர் அவர்கள் ஒரு விகிதாசாரம் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். தேசியத் தலைவர்களாக விளங்குகின்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர் களின் சிலைகளுக்கு இந்த விதியை மாற்றி விளக்கு வசதி செய்து தரப்படுமா ? அண்ணா சாலையில் சைதாப்பேட்டை அருகே முதலமைச்சர் எதிர்கட்சித் தலைவராக இருக்கும்போது ஒரு அண்ணா சிலையை வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இப் போது மாநகராட்சியினர் குப்பைகளை கொட்டி வைத்திருக் கிறார்கள். நான் பஸ்ஸில் போகும்போது பல முறை பார்த் திருக்கிறேன். இப்படிப்பட்ட தலைவர்கள் சிலைகள் இருக்கும் பகுதிகளை மாநகராட்சியினரும், நகராட்சியினரும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று தமிழ்நாடு பூராவுக்கும் ஒரு சர்குலர் அனுப்ப நடவடிக்கை எடுப்பார்களா ?

[1979 மார்ச் 9

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அத்தகைய தலைவர் களுடைய சிலைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டுமென்று நிச்சயமாக உள்ளாட்சித் துறை ஆணையிட அரசு தயாராக இருக்கிறது. ஆனால் இந்த நிபந்தனை ஏற்கனவே விதிக்கப் படடது. இதைப் பற்றி இனிமேல்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பேரறிஞர் அண்ணா சிலைகள் நகர்ப்புறங் களில் அனுமதி பெறறு நிறுவப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சிலையினுடைய அடக்க விலையில் 20 சதவிகிதம் தொகையைப் பெற்றுக் கொண்டுதான் பரா மரிக்கப்படும் என்று சொன்னார்கள். தற்போது வள்ளுவர் கோட்டத்தில் அருகே அமைக்கப்பட்டிருக்கும் அண்ணா சிலைக்கு அந்தத் தொகை கட்டப் பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அதை நிச்சயமாகக் கட்ட முன் வரும் என்று நம்புகிறேன். அப்படிக் கட்டாமல் இருந்து மதுரை, சென்னை போன்ற இடங்களில்—நான் குறைபாடாகச் சொல்ல வில்லை—பல தலைவர்கள் சிலைகள் பராமரிக்கப்பட்டு வரு கின்றன. சிலைகள் அமைக்கப்பட்டால் ஒரு தொகை கட்ட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத் தில் உத்தரவிடப்பட்டது. மாயூரம் போன்ற இடங்களில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம்.

திரு. என். கிட்டப்பா : தனிக் கேள்வி போட்டேன். பதில் வரவில்லை. இதிலே சேர்த்துக் கேட்டு விடுகிறேன். மாயூரம் போன்ற இடங்களில் பராமரிப்புச் செலவுக்காக தொகை கட்டியிருந்தும் கூட சரிவர பராமரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனியாவது சரிவர பராமரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி வள்ளுவர் கோட்டத்தின் அருகே அமைக்கப்பட்டுள்ள அண்ணா சிலைக்கு விளக்கு வசதி செய்து கொடுப்பது பற்றியதாகும். பிற இடங் களைப் பற்றித் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தலைவர் களுடைய சிலைகளைப் பராமரிக்கின்ற கடமையைப் பணம் கட்டினாலும் கட்டாவிட்டாலும் ஓரளவு உள்ளாட்சி நிறுவனங் கள் ஏற்க வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது.

[முற்பகல் 9–40].

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, பொதுவாக ஆளுநர் ஆட்சியின்போது அண்ணா அவர்களின் சிலைக்கும் மற்றவர்களின் சிலைகளுக்கும் எந்தவிதமான பரா



[1979 மார்ச் 9]

மரிப்பும் இல்லாமல் உதாசீனப்படுத்துகின்ற எண்ணம் அதிகாரிகள் மத்தியில் இருந்ததே, அதே நிலைதான் இன்றும் அதிகாரிகள் மத்தியில் இருக்கிறது. ஆகவே அதைப் போக்குவதற்குக் கடுமை யான நடவடிக்கை எடுத்து அவர்களை எச்சரிக்கை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைப் போக்குவதற்காக கடுமையான நடவடிக்கை எடுத்து எச்சரிக்கை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கட்டப்பட்டது. ஆனால் அவசரம் அவசரமாகத் திறந்ததன் காரணமாக அங்கே வெடிப்புகளும், சுற்றிலும் சுத்தமில்லா மலும் இருக்கிறது, அங்கே உள்ள கழிவறைகள் ஆபாசமாக இருப்பது மட்டுமல்லாமல் வீச்சம் எடுக்கிற முறையிலே இருக் கிறது, அதைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று நான் ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்திலே எழுத்து மூலமாகக் கொடுத்திருக் கிறேன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி வள்ளுவர் கோட்டத்திற்கு முன்னால் உள்ள அண்ணா சிலை பற்றியது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்திற்கு முன்னாலே அமைந்திருக்கின்ற அண்ணா அவர் களின் சிலைக்கு, அதைப் பராமரிப்பதற்காக தொகை கட்ட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என் னுடைய கேள்வியிலே நான் குறிப்பிட்டேன், நான் அதிகமான கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனதால் அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று எண்ணுகிறேன். நான் கேட் டது, மதுரை, சென்னை போன்ற இடங்களிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அல்ல, இந்த ஆட்சிக் காலத்திலேதான், வேறு சில பெருந்தலைவர்களுடைய சிலை களும் எந்தத் தலைவர் என்று நான் பெயர் சொல்லவில்லை, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கே தெரியும், அந்தச் சிலை களைப் பராமரிப்பதற்காக செலவுப் பணம் வசூலிக்கப்பட்டிருக் கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படி எதுவும் வசூலிக்கப்படவில்லை யென்றால் அந்தச் சிலைகள் எவை, எவை என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மற்றைய இடங்களிலே உள்ள சிலைகளைப் பொறுத்தவரையில் என்னிடம் தற்போது தகவல் இல்லை. ஆனால் வள்ளுவர் கோட்டத்திற்கு முன்னால் அண்ணா அவர்களின் சிலை அமைத்

[1979 மார்ச் 9

திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பராமரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்புவார்களானால் நிச்சயமாக நடைமுறைகளை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சிலை வைக்கப்பட்டது என்றாலும் சிலை வைக்கப்பட்டதற்குப் பின்னாலே அது பொதுச்சொத்தாக ஆகிவிடுகிறது. ஆளுங்கட்சி அண்ணா அவர் களை பொதுச்சொத்தாக வைத்திருப்பதாகச் சொல்கிறது, அண்ணா அவர்களின் சிலைக்கு அதைப் பராமரிக்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்தால்தான் பரிசீலிக்கப்படும் என்று சொல்வது இந்த அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஏற்றதுதானா? ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை இல்லாமலேயே அண்ணா அவர்களின் சிலையைப் பராமரிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதையே கோரிக்கையாக ஏற்று அரசு பரிசீலிக்கும்.

## பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள புறம்போக்கு நிலம்.

*வினா எண் 307 —திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருமருகல் ஒன்றியத்தின் பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள ஏரிப்புறம்போக்கை நீண்டகாலமாக அனுபவித்து வருபவர்கள் பட்டா கோரி உள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு மேற்கொண் டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, திருமருகல் ஒன்றியத்தின் பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள புறம்போக்கை நீண்டகாலமாக அனுபவித்துக் கொண்டு வருகிறவர்கள் பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு அது ரெவின்யூ புறம்போக்கா அல்லது ஏரிப்புறம்போக்கா என் பதை குறித்தும் அந்தக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான சான்றுகள் என்னிடம் இப்போது இல்லையென்றாலும் அமைச்சர் விரும்பினால் கொண்டுவந்து காட்டுகிறேன். ஆகவே அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு பட்டா கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஏரி பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானது. பட்டா கொடுக்கிற உத்தேசமில்லை.

## பொன்னமராவதி நகருக்குக் குடிதண்ணீர் வழங்கல்.

*வினா எண். 308 —திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி நகரில் குடி தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப்டணிகள் முடிந்தபின் திட்ட உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று, குடிநீர்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த ஆய்வானது கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. எப்போது முடியும் என்று தெரியவில்லை. ஆகவே பொன்னமராவதி போன்ற பெரிய நகரங்களை—பேரூராட்சி மன்றங்களிலே குடிநீர் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் 4, 5 மைல்கள் நடந்து செல்லவேண்டிய அவலநிலைக்கு ஆளாக்கப்படுகிற நிலைமை இருக்கிறது, இதைக் கருத்திலே கொண்டு உடனடி யாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா? அமைச்சர் அவர்களே அங்கே நேரடியாக வந்து பார்வையிட லாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூ. 22 இலட்ச மதிப்பீட்டிலே பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொன்னமராவதி பஞ்சாயத்து ஆய்வு மதிப்பீட்டிற்காக 5,500 ரூபாய் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17-தேதியில் செலுத்தியுள்ளது. மீதித்தொகை இன்னும் செலுத்த

படவில்லை. ஆய்வு வேலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டி ருக்கிறது. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக வாரியத்தால் அனுப்பி வைக்கப்படும். பிறகு குடிநீர்த் திட்டப்பணி ஆரம்பிக்கப்படும். சட்ட மன்றத் தொடர் கூட்டம் முடிந்த பிறகு, நான் ஒவ்வொரு தொகுதிக்கும் போவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் வருகிறேன். அவர்கள் அன்று பூராவும் இருந்து குறைகளைச் சொல்லலாம், அவைகளுக்கு இந்த அரசால் ஆனதைச் செய்கிறேன்.

## சென்னையில் குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகளில் தண்ணீர், விளக்கு வசதிகள்.

*வினா எண் 309 — திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிசை மாற்றுவாரியம் கட்டிய பகுதி களில் கக்கூஸ், விளக்குகள், தண்ணீர்க் குழாய்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான நடவடிக்கை உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ) குடிசைப்பகுதி மாற்றுவாரியம் கட்டிய சில பகுதிகளில் மட்டுமே கழிப்பிடங்கள், விளக்குகள், குழாய்கள் ஆகியவை இன்னமும் முழு அளவில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இத்தகைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மாநகராட்சிக்கு முன்பணம் (Advance) ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறது. இப் பணிகளை விரைந்து செயல்படுத்துமாறு வாரியம் மாநக ராட்சி அதிகாரிகளைக் கோரியுள்ளது. ஏனைய பகுதிகளில் மேற்கூறிய வசதிகள் முழு அளவில் செய்யப்பட்டுள்ளன அல்லது அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் சில பகுதிகளுக்கு இப்பொழுது முயற்சி யெடுத்து வருகிறோம் என்றும், சில பகுதிகளுக்கு மாநகராட்சி யினிடத்திலே நாங்கள் பணத்தைக் கட்டியிருக்கிறோம், அவர்கள் இன்னும் முடித்துத் தரவில்லை என்றும் சொன் னார்கள். இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரியம் என்று பிரிக்கப்பட்ட பிறகு ஏன் மாநகராட்சியை நீங்கள் எதிர் பார்த்திருக்க வேண்டும்? அந்த வடிகால் வாரியம் என்னதான் செய்கிறது என்பதை நமது அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து விளக்குவார்களா என்று கேட்கிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, குடிசைப்பகுதி வீட்டுக்குள்ளே கக்கூஸ், குடிநீர், விளக்கு போன்றவைகளை குடிசை மாற்றுவாரியம் செய்து விடுகிறது. இது, அதையொட்டிய சாலைகளிலே கக்கூஸ், விளக்குகள், தண்ணீர்க் குழாய் போடுவதைப் பற்றியதாகும். தண்ணீர்க் குழாய்களைப் போடும் பொறுப்பை 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் தேதி முதல் சென்னை மாநகர் குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் வாரியம் எடுத்துக் கொண்டிருக் கிறது. மற்றவைகள் இன்னும் மாநகராட்சியிடம்தான் இருக் கின்றன. அதைத்தான் சென்னேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர் களே, எனது தொகுதியைச்சார்ந்த அயோத்தியாகுப்பம், பப்புமஸ்தான்தர்க்கா போன்ற குடிசை மாற்றுவாரிய வீடுகள் உள்ள பகுதிகளில் சாலைகள் சரிவரப் பராமரிக்கப்படவில்லை, ஒளிவிளக்குகள் அமைக்கப்படவில்லை. உடனடியாக அமைச்சர வர்கள் அதைச்செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகள் சென்னை யிலே நிரம்ப இருக்கின்ற காரணத்தால் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும், my humble self, நானும் அடிக்கடி டிவிஷன்களுக்கு அதிகாரி களோடு சென்று அங்குள்ள பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டுத் தீர்த்து வைக்க முயற்சியெடுத்துக் கொண்டிருக்கி றோம். அதுமட்டுமல்லாமல், சங்கங்கள் என்று அமைத்து, அவர்கள் கொண்டுவந்து கொடுக்கும் மனுவை வாங்கியவுடனே அன்றோ, மறுநாளோ ஆங்காங்கு சென்று பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிக்கிறோம். 'இவர் அன்றோ அமைச் சர்' என்று ஆனந்தவிகடனில் வந்திருப்பதைப் பார்த் திருப்பீர்கள். அதுமட்டுமல்ல, Aside என்ற ஆங்கில இதழ், போக்குவரத்துத் துறை அமைச்சரையும், என்னையும் படம் போட்டு இப்படியல்லவா செய்ய வேண்டும், இவர்கள் அல்லவா அமைச்சர்கள் என்று பாராட்டி எழுதி யிருப்பதையும் சொல்ல விரும்புகிறேன். இப்படி பத்திரி கைகள் மிகவும் பாராட்டுகிறார்கள். மக்களைத் தேடி அமைச்சர்கள் வருகிறார்கள் என்று மெயில் பத்திரிகையிலே, "People are able to see the Ministers flesh and flocd in their midst" என்று பாராட்டி எழுதியிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர் களே, அமைச்சர்கள் போகும்பொழுது சட்டமன்ற உறுப்பி னர்களையும் அழைத்துச் செல்லுகின்ற பெருந்தன்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 மார்ச் 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, வெளியூர்களில் சுற்றுப்பயணம் செய்யும் பொழுது டூர் ப்ரோகிராம் எல்லோருக்கும் அனுப்பப்படுகிறது. இளையாங்குடி சட்டமன்ற உறுப்பினர் ஒருநாள் பூராவும் என்னோடு இருந்தார்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : டூர் புரோகிராம் எங்களுக்கு அனுப்பப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The Hon. Thiru S. RAGHAVANANDAM : I will come to Madras. I am already in Madras.

[முற்பகல் 9—50]

சென்னையைப் பொறுத்தவரையில் திடீரென்று ஒரு சங்கம் என்று வருகிறார்கள், விண்ணப்பம் தருகிறார்கள். உடனே அந்த இடத்திற்குப் போகிறோம். உதாரணமாக யூ. என். ஐ. ரிப்போர்ட்டர்—பெயர் சொல்ல விரும்பவில்லை—ஒரு குறையைச் சொன்னார். இரவு 8 மணிக்கு போய்ப் பார்த்தேன். 'இந்து' ரிப்போர்ட்டர் ஒரு குறையைச் சொன்னார். 7—30 மணிக்கு மேலவை முடிந்தபின் போய்ப் பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினருக்குச் சொல்லிப் போவது என்பது சாத்தியமில்லாமல் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் அழைத்தால் வருகிறோம், குறைகள் சொன்னால் தீர்த்து வைக்க முயற்சிக்கிறோம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : எனது தொகுதியில் நான்கு முறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தார்கள். சட்ட மன்ற உறுப்பினரான எனக்கு தகவல் தரப்படவில்லை. அதே நேரத்தில் அவர்கள் கட்சியைச் சார்ந்த அமைப்பாளர்களுக்கு தகவல் தரப்படுகிறது. இது முறைதானா என்று அமைச்சரைக் கேட்கிறேன்.

மாண்புமிகு எஸ். இராகவனந்தம் : சென்னையைச் சேர்ந்த நம்முடைய 'பாக்சர்' செல்வராஜ் மாண்புமிகு உறுப்பினர் கூட அழைத்ததற்கு நானும் உள்ளாட்சித் துறை அமைச்சரும் சென்று பார்த்தோம், பாராட்டினார்கள். நேற்று முன்தினம் கூட வந்து பாராட்டினார் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தினால் பராமரிக்கப்பட வேண்டிய சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் எத்தனை குறைபாடுகள் உள்ளன என்று முன்னரே இந்த அவையில் 'இவர் அல்லவா அமைச்சர்' என்று சொல்கிறார்கள் என்று தானே கூறிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சரிடத்திலே எடுத்துக் கூறியும் அதற்கு அவர் சொன்னார் நானே



1979 மார்ச் 9]

நேரில் சென்று ஆவன செய்கிறேன் என்று. ஆனால், இதுவரையில் சென்னை பட்டினப்பாக்கத்தில் எந்தவிதமான சீர்கேடுகளும் முறைகேடுகளும் சரி செய்யப்பட வில்லையென்பது அமைச்சருக்குத் தெரியுமா? 'இவர் அல்லவா அமைச்சர்' என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அதை வாதப்பொருளாக வைத்துக் கொள்ளாதீர்கள். என்ன துணைக் கேள்வியோ அதைச் சொல்லுங்கள். கிட்டப்பா, ஏதோ புதிதாக நன்மை பயக்கிற கேள்வியைக் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா : அத்தகைய அவர், இதனைச் செய்து முடிக்க மனம் வைப்பாரா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எந்த இடத்தில் என்ன குறை என்று எழுதிக் கொடுத்தால் இரவு 7 மணிக்கு மேலவை முடிந்தவுடனே ஆவன செய்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. கு. ரமணி : ஒரு அமைச்சரவர்கள் தன்னைப்பற்றி இருக்கும்படியான விளம்பரங்கள் முழுவதையும் அவர்கள் இப்படிச் சொல்வார்களானால் — எங்களுக்கும் இந்தமாதிரியான விளம்பரங்கள் இருக்கின்றன — அதை முழுவதும் நாங்கள் சொல்ல வேண்டிவரும். இது முறைதானா என்பதை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து கேள்வி நேரத்தின்பொழுது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரை மட்டும் நான் சொல்லவில்லை — எந்த அமைச்சருக்கும் தான் உழைக்கின்ற உழைப்பாலே செல்வாக்கு தானாக வரும். அது சொல்லித்தான் வரும் என்பதில்லை. ஆகவே, இந்த நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாவட்டங்களில் வாடகைக்கார், ஆட்டோ—ரிக்ஷாக்களுக்கு மீட்டர்கள்.

*குறுகிய கால வினா எண் 9— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட, வட்ட தலைநகர்களில் ஓடும் டாக்சி, ஆட்டோ—ரிக்ஷா முதலியவைகளுக்கு மீட்டர் பொருத்துவதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டதா ?

(ஆ) அதன் உரிமையாளர்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1979 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) ஆம். பழனி மற்றும் பொள்ளாச்சி நகர டாக்சி, ஆட்டோ-ரிக்ஷா ஓட்டுநர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற் றுள்ளது.

(இ) இக் கோரிக்கையினை அரசு பரிசீலித்து. கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் மீட்டர் மூலம் கட்டணம் வசூலிப்பதை நடைமுறைப்படுத்தாதவர்மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிடப் பட்டுள்ளது. மற்ற மாவட்ட தலைநகர்கள் மற்றும் முதல் நிலை நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கு நீக்கப் பட்டு அங்கும் கட்டாயமாக மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. மாவட்ட தலைநகரங்கள் நீங்கலாக, கிரேட் 1 முனிசிபாலிட்டிகள் நீங்கலாக மற்ற இடங் களில் மீட்டர் பொருத்துவது 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ந் தேதி முடிய தள்ளிவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ, டாக்சி ஓட்டுபவர்களுக்கு மத்திய அரசு சமீபத்தில் பெட்ரோல் விலையை ஏற்றியிருக்கிறது. அதனால் ஆட்டோ, டாக்சி ஓட்டுபவர்கள் அதிகமான சார்ஜை பயணி களிடமிருந்து வசூலிக்கிறார்கள். இதைப், போக்கக்கூடிய முறை யில், ஓரளவு ஆட்டோ, டாக்சி ஓட்டுபவர்களுக்கும் கட்டுப்படி யாகக்கூடிய முறையில் அந்த சார்ஜை நிர்ணயம் செய்து, மீட்டர் பொருத்தினால் வசதியாக இருக்கும், சம்பந்தப் பட்டவர்களுக்கு சிரமம் இல்லாமலும் இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைநகரங்கள், மற்றும் கிரேட் 1 நக ராட்சிகளில் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் எனற உத்தர வுகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்தந்த நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள், முனிசிபாலிட்டிகள் தக்க நடவடிக்கை எடுக்கும். ஆனால், பெட்ரோல் விலை ஏறியதன் காரணமாக, ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏற்றம் காரணமாக, ஆட்டோ, டாக்சி கட்டண உயர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ, டாக்சி போன்றவைகளுக்கு சென்னை போன்ற நகரங்களில்தான் மீட்டர் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற ஊர்களில் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா ? அதனை மற்ற இடங்களிலும் அமுலுக்குக் கொண்டு வருமா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்.



1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவேகூறிவிட்டேன், மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முதல் நிலை நகராட்சிகள், முனிசிபாலிட்டிகளில் அடங்கும் எல்லா ஊர்களிலும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்று. அவர்கள் குறிப்பிட்ட ஊர்கள் இரண்டும், தஞ்சாவூர் மாவட்ட தலைநகரத்திலும், கும்ப கோணம் கிரேட்-1 முனிசிபாலிடியிலும் இருக்கிறது. அதனால் அந்தந்த நகராட்சிகள் அதனை அமல் நடத்த நடவடிக்கைகள் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் அம்பாசிடர் டாக்சியில் மட்டும் 5 பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பியட் வண்டிகளில் 4 பேர்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். இடம் இருந்தாலும் கூட 5 பேர் அனுமதிக்கப்படுவதில்லை. இது பயணிகளுக்கு சிரமமாக இருக்கிறது. ஒரு ஆளை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் கூட, கூட இரண்டு ரூபாய் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த நிலையை மாற்ற பியட் வண்டிகளில் 5 பேர் பயணம் செய்யலாம் என்று அரசு கொண்டுவருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசிடர் கார் நீங்கலாக மற்ற வண்டிகளில் 4-க்கு மேல் பயணிகளை ஏற்றக்கூடாது என்பது ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறது.

திரு. ஒ. ப. சோமசுந்தரம் : பொள்ளாச்சியில் உள்ள ஆட்டோ, டாக்சி டிரைவர்களிடமிருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை கிடைக்கப்பெற்றிருக்கிறதா ? பொள்ளாச்சி நகரம் பெரிய தொழில் நகரம் என்ற அடிப்படை யில்தான் அங்கே உள்ள ஆட்டோ, டாக்சிகளுக்கு மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொள்ளாச்சி, நகராட்சிகளில் அல்லது தலைநகரங்களின் கீழ் வராது என்ப தால் பெரிய தொழில் நகரம் என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டிருக்கிறார். ஆனால் வருவாயைக்கொண்டு கணக்கிட்டுப் பார்க்கும்போது பொள்ளாச்சி கிரேட்-1 முனிசி பாலிடியில்தான் வருகிறது. கிரேட்-1 முனிசிபாலிடி ஊர்களுக்கு எல்லாம் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்று உத்தரவு ஏற்கனவே போடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

[1979 மார்ச் 9

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, 8 அணா பெட்ரோல் விலை கூடியிருக்கிறது. அதனால் 25 சத வீதம் அளவிற்காவது டாக்சி, ஆட்டோ கட்டணத்தை கூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை டாக்சி , ஆட்டோ டிரை வர்கள் சங்கம் தந்திருப்பதாகத் தெரிகிறது. இராமநாதபுரம், போரூர் போன்ற இடங்களில் டாக்சி, ஆட்டோக்களில் மீட்டர்களும் பொருத்தப்படாததால் கட்டணத்தை கூட போட்டு கொடுக்கும்படி கேட்கிறார்கள் — இதனால் பொதுமக்களுக்கும் சிரமமாக இருக்கிறது. மீட்டர்கள் பொருத்தப்படாவிட்டாலும் இன்ன கட்டணம் என்று விதித்து விட்டால் இருசாராருக்கும் சுலபமாக இருக்கும். இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 25 சதவீதம் கட்டண உயர்வு வேண்டும் என பல சங்கங்கள் கோரிக்கைகள் அனுப்பியிருக்கின்றன. விரைவில் கட்டண உயர்வு என்ன என்பதை அரசு முடிவெடுக்கும். இராமநாத புரத்தில் மீட்டர் இல்லாதவைகளுக்கு குறைந்த கட்டணமாக ஒரு கட்டணத்தை நிர்ணயிப்பது என்பது இயலாது. அதற்கு குறிப்பிட்ட கணக்கு வேண்டும். அதனால் இதை மீட்டர்கள் பொருத்துவதின் மூலமும், எந்தெந்த வகையில் விரிவுபடுத்த லாம் என்று ஆலோசனை செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு நகரத்தைப் பொறுத்தவரையில் மீட் டர்கள் பொருத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் உண்மையில் அப்படி மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கிறதா ? மதுரையில் அதை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. ஆகவே இன்றையிலிருந்து அதை நடை முறைக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சர் முயற்சி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மட்டுமல்ல, திருச்சி, சேலம் போன்ற இடங்களிலும் அது நடைமுறைக்கு கொண்டுவந்து அமுலாக்கப் படவில்லை என்னும் நிலை இருக்கிறது. உடனடியாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு நகரங்களுக்கு எல்லாம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அவைகள் விரைவில் அமுல் நடத்தப்படும்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 8 கேள்விகள் இருக்கின்றன. மசோதாக்கள் வேறு இருக்கின்றன. ஆகவே, நேற்றைய தினம் போலவே மற்ற கேள்விகளுக்கான விடைகளை



1979 மார்ச் 9]

அச்சடித்து மேசை மீது வைக்கலாமா என்று முன் வரிசையில் உள்ள தலைவர்களின் ஆலோசனையை அறிய விரும்புகிறேன். (ஒருவரும் பேசவில்லை). ஆகவே, நேற்றைய தினம் போலவே மேசைமீது அச்சடித்து வைக்கப்படும்.

## பணகுடிக்கு அருகே மாற்றுப்பாதை.

*வினா எண் 310—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை எண். 7-க்கு மாற்று வழிப்பாதை அமைப்புக்கு எடுக்கப்பட்ட விவசாய நிலங் களுக்கு அரசு நஷ்ட ஈடு தந்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியி லுள்ள பணகுடியில் அமைக்கப்பட்டுள்ள தேசீய நெடுஞ்சாலை எண். 7-க்கு மாற்று வழிப்பாதை அமைப்புக்கு எடுக்கப்பட்ட விவசாய நிலங்களில் 9.40 ஏக்கரில் 8 ஏக்கருக்கான நஷ்ட ஈடு தொகை 27—9—1978 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள 1.40 ஏக்கருக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை நில உரிமையாளர்களுக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## முள்ளி-கொலக்கம்பை சாலை.

*வினா எண் 311—திரு. கு. அரங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா உதகைத் தொகுதி முள்ளி என்னுமிடத் திலிருந்து கொலக்கம்பை வரை செல்லும் சாலை மத்திய நெடுஞ் சாலைத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அச்சாலை வேலை எப்பொழுது ஆரம் பிக்கப்படும் ?

---

[உடுக்குறியிட்ட வினாக்கள் எண். 310 முதல் 317 வரை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெற்றுள்ளன.]

[1979 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## வேளாண் பணிகளுக்கு மானியம்.

*வினா எண் 312—திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்கள் என்ன ?

(ஆ) எந்தெந்தப் பயிர்களுக்கு யாரால் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ) : அவையின் முன் அறிக்கை @ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

## அணைக்கட்டுகளின் நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண் 313—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டுகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மத்திய விவசாய, பாசன அமைச்சர் தமிழக அரசுக்கு பிப்ரவரி மாதம் கடிதம் ஏதேனும் எழுதியிருக்கிறாரா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

---

@..120ம் பக்கங்களில் இணைப்பாக I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1979 மார்ச் 9]

## திருப்பூரில் தொழிற்பேட்டை.

*வினா எண் 314 — திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில் ஒரு தொழிற் பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் தற்போது திருப்பூரில் பனியன் தொழிற்சாலைகளுக்காக ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற் குறிப்பு நடைமுறையில் கொண்டுவரப் பட்டுள்ளது.

(ஆ) தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்காக 10.137 ஏக்கர் நிலம் திருவாளர்கள் மதுரை கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து 4-12-1978 அன்று வாங்கப்பட்டுள்ளது. தொழிற் பேட்டைக்கான வரைபடம் நகர அமைப்புத் துறையினரால் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. 30 தொழிற் கூடங்களைக் கட்டுவதற்காக கேட்கப் பட்டிருந்த ஒப்பந்தப் புள்ளிகள் இறுதியாக முடிவு செய்யப் பட்டுள்ளன. கூடிய விரைவில் இத்தொழிற்பேட்டை செயல் படத் துவங்கும்.

## ஜோலார்பேட்டையில் பால் சேகரித்து வழங்கும் நிலையம்.

*வினா எண் 315— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் ஜோலார்ப்பேட்டையில் ஃபீடர் டெய்ரி ( Feeder Dairy ) அமைக்கப்பட இருந்த திட்டம் சேலத்திற்கு மாற்றப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஜோலார் பேட்டையில் பால் சேகரித்து வழங்கும் நிலையம் அமைக்க முடிவான திட்டம் ஏதும் இருந்ததில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1979 மார்ச் 9

## திருச்சி மருத்துவமனை.

*வினா எண் 316 — திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும்
திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தற்
போது நல்ல வசதிகளுடன் இயங்கி வருவதால் விரிவு படுத்தும்
திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

## சென்னையில் கொசு ஒழிப்புத் திட்டம்.

*வினா எண் 317 — திரு. சென்னை மு. அரங்கநாதன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகராட்சி சுகாதாரப் பிரிவில் கொசு
ஒழிப்புத் திட்டத்திற்காக மாலத்தியான் போன்ற மருந்துகள்
இப்போது வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) 1973-க்குப் பின் 1977-ஆம் ஆண்டுவரை மேற்கண்ட
திட்டம் செயல்படாததற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :
(அ) 1973—77 ஆண்டுகளில் "மாலத்தியான்" என்கிற
மருந்து இந்திய அரசால் வழங்கப்படாததால், இம்மருந்து உப
யோகிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக இந்திய அரசாங்
கத்தால் வழங்கப்படும் எம். எல். ஓ., அபேட், பைரோசின்
போன்ற மருந்துகள் சென்னை மாநகராட்சியால் கொசு ஒழிப்பு
திட்டத்தின் கீழ் உபயோகிக்கப்படுகிறது.

(ஆ) மாலத்தியான் வழங்கப்படாததால் 1973—77-ம்
ஆண்டில் சென்னை மாநகராட்சியின் கொசு ஒழிப்புத் திட்டத்
டத்தை நடைமுறை செய்வதில் எவ்விதத் தடையும் ஏற்பட
வில்லை. அத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.



1979 மார்ச் 9].

## (2) உரிமைப் பிரச்சனை

## முரசொலி, தினகரன் நாளேடுகள் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்னை. பேரவை விதி 184-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன், ஒரு அவை உரிமை மீறல் பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்களும் இதே பொருள் குறித்து அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் அவர்களை அப்பிரச்னை குறித்து அவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தம் சம்பந்தமாக இந்த சட்டமன்ற பேரவையில் 6—3—79 அன்று எதிர்பாராத சில கோஷங்களை எதிர்க் கட்சிகள் எழுப்பின. அந்த கோஷங்களை நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பத்திரிகை குறிப்பில் இருந்தும், அவைக் குறிப்பில் இருந்தும் நீக்கிவிட உத்தரவு பிறப்பித்து இருந்தார்கள். அப்படி எழுப்பப்பட்ட கோஷங்கள் ஜனநாயக உணர்வுகளுக்கு புறம்பாகவும், அதே நேரத்தில் சட்டசபையை நடத்தவிடாமல் இருந்த நிலையிலும், அந்த கோஷங்களை அவர்கள் வெளியிட்டபோது—எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்களிடமிருந்து அவைகள் வந்தபோது, நாங்கள் ஆளும் கட்சியில் உள்ள இளைஞர்கள், ரத்தத் துடிப்புள்ள உறுப்பினர்கள் புரட்சித் தலைவர் பின்னணியில் இருக்கிறோம், அதே நேரத்தில் அண்ணா அவர்களின் தத்துவமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வகையில் அமைதியாக இருந்தோம். அவர்களால் எழுப்பப்பட்ட கோஷங்கள் பத்திரிக்கைக் குறிப்பில் வர வேண்டாம் என்று பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிட்டிருந்தார். அப்படி வராமல் இருந்து இருந்தால் இங்கே நடந்து விட்ட துர்பாக்கியமான நிகழ்ச்சி வெளி உலகத்திற்கு தெரியாமல் இருந்து இருக்கும். ஆனால், 7—3—79 நாளிட்ட 'முரசொலி' நாளேடும், 6—3—79 நாளிட்ட 'அலை ஓசை' நாளேடும், 7—3—79 நாளிட்ட 'தினகரன்' நாளேடும் அவைகளை பிரசுரித்திருக்கின்றன.

*   *   *   *   *   *

என்று போட்டிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவரால் நீக்கம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட பகுதிகளை வெளிப்படுத்தி, அதன் மூலம் இந்தப் பேரவையின் உரிமையை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பாதிக்கும் வகையில் அவைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, அந்தப் பத்திரிக்கைகள் மீது உரிமைப் பிரச்னை எழுப்ப அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''தமிழக சட்டப் பேரவை கண்ணியத்தோடும், கடமை உணர்ச்சியோடும் மரபைக் கட்டிக் காப்பதிலே தனக்கு நிகர் தானே'' என்று மற்றவர்கள் பார்த்து பாராட்டுகின்ற வகை யிலேயும் இது நாள் வரையில் நடந்து வந்து இருக்கிறது. அதற் கேற்றார்போல் நாளேடுகளும் பேரவைத் தலைவராக யார் இருக் கிறார்களோ அவர்கள் ஆணைக்குட்பட்டு எந்தெந்த செய்திகளை வெளியிட அனுமதி தருகிறார்களோ அச்செய்திகளை மட்டும் பெரும்பாலான பத்திரிக்கைகள் வெளியிட்டு தமிழக சட்டப் பேர வையின் மரபைக் காத்து வருகிறது. ஆனால் 6—3—79 அன்று ஜனநாயகத்தை தகர்த்து எறியக்கூடிய வகையில் மக்களாட்சித் தத்துவத்தினை கேள்விக் குறியாக்கும் வகையில் தமிழக சட்டப் பேரவையில் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், அதற்கு உறு துணையாக திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியும் பேரவையில் வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழக சட்டமன்றத்திற்குள்ளேயே கோஷங்களை எழுப்பியதை யும் அப்படி கோஷங்கள் எழுப்பி அவையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் பேரிரைச்சல் செய்து அவையில் குழப்பங்கள் ஏற் பட்டதையும் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அதனைப் பத்திரிக்கை குறிப்பில் இருந்தும் அவைக் குறிப்பில் இருந்தும் நீக்கும்படி உத்தரவிட்டு இருந்தும் சென்னை 7—3—79 நாளிட்ட ''தினகரன்'' பத்திரிக்கையில் பேரவையில் உள்ளே நடந்த குழப் பங்களையும் கோஷங்களையும் வெளியிட்டு இருப்பது இந்த அவை யினை மீறிய செயலாகும். எனவே இது குறித்து உரிமைப் பிரச்னையை எழுப்ப அவையில் அனுமதி கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்பிரச்னை பத்திரிக் கைகள் மீது இருப்பதால், அந்தப் பத்திரிக்கைகளுக்கு எழுதிக் கேட்டு பதில் வந்த பிறகு தீர்ப்பளிக்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, பத்திரிக்கைகள் மீது உரிமைப் பிரச்னை வருகிற நேரத்தில், அந்த உரிமைப் பிரச்னை குறித்து ஒரு உறுப்பினர் அவையின் உடைமையாக்கி பேச ஆரம்பித்து விட்டால், அதற்குப் பிறகு தொடர்ந்து பேசு வது இந்த அவையின் மரபாக இருந்து வருகிறது. அது பற்றி பேச மற்றவர்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பத்திரிக்கைகளில் இருந்து பதில் வந்த பின்பு நான் தீர்ப்புச் சொல்கிறபோது அந்தச் சந் தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். பத்திரிக்கை களில் இருந்து விளக்கம் வந்தபின்பு உங்களுக்கும் வாய்ப்பு அளிக் கிறேன். இன்றைக்குத் தேவையில்லை. இன்றைக்கு அந்தப்



பத்திரிக்கைகளில் இருந்து பதில் எதிர்பார்த்து, பிறகு இந்த அவையில் உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் தந்து, பிறகு நான் தீர்ப்பளிக்கிறேன்.

<u>*திரு. மு. கருணாநிதி:</u> தலைவரவர்களே, இங்கே தரப் பட்டிருக்கின்ற உரிமைப் பிரச்னை குறிப்பிட்ட இரண்டு மூன்று பத்திரிகைகளைப்பற்றியது அதாவது முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய ஏடுகளில் இங்கு எழுப்பப்பட்ட சிம்கோ மீட்டர்ஸ் தொடர்பான முழக்கங்கள் வெளி வந்துவிட்டன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே தரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள், அன்றைய தினம் முழக்கங்களுக்கிடையே பேசியது தெளிவாகக் காதுகளில் விழவில்லை என்ற குறிப்பினை முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலே மாத்திரமல்லாமல் தினமணி ஏடு கூட அந்தச் செய்தியை வெளியிடுகிற நேரத்தில் அதனுடைய இறுதிக் குறிப்பிலே துணைத்தலைவர் என்ன சொன்னார் என்பது காதிலே விழவில்லை என்று கோடிட்டு காட்டியிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், அன்றைக்குப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் என்ன சொன்னார் கள் என்பது கூட குழப்பத்திற்கிடையே யாருடைய காதிலும் விழவில்லை என்கிற அந்தக் குறிப்பும் இந்து, இன்டியன் எக்ஸ் பிரஸ் ஆகிய ஏடுகளில் கூட வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல வெளியே மாண்புமிகு துணைத்தலைவரவர்கள் சில பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசியதைக் கண்டேன். குறிப்பிட்ட சில பத்திரிகைகளுக்கு விளக்கம் அளித்துக்கொண் டிருந்தார். அவர்கள் எல்லா பத்திரிகை நிருபர்களையும் தன்னுடைய அறையிலே அழைத்து வைத்து இப்படி இப்படி நான் தீர்ப்புக் கூறினேன் என்று சொல்லியிருந்தால் அதற்கேற்ப பத்திரிகைகளிலே பிரசுரித்திருக்கக்கூடும். இதனை அரசாங்க செய்தித்துறை, இயக்குனர் அவர்களாவது செய்திருக்கலாம். எல்லா பத்திரிகை நிருபர்களையும் உடனடியாக அழைத்துச் சொல்லியிருக்கலாம். ஏனென்றால் செய்தித்துறை ரொம்ப வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செயல்படுகிறது. அது எப்படி என்பதை விளக்குகிறேன்.

நான் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு மனு செய் திருந்தேன். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட விஷயத்தை அதாவது எனக்குப் பாதகமாக முடிந்துவிட்ட விஷயத்தை உடனடியாக செய்தித்துறை இயக்குநர் அவர்கள் எல்லா பத்திரிகைக்காரர்களையும் அழைத்து, அதிலும் அலை ஓசை போன்ற பத்திரிகைகளைத் தவிர மற்ற பத்திரிகைக்காரர் களை அழைத்து கருணாநிதி போட்ட கேஸ் தள்ளுபடி செய்யப் பட்டது என்ற செய்தியை மிக விரைவாக வெளியிட ஏற்பாடு செய்தார்கள். அதாவது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எமர்ஜென்சி காலத்திலே எப்படி செய்திகளை விரை வாகவும், விறுவிறுப்பாகவும் தந்து கொண்டிருந்தார்களோ

அதுபோன்று இந்த அரசின் செய்தித் துறை செயல்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட செய்தித் துறை அன்றையதினம் எல்லா நிருபர்களையும் அழைத்து மாண்புமிகு பேரவைத் துணைத்தலைரவர்கள் இதைத்தான் சொன்னார்கள். எனவே நீங்கள் இவற்றை வெளியிடக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கலாம். அல்லது மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களாவது தன்னுடைய அறையிலே எல்லா பத்திரிகை நிருபர்களையும் அழைத்து நான் இப்படித்தான் சொன்னேன். அது உங்களுடைய காதுகளிலே விழாமல் போயிருக்கக் கூடும், ஆகவே என்னுடைய ஆணை இதுதான், எனவே இதனைப் பிரசுரிக்காதீர்கள் என்று சொல்லி இருக்கலாம். அது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் எழுப்பப்பட்ட முழக்கங்களுக்கு மேலாகவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைப்பற்றி, * * * என்று திருச்சியில் தொழிலாளர்கள் குறிப்பிட்டதாக இந்த அவையிலே மாண்புமிகு அவை முன்னவர்கள் எடுத்துச் சொன்னார்கள், அவ்வாறு அவர்கள் எடுத்துச் சொன்னது நேற்றைய தினம் பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கிறது. அது உரிமைப்பிரச்னையாகாதா ? ஆகவே அதனையே உரிமைப்பிரச்னையாக எடுத்துக்கொள்ளாத நிலையில், மாண்புமிகு 'பேரவைத் துணைத்தலைவரவர்கள் சொன்னது யாருடைய காதிலேயும் சரியாக விழாத காரணத்தால் இவ்வாறு பிரசுரிக்கப்பட்டிருப்பது உரிமைப்பிரச்னை என்று சொல்வது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு எஸ். திருநாவுக்கரசு: ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் நடந்தபோது சபையிலே ஒழிக என்று பலவகையான கோஷங்கள் எழுப்பப்பட்டன. அப்போது நான் தீர்ப்புச் சொல்லுகின்ற நேரத்திலே கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பது இருக்கலாம், ஆனால் என்னென்ன கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பது எல்லாம் பத்திரிகைக் குறிப்பிலேயும் சபைக்குறிப்பிலேயும் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றுதான் உத்தரவிட்டேன். அப்படி சொன்னது மாத்திரமல்ல. வெளியிலே பத்திரிகை நிருபர்கள் என்னிடம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டார்கள். நான் அப்போது அதுபற்றிச் சொல்லிய பிறகு, அவர்கள் சொன்னது உங்கள் காதுகளிலே எப்படி விழுந்ததோ அப்படிப் பிரசுரிக்கலாம் என்று சொல்லிவிட்டு, அதன்பிறகு என்னுடைய தீர்ப்பினை உறுதிப்படுத்துகின்ற அளவிலே அங்கே எழுப்பப்பட்ட முழக்கங்கள் என்ன என்பதைப் பிரசுரிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





[முற்பகல் 10-10]

அப்போது கூட அலை ஓசை நிருபரும் அங்கு மற்ற நிருபர்களோடு இருந்தார்கள் என்பது எனக்கு நினைவு. அவர்கள் இப்போது இங்கே இருப்பார்கள் என்று கருதுகிறேன்; அன்று அங்கே இருந்தார்கள். அவர்களும் அதைக் கேட்டார்கள், அவர்களிடத்திலும் நான் சொன்னதாக எனக்கு நினைவு. ஆக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை எழுப்பிய காரணத்தால் இதை தன்னிலை விளக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டால் என்னென்ன பிரச்னைகள் வருமோ, என்னென்ன விஷயங்கள் வருமோ அவையெல்லாம் இப்போதே பேசப்படுகிறது. சாதாரணமாக உங்கள் கவனத்திற்கு இத்தகைய ஒரு பிரச்னை வந்தால் முதலில் 'ப்ரைமா பேஸி கேஸ்' இருக்கிறதா என்று பார்த்துவிட்ட பிறகுதான அதை அவையில் வைத்து அதுபற்றி கருத்துக்கள் சொல்வது வழக்கம். ஆகையால் இதில் 'ப்ரையா பேஸி கேஸ்' இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் பேசுவது என்பது முறையல்ல.

* மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் முதலில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொன்னேன். அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னையில் உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட்டு, உரிமை மீறப்பட்டிருக்கிறதா, அதற்கான தடையங்கள் அல்லது ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று பத்திரிகைகளை வரவழைத்துப் பார்த்து விட்டு இங்கே சொல்லும்போது அவர்கள் அதுபற்றி விவரித்தால் கூட நியாயம் உண்டு.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தங்க[illegible]நக்கு நல்ல உதவி செய்வதற்கு ஆலோசனையாக ஒரு கருத்தைச் செ[illegible]ரிகை விரும்புகிறேன். அன்றையதினம் நடந்தவை சில பத்தி[illegible]மைப் களில் வந்தன. அது சரியல்ல என்ற கருத்து இங்கே உரி[illegible]மைப் பிரச்னை மூலம் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த உரி[illegible]லாப் பிரச்னைபற்றி இன்று பத்திரிகைகளில் வந்தால் எல்[illegible]மைப் பத்திரிகைகளிலும் அந்தக் கருத்து வந்துவிடும். இந்த உரி[illegible]டு பிரச்னைபற்றி தங்கள் அறையில் அதுபற்றி ஆராய்ந்துவிட்[illegible]ய அதற்குப் பின்னர் அவர்கள் அதை இங்கே எழுப்ப வேண்டி[illegible] அவசியம் ஏற்பட்டு எழுப்ப தாங்கள் அனுமதித்திருந்தால் ஒரு வேலை ஏற்கெனவே அந்த முழக்கங்கள் வராத பத்திரிகைகளிலும் வரலாம். இன்றையதினம் உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்னை எல்லாப் பத்திரிகைகளிலும் வரும் முழு உரிமை பெற்றுவிட்டது. இந்த உரிமைப் பிரச்னையே உரிமை மீறலுக்கு வழிகாட்டுகிறது என்பதை தங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். தாங்கள் எப்படி முடிவு எடுக்கப்போகிறீர்களோ

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 9

தெரியாது. இந்த உரிமைப் பிரச்னை எதனால் வருகிறது என்ற பிரச்னைகள் எல்லாம் எல்லாப் பத்திரிக்கைகளுக்கும் சொந்தமாகிறது.

திரு என். சங்கரய்யா : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் சொல்ல விரும்புவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் பல விஷயங்கள் பற்றிப் பேசியிருக்கிறார்கள். பேசும்போது இது ஜனநாயகத்திற்கு மாறானது அப்படிப் மிகவும் வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டார்கள். என்றும் யகத்திற்கு மாறானது என்று மட்டும் சொல்லிவிட்டால்போதாது. ஜனநா அந்நிலை ஏற்பட்டதற்கு காரணம் நூறு நாட்களாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க மாட்டேன். தாங்கள் பிரச்சனையை விட்டு எங்கேயோ செல்கிறீர்கள். அந்தப் பிரச்னையை வாதமாக வைத்துக் கொள்ளக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது * * சொன்னார்கள். நான் * அந்த வார்த்தையை என்று எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று பேரவைத் தலைவர் தாங்கள் களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்

திரு. மு. கருணாநிதி : * * என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள் . * என்றும் சொன்னார்கள். அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காவிரி மணலுக்கும் கடல் மணலுக்கும் அதிகமாக வாழ வேண்டும் என்று நான் என்னுடைய வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு நான் சொன்ன தெல்லாம் அவை முன்னவர் அவர்கள் திருச்சியில் நடைபெறுகிற தொழிலாளர்கள் கிளர்ச்சியில் * * என்ற முழக்கத்தையிடு கிறார்கள் என்ற வார்த்தையை அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலும் இடம் பெற்று, பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது என்பதைத் தான் குறிப் பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருச்சியில் இருக்கிற தொழிற்சாலைக்கு முன்னால் நின்று போடப்பட்ட கோஷத்தை இங்கே சொன்னார்கள். ஆனால் இங்கே போடப்பட்ட கோஷங்களை நீக்கியதற்குப் பின்னாலும் போடப்பட்டிருப்பது அவை உரிமை மீறல் என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உன்னிப்பாகக் கவனித்தேன். 'மாண்புமிகு உறுப்பினர்கள்

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

விவாதத்திலே ஏற்கனவே கலந்து கொண்டு என்ன பேசினார் களோ அந்த விவாதங்கள் மட்டும் அவைக் குறிப்பிலே இருக்க லாம்; பத்திரிகை குறிப்பிலே இருக்கலாம். அதற்குப் பின்னாலே தொடர்ந்து முறைகேடாக தவறாக எழுப்பப்பட்ட கோஷங்கள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்தும் பத்திரிகைக் குறிப்பி லிருந்தும் நீக்கப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன், இதுதான் துணைச் சபாநாயகர் அவர்களின் தீர்ப்பு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ***என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது பத்திரிகைகளில் வந்தால் What will become of my prestige?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் நேற்று இங்கு சொன்னதைததான் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, தாங்கள் எடுத்துக் காட்டியதைபபோல் இப்போது ஏற் பட்டிருக்கின்ற பிரச்னை ஒன்றே ஒன்றுதான். அதாவது சபையில் நடந்த நடவடிக்கைகளை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நீக்குவதற்கு உத்தரவிட்ட பகுதி மீண்டும் பத் திரிகைகளில் வெளிவருவது முறைதானா என்கின்ற ஒரு பிரச்னை தான், இப்போது அவை முன்னால் இருக்கிறது. அதைப்பற்றி தாங்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு—யார் யாரை தாங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ, அவர்க ளிடம் கேட்டுவிட்டு பின்னால் இதற்கு தீர்ப்பு கூற உரிமை படைத்தவர்களாக இருக்கிறீர்கள். அதை தாங்கள் செய்வீர்கள். அதற்கு முன்னால் இன்னின்ன பகுதிகள் நீக்கப்பட வேண்டும் என்று துணை சபாநாயகர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்களோ அதே பகுதிகள் மீண்டும் இப்போது உரிமைப் பிரச்னை என்கின்ற பெயரால் இப்போது அவைக் குறிப்பில் இடம் பெறுவது என்பது, அவை மரபிற்கு ஏற்றதல்ல; அவைகளும் நீக்கப்பட வேண்டிய நிலைமைதான் ஏற்படுகிறது. மேலும் , மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் * * * என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்லிவிட்டார் என்று பேப்பரில் வந்தால் என்ன ஆவது என்று வருத்தப்பட்டார் கள். பேப்பரில் வந்து விட்டால் * * * என்கின்ற உத்திரவாதத்தை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள் கிறேன். நேற்று அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதை எதிர்க்கட்சித் தலைவர் இப்போது எடுத்துக் காட்டினார்என்கின்ற நிலையில், இந்தப் பகுதிகளை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி, இந்தப் பிரச்னையை சுமுகமாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 9

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது, எடுத்த எடுப்பிலேயே இது குறித்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால், அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிகளை நினைவில் கொண்டு ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அன்றைக்கு நடந்த நிகழ்ச்சியில் இங்கு நடந்தவை எல்லாம் முழுமையாக பத்திரிகைகாரர்களுக்கு கேட்டிருக்குமா என்பது சந்தேகத்திற்குரியது என்பதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பத்திரிகைகள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு என்று இருக்கக்கூடியவைகள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு சிக்கலான சூழ்நிலை ஏற்படும்போது, பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருப்பதில் தவறுகள் ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கொள்வதாக இருந்தால், அன்றைக்கு இருந்த சூழ்நிலைதான் காரணம் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நான் சொல்வதை உறுப்பினர்கள் சற்று கவனிக்க வேண்டுகிறேன். நான் பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டு அதற்கு அவர்கள் என்ன விளக்கம் அளிக்கக்கூடும் என்பதை எல்லாம் நான் தெரிந்து கொள்வதற்கு முன்னாலேயே தாங்கள் யூகித்துக் கொண்டு சொல்வது நல்லதாக இருக்காது என்று நினைக்கிறேன். அவர்கள் பத்திரிகைகள் மீது கொடுத்திருக்கின்ற உரிமைப் பிரச்னை மீது—பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டு அதற்கு அவர்களிடமிருந்து பதிலைப் பெற்று, அதை நான் தெரிவித்த பின்னால்தான் இந்த விவாதம் வரலாம். அதற்கு முன்னால் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பது நியாயமில்லை. பதில் வந்த பின்னால் அதற்கு தகுந்தவாறு இதை ஏற்றுக் கொண்டு தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, * * * * வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டேன். அதற்கு தாங்கள் இதுவரை ஒன்றும் சொல்லவில்லை. புரட்சித் தலைவர் இருக்கிற வரைக்கும் என்னை யாரும் ஒழித்துவிட முடியாது. என்னைப்பற்றி குறிப்பிட்ட வார்த்தைகளை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உணர்ச்சி வசப்பட வேண்டாம். நேற்று பேரவை முன்னவர் கூறியது எல்லாம் பத்திரிகைகளில் வெளிவந்து விட்டது. இப்போது அதை நீக்க வேண்டு மென்றால் இங்கு பேசப்பட்டது அத்தனையும் நீக்க வேண்டி வரும். ஆகவே அதை நீக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 மார்ச் 9]

திரு. ஜே. ஜேம்ஸ் : இங்கே நண்பர் சுப்பிரமணியம் அவர்
கள் கொண்டு வந்திருக்கின்ற உரிமைப் பிரச்னை மீது சில கருத்
துக்களை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போதே நான்
சொல்லிவிட்டேன். பத்திரிகைகளிடம் கேட்டு அதற்கான விளக்
கங்களை கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக உங்களு
டைய கருத்துக்களை சொல்ல வேண்டிய தேவையில்லை....

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்து நின்றார்கள்....)

சுப்பு அவர்கள் எழுந்து நின்று என்னை வற்புறுத்தி பேசு
வதற்கு நேரம் கேட்கக் கூடாது.

(திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் எழுந்து நின்றார்கள்... )

[முற்பகல் 10–20.]

தாங்கள் எந்த விதியின் கீழ் எழுந்து நின்று கேள்வியைக்
கேட்கிறீர்கள்? சாதாரணமாக ஒரு உறுப்பினருக்குத்தான்
சந்தர்ப்பம் தருவது மரபு.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
பேரவைத துணைத் தலைவர் அன்றைய தினம் பத்திரிகையில்
வரக்கூடாது என்று உத்தரவிட்ட சில செய்திகள் 'அலை ஓசை'
பத்திரிகையில் வந்துவிட்டதாகச் சொல்லி, உரிமை மீறல்
பிரச்னை கொண்டு வரப்பட்டது. ஆனால், உரிமை மீறல்
பிரச்னையை முன்மொழிந்து, அதன்மீது பல கருத்துக்களை
நண்பர்கள் கூறி, எதை உரிமைப் பிரச்னை மீறியதாக கருது
கிறார்களோ, அந்தச் செய்திகள் மீண்டும் பத்திரிகையிலே
வரயிருக்கிறது. ஆகவே, உங்களுக்கு ஒன்றை நான் கூற விரும்
புகிறேன். இங்கே நண்பர்கள் முறைப்படி முன்மொழிந்து பிறகு
ஆற்றிய உரைகள், பத்திரிகையிலே வரக் கூடாது என்றும்,
இது சம்பந்தமான நிகழ்ச்சிகள் அத்தனையும் மீண்டும்
பத்திரிகையிலே வரக்கூடாது என்ற அடிப்படையில் சொல்
கிறேன். ஆகவே, தாங்கள் இந்த உரிமை மீறல் பிரச்னையை
தங்கள் அறையில் பரிசீலித்து, இதிலே உரிமை மீறல் இருக்கிறதா
என்பதைக் கண்டு கொண்டால், பின்னர் அவைக்கு கொண்டு
வந்தால் உசிதமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்
அவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன். உரிமை
மீறல் குறித்து ஆரம்பத்திலே இருந்து பேசியது அனைத்தை
யும் நீக்கவேண்டுமென்று திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறார். நான் முதலிலேயே சொன்னது.

பத்திரிகையிலே விளக்கம் வந்தபிறகு, அதை முன்னால் வைத்து நீங்கள் விரும்பினால், உங்கள் கருத்தை தெரிவித்திருப்பீர்க ளானால், இந்தப் பிரச்னையே எழுந்திருக்காது. ஆனால், நடந்தவைகளை அப்படியே நீக்கவேண்டும் என்று உறுப்பினர் கள் கூறுகிறார்கள். அதாவது, அவர்கள் படித்ததிலே இருந்து, அந்த விவாதம் முடிய அவ்வளவையும் நீக்கினால்தான் இது பத்திரிகையிலே வராமல் இருக்கும். அப்போதுதான் உரிமை மீறலையும் காப்பாற்ற முடியும். ஆகவே, அவர்கள் படித்த திலே இருந்து, திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசியது வரை குறிப் பேட்டிலிருந்து . . . . .

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 20, 25 நிமிடங்களுக்கு மேல் விவாதம் நடைபெற்றதை, அறவே நீக்குவது என்பது தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அசெம்பிளியில் இவ்வாறு செய்வது, * * * * வந்துவிடக் கூடாது என்ற கவலை எனக்கு இருக்கிறது. அதுவும் தங்களைப் போன்ற பெருமைமிக்கத் தலைவர் இந்த அவையின் தலைவராக அமர்ந் திருக்கிறபோது, இப்படிப்பட்ட ஒரு தீய பெயர் அவைக்கு வருவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். உங்களுக்கு நான் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன். எனவே, இந்த கோஷங்களை வேண்டுமானால் நீக்கிவிடலாமே தவிர, விவாதங்கள் அப்படியே இருக்கட்டும். அப்போதுதான், உரிமை மீறல் கமிட்டிக்கு போகும்போது இந்த விவாதங்கள் சாட்சியாகவும் பயன்படுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அந்த கோஷங்களை வேண்டுமானால் நீக்கலாம்; விவாதங்கள் தொடர்ந்து, பின்னர் நான் கூறிய விளக்கங்கள் எல்லாம் அப்படியே இருக்கட்டும்.

(திரு. எம். ஏ. லத்தீப் குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்கா ருங்கள். நான் ஏற்கனவே திரு. சுப்பு அவர்களை உட்காரச் சொல்லிவிட்டேன். பிரச்னையைக் கிளப்ப வேண்டாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னைக் கேட்டார்கள் அடிக்கடி நான் இதுபோன்று குறிப்பேட்டிலிருந்து நீக்கு கின்ற முறையை உருவாக்குவது சரியல்ல என்று சொன் னார்கள். இதை நானும் உணர்கிறேன். ஆனால், அதே நேரத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தக் கட்சித் தலைவர்கள் பொறுப்பேற்று, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வராமல் காப்பாற்றினால், நான் நீக்க வேண்டிய நிலை ஏற்படாது. ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில நேரங்களில் உதவி கேட்டால், உதவிக்கு வரமாட்டேன் என்கிறார்கள் . . . .

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலை 9-00 மணியிலிருந்து பிற்பகல் 1-30 மணி வரை உட்கார்ந்து கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். எப்போது உதவி தேவையோ, அதை நான் தர தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீக்க வேண்டுமென்று சொல்லும் போது, எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. இதை நான் ஆரம்பத்திலிருந்தே உணர்கிறேன். அப்படி நீக்கி னால், பேசிப் பயனில்லை என்ற எண்ணத்தில் உறுப்பினர்கள் உட்காருவார்கள் என்ற முறையில்தான் நான் அதைச் செய் கிறேன். ஆகவே, கோஷங்கள் போட்டதும், தாங்கள் * *, * என்று சொன்னதையும் . . . .

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் சொன்னதாகக் குறிப்பிடுகிறீர்கள். அவை முன்னவர் சொன் னதைத் திருப்பிச் சொன்னதாகச் சொல்லவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் சொன்னதையும் தாங்கள் திருப்பிச் சொன்னதையும், தாங்கள் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தியதையும் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் வாழ்த்தியதை என்னுடைய கெழுதகை நண்பர் இராகவானந்தம் அவர்கள் நிச்சயமாக விரும்புவார்கள். வாழ்த்தியதை எடுத்துவிட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாழ்த்தியது இருக் கட்டும். * * * என்ற வார்த்தையைச் சொன் னார்கள். அதையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

## (3) தகவல் கோரல்.

### (அ) கம்யூனிஸ்ட் கட்சியினர் சிலர் நக்சலைட் என்ற பெயரால் கைது ஆனது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான சீரியஸ் விஷயம் குறித்து நேற்றைக்கு நாங் கள்— உத்திராபதி, சிவசாமி, அம்பிகாபதி ஆகிய மூன்று பேரும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு. அம்பிகாபதி] [1979 மார்ச் 9

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களை திடீர் திடீரென்று பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதைப் பற்றி நாங்கள் ஒத்தி வைப்புத்தீர்மானம் கொடுத்ததற்கு காவல்துறை மானியத்தின்மீது இது பற்றி நீண்ட விவாதம் நடத்தலாம் என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த மானியக் கோரிக்கை என்றைக்கு வருகிறது என்று தலைவர் அவர்களே முடிவு செய்யவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இன்னும் இரண்டு நாள் பொது விவாதம் நடக்க இருக்கிறது. திரு. அம்பிகாபதி அவர்கள் அவர்கள் கட்சியின் நேரத்தை எடுத்துக்கொண்டு இன்னும் விளக்கமாகப் பேசலாம். மறுபடியும் வேண்டுமானால் அறைக்கு வாருங்கள். விளக்கம் தாருங்கள். பரிசீலிக்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்து 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. இரா. தாமரைக்கனி . . . .

(திரு. லத்தீப், திரு. சிவசாமி, திரு. தாழை மு. கருணாநிதி ஆகியவர்கள் எழுந்து நின்றனர்).

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தாங்கள் உட்காருங்கள்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும்போது அனுமதிக்காமல் உட்காருங்கள் என்றால் எப்படி உட்கார முடியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உங்களுடைய கோபத்தை அதிகாரத்தைக் காட்ட வேண்டாம். இது வீடு அல்ல; பேரவை.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : இது பேரவை என்பதைத் தாங்களும் நினைவில் கொள்ளவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விதிகளுக்குக் கட்டுப்பட்டு மரியாதை கொடுக்கத் தெரிந்து கொள்ளுங்கள். உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி இல்லை.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : அனுமதிக்கவில்லையென்றால் பேசிக் கொண்டே இருக்கிறேன் . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : எல்லோரும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். வற்புறுத்தி அனுமதி வாங்குவது என்பது சரியல்ல. 235 உறுப்பினர்களும் ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பிக் கொண்டே இருந்தால் இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகளை எப்படி நடத்த முடியும்? நான் நின்று கொண்டிருக்கும்போது நீங்கள் அமருங்கள்.





பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். உறுப்பினர்கள் ஒழுங்கு பிரச்சினையை எப்போதும் எழுப்பலாம், அதற்கு உரிமையுண்டு. 235 உறுப்பினர்களும் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பலாம். ஆனால் வேண்டுமென்றே ஒழுங்குப் பிரச்சனை என்று சொல்லிக் கொண்டு வற்புறுத்தி நேரத்தை அதற்காக வீணாக்குவது முறையல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன நிகழ்ச்சிகளை நடத்தித் தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்களோ அதற்கேற்றபடி நேரத்தை சரிப்படுத்தித் தரவேண்டியிருக்கிறது. எல்லோர்க்கும் சந்தர்ப்பம் தருகிற வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி நேரத்தைத் தரவேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட உறுப்பினர் யாருக்கும் அனுமதி கொடுக்கக்கூடாது என்ற நிலைமை ஒன்றும் கிடையாது. ஒன்றரை மணிக்குள் கூட்டத்தை முடிக்கவேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கும் மனத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் வாய்ப்புகள் தரவேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவில் ஒழுங்குப் பிரச்சனை என்று கேட்டால் நேரத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் அவ்வாறு நேரத்தை வீணாக்குவதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லாமல் அனுமதிக்கத் தயார். அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். திரு. லத்தீப் போன்றவர்கள் வற்புறுத்தி, கட்டாயப் படுத்தி ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது என்பது சரியல்ல. இந்த அவையிலே 239 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நாம் மட்டும்தான் ஒழுங்குப் பிரச்சினை கேட்பதற்கு உரியவர்கள், மற்றவர்கள் அதற்கு உரியவர்கள் அல்ல என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : நான் கேள்வி நேரத்திலே கூட துணைக் கேள்விகள் கேட்பது கிடையாது.

[முற்பகல் 10—30]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கேள்விகள் கேட்காதது உங்கள் பிரியம், கேள்வி கேட்கவேண்டுமென்றால் அதற்காக என் கண் பார்வையை நீங்கள் ஈர்த்திருந்தால் அனுமதி கிடைக்கும், அதைக் காரணம் காட்டி இப்போது பேசுகிறேன் என்று சொல்வது சரியல்ல, நீங்கள் கேள்வி கேட்கவில்லையென்றால் அப்படி கேட்காமல் இருப்பதற்கு நான் குற்றவாளியல்ல. கேட்காமல் இருப்பது உங்கள் விருப்பம். இப்படி ஒவ்வொருவரும் எழுந்து கேட்டுக் கொண்டிருந்தால் மசோதாக்களை எப்படி முடிக்கமுடியும் எல்லோரையும் இப்படியே அனுமதித்துக்கொண்டிருந்தால் இன்றைக்கு நிகழ்ச்சிகளை நடத்தமுடியாது. ஆகவே, அமருங்கள்.

## (4) கவன ஈர்ப்புகள்

### (அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலையின் செயல்முறை குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே,

''முகவை மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை செயல்படாமலும் வேலை இல்லாமலும் பண்டகசாலை உறுப்பினர்களின் முதலுக்கும் ஆபத்தான சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, 2,317 உறுப்பினர்களைக் கொண்டு திருவல்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை செயல்பட்டு வருகிறது. மொத்தம் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 36,065-ல் அரசின் மூலதனம் ரூபாய் 17,800 ஆகும். கடந்த எட்டு ஆண்டுகளில் இப்பண்டகசாலையின் விற்பனை பலன்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | ஆதாயம். | நட்டம். | தொடர் நட்டம். |
|---|---|---|---|---|
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1970—71 | | .. | 25,148,87 | 1,15,756.88 |
| 1971—72 | .. | .. | 53,627.19 | 1,69,384.07 |
| 1972—73 | .. | .. | 95,652.82 | 2,65,036.89 |
| 1973—74 | .. | .. | 26,681.70 | 2,91,718.59 |
| 1974—75 | .. | .. | 27,506.07 | 3,19,224.66 |
| 1975—76 | .. | 46,234.24 | .. | 2,72,990.42 |
| 1976—77 | .. | .. | 40,131.63 | 3,13,122.05 |
| 1977—87 | .. | .. | 62,423.33 | 3,75,545,83 |

1977—78 ஆம் கூட்டுறவு ஆண்டில் இப்பண்டகசாலை ரூபாய் 13,86,816-க்கு விற்பனை செய்தது. 1—7—1978 முதல் 31—1—1979 முடிய இப்பண்டகசாலை ரூபாய் 5,08,564-க்கு விற்பனை செய்துள்ளது. விற்பனை சரிவுக்கு



முக்கிய காரணம் சர்க்கரை, மற்றும் இதர கட்டுப்பாட்டு சாமான்கள் விற்பனையாகாதது. இந்த பண்டகசாலையின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும், ஒரு 'மக்கள் அங்காடி' திறக்கவும் இதற்கு அரசு ரூபாய் 14,000 நிதியுதவி அளித்துள்ளது. மத்திய அரசின் உதவியைப் பெறும் பணிகளின் கீழ் உதவி பெற இப்பண்டகசாலைக்கு புனரமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி இராமநாதபுரம் சரக இணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, புதிப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

* திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் புதுப்பிப்பதற்காக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருவில்லிபுத்தூர் பண்டகசாலை பலவிதமான பலகீனங்களைக் கொண்டதாக இப்போது இருக்கிறது. அதிகாரிகளும் டைரக்டர்களும் சரியாக இயங்கவில்லை. வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டாத நிலைமையினால் அதை நடத்த முடியாத நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியைத் சேர்ந்தவர்களும் அதிலே இருக்கிறார்கள், சீனி விநியோகத்திலே முறைகேடு நடந்திருக்கிறது. அதைப்பற்றி விசாரணை நடைபெற்றிருக்கிறது. தனியார்களுக்கு டெண்டர்களே இல்லாமல் விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைய அரசு துரிதமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் அவசர நடவடிக்கைகள் மூலமாக தனிப் புனர் விசாரணை, கூட்டுறவுச் சட்டத்தின் 65 வது பிரிவின்படி விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையைக் கலைக்காமல் குறைபாடுகளைக் களைந்து அதைச் சீர்திருத்துவதற்காக ஆவன செய்யப்பட்டு வருகிறது, குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்ற முறையிலே தான் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

## (5) ஒழுங்குப் பிரச்சனைகள்.

### (அ) உறுப்பினர் தம் பேச்சுக்கு ஆதாரம் கொடுப்பது குறித்து.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் பாலா பழனூர் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி பாராளுமன்றத்தில் பேசிய ஒரு கருத்

தினை நான் இங்கே எடுத்துக் கூறிய போது துணைத் தலைவர் அவர்கள் அதற்கான ஆதாரத்தை, பத்திரிகைக் குறிப்பைத் தர வேண்டுமென்று சொன்னார்கள்.

ஒன்றரை மணிக்குள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்றரை மணிக்குள் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களிடத்தில் கொடுத்தேன். அவைகள் அலை ஓசை, முரசொலி என்ற காரணத்தால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒழுங்குப் பிரச்னை என்ன ? நீங்கள் தீர்ப்பைக் குறை கூறுகிறீர்களா ?

திரு. தாழை மு. கருணாநிதி : இப்படிப்பட்ட பத்திரிகைகள் என்பதால் தங்கள் மனத்திற்குத் திருப்திப்படவில்லை என்று கருதுகிறேன். ஆகையினாலே, 6–12–78-இல் வருகின்ற இன்டியன் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வது என்னவென்றால், இப்பொழுது விளக்கம் தேவையில்லை, ஏதாவது இருந்தால் எழுத்து மூலமாகத் தரவேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர்வர்களே, அது உங்களுடைய கவனத்திற்கு வராத விஷயம் என்று கருதுகிறேன். துணைத் தலைவரவர்கள் அவையிலே இருந்தபொழுது இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அந்தப் பத்திரிக்கையைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காட்டினார்கள், அலை ஓசையை மட்டும் காட்டினார்கள்.

திரு. மு. கருணாநிதி : இப்பொழுது, பார்லிமெண்டிலே பாராளுமன்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேசிய பேச்சு, யு.என்.ஐ. யில் அடிக்கப்பட்டு, அது 'இந்து' 'இன்டியன் எக்ஸ்பிரஸ்', பத்திரிக்கைகளில் வந்திருக்கின்றன. நானே படித்துக் காட்டி விடுகிறேன். கட்சித் தலைவர் என்ற முறையில் * * *
இதை அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதைத்தான் நேற்று தாழை கருணாநிதி குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாலும்,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க நீக்கப் பெற்றுள்ளது.





அந்தப் பத்திரிகையில் வெளி வந்திருப்பதையும், பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் அப்படித்தான் இருக்கிறதா என்பதைப்பற்றியும், எந்தப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதோ அந்தப் பத்திரிகையின் ஆசிரியரைக் கூப்பிட்டு அவர் உறுதி தந்த பிறகு, அதை நான் ஏற்றுக் கொண்டு பிறகுதான் தீர்ப்பு கூறவேண்டும். இதை நேற்று அவர் என்னிடத்தில் தரவில்லை. நேற்று அலை ஓசை பத்திரிக்கையைத் தந்தார்கள். ஒன்றரை மணிக்குள் தர வேண்டுமென்று துணைத் தலைவரவர்கள் சொன்னதற்கேற்ப அலை ஓசையைக் கொண்டு வந்து காட்டினார்கள். மீதிப் பத்திரிகைகளில் வந்திருக்கிறதா என்று காட்ட அவரால் அப்பொழுது இயலவில்லை. (குறுக்கீடு) இன்றைக்குக் கொடுப்பதைப் பற்றிப் பேச்சு இல்லை. தீர்ப்புக் கூறுவதற்கு முன்னால், ஒன்றரை மணிக்குள் இந்த ஆதாரங்களை என்னிடத்தில் தரவில்லை. அதுபற்றித் தீர்ப்புக் கூறியாகிவிட்டது. மேலும் இப்படிப் பிரச்னை எழுப்புவதாக இருந்தால், எழுத்து மூலமாகத் தந்து, நான் அந்தப் பத்திரிகையையோ அல்லது பாராளுமன்ற குறிப்புகளையோ வரவழைத்து அது உண்மை என்று கருதினால் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது தீர்ப்பு கொடுத்தாகி விட்டது. மேலும் ஏதாவது இருந்தால் எழுத்து மூலமாக எழுதித் தந்தால் அதன்மீது ஆய்ந்து தீர்ப்பு கூற வழியிருக்கிறது.

## 4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

### (அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையின் செயல் முறை குறித்து—தொடர்ச்சி.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கூட்டுறவு பண்டக சாலைகளுக்குப் பலசரக்கு, ஜவுளி ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொள்முதல் செய்து கமிஷன் வாங்குவதாகத் தெரிகிறது. மேலும் கூட்டுறவு பண்டக சாலைகளில் விற்கும் விலைக்கும் தனியார் கடைகளில் விற்கும் விலைக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. இதை மூடப்படக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் போக்கி, ஒன்பதாண்டுக் காலமாகச் செயல்படாத சங்கத்தின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சங்க உறுப்பினர்களின் முதலுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பரிசீலனை செய்து நடவடிக்கை அவசியம் எடுக்கப்படும்.

[1979 மார்ச் 9

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளு மன்றக் குழுவின் தலைவர் திரு. பாலா பழனூர் பேசியதாக இங்கே குறிப்பைக் காண்பித்தார்கள். இந்தச் செய்திகளைக் குறித்து அண்ணா நாளிதழில் கண்டனம் தெரிவித்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) டெல்லி மாநகரில் மோட்டார் வண்டிகளின் இலக்கப் பலகைகள் இந்தி மொழியில் எழுதப்பெறுவது குறித்து—

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, சென்ற மாதம் 23 ஆம் தேதி இன்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ஒரு நியூஸ் அயிட்டம் வந்தது. அதன் அடிப்படையில் 41 வது விதியின்கீழ் இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வருகிறேன்.

The Delhi Administration is understood to have asked the traffic police not to prosecute vehicles bearing the number plates in Devanagari (Hindi) script as an amendment to the Motor Vehicles Act clarifying the position is being introduced in parliament.

The request was made during some informal discussions in June–July last year as it was discoverd that some of the top elected officials of the Delhi Administration had number plates in Devanagiri script on their vehicls in violation of the existing Motor Vehicles Act.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் படித்துவிட்டு உட்காருங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : உங்களிடம் காட்டிவிட்டுத் தான்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்லட்டும். முதலிலே என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் படியுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, 41 வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதித்துறைகளுக்குப் புறம்பாக டெல்லி மாநகரில் உள்ள மோட்டார் வண்டிகளின் இலக்கப் பலகைகள் இந்தி மொழியில் அமைந்துள்ளதன் காரணமாகப் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".



1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டில் மோட்டார் வண்டிகளின் மத்திய சட்டத்தில் உள்ள உட்பிரிவு (3) பிரிவு 24 இன்படி, பதிவு செய்யும் அதிகாரி (Registering Authority) சட்டத்தின் ஆறாம் படிவத்தில் (Sixth Schedule) குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள குறியீடுகளையும் நான்கு இலக்கங்களுக்கு மேற்படாத எண்களையும் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு மோட்டார் வண்டிக்கும் அளிக்க வேண்டும். அவ்வாறு இச்சட்டத்தின் கீழ் ஆறாம் படிவத்தில் டெல்லி மாநகருக்கு அளிக்கப்பட்ட குறியீடுகள் 'DL', 'மற்றும்' 'DH' ஆகிய ஆங்கில எழுத்துக்கள் ஆகும்,

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1940 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளின், 54 ஆம் விதியின்படி தமிழ்நாட்டில் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு மோட்டார் வண்டியிலும் அளிக்கப்பட்ட ஆங்கிலக் குறியீடுகளையும், ஆங்கில நம்பர்களையும்தான் வெளியிட வேண்டும். 1939 ஆம் ஆண்டின் மோட்டார் வண்டிகளின் மத்திய சட்டத்தில் உள்ள உட்பிரிவு (3) பிரிவு 24 இன்படியும், அச்சட்டத்தின் ஆறாம் படிவத்தின் (Sixth Schedule) படியும் டெல்லி மாநகருக்கு 'DL'. 'DH' ஆகிய ஆங்கில குறியீடுகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும் டெல்லி மாநகரில், டெல்லி மாநகர் மோட்டார் வண்டிகளின் விதிகளைப் பிறப்பித்து அவ்விதிகளின் அடிப்படையில் இந்தியில் மட்டும் குறியீடுகளையும் எண்களையும் வெளியிடலாம் என்று அனுமதித்திருக்கலாம்.

மோட்டார் வாகனங்கள் கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபட்டாலும் சாலை விபத்துக்களுக்கு காரணமாய் இருந்தாலும், மோட்டார் வாகன வரி ஏய்ப்பு தகுதி சான்றிதழ் பெறாமை, உரிமம் பெறாமை போன்ற பல குற்றங்கள் செய்தாலும் மோட்டார் வாகன சட்டப்படியும் மற்ற சட்டங்களின்படியும் உரிமையாளர்கள் மீதும் ஓட்டுனர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்தகைய ஏதேனும் குற்றங்களில் ஈடுபடுகின்ற வாகனம், குற்றம் செய்தபின் அதிகாரிகள், பாதிக்கப்பட்டோர், மற்றும் பொது சாட்சிகள் ஆகியோரிடம் இருந்து தப்பி சென்றுவிடுகிறபோது நம்பர் பிளேட்டுகளில் உள்ள பதிவு குறியீடு, பதிவு எண் இவற்றை கொண்டுதான் குறிப்பிட்ட வாகனத்தின் உண்மையான உரிமையாளர் யார், ஓட்டுனர் யார் என்று நிர்ணயிக்க முடியும்.

டெல்லி மாநகரத்தைச் சேர்ந்த இந்தியில் குறியீடு மற்றும் எண் உள்ள வாகனங்கள் இந்தி தெரியாத பிற மாநிலங்களுக்கு செல்கின்ற போது இது போன்ற ஏதேனும் குற்றங்களில் ஈடுபட்டுவிட்டு விரைவாக தப்பிவிடுமேயானால் குற்றம் புரிந்த வாகனத்தின் உரிமையாளர் , ஓட்டுனரைக் கண்டுபிடிக்க இயலாது. டெல்லி மாநகரத்திலேயே உள்ள இந்தி பேசாத, இந்தி தெரியாத மக்களும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே

[திரு. சி. பொன்னையன்] [1979 மார்ச் 9

அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதும், நாட்டின் தலைநகரமுமான டெல்லி மாநகரத்தில் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கில குறியீடுகளையும், எண்களையும் பயன் படுத்த செய்யுமாறு மைய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

[முற்பகல் 10-40].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா—தலைமை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இங்கே 41 வது விதியின் கீழ் எழுப்பப்பட்ட விவாதத் திற்கு அளித்த பதிலைப் பார்க்கும் போது டெல்லி மாநகர நிர்வாகத்தில் ஏற்பட்ட சில நடவடிக்கைகளைப் பற்றி சொன் னார்கள் இன்னொரு மாநிலத்தில் அல்லது மாநிலத்தைச் சேர்ந்த மாநகரத்தில் உள்ள நிர்வாகத்தைப் பற்றி நாம் இங்கே பிரச்சினைகள் எழுப்புவதும் அதற்கு அமைச்சர்கள் விடை அளிப் பதும் முறைதானா என்பதைத் தாங்கள் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டெல்லியிலே இந்த மாதிரி இருக்கிறதே என்று உறுப்பினர் கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார். மத்திய அரசைக் கேட்டுக் கொள் வோம் என்று அமைச்சர் பதிலில் படித்திருக்கிறார்...

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவ'ரவர்களே, டெல்லி மாநகரம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதாக இருக்கிற காரணத்தினால், இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து டெல்லி செல்கின்றவர்களுக்கு இந்தப் பாதிப்பு ஏற்படக் கூடாது, இன்னல்கள் தடுக்கப்பட வேண்டு மென்பதற்காக மைய அரசை மாநில அரசு வலியுறுத்தும் என்று கூறினேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவ'ரவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்று நானும் கருதுகிறேன். ஏனென்றால், இது இங்குள்ள, தமிழ்நாட்டு மக்களுடைய கவனத்தை ஈர்ப்பதோடு மாத்திரமல்லாமல், நம்முடைய மாநில அரசின் மூலமாக மத்திய அரசினுடைய கவனத்தையும் ஈர்ப்பதற்காக மெத்தவும் பயன்படும் என்றுநான் உணர்கிறேன் அந்த வகையிலே இந்தக் கவன ஈர்ப்புத் தீர் மானத்திற்குப் பதில் அளித்த அமைச்சரவர்கள் மைய அரசிற்கு மாநில அரசின் சார்பாக இது குறித்து நிச்சயமாக குறிப்பு எழுதப் படும் என்று கூறியிருக்கிறார்கள். அதை நான் வர வேற்கிறேன். அதே நேரத்தில், நான் இன்னொன்றையும் மொழிப் பிரச்சினை என்பதால், மிக முக்கியமான பிரச்சினை என்பதால் கவனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு பற்றி பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் வந்திருக்கிறது. அதிலே முதல் குழந்தை அ, ஆ எழுத ஆரம்



1979 மார்ச் 9] [திரு. மு. கருணாநிதி]

பித்த பிறகு தான் அடுத்த குழந்தை என்ற விளம்பரம் வருகிறது. அது வரையிலே தமிழிலே இருக்கிறது. ஆனால் அதிலே ஒரு கரும்பலகை (ஸ்லேட்டில்) இந்தியிலே எழுத்துக்களைப் போட்டு, நம்முடைய தமிழ் நாட்டு பத்திரிகைகளிலே விளம்பரம் வ'ரு கிறது. இவை'களோடு சேர்த்து அதையும் மத்திய அரசிற்கு மாநில அரசு எடுத்துக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் குறிப்பிட்டது போல இந்தியா ஒரே நாடு என்று ஏற்றுக் கொள்கின்ற நேரத்தில், தலைநகரத்திலே இப்படி இந்தித் திணிப்பு நடைபெறுவதை அகற்ற, அதை எதிர்க்க ஒவ்வொரு மாநில, இந்தி பேசாத மாநில மக்களுக்கு உரிமை உண்டு என்பதை ஜனதா கட்சித் தலைவருக்கு எடுத்துத் தெரி விப்பது என்னுடைய கடமை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவ'ர் அவர்களே........

திரு. பி. எச். பாண்டியன் : தீர்மானம் கொடுத்த எனக்கு பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. (சிரிப்பு).

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவ'ர்களே இந்தப் பிரச் சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாங்கள் இங்கே கூற விரும்புகிறோம். சென்னையில் மாநில அரசு மத்திய அரசாங்கத்தின் செய்கையை சுட்டிக் காட்டுகின் எந்தவித தப்பும் இல்லை என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் டெல்லி மாநகரம் ஒரு தனி நிர்வாகத்தில் இருக்கிற மாநகரம். இந்த நாட்டின் தலைநகராக இருந்தாலும் நிர்வாக நிலை என்கிற போது, இந்த மாநிலம் ஒரு நிர்வாகத்தின் அமைப் பில் இருப்பது போல, டெல்லி மாநகரமும் வேறு ஒரு நிர்வாகத் தின் அமைப்பில் இருக்கிறது. இந்த நிலையில் அதை குறித்து இந்த அவையில் விவாதிப்பது முறையாக இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே டெல்லி மாநகரம் எந்த நிர்வாகத்தின் கீழ் இருந்த போதிலும் சரி மத்திய அரசு எடுக்கின்ற கொள்கைகளால் தமிழக மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்றால் அதைப் பற்றி விவாதிக்க முழு உரிமையும் இந்த அவைக்கு உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேள்வி கேட்கப் போகிறார்கள். நான் கேள்வி கேட்கப் போவ தில்லை, உரிமைப் பிரச்சினையைப் பற்றி பேசப் போகிறேன்....

[1979 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பாண்டியன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் அங்கே டெல்லியில் நடைபெறுகிற ஆட்சியைப் பற்றி இங்கே இந்த அவையில் பேசலாமா, முறையாகுமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். டெல்லி மாநகரத்திலே வாகனங்களுக்கு, மோட்டார் வாகனங்களுக்கு நம்பர் பிளேட்டுகளை இந்தியில் திருத்தி அமைக்க ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே உள்ள வாகனங்கள் இங்கே வந்தால் ஓர் ஆண்டுக்கு அவர்கள் நம்பர் பிளேட்டை மாற்றாமலேயே ஓட்டிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்த நிலையில் ஒரு ஆண்டுக்குள்ளான காலத்தில் அங்கேயிருந்து இங்கே வந்த மோட்டார் வண்டிகள் பல்வேறு காரியங்களில் குறிப்பாக ஒரு கிரிமினல் ஆக்டிவிடி என்று வைத்துக் கொள்ளலாம், அதைப் போல சட்டத்திற்கு புறம்பான காரியங்களை செய்து விட்டால், நம்முடைய போலீசாரால் அவர்களை கண்டுபிடிப்பதற்குக் கூட முடியாது. இந்த நேரத்தில் அவர்களுடைய மோட்டார் வாகனங்களில் ஆங்கிலத்தில் நெம்பர் பிளேட்டுகளை மாற்றுவதற்கு பதிலாக எந்தெந்த மாநிலங்களில் எந்தெந்த மொழி பேசப்படுகிறதோ அந்தந்த மொழியிலேயே நம்பர் பிளேட்டுகளை போட வேண்டும் என்பதை இந்த அரசு இந்த நேரத்தில் மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

நான் எதெற்காக சொல்கிறேன் என்றால் இரயில்வே வண்டிகளின் மூலமாக இந்தியைப் புகுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது மோட்டார் வாகனங்கள் மூலமாக மாநிலங்களில் இந்தியை புகுத்துகிறார்கள் என்று சொல்கிறேன், இந்தியை புகுத்துவதை தடுப்பதற்காக இந்த மாமன்றத்தில் தீர்மானம் ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே . . . .

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது வஷயமாக வேண்டாம். 41-வது விதியின் கீழ் தீர்மானம் யார் கொடுத்து இருக்கிறார்களோ அவர் தான் பேச முடியும். தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான பிரச்சினையாக இது இருக்கிற காரணத்தால் யிதிர்க் கட்சித் தலைவரும், மந்தியில அவர்கள் கட்சி ஆட்சியில் ஒருப்பதால் திரு. ஜேம்ஸ் அவர்களும் கருத்துக்களை வெளியிட்டார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் இதிலே கருத்து சொல்வது என்பது கூடாது. அது தவறான முறையாக இருக்கும். ஆகவே நீங்கள் வற்புறுத்த வேண்டாம்.



1979 மார்ச் 9]

திரு. க. சுப்பு : தீர்மானம் கொடுத்தவர் ஓரிரு கேள்விகள் கேட்கலாம் என்று இருக்கிறது. திரு. பி. எச். பாண்டியன் ஒரு கேள்வி கூட கேட்கவில்லை. பேசிவிட்டு உட்கார்ந்து விட்டார். ஆகவே நான் ஓரிரு கேள்கவிளைக் பேட்க விரும்புகிறேன்

திரு. பி. எச். பாண்டியன் : நான் கேள்வி கேட்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. சுப்பு : இது மொழிப் பிரச்சினையாக இருப்பதால், ஏற்கனவே மொழிப் பிரச்சினை பற்றி எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உறுதி மொழி கொடுத்து இருக்கிறார்கள். அந்த உறுதி மொழியை நிறைவேற்றும் வகையில் இந்தச் சபை நடந்து கொண்டிருக்கும் போதே தீர்மானம் கொண்டு வரப்பட்டால் இப்படிப்பட்ட சிக்கல் வராது. இங்கே இருக்கிற சாஸ்திரி பவனில் பணியாற்றும் பிரஸ் இன்பர்மேஷன் பீரோ, இந்துஸ்தான் சமாசார் போன்றவற்றிற்கு மத்திய அரசின் வரவு செலவு திட்டத்தை இந்தியில் தான் கொடுத்தார்கள். ஆங்கிலம் சேர்த்து கொடுக்கவில்லை. தமிழகத்தில் இருக்கும் பி.ஐ.பி.யே இந்தியில் கொடுக்கிறார்கள் என்றால், இதை உடனடியாக மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல இந்த அரசு முன் வரவேண்டும். மோட்டார் வாகனங்களில் இந்தி எழுத்துக்கள் கொண்டுவரப்படுவதை பார்த்த பிறகாவது அவசரத்தை உணர்ந்து இந்த மொழிப் பிரச்சினையில் ஒரு விவேகமாக, விவரமான, அழுத்தமான தீர்மானத்தை அரசு கொண்டு வர இந்த சர்க்கார் தயாராக இருக்கிறதா ?

திரு. என். சங்கரைய்யா : துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது ஒன்று தான். ஒரு தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றுவது என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. இது முக்கியமான விஷயம். ஆங்கிலத்தில் நெம்பர் பிளேட் இருந்தால் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் இந்தியில் போட ஆரம்பித்தால் , ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மாநில மொழியில் போட ஆரம்பித்து விடுவார்கள். மொழியில் சமத்துவம் இருக்க வேண்டும் என்ற உணர்வு வளர்ந்துவிடும். அது குழப்பத்தை விளைவிக்கும். ஆகவே அந்த குழப்பத்தைத் தவிற்கும் வகையில் ''இன்டர்நேஷனல் பார்ம் ஆப் ரோமன் நியூமரிகல்ஸ்'' 1, 2, 3 என்பதை இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்துவது முக்கியம். ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக மத்திய சர்க்காருக்கு இந்த அரசு தெரிவித்து உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டியிருப்பதால், இந்தத் தீர்மானம் கொண்டு வந்தது பொருத்தமானது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1979 மார்ச் 9

திரு. து. இராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மன்றத்தில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் இந்தி மறைமுகமாகத் திணிப்பதை வன்மையாக கண்டித்திருக்கிறார்கள். அதைப் பற்றி பேசக்கூடாது என்று ஜனதா கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் அவர் இந்த மறைமுகமாகத் திணிப்பதை வரவேற்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே மிக வேடிக்கையான ஒன்று என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது போல் ரோமன் நியூமரிகல்ஸ் பயன்படுத்தாமல் இந்தியிலேயே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய தமிழகத்தில் டி. எம். எஸ். 3600 என்று குறிப்பிடுவதைப் போல் அந்த நெம்பர்களையும் எழுத்துக்களையும் அவர்கள் இந்தியில் எழுதினால் அதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள முடியாது. நமது தமிழகத்து மக்களின் உணர்வுகளை மட்டுமல்லாது. இந்தி பேசாத நாட்டு மக்களின் உணர்வுகளை கூட்டான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்தோடு மத்திய அரசை வற்புறுத்துவோம். மாண்புமிகு உறுப்பினர் பி. எச். பாண்டியன் அவர்களும், மாண்புமிகு கலைஞர் அவர்களும் காட்டிய உணர்வுகள் கண்டிப்பாக மத்திய அரசுக்கு தமிழக அரசு தெரிவித்து, வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு தன்னிலை விளக்கம். தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் அவர்கள் என்னைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்தித் திணிப்பை நான் எப்போதும் ஏற்பதும் இல்லை. இந்தித் திணிப்பு என்பது எந்த முறையில் வந்தாலும் அதற்கு ஆதரவு கொடுப்பது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கட்சியும் மத்திய அரசை நடத்திச் செல்கின்ற பாரதப் பிரதமர் அவர்களும் இது சம்பந்தமாக பல தடவை உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக சந்தேகங்கள் எழ வேண்டிய அவசியம் இல்லை. இங்கே எழுந்து இருக்கும் பிரச்னை பற்றி நான் ஒன்றும் கூறவில்லை. நான் கேட்டது எல்லாம் இன்னொரு நிர்வாகத்தினால் செய்யப்படும் காரியத்தைப் பற்றி நம்முடைய சட்டமன்றத்தில் விவாதிப்பது முறைதானா, முறையாகாது என்று சுட்டிக்காட்டினேனே தவிர இந்திக்கு ஆதரவாகவோ, இந்தித் திணிப்பை ஆதரிப்பதற்காகவோ நான் இங்கே வரவில்லை என்பதை சுட்டிக் காட்டி, மாண்புமிகு காங்கிரஸ் அங்கத்தினர் அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்; வட மாநிலங்களில் அவர்களுடைய நிலை என்ன என்பதையும் இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிந்து இருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1979 மார்ச் 9]

திரு மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் இந்தித் திணிப்பை நாங்கள் ஆதரிப்பவர்கள் அல்ல என்று சொன்னார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தின் ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சரவையில் அமைச்சராக இருப்பவருமான திரு. ப. ராமச்சந்திரன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்து, தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்திலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் தான் கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார். அதிலே தமிழ் இடம் பெறவில்லை. அவர்கள் இந்தித் திணிப்பை எப்படி எதிர்ப்பார்கள் என்பதற்கு எனக்குப் பொருள் விளங்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தியாவைப பொறுத்த மட்டில் இந்தி ஆட்சி மொழியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். இப்போது நமது தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையை ஏற்றிருந்தாலும் இந்தியாவைப் பொறுத்தமட்டில் மும்மொழிக் கொள்கைதான் அமுலில் இருக்கிறது. அதோடு இந்தி ஆட்சி மொழியாக இருந்தாலும் லிங்க் மொழியாக, இணைப்பு மொழியாக தொடர்ந்து ஆங்கிலம் இருப்பதையும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, மத்தியில் ஆட்சி புரிகின்ற ஒரு அமைச்சருக்கு இந்தியும் ஆங்கிலமும்தான் முக்கியமாக இருக்கும். அதனால் இந்தியிலும் ஆங்கிலத்திலும் வாழ்த்துச் செய்தியில் கையெழுத்திட்டு அனுப்பினார் என்பதில் எந்தவிதமான தவறும் இல்லை.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஜேம்ஸ் அவர்கள் மும்மொழித் திட்டம் இந்தியாவில் இருப்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதது அல்ல என்று சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டம் இல்லை. அண்ணா அவர்கள் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை தான் இருக்கிறது. மும்மொழித் திட்டத்தைக் கடைப்பிடிக்கின்ற மத்திய சர்க்கார் அமைச்சர் ப. இராமச்சந்திரன் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக ஏற்றிருக்கிற தமிழ்நாட்டிற்கு செய்தி அனுப்பும்போது, ஆங்கிலத்திலும் இந்தியிலும் தானே கையெழுத்திட்டிருக்கிறார்; தமிழ் என்ன பாவம் செய்தது? தமிழிலும் கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கலாம் அல்லவா?

திரு. ஜே. ஜேம்ஸ் : எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மும்மொழித் திட்டம் இந்த நாட்டில் இல்லை என்ற பொருள்பட கூறினார்கள். மும்மொழித் திட்டத்தை ..................

[1979 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் இல்லை என்றுதான் சொன்னார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மும்மொழித் திட்டம் தமிழ்நாட்டில் இல்லை என்று சொன்னார்கள். மும்மொழித் திட்டத்தை ஏற்றிருக்கிற அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தான் தமிழ் நாட்டிலும் நிர்வாகம் நடக்கிறது. இதுவரையிலும் அன்றைக்கு ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி, அல்லது இன்றைக்கு ஆட்சியில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி அந்த அரசியல் சட்டத்தைத் திருத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இங்கே இருமொழிக் கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றி, இங்கே அரசியல் லாபம் தேடுகிறார்களே தவிர, இருமொழிக் கொள்கைதான் இருக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்தைத் திருத்த இதற்கு முன்னால் இருந்த அரசும் செய்யவில்லை. இந்த அரசும் செய்ய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சி யின் சார்பில் பேசிவிட்டார்கள். தயவு செய்து நீங்கள் உட்காருங் கள்.

திரு. பி. எச். பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, தீர்மானத்தைக் கொண்டுவந்தவன் நான். ஆனால் அதைப் பற்றி மற்றவர்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தீர்மானத்தைக் கொண்டு வந்தது நீங்கள்தான். தீர்மானத்தைக் கொண்டு வந்து முதலிலே பேசினீர்கள். பின்னால் மற்றவர்கள் பேசு கிறார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, மொழிப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு தந்த வாக்குறுதியை மீறுகிறது என்பது உத்தரவுகள் மூலம் தெரிகிறது. ஆகவே, நடைமுறையில் வாக்குறுதி ஒன்று, செயல்படுவது ஒன்றாக இருக்கிறது. இதுபற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி முதல மைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்து கொண்டு முடிவு செய்வதாக சில நாட்களுக்கு முன்னால் பத்திரிக்கையில் வந்த செய்திக் குறிப்பு ஒன்றைப் பார்த்தேன். அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி, அவசியம்



ஏற்பட்டால் தமிழ்நாட்டில் ஒருநாள் பொது வேலை நிறுத்தம் செய்து நம்முடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டும். இல்லா விட்டால் இதற்கு ஒரு முடிவு இருக்காது என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவ ரவர்களே, இந்தப் பிரச்சினை விதி 41-ன் கீழ் வந்தாலும் இங்கே விவாதிக்கப்படுகின்ற நிலைமையைப் பார்க்கும்போது விதி 41 எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே அந்த விதிக்கு இது ஒரு முன்மாதிரியாக ஆகிவிடக் கூடாது என்பதிலே தாங்கள் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 11–00]

ஆனால், எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை. இது ஒருவேளை ஒத்திவைப்புத் தீர்மானமாக வந்திருக்குமேயானால் எல்லோருக்கும் பேச வாய்ப்பிருக்கிறது. ஆனால் நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு.பாண்டியன் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பி யதற்கு நாம் அனைவரும் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்கூட கொஞ்சம் ஆவேசப்பட்டார். பிரச்சினையைக் கொண்டுவந்தது நான், பேசுவதெல்லாம் நீங்களா என்று கூடக் கேட்டார். எல்லா உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று தான் அவர் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வேறல்ல என்பதை எடுத்துச் சொல் லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர் கள் சொன்னதைப்போல இது மிக முக்கியமான பிரச்சினை என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. மேலும் இந்தப் பிரச்சினை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அத்தனை எதிர்க் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துப் பேசியதிலிருந்து ஓரளவுக்கு இந்த அவையினுடைய ஒட்டு மொத்தமான உணர்வு சம்பந்தப்பட்டவர்களுக்கு அதாவது அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, டெல்லியிலே இருக்கின்ற மாநகர நிர்வாகமாக இருந்தாலும் சரி அவர்களுக்கு கட்டாயம் எட்டும் என்பதையும், இந்த உணர்வை அவர்கள் மதிக்கத் தவறக்கூடாது என்பதையும் நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.சுப்பு அவர்களும், திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார் கள். அதாவது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே, ஒரு இந்தி எதிர்ப்புத் தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்றப்போவதாகச் சொன்னார்களே, அது எப்போது வரும் என்று கேட்டார்கள். அது நிச்சயமாக இந்தக் கூட்டத் தொடரிலேயே வர இருக்கிறது என்பதையும், அதற்கான முன் தயாரிப்புகளில் அரசும் அத்தனை சர்வ கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு ஆலோசனை கூறிக்கொள்ளலாம்

என்றும், ஆகவே அந்தத் தீர்மானம் வர இருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்து மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவரவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது, இந்தியை நாம் எதிர்க்கிறோம் என்று சொல்கிறபோது ஏதோ மத்திய சர்க்காரையே எதிர்க்கிறோம் என்று அவர்கள் தவறாகக் கருத வேண்டியதில்லை என்பதுதான். பல நேரங்களில் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்த மொழிப்பிரச்னையை அணுக வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் பாராளுமன்றத்திலேயும் பேசப்பட்டது. வெளியிலேயும் பேசப்பட்டது. இந்தியா தேட் இஸ் பாரத் என்று அரசியல் சட்டத்திலே வரும். இந்திய தேட் இஸ் பாரத், தேட் இஸ் உத்தரப் பிரதேசம் என்று வேடிக்கையாகக் குறிப்பிடப்பட்டது. இந்தியா, பாரதம் என்றாகி அது உத்தரப் பிரதேசமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த உணர்வினை நாம் எடுத்து வைக்கிறோமே தவிர, வேறல்ல. ஆகவே அவர்கள் இதைப் புரிந்து கொண்டு நிச்சயமாக அந்த உணர்வினை ஒத்துக்கொள்வார்கள் என்று கருதி இத்தோடு இந்தப் பிரச்னையை முடித்துக்கொள்ளலாம் என்றும் கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப் பற்றி ஒன்றும் குறையாகச் சொல்லவில்லை. ஆகவே அமருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அத்தோடு இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். மத்தியிலே ஆளுகின்ற அரசுக்கு நிச்சயமாக இந்தியைத் திணிக்கின்ற எண்ணம் கிடையாது. ஏற்கெனவே இதற்கான விளக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இப்போது ஏற்பட்டிருக்கின்ற தவறுகள் எல்லாம் ஏதோ ஒரு சில அதிகாரிகளால் அதாவது இந்தி ஃபெனட்டிக்ஸ் என்று சொல்வார்களே அதுபோல சில அதிகாரிகளால் ஏற்படுவதே ஒழிய வேறல்ல. ஆகவே மத்திய அரசாங்கம் செய்கின்ற காரியமல்ல. அத்தோடு இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தி மொழி கட்டாயமாக திணிக்க ஆரம்பிக்கப்பட்டதே எமர்ஜென்சி காலத்தில்தான். அத்தோடு இன்னொன்றையும் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படியே இந்த விவாதம் தொடர்வதற்கு வழி வகுக்கக்கூடாது. உட்காருங்கள் இத்துடன் இந்தப் பிரச்னையை முடித்துவிடலாம்.





திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, விஷயத்தைத் திசை திருப்புகிறார்கள்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டது போல ஏதோ ஒரு சில அதிகாரிகள் செய்கின்ற தவறு என்று இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. டெல்லி மாநகரம், அதாவது யூனியன் டெரிடெரியிலே மோட்டார் வாகனச் சட்டமே திருத்தப்பட்டிருக்கிறது. இதெல்லாம் மத்திய அரசின் நாலெட்ஜ் இல்லாமல் செய்யப்பட்டிருக்கலாம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் இந்தப் பிரச்னை மும்மொழித் திட்டம், இருமொழித்திட்டம் என்கின்ற அடிப்படையிலே எழுந்ததல்ல. இந்தி ஒன்றுதான் இருக்கவேண்டும் என்று சொல்வதுதான் முக்கியமான காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம், கைதட்டல்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41ஆவது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள்தான் அதில் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம் என்பது விதி. ஆனால் இது மொழிப்பிரச்னையாக இருந்த காரணத்தினாலும், இந்தித் திணிப்பை எதிர்ப்பது தமிழ் மக்களுடைய ஊனோடு உயிரோடு கலந்துவிட்ட உணர்வு என்ற காரணத்தாலும் இன்று இங்கு அது விவாதிக்கப்பட்டது. ஆனால் இன்று நடந்த இதையே தொடர்ந்து முன் உதாரணமாக எடுத்துக்கொண்டு 41ஆவது விதியின்கீழ் அல்லது 42ஆவது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருகிறபோது இன்று நடந்த இந்த முறைகளை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் பின்பற்றக்கூடாது, அது அனுமதிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பிரச்னையைக் கொண்டுவந்ததற்காக அமைச்சர் அவர்களின் பாராட்டோடு என் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். உட்காருங்கள்.

## 5. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

### (ஆ) வேளாண்மைத் துறை பணியாளர்கள் சங்கத்திற்கு, போட்டிச் சங்கம் அமைப்பது குறித்து.

திரு. க. சுப்பு : 57ஆவது விதியின்கீழ் நான் கொடுத்திருப்பதை வாசித்துவிட்டு பேசுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[1979 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் பேசி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவந்து பதிலைப் பெறுங்கள். இதை 57 ஆவது விதியின்கீழ் எடுத்துக்கொள்ளவில்லை.

திரு. க. சுப்பு : எந்த விதியை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். நான் விஷயத்தைச் சொல்லவேண்டும். அவ் வளவுதான்.

"The serious situation arising out of the misuse of power and administrative machinery for the purpose of encouraging and supporting a particular section of the employees of the Department of Agriculture at the cost of the established norms and service rules." என்ற அளவில் கொடுத்திருக்கிறேன். தமிழக அரசு வேளாண்மைத் துறை பணியாளர்கள் சங்கம் என்று ஒரு சங்கம் இயக்குநர் அலுவலகத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. என்.ஜி.ஓ. சங்கத்தோடு இணைந்திருப்பதுதான். அதற்கு ஒரு போட்டி சங்கத்தை உருவாக்கி வளர்க்கவேண்டும் என்ற அக்கறை சிலருக்கு இருக்கிறது. இந்தப் போட்டி சங்கத்தில் தேர்தல் நடந்திருக்கிறது. அதில் சென்னை, சேலம், செங்கல் பட்டு, நெல்லை ஆகிய நான்கு இடங்களைப் பொறுக்கியெடுத்து அதில் வெற்றிபெற்றிருப்பவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கிறார் கள். அது ட்ரேட் யூனியன் கூட அல்ல. சர்வீஸ் அசோசி யேஷன், சர்வீஸ் யூனியன். வெற்றி பெற்றிருப்பவர்கள் சிலருக்கு பாராட்டு தெரிவிப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்ச்சரல் ஆபீஸ் காம்பவுண்டுக்குள் மைக் வைத்து பிரசாரம் செய்கிறார்கள். தேர்தல் சமயத் திலும் பிரசாரம் செய்தார்கள். வெற்றி பெற்றவர்களைப் பாராட்ட மைக் வைத்து பாராட்டுகிறார்கள். அதற்கு ஒரு விழா ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வெற்றிபெற்றவர்களைப் பாராட்ட ஒரு விழா ஏற்பாடு செய்யப்படுகிறது. அதில் இயக்குநர் பெயரையும் போட்டார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பெயரையும் போட்டிருந்தார்கள். அதற்கு சர்வீஸ் ஸ்டாம்ப் ஒட்டி அனுப்புகிறார்கள். சர்வீஸ் யூனியன் அல்லது அசோசியேஷன் சர்வீஸ் ஒரு ஒட்டி அனுப்புகிறார்கள். மறுத்தவர்கள் மீது அச்சுறுத்தல் செய்யப்பட்டது. விழா நடக்கப்போகிறது என்று தெரிந்த வுடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பிறகுதான் தெரிகிறது, இயக்குநர் சம்மதம் இல்லாமலேயே அவர் பெயரைப் போட்டிருப்பதாக. அந்த அலுவலர்கள் அந்த அலுவலகத்தில் ஒரு இடத்தில் புத்து சேர்களைப் போட்டுக்கொண்டு வேலை ஒன்றும் பார்க்காமல் அரட்டை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இளநிலை எழுத்தர் சொல்கிறார், பெரிய பதவி. "கோவையைச் சேர்ந்த சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் ஊழல் சம்பந்தமான விஷயத்தில், அவர் கடைநிலை



1979 மார்ச் 9] [திரு. க. சுப்பு]

ஊழியர் ஒருவரை அடித்து விட்டார், அதில் நான் தலையிட்டேன் அவர் பெரிய மனிதன்—என்னையும் எங்கள் சங்கத்துக்கு அங்கீகாரம் அளித்த முதல் அமைச்சரையும் கைத்துப்பாக்கியால் சுடுவேன் என்று மிரட்டி இருக்கிறார்." என்று சொல்லியிருக் கிறார். அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தை யும், என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் திரு. சிவ. இளங்கோவையும் இணைத்து அவதூறாகப் பேசியிருக்கிறார். நிருபருக்கு பேட்டி கொடுக்கிறார்.

[முற்பகல் 11-10.]

திரு. க. சுப்பு : அது மட்டுமல்ல . .....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைகளில் வெளி வந்ததை எல்லாம் இங்கு படித்துக் கொண்டிருக்க வேண் டாம். அப்படி படிப்பது தவறு.

திரு. க. சுப்பு : பூனைக் கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விடாது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அமைச்சரே போய் கலந்து கொள்வதால் நிர்வாகம் சீரழியக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவர்கள் என்ன சொல்லியிருக் கிறார்கள், ஊழலை ஒழிக்கப் போகிறார்களாம், அதற்காக 30 பேர் கொண்ட கமிட்டி வைத்திருக்கிறார்களாம் . . . . (குறுக்கீடு) இவர்களே சங்கம் வைத்துக் கொண்டு ஊழல் செய்யும் அதிகாரிகளைப் பற்றி தகவல் கொடுப்பார்களாம், இப்படி ஒரு சங்கத்தை நடத்துவதாக பத்திரிகைகளில் சொல்லி யிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போதுள்ள பிரச்னை அமைச்சர் இதில் கலந்து கொண்டது சரியல்ல என்று நீங்கள் கூறியிருப்பதுதான். அந்தப் பிரச்னைக்கு மட்டும் வாருங்கள். வேறு பிரச்னைகளைப் பற்றி பேச வேண்டாம். எந்த விதியின் கீழும் நீங்கள் இந்த விவரங்களை எல்லாம் கூறிக் கொண்டிருக்க முடியாது, அமைச்சர் கலந்து கொண்டிருப்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. க. சுப்பு : நானும் அதையேதான் சொல்லுகிறேன். அமைச்சர்கள் என்றால் அனாமதேயங்கள் அல்ல. நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொள்கிறார், அதிலேயே ஒருவர் சொல்லு கிறார், ஊழல் கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறோம், ஊழல்செய் யும் அதிகாரிகளை கண்டுபிடிப்போம் என்று. அப்படியானால் ஊழல் தடுப்பு இலாகா இந்த அரசாங்கத்தில் செயல்பட வில்லையா? இப்படிப் போய்க் கொண்டிருந்தால் நிர்வாகம் என்ன ஆவது? ஜுனியர் அஸிஸ்டன்டாக இருக்கும் ஒருவர் அரசாங்க ஆபீசு எல்கைக்குள்ளேயே பேட்டியைப் போட்டுக் கொண்டு

இப்படி அமைச்சரையும் வைத்துக் கொண்டு பேசினால், நிர்வாகம் எப்படி ஒழுங்காக நடைபெற முடியும்? ஆகவேதான் அமைச்சர் அவர்களை கூப்பிட்டு இப்படிப்பட்ட விழாக்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று அறிவுரை கூற வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> மாண்புமிகு உறுப்பினர் அவுர்கள் 57-வது விதியின் கீழ் இதைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சரிதானா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இதை நான் 57-வது விதியின்கீழ் எடுத்துக் கொள்ளவில்லை. ஒழுங்குப் பிரச்னை என்ற அளவில்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். திரு. சுப்பு அவர்கள் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

<u>திரு. க. சுப்பு:</u> அமைச்சர் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர், கட்சிக்காரராக இருக்கலாம், கட்சிக்காரராக ஏதாவது நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், இவர்களை நாங்கள் மதிக்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லலாம். கட்சிக்காரர் என்ற முறையில் அவர்கள் யாரை வேண்டுமென்றாலும் நிர்ப்பந்தப்படுத்தலாம். ஆனால் அமைச்சர் என்ற பொறுப்பை வைத்திருக்கும்போது அவர் எல்லோருக்கும் பொதுவானவர். அப்படியிருக்கும் போது, குறிப்பிட்ட சிலர் கூட்டுகின்ற நிகழ்ச்சியில் போய் கலந்து கொண்டு அவர்களை இப்படிப்பட்ட செய்கைகளில் ஈடுபடுவதற்கு தூண்டிவிடுவது அமைச்சர்களுக்கு அழகல்ல என்று சொன்ன போது அந்த வளவுக்குள் இல்லை, வேறு வெளியே போடுகிறோம் என்று சொன்னார்கள். என்னை யாரும் தடுக்க முடியாது, சட்டத்தை நான் கரைத்து குடித்திருக்கிறேன், என்னை யாரும் தடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார், இதை புரட்சித் தலைவர் அணியிலிருந்துகொண்டு சொன்னால் அதைப் பாராட்டலாம், துண்டு போட்டு கூட பாராட்டலாம். நண்பர் குழந்தைவேலு என்ற முறையில்போய் பாராட்டுவதைப் பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அமைச்சர் என்ற முறையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் போய் கலந்து கொள்வது சரிதானா? அதுவும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படக் கூடாது என்று சீப்-செக்ரட்டரி சொன்ன பின்னாலும் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு, இதில் மிஸ் அப்ரோப்ரியேஷன் நடந்திருக்கிறது. இதை நாங்கள் பின்னால் பார்த்துக் கொள்கிறோம். இப்படிப்பட்ட சங்க நிகழ்ச்சியில் போய் அமைச்சர் கலந்து கொண்டது, பொறுப்பற்றது, வருந்தத் தக்கது என்பதை சொல்லிக் கொண்டு, இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ரூல் 57-ன் கீழ் ஒரு முக்கியமான பிரச்னையை பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(குறுக்கீடு).



<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் 57-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். ஆனால் இப்போது ஒழுங்குப் பிரச்னை என்கின்ற அளவில் இதைப் பற்றி பேசச் சொன்னேன். அவ்வளவுதான்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அலுவலகத்தில் மாலை 4½ மணிக்குப் பின்னால் அலுவலகம் நடைபெறுவதில்லை. 4½ மணியோடு அலுவலக வேலைகள் முடிந்து விடுகின்றன. ஆகவே 4½ மணிக்குப் பின்னால், அலுவலர்களுக்கு எந்தவிதமான இடர்பாடும் இல்லாமல், எந்த விதமான இடையூறுகளும் இல்லாமல் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ளலாம் என்று விதிமுறை இருக்கிறது.

இது ஏற்கனவே 8—1—1975 லேயும் தி.மு.க. ஆட்சியிலே இருக்கிறபோதும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதிலே சிவ. இளங்கோ போன்றவர்கள், சொக்கலிங்கம் போன்றவர்கள் மற்ற நண்பர்கள் கலந்து கொண்டு, அந்த விழா நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் என்னைப் பற்றிக் கூறும்போது, நான் சட்டத்தைக் கரைத்துக் குடித்தேன் என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் சட்டத்தைக் கரைத்துக் குடித்தேன் என்று சொல்லவும் இல்லை; எங்கேயும் பேசவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் கரைத்துக் குடித்திருக்கலாம். ஆனால் நான் அப்படிக் கரைத்துக் குடித்தேன் என்று சொல்லவும் இல்லை; அப்படிச் சொல்லவும் மாட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நானும் ஒன்றாக சட்டக் கல்லூரியிலே படித்தவர்கள் என்பது அவருக்குத் தெரியும். நான் அப்படி கரைத்துக் குடித்திருந்தால், அவரும் கரைத்துக் குடித்திருப்பார்கள். ஆகவே, எந்தவிதமான வித்தியாசமும் இதிலே இருக்க முடியாது. (குறுக்கீடு). எந்த விதமான விதிக்கும் முரண்பாடாக இந்த விழா நடை பெறவில்லை. ஆகவே, இதிலே 57-வது விதி மீறலும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. க. சுப்பு குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இத்தோடு முடித்துக் கொள்ளலாம். டிஸ்கஷனை இப்படி வளர்த்துவது நல்லது அல்ல. இதை எடுத்துக் கொண்டதே முறையாக எடுத்துக் கொள்ளவில்லை.

<u>திரு. க. சுப்பு :</u> துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 8—1—1975 அன்று நடந்த விழாவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது ஆண்டு விழா

அல்ல ; அரசாங்க அலுவலகங்களிலே உள்ள சங்கத்தில் ஒருவர் வெற்றி பெற்றால் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்காமல் வளவுக்குள்ளேயோ அல்லது வளவுக்கு வெளியிலேயோ அவ்வாறு கலந்து கொள்வது நல்லதல்ல. அன்பில் இருக்கிறபோது இப்படி நடக்கவில்லை. ஆண்டு விழா போன்றவைகளுக்கு அமைச்சர்கள் போக வேண்டியதுதான். ஆனால் இந்த விழாவிலே நீங்கள் . . .

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) விவசாயிகள் பிரச்சினை குறித்து :

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் முதுகுளத்தூர் நிகழ்ச்சியைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். வேண்டுமானால், இன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானமாக அதை எடுத்துக் கொண்டிருக்கலாம். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், இப்போது எனக்கு தந்தி அடிக்கப்பட்டு, ஆட்களும் வந்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனை விவசாயிகள் முற்றுகையிடக் கூடிய அளவுக்கு, அங்கே 300 விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால் நல்லது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு புரோசீஜர் தேவையில்லை. வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள். அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விவசாயிகள் பிரச்னை சம்பந்தமாக, அவையிலே 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை தரப்படுவதாகக் கூறப்பட்டது. இன்னும் அந்த அறிக்கை இங்கே தரப்படவில்லை; எப்போது தரப்படும் என்று அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த விவசாயிகள் பிரச்னைக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். சேலம், கோயமுத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மின் துண்டிப்பு நடைபெற்றது. அதைப் பற்றி இன்றைய தினம் பேசி முடிவெடுத்து, அறிக்கை அளிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைய தினம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்





திலும், விவசாயிகள் சங்கத் தலைவர்கள் கூட்டத்திலும், குறிப்பிட்டார்கள். அது குறித்து விரைவிலேயே முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே முதுகுளத்தூரிலே 300 விவசாயிகள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் பேசும் போது, தமிழகம் பூராவும் மின் துண்டிப்பு செய்யப்பட்டதன் காரணமாக பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே, இன்றைக்கு காலையிலே மீண்டும் மின் இணைப்பு கொடுப்பது பற்றி ஒரு அறிவிப்பு அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த அறிவிப்பு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அது எப்போது அறிவிக்கப்படும் ? இன்றைக்கா, அல்லது நாளைக்கா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று விவசாயிகள் சம்பந்தமான கூட்டம் நடந்த உடனே சிம்கோ சம்பந்தமான கூட்டம் ஆரம்பித்தது. அதுவே நேற்று முழுவதும் சரியாகி விட்டது. இன்றைக்கு சட்டமன்றத்தில தொடர்ந்து இந்தப் பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றம் நடக்கிறபோது எப்படியாவது கொண்டு வந்து அறிவித்து விடலாம் என்று அந்த வேலையில் இருக்கிறோம்.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி விட்டார்கள். அடுத்த பிரச்னைக்குப் போகலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இங்கு அவை நடக்கும் போது நடைமுறையில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருக்குமானால் அதை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி சுட்டிக் காட்டலாம். வெளியிலே இருக்கும் பிரச்னைகளைக் குறித்துச் சொல்வதற்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது.

[1979 மார்ச் 9

திரு. சோ. அழகர்சாமி : விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். தாங்கள் அந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசி அமைச்சர் பதில் சொல்லி விட்டார். அனுபவம் உள்ளவர்கள், பெரியவர்கள் சபையை ஒழுங்காக நடத்த உதவியாக இருக்க வேண்டும்.

(திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி சண்முகம் எழுந்து நின்றுகொண்டே பேசத் துவங்கினர்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் உணர்ச்சிவசப்பட வேண்டாம். இன்றைக்குத்தான் அறிவிப்பதாக இருக்கிறோம். ஆகையால் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) அடகு கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

*THE HON. THIRU K. NARAYANASWMY : Mr. Deputy Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1979 @ (L.A. Bill No. 12 of 1979) be taken into consideration.

By Section 12 A of the Tamil Nadu Pawnbrokers Act, 1943, a amended, the sale by pawnbrokers of the pledges pawned with them had been barred upto and inclusive of the 15th January 1979. Government decided that this ban should be extended for a further period of two months to enable the pawners who had not redeemed their pledges by 15th January 1979, to have some more time to pay their dues in instalments and to have their pledges redeemed. Accordingly, the Tamil Nadu Pawnbrokers (Amendment) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 3 of 1979) was promulgated by the Governor. The present Bill before the House, is to replace the above Ordinance. Government have examined the need for further extension of this ban and decided to extend the ban for three more months from 15th March 1979, i.e., up to and inclusive of 15th June 1979. Necessary provision has been made to provide for this also in the Bill.

Sir, I commend the motion for the acceptance of the House.

@ 1979, பிப்ரவரி 22 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 9]

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, நேற்று நான் பேசிக் கொண்டிருக்கும் போது தலைவர் அவர்கள் குறுக்கிட்டு திரு. தாழை மு. கருணாநிதி பேசிய பேச்சின் ஒரு பகுதி பற்றி விளக்கம் சொல்லப் போவதாகச் சொல்லி என்னுடைய பேச்சை நிறுத்தி விட்டார்கள் . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது பேரவைத் தலைவர் அவர்கள் குறுக்கிட்டு தாழை மு. கருணாநிதி பேசியது பற்றிய குறிப்பின் மீது ஒரு உத்தரவைக் கூறினார்கள். தங்கள் பேச்சு தொடரும் என்று அவர்கள் சொல்லவில்லை. மேலும் இன்று பொது விவாதம் இடையாது.

நேற்று சட்டமன்றக் கூட்டம் முடியும் போது நானில்லை; பேரவைத் தலைவர் இருந்திருக்கிறார்கள். உங்களுடைய பேச்சு பாதியிலே நிறுத்தப்பட்டு இருக்குமானால், அவர்கள் தொடர்ந்து உங்களைப் பேச அனுமதித்து இருப்பார்களானால், அந்த விவாதம் நடைபெறும்போது அப்போது தொடர்ந்து பேச அனுமதி அளிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : நான் பேசுவதற்கு அனுமதி உண்டா ? அந்த விவாதம் வருகிறது, நான் பேச்சை அன்றைக்கு முடிக்கவில்லையே, எனக்கு அனுமதி உண்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 12 ஆம் தேதி அந்த விவாதம் வருகிறது. அன்றைக்கு நேரம் இருந்தால், உங்கள் பேச்சு நிறுத்தப்பட்டிருந்தால், உங்களைத் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதியை தலைவர் அளித்திருந்தால் அன்றைக்குத் தொடரலாம். அமருங்கள்.

* திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அடகுக் கடைக்காரர்களிடம் வைத்த பொருட்களை மீட்பதற்கு காலம் அளித்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்திலே நலிந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, அடித்தளத்திலே உள்ள மக்களுக்கு அவர்களுடைய வசதிக்காக அவர்கள் அடமானத்திற்கு வைத்த நகைகளையும் மற்றச் சொத்துக்களையும் மீட்டிக்கொள்வதற்காக 3 மாதம் தவணை கொடுத்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் . கடந்த கால வரலாற்றிலே இப்படிப்பட்ட சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே தான் 17,000 அடகுக் கடைகள் இருக்கின்றன, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அங்கேயெல்லாம் இந்த அளவிற்கு இல்லை. கேரளத்திலே வட்டிக் கடையே இல்லை என்ற

[திரு. துரை கலியமூர்த்தி] [1979 மார்ச் 9

நிலைமை இருக்கிறது. ஆனால் இங்கே 3 ஆயிரம் கோடி ரூபாய் வரை லேவாதேவி நடந்து கொண்டிருக்கிறது. அதிலே இந்தக் கடைக்காரர்களுக்கு லாபமாக 1,500 கோடி ரூபாய் லேவாதேவியாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கணக்கு காட்டுகிறபோது 300 கோடி ரூபாய் தான் லாபம் என்று காட்டுவதாகத் தெரிகிறது. அதே நேரத்திலே அந்தப் பணத்திற்கு அவர்களுக்கு ஆகும் செலவும் குறைவாகத்தான் இருக்கிறது. இந்த நிலையில் ஏழைகளை வாட்டக் கூடிய முறையில் வட்டிக் கடைகள் தமிழ்நாட்டிலே அமைந்திருக்கிறது.

1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு லேவாதேவிச் சட்டத்தின் 13 ஏ பிரிவினை ஏற்படுத்தி ஏழை மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்பதற்காக, அவர்கள் வைத்த அடகுகளைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்பதற்காக அதைக் கொண்டு வந்தார்கள். கடன் கொடுத்தவன் கடன் வாங்கினவனைத் துன்புறுத்தக்கூடாது, கடன் கொடுத்தவன் கடன் வாங்கியவனின் நகைகளை விற்கக்கூடாது. கடன் கொடுத்தவன், கடன் வாங்கியவனின் வீட்டிற்குச் சென்று அவனுடைய மனைவி மக்களைத் துன்புறுத்தி பணத்தை வசூலிக்கக் கூடாது, கடன் கொடுத்தவன் கடன் வாங்கியவனின் இல்லத்திற்கோ அல்லது அவன் தொழில் செய்யும் இடத்திற்கோ சென்று வசூலிக்கக்கூடாது. கடன் கொடுத்தவன் கடன் வாங்கியவனின் இல்லத்திற்கு அருகேயோ அல்லது அவன் தொழில் செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயோ சென்று உலாவக் கூடாது. மேற்கண்ட விதிகளை மீறி குற்றங்களைச் செய்தால் அதற்கு 6 மாதம் ஜெயிலும் 1,000 ரூபாய் அபராதமும் விதிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாதுகாப்பு சட்டத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாதுகாப்பு இன்றைய வரையில் செயல்படுத்தப்படவில்லை. 1966 ஆம் ஆண்டு வரையிலே இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரம் போலீஸ் துறையினிடத்திலே இருந்தது அதற்குப் பிறகு ரெவின்யூ டிபார்ட்மெண்டினிடத்திலே கொடுத்தார்கள். ரெவின்யூ டிபார்ட்மென்டிலே அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்கிறபோது, அந்த தகுதிபடைத்த நபர்கள், ஏழைத் தொழிலாளர்கள் விவசாயிகள் அங்கே சென்று நகையை மீட்பதற்கு முடியவில்லை என்று தாசில்தாரிடத்திலே மனுக் கொடுக்கிறபோது எந்தவிதமான நடவடிக்கையும் அதன்மீது எடுக்கப்படுவது இல்லை மாதக் கணக்கிலே அலைந்தும் கடைசியிலே முடிவு பெறாத நிலைமையிலே சமாதானப் பேச்சு நடைபெறுகிறது. இப்படிப்பட்ட நிலைமை 1966 ஆம் ஆண்டிற்கு முன்னாலே போலீஸ் துறையிலே இது இருந்தபோது இல்லை, அப்போது எல்லாம் அந்தத் துறையினர் தீவிரமாக நடவடிக்கை எடுத்தார்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு [illegible]த்தம், 5 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. இந்த ம[illegible] என்னவென்றால் அடகு வைத்தவர்களுக்கு ஜுன் மாதம் 15 ஆ[illegible]



1979 மார்ச் 9]
[பேரவைத் துணைத் தலைவர்]

தேதி வரையிலே காலம் கொடுத்து அதுவரையில் அவர்கள் அவைகளை விற்கக்கூடாது. மூன்று மாதம் தள்ளிவைத்து இருக்கிறார்கள் இது தான் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத் திருத்தம். அதை வரவேற்கிறீர்களா, இல்லை வேண்டாமென்று சொல்கிறீர்களா என்று மட்டும் சுருக்கமாகப் பேசினால் போதும், மற்றப் பிரச்னைகளைப் பேச கூடாது.

[முற்பகல் 11–30]

இந்த பில்லை விட்டு வெளியிலே போய்ப் பேசுவது வேண்டாம். அது இந்த பில்லிலே அவசியமில்லை. இதை வரவேற்கிறோம் அல்லது எதிர்க்கிறோம் என்ற கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. துரை. கலியமூர்த்தி : அடிப்படை விவரங்களைச் சொன்னால்தான் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு அடிப்படை அமையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடிப்படை இதிலே வரவில்லை. இதிலே கிளியராக இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : அப்படி ரூலிங் கொடுத்தால் ஒன்றுமே நடக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூலிங் இல்லை. இந்த பில்லிலே என்ன பேச வேண்டுமோ அதைப் பேசினால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடியும்

திரு. என். வரதராஜன் : ஏன் இந்த பில்லிலே ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கிறீர்கள் ? விவசாயிகளால் கொடுக்க முடியவில்லை. அந்த நிலையில் இது சரி, ஆமாம் என்று எப்படி சொல்வது——

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்ட முன் வடிவுக்கு வெளியிலே போய் ஏன் சொல்ல வேண்டும். சட்ட முன்வடிவு இதுதான், அதிலே கருத்து சொல்லுங்கள், போதும்.

திரு. துரை கலியமூர்த்தி : இதில் அடிப்படையான ஒரு சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI : One point of personal explanation, Sir I make the submission respectfully 10 this House? The scope of the Bill is very very narrow. Int this Bill the

[Thiru K. Narayanaswamy] [1979 மார்ச் 9

time has been extended from 15th March to 15th June, so that the ban that is put on the sale of the jewels pledged by the Pawner may be continued for another three months. This provision was made in order to enable the persons who have pledged their jewels to pay the money in instalments and to get back their jewels redeemed. This beneficial measure is brought solely for the purpose of helping the pawners and the time has been extended for three months from 15th March to 15th June.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் துணைத் தலை
அவர்களே, அதைச் சொல்வதற்குத்தான் முறையாகச் சொ
லிக்கொண்டு வருகிறேன். அங்கே அவர்கள் போலீஸ் அதி
காரிகளுக்குக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க
ஏதுவாக இருக்கும். ஆனால் தற்பொழுது ஒரு வட்டி கொடுக்
கிறேன் என்று வைத்த பொருளை மீட்பதற்காக வட்டிக் கடை
களுக்குச் செல்லும்பொழுது அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள்.
சட்டத்திலே எவ்வளவு சந்து பொந்துகள் இருக்கின்றதோ அவை
களிலே மறைந்துக்கொண்டு கொடுக்க மறுக்கிறார்கள். அதற்கு
உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இதிலே வற்
புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் சட்டத்திலே இரண்டு மாத கால தவணை
யிலே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர,
கொடுத்தாலும்கூட வட்டிக்கடைக்காரர்கள் வாங்கத் தயா
ராக இல்லை. உதாரணத்திற்கு அவர்களிடத்தில் அந்த மக
ஜரையும், ரிப்போர்ட்டையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.
அதில் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தால் நலமாக இருக்
கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய மக்
களும் படிக்க வேண்டுமென்பதற்காகக் கூட கடன் வாங்க வேண்
டிய அவசியமாகிறது, அதை அரசாங்கம் சரியாகக் கவ
னித்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
வட்டிக் கடைக்காரர்களிடம் மீண்டும் போக வேண்டுமென்ப
தற்காக அவர்கள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.
ஆகையால் அவர்களிடத்தில் போகாத நிலைக்கு அரசாங்கம் ஏற்
பாடு செய்ய வேண்டும், அப்பொழுதுதான் வட்டிக்கடைக்
காரர்களின் நிலைமை சரியாகும்.

அதுமட்டுமல்ல. இப்பொழுது இவ்வளவு சட்டம் போட்டா
லும்கூட, அன்று 1972-ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக்
கழக அரசு அசலைக் கொடுத்தாலும் போதும், வட்டியை நீக்
இப் பொருள்களைக் கொடுத்துவிட வேண்டும், சொத்தைக்
கொடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றியது. அதைப்
போல இப்பொழுதுள்ள அரசு, அசலைக் கொடுத்துவிட்டால்



1979 மார்ச் 9] [திரு. துரை கலியமூர்த்தி]

வட்டிக் கடைகளிலே உள்ள நகைகளை இனாமாகக் கொடுக்க
வேண்டுமென்று சட்டமிருக்கிறது—அது ஏழை அடித்தள மக்
களுக்கு இருந்தாலும், நடுத்தர விவசாய மக்களுக்கும் பாது
காப்பு கொடுக்கின்ற முறையிலே வட்டியில்லாமல் உடனடியாக
நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும், அதற்கு உடனடி
யாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொண்டு, நேற்று எங்கள் தலைவரவர்கள்
உளிவீச்சு பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சரவர்கள் அதற்குப்
பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உளி வீச்
சுக்கும் இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம்? உட்காருங்கள்.

திரு. துரை.கலியமூர்த்தி : அதற்கு அமைச்சரவர்கள் இன்று
வரையில் விளக்கம் கொடுக்கவில்லை. செபாஸ்டியன் கீழ்ப்
பாக்கம் ஆஸ்பத்திரியிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதைப்
பற்றித் தெரியப்படுத்தவில்லை. அதை நான் கூறுவது கடமை
என்று கருதி கூறி அமர்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர்
அவர்களே, வட்டிக்கடை........

மாண்புமிகு திரு. திருச்சி.ஆர். சௌந்திரராஜன் : மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் செபாஸ்டியன்
அவர்கள் மருத்துவ மனையிலே இல்லை, போலிஸ் கண்
காணிப்பிலேதான் இருக்கிறார்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர்
அவர்களே, வட்டிக் கடைகளில் இன்று 3 மாத வட்டியை எடுத்
துக்கொண்டுதான் முதலிலே பணத்தைக் கொடுக்கிறார்கள். அந்த
வட்டிக்கடைக்காரர்களுக்கு இந்த அரசு சலுகை செய்வது
போன்று இந்தச் சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இப்பொ
ழுது நகைகளை விற்கவேண்டாம், இன்னும் 6 மாதத்திற்கு
தள்ளிப் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதில்
ஏதோ அரசியல் உள்நோக்கம் இருப்பதாகப் பரவலாகப் பேசப்
படுகிறது, அதனால், 6 மாதம் கழித்து, பஞ்சாயத்து, ஊராட்
ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல் முடிந்த பிறகு, வட்டிக்
கடைக்காரர்கள் விவசாயிகளை, ஏழை எளிய மக்களை வாட்டி
வதைக்கப் போகிறார்கள் என்ற பெரிய அச்சம் மக்கள் மத்தி
யிலே பரவலாக இருக்கிறது. பேசப் படுகிறது. அத்தோடு,
இந்தச் சட்டத்தில் ஏராளமான குறைபாடுகள் இருக்கின்றன,
இப்படி நீட்டிக்கொண்டே போவதன்மூலம் ஏழை எளிய நடுத்

[Thiru K. Narayanaswamy] [1979 மார்ச் 9

time has been extended from 15th March to 15th June, so that the ban that is put on the sale of the jewels pledged by the Pawner may be continued for another three months .This provision was made in order to enable the persons who have pledged their jewels to pay the money in instalments and to get back their jewels redeemed. This beneficial measure is brought solely for the purpose of helping the pawners and the time has been extended for three months from 15th March to 15th June.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைச் சொல்வதற்குத்தான் முறையாகச் சொல் லிக்கொண்டு வருகிறேன். அங்கே அவர்கள் போலீஸ் அதி காரிகளுக்குக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். ஆனால் தற்பொழுது ஒரு வட்டி கொடுக் கிறேன் என்று வைத்த பொருளை மீட்பதற்காக வட்டிக் கடை களுக்குச் செல்லும்பொழுது அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். சட்டத்திலே எவ்வளவு சந்து பொந்துகள் இருக்கின்றதோ அவை களிலே மறைந்துக்கொண்டு கொடுக்க மறுக்கிறார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இதிலே வற் புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் சட்டத்திலே இரண்டு மாத கால தவணை யிலே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, கொடுத்தாலும்கூட வட்டிக்கடைக்காரர்கள் வாங்கத் தயா ராக இல்லை. உதாரணத்திற்கு அவர்களிடத்தில் அந்த மக ஜுரையும், ரிப்போர்ட்டையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதில் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தால் நலமாக இருக் கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, தாழ்த்தப்பட்ட மக்களும், பின் தங்கிய மக் களும் படிக்க வேண்டுமென்பதற்காகக் கூட கடன் வாங்க வேண் டிய அவசியமாகிறது, அதை அரசாங்கம் சரியாகக் கவ னித்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டிக் கடைக்காரர்களிடம் மீண்டும் போக வேண்டுமென்ப தற்காக அவர்கள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் அவர்களிடத்தில் போகாத நிலைக்கு அரசாங்கம் ஏற் பாடு செய்ய வேண்டும், அப்பொழுதுதான் வட்டிக்கடைக் காரர்களின் நிலைமை சரியாகும்.

அதுமட்டுமல்ல. இப்பொழுது இவ்வளவு சட்டம் போட்டா லும்கூட, அன்று 1972-ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு அசலைக் கொடுத்தாலும் போதும், வட்டியை நீக் கி பொருள்களைக் கொடுத்துவிட வேண்டும், சொத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றியது. அதைப் போல இப்பொழுதுள்ள அரசு, அசலைக் கொடுத்துவிட்டால்



1979 மார்ச் 9] [திரு. துரை கலியமூர்த்தி]

வட்டிக் கடைகளிலே உள்ள நகைகளை இனாமாகக் கொடுக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறது—அது ஏழை அடித்தள மக் களுக்கு இருந்தாலும், நடுத்தர விவசாய மக்களுக்கும் பாது காப்பு கொடுக்கின்ற முறையிலே வட்டியில்லாமல் உடனடியாக நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும், அதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நேற்று எங்கள் தலைவரவர்கள் உளிவீச்சு பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உளி வீச் சுக்கும் இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம் ? உட்காருங்கள்.

திரு. துரை.கலியமூர்த்தி : அதற்கு அமைச்சரவர்கள் இன்று வரையில் விளக்கம் கொடுக்கவில்லை. செபாஸ்டியன் கீழ்ப் பாக்கம் ஆஸ்பத்திரியிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பற்றித் தெரியப்படுத்தவில்லை. அதை நான் கூறுவது கடமை என்று கருதி கூறி அமர்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வட்டிக்கடை........

மாண்புமிகு திரு. திருச்சி.ஆர். சௌந்திரராஜன் : மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் செபாஸ்டியன் அவர்கள் மருத்துவ மனையிலே இல்லை, போலிஸ் கண் காணிப்பிலேதான் இருக்கிறார்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வட்டிக் கடைகளில் இன்று 3 மாத வட்டியை எடுத் துக்கொண்டுதான் முதலிலே பணத்தைக் கொடுக்கிறார்கள். அந்த வட்டிக்கடைக்காரர்களுக்கு இந்த அரசு சலுகை செய்வது போன்று இந்தச் சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இப்பொ ழுது நகைகளை விற்கவேண்டாம், இன்னும் 6 மாதத்திற்கு தள்ளிப் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதில் ஏதோ அரசியல் உள்நோக்கம் இருப்பதாகப் பரவலாகப் பேசப் படுகிறது, அதனால், 6 மாதம் கழித்து, பஞ்சாயத்து, ஊராட் ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல் முடிந்த பிறகு, வட்டிக் கடைக்காரர்கள் விவசாயிகளை, ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கப் போகிறார்கள் என்ற பெரிய அச்சம் மக்கள் மத்தி யிலே பரவலாக இருக்கிறது. பேசப் படுகிறது. அத்தோடு, இந்தச் சட்டத்தில் ஏராளமான குறைபாடுகள் இருக்கின்றன, இப்படி நீட்டிக் கொண்டே போவதன்மூலம் ஏழை எளிய நடுத்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 மார்ச் 9

பெரிய
தர மக்களுக்கும் வட்டிக் கடைக்காரர்களுக்கும் பெரிய
போராட்டமே தொடங்குகின்ற நிலையிருக்கிறது. ஆகவே,
அரசு இரு சாராரையும் அழைத்துப் பேசி, தீர்வு காண வேண்
டும். இதற்கு முன்பு அவசர காலத்தில் ஒரு சட்டம் போட்டி
ருந்தார்கள். அதனால், மார்ஜினல் விவசாயிகள், $2\frac{1}{2}$ ஏக்கருக்கு
உட்பட்டு நிலம் வைத்திருந்தவர்கள் பலன் அடைந்தார்கள்.
ஆண்டுக்கு ரூ. 2,500-க்குக் குறைவாக வருமானம் உள்ள விவ
சாயிகளுக்கு இனாமாகவே கொடுக்க வேண்டுமென்று ஒரு சட்
டம் போட்டிருந்தார்கள்.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை.)

அச்சட்டத்தின்படி, அடகு வைப்பவன் ஏழையா, வசதி உள்ள
வனா என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, வட்டிக் கடைக்
காரனுக்குத் தானிருந்தது. ஆனால், இப்பொழுதுள்ள சட்டப்படி
வட்டிக்கடைக்காரர்களுக்கு .எந்தவிதமான தொல்லை
களும் இல்லாதவாறு செய்து, ஏழை, எளிய மக்கள், அடகு
வைத்தவர்கள்தான், தாங்கள் ஏழையா, இல்லையா என்பதை
நிரூபிக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்
கள், இதுபோன்ற குறைபாடு உள்ள சட்டத்தினால் ஏழை
எளியவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவ
தில்லையென்று சொல்லி, இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம்,
அதாவது 6 மாதம் தள்ளி வைப்போம் என்று சொல்வது எந்த
வித நன்மையையும் பயனையும் அளிக்காது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

வட்டிக் கடைகளில் 3 மாதங்களுக்கு வட்டியை எடுத்துக்
கொண்டு மிச்சத்தைக் கொடுக்கின்ற முறையை மாற்றி, கூட்டு
றவுச் சங்கங்களில் இந்தக் குறைபாடு இருக்கிறது என்பதைக்
கருதித்தான் இப்பொழுது 'செக்' சிஸ்டத்தை உருவாக்கியிருக்கி
றார்கள், அதுபோல, வட்டிக் கடைகளிலே அடகு வைத்து
பணம் வாங்குகின்ற முறையை, 'செக்' மூலம்தான் பணம்
வழங்கவேண்டுமென்ற முறையை உருவாக்க வேண்டுமென்று
கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, நான் இந்தச் சட்டத்திலே ஓரிரு ஆலோசனைகளை
மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். தலைவ
ரவர்களே, 6 மாதத்திற்கு தள்ளி வைப்பதாலே உபயோகம்
என்ன? ஈயம், பித்தளை, செம்பு சாமான்களை அடகு வைப்ப
வன் பணக்காரனாகவா இருப்பான்? அந்தச் சாமான்களைப்
பணக்காரன் அடகு வைக்க மாட்டான். (குறுக்கீடு) எவர்
சில்வர் சாமான் உட்படச் சொல்லுகிறேன். ஆண்டுக்கு
ரூ. 2,500-க்குக் கீழே வருமானம் உள்ளவன் அடகு
வைத்திருந்தால், அந்தச் சாமான்களை தொகையை அளிக்காமல்
உடனே திருப்பிப் பெற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டும்.



1979 மார்ச் 9] [திரு. கூத்தக்குடி ச.சண்முகம்]

அப்படியில்லாமல் தவணையைக் கூட்டுவது சரியில்லை.
அடகு வைத்தவன் வருமானம் உள்ளவனா என்று நிரூபிக்கும்
பொறுப்பு அவனுக்கு இக்கக்கூடாது, சாமான்களை அடகுக்கு
வாங்கியவனுக்கு இருக்கவேண்டும். அப்படியெல்லாம் வகை
செய்யாமல் நீட்டித்துக் கொண்டு போனால் சரியல்ல.
அடுத்த ஆலோசனை, இதை அவசரக் கோலமாக போடாது,
தான் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே வாக்
குறுதி கொடுக்கிறேன்— சட்டமன்ற உறுப்பினர், தாசில்தார்,
அவசியமானால், சட்டமன்ற உறுப்பினரது கட்சியைச்
சேராத வேறு உறுப்பினர் கொண்ட குழுவைப் போட்டால்
அக்குழு யார் ஏழையென்று சொல்கிறதோ, அவனுக்கு உடனே
சாமான்களைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.
அப்படி இல்லாவிட்டால், நீங்கள் தள்ளிக் கொண்டே போனால்
பலனே ஏற்படாது.

தங்கம் வைத்திருப்பவன் வசதிக்காரன், பித்தளை வைத்
திருப்பவன் ஏழை. பித்தளைக்கு வட்டியை அதிகமாக
வாங்குகிறார்கள். தங்கம் அடகு வைக்கிறவனுக்கு 2 வட்டி
பித்தளை அடகு வைக்கிறவனுக்கு 5 வட்டி. இந்த மாதிரி ஏழை
களிடம் அதிக வட்டி வாங்குகிற செயல் முறையை தமிழ்நாடு
வட்டிக் கடைக்காரர்கள் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11—40]

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இதை மாற்றி அமைப்பது
பற்றி பரிசீலனை செய்யாமலேயே சட்டம் கொண்டு
வருவதில் உபயோகம் இல்லை. இதைச் செய்தால் கட்டாயம்
பலன் உண்டு. பணக்காரனா அடகு வைக்கிறான். ஆகவே
தான் பின் தங்கிய நாட்டிலே எல்லாம் தனிப்பட்டவர்கள்
வட்டிக்காரர்களாக— வட்டி வாங்குபவர்களாக இருக்கிற
நிலைமை இருக்கிறது. தனிப்பட்டவர்கள் வட்டிக்காரர்களாக
இல்லாமல் அரசாங்கமா வட்டிக்குப் பணம் தர முடியும்.
முடியாது. அந்த முறை இப்போது எந்த நாட்டிலுமே
இல்லை. இதற்கு சர்க்காரே ஒரு முடிவு கொண்டு வந்து எந்த
அடிப்படையில் கடன் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து
பலபேர் அடங்கிய குழு ஒன்றை கூட்டி கண் காணித்து வந்தால்
தான், இதப் பிரச்னை தீரும். இதை எல்லாம் பரிசீலிக்க
கடன் குழு ஒன்றை அமைக்க வேண்டியது அவசியம் என்று
உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, அடமானம்
வைத்து இருக்கிற பொருள்களை மீட்பது பற்றி ஒரு குறைந்த
பட்ச காலத்திற்கு நீட்டித்து ஒரு சட்டம் கொண்டு வந்திருக்
கிறார்கள். அதை வரவேற்க வேண்டியதுதான். ஆனாலும் இந்த
சட்டத்தில் பாதுகாப்பு இல்லாத நிலையில் பல ஏழைகள்
அடகு வைத்தப் பொருளை இழக்க நேரிடும் நிலைமை இருக்கிறது.

வட்டிக் கடைக்காரர்கள் பொருள்களை எடுத்துக் கொண்டு ஓடி விடுகிற அபாய நிலைமை இருந்து வருகிறது. சிட் பண்ட் ஆக்டில் பிரிவு இருக்கிறது.

'Section 12–Security to be given by the foreman'

ஒரு சிட்டை ஆரம்பிக்கின்றார்கள் என்று சொன்னால் அதற்காக

'half of the chit amount has to be deposited
with the Chit Registrar.'

என்று சட்டம் போட்டிருக்கிறார்கள் ஒரு பாதுகாப்புக்காக.

ஆனால் பான்புரோக்கர்களுக்கு ஆர். டி. ஓ. தான் லைசன்ஸ் கொடுக்கிறார்கள். இந்த லைசன்ஸ் கொடுக்கிற நேரத்திலே எந்தவிதமான பிணைப்பும், செக்யூரிடியும் இல்லாமல் லைசன்ஸ் கொடுக்கிறார்கள். இப்படி எந்தவித செக்யூரிடியும் இல்லாமல் இருப்பதால், பொருளை வைத்தவர்கள் அதனை இழந்து விடக் கூடிய நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. திருவண்ணாமலையில் சேட் ஒருவர் அவர். ஜாயின்ட் பேமிலி பிஸனஸ் என்று, அவரும், அவருடைய சகோதரரும், அவருடைய தகப்பனாரும் சேர்ந்து ஜாயிண்ட் பேமிலி பிஸனஸ் நடத்தி வந்தார்கள்—வட்டிக்கு கடன் கொடுக்கும் பிஸனஸில். 10 லட்சம் ரூபாய் அளவிற்கு பொருள்களும் அவரிடம் அடமானமாக ஒப்படைக்கப்பட்டன. திடீரென்று ஒரு நாள் அவர் தலைமறைவாகிவிட்டார். பின்னர் விசாரித்ததில் ராஜஸ்தானை சேர்ந்தவர் என்று தெரிகிறது. அப்புறம் ராஜஸ்தான் கவர்ன்மெண்டிடம் பெர்மிஷன் வாங்கி அந்த ஆளைப் பிடித்துவர வழக்குப் போட்டிருக்கிறார்கள். இன்னும் அந்த வழக்கு முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அது மட்டும் அல்ல, 10 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விட்டு விட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருந்து வருகிறது. இதற்காக சிட் பண்டு ஆக்டில் எப்படிப் பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறார்களோ அப்படி பாதுகாப்பு ஏற்படுத்தி, இவ்வளவு transaction-க்கு இவ்வளவு Deposit கட்டவேண்டும் என்று நிர்ணயம் செய்து அதற்கு செக்யூரிட்டியாக ஒன்று—பணமாகவோ அல்லது சொத்தாகவோ சட்டப் பாதுகாப்பு இருக்குமானால் இப்படி பிறர் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிடும் அபாயத்திலிருந்து மக்களை யார் பொருளை வைத்திருக்கிறார்களோ அவர்களைக் காப்பாற்றி விடலாம்.

இப்பொழுது ஆர்.டி.ஓ. லைசன்ஸ் கொடுப்பது சரியா? கூடுமானவரைக்கும் இந்த வட்டித்தொழிலை மார்வாரிகள்தான பெரிதும் செய்கிறார்கள். அவர்கள் எந்த மாநிலத்தி லிருந்து வந்தார்கள் என்று தெரியாது. திடீரென்று ஓடி





விட்டுப் போய் விட்டால்—பொருளை வைத்திருப்பவர்கள் அதை திரும்பப்பெற முடியாமல் இழந்து விடக் கூடிய நிலைமை—அபாயமான நிலைமை இருக்கிறது. அதற்காகவாவது இந்த சட்டத்தில் இது போன்ற சட்டப்பிரிவுகளைச் சேர்த்து சட்டத்திருத்தம் கொண்டு வந்தால், பாதுகாப்பு இருக்கும். ஏழை மக்களுக்குப் பாதுகாப்புத்தரவேண்டும் என்பதற்காகத் தான் இந்தச் சட்டத்தை நீட்டித்துத் தருகிறோம். இந்தப் பாதுகாப்பு மிக மிகத் தேவைப்படுகிறது, ஆகவே பிரிவுகளையும் சேர்த்து இந்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்து இருக்கிற இந்தத் திருத்த சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். வட்டிக் கடைக்காரர்களால் தொல்லைப் படுகின்ற ஏழைகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்தோடு இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த மசோதாவால் எந்த அளவிற்கு நன்மை வரும் என்பதை இந்த அரசு நன்றாக சிந்திக்க வேண்டும். இப்போது இருக்கின்ற நெருக்கடியில் இன்னும் 3 மாத காலம் ஒத்திப்போட்டு, அந்த 3 மாத காலத்திற்குள் ஒரு நிவாரணம் இந்த நாட்டிலே இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது சிந்திக்கவேண்டியதாக இருக்கிறது. இன்று வட்டிக் கடைக்காரர்களால் ஏழைகள் எந்த அளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். 100 ரூபாய்க்கு 5 ரூபாய் வட்டி என்கிற அளவிற்கு கூட நாட்டிலே நிலைகள் இருக்கின்றன. அதாவது 60 சத வீதம் வட்டி கேட்கும் சூழ்நிலை கூட இருக்கிறது என்றால் ஏழைகள் வட்டிக் கடைக்காரர்களால் எந்த அளவிற்குத் தொல்லைக்குள்ளாக்கப் படுகிறார்கள் என்பதை அரசு எண்ணிப்பார்த்து அதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காண்பதற்கு முன் வரவேண்டும். 3 மாதத் திற்கு நிவாரணம் அளிப்பதுதான் நிச்சயமாக அது ஒரு பெரிய நிவாரணமாகக் கருதமுடியாது. ஒரு வேளை தற்காலிக நிவாரணமாக இது இருக்கலாம் என்று எண்ணி இதை வரவேற் கிறோம் ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புவது என்னவென்றால் நீண்ட கால நிவாரணமாக ஒரு காம்பிரஹெண்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வந்து, வட்டிக்கடைக்காரர்களால் பாதிக்கப்பட்டு இருக்கும் ஏழைகளுக்கு நல்ல நிவாரணம் இந்த அரசு அளிக்க வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த சபை முன் வைக்கப்பட்டுள்ள மசோதா வட்டிக்கடைக்காரர்களால் மிகவும் பாதிக்கப்பட்டு

[திரு. என். வரதராஜன்] [1979 மார்ச் 9

இருக்கக்கூடிய ஜனங்களின் பிரச்னையாகும். இதை ஜூன் மாதம் 15ஆம் தேதி வரையிலும் இப்போது இருக்கும் சட்டத்தை திருத்தி நீட்டித்துக் தருகிறீர்கள். இந்த 3 மாதகால அவகாசத்தில் அரசு அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு எந்த வகையில் முயற்சிக்கலாம் என்பதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு நிவாரணம் அளிக்க முன்வர வேண்டும் என்று எங்கள் கட்சியின சார்பாக ஆலோசனையாக நான் சொல்ல விரும்புகிறேன். மேலும் இந்த 3 மாத கால அவகாசத்திற்குள் அவர்களுக்குத் திருப்பித் தருகிற சக்தி வந்து விடும் என்று இந்த அரசு கருதுகிறதா என்பதையும் அவர்கள் பார்க்கவேண்டும். ஆகவே, மொத்தமாகவே இந்த மோசடியான வட்டிமுறை இன்று தமிழகத்தில் மாற்றப்படவேண்டுமானால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது கந்து வட்டி, சந்தை வட்டி, வாரவட்டி என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் அமைச்சர் பதில் அளிக்கும்போது சொல்வார்கள், ஒரே வட்டி தான் இருக்கிறது. சட்ட வட்டிதான் இருக்கிறது, அது தான் அமல் நடத்தப்படுகிறது என்று. இன்றைக்கு கிராமத்தில் இருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்ன நிவாரணம் என்று பார்க்கவேண்டும். இன்றைக்கு ஒரு சில நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. என்றாலும், குறிப்பாக, அதிலே சொல்லவேண்டுமானால் 2,400 ரூபாய் வருமானம் குறைவாக உள்ளவர்கள் கடன் பெற்று இருப்பவர்கள் இனாமாகவோ பொருள்களைத் திருப்பி எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ரூபாய் 2,400க்கு குறைவாக வருமானம் வருகிறது என்பதை நிரூபிப்பதற்கு அவர்கள் மிகுந்த சிரமப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, அதற்காக சில அதிகாரிகளைப் போட்டு, அவர்கள் மூலம் அந்த நகைகளை மீட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அது அரசு செய்ய வேண்டிய முக்கியமான ஒரு முயற்சி. அதோடு இன்றைக்கு நாம் வைத்திருக்கிற வருமான வரம்பை சற்று கவனிக்க வேண்டும். மாதம் 200 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்கள் என்று சொல்லும்போது நம்முடைய விவசாயத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்; கீழ்த் தஞ்சையில் ஒரு விவசாயியின் தினசரி கூலி 9 ரூபாய் 20 பைசா என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின்படி பார்த்தால் அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக நிவாரணம் கிடைக்க வழியில்லை. குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு 5,000 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களுக்கு எல்லாம் பயன்படும் வகையில் இந்தச் சட்டத்திலே ஒரு திருத்தம் செய்ய வேண்டும். இதிலே சாதாரண விவசாயிகள், கடைநிலை ஊழியர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.



1979 மார்ச் 9] [திரு என். வரதராஜன்]

ஏற்கெனவே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கடன் நிவாரணச் சட்டத்தை இந்த மன்றத்திலே கொண்டுவந்தபோது பதில் அளித்தார்கள். மேலவையில் அதை இன்னும் கொஞ்சம் அழுத்தமாகத் தெரிவித்தார்கள். இந்த வருமான வரம்பை கொஞ்சம் உயத்துவதை பற்றி நாங்கள் ஆலோசனை செய்து வருகிறோம் என்று சொன்னார்கள். அதை அவர்களுக்கு நினைவுபடுத்தி, 200 ரூபாய் வருமானம் என்பதை 500 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த முயற்சி செய்ய வேண்டும். அப்படியானால்தான் சாதாரண மக்கள் தங்களுடைய அடகுப் பொருட்களை மீட்டுக்கொள்ளமுடியும்.

அடுத்தபடியாக இருப்பது வட்டி. ஏற்கெனவே, அடகு வைத்தவர்கள் தாங்கள் வைத்த தொகையைவிட அதிகமாக வட்டி கட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் பாதித்தொகை வட்டியாகக் கட்டியிருக்கிறார்கள். அவ்வளவு கட்டியும் அவர்களால் பொருளை மீட்க முடியவில்லை. இதை கவனத்தில் கொண்டு, எவ்வளவுதொகை வாங்கினார்களோ அதற்கு எவ்வளவு வட்டியாகக் கட்டியிருக்கிறார்களோ அதைக் குறைத்துக் கொண்டு மீதியைக் கொடுத்தால் பொருட்களைத் திருப்பிக்கொடுக்க வழிவகைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் பித்தளைப் பாத்திரத்தில் வாழ்க்கைத் நடத்தியவனை அலுமினியப் பாத்திர வாழ்க்கைக்குத் தள்ளிவிட்டவர்களாவோம். அது கூடாது.

பஞ்சாயத்துத் தேர்தல் வருகிறது. அதனால்தான் 3 மாதம் ஒத்தி வைக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். நான் அப்படிப் பார்க்கவில்லை. அரசு நல்ல நோக்கத்தோடு இருந்தாலும் இந்த 3 மாதத்தில் அடகுப்பொருட்களை மீட்டிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடாது. அதனால் இந்த கால அவகாசத்தை நீட்டிக்க அரசு ஆலோசனை செய்து ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். ஒரு திருத்தச் சட்டம் அதற்குத் தேவைப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, நான் இதிலே அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இந்த "பான் புரோக்கர்ஸ்" என்பவர்கள் அரசு நிர்ணயித்த வட்டியைத்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று யாரும் நம்பிவிடக் கூடாது. பான் புரோக்கர்ஸ் ஆக்டின் கீழ் என்ன வட்டி வாங்க வேண்டுமோ அதைவிட பல மடங்கு கூடுதலாகப்போட்டு, கொடுத்த தொகையைவிட எத்தனையோ மடங்கு வட்டியாகவே வாங்கிவிட்டார்கள். அப்படி இருந்தாலும், இன்னும் அடகுப் பொருட்களை அவர்களேதான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை திருப்பிப்பெற சக்தியற்றவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையில் காலத்தை "எக்ஸ்டண்ட" பண்ணுவதால் பயனில்லை.

[திரு ஏ. ஆர். மாரிமுத்து] [1979 மார்ச் 9

அதோடு, இந்த வருமான வரம்பு 2,400 ரூபாய், மாதம் 200 ரூபாய்க்கு கீழ் வருமானம் உள்ளவர்கள் என்று இருப்பதும் போதாது. ஒரு கடைநிலை ஊழியருக்கு மாதம் 300 ரூபாய் நிர்ணயம் செய்திருக்கிறோம். அவர்கள் மட்டுமல்ல. நிரந்தர வேலை இல்லாதவர்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், 100 ரூபாய், 120 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்றைக்கு உள்ள நிலையில் கீழ்த் தஞ்சையை தள்ளிவிட்டாலும் விவசாயிகளுக்கு தினக் கூலி ஆண்களுக்கு ரூ. 5 என்றும், பெண்களுக்கு 3½ ரூபாய் என்றும் நிர்ணயம் செய்திருக்கிறோம். 2,400 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்கள் என்பதை நிரூபிக்க சர்டிபிகேட் வாங்கச் சென்றால் அவர்கள் இந்த 5ஐயும் 3½ஐயும் கூட்டி 8½ஐ 30ஆல் பெருக்கி, 2,400 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் இதில் எந்த விதமான நன்மையும் இல்லை. இதை பரிசீலனை செய்ய வேண்டும். இந்த வருமான லிமிட்டை அதிகமாக்க வேண்டும். சின்ன சின்ன பாத்திரங்களை அடமானம் வைப்பவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்க முடியாது. அவர்கள் பெரிய வருமானம் உள்ளவர்களாகவும் இருக்க முடியாது. 10 ரூபாய்க்கு, 20 ரூபாய்க்கு அடமானம் வைக்கிறார்கள் என்றால் அவர்கள் அன்றாடத் தேவைக்கு அரிசி போன்ற உணவுப் பொருட்களை வாங்குவதற்காகத்தான் அடமானம் வைத்திருப்பார்கள். எல்லாம் அன்றாடத் தேவைக்காக அடமானம் வைத்தவர்கள் பெரிய வருமானம் உள்ளவர்களாக நிச்சயமாக இருக்க முடியாது. ஆகையால், அவர்களுடைய வருமானத்தைப் பார்க்காமல் அப்படிப்பட்ட பொருட்களை எல்லாம் உடனடியாகத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிட வேண்டும். 5 ரூபாய்க்குக்கூட வழி இல்லாததால்தான் பாத்திரங்களை அடமானம் வைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சர்ட்டிபிகேட் தேவையில்லை. வருமானத்தைப் பார்க்காமல், அவர்களுடைய பொருட்களைத் திருப்பிக்கொடுத்து விட வேண்டும்.

ஆகவே, இந்தச் சட்டத்தை சரியாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வர ஒரு கூட்டுக் குழு போட்டு, அந்தக் குழுவின் சிபாரிசை அமலாக்க நடவடிக்கை எடுத்தாலொழிய சாதாரண மக்களுக்கு எந்தவிதமான பலனும் இருக்காது—இந்த முறையிலே சட்டத்திலே மாற்றங்கள் செய்ய அரசு முயற்சிகள் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இப்பொழுது நான் ஒன்றும் பேசுவதற்கு அதிகமாக இல்லை. இருந்தாலும் வட்டியைப் பொறுத்தவரையில் அது முழுமையாக



1979 மார்ச் 9] [திரு எம். ஏ. லத்தீப்]

அகற்றப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். அப்படிப்பட்ட எண்ணத்திற்குரியவன் நான். ஆகவே, வட்டி என்பது எந்த வகையிலே இருந்தாலும், அது எந்த இடத்திலே இருந்தாலும், எந்த ரூபத்திலே இருந்தாலும், அதை வேரோடும் அடி மண்ணோடும் ஒழித்துக் கட்ட வேண்டும், தகர்த்து எறிய வேண்டும் என்பது தான் என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். ஏதோ நான்கு மாதங்களுக்கென்று தள்ளிப்போடுவதும் நல்லதல்ல. தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டவனுக்கு அந்தத் தண்டனையைத் தள்ளிப் போட்டால் அவன் எப்போதும் அதை நினைத்து செத்து செத்து தான் பிழைத்துக் கொண்டிருப்பான். அதுபோலத்தான் இப்படித் தள்ளிப் போடுகின்ற சட்டம் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, பல வருடங்கள் நீதிபதியாக பதவி வகித்திருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் மனித உணர்வுகளை நன்றாகப் புரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த வட்டியினை அடியோடு ஒழிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, on a point of personal explanation, I beg leave of this House to make this submission.

As long as I functioned as Judge of the High Court, particularly in the Refer Trial Bench, I realised the mental anxiety, mental trial, the corrosive feeling in the minds of the convicts and I insisted on the death sentence cases being posted expeditiously. I may tell the House with all humility and humbleness that within a space of 6 to 8 weeks, I disposed of 160 to 170 cases, so that the death sentence prisoner may not suffer the continuous anxiety in death cell, which is solitary cell.

THIRU N. SUNDARARAJ : Will the Hon. Minister please tell us how many death sentences he has given as a Judge of the High Court?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I have no statistics with me available.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நான் அமைச்சவர்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டுதான் சொன்னேன். ...ன்னுடைய வாதத்தை ஏற்றுக் கொள்கின்ற வகையிலே அவர் ...ங்கே விளக்கம் தந்ததற்கு நன்றி. இந்த வட்டி என்பதற்கு ...ழியிலே இரண்டு பொருள் உண்டு. சாதாரணமாக, இப்படி ...ட்டி என்ற பொருளிலே சொல்லப்படுவது. அடுத்து இன்னொரு ...ாருளும் உண்டு. அதாவது, சாப்பிடுகின்ற பாத்திரத்திற்கும்

வட்டி என்று சொல்லப்படுவதுண்டு. அது பாண்டிய நாட்டிலே அதிகமாகப் பழக்கத்திலே இருந்து வருகிறது. தொண்டை நாட்டிலே அப்படிச் சொல்லப்படவில்லை. என்றாலும் பாண்டிய நாட்டிலேயும், சோணாட்டிலேயும் அப்படிச் சொல்லப்படுகின்ற பழக்கம் உண்டு............

<u>மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :</u> தலைவர் அவர்களே, வட்டில் என்று தான் சொல்வார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஆமாம். சாப்பிடுகின்ற தட்டிற்கு வட்டில் என்று சொல்வார்கள்.

<u>திரு மு. அம்பிகாபதி :</u> தலைவரவர்களே, வட்டில் சுமந்து மருங்கசைய

<u>திரு துரை முருகன் :</u> தலைவரவர்களே, வட்டிலினால் நாழிபார்கரும் தமிழ்நாட்டு மாதரசி தொட்டிலிலே தாலாட்ட தமிழ்ச் செல்வத்தை ............

<u>திரு எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, நான் இதற்காகத் தான் பாண்டிய நாட்டிலேயும், சோணாட்டிலேயும் இது பழக்கத்திலே இருந்து வருவது என்று சொன்னேன். தொண்டை நாட்டிலே இல்லை என்று சொன்னேன். தொண்டை நாட்டிலே இருக்கின்ற திரு. துரை முருகனுக்குத் தெரியாது. பாண்டிய நாட்டிலே வட்டி என்று தான் சொல்வார்கள். வட்டி போடுகிறார்கள் என்று சொன்னால் ஒருவருடைய சாப்பாட்டுத் தட்டிற்கே வட்டி போடுகிறார்கள் என்று தான் அர்த்தம். அவன் சாப்பிடவே முடியாத அளவிற்குச்சாப்பிடுகின்ற தட்டிற்கே வட்டி போடப்படுகிறது என்று தான் அர்த்தம். அதாவது சாப்பிடுகின்ற தட்டே பறிக்கப்படுவது போன்றிருக்கிறது. ஆகவே, வட்டியினை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்பவன் நான். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்வது என்னவென்றால் இந்த மாதிரித் தள்ளிப் போடுகின்ற சட்டம் எல்லாம் உதவாது.

[நண்பகல் 12-00]

இதற்கெல்லாம் அஞ்சக்கூடியவன் அவன் அல்ல. வட்டி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக வாங்குகிறானோ அந்த அளவிற்கு அவன் இதயம் எங்கும் இருள் அடைகிறது என்று அர்த்தம். அவன் உலக ஒளியைப் பார்க்க மாட்டான். அவன் மனிதனை மனிதனாகப் பார்க்க மாட்டான்.





<u>திரு ஏ. ஆர். மாரிமுத்து :</u> வட்டி பற்றிப் பேசிக்கொண்டிருக்
கிறார்கள். பட்ஜெட்டில் கொடுத்திருக்கிறார்கள். 70 கோடி
ரூபாய் வட்டியாக இந்தச்சர்க்கார் கொடுக்கிறது என்று. எல்லா
வட்டியையும் சேர்த்துச் சொல்கிறார்களா?

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> நான் சொல்லுவது ஏழை எளியவர்
களிடம், வாழ வழியில்லாதவர்களிடம், தங்களைக் காப்பாற்றிக்
கொள்ள முடியாதவர்களிடம், தங்கள் தேவைகளைப் பூர்த்தி
செய்து கொள்ள முடியாதவர்களிடம், வேறு வழியில்லாமல்
கடன் வாங்குகிறவர்களிடம் இருந்து வாங்கப்படுகிற வட்டி
பற்றித்தான் சொல்கிறேன். வட்டி என்பதில் கண்டு வட்டி,
இரட்டை வட்டி, திமிர் வட்டி, திமிர் வட்டி என்று வைத்
திருக்கிறார்கள், திமிர்க்காரர்கள்—என்று பல இருக்கின்றன.
திமிர் வட்டி என்றதொரு வட்டி இருக்கிறது. வண்டி வண்டி
யாக வட்டியை எடுத்துக் கொண்டு போகிறான். இவைகள்
எல்லாம் தேவைதானா?

<u>திரு துரை முருகன் :</u> பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்.
திரு. லத்தீப் அவர்கள் வட்டி பற்றி மனவருத்தத்தோடு பேசு
கிறார்கள். நல்ல பிரச்சாரம்தான். அருள்கூர்ந்து அவர்கள்
பள்ளிப்பட்டிக்கு வந்து இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டும்.
நல்ல தத்துவம்.

<u>திரு எம். ஏ. லத்தீப்:</u> எல்லா இடங்களிலும் நான் சொல்லக்
கூடியவன்தான். அந்த மூலக்கருத்தில் தான் இந்தக் கருத்து
சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றில் அசைக்க முடியாத
நம்பிக்கை வைத்திருப்பவன் நான். அங்கிங்கெனாதபடி எங்கும்
சொல்வேன். யாரிடம் சொல்ல வேண்டும், யாரிடம் சொல்லக்
கூடாது என்பதல்ல. எல்லோரிடத்திலும் . சொல்வேன்.
ஆகவே, குறிப்பிட்ட ஒரு ஊரைச் சொல்லி அந்த ஊர்க்காரர்
களுக்கும் எனக்கும் சண்டை மூட்டி விட வேண்டாம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஒரு வேளை
அந்த ஊரில் வட்டி அதிகமாக வாங்குகிறவர்கள் இருக்கிறார்
களோ என்னவோ?

<u>திரு எம். ஏ. லத்தீப்:</u> ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள்
கூறியபடி ஒரு சாம்ப்ரஹென்ஸிவ் லா கொண்டுவர வேண்டும்.
அரசு கொடுக்கக்கூடிய வட்டி பற்றி திரு. மாரிமுத்து அவர்கள்
சொன்னார்கள். அது வட்டியா, டிவிடென்டா, ப்ராபிட்டா
என்பது பற்றியெல்லாம், As the Judge, the Hon'ble Law
Minister knows the effect of such transaction and from the effect
thereof an interpretation is made. Therefore, what is actually

understood as interest is construed in a different way for the purpose for which a particular amount is received or given. This is an inter-Government transaction or inter-corporate ransaction:

பாங்கிங் இன்ஸ்டிட்யூஷன் என்றால் வேறு இன்டர்ப்ரட்டேஷனிருக்கிறது. இப்போது இன்டர்ப்ரட்டேஷன்ஸ் மாறி வருகிறது. ஆகவே, வட்டி என்று சொல்லி, ஒருவன் நான்கு ரூபாய் கூலி பெற்றால், இரண்டு ரூபாய் வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிற அந்தக் கொடுமை நாட்டில் நிலவுவதை அனுமதித்துக் கொண்டிருக்கலாமா? நான்கு மாதங்களுக்குப் பிறகு கொடுக்கலாம் என்று கூறி வட்டிப் பளுவை அதிகமாக்கும் கொடுமை தேவைதானா? அதை ஒழிக்க வேண்டும். நாம் மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும். சமூக நீதி வேண்டுமென்றால் வட்டி வாங்கும் முறையை ஏழை எளிய மக்களைச் சுரண்டுகிற இந்த நயவஞ்சகர்களை நாட்டிலிருந்தே ஓட்டு மொத்தமாக ஒழிக்க வேண்டும். அதற்கு முறையாக ஒரு சட்டத்தை, விரிவானதொரு சட்டத்தை, முழுமையானதொரு சட்டத்தை, சக்தி வாய்ந்த ஒரு சட்டத்தை, நிறைவேற்ற ஒரு குழு அமைத்து ஒரு காம்ப்ரஹென்ஸீவ் லாவை அரசு கொண்டுவர முயற்சிக்குமானால் நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த வகையில் என் கருத்துக்களைச்சொல்லி இந்தச் சட்டத்தை This just post ponement will not help என்று சொல்லிவிட்டு அமர்கிறேன்.

திரு சி. மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்ட முன் வடிவை நான்கு மாதங்கள் நீட்டிக்கும் சட்ட முன் வடிவைக் குறித்து ஒரு சில கருத்துக்களை கூறலாம் என்று நினைக்கிறேன். 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொண்டுவந்த இந்தச் சட்டத்தை தொடர்ச்சியாக ஒத்திவைத்துக் கொண்டு வருகிறார்கள். வட்டிக்கடைக்காரர்கள், அடகுக் கடைக்காரர்கள் என்று பேசுவது ரசீது இல்லாமல் தொழில் நடத்துபவர்களைப்பற்றித் தான். ஆனால் சட்டப்பூர்வமாக ரூ. 100 சர்க்காருக்கு பணம் கட்டி பதிவு செய்தவர்கள் பற்றிப் பேசுவதில்லை. அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள் வட்டிக் கடைகள் நடத்துவதற்கு. அவர்களின் நிலைமை இன்று மோசமாக உள்ளது. நானும் அந்தத் தொழிலைச் செய்து வருவதை இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதில் பெரும்பாலானவர்கள் ஒழுங்கான முறையில் வட்டிக்கு கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் இன்றைக்கு கஷ்டப்படுகிறார்கள். பலரிடமிருந்தும் கைமாற்று பெற்று சர்க்கார் நிர்ணயித்திருக்கும் வட்டிக்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் வட்டி விகிதத்தை எடுத்துக் கொண்டால் 100 க்கு ஒன்று என்ற வீதம்தான் இருந்து கொண்டு வருகிறது. ஆனால் நாட்டில், மக்களுடைய சம்பளங்களின் விகிதம்





அதிகமாகிக் கொண்டே போகிறது. ஆனால் வட்டியை அதிகப்படுத்தவில்லை. இன்னும் ஒரு ரூபாய் விகிதத்தில் தான் இருக்கிறது. அடகு பிடிப்பவர்களை எடுத்துக் கொண்டால் முன்னால் 300 ரூபாய் ஒரு பவுனுக்கு என்றிருந்தது இன்றைக்கு 650 ரூபாய், 700 ரூபாய் என்றிருக்கிறது. இதன் மூலமாக அதிகமான நகைகள் இருக்கின்றன. ஒழுங்கான முறையில் வட்டிக்குப் பணம் கொடுத்து வரும் வட்டிக் கடைக்காரர்கள் அதிகமான அளவில் சம்பாதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் முடித்துக்கொண்டு விடுங்கள். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

*THE HON'BLE THIRU K. NARAYANASWAMI: Mr. Deputy Speaker Sir, I am tankful to all the Hon'ble Members for offering their suggestions, principally in respect of amending the Tamil Nadu Pawn Brokers Act, 1943, particularly the Hon'ble Member Thiru Koothakudi Shanmugham, Hon'ble Thiru Margabandu, Hon'ble Thiru M. A. Latheef, Hon'ble Thiru A. R. Marimuthu, and other friends have given very very useful suggestions and they will be considered by the Government in due course of time when, what is called, the Tamil Nadu Debt Relief Act is going to be amended or when the Tamil Nadu Pawn Brokers Act, 1943 needs certain amendents. I found one solitary voice of an Hon'ble Member who spoke in favour of the Pawn Brokers. But I presume the Hon'ble Member has, in the interests of the Pawn brokers receiving the interest, pleaded for another three months. I think when he had made this suggestion he has given his whole-hearted support to this amending measure which is only restricted to a period of 3 months extension for redeeming the pledged articles. Beyond that, there is no further scope under this Bill. All other suggestions will be very seriously considered particularly when they have emanated from the knowledge and experience of the Hon' Members. I request this Hon'ble House to accept this motion and pass this Bill.

திரு க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதில் பேச விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையை யொட்டி எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு மனுவை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக் காரர்கள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/79)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

Hon'ble Thiru K. NARAYANASWAMY : I move that the bill be passed.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12-10]

(ஆ) இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு: 1979.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு,கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

*1979, பிப்ரவரி 22ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.





திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டுள்ள ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு. கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979)'' சட்டத் திருத்தத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, 1949-லே கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தோடு முடிவடைய இருக்கிற இந்தச் சட்டத்தை கவர்னர் அவர்களுடைய அவசர ஆணையின் பேரில், அதை நடைமுறைப்படுத்துவதற்காக இப்போது ஒரு சட்டத்தை ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த முன்வடிவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். பொதுவாக, ஆளுங் கட்சித் தரப்பிலே எதையும் எதிர்க்கட்சிக்காரர்கள் ஆதரித்துப் பேசுவதில்லை என்ற ஒரு பெரிய குறைபாடு அவர்களிடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கு, நான் இந்தச் சட்ட முன் வடிவை ஆதரிக்கிறேன்.

பொதுவாக, கவர்னர் அவர்களுடைய ஆர்டினன்சு மூலமாக எந்தச் சட்டங்களைக் கொண்டு வந்தாலும், நம்முடைய ஆளுங் கட்சித் தரப்பிலே இருந்து ஆண்டு கொண்டிருப்பவர்கள் மிகவும் நிதானமாக, கவனமாக இதிலே செயல்பட வேண்டும். அந்த வகையிலே பார்க்கிறபோது, இப்போது இந்தச் சட்டத்தை ஆளுநர் அவர்கள் அவசர ஆணை பிறப்பித்து கொண்டு வந்திருப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், மிகவும் முக்கியமான மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, அதிலே கடுமையான உட் பிரிவுகளை வைத்துக் கொண்டு வரும்போது, தனி மனிதனை குடிக்காதவனைக் கூட குடித்ததாக வழக்குகள் போடக்கூடிய அளவுக்குச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, ஆளும் கட்சியினர் ஆளுநர் அவர்களின் அவசர ஆணையோடு கொண்டு வந்தால், அதை எப்படி ஆதரிக்க முடியும் ? அந்த வகையிலே பார்க்கிறபோது, இந்தச் சட்டத்தை நான் ஆதரிக்கிறேன்.

அதோடு, இந்தக் கட்டணத்தைச் செலுத்துவதையும், வசூலிப்
பதையும்கூட இதிலே இணைத்திருக்கிறார்கள். அந்தக்
கட்டணத்தை வசூலிப்பதிலே யாருக்கும், எந்தவிதமான ஆட்சே
பணையும் இல்லை. இந்த அரசுக்கு வருவாயை ஈட்டித்
தருகின்ற, நிர்வாகம் செம்மையாக நடத்துகின்ற வகையிலே
உள்ளதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அதே
நேரத்தில் மின் துறையில் எப்படி இந்தக் கட்டணம் வசூலிக்கப்

படுகின்றது? கட்டணம் வசூலிப்பதில் எவ்வளவு அக்கறை
காட்டப்படுகிறதோ, அந்த உணர்வோடு பொதுமக்களுக்கும் மின்
துறையைச் சார்ந்தவர்கள் எந்தவிதமான இழப்பும், எந்த
விதமான இடர்ப்பாடும் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள
வேண்டும். ஆனால், சில இடங்களில் அவமானப்படக்கூடிய
அளவுக்கு சில அதிகாரிகளால் பொதுமக்களுக்கு இடர்ப்பாடுகள்
விளைவிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, நான் அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்
பாக ஒருவன் மின்கட்டணம் செலுத்தவில்லை என்றால், அவனுக்கு
ஒரு ரூபாய் பெனால்டி, அபராதம் விதிக்கப்பட்டு, கட்டணம்
வசூல் செய்கிறார்கள். அதற்குப் பிறகும் கட்டணத்தைக்
கட்டவில்லை யென்றால், பியூசை பிடுங்கி விடுகிறார்கள். அதற்குப்
பிறகு அபராதமாக ரூ. 5 வசூலிக்கிறார்கள் என்று கருதுகிறேன்.
இந்த அளவுக்கு மிகவும் கடுமையான நிலைமையிலே மின்
கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இப்படி அக்கறையோடு
கட்டணம் வசூலிக்கப்படுவதைப் போல், இந்த அளவுக்கு
சட்டத்தை இறுக்கமாக அமுல்படுத்துவதுபோல், ஒருவர்
அபராதக் கட்டணத்தைக் கட்டிவிட்ட பின்னர், அந்த உணர்
வோடு அவருக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே செயல்படு
கின்றார்களா என்பதையும் பார்க்க வேண்டும். சில இடங்
களிலே அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக்
கொண்டு, ஒன்றும் அறியாத மக்களை, விவசாயிகளை பழி
வாங்கும் உணர்வோடு செயல்படுகின்றார்கள். அப்படிச் செயல்
படும்போது, 2, 3 நாட்கள் ஆனாலும் பரவாயில்லை, ஒரு வாரம்
ஆனாலும்கூட அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில்லை.

என்னுடைய ஊரிலே சீர்காழி நகரத்திலே ஒரு வயதான அம்மை
யார், கணவனை இழந்தவர், இப்படி பணத்தைக் கட்டிய பிறகும்
கூட ஒரு வாரம் ஆகியும் கூட மின் இணைப்பு கொடுக்கப்பட
வில்லை. இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்க சர்குலர் அனுப்பி
தடுக்க முடியாது. இது சில விஷமிகள் செய்கிற வேலை. இது
அரசின் கவனத்திற்கு வருகிற அளவுக்கு, ரெக்கார்டு ஆகிற
அளவுக்கு கட்டணம் கட்டிவிட்ட பிறகும் மின் இணைப்புக்
கொடுப்பதற்கு எத்தனை நாள் ஆகிறது என்று கணக்கிட்டு
அத்தனை நாட்களுக்கு அவர்களுக்கு இழப்பீடு செய்ய வேண்டும்,
அல்லது நடவடிக்கை எடுப்பதற்காக விதிமுறைகளுக்கு ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ப்யூசைப்
பிடுங்கி விட்டால் மீண்டும் கட்டத் தவறிவிட்டால் மூன்று மாத
பணத்தை முன்னதாகக் கட்ட வேண்டுமென்ற இறுக்கமான
சட்டவிதி இருக்கிறது. அதையும் பரிசீலித்து பொதுமக்களை
அதிகம் பாதிக்காத அளவிற்கு, எளிதான முறையில் கட்ட
ணத்தை வசூலிக்கின்ற அளவில் சட்டத்தைச் சரிசெய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்காக மின்
இணைப்புக் கொடுக்கின்ற நேரத்தில் கரெண்ட் கட் இல்லையென்று
சொல்லிவிட்டு பின்னால் திடீரென்று கரெண்ட் கட் செய்கிறார்
கள். இதன் காரணமாக விவசாயிகள் ஓட்டுகின்ற ஆயிரக்
கணக்கான மோட்டார்கள் எரிந்து விடுகின்றன. இதனால்
விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இப்படிப்பட்ட தவ
றான நம்பிக்கையை அரசு ஊட்டக்கூடாது. தெளிவான
நம்பிக்கையை மக்களிடத்தில் உருவாக்கவேண்டும். இதனால்
விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி; துணைத் தலைவர் அவர்களே, 1949-ல்
கொண்டு வந்த இந்தச் சட்டம் இந்த ஆண்டு ஜனவரியோடு
முடிவடையும் சட்டமாகும். கவர்னர் உயிர் கொடுத்தார்.
இன்றைக்கு நாம் எல்லாம் மீண்டும் உயிர் கொடுக்க இந்தச்
சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன்.
கட்டணம் வசூலிப்பதிலே அத்தியாவசியப் பொருள் என்று
வந்துவிட்டால் அங்கு பல தவறுகள் நடக்க சந்தர்ப்பம் ஏற்படு
கிறது. விவசாயிகள் விவசாயத்திற்கு கரெண்ட் வேண்டு
மென்று கேட்கிறபோது ரெவின்யூ பிடிக்கவில்லை. ரெகுலரி
சேஷன் ஆகவில்லை என்றெல்லாம் பல காரணங்களைச் சொல்லி
மின்சாரம் கொடுப்பதில்லை. ரெவின்யூ, ரெகுலரிசேஷன்
போன்ற வார்த்தைகள் விவசாயிகளுக்குப் புரியாது. சாதாரண
மக்களுக்கு நல்ல முறையில் மின் இணைப்புக் கிடைப்பதற்கு
வேண்டிய ஏற்பாட்டை மின்சாரத் துறை செய்து கொடுக்க
வேண்டும். அதுவுமல்லாமல் சில சந்தர்ப்பங்களில் ஃப்யூஸ்
காரியர்களை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். தாமத
மாகக் கட்டணத்தைக் கட்டுவதன் காரணமாக இந்த நிலை
ஏற்படுகிறது. முதல் கட்டத்தில் 5 ரூபாய் ஃபைன்; இரண்டா
வது கட்டத்தில் தவறு செய்தால் 7 ரூபாய் பைன்; மூன்றாவது
கட்டத்தில் 10 ரூபாய் பைன் என்று இப்படி கூட்டிக் கொண்டே
போகிறார்கள். இதனால் அதிகமான பாதிப்பு ஏற்படுகிறது.
இதைத் தவிர்த்து குறைந்த அளவில் இந்த ஃபைனை நிர்ண
யித்தால் சாதாரண மக்களுக்கு நன்மை செய்யமுடியும் என்று
கூற விரும்புகிறேன்.

பரமக்குடியில் கடந்த வாரம் நடந்தது. 3,000 பேர்களுக்கு
மின்சார பில்கள் கிடைக்கவில்லை. டிசம்பர் மாத பில்கள்
ஜனவரியில் கொடுத்தார்கள். சாதாரண ஜனங்களுக்கு எந்தத்
தேதியில் அந்தப் பணத்தைக் கட்ட வேண்டுமென்று தெரியாது.
குறிக்த காலத்தில் பில் கொடுத்தாலே தாமதமாகக் கட்டுவார்
கள். பில்லை சரியான காலத்தில் கொடுக்காவிட்டால் என்ன
செய்வார்கள்? அவர்கள் கட்டாததன் காரணமாக மின்சார
இலாகாவிலிருந்து 3,000 ஃபியூஸ்காரியர்களையும் எடுத்து

விடுகிறார்கள். அப்படி எடுத்துவிட்ட பிறகு சில பேர் போய் பணம் கட்டுகிறார்கள். அப்படி அவர்கள் கட்டக்கூடிய நேரத்திலும் அவர்களுக்கு ரூ. 5, ரூ. 7, ரூ. 10 என்ற வகையில் ஃபைன்

[பிற்பகல் 12-20]

விதிக்கப்படுகிறது. இந்த நிலைமை சரிதானா? நாங்கள் குறித்த காலத்திலே கட்டாவிட்டால் 10 ரூபாய் அபராதம் போடுகிறார்கள், ஆனால் நீங்கள் குறித்த காலத்திலே பில்களைக் கொடுக்காவிட்டால் யாருக்கு அபராதம் போடுவது? பில்களைக் காலத்திலே கொடுக்காததற்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத்தலைவர்— தலைமை]

இங்கே மின் திருட்டைப்பற்றிச் சொல்கிறீர்கள், ஒழுகி விடுகிறது என்று சொல்கிறீர்கள், லீக்கேஜ் என்று சொல்கிறீர்கள், இப்படியெல்லாம் நட்டம் ஏற்படுகிறது. இன்றைக்கு விவசாயி, ஒரு விளக்கை பருத்திச் செடியிலே போடுவதன் காரணமாக பருத்திச்செடியைக் காக்கவும், பூச்சிகளை அழிக்கவும் வசதி இருக்கிறது என்று வேளாண்மைத் துறையிலே சொல்கிறார்கள். அதன் காரணமாக சாதாரண 40 வாட்ஸ் பல்பை தன்னுடைய பம்புசெட்டிற்கான இணைப்பிலிருந்து மின்சாரம் எடுத்து செடியிலே மாட்டிவிடுகிறபோது அதைத்தவறு என்று சொல்லி ஒரு யூனிட்டுக்கு 90 பைசா என்றும் அதற்கு அபராதம் என்ற முறையிலே 45 பைசா என்றும் மொத்தமாக ஒரு யூனிட்டுக்கு 135 பைசாவீதம் வசூலிக்கும் முறையிலே 5 ஆண்டுக்காலத்திற்குப் போட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் போட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே சிறு தவறு செய்தாலும் அதற்கு ஆயிரக் கணக்கான ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் தவறு செய்தால் என்ன என்பது இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு மிகமிக அத்தியாவசியமான பொருட்களை விநியோகிக்கும் போது விவசாயிகளுக்குப் பயன்படும் முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று சொல்லி இந்தச் சட்டத்தை எங்கள் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவை அனைவரும் வரவேற்றுப் பேசியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரவேலு அவர்கள் பேசுகின்றபோது மின்சார வாரியத்தில் மின் துண்டிப்பு நடைபெற்றதற்குப் பிறகு அதற்குரிய பணத்தைக் கட்டினதாலும் சீக்கிரத்திலே அவர்கள் வந்து இணைப்பைத் தருவதில்லை. வேண்டுமென்றே சில பேர் கீழ் மட்டத்திலே





இருக்கிறவர்கள் காலதாமதம் செய்கிறார்கள். அப்படிக் காலதாமதம் செய்வதினால் மின்சார வாரியத்திற்கும் இழப்பு ஏற்படுகிறது, மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கும் அதனால் பலன் கிடைப்பதில்லை. ஆகவே அத்தகைய காலதாமதம் செய்வதுபற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பிட்ட புகார்களைக் கூறுவார்களேயானால் இதைப்பற்றி மின்சார வாரியம் நிச்சயம் பரிசீலிக்கும் என்ற உத்திரவாதத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு திரு. சிவசாமி அவர்கள் பேசுகின்றபோது பரமக்குடி பகுதியைப்பற்றிக் குறிப்பிட்டு, பில்கள் எல்லாம் சரியாக விநியோகிக்கப்படவில்லை, மின் கட்டணம் கட்டாவிட்டால் அபராதம் இருக்கிறது, ஆனால் பில்கள் கொடுக்கவில்லையென்றால் யார் அபராதம் போடுவது என்று கேட்டார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒரு குறை இருப்பது நல்லதல்ல. அண்மையிலே ஈரோடு மின் திட்டத்தை பரீட்சார்த்தமாக எடுத்து, சில புதிய முறைகளைப் புகுத்தி அவைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஈரோடு மின் திட்டத்தை மட்டும் தான் எடுத்திருக்கிறோம். ஏனென்றால் அது சிறு மின் திட்டம், 4, 5 தாலூக்காக்கள் உள்ள பகுதி என்ற காரணத்தாலே அதை மட்டும் எடுத்து இப்புதிய திட்டங்களை அமல்படுத்தி வருகிறோம். இப்போது பில்கள் நேரடியாகத் தபால் மூலமாக அனுப்பப்படுகின்றன. பில்களை நேரடியாகக் கேஷியர்களே கொண்டுபோய்க் கொடுப்பது கடமை என்று இருக்கிறது. ஆனால் அவர்கள் கொண்டுபோய்க் கொடுத்தார்களா இல்லையா, அது அவர்களுக்குக் கிடைத்ததா கிடைக்கவில்லையா என்ற பிரச்னை இருக்கிறது. இப்போது பி.அண்ட்.டி. மூலமாக தபால் மூலமாக அனுப்பப்படுவதால் அவைகள் ஒழுங்காகச் சேருகின்றன என்று தெரிகிறது. ஆகவே அந்த முறை. அது மட்டுமல்ல மற்றும் சில முறைகளும், வெற்றிபெற்றால் யாரும் யாருக்கும் அபராதம் போடாமல் இருப்பதில் அக்கறை ஏற்படும், ஆகவே யாரும் யாருக்கும் அபராதம் போடவேண்டுமென்ற சர்ச்சையிலே நாம் ஈடுபடுவது அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முன் வடிவைப் பொறுத்தவரையில ஏற்கனவே நடைமுறையிலே இருந்து வருகிறது. அவ்வப்பொழுது அதற்குக் காலம் நீட்டித்துத் தரப்படுகிறது. 1974 ஆம் ஆண்டு ஐந்தாண்டுகள் நீட்டித்து சனவரி 1979 வரையில்— 25-1-1979 வரையில் நீட்டித்துத் தந்தார்கள். இந்தச் சட்டத்தின்கீழ் எல்லாக் கட்டணமும் விதிக்கப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்திற்கு உயிர் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. எப்படி மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் பேசும்பொழுது, இந்தச் சட்டத்திற்கு மேதகு ஆளுநர் அவர்கள் உயிர் கொடுத்தார்கள்,

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 9

மாண்புமிகு உறுப்பினர்களும் இந்தச் சட்டத்திற்கு உயிர் கொடுக்கத் தயார் என்று குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் சிரஞ்சீவிச் சட்டமாகவே ஆகிவிடும். டெம்பரரியாக உயிர் கொடுக்கவில்லை. நிரந்தரமாக இந்தச் சட்டம் அமலில் இருக்க ஏற்பாடு செய்கிறோம். ஆகையினால் இந்தச் சட்டமுன் வடிவை எல்லோரும் ஆதரிக்கின்ற காரணத்தினால் இதை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 11/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

## (இ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979)'. திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, கூத்தக்குடி ச. சண்முகம், செ. சிவசாமி, பொ. உத்திராபதி ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் பற்றிக் கொடுத்திருக்கிறார்கள். திரு. மு. அம்பிகாபதி அவர்கள் முன்மொழிவார்கள்.



1979 மார்ச் 9]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 30–9–1978 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1978) இப்பேரவை நிராகரிக்கிறது".

THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Mr. Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979* (Legislative Assembly Bill 13 of 1979) be taken into consideration.

The cases of illicit distellation and sale of intoxicating liquors and drugs, it was found, were on the increase every year. It had therefore become necessary to take immediate action to enforce prohibition vigorously and to award deterrent punishment for the offenders.

To achieve the above object, and as the State Legislature was not in session then, the Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 13 of 1978) was promulgated by the Governor of Tamil Nadu on the 30 th September 1978.

Section 4-A of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) provides punishment for being found in a state of intoxication. As per the said section as amended by the Tamil Nadu Ordinance 13 of 1978, whoever is found in a state of intoxication in any public place and whoever not having been permitted to consume any liquor or intoxicating drug in pursuance of this Act, is found in a state of intoxication in any private place shall be punished with rigorous imprisonment, which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both.

In the light of the experience gained in the working of the Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1978, it is found that the Prohibition policy of the Government cannot be fully implemented unless a deterrent punishment is provided for offences under Section 4-A of the Act. Accordingly section 4-A of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act, of 1937) has been amended to provide for higher penalty namely rigorous imprisonment for a term which may extend to three years and with fine which may extend to three thousand rupees. Minimum punishment has also been provided for offences under Section 4-A.

Sir, I now request the House to accept the motion.

*1979 பிப்ரவரி 22-ந் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.

[பிற்பகல் 12-30]

THIRU A. RAHMANKHAN : Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill ,1979 (L.A. Bill No. 13 of 1979) be referred to a Select Committee of the House consisting of ... ........ Members (List of members will be given later) with instructions to report to the House before 22nd March 1979".

The amendment was duly seconded.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதேபோல் திரு. சாதிக் பாட்சா அவர்கள் தந்திருப்பதால் பேரவை விதி 77(1)-ன் கீழ் தள்ளப்படுகிறது.

THIRU K. SUPPU : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L.A Bill No. 13 of 1979) be circulated for eliciting public opinion".

The amendment was duly seconded.

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மது விலக்கு அவசரச் சட்டத்தின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கடும் கண்டனத்தைத் தெரிவிக்கின்ற கருத்துக்களை மட்டும் அல்ல, இந்த மதுவிலக்கு அவசரச் சட்டத்தையே வாபஸ் வாங்க வேண்டும், திரும்பப் பெற வேண்டுமென்ற அளவுக்கு வலியுறுத்திப் பேசுவதற்கு முன் வருகிறேன். காரணம், இந்திய நாட்டில் தமிழகத்திலேயும் குஜராத்திலேயும்தான் இது ஏதோ பெரிய விஷயமாகக் கருதப்படுகிறது, சொல்லப்படுகிறது. இதற்கு, குறிப்பாக, சட்டமன்றம் கூடுகின்ற காலத்திலே இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதை விவாதித்து அது தேவையா, தேவை இல்லையா என்பதைப் பற்றிக்கூட கருத்தை அறியாமல் அவசரமாக ஏதோ குடி முழுகிப் போகிற மாதிரி மிகுந்த அவசரத்தோடு முதல் முறை குடித்தால் 6 மாதம் சிறை தண்டனை, அடுத்த முறை குடித்தால் ஒரு வருஷம் சிறை தண்டனை. அடுத்த முறை குடித்தால் 2 வருஷம் தண்டனை, அடுத்த முறை குடித்தால் நாடு கடத்தல், இதுசரியா? இரவு நேரத்திலே கதவைத் தட்டித் திறந்து பிடித்தால் தவறு கிடையாது என்ற விளக்கங்களை எல்லாம் சொல்லி, யார் வீட்டை வேண்டுமானாலும், யார் வீட்டு கதவுகளை வேண்டுமானாலும் தட்டுவோம் என்று சொல்லி 'என் வீட்டுக் கதவைத் தட்டிய கள்வன் யார்' என்று கேட்டு, தட்டிய கையையுடையவன் யானே என்று கையை வெட்டிக் கொண்டானே பொற்கைப் பாண்டியன், அவன் பிறந்த நாட்டில் ,யார் கதவை வேண்டுமானாலும் இரவில் தட்டுவோம்,



பிடிப்போம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது, தேவையில்லாதது, அவசியமில்லாதது. சாதாரண ஏழை எளிய மக்களுக்கு ஒவ்வாத இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். குறிப்பாக ஒரு மூடிய ஆலையைத் திறப்பதற்கு அவசரச் சட்டம் வருவதில்லை, படித்துவிட்டு வேலையில்லாமல் வீட்டில் படுத்திருக்கிறானே அவனைத்தேடி 'அப்பா உனக்கு வேலை அளிக்கப் போகிறது இந்த அரசு' என்று சொல்வதற்கு அவசரச் சட்டம் வரவில்லை. ஆலையைக் கதவடைத்து ஆயிரக்கணக்கான தொழிலாளிகளைப் பட்டினி போடுகிற முதலாளியை சிறையில் போட அவசரச் சட்டம் வரவில்லை. ஆனால் அவசரச் சட்டம் எதற்கு? தொழிலாளி வேலை நிறுத்தம் செய்தால் 6 மாதம், தூண்டிவிட்டால் 6 மாதம், அதற்கு ஆதரவு கொடுத்தால் 6 மாதம். எல்லாமே 6 மாதம்தானா ?

கொஞ்சம் கூட இதிலே குறைவே கிடையாதா? அதேபோல இந்தச் சட்டமன்றத்திலே இன்றைக்கு மதுவிலக்கு சட்டம் என்று கூறி ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

எங்கள் அருமைத் தலைவர் கேரள முதல்வர் வாசுதேவன் நாயர், அவர்கள் இந்தச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது, மத்திய அரசு சொன்னால் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தெரிவித்து விட்டார். தமிழகத்தின் எல்லையில் 25 மைலுக்குத் தள்ளுபடி செய்யும்படி இந்த அரசாங்கம் கேட்டது. அதைக்கூட முடியாது என்று மறுத்துவிட்டார். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கும் ஆந்திராவிலேயே அதன் முதல்வர் சென்னா ரெட்டி மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்த முடியாது என்று கூறிவிட்டார். மேற்கு வங்கத்திலே அதன் முதல்வர் தோழர் ஜோதிபாசு மத்திய அரசு கூறிய வார்த்தையைப் பரிசீலிப்பதற்கு எங்களுக்கு நேரம் கிடையாது, எங்களுக்கு மதுவிலக்கு தவிர வேறு வேலை இருக்கிறது என்று தெரிவித்து விட்டார். இன்று மத்திய அமைச்சரவையில் ஆளுகின்ற ஜனதா கட்சி ஆட்சியிலிருக்கிற பீகார், உத்தரபிரதேசம் போன்ற இடங்களில் தாராளமாக அது அமுலில் இருக்கிறது. பாண்டிச்சேரியில் மதுவிலக்கு என்று சொல்ல முடியுமா ? அந்தக் கட்சியையே இல்லாமல் செய்து விடுவார்கள். மது விலக்கு என்பது சமூகப் பிரச்னை. குடிப்பழக்கம் வேறு. குடிப்பது வேறு. ஹேபிச்சுவல் டிரிங் வேறு. அக்கேஷனல் டிரிங் வேறு. இரண்டும் மாறுபட்டது.

திரு. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஹேபிச்சுவல் டிரிங் விரும்புகிறாரா? அக்கேஷனல் டிரிங் விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 9

திரு. மு. அம்பிகாபதி : விளக்குகிறேன் இருங்கள், தனிப்
பட்ட முறையில் சொந்த விருப்பு வெறுப்பு கிடையாது. குடிப்
பழக்கம் என்பது பொதுவாக கெட்ட பழக்கம்தான். குடிப்
பழக்கத்தை விட்டு விட பிரச்சாரம் செய்யுங்கள். மக்கள்
மனதை மாற்றி அதனைத் தீர்க்க வேண்டும். கட்டாயப்படுத்தி
குடிக்கக்கூடாது என்று சொல்லக் கூடாது. அக்கேஷனல் டிரிங்
என்பது எப்போதாவது குடிப்பது. ஹேபிச்சுவல் டிரிங் என்
பது அந்தப் பழக்கத்திற்கு அடிமையாவது. அது மிகவும் கொடி
யது தான். அப்படிக் குடிப்பவன் குடும்பமும் உருப்படாதது என்
பதும் தெரிந்ததுதான். ஆனால் குடிப்பவனை 6 மாதம்,
1 வருஷம் என்று சிறையில் போட்டு தண்டனை கொடுத்து
விட்டால்—அந்தப் பழக்கத்தை அவன் நிறுத்தி விடுவானா?
அவனுடைய மனைவி குழந்தைகள் அல்லவா நிற்கதியாய் நிற்
பார்கள் ? மேலை நாடுகளில் கூட—அங்கே மனைவி கணவன்
இருவருமே குடிப்பார்கள். மாலை நேரத்தில் டின்னர் சாப்
பிட்டு விட்டு வந்து லைட் டிரிங்ஸ் வீட்டிலே குடிப்பார்கள்.
அதிலே ஆல்கஹால் கன்டென்ட்ஸ் குறைவு. அதனால் ஆபத்து
ஒன்றும் இல்லை. சோவியத் நாட்டில் விழாக்காலங்களில் கடை
களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. மதுவில் மயக்கப் பொருள்
குறைப்பு. இப்படிப் பல்வேறு வழிகளில் மதுவை விலக்குவதற்கு
என்ன செய்ய வேண்டும் என்று யோசனை செய்து பிரச்சாரம்
மூலம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். மதுவிலக்கால்
மட்டுமே கடந்த 5 ஆண்டில் 582 கோடி ரூபாய் வருவாய்
இழப்பு என்று 7-வது நிதிக்கமிஷனுக்கு அளிக்கப்பட்ட குறிப்பில்
உள்ளது. மத்திய அரசிடம் கேட்டோம். அவர்கள் தர மறுக்
கிறார்கள் என்று கூறுகிறார்கள். இதைக் கூறிக் கொண்டு 2
கோடி ரூபாய்க்கு தேங்காய், புளி (புளி கிடையாதா? தவறாகச்
சொல்லிவிட்டேன் அடுத்து போடுவீர்கள்,) தீப்பெட்டி இவை
களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. தேங்காய், சட்னி செய்யப்
படும் பொருள், வரி சமையலறைக்குப் போய் புகுந்திருக்கிறது.
சினிமாத்துறையில் எண்டர்டெயின் மெண்ட் வரியிலே 9 கோடி
லாஸ் என்று சொல்லுகிறார்கள். இதில் பாயின்ட் என்ன
வென்று சொன்னால் எண்டர்டெயின் மெண்ட் லாஸை விட்டு
விட்டார்கள். தேங்காயை எடுத்துக் கொண்டு, தீப்பெட்டியை
எடுத்துக்கொண்டு வரிபோடுகிறார்கள். தீப்பெட்டித் தொழிற்
சாலை அது ஒரு குடிசைத் தொழில் அதற்குப் போய் வரி போட்
டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே 90 சதவீதம் சிவகாசி தீப்
பெட்டி என்று சொல்லுகிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக
மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்ற முடியாது என்பதைத்
தெளிவாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கள்
பதநீர் குடிக்கிறார்கள். பதநீருக்கு லைசன்ஸும் கொடுக்கப்
படுகிறது. பதநீர் — லைசன்ஸ்பெற்ற பதநீர் குடித்துவிட்டு
ஒரு தொழிலாளி திரும்பிக்கொண்டிருக்கிறான். அவனைப்
பிடித்து போலீசார் அவன் வாயை ஊதச் சொல்லிப் பார்க்
கிறார்கள். இது என்ன வேலை ? வாயை ஊதிப் பார்க்கிற
இவலை ? அவன் குடித்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும்.



1979 மார்ச் 9] [திரு. மு. அம்பிகாபதி]

ஆனாலும் அவன் வாயிலிருந்து ஆல்கஹால் நெடி வருகிறதாம்,
வதிக் கண்டு பிடித்து விட்டார்களாம். போலீசுக்கு இதுதான்
வலையா? ஏதோ புதுக் கருவி கூட கண்டு பிடித்திருக்கிறார்கள்
ன்று சொன்னார்கள். கோயம்புத்தூரில் பதநீர் எடுக்க
லசன்ஸ் கொடுத்து விட்டு, பதநீர் எடுத்துவிட்டான் என்று
பாய் அவனைக் கைது செய்வதா? உங்களுக்குத் தொழிலா
ர்களைப்பற்றி கவலை கிடையாதா ? பல லட்சம் மது மரத்
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

[பிற்பகல் 12—40]

அவசரமாகச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள்? என்ன
அவசரம் இதற்கு? அவசரமாக ஆட்சியைவிட்டு போய்விடுவீர்கள்
ன்ற பயமா? அவசரச் சட்டத்தால் இப்போது போலீசுக்கும்
தால்லை. இந்தச் சட்டத்தின் மூலமாக எந்தவிதமான
மாற்றமும் கொண்டு வருவதற்கு வாய்ப்பு கிடையாது
ன்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ பேசி
னாம் என்பதற்காக மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்கள்
தங்களுடைய கருத்துக்களைச் சொல்லவேண்டியது இல்லை.
உண்மையான நிலையை, நாட்டிலே இருக்கும் நிலையை
எண்ணிப்பார்க்கவேண்டும். லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை
கிடையாது. குடிசைத் தொழில் வையுங்கள் என்று கூறு
கிறார்கள். சில பேர் குடிசைத் தொழிலாக இதை நடத்திக்
கொண்டு இருக்கிறார்கள். இதிலே எத்தனையோ பேர்
வேலையில் இருக்கிறார்கள். லட்சக்கணக்கான பேர் வேலை
கேட்டுக்கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறபோது,
அவர்கள் இந்த வேலையையாவது செய்து கொண்டு இருக்
கிறார்களே, அதிலே என்ன தவறு என்று கேட்க எனக்கு
உரிமை இருக்கிறது. இது தவறா? உதாரணத்திற்குச் சொல்
கிறேன். ஏ என்பவர் வீட்டிலே புகுந்து பி என்பவர் திருடுகிறான்.
ஏ புகார் கொடுக்கிறான், பிஐ பிடியுங்கள், தண்டனை கொடுங்
கள். ஏ என்பவர் பி என்பவனை குத்துகிறான். பி காயம்
அடைகிறான். எனவே, ஏ வை கைது செய்யுங்கள். ஆனால்
ஏ குடித்ததால் பி க்கு என்ன வந்தது? இது கான்ஸ்டிடியூஷனல்
ரைட்டுக்கு விரோதமானது. அதைச் சாப்பிட்டால் தான் சில
பேருக்கு சக்தி பிறக்கிறது. என்னுடைய நண்பர், என்னோடு
சோவியத் யூனியனுக்கு வந்தவர், அரசின் ஆஸ்தான கவிஞர்
கண்ணதாசனுக்கு சாப்பிட்டால்தான் கவிதை பிறக்கும், நல்ல
எழுத்தாளர் என் நண்பர், ஜெயகாந்தன் அவருக்கு சாப்பிட்டால்
தான் எழுத முடியும். நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், அது
தவறாகுமோ ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குறிப்பிடுகிற
நபர்கள் இங்கே இல்லை. தாங்கள் தெரிவிக்கிற கருத்தை
மறுக்க அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. அது இருந்தால் தான்
அவர்களுக்கு எழுத வரும் என்று தாங்கள் எப்படி அறுதியிட்டுச்
சொல்ல முடியும். ஆகவே, அந்தப் பிரச்னையை இழுக்கவேண்
டாம். மொத்தமாகச் சொல்லுங்கள்.

[1979 மார்ச் 9

திரு. மு. அம்பிகாபதி : நான் அவர் பக்கத்திலேயே இருந்ததால் சொல்கிறேன். அவர் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் நான் சொன்னதை மறுக்க மாட்டார். எனவே, மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது என்பது ஆளுங்கட்சிக்கே எதிரானது. உங்கள் ஆட்சிக்கு எதிரானது, இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் பெறு வது என்பது உங்களுக்கு பாதுகாப்பு. லட்சக்கணக்கான மது மரத் தொழிலாளர்கள் உங்களுக்கு எதிராக கிளர்ந்து எழுவார்கள். லட்சக்கணக்கான மது மரத் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இழந்து இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு அகில இந்திய மது மரத்தொழிலாளர்கள் சங்கம் என்று அமைத்து இருக்கிறார்கள். அவர்கள் நாடு முழுவதும் எங்களுக்குப் பாது காப்பு வேண்டும் என்று கிளர்ச்சி நடத்தப் போவதாக அறி வித்து இருக்கிறார்கள். தமிழகத்திலே கூட வீதிக்கு வீதி உப்பு சத்தியாகிரகம் நடத்தியது போல மரத்தில் ஏறி கள்ளை இறக்குவோம் என்று போராட்டம் நடந்தாலும் நடக்கலாம் என்பதை மிகவும் எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, மது விலக்குச் சட்டத் திருத்தத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அதைத் திரும்பப்பெறவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எச்சரிக்கை செய்து முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937-ம் ஆண்டு மது விலக்குச் சட்டத்திற்கு இந்த அரசு சில திருத்தங்களைக் கொண்டு வந்து ஒரு மசோ தாவாக இங்கே சமர்ப்பித்து இருக்கிறது. திராவிட முன் னேற்றக் கழகம் இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித் தாலும், அதே நேரத்தில் அண்ணா வழி நின்று திராவிட முன் னேற்றக் கழகம் மது விலக்குக் கொள்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறது. இந்தச் சட்டம் ஒரு பயங்கரச் சட்டமாக, பயங்கரமான பிரிவுகளை உள்ளடக்கிய சட்டமாக ஒரு கருப்புச் சட்டமாக, இந்த அரசு பெற்றெடுத்த அபாயகரமான அசுரக் குழந்தையாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அருமை நண்பர் அம்பிகாபதி அவர்கள் எடுத்துச்சொல்லிய தைப்போல் சட்டமன்றப் பிரதிநிதிகள் அடங்கிய இந்த அவை யில் அந்த முடிவுகள் எடுத்து இருக்கவேண்டும். ஆனால் நம் முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சபைக்கு வெளியே இது குறித்து இன்னின்ன சட்டம் வர இருக்கின்றன, அது இன்னின்ன செக்ஷன்களை உள்ளடக்கியதாக இருக்கும், இன்னின்ன இப்படி இருக்கும் என்று சொல்லி, சில சாராய அதிபர்களைக் கட்டிக்காக்க சொல்லி இருக்கிறார்கள்.



1979 மார்ச் 9] [திரு. அ. ரகுமான்கான்.]

இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு சில காரணங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் காரணங்கள் — ஆப்ஜெக்ட்ஸ் அன்டு ரீசன்சில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

It is also proposed to enforce pro hibition rigorously so as to award deterrent punishment t. offenders and to empower the courts to rder the removal of persons convicted for certain specified offences என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக, இந்த மதுவிலக்கு சட்டத்தைக் கொண்டுவருவதற் காகச் சொல்லப்பட்ட முதல் காரணம் மதுவிலக்கை தீவிரப் படுத்துவது. இந்த அரசு உள்ளபடியே மதுவிலக்கை தீவிரப் படுத்தி இருக்கிறதா? நான் கேட்கிறேன். மதுவிலக்கை அமுலாக்குவதில் இந்த அரசுக்கு மனப்பூர்வமான நம்பிக்கை இருக்கிறதா? அப்படியானால், ஆஸ்தான கவிஞர் மது விலக்கை அமுல்படுத்துகிறாரா ? சிறு சேமிப்புத் திட்டத் தலைவர் மதுவிலக்கை அமுல்படுத்துகிறாரா ? வக்ஃப் போர்டு தலைவர் மதுவிலக்கை அமுல்படுத்துகிறாரா ?

திரு. எஸ். ஆர். இராதா : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் போது தனிப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்லி, அவர் களுடைய பதவிப் பெயர்களைச் சொல்லி, அவர் அமுல் படுத்துகிறாரா, இவர் அமுல்படுத்துகிறாரா என்று பெயர்களைச் சொல்கிறார். ஆஸ்தான கவிஞர் என்கிறார். திட்ட கமிஷன் தலைவர் என்கிறார். அவர்கள் அமுல் நடத்துகிறார்களா என்று அவர்கள் சொல்லுவதிலிருந்து அவர்கள் எல்லாம் குடிக் கிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். அதற்கு ஆதாரம் வைத்திருக்கிறாரா ?

திரு. அ. ரகுமான்கான் : நான் பெயர்களைச் சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக இருக்கிற பிரச்சனைகளைப்பற்றி நீங்கள் நன்றாகப் பேசுங்கள். குறிப் பிட்ட நபர்களைப்பற்றிச் சொல்ல வேண்டாம்; பொதுவாக சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் பொதுவாகவே சொல் கிறேன். ஆக, இந்த அரசுக்கு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை இல்லை என்பதை சில ஆதாரங்கள் மூலம் சொல் கிறேன்; ஆனால் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லத் தயா ராக இல்லை.

[திரு. அ. ரகுமான்கான்] [1979 மார்ச் 9

இந்தச் சட்டத்திலே இன்னொரு காரணத்தையும் சொல்லி
யிருக்கிறார்கள். 'டு அவார்டு டெட்டரன்ட் பனிஷ்மென்ட்,
மது சம்பந்தமான குற்றங்கள் செய்கிறவர்களுக்கு கடுமை
யான தண்டனை வழங்கப்படுவது பற்றி 'ஆப்ஜெக்ட்ஸ்
அண்டு ரீசன்ஸ்' பகுதியில் சொல்லியிருக்கிறார்கள்.

குடிப்பதை இந்த அரசு தப்பு என்று சொல்லவில்லை. அரசு
பெர்மிட் இல்லாமல், அனுமதி இல்லாமல் குடிப்பதை தப்பு
என்று சொல்கிறது. திருடுவதற்கு ஒரு சர்க்கார் பெர்மிட்
வழங்கவில்லை; கொள்ளையடிப்பதற்கு ஒரு சர்க்கார் பெர்
மிட் வழங்கவில்லை; கொலை செய்வதற்கு ஒரு சர்க்கார்
பெர்மிட் வழங்கவில்லை. ஆனால் சில காரியங்களை முன்
னிட்டு குடிப்பதற்கு மட்டும் பெர்மிட் வழங்குகிறது. இந்தியன்
பீனல் கோடு சட்டத்தின்படி கடுமையான குற்றத்தைப் போல
இந்த மதுவிலக்குக் குற்றம் அல்ல என்று அரசு ஏற்றுக்கொள்
கிறது. ஆகையால் இந்த குற்றம் சமூகத்தில் நடைபெறுகின்ற
ஒரு 'சோஷியல் ஈவில்' தான். அதற்கு இவ்வளவு பெரிய
தண்டனை வழங்குவது சரியல்ல.

அதுமட்டுமல்ல. இப்படி கடுமையான தண்டனை வழங்கு
வதன் மூலம் ஒழுக்கத்தை வளர்த்திட முடியாது. இன்னும்
சொல்லப்போனால் கடுமையான தண்டனை மூலம் தான்
ஒழுக்கம் வளர்க்கப்படும் என்றால், நம்முடைய தாய்மார்
களிலே பெரும்பாலோர் கற்புக்கரசிகளாக இருக்கிறார்கள்.
அவர்கள் கற்புக்கரசிகளாக இருப்பது சட்டத்தின் கடுமை
யினாலா; இல்லை. அது சமூக ஒழுக்கம்; அதைப்போல
மதுவிலக்குக் குற்றங்களை கடுமையான தண்டனைகளால்
பயங்கரமான சட்டங்களால் தடுத்துவிட முடியும் என்பது
தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் கூட சினிமாவில் நடிக்கும்போது
சொல்வார்கள் திருடனாக இருந்துதான் திருடனைப் பிடிக்க
முடியும் என்று. இந்த மதுவிலக்கு சட்டத்தில் சொல்லப்பட்
டிருக்கும பல்வேறு சரத்துக்களைப் பார்த்தால், ஒரு சர்வாதிகார
நாட்டிலே கூட இருக்க முடியாத கடுமையான சரத்துக்களாக,
மனிதாபிமானத் தன்மைக்கு அப்பாற்ப்பட்ட. சரத்துக்களாக
குற்றங்களை மேலும் மேலும் உருவாக்கக்கூடிய சரத்துக்களாக
இருக்கின்றன.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான இன்னொரு கார
ணத்தையும் 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸில்'' சொல்லியிருக்கி
றார்கள். ''ரிமூவல் ஆப் பர்சன்ஸ்'' எனறு சொல்லியிருக்கிறார்
கள். இநதக் குற்றத்தை யார் செய்தாலும் அவரை ஒரு
ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு விரட்டிவிடுவது. அப்படிச் செய்வ
தனால் மது குற்றவாளி திருந்திவிடுவானா? இது உள்ளபடியே
வேடிக்கையாக இருக்கிறது. ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு



1979 மார்ச் 9] [திரு. அ. ரகுமான்கான்]

அனுப்பிவிட்டால், அங்கே என்ன செய்கிறார்களோ அதைத்தான்
செய்வார்கள். திருடுகிறவன் திருடுவான்; குடிப்பவன் குடிப்
பான். ஊர் விட்டு ஊர் மாற்றினால் திருந்தி விடுவான் என்பது
சரியான வாதம் அல்ல.

அடுத்தபடியாக இன்னொரு வேடிக்கை. இதிலே இரண்டு
விதமான தண்டனை. பொது ஊழியருக்கு ஒரு தண்டனை;
பொது ஊழியர் அல்லாதவருக்கு ஒரு தண்டனை. பொது
ஊழியருக்கு அதிக தண்டனை; பொது ஊழியர் அல்லாதவருக்கு
குறைந்த தண்டனை. அப்படியானால் இந்த பப்ளிக் சர்வெண்ட்
யார் என்று பார்த்தால், இந்தியன் பீனல் கோடு 21வது
செக்ஷன் படி முதலமைச்சர் பப்ளிக் சர்வெண்ட், அமைச்சர்கள்
பப்ளிக் சர்வெண்ட் எம். எல். ஏ. பப்ளிக் சர்வெண்ட், எம்.எல்.சி.
பப்ளிக் சர்வெண்ட், எம். சி. பப்ளிக் சர்வெண்ட் நீதி மன்றத்திலே
இருக்கிற ஹைக்கோர்ட் ஜட்ஜ் பப்ளிக் சர்வெண்ட், பப்ளிக்
பிராசிகியூட்டர் பப்ளிக் சர்வெண்ட், கார்ப்பரேஷன் கமிஷனர்
பப்ளிக் சர்வெண்ட், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பப்ளிக்
சர்வெண்ட், இதைப் போல எவ்வளவோ இருக்கிறது.

[பிற்பகல் 12—50]

ஆனால் புரட்சிகரமான இந்த அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு கொண்டு வந்திருக்
கின்ற சட்டத்தில் இவர்களை பொது ஊழியர்கள் என்று சொல்லி
இருக்கிறார்களா என்றால் அவர்கள் மிகச் சௌகரியமாக
மந்திரி பொது ஊழியர்கள் என்று குறிப்பிடவில்லை. மாறாக
பப்ளிக் சர்வன்ட்ஸ் என்றால் போலீஸ் அதிகாரி என்று குறிப்
பிட்டிருக்கிறார்கள். அதாவது புரொகிபிஷன் ஆபீசர்
or any other officer of the State Government exercising any of the
powers or authority or any of the duties under this Act
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சட்டத்தின் மூலமாக
மதுவிலக்கை அமல் நடத்துகின்ற வகையில், எல்லோரையும்
சொல்லாமல் ஒரு சிலரை மட்டும்தான் பொது ஊழியர்கள் எனறு
குறிப்பிட்டிருக்கிறார்கள். இவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப்
பொது ஊழியர்களுக்கு மட்டும் தான், அவர்கள் தவறு செய்
கின்றபோது அதிகமான தண்டனை விதிக்கப்பட்டது. இந்த
சட்டத்தை போலீஸ் கமிஷனர் மீறினால் அவருக்கு தண்டனை
உண்டு. ஆனால் கார்ப்பரேஷன் கமிஷனர் மீறினால் அவருக்கு
தண்டனை கிடையாது. இந்தக் குற்றத்தை கலெக்டர் செய்
தால் அவருக்கு தண்டனை உண்டு. ஆனால் ஹைக்கோர்ட்
ஜட்ஜ் செய்தால் அவருக்கு தண்டனை கிடையாது. ஏன்
இந்த வித்தியாசம்?

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வியாசர்
பாடியிலே பேசுகிறபோது சொன்னார்கள், அதாவது மதுவிலக்கு
சட்டம் வருகிறது. அதன்படி சட்ட மன்ற உறுப்பினர்களோ
மற்றும் யாராக இருந்தாலும் சரி தவறு செய்தால் அவர்களுக்கு
கடுமையான தண்டனை கிடைக்கும் என்றார். கடுமையான

[திரு. அ. ரகுமான்கான்] [1979 மார்ச் 9

தண்டனை விதிக்கப்படும் என்றும் அதாவது ஓராண்டுக் காலம்
சிறைத் தண்டனை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள்.
ஆனால், இன்றையதினம் யாரையோ காப்பாற்றுவதற்காக
அந்தச் சட்டம் இவ்வாறு கொண்டு வரப்பட்டிருக்கிறது.
உண்மையான நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு
வரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாக இந்த
அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.
இன்டியன் பீனல் கோடிலே ஒன்றிருக்கிறது. அதாவது எவ்வளவு
பெரிய தவறுகள் செய்திருந்தாலும் சில நேரங்களில் சில சூழ்
நிலைமைகளின் காரணமாகத் தவறு செய்வதால் அவர்களுக்கு
மன்னிப்பு அளிக்கின்ற நடைமுறை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. அதாவது ப்ரொபேஷன் ஆக்ட் .என்பதே அது. ஆனால்
இந்த மது சம்பந்தமான குற்றத்தைச்செய்தால் இவர்கள் கொண்டு
வந்திருக்கின்ற பிரிவு 4 ஏ யின்படி மன்னிப்பு வழங்குகின்ற சூழ்
நிலை இல்லை. அதாவது மது அருந்துவதைகுலத் தொழிலாகவோ,
அல்லது குடிசைத் தொழிலாகவோ, கொள்ளாமல் ஏதோ சில
கூடா ஒழுக்கத்தின காரணமாக ஒரு சில நேரங்களில் சிலர்
தவறுகள் செய்துவிடலாம். ஆனால் அவர்களுக்குக் கூட
இந்த சட்டத்தின் பிரகாரம் மன்னிப்பு கிடையாது. இண்டியன்
பீனல் கோடிலே, திருடு, கொலை இதுபோன்ற கடுமையான
குற்றங்களைச் செய்திருந்தாலும் கூட மன்னிப்பு வழங்குகின்ற
வகையில் புரொபேஷன் ஆக்ட் இருக்கிறது. அந்த இன்டியன்
பீனலிலே குறிப்பிடப்படுவதையே இவர்கள் இந்தச் சட்டத்தை
கொண்டு வந்து மாற்றுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம்
என்னவென்றால் சட்டம் என் கையில் என்று சொல்கிறார்கள்.

அடுத்து கான்ஸ்பிராசி என்ற ஒரு பிரிவைப் பற்றிச் சொல்ல
விரும்புகிறேன். இந்த கான்ஸ்பிராசியின் மூலமாக தனக்குப்
பிடிக்காதவர்களை பழிவாங்கிக் கொள்கின்ற சூழ்நிலை இருக்
கின்றது. அதாவது இரண்டு மூன்று பேர் சேர்ந்து சாராயம்
காய்ச்சுகின்ற வகையிலே ஒரு அச்செண்ட் செய்து கொண்டிருக்
கிறார்கள். என்ற அடிப்படையிலே கூட அவர்களைக் கைது
செய்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது.
இதெல்லாம் எந்தப் பின்னணியிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது
என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்திரா நகர்
கொலை வழக்கு பற்றி நான் சொன்னேன் ஆனால் இந்திரா
கொலை வழக்கென்று என் மீதே 307 என்ற பிரிவின் கீழ் வழக்கு
போடப்பட்டிருக்கிறது. இண்டியன் பீனல் கோடு. பிரகாரம்
onus of proof lies cn prosecution.

ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அந்தக்
குற்றச்சாட்டை யார் சொல்லுகிறார்களோ அவர்கள்தான்
அவரைக் குற்றவாளி என்று நிரூபிக்க வேண்டும். இது முன்பு
இருந்த முறை. ஆனால் நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற புரட்சி



1979 மார்ச் 9] [திரு. அ. ரகுமான்கான்]

கரமான சட்டத்திலே குற்றத்திலே சம்பந்தப்பட்டவர்தான்
தான் நிரபராதி என்று நிரூபிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.
இந்தியாவின் நீதித்துறை வரலாற்றிலேயே இப்படி ஒரு சட்டம்
வந்ததில்லை. அதுமட்டுமல்லாமல் ஒரு இடத்திலே போலீஸ்
துறையைச் சேர்ந்தவர்கள் சாராயம் காய்ச்சுகிறார்கள் அல்லது
குடிக்கிறார்கள் என்று சொல்லும்போது முன்பெல்லாம்
மகஜர் கொடுக்கின்ற நிலை இருந்தது. இப்போது
அந்த முறையும் இல்லை. அதுமட்டுமல்லாமல் இன்னும்
சில பிரிவுகளை உங்கள் மூலமாக இந்தச் சபை
யின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது
ஒருவர் ஒரு சைக்கிள் கடை வைத்திருக்கிறார், அவரிடமிருந்து
நான்கு இடங்களுக்கு சிலர் வாடகைக்கு சைக்கிள்களை எடுத்துச்
செல்கிறார்கள். அப்படிப் போகின்றவர்களில் ஒருவர் சைக்கி
ளிலே சாராயத்தைக் கடத்திச் செல்கிறார், என்றால் அவர்மீது
வழக்கு போடுவது மட்டுமல்லாமல் அவருக்கு சைக்கிள் வாட
கைக்கு கொடுத்த சைக்கிள் கடைக்காரர்மீதும் வழக்குப்
போடப்படுகின்ற சூழ்நிலை இப்போது இருக்கின்றது. அதாவது
ட்யூ கேர் அண்ட் காஷன் அந்த சைக்கிள் கடைக்காரருக்கு இல்லை
என்று அதாவது தன்னிடமிருந்து சைக்கிளை வாடகைக்கு
எடுத்துச் செல்கிறவர்கள் எங்கெங்கு எடுத்துச் செல்கிறார்கள்
என்று கவனிக்க வேண்டுமாம். அவ்வாறு கவனிக்கவில்லை
என்ற வகையிலே அந்த சைக்கிள் கடைக்காரர் மீதும் வழக்கு
போடப்படுகிறது. இந்த மாதிரி நிலைகள் எல்லாம் நடைமுறை
யிலே சாத்தியமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு இன்னொரு குற்றச்சாட்டையும் இங்கே சொல்ல
விரும்புகிறேன். எங்களது மரியாதைக்குரிய தலைவர் கலைஞர்
அவர்கள் தொடர்ந்து அவர்களது கடிதங்கள் மூலம் ஒரு விளக்கம்
கேட்டார்கள். அரசாங்க அதிகாரி குடித்தால் முதல் தடவை
செய்த குற்றத்திற்காக ஒரு ஆண்டுத் தண்டனை அல்லது ஆறு
மாதத் தண்டனை. இரண்டாவது முறை அதே குற்றத்தைச்
செய்தால் அவர்களுக்கு மூன்றாண்டு தண்டனை என்று முதல்
அமைச்சர் அவர்கள் வியாசர்பாடியில் அறிவித்தார்கள். ஆனால்
சட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் என்பதற்கான
வியாக்கியானம், விளக்கம், மதுவிலக்கு சட்டம் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் மட்டும் என்றிருக்க காரணம் என்ன என்ற கேள்
வியைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சரை வைத்துக்
கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் வியாசர்
பாடியில் நடைபெற்ற விழாவில், அமைச்சர்கள் குடித்தால் ஒரு
ஆண்டுத் தண்டனை. இரண்டாவது முறை அதே குற்றத்தைச்
செய்தால் மூன்றாண்டு தண்டனை என்று வெளிப்படையாக
அறிவித்தார்கள். அந்தச் சிறப்பு அம்சம் அவசரச் சட்டத்தில்
இடம் பெறாததற்குக் காரணம் என்ன என்றும், அரசாங்க
அதிகாரிகள் குடித்து விட்டு தவறு செய்தால் அவர்கள் வேலை
யில் இருக்க முடியாது, பிறகு வேலையில் இருக்கின்ற அதிகாரிகள்
என்றால் எப்படி அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள

[திரு. அ. ரகுமான்கான்] [1979 மார்ச் 9

தண்டனை விதிக்கப்படும் என்றும் அதாவது ஓராண்டுக் காலம்
சிறைத் தண்டனை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள்.
ஆனால், இன்றையதினம் யாரையோ காப்பாற்றுவதற்காக
அந்தச் சட்டம் இவ்வாறு கொண்டு வரப்பட்டிருக்கிறது.
உண்மையான நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு
வரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாக இந்த
அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.
இன்டியன் பீனல் கோடிலே ஒன்றிருக்கிறது. அதாவது எவ்வளவு
பெரிய தவறுகள் செய்திருந்தாலும் சில நேரங்களில் சில சூழ்
நிலைமைகளின் காரணமாகத் தவறு செய்வதால் அவர்களுக்கு
மன்னிப்பு அளிக்கின்ற நடைமுறை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. அதாவது ப்ரொபேஷன் ஆக்ட் .என்பதே அது. ஆனால்
இந்த மது சம்பந்தமான குற்றத்தைச்செய்தால் இவர்கள் கொண்டு
வந்திருக்கின்ற பிரிவு 4 ஏ யின்படி மன்னிப்பு வழங்குகின்ற சூழ்
நிலை இல்லை. அதாவது மது அருந்துவதைகுலத் தொழிலாகவோ,
அல்லது குடிசைத் தொழிலாகவோ, கொள்ளாமல் ஏதோ சில
கூடா ஒழுக்கத்தின் காரணமாக ஒரு சில நேரங்களில் சிலர்
தவறுகள் செய்துவிடலாம். ஆனால் அவர்களுக்குக் கூட
இந்த சட்டத்தின் பிரகாரம் மன்னிப்பு கிடையாது. இண்டியன்
பீனல் கோடிலே, திருடு, கொலை இதுபோன்ற கடுமையான
குற்றங்களைச் செய்திருந்தாலும் கூட மன்னிப்பு வழங்குகின்ற
வகையில் புரொபேஷன் ஆக்ட் இருக்கிறது. அந்த இன்டியன்
பீனலிலே குறிப்பிடப்படுவதையே இவர்கள் இந்தச் சட்டத்தை
கொண்டு வந்து மாற்றுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம்
என்னவென்றால் சட்டம் என் கையில் என்று சொல்கிறார்கள்.

அடுத்து கான்ஸ்பிராசி என்ற ஒரு பிரிவைப் பற்றிச் சொல்ல
விரும்புகிறேன். இந்த கான்ஸ்பிராசியின் மூலமாக தனக்குப்
பிடிக்காதவர்களை பழிவாங்கிக் சொல்கின்ற சூழ்நிலை இருக்
கின்றது. அதாவது இரண்டு மூன்று பேர் சேர்ந்து சாராயம்
காய்ச்சுகின்ற வகையிலே ஒரு அக்ரிமென்ட் செய்து கொண்டிருக்
கிறார்கள். என்ற அடிப்படையிலே கூட அவர்களைக் கைது
செய்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது.
இதெல்லாம் எந்தப் பின்னணியிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது
என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்திரா நகர்
கொலை வழக்கு பற்றி நான் சொன்னேன் ஆனால் இந்திரா
கொலை வழக்கென்று என் மீதே 307 என்ற பிரிவின் கீழ் வழக்கு
போடப்பட்டிருக்கிறது. இண்டியன் பீனல் கோடு பிரகாரம்
onus of proof lies on prosecution.

ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அந்தக்
குற்றச்சாட்டை யார் சொல்லுகிறார்களோ அவர்கள்தான்
அவரைக் குற்றவாளி என்று நிரூபிக்க வேண்டும். இது முன்பு
இருந்த முறை. ஆனால் நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற புரட்சி



1979 மார்ச் 9] [திரு. அ. ரகுமான்கான்]

கரமான சட்டத்திலே குற்றத்திலே சம்பந்தப்பட்டவர்தான்
தான் நிரபராதி என்று நிரூபிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.
இந்தியாவின் நீதித்துறை வரலாற்றிலேயே இப்படி ஒரு சட்டம்
வந்ததில்லை. அதுமட்டுமல்லாமல் ஒரு இடத்திலே போலீஸ்
துறையைச் சேர்ந்தவர்கள் சாராயம் காய்ச்சுகிறார்கள் அல்லது
குடிக்கிறார்கள் என்று சொல்லும்போது முன்பெல்லாம்
மகஜர் கொடுக்கின்ற நிலை இருந்தது. இப்போது
அந்த முறையும் இல்லை. அதுமட்டுமல்லாமல் இன்னும்
சில பிரிவுகளை உங்கள் மூலமாக இந்தச் சபை
யின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது
ஒருவர் ஒரு சைக்கிள் கடை வைத்திருக்கிறார், அவரிடமிருந்து
நான்கு இடங்களுக்கு சிலர் வாடகைக்கு சைக்கிள்களை எடுத்துச்
செல்கிறார்கள். அப்படிப் போகின்றவர்களில் ஒருவர் சைக்கி
ளிலே சாராயத்தைக் கடத்திச் செல்கிறார், என்றால் அவர்மீது
வழக்கு போடுவது மட்டுமல்லாமல் அவருக்கு சைக்கிள் வாட
கைக்கு கொடுத்த சைக்கிள் கடைக்காரர்மீதும் வழக்குப்
போடப்படுகின்ற சூழ்நிலை இப்போது இருக்கின்றது. அதாவது
ட்யூ கேர் அண்ட் காஷன் அந்த சைக்கிள் கடைக்காரருக்கு இல்லை
என்று அதாவது தன்னிடமிருந்து சைக்கிளை வாடகைக்கு
எடுத்துச் செல்கிறவர்கள் எங்கெங்கு எடுத்துச் செல்கிறார்கள்
என்று கவனிக்க வேண்டுமாம். அவ்வாறு கவனிக்கவில்லை
என்ற வகையிலே அந்த சைக்கிள் கடைக்காரர் மீதும் வழக்கு
போடப்படுகிறது. இந்த மாதிரி நிலைகள் எல்லாம் நடைமுறை
யிலே சாத்தியமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு இன்னொரு குற்றச்சாட்டையும் இங்கே சொல்ல
விரும்புகிறேன். எங்களது மரியாதைக்குரிய தலைவர் கலைஞர்
அவர்கள் தொடர்ந்து அவர்களது கடிதங்கள் மூலம் ஒரு விளக்கம்
கேட்டார்கள். அரசாங்க அதிகாரி குடித்தால் முதல் தடவை
செய்த குற்றத்திற்காக ஒரு ஆண்டுத் தண்டனை அல்லது ஆறு
மாதத் தண்டனை. இரண்டாவது முறை அதே குற்றத்தைச்
செய்தால் அவர்களுக்கு மூன்றாண்டு தண்டனை என்று முதல்
அமைச்சர் அவர்கள் வியாசர்பாடியில் அறிவித்தார்கள். ஆனால்
சட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் என்பதற்கான
வியாக்கியானம், விளக்கம், மதுவிலக்கு சட்டம் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் மட்டும் என்றிருக்க காரணம் என்ன என்ற கேள்
வியைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சரை வைத்துக்
கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் வியாசர்
பாடியில் நடைபெற்ற விழாவில், அமைச்சர்கள் குடித்தால் ஒரு
ஆண்டுத் தண்டனை. இரண்டாவது முறை அதே குற்றத்தைச்
செய்தால் மூன்றாண்டு தண்டனை என்று வெளிப்படையாக
அறிவித்தார்கள். அந்தச் சிறப்பு அம்சம் அவசரச் சட்டத்தில்
இடம் பெறாததற்குக் காரணம் என்ன என்றும், அரசாங்க
அதிகாரிகள் குடித்து விட்டு தவறு செய்தால் அவர்கள் வேலை
யில் இருக்க முடியாது, பிறகு வேலையில் இருக்கின்ற அதிகாரிகள்
என்றால் எப்படி அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள

[திரு. அ. ரகுமான்கான்] [1979 மார்ச் 9

முடியும் என்ற கேள்வியையும் கேட்டார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள நமது முதல் அமைச்சர் அவர்கள். பூட்டுச் சாவியை திருடனிடம் தரமாட்டேன் என்று அது போன்ற கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று ஜனநாயக முறையில் விளக்கம் சொன்னார்கள். உங்கள் மூலம் ஒன்றை மட்டும் கூறி விட்டு விடைபெறவிரும்புகிறேன். பர்ஸ்ட் க்ளாஸ் ஜுடீஷியல் மாஜிஸ்ட்ரேட்டுதான் பழைய சட்டப்படி வழக்குகள் நடத்தி தீர்ப்புகள் வழங்கினார்கள். நிறைய வழக்குகள் தீர்க்கப்பட்டன. பர்ஸ்ட் க்ளாஸ் சப் டிவிஷனல் ஜுடீஷியல். மாஜிஸ்ட்ரேட்ஸ் தான் இன்று இந்த வழக்குகளை எல்லாம் நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இன்று மதுவிலக்குச் சட்டம் காரணமாக எங்கும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. வழக்குகள் அதிகமாக ஆகியிருக்கின்றன. சிறைச்சாலைகளில் குற்றவாளிகளை வைத்து அவர்களை மெயின்டைன் செய்ய அதிகப்படியான செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆக, இந்தச் சட்டத்தை எப்படித்தயார் செய்து கொடுத்தார்கள் என்பது வேடிக்கையாயிருக்கிறது. அவசரச் சட்டத்தில் ஒரு வேடிக்கையான பிரிவைப் போட்டிருந்தார்கள். போதையோடு இருந்தால் அபராதத்தோடு விட்டுவிடலாம். போதை இல்லாமலிருந்தால் உள்ளே ஆறு மாதம். 4(ஏ). இது முன்னாள் நீதிபதி அவர்களுக்குத் தெரியும். நான் கூட இது பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். இந்தச் சட்டம் எப்படி வந்தது, யார் இதைத் தயாரித்துக் கொடுத்தார்கள் சட்ட இலாகாதானே. சட்ட இலாகா ஏன் இப்படிச் செய்தார்கள் என்று புரியவில்லை. போதையோடு இருந்தால் அபராதத்தோடு விட்டுவிடலாம். என்றால் போதையோடு இருப்பவர்களைக் காப்பாற்றுகிறீர்கள்என்று பொருளா? இப்படி ஒரு தவரான கோமாளித்தனமான சட்டமாக இது இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தச்சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்தச்சட்டம் ஒரு கட்சியினருக்கு என்றில்லாது. உங்கள் கட்சியில் உள்ளவர்களுக்கும் இந்தச் சட்டம் அபாயகரமானது. காரணம் முதலமைச்சர் அவர்கள் உள்ளூர் கட்சிக்காரர்களை பழி வாங்கும் அபாயம் இதில் அடங்கியிருக்கிறது. நாங்கள் மதுவிலக்குக் கொள்கையை ஆதரிக்கிறோம், ஆனால் சட்டப் பிரிவு அபாயகரமானது. இச்சட்டப் பிரிவுகளைப் பார்க்கும்போது இட்லரின் சர்வாதிகார காலத்தில்கூட இல்லாத கொடுமையான சட்டமாக இருக்கிறது. இந்த அரசுக்கு மதுவிலக்கில் நம்பிக்கையிருந்தால் ஆளும் கட்சியாக பாண்டிச்சேரியில் இருந்தபோது இந்த அரசு அதைப் பின்பற்றியிருக்க வேண்டும். அண்ணா வழி நடப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் மெட்ராஸ்க்கு மட்டும் தான் அண்ணாவா, பாண்டிச்சேரிக்கு அண்ணா இல்லையா, இது ஒரு வேடிக்கையான அரசு இரட்டை இலை என்றால், மதராஸ்க்கு ஒரு அண்ணா, பாண்டிச்சேரிக்கு ஒரு அண்ணாவா. இரட்டை வேடம் போடுவதில் முதல்வர் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இங்கு அந்த இரட்டை வேடம் வேண்டாம் என்று கூறி எங்கள் கட்சி சார்பில் இதை ஏற்க மறுக்கிறேன்.



1979 மார்ச் 9]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த அவசரச்
சட்டத்தை மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கடுமையாக
கண்டனம் செய்வதோடு இந்தச் சட்டத்தை உடனடியாக வாபஸ்
வாங்கவேண்டும், என்று வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.
பொது வாக ஒரு சட்டம் என்றால் அது மனிதர்களுக்குத் தேவை
யானதாக இருக்க வேண்டும். ஆனால் 1937 ல் உருவாக்கப்பட்ட
இந்தச் சட்டத்தை இன்னும் முழுமையாக அமல் படுத்த முடிய
வில்லை என்று சொல்லும்போது, அது இந்த நாட்டில் வரவேற்
கப்படுகிறதா என்பதை நிச்சயமாகப் புரிந்து கொள்ள
வேண்டும்.

[பிற்பகல் 1-00]

ஒரு மனிதனுக்கு காலுக்கு ஏற்ற செருப்புத்தான் இருக்க
முடியும். செருப்புக்கேற்ற கால் இருக்க முடியாது, 40 ஆண்டு
களாக அமல் நடத்த முடியாத இந்தச்சட்டத்தை இப்போது கடு
மையாக சட்டங்கள் மூலமாக எப்படி நிறைவேற்றப்போகிறார்
கள் என்பதைத்தான் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்
கிறோம். ஆகவே இந்த சட்டத்தை வாபஸ் வாங்குவதற்கு தயங்க
வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச்
சட்டத்தினால் ஏழை எளிய மக்கள் தான் அதிகமாக பாதிக்கப்
போகிறார்கள். இன்றைக்கு இது சம்பந்தப்பட்ட வழக்குகளில்
60 ஆயிரம் பேர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி
அலைந்து கொண்டிருப்பவர்கள் யார் .என்று பார்க்கும்போது,
அன்றாடம் உழைத்து வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். அப்படிப்
பட்டவர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தி விட்டு நீங்கள் ஆட்
சியில் நீடித்து இருக்கமுடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும். இச்சட்டத்தில் இருக்கக்கூடிய அமைப்புக்களைப்
பொறுத்தவரையில் burden of proof lies on the accused
(''குற்றவாளியே நிரூபிக்க வேண்டும்'') என்று
இருக்கிறது. குற்றஞ்சாட்டப் படுபவரே குற்றம்இல்லை என்
பதை நிரூபிக்க வேண்டும் என்றிருப்பது, கிரிமினல் சட்டத்திற்கே
புறம்பானது. இதைப்பற்றி சட்ட அமைச்சரைப் பொறுத்த
வரையில் நான் சொல்லவேண்டியதில்லை. குற்றஞ்சாட்டப்படு
பவர்களில் ஒன்பது குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்
லாம். ஆனால், ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது
என்பது தான் சட்டத்தின் நீதி. பொதுவாக கிரிமினல் சட்டத்
தைப் பொறுத்தவரையில் benefit of doubt goes to the accused
(''சந்தேகத்தின் பலன் குற்றவாளிக்கே'') என்று சொல்லுவார்
கள். ஆனால் இங்கு நேர்மாறாக இருக்கிறது. அந்த உணர்வு
களுக்கு இந்தச் சட்டம் புறம்பாக இருக்கிறது. குற்றஞ்சாட்டப்
பட்டவரே, தான் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்கவேண்டும்
என்று சொல்லப்பட்டிருப்பது நீதியின் உணர்வுகளுக்கே மாறா
னது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு: ரா. கிருஷ்ணன்] [1979 மார்ச் 9

பொதுவாக இன்றைக்கு இருக்கக்கூடிய போலீஸ் அமைப்பு எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டத்தில் A statement before the Police Officer is inadmissible ''போலீஸ் அதிகாரிகளிடம் வழங்கும் வாக்கு மூலம் சட்டப்படி ஏற்றுக் கொள்வதற்கில்லை'. ஒரு போலீஸ் அதிகாரிக்கு முன்பாக கொடுக்கும் வாக்கு மூலத்தை சட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது இன்றைக்கும் இருந்து வரக்கூடிய ஒரு அமைப்பு போலீஸ் காரர்கள்பொது மக்களுக்கு எப்போதும் விரோதமாக செயல்படுவார்கள் என்கின்ற உணர்வோடு தான் இவ்விதம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு இன்றைக்கு தலைமை நீதி மன்றத்தின் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயர் சொல்லியிருக்கிறார் 'Penal laws operated often against social justice and law enforcement officers were agents of adharma' '''குற்றவியல் சட்டங்கள் சமூக நீதிக்கு முறணாக அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. சட்டத்தை அமல் படுத்தும் அதிகாரிகள் அதர்மத்தின் ஏஜெண்டுகளாக இருக்கிறார்கள்.'. அதர்மத்தின் ஏஜெண்டுகளாக இருக்கின்றார்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கிற போலீசாரிடம் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு ஒப்படைக்கின்ற பொழுது, இது எந்த அளவுக்கு சாதாரண மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையில், சட்டத்தின் முன் அனைவரும் சமம் equality before law னால், இங்கு விருப்பு வெறுப்புக்கு தகுந்தவாறு ஒரே குற்றத்திற்கு இரண்டு விதமான தண்டனைகள் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே குற்றந்திற்கு இரண்டு விதமான தண்டனைகள் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருப்பது சட்டத்தினுடைய நோக்கமாகும். obeavation mahzar குற்ற இடம் பார்வை மகசர் தயார் செய்ய தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றபடி நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாராவது போலீசுக்கு விரோதமாக பேசிவிட்டால், அவர்கள் மீது வேண்டுமென்றே ஏதாவது வழக்குகளை போடக்கூடிய நிலைமை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இப்போது 'ப்ரஸம்ப்ஷன்' (அனுமானம்) என்ற அளவில், யாரையாவது பிடிக்கவில்லை என்றால், போலீசாரே, இவர் 'மது' சாப்பிட்டிருக்கிறார் என்று அவர்களுக்கு தோன்றினால் போதும் presumption of having consumed illicit liquor ஒருவர் 'அல்ஹால் கன்டென்ட்ஸ்' உள்ள ஏதாவது மருந்துகள் சாப்பிட்டிருந்தாலும் கூட, 'இவர் 'இல்லிஸ்ட்லிக்யர், சாப்பிட்டிருக்கிறார் என்று அனுமானம் செய்ய .வாய்ப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது.



1979 மார்ச் 9] [திரு: ரா. கிருஷ்ணன்]

ஆகவே, இந்தச் சட்டத்தை முறையாக அமுல்படுத்த முடியாது. இது விருப்பு வெறுப்பிற்கு தகுந்தாற் போல்தான் அமுல் படுத்தக்கூடிய —ஒரு நிலைமை ஏற்படும். எனவே, இதை கடுமையாக எதிர்க்கிறேன்

அத்தோடு, சாதாரணமாக புரோபேஷனரி அபெண்டர்ஸ்' (முதல் குற்றவாளிக்கு) சட்டத்திலே விதிவிலக்கு இருக்கிறது அதாவது, முதல் முறையாக ஒருவர் ஏதோ தெரியாத்தனமாக தவறு செய்து விட்டால், அவர்களுக்கு விதிவிலக்கு இருக்கிறது மன்னிப்புக் கொடுக்க வேண்டும் என்று சட்டத்திலே வதி இருக்கிறது. ஆனால், இங்கே அந்த விதி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் எப்படி சரியாக இருக்க முடியும்?

<u>திரு. பி.எச். பாண்டியன்</u> : தலைவர் அவர்களே, புரோபேஷன் ஆப் அப்பென்டர்ஸ் ஆக்ட் பற்றி நண்பர் கிருஷ்ணன் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். பிகமி, ரேப் போன்றவைகளுக்கு கிடையாது. இந்த அப்பென்சை ஒரு முறைதான் செய்வார்கள். அதைப்போலத் தான் கொலை' செய்வதும். ஆனால், 'தெப்ட்' என்றால், திருந்தி விடுவார்கள் என்று அதற்கு மன்னிப்பு உண்டு. ஆனால், கொலைக்கு அப்படி அல்ல. புரொகிபிஷனுக்கு இது பொருந்தாது.

<u>திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா</u> : தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்திலேகூட 24 வயதிற்கு கீழே உள்ளவர்கள், இதைப்போல ஏதாவது குற்றம் செய்தால், இந்த புரோபேஷன் ஆப் அப்பென்டர்ஸ் ஆக்ட் சட்டத்திலே அவர்களுக்கு மன்னிப்பு கொடுக்க ஒரு புரோவிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 24 வயதிற்கு மேலே என்று சொன்னால்தான் . .

<u>திரு. பி.எச். பாண்டியன்</u> : தலைவர் அவர்களே, நான் சொல்வது ப்ரோபேஷன் ஆப் அப்பென்டர்ஸ் ஆக்ட், 'பிகமி' 'ரேப்' 'கொலை' ஒருமுறை செய்தாலும், இதற்குப் பொருந்தாது. புரோகிபிஷனுக்கும் பொருந்தாது.

<u>திரு. துரை முருகன்</u> : தலைவர் அவர்களே, ஒருவன் 'ரேப்' ஒரு முறை செய்வான். குடிப்பது அப்படி அல்ல.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

52. B(2) where the offender referred to in sub-section (1) is under twenty four years of age, the Court may make a supervision order directing that such offender shall be under the supervision

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 மார்ச் 9

of such probation officer appointed under the probation of offender Act. 1953 (Central Act 20 of 1958) as may be named in the order during the period specified therein and imposing such other conditions for securing such supervision as may be specified in order. .. வயதிற்கு உட்பட்டவர்களுக்கு இந்த புரோபேஷன் ஆப் அப்பெண்டர்ஸ் ஆக்ட் அப்ளை ஆகாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகி விட்டது. மூன்று நிமிடங்களுக்குள் முடியுங்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். இதிலே குறுக்கீடு அதிகமாக இருக்கிறது. ஆகவே, நேரத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. நான் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள். எல்லோரும் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்மென்ற முறையிலேதான் சொன்னேன். கிருஷ்ணன் அவர்களுடைய பேச்சை நிறுத்த வேண்டுமென்ற எண்ணமில்லை. 3 நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : இன்றைக்கு இந்த தலைமைச் செயலகத்தில் முக்கியப் பணி என்னவென்றால், எனக்கு வந்திருக்கிற தகவல்படி சொல்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு வரக்கூடிய கோப்புகளில் கிட்டத்தட்ட 12,400 கோப்புகளில் 9,000-க்கு மேல் மது பர்மிட்டுக்கு அனுமதி கோரி வருவதாகச் சொல்கிறார்கள். ஆக, இந்த அளவிற்கு மது பர்மிட் ஏராளமாக வழங்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்திலே இன்னொரு பக்கத்தில் சட்டத்தை கடுமையாக்குகிறோம் என்று சொன்னால், என்னால் இதைப்பற்றி புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, இதைச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அத்தோடு, மது மரத் தொழிலாளிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை நம்பி லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பிழைக்கிறார்கள் என்று. ஆனால், பொதுவாக அவர்கள் மரமேறி பதனீர் இறக்குவதிலே ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் அதிகமாக கழிந்து விட்டால், அந்தப் பதனீர் சளிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அதேபோல் கொஞ்சம் சுண்ணாம்பு குறைவாக இருந்தாலும் சளிப்பு வந்துவிடுகிறது. அப்படி சளிப்பு வந்துவிட்டால், அது மதுவாகக் கருதப்படும். ஆகவே இந்தச்



1979 மார்ச் 9] [திரு. ரா. கிருஷ்ணன்]

சட்டத்தினால் சாதாரண மது மரமேறும் தொழிலாளர்கள் தண்டிக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த பதனீரைச் சாப்பிட்டுவிட்டு, ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் கழிந்த பிறகு அவர்கள் வாயை ஊதச் சொன்னால், நிச்சயமாக மது வாடைதான் வரும். இதையெல்லாம் எப்படி கண்டுபிடிக்கப் போகிறீர்கள்? ஆனால, உண்மையிலேயே அவர்கள் மது அருந்தவில்லை. ஆனால் இரண்டு மணி நேரம் கழித்து ஊதச் சொன்னால் அவர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டிய நிலைக்கு வந்துவிடுகிறார்கள்.

[பிற்பகல் 1–10]

ஆக மதுமரத் தொழிலாளர்கள் வாழ்க்கை பாழாகப்போகிறது. அவர்கள் மிகச் சாதாரண மக்கள். இச்சட்டத்தை அமல் படுத்தப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு ஏராளமான பணம் விரயம் செய்யப்படுகிறது. மூன்று விதமான போலீஸ் துறையை உருவாக்கப் போகிறோம் என்றும், மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக தனிப் போலீஸ் பிரிவை அமைக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆக்க பூர்வமான திட்டங்களுக்குப் பணத்தைச் செலவழிக்காமல் இப்படி பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண மக்களுக்குத் தேவையில்லாத இந்தச் சட்டத்தை, அமல்படுத்த முடியாத சட்டத்தை அமல்படுத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இவ்வாறு ஏராளமான அரசாங்கப் பணத்தை விரயம் செய்வது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன.

சட்டம் இருந்தாலும் கூட பினாமி நிலங்களை எடுக்க முடியாத அளவில் சட்டம் காகிதத்தில் இருக்கிறது. பொதுவாகச் சொல்வார்கள்— சர்க்கரை என்று காகிதத்தில் எழுதி வைத்துக் கொண்டு நக்கினால் நிச்சயமாக இனிக்காது. பினாமி நிலங்களை எடுக்கப் போகிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை அமல்படுத்தப் போகிறோம், தொழிலாளர் நலனுக்காக இந்த அரசு இருக்கிறது. என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நடைமுறையில் டி.வி.எஸ். குடும்பங்களுக்குத் துணை போகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்றிபவடிவைப் ப் பேசுங்கள். பிரச்சினையை விட்டுவிட்டு எங்கோ பேகிறீர்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : நாட்டிலே பல்வேறு பிரச்சினை இருக்கிறபோது திசை திருப்புகிற பிரச்சினையாக இது இருக்கிறது. இப்படி திசை திருப்பும் சட்டத்தை நிச்சயமாக வன்மையாகக் கண்டிக்கிறோம். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதைத் திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.

[1979 மார்ச் 9

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்றத்தன் முன்னால் விவாதத்தில் இருக்கிற, ஏற்கனவே கவர்னர் அவர்களால் அவசரப் பிரகடனம் மூலம் சட்டமாக்கப் பட்டு இப்போது ஜனநாயக முறைப்படி சட்டமாக்கும் விவாதத் தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற அனு மதித்ததற்காக நன்றி.

மதுவைப் பற்றிப் பலவிதமான கருத்துக்களை மாமன்றத் தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். எங்களது கட்சியைப் பொறுத்தமட்டில் இது ஒரு நல்ல கொள்கை, வர வேற்கத்தக்க கொள்கை என்பதை முதலில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கொள்கையளவில் இது மிகச் சிறந் தது என்று பாராட்டலாம். கடந்த காலத்தில் இருந்த மூதா தையர்கள் சொல்லுகிறபோது இதைப் பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்று கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த காலத்தி லேயே மது அருந்தும் பழக்கம் இருந்திருக்கிறது. தெய்வ நம் பிக்கையுடையவர்கள் யாகங்களைச் செய்கிறபோது மதுவை பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. ஓரளவு விமிடெட் கன்சம்ஷன் இருந்திருக்கிறது. கடந்த கால சமுதாய அமைப்பில் தவறு செய்கிறவர்களுக்கு மக்கள் மன்றத்தில் அவர்களைல் நிறுத்தி கொலை போன்ற கடுமையான குற்றங்கள் செய்தவர்களுக்கு பஞ்சாயத்து மூலம் கடுமையான தண்டனை வழங்கப்பட் டிருக்கிறது. நீதி வழங்கப்பட்டிருக்கிறது. மது அருந்துவது ஓரளவு அனுமதிக்கப்பட்டிருந்தாலும் தவறு செய்கிறவர் களுக்கு என்னென்ன தண்டனை என்று வரம்பு அந்தக் காலத் தில் இருந்தது. ஆகவே, பஞ்சமா பாதகங்களில் ஒன்றான இந் தக் குடிப்பழக்கத்தை நிறுத்துவது சிறந்தது, பாராட்டத்தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ''இஸ் இட் பிராக்டிகலி பாசிபிள்' என்ற கேள்வியை எழுப்பி நடைமுறைக்கு உகந்தது அல்ல என்ற நிலையை உணர்ந்து மாமன்ற உறுப்பினர்கள் மிக வேதனையோடு இதை எதிர்த்தார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தைப் பார்த்தார்களோ என்னவோ தெரிய வில்லை. இங்குள்ள தலைவர்களின் படங்களைப் பார்த்திருந் தால் அவர்களுடைய பேச்சின் வேகத்தைக் குறைத்திருப்பார் கள் என்று கருதுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் ''ஏழை யின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற மகோன்னத மான தத்துவத்தை பூர்த்தி செய்ய வந்த ஞானியாக வாழ்ந் தார்கள். கடைநிலையில் உள்ள மக்களின் வாழ்க்கை கடைத் தேற வேண்டுமென்றால் மதுவிலக்கு அவசியம் என்ற கருத் தை அவர்கள் ஆதரித்தார்கள் என்பதை நினைவுகூர்ந்து இருந் தால் மிகக் கடுமையான வேகத்தைக் காட்டாமல் குறைத்திருப் பார்கள் என்று கருதுகிறேன்



1979 மார்ச் 9] [திரு. கே. கந்தசாமி]

அந்த அளவிற்கு அவர்கள் கட்சி ரீதியாக எதிர்க்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் கருத்து எதுவாக இருந்தாலும், நடைமுறையிலே சிக்கலாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள், வரவேற்கிறோம். ஆனால் இதிலே இருக்கிற சிக்கலையும் அத் தனை கட்சிகளும் எடுத்துத் தெரிவித்து இருக்கின்றன. ஏன் என்றால் எல்லோருமே உத்தமர்களாக, காந்தியாக, அண்ணா வாக, தேவர் திருமகனாக இருக்கிறார்கள் என்று நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. எல்லாத் தலைவர்களும் ஒப்புக்கொள் கிறார்கள், சமுதாயத்திலே இருக்கிற தவறுகளைக் குறைப் பதற்கும், சமுதாயத்திலே ஒரு பொருளாதார வளர்ச்சியை உரு வாக்குவதற்கும் இது அடிப்படையாக அமையும் என்ற நல்ல தத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் கூட நடைமுறை யிலே கீழ் மட்டத்திலே உள்ளவர்கள், குடிப்பழக்கத்திலே உள்ள வர்கள், மதுவகைகளை உற்பத்தி செய்கிறவர்கள் வறுமையின் காரணமாகவோ அல்லது பழக்க தோஷத்தின் காரணமாகவோ அதைச் செய்கிறார்கள். ஆகவே எந்த மக்களின் நன்மைக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதோ அந்த மக்கள், அதே மக்கள் கூட இந்தச் சட்டத்தை வரவேற்கவில்லை என்பது நிதர்சனமான உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்குப் பதிலாக இந்தச் சட்டத்திலே அதிகமான கடுமையான தண்டனை யைக் கொடுக்கக்கூடிய பிரிவுகள் இருக்கின்றன. முன்னாலே 50 ரூபாய், 100 ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்றிருந்த நிலை இப்போது 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்ற முறையிலே மாற்றப்படுகிறது என்றால் அவர் களின் குடும்பங்கள் என்ன ஆகும் என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தந்தை ஸ்தானத்திலே இருப்பவன், தன்னுடைய குழந்தை படிக்க வேண்டுமென்பதற்காக பிரம்பை எடுத்து அடிப்பானே தவிர உலக்கையை எடுத்து அடிக்க மாட்டான். உலக்கையை எடுத்து ஒரு போடு போட் டால் மண்டை உடைந்துவிடும், அதனால்...........

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதைத்தான் எங்கள் கட்சியின் சார்பாகப் பேசிய திரு. ரகுமான் கான் அவர்களும் சொன்னார்கள். உலக்கையால் அடிக்க வேண்டாமென்ற கருத் தைத்தான் நாங்கள் சொல்கிறோம். நாங்கள் மதுவிலக்கிற்கு எதிரிகள் என்ற கருத்தையும் நாங்கள் சொல்லவில்லை. திரு. கந்தசாமி அவர்கள் பேசும்போது, திரு. ரகுமான்கான் அவர்கள் அண்ணா படத்தை பார்த்துக் கொண்டே பேசினார்கள் என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் படத்தை இங்கே வைத் ததே நாங்கள்தான்.

**திரு. கே. கந்தசாமி :** கலைஞர் அவர்களுடைய உணர்வை நான் பாராட்டுகிறேன். அண்ணா அவர்களுடைய படத்தை வைத்தது மாத்திரம் அல்ல, அவர்களுடைய பல கொள்கைகளை நிறைவேற்றினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அந்தக் கொள்கையை அவர்கள் எதிர்க்கவில்லை, ஆதரிக்கிறார்கள் என்பதையும் நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பெரியார் பற்றி நான் சொல்லவில்லை, அவர்கள் கள்ளையும் குடிக்கச் சொன்னார்கள். பெரியார் நூற்றாண்டுவிழா கொண்டாடப்படுகிற இந்த நேரத்திலே கள் குடித்தால் என்ன என்று கேட்பது மதுவிலக்குக் கொள்கைக்கு ஒப்புடையது ஆகாது என்ற காரணத்தால் நான் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன கருத்தையே இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நீதிபதியாக இருந்தவர் மட்டுமல்ல, நடைமுறையிலே சிறந்த வழக்கறிஞராக இருந்தவர், மக்களின் கஷ்டங்களை நன்கு உணர்ந்தவர். அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு இம்பிளிகேஷன்ஸ் ஆப் தி லாவைப் பற்றி எடுத்துச் சொல்லி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 4 (1) பி என்பது, மேன்யுபேக்சரிங், அதாவது உற்பத்தி செய்கிறவர்களைப் பொறுத்து வைத்திருக்கிறார்கள், அது இப்போது நான்-பெய்லபிள் அபன்ஸாக ஆகிறது, அந்த வாடை அடித்தாலே அவரும் அபன்ஸின் கீழே வந்துவிடுகிறார். இங்கே தம்பி, பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னது போல் பதநீரைக் குடித்தால் கூட, நீராகாரத்தைச் சாப்பிட்டால் கூட, சாராய கேஸ் கிடைக்காத போலீஸ்காரர் அவனை ஊதச் சொல்லி பிடித்துச் சென்றுவிடலாம். பிறகு டாக்டர் சர்டிபிகேட் வாங்கி இவன் டிபன்ஸ் போட வேண்டும்.

It is presumed that all citizen are innocent, unless otherwise they are proved to be guilty in a Court of Law. Unfortunately the position now is quite contrarily changed may be with good intention to reform the society.

சமுதாயத்திலே உள்ளவர்கள் அத்தனை பேரும் நிரபராதிகள் தான், குற்றவாளிகள் என்று அவர்கள் நீதிமன்றத்திலே நிரூபிக்கப்பட்டாலொழிய இதுதான் சட்டம். ஒருவர் குடித்து இருக்கிறார் என்று போலீஸ்காரர் சொன்னால் குடிக்கவில்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அந்தக் கைதியினுடையதாக இருக்கிறது, இது ரொம்பப் பாதகமான சட்டம்.

The onus of proof lies on the accused is qulte contrary to law and legal practice. Therefore, I request the Hon. Minister for Law to reconsider this and put it in order according to the procedure in vogue.





[பிற்பகல் 1-20.]

ஆகவே, அந்த நிலையை மாற்ற வேண்டும். எல்லாமே
நான்-பெயிலபிலாக இருக்கிறது. இது ரொம்ப சீரியசான
விஷயம். சாதாரண ஆட்கள் பெயிலில் வர முடியாது. எனவே,
சட்டம் மட்டும் இருந்து விட்டால் போதாது. இலஞ்சம்
வாங்கக் கூடாது, திருட்டு, களவு, கொலை செய்யக் கூடாது,
கலப்படம் செய்யக்கூடாது என்று எத்தனையோ சட்டங்கள்
எல்லாம் இருக்கின்றன. அத்தனையும் இன்கிரீஸ் அண்ட் மல்டி
பிளை ஆகிக் கொண்டுதான் இருக்கிறது. லார்ட் ஜீசஸ் சொன்
னதுமாதிரி, மனித உற்பத்தியின் செல்வத்தைப் பெருக்கட்டும்
என்று ஏசு சொன்னது மாதிரி இன்றைக்கு இருக்கின்ற சட்டம்
மல்டிபிளை ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, சட்டத்தால்
மட்டும் திருத்திவிட முடியாது. இதற்கு மக்களும் ஒத்துழைக்க
வேண்டும். சர்வ கட்சியினரும் மனத்தை மாற்ற வேண்டும்.
ஆகவேதான் நான் இதைச் சொன்னேன். இதைப் பற்றிப்
போதிக்கின்ற முறையை அதிகப்படுத்த வேண்டும்.
எத்தனையோ விழாக்களிலே '' ஷோ '' கொண்டு வருகிறார்கள்.
அசிங்கமாக இருக்கிறது. இந்த சினிமாக்களிலே '' ஹாப்
நேக்ட் '', '' குவார்ட்டர் நேக்கட் '' ஆக வருகிறது, ரொம்ப
வேதனையாக இருக்கிறது. சென்சார் இவற்றை எப்படித்தான்
அனுமதிக்கிறார்களோ தெரியவில்லை. டாக்டர் மொரார்ஜி
அவர்கள் காந்தியடிகளின் சொந்தப் பிள்ளை மாதிரி இருக்கிறார்
கள். பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் கெடுவதற்கு இது
தான் காரணமாக இருக்கிறது. இராஜாஜி போன்றவர்கள்
இருந்தால் நிச்சயமாகச் சொல்லியிருப்பார்கள், இது தப்பு,
இப்படிப்பட்ட சினிமாவே வேண்டாமென்று சொல்லியிருப்பார்
கள்.

கள்ளச் சாராயம் விற்பது, மதுக் கஷாயம் காய்ச்சுவது
போன்ற தீமைகளைப்பற்றி மக்களிடத்தில் சொல்ல வேண்டும்.
இதனால் உடலுக்கு எவ்வளவோ தீங்கு ஏற்படுகிறது. வேலம்
பட்டை, அழுகிய பொருட்கள், இன்னும் சில இடங்களில் யூரியா
வைக் கூடப் போட்டுக் காய்ச்சுகிறார்கள். அதை நாம்
தெரிந்தோ தெரியாமலோ அனுமதிக்கிறோம். அதே நிலையில்
மனித சமூகத்தைக் காப்பாற்றவும் முயற்சிக்கிறோம். இது
தீமை என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இதற்காகப்
படங்களைப் போடுங்கள். அதைப் பள்ளிக்கூடங்களிலே காட்
டுங்கள். பொது விழாக்களிலே அவைகளைக் காட்டுங்கள்.
இவ்வாறு மதுவின் தீமையைப் பற்றிப் பிரச்சாரம் செய்யுங்கள்.
அதன் மூலம் மக்கள் மனத்தில் மாற்றம் ஏற்படும் என்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

போன வாரம் மாண்புமிகு முதல்வரவர்கள் எங்கள் மாவட்
டத்திற்கு வந்திருந்தார்கள். தம்பி முத்தையாவின் தொகுதியான
சேடப்பட்டி தொகுதியில் ஒரு கிராமத்தில் 91 பேர் மொடா

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 9

மின் கட்டணம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது என்றாலும், மின் கட்டணத்தை செலுத்த விரும்பும் விவசாயி களுக்கு ஒரே நேரத்தில் 2, 3 ஆண்டுகால நிலுவைத் தொகையை கட்டுவது கடினமாக இருக்கும்; ஆகவே அது எளிதாக்கப்பட வேண்டும் என்று நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்ட காரணத்தால் அரசு அத்தகைய கருத்துக்களுக்கு நன்மதிப்பளித்து கீழ்க்கண்ட சலுகை களை அறிவிக்க முடிவெடுத்துள்ளது.

நிலுவைத் தொகைகளைத் தரவில்லை என்ற காரணத்துக் காக மின் துண்டிப்பு பற்றிய அறிவிப்பு பெற்றவர்கள், அறிவிப்பு பெற்றவுடன் கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையை மட்டும் உடனடியாகச் செலுத்தினால் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது. அவர்கள் நிலுவைத் தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டியதில்லை. மேலும் மின் துண்டிப்பு அறிவிப்பு பெறாதவர்களும் கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையை உடனடியாகச் செலுத்தினால், அவர்களும் நிலு வைத் தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டியதில்லை.

மேற்கூறியவர்கள் அடுத்தமாதம், அதாவது ஏப்ரல் முதல் அந்தந்த மாத நடப்புத் தொகையையும் பழைய பாக்கியில் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாதத் தொகையையும் செலுத்தி வரவேண்டும். (1+1)

இவ்வாறு செலுத்த முன்வருபவர்களுக்கு 31—3—1979 வரையிலான நிலுவைக் கட்டணங்களுக்கு வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

சென்ற சில நாட்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, இன்னும் மின் இணைப்பு மறுபடியும் பெறாதவர்கள், உடனடி யாக கடைசியாகப் பெற்ற மாதாந்திர பில் தொகையையும் மறு இணைப்புக்கான கட்டணத்தையும் செலுத்தினால், மின் இணைப்பு தரப்படும். அவர்களும் ஏப்ரல் மாத முதல் ஒரு மாத நடப்புத் தொகையையும், ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாத நிலுவையையும் செலுத்தி வரவேண்டும். இவர்களுக்கும் 31—3—1979 வரையிலான நிலுவைக் கட்டண வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பாக்கிகளை முற்றிலும் செலுத்தி மீண்டும் மின் இணைப்பு பெற்றவர்களுக்கும், நிலுவைக் கட்டணங்களுக்கான வட்டி முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.

இந்தச் சலுகைகளை பயன்படுத்திக் கொண்டு, கட்டணங் களைச் செலுத்தாதவர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படுவ துடன், மின் இணைப்பு மீண்டும் பெறுவதற்கு நிலுவைத் தொகை கள், நிலுவைக்கான முழுவட்டி, மறு இணைப்புக் கட்டணம் ஆகியவற்றை ஒட்டு மொத்தமாகக் கட்டிய பிறகே மின் இணைப்பு தரப்படும்.



1979 மார்ச் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

முன்பு தீவிர ஆலோசனைக்குப் பிறகு முடிவு எடுத்த பிறகும், எதிர்கட்சித் தலைவர்களும், விவசாயிகள் சங்கத் தலைவர்களும் விடுத்த வேண்டுகோளின்படி மீண்டும் ஆராய்ந்து சலுகை தந்து, அரசு இப்போது எடுத்துள்ள முடிவுகளை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான மின்வழங்கு திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வும் தட்டின்றி மின்வழங்க ஏற்ற வசதிகளை உருவாக்கவும் மின்வாரியத்திற்கு ஒத்துழைப்பு தந்து இதுவரை மின் கட்டணம் செலுத்தாத விவசாயிகள் அனைவரும் மின்கட்டணங்களை விரைந்து செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 1—30]

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்பொழுது அறிவித்தது, நேற்று நாம் சர்வ கட்சித் தலைவர்களும், விவசாய சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பேசும்போது நாம் எல்லோரும் சேர்ந்து சொன்னதற்கு மாறாக இருக்கிறது. இது தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் மத்தி யிலே இன்றைக்கு இருக்கிற பதட்ட நிலையை போக்குவதற்கு பதிலாக அதிகமான பதட்ட நிலையை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். காரணம் நேற்று சொல்லும்போது உயர் மட்டக் குழு அது தனது அறிக்கையை கொடுக்கும் வரை பழைய நிலை நீடிக்க வேண்டும் என்று சர்வகட்சி தலைவர்களும் சொன்னார்கள் அதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை இருக் கிறது. இது நேற்று நாம் பேசியதற்கும், எல்லா அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொன்னதற்கும் மாறாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

114. சென்னையிலுள்ள திருவாரூர் (பியாட்டிடியூட்ஸ்) சமூக நல நிலையத்திற்குச் சொந்தமான TMZ-4478, MSX-5669, TMX-6713, TMY-2027, TMC-7323 ஆகிய வண்டிகளுக்கான வரி விதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்கு வரத்து-1) 29—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற 3203 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

115. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1975–76 ஆம் ஆண்டிற்கான அய்ந்தொகைக் குறிப்பும் ஆதாய-இழப்புக் கணக்கும் [தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவன சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

## இணைப்பு.

[32 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 312க்கான விடையைக் காண்க.]

விடை.

விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினரால் பல்வேறு பயிர்களுக்கு வழங்கப்படும் மானியங்களின் விவரங்களும், யார் யாரால் மான்யங்கள் வழங்கப்படுகின்றன என்னும் விபரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இந்த விவரங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் அத்திட்டம் மத்திய அரசின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.



| வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்களின் விவரங்கள் (பயிர் வாரியாக). (1) | செயல்படுத்தப்படும் இடங்கள். (2) | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள். (யாரால் வழங்கப்படுகிறது.) (3) |
|---|---|---|
| நெல்— | | |
| ஓட்டுமொத்த மருந்து தெளிப்புத் திட்டம். | | |
| 1. நெற் பயிரைத்தாக்கும் தண்டு துளைப்பான் பூச்சியினைக் கட்டுப்படுத்த ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு மத்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென ஏக்கர் ஒன்றுக்கு மருந்து தெளிப்பதற்கான செலவினை ஈடுகட்டுவதற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 7·50 மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு இத்திட்டம் 75.000 ஏக்கரில் செயல்படுத்தப்படும். | மாநிலம் முழுவதும். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள். |
| 2. புகையான் ஒழிப்புத் திட்டம். நெற்பயிரைத் தாக்கும் புகையான் பூச்சியை ஒழிக்கும் திட்டம் மத்திய அரசின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இதற்குத் தேவைப் படும் பூச்சி மருந்துகளுக்கு ஆகும் செலவில் 50 சதம் மத்திய அரசும் 16 2/3 சதம் மாநில அரசும். மிகுதித் தொகையான 33 1/3 சதம் விவசாயிகளிடம் இருந்தும் பெறப்படும். | மாநிலம் முழுவதும். | மாவட்ட வோளண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள். |

| வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்களின் விவரங்கள் (பயிர் வாரியாக). | செயல்படுத்தப்படும் இடங்கள். | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள் (யாரால் வழங்கப்படுகிறது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மேலும், மருந்து தெளிப்பதற்கான செலவினை ஈடுகட்ட ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 12·50 வீதம் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. | | |
| 3. எலி ஒழிப்புத் திட்டம். | | |
| தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிரை எலிகள் அதிக அளவில் சேதப்படுத்தி வருகின்றன. இதனை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் (zinc phosphide, Aluninium phosphide 50 சத மானியத்தில் வழங்கப்படுகிறது. | தஞ்சை மாவட்டம் மட்டும். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள். |
| 2. பயறு வகைகள். சான்றிதழ் பெற்ற வகைகள் விநியோகம். | | |
| பயறு வகைகள் உற்பத்தியினைப் பெருக்குவதற்கென சான்றிதழ் பெற்ற விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1 மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 300 டன் விதைகள் மானிய விலையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. | நீலகிரி மாவட்டம் தவிர ஏனைய எல்லா மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள். |



| | | |
|---|---|---|
| 3. இலை வழி மணிச்சத்து ஊட்டுதல். (செயல் விளக்கம்). | | |
| இலை வழி மணிச்சத்து ஊட்டுதலை செயல்விளக்கிக் காட்டுவதற்கென இத்திட்டம் செயல்படுகிறது. 1,450 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படும். ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 34·50 பெறுமானமுள்ள 15 கிலோ எடை அம்மோனியம் பாஸ்பேட் இலவசமாக வழங்கப்படும். | நீலகிரி, சேலம், தர்மபுரி, ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| 4. இலை வழி மணிச்சத்து ஊட்டுதல் (உரம் தெளிப்பதற்காக மானியம்). | | |
| இலைவழி மணிச்சத்து ஊட்டுவதற்கென்டை அம்மோனியம் பாஸ்பேட் தெளிப்பதற்காக ஆகும் செலவினை ஈடுகட்ட ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 10 மான்யம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 10,000 ஹெக்டேரில் இவ்வாண்டு செயல்படுத்தப்படும். | நீலகிரி, சேலம், தர்மபுரி, ராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| 5. காய் துளைப்பு புழுவினைக் கட்டுப்படுத்த ஒட்டுமொத்த மருந்து தூவுதல். | | |
| பயறு வகைகளைத் தாக்கும் காய் துளைப்பு புழுவினைக் கட்டுப்படுத்தஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்படும். இதற்கென ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 7·50 மானியம் வழங்கப்படும். இத்திட்டம் இவ்வாண்டு 40,000 ஹெக்டேரில் செயல் படுத்தப்படும். | நீலகிரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்கள். |

| வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்களின் விவரங்கள் (பயிர் வாரியாக). | செயல்படுத்தப்படும் இடங்கள். | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள் (யாரால் வழங்கப்படுகிறது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. துவரைச் செடியில் காய் துளைப்பு புழுவனைக் கட்டுப்படுத்த மருந்துத் தெளிப்புத் திட்டம். | | |
| துவரைச் செடியினைத் தாக்கும் காய் துளைப்புப் புழுவினை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் தெளிப்பதற்காக ஆகும் செலவினை ஈடு கட்ட ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 12·50 மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் இவ்வாண்டு 2,000 ஹெக்டேரில் செயல்படும். | நீலகிரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| 7. மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்குதல். | | |
| பயறு வகைப் பயிர்களைத் தாக்கும் பூச்சி பூசணங்களைக் கட்டுப்படுத்த பூச்சி பூசன மருந்துகள் 25 சத மானிய விலையில் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு ரூ. 15 மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் இவ்வாண்டு 40,000 ஹெக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். | நீலகிரி மாவட்டம்நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர் துணை வேளாண்மை அலுவலர். |



| | | |
|---|---|---|
| மானிய விலையில் பயிர் பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல். | | |
| பயறு வகைப் பயிர்களுக்கென பயிர் பாதுகாப்பு கருவிகள் 50 சத மானிய விலையில் அதிகபட்சம் ரூ. 500 -க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 80 கருவிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். | நீலகிரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் லர்கள். |
| சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்தி. | | |
| விவசாயிகள் சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதற்காக உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு குவிண்டால் விதைக்கும் மானியமாக ரூ. 150 வழங்கப்படுகிறது இவ்வாண்டு இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் 14,000 குவிண்டாலுக்கு மானியம் வழங்கப்படும். | நீலகிரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| எண்ணெய் வித்துக்கள் ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு. | | |
| நிலக்கடலையில் தோன்றும் சிவப்புக் கம்பளிப் பூச்சியினை ஒழிக்க ஒட்டுமொத்த மருந்து தெளிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மருந்து தெளிப்பதற்கான செலவினை ஈடுகட்ட ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 75 0 மானியம் வழங்கப்படுகிறது. 12,000 ஹெக்டேரில் இத்திட்டம் இவ்வாண்டு செயல்படும். | எல்லா மாவட்டங்களிலும். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவர்கள். |

| வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்களின் விவரங்கள் [பயிர் வாரியாக]. | செயல்படுத்தப்படும் இடங்கள். | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள் [யாரால் வழங்கப்படுகிறது]. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சூர்யகாந்தி விதைகள் உற்பத்தி. நல்ல தரமான சூரியகாந்தி விதைகள் உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் சுத்திகரிக்கவும், சுத்திகரிக்க அதனை எடுத்துச் செல்லும் செலவினை ஈடுகட்டவும் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 300 மானியம் வழங்கப்படுகிறது | எல்லா மாவட்டங்களிலும். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் (எண்ணெய் வித்துத் திட்டம் [துணை வேளாண்மை அலுவலர்கள் எண்ணெய் வித்துத் திட்டம்.] |
| பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்குதல் தீவிர எண்ணெய்வித்து அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பயிர் பாதுகாப்பு கருவிகள் 25 சத மானிய விலையில் அதிக பட்சம் ரூ. 200க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது. | தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள் மட்டும். | மாவட்ட வோண்மை அலுவலர்கள் (எண்ணெய்வித்து திட்டம்) துணை வேளாண்மை அலுவலர்கள் (எண்ணெய் வித்து திட்டம்.) |
| பருத்தி பயிர் பாதுகாப்புக்கருவிகள் வழங்குதல். (அ) தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பயிர்பாதுகாப்புக் கருவிகள் 25 சத மானிய விலையில் அதிகபட்சம் ரூ. 200க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது. சுமார் 500 கருவிகள் இவ்வாண்டு வழங்கப்பட இருக்கின்றன. | கோவை, திருநெல்வேலி மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகள். | துணை வேளாண்மை இயக்குநர்கள் (தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்). துணை வேளாண்மை அலுவலர்கள் (தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்). |
| (ஆ) ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் பயிர் பாதுகாப்புக் கருவிகள் மேற்குறிப்பிட்டவாறு வழங்கப்படுகிறது. சுமார் 150 கருவிகள் இவ்வாண்டு வழங்கப்பட இருக்கின்றன. | சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் சில பகுதிகள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் (பருத்தி அபிவிருத்தித்திட்டம்). துணை வேளாண்மை அலுவலர்கள் (பருத்தி அபிவிருத்தித் திட்டம்.) |
| மலைப்பகுதித் திட்டங்கள்: நீலகிரி மாவட்ட மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டம். | | |
| காப்பி மற்றும் தேயிலை பயிரிடும் சிறு சிறு விவசாயிகளுக்கு உதவியளித்தல். இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புக்கென சிறு விவசாயிகளுக்கு 75 சத மானியம் வழங்கப்படுகிறது. | நீலகிரி மாவட்டம் மட்டும். | உதவி. செயற்பொறியாளர்கள் (மண்வளப் பாதுகாப்புத் திட்டம்). |
| தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளுக்கு தொழில் நுட்ப உதவி. இத்திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளின் தோட்டங்களுக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டு அதன் செலவில் 15 சதம் மானியம் வழங்கப்படுகிறது. | நீலகிரி மாவட்டம் மட்டும். | திட்ட அலுவலர், நீலகிரி மாவட்ட வேளாண்மை அலுவலர். துணை வேளாண்மை அலுவலர்கள். |

| வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் மானியங்களின் விவரங்கள் [பயிர் வாரியாக]. | செயல்படுத்தப்படும் இடங்கள். | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள் [யாரால் வழங்கப்படுகிறது] |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தோடர்கள் நல்வாழ்வுத் திட்டம். நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோடர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் பயிர் செய்வதற்கு உருளைக்கிழங்கு பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,750-ம் காய்கறி பயிரிடுவதற்கு ரூ. 1,250-ம் தானிய வகைகள் பயிர் செய்வதற்கு ரூ. 500ம் தீவனப் பயிர்கள் பயிர் செய்வதற்கு ரூ. 75-ம் இடுபொருட்களாக இலவசமாக வழங்கப்படுகிறது. இதன்மூலம் 250 தோடர் குடும்பம் நல்வாழ்வு பெறுவர். மேலும் இலவசமாக மண்வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். | நீலகிரி மாவட்டம் மட்டும் | திட்ட அலுவலர், நீலகிரி மாவட்ட வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் |
| கொல்லி மற்றும் கல்ராயன் மலையில் பழ அபிவிருத்தி. கொல்லி மற்றும் கல்ராயன் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு இடுபொருள்கள் இலவசமாகவும், மானியமாகவும் அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. உரம் 25 சத மானிய விலையிலும், விதைகள், பழக் கன்றுகள் ஆகியவை இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. | கொல்லி மற்றும் கல்ராயன் மலை. | உதவி தோட்ட இயல் நிபுணர், ஆத்தூர், சேலம் மாவட்டம் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| நீலகிரிமலை தவிர மற்ற மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டம். மலைப்பகுதிகளில் வசிக்கும் (நீலகிரிமலை தவிர) மலைவாழ் மக்களின் நலனுக்காக, விதைகள், உரம் பூச்சி மருந்துகள் ஆகியவை 50 சதமானிய விலையில் வழங்கப்படுகின்றன. | கோவை, சேலம், திருச்சி மதுரை, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள். சத்தியமங்கலம், திண்டுக்கல், சேலம். உதவித் தோட்ட இயல்நிபுணர், திருப்பத்தூர். |
| மலை ஜாதி மக்களுக்கென தனித் திட்டம். இத்திட்டத்தின்கீழ் மலைஜாதி மக்களுக்கென விதைகள், கன்றுகள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. உரம் மட்டும் 25 சத மானிய விலையில் வழங்கப்படுகிறது; மேலும் மண்வளப் பாதுகாப்பு பணிகள் இலவசமாக செய்து தரப்படுகின்றன. | தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகள். | உதவி தோட்ட இயல் நிபுணர். துணை வேளாண்மை அலுவலர்கள். |
| வறட்சி சார்புப் பகுதித் திட்டங்கள். இத்திட்டத்தின்கீழ்—<br>(1) மண்வளப் பாதுகாப்புப் பணிகள்.<br>(2) இடுபொருட்கள் வழங்குதல்.<br>(3) பயிர் பாதுகாப்புக் கருவிகளும் மற்ற கருவிகளும் வழங்குதல்.<br>(4) உழவு வேலைகள் செய்தல்.<br>(5) நிலச் சமன்படுத்துதல்.<br>(6) பழத் தோட்டங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | தர்மபுரி, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். | மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், உதவி செயல் பொறியாளர்கள். துணை வேளாண்மை அலுவலர்கள். |

| வேளாண்மை துறையினரால் வழங்கப் படும் மானியங்களின் விவரங்கள் (பயிர் வாரியாக). | செயல்படுத்தப்படும் இடங்கள். | திட்டத்தை செயலாக்கும் அலுவலர்கள் (யாரால் வழங்கப்படுகிறது) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இத்திட்டத்தின்மூலம் சிறுவிவசாயிகளுக்கு 25 சத மானியமும் மிகச் சிறு விவசாயி களுக்கு 33 சத மானியமும் வழங்கப்படு கிறது. | | |
| ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம். | | |
| (அ) இத்திட்டத்தின்கீழ் இறவையில் சூரிய காந்தி பயிரிடுவதை ஊக்குவிப்பதற் கென ஏக்கர் ஒன்றுக்கு இடுபொருட் களுக்கு மானியமாக ரூ. 185, வழங்கப்படு கிறது. இத்திட்டம் 500 ஏக்கரில் (200 ஹெக்டேர்) செயல்படும். | தர்மபுரி மாவட்டம் மட்டும்: | மாவட்ட வேளாண்மை அலுவலர் (சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டம்). |
| (ஆ) வீரிய ஒட்டு ரக சிறு தானியங்கள், பயறு வகை விதைகள் தழை விதைகள் மானிய விலையில் விநியோகம்— இத்திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் வீரிய ஒட்டு ரக சிறு தானியங்கள் 50 சத விலையி லும் மற்றைய விதைகள் சிறு விவசாயி களுக்கு 25சத மானிய விலையிலும் மிகச் சிறு விவசாயி களுக்கு 33 சத மானிய விலை யிலும் வழங்கப்படும். | தர்மபுரி மாவட்டம் மட்டும், | மாவட்ட வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவ லர்கள். |
| (இ) காய்கறி அபிவிருத்தி<br>சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் விதைகள் 75 சத மானிய விலையிலும், உரம் மற்றும் பூச்சி மருந்துகள் சிறு விவசாயிகளுக்கு 25 சத மானிய விலையிலும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 33 சத மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. | தர்மபுரி மாவட்டம் மட்டும் | மாவட்ட வேளாண்மை அலுவலர் துணை வேளாண்மை அலுவலர்கள். |
| ஒருங்கிணைந்த மானாவரி அபிவிருத்தித் திட்டம் | | |
| இத்திட்டத்தின்கீழ் வீரிய ஒட்டு ரக விதைகள் மற்றும் பயிர் பாதுகாப்புக் கருவிகள் 50 சத மானிய விலையிலும் கறவை மாடுகள் ஆடுகள் 25 சத மானிய விலையிலும், வழங்கப்படுகின்றன. கிணறுகளை ஆழப்படுத்தவும், புதுக் கிணறுகள் எடுக்கவும் 25 சத மானியம் வழங்கப்படுகின்றன. | திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி பகுதி யிலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும்; | துணை வேளாண்மை இயக்குநர்; மாவட்ட வேளாண்மை அலுவலர். துணை வேளாண்மை அலுவலர்கள். |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டம்; | | |
| மண்வளப் பாதுகாப்பு பணிகளுக்கு ஆகும் செலவில் 25 சத மானியம் வழங்கப் படுகிறது; | எல்லா மாவட்டங் களிலும்: | உதவி செயற் பொறி யாளர்கள் (மண்வளப் பாதுகாப்புத் திட்டம்) |
| குந்தா பள்ளத்தாக்கில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்; | | |
| இத்திட்டத்தின்கீழ் 50 சத மானியம் வழங்கப்படுகிறது. | குந்தா பள்ளத்தாக்கு பகுதி—நீலகிரி மாவட்டம். | உதவி செயற் பொறியாளர் (மண்வள பாதுகாப்புத் திட்டம்) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1979 மார்ச் 12.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**கோவை மாவட்டத்திற்கு பாண்டியாறு-புன்னம்புழா நீர்**

*குறுகிய கால வினா எண். 11—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு – புன்னம்புழா ஆற்றின் தண்ணீர் கோவை, அவினாசி, பல்லடம் தாலுகாக்களில் பயன்படுத்துவது குறித்து கேரள அரசின் சம்மதம் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் நிறைவேற எத்தனை கோடி ரூபாய் செலவாகும் ?

(இ) எத்தனை லட்சம் ஏக்கர் அதனால் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தமிழக அமைச்சர்கள் 19, 20-12-78 தேதிகளில் கேரள முதல்வருடன் திருவனந்தபுரத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மீண்டும் இது குறித்து பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது.

(ஆ) & (இ) : இவ் வினாக்களுக்கு இடமில்லை.

**சஞ்சய் காந்தி வருகையின்போது ஏற்பட்ட செலவு**

* வினா எண். 358—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சென்னை நகரில் ஏற்பட்ட பெரும் வெள்ளச் சேதத்தை பார்வையிட வந்திருந்த சஞ்சய் காந்திக்காக மாநில அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னை நகரில் ஏற்பட்ட பெரும் வெள்ளச்சேதத்தை பார்வையிட வந்திருந்த திரு. சஞ்சய் காந்திக்காக ராஜ்பவனத்தில் தங்கியபோது கவர்னர்-மாளிகை செலவில் அவருக்களித்த உணவும், தேனீர்ச் செலவும் ஆக ரூ. 11·55 தவிர மாநில அரசு செலவு எதுவும் செய்யவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திரு. சஞ்சய் காந்தி தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு சார்பில், அதன் பிரதிநிதியாக அனுப்பப்பட்டு வந்தாரா, அல்லது சொந்த முறையில் வந்தாரா என்பதையும், நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற அடிப்படையில் தொடர்ந்து இன்னொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். சென்னை நகரத்தில் வெள்ளச்சேதப் பகுதிகளை பார்வையிடச் சென்றபோது எந்தெந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன, அவருடன் சென்றவர்கள் யார் யார் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? திரு. சஞ்சய் காந்தியோடு அரசுத் தரப்பில் யார் சென்றார்கள் என்பதையும், வெள்ளச்சேதப் பகுதிகளை பார்வையிடுவதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு, அதைத் திரும்பப் பெற அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் என்ன என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திரு. சஞ்சய் காந்தி தனியாக வந்து பார்வையிட்டு இருந்தால் அவற்றைச் சொல்ல முடியும். அவர் மத்திய அமைச்சர்களாக இருந்த திரு. ஓம் மேத்தா, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களோடு வருகை தந்து இங்கே பார்வை இட்டார்கள். அவர்களோடு வருகை தந்து பார்வையிட்ட காரணத்தால் அவர் மேற்கொண்ட பயணங்கள், அதற்கான செலவுகள் எல்லாம் அரசாங்கப் பயணம் என்பதையும், அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது கட்சிக்காரர்கள் வருவது இயல்புதான் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கிறபோது அவர்களைச் சேர்ந்த சில நண்பர்கள் சுற்றுப்பயணம் செய்வது இயற்கை என்றாலும், திரு. சஞ்சய் காந்தியைப் பற்றி அப்படி கருதிடும் நிலையில்லை. ஒரு பிரதம அமைச்சரின் குமாரராக இருந்துகொண்டு அவர் அத்துமீறிய காரியங்களில் செயல்பட்டு இருக்கிறார் என்று இந்தியா முழுமையிலும் நிலைமைகள் ஏற்பட்டு இருக்கும் நேரத்தில், தமிழ்நாட்டில் அதற்கெ ு ஒரு சான்று கிடைத்து இருக்கும்போது, இந்த அரசும் இப்படி அதிகார



1979 மார்ச் 12]

துஷ்பிரயோகத்தை அவர் தமிழ் நாட்டில் செய்து இருக்கிறார் என்று சொல்லி தன்னுடைய கண்டனத்தைத் தெரிவிக்க அல்லது வேறு முறைகளில் தவறைச் சுட்டிக்காட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே தமிழக அரசு கண்டிப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. சுற்றுப்பயணம் செய்த மத்திய அமைச்சர்களோடு திரு. சஞ்சய் காந்தி அவர்கள் வந்து இருக்கிறார். ஆகவே, மத்திய அமைசசர்கள் இங்கே சுற்றுப்பயணம் செய்கிறபோது அவர்களுடைய செலவை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது. திரு. சஞ்சய் காந்தி வேறு சில இடங்களில் சுற்றுப்பயணம் செய்ததுபோல் அல்ல தமிழ் நாட்டிற்கு வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்..

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்கள் வருகிறபோது அவர்களுடன் கட்சிக்காரர்கள் வருவது இயல்பு. ஆனால் என்னைப் போன்றவர்கள அறிந்து வைத்து இருப்பது திரு. சஞ்சய் காந்தி வந்த காரணத்தால் அவருக்கு வெள்ளப்பகுதிகளைச் சுற்றிப்பார்க்க அரசாங்கம் செலவழித்து இருக்கிறது என்பதையெல்லாம் எங்களுக்குத் தெரிந்தவிதத்தில் தெரிந்து வைத்து இருக்கிறோம். அதற்காக ஹெலிகாப்டர்கூட அரசாங்க செலவில் பயன்படுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. அதை எல்லாம் நடைமுறைப்படுத்திய அரசு இன்றைய அரசு இல்லையென்றாலும், பதில் சொல்ல வேண்டிய இடத்தில் வீற்றிருக்கும் அமைச்சர் அவர்கள் அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை தமிழ் நாடு அரசின் மூலமாக செலவழிக்கப்பட்டு இருந்தால், அதை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தச் செலவு தமிழக அரசால் மேற்கொள்ளப்படவில்லை. ஆளுநருடைய மாளிகையில் அவர் தங்கியிருந்தார். செலவும் ஆளுநருடைய செலவாக அதாவது ஆளுநருடைய 'ஹவுஸ்ஹோல்டு எக்ஸ்பென்ஸ்' என்பதில் அது அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, செலவழித்த தொகையைப் பற்றியது. வேறு கேள்விகளைக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்கள், இது பாலிசி மாட்டராக இருக்கிறது. இதில் பல கேள்விகள் இருக்கின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்சனைகள் எல்லாம் கிடையாது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, முக்கியமான கேள்வியாக............(குறுக்கீடு) நீங்கள் சஞ்சய் காந்தியை ஆதரித்தால் உங்கள் கட்சியே ' குளோஸ் ' ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தமாதிரி விவாதத்தையெல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளுங்கள். இது அவை. தயவுசெய்து உட்காருங்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்.

*வினா எண். 359—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களில் யாரேனும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக உள்ளனரா—

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒருவருமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழை பாடமொழியாகக் கொண்டுபடித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக யாரும் வரவில்லை என்று சொன்னார்கள. அப்படியானால் தமிழை பாடமொழியாகக் கொண்டு கற்பவர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி யாவதற்கு அருகதை உண்டா, இல்லையா —

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதுவரை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வந்திருக்கிறவர்கள் எல்லாம் கல்லூரிகளிலே ஆங்கிலத்தை பாடமொழியாக ஏற்று படித்தவர்களாக இருக்கிறார்கள். தமிழை இப்போதுதான் கல்லூரிகளில் பாடமொழியாக ஆக்கியிருக்கிறோம். ஒருவேளை எதிர்காலத்தில் தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரலாம்.

*Electricity undertakings taken over by Government.*

*Q. No. 338—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the firms dealing in power distribution in the private seector have been paid due compensation by the State for taking over; and

(*b*) if not, the causes for the delay in payment ?





மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் ; (அ) & (ஆ) அரசுடைமையாக்கப்பட்ட ஏழு தனியார் மின் நிறுவனங்களில் இரண்டு மின் நிறுவனங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது, இரண்டு நிறுவனங்களின் ஈட்டுத் தொகை நிர்ணயத்தை நடுவரின் தீர்ப்புக்கு விடுபட்டுள்ளது. மீதமுள்ள மூன்று நிறுவனங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எந்தெந்த ஆண்டு களில் எந்தெந்த தனியார் மின் நிறுவனங்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ? அவைகளில் சிலவற்றுக்கு நஷ்டயீட்டுத் தொகை வழங்கப்பட் டிருப்பதாகவும், சில பலவற்றுக்குத் தரப்படவில்லை என்றும் சொன்னார்கள். இதுவரையில் எந்தெந்த நாட்டுடைமையாக்கப் பட்ட மின் நிறுவனங்களுக்கு நஷ்டயீட்டுத்தொகை வழங்கப் பட்டிருக்கிறது ; ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு வழங்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் தனியார் மின் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்த ஆண்டில் சேலம்—ஈரோடு மின்சார நிறுவனமும், திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார நிறுவனமும் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு முறையே 95,31,950 ரூபாயும், 84,48,786 ரூபாயும் வழங்கப்பட்டது. கும்பகோணம் மின்சார நிறுவனமும், நாகப்பட்டிணம் மின் சார நிறுவனமும் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு ஈட்டுத் தொகையாக முறையே வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபாயும் 8 இலட்சம் ரூபாயும் போதாது என்று சொல்லி, தமிழ்நாடு சட்டம் 30, பிரிவு 10 ன்படி கழிவுத்தொகை பெறுவதற்கு நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று கேட்டுள்ளன. இந்த வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகர உரிமை இயல் நீதிமன்ற துணை நீதிபதி திரு. கே.இ. வரதன் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவைகள் ஆய்வில் இருக்கின்றன.

திரு. எஸ்.ஆர். இராதா : தலைவரவர்களே, மின்சார நிறுவனங்களை அரசு எடுத்துக்கொண்ட பின்னால் இதுவரை தனி கார்ப்பரேஷனாக வைத்துக்கொண்டு தொழிலாளர் களுக்கும் மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கும் என்னென்ன நடைமுறைகள் கையாளப்பட்டனவோ அவைகள்தான் இப்போதும் இருக்கின்றன. வழக்கு நடுவர் தீர்ப்பில் இருந்தாலும் அரசு உடனடியாக மின்சார வாரியத்தோடு இணைத்து, மின்சார வாரியத்தினால் வழங்கப்படுகின்ற எல்லாச் சலுகைகளையும் அளிக்க முன்வருமா? அதற்கான வழிவகைகள் செய்யப்படுமா?

[1979 மார்ச் 12

[illegible] திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர் [illegible] பரிசீலிக்கும்.

[illegible] ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர [illegible] திருநெல்வேலி— தூத்துக்குடி மின்சார கார்ப்ப[illegible] அரசு ஏற்றுள்ளது. அரசு ஏற்றுக்கொண்ட பின்னாலும் [illegible] மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை [illegible] அவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களுக்[illegible]ம் சலுகைகளை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதுபற்றி அரசு ஆராயும்.

[முற்பகல் 9—10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தனியாரிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்ட மின் வாரியங்கள், முன்பு அவை லாபத்தில் நடைபெற்றதைப் போல இப்போதும் லாபத்திலே நடைபெறுகிறதா அல்லது நஷ்டத்திலே நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இதைப்போன்ற தனியார் மின் நிறுவனங்கள் எவ்வளவு இயங்கி வருகின்றன? அவற்றையும் வாரியம் எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது உத்தேசம் அரசினிடத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியார் மின் நிறுவனங்கள் முழுவதும் வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. ஒருசில நகராட்சி மன்றங்கள் மட்டும்தான் மின் நிறுவனங்களை தங்களது நிர்வாகத்தின் கீழ் இயக்கி வருகின்றன.

## பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு

*வினா எண். 339—திரு. க. சுப்பு : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு மற்ற துறைகளில் வழங்கப்பட்டிருப்பதுபோல் சிறப்பு ஊதிய உயர்வுகள் (Advance increments) மின்வாரியத்தில்



1979 மார்ச் 12]

பணியாற்றுவோருக்கு மட்டும் இன்னும் வழங்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (ஆ) மின்சார வாரியத்தின் செலவில் இல்லாமல் தங்கள் சொந்தச் செலவில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றுள்ள பொறியாளர்களுக்கு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

## மேலத்தொட்டியப்பட்டியில் நியாயவிலைக் கடை.

*வினா எண். 340—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை நிறுவவேண்டும் என பொதுமக்களிடம் இருந்து அண்மையில் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில்,என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :

(அ) இது சம்பந்தப்பட்ட கோரிக்கை அரசுக்கு எதுவும் வரப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நான் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியப்பட்டி கிராமத்தில் உள்ள மக்கள் என்னிடத்தில் கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த மனுவை நான் மாவட்ட கலெக்டர் அவர்களுக்கும், திருவில்லிப்புத்தூர் சரக டி.ஆர். அவர்களுக்கும் அனுப்பினேன். ஆனால் அது இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்போது ரெஜிஸ்டர் செய்து அனுப்பினால்தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இப்போது நான் கூறுவதையே ஒரு கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு மீண்டும் அதனைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலத்தொட்டியப்பட்டி என்ற கிராமம் பிள்ளையார் நத்தம் என்ற வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒரு சிற்றூராகும். ஆகவே மேலத்தொட்டியப்பட்டி கிராமத்திற்காக, இந்த பிள்ளையார் நத்தம் என்ற கிராமத்தில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## தஞ்சை மாவட்ட கூட்டுறவு விவசாயக் கடன் சங்க ஊழியர் மாநாடு.

*வினா எண். 341.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் ஊழியர்கள் மாநாடு 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் நாளில் தஞ்சையில் நடந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அவர்கள் கோரிக்கை அரசுக்கு வந்ததா, அவைகள் என்ன?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

அறிக்கை *அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் அளித்திருக்கக்கூடிய மகஜர் மிகவும் முக்கியமானது. அவர்கள் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர்களாக இருக்கின்றபோது அவர்கள் அப்படி பணியாற்றிய காலத்தையே பயிற்சி காலமாக பாவித்து அவர்கள் மேலும் பயிற்சி பெற வேண்டியதில்லை என்கிற உத்தரவை வெளியிட அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனையை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*386—390ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1979 மார்ச் 12]

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் போலல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளுக்கேற்ப ஊதியம் பெறுகிறார்கள். அவர்கள் மிகக்குறைந்த சம்பளம் அதாவது 120 ரூபாய், 40 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவில் சம்பளம் வாங்குகிறார்கள். இப்படி எல்லாம் இல்லாமல் அரசே அவைகளை நேரடியாக ஏற்றுக்கொண்டு அந்த கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் அரசின் சட்டரீதியான ஊதியத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் செயலாளர்கள் எந்த அடிப்படையில் வங்கி ஊழியர்களாக மாற்றப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஆங்காங்கிருக்கிற கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களை நியமித்துக் கொள்கிறார்கள்.

திரு. அ. செல்லப்பா : கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்று வேலைக்கிருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவதில்லை. ஆகவே பயிற்சி காலத்தை முடித்துவிட்டு மீண்டும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றினால் அவர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யக்கூடிய செயலாளர்கள், எழுத்தர்கள் போன்றவர்களுக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் எந்தளவிற்கு வருமானம் வருகிறதோ அல்லது எந்தளவிற்கு டிரான்ஸாக்ஷன் இருக்கிறதோ அந்த அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு இப்போது ஏற்பாடு செய்திருக்கிறதா? அப்படியானால் அந்த அடிப்படையில்கூட அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க சில வங்கிகளில் ஏற்பாடு இல்லையே. அதற்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் அந்தந்த சங்கத்தினுடைய வருவாய்க்கேற்ப ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்ய பதிவாளர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 342.

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பதில்லை.

## வலையர் புனர்வாழ்வுத் திட்டம்.

* வினா எண் 342 — திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் புனரமைப்பு செயல்படுவதுபோல், பிற்பட்டோர் நலக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வலையர் புனரமைப்பு செயலாக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : (அ) & (ஆ) மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் புனரமைப்பு செயல்படுவதுபோல், பிற்பட்டோர் நலக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வலையர் புனரமைப்புத் திட்டம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படாததால் செயலாக்கப்படமாட்டாது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : ஹில் ட்ரைப்ஸ், ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் போன்றவர்களைவிட மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள செட்டிநாடு வலையர்கள் மேம்பாடு அடைய விசேஷ திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : இவர்களுக்கென விசேஷத் திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்திடம் இல்லை.

திரு. கூத்தகுடி. ச. சண்முகம் : மலை ஜாதியினருக்கு என்ன இலக்கணம் இருக்கிறதோ அதேபோன்று வேட்டையாடுவது அணில் பிடிப்பது, முயல் பிடிப்பது போன்ற காரியங்களை செய்து அதை வைத்து அவர்கள் பிழைப்பு நடத்துகிறார்கள். செட்டிநாடு வலையர்களுக்கு என்று விசேஷச் சலுகை இருந்தது ஏன் ரத்து செய்யப்பட்டது என்று தெரியவில்லை. அதைப்பற்றி தெரிவிப்பார்களா ?





மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : அப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று பிற்பட்டோர் நலக்குழு பரிந்துரை செய்தது. 1973–77-ல் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டது. அரசாங்கத்தினிடம் போதுமான நிதி நிலை இல்லை. எதிர்பார்த்த அளவிற்கு மத்திய அரசிடம் இருந்து நிதி உதவி கிடைக்கவில்லை. ஆகவேதான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனினும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடியிருப்பு வீடு கட்ட மானியம், கடன் உதவி என்ற பேரால் ரூ. 2,025 மானியமும், ரூ. 675 கடனாகவும் வழங்கப்படுகிறது. பாசனக் கிணறுகள் வெட்ட ரூ. 2,500 மானியமாக இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இவைபோக பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகை, இன்னும் பிற சலுகைகளும் இவர்களுக்கும் பொருந்தும்.

திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்திலுள்ள பிரமலைக்கள்ளருக்கு குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் முன்னால் சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டு வந்த சலுகைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குறைக்கப்பட்டு இப்போது அது இன்னும் அதிகமாகக் குறைக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? குற்றப்பரம்பரையினர் சட்டத்தின் கீழ் மறவர்ஸ் ஆப் ராம்நாட் அன்ட் திருநெல்வேலி, கள்ளர்ஸ் ஆப தஞ்சாவூர் அன்ட் திருச்சி இவர்களுக்கு ஏற்கனவே அளித்து வந்த சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : இதுபற்றி உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரத் தயாராக இருக்கிறேன்.

[முற்பகல் 9-20].

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக்கள்ளர் சமூகத்தைப் போலவே வலையர் சமூகத்தினர் என்று இருக்கக்கூடிய மக்களை ஆரம்ப காலத்திலிருந்தே இன்றைய வரைக்கும் குற்றப்பரம்பரையினர் போன்றே அவர்கள் நடத்தப்பட்டு வருகிறார்கள். இதன் காரணமாக சாதாரண சம்பவங்களுக்குக் கூட இவர்கள் மீது பல்வேறு இடங்களில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. என்னுடைய மாவட்டத்திலுள்ள அனுபவம் இது. ஆகவே இந்த வலையர் சமுதாயத்தினரை குற்றப்பரம்பரையிலிருந்து நீக்குவதற்கும், இந்த வலையர் சமுதாயத்தினரை முன்னேற்றுவதற்கும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது ?

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பிற்படுத்தப்பட்ட
மக்களுக்காக அமைக்கப்பட்ட சட்டநாத கரையாளர் குழு இவர்
களுக்கு என்று தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டும்
என்ற ஒரு பரிந்துரையைச் செய்தது. 73 ஆம் ஆண்டில் இது
பரிசீலனை செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. பின்னால்
77-லும் இது மறுபரிசீலனை செய்யப்பட்டு அப்போதும்
நிராகரிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த
சமூகத்திலுள்ள பல சிக்கல்களை எடுத்து விளக்கி அவர்களுடைய
தாழ்வான நிலையை எடுத்து விளக்கியிருக்கின்ற காரணத்தால்,
மீண்டும் இந்த அரசு அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து அவர்
களுக்கு ஏதாவது செய்வதற்கு இடமிருக்குமானால் அவற்றை
நிச்சயமாகச் செய்யும் என்ற உறுதிமொழியை இந்த அவையில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : வலையர் என்ற சொல் நல்ல
சொல்லாக இல்லை. ஆகவே இந்தச் சொல்லை ''முத்து ராஜா''
என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை ஏதாவது
வந்திருக்கிறதா ? அப்படி என்றால் இப்படி மாற்றியமைக்க
அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தச் சமு
தாயத்தினடமிருந்து தங்கள் சமுதாயத்தினர் பெயரை ''முத்து
ராஜா'' என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டு
இதுவரை எந்தவிதமான கோரிக்கையும் அரசுக்கு வந்ததாகத்
தெரியவில்லை. அவர்களிடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கை
வருமானால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த வலையர்
சமூகத்தினருக்கான புனரமைப்புத் திட்டம் அரசால் ஏற்றுக்
கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது. ஏற்கனவே இந்த
வலையர் சமூகத்தினருக்கு, குளங்களில் மீன்பாசி எடுக்கின்ற
பொழுது இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று
ஒரு முறை இருந்து வந்தது. நெல்லை மாவட்டத்தில் இப்
படிப்பட்ட முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத்
தெரியுமா ? அதே நேரத்தில் அவர்களுக்கு புனரமைப்புத்
திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் இவர்களுக்கு
முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற அளவில் இருந்து வரு
கின்ற உத்தரவை அமல்படுத்த அரசு நடவடிக்கை மேற்
கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை
வர் அவர்களே, குளத்திலிருந்து பாசி எடுக்கின்ற குத்தகையை
அங்குள்ள மீனவர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு கொடுக்க முன்னுரிமை



1979 மார்ச் 12]

கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.
தனிப்பட்ட இடங்களில் எங்காவது இந்த உத்தரவு மீறப்படு
மானால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்
திற்குக் கொண்டு வந்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்
படும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே,
கரையாளர் கமிஷன் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்
தில் பிற்பட்டோர் நல உரிமைகளைப்பற்றி பரிசீலனை செய்வதற்
காக அமைக்கப்பட்டது. அக்குழு கொடுத்த பரிந்துரையை அப்
போதிருந்த அரசு நிராகரித்து விட்டது என்று அமைச்சர் அவர்
கள் சொன்னார்கள். மீண்டும் இதுபற்றி பரிசீலிக்கப்படும்
என்றும் சொன்னார்கள். நிராகரிக்கப்பட்டது எந்தக் காலத்தில்,
என்னென்ன பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன? மேலும்
வலையர் என்ற சொல்லை மாற்றி அமைக்க வேண்டும் என்று
அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. நானும் அந்தக் குழுவில்
இருந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அப்
போது அதில் ஒரு உறுப்பினர். அண்ணன் கந்தசாமி அவர்
களும் அதில் ஒரு உறுப்பினர் தான். அக்குழுவில், முத்துராஜா
என்ற பெயரை வைக்க வேண்டும் என அமைச்சர் அவர்களே
சொல்லி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆகவே இது எப்போது நிராகரிக்கப்பட்டது என்பதைத் தெரிவிப்
பாரா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது
போல், நான் கரையாளர் குழுவில் அங்கம் வகித்ததாக நினை
வில் இல்லை. அந்தக் குழு மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம்
வந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதில்
நான் சாட்சியம் கூறினதாக நினைவிருக்கிறது. இந்தக் குழு
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில்தான் நியமிக்கப்
பட்டது. அந்தக் குழு சில பரிந்துரைகளைச் செய்து திராவிட
முன்னேற்றக் கழக அரசுக்கு கொடுத்தது. இந்தக் குழுவை
நியமித்த திராவிட முன்னேற்றக் கழக அரசே இந்தக் குழு
வினுடைய பரிந்துரைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை.
73-ஆம் ஆண்டில் இதை மறுபரிசீலனை செய்தார்கள். அப்
போதும் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும்
77-ஆம் ஆண்டிலும் மறுபரிசீலனை செய்தார்கள். இந்த
இரண்டு ஆண்டுகளிலும், பரிசீலனை செய்தபோது பரிந்துரைகள்
நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் அப்போதிருந்த அரசுக்கு ஏற்
பட்டிருந்த நிதிநிலை காரணமாகத்தான் ஒத்துக்கொள்ளாமல்
இருந்தது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசும் இந்த அடிப்படையில்தான் அதை நிராகரித்து
இருக்கிறது.

[1979 மார்ச் 12

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வலையர் சமூகத்தினர் பெரும்பாலும் மீன் பிடித்தல், வேட்டை ஆடுதல் போன்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள ரெவின்யூ கண்மாய்களில் விடப்படும் மீன்பாசி குத்தகைகளை இந்த வலையர் சமூகத்தினருக்கு முன்னுரிமை ...டுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பாசிக் குத்தகையைப் பொறுத்தவரையில், வலையர் சமூகத்தினருக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கக்கூடிய நிலையில் இந்த அரசு இல்லை. காரணம், இந்தத் தொழிலை நம்பி வாழும் எல்லா மீனவர்களுக்கும், அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகித்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்கு இந்தக் குத்தகை வழங்கும் முன்னுரிமை ஏற்பாட்டை, விதிமுறைகளை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது.

பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள்.

*வினா எண் 343—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிற்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆம். பிற்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் 25 விழுக்காடு இடங்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் சேர்க்கப்படும்போது, சில மாணவர்கள் விண்ணப்பம் செய்யாமல் விடுபடுகிறார்கள். அதனால் சில காலியிடங்கள் ஏற்படுகின்றன. இந்த பிற்பட்டோர் நல மாணவர்கள் விடுதியிலே, அரிசன மாணவர்களை இன்டர்வியூ செய்து அவர்களை இந்த விடுதியிலே சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத் துறையிலே, பிற்பட்ட மாணவர்களுக்காக நடத்தப்படும் விடுதிகளிலே, அவர்



1979 மார்ச் 12]

களுக்கு அதிகமான இடங்களை ஒதுக்குவதோடு, தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கும், அதைப்போல் முன்னேறிய சமுதாய மாணவர்களுக்கும் அங்கே இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதைப்போல் அரிசன மாணவர்களுக்காக நடத்தப்படும் அரிசன விடுதிகளிலே பெரும்பாலான இடங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு, பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு ஒரு பகுதியும், முன்னேறிய சமுதாய மாணவர்களுக்கு ஒரு பகுதியும் வழங்கப்பட்டு வருகிறது. பின்தங்கிய மாணவர்கள் விடுதியிலே அவர்களுக்கு 65 சத வீதம் தாழ்ந்தப்பட்ட மாணவர்களுக்கு 25 சத வீதம் , முன்னேறிய மாணவர்களுக்கு 10 சத வீதம் கொடுக்கப்படுகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுததப்பட்டவர்கள் நலன் கருதி, அத்தகைய மாணவர்களுக்காக தனியாக ஒரு விடுதி நடத்துவதற்கு இந்த அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார, சமுதாய அடிப்படையிலேதான் முன்னேறிய சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று பிரிவுகளை வகுத்திருக்கிறோம். இப்போது அவர்களுடைய பொருளாதார, சமுதாய வளர்ச்சியை முன்னிட்டும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும்தான் இவ்வாறு அமைக்கப்படுகிறதே தவிர, இப்படி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியான மாணவர் விடுதிகளை அமைப்பதன் மூலம், மாணவர்கள் மத்தியிலே அப்படிப்பட்ட ஒரு எண்ணம் வளர்வது நல்லதல்ல. ஆகவே, பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர் விடுதிகளிலேகூட, இப்படிப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்கெனவே இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார ரீதியாக, பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு சலுகைகள் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டு வரும் இந்தத் திட்டம் நாளடைவில் வருகின்றபோது, சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக நன்கு முன்னேறிய சமுதாயம் கூட, ஏற்கெனவே பல அரசியல் காரணங்களுக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அப்பேர்ப்பட்ட முன்னேறிய சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே

இருந்து நீக்கி, உண்மையிலேயே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயங்களை இந்தப் பட்டியலிலே சேர்க்க ஒரு குழுவை அமைத்து, அதாவது 'இன்சுகுவாலிடிஸ் இன் சொசைடி'யை—நீக்குவதற்கு இந்த அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய சமுதாயங்கள் பட்டியலிலே உள்ள சில சமுதாயங்கள் நாளடைவிலே அவர்களை பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பட்டியலிலே சேர்த்து விடுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். . . .

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொல்வதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். நான் சொன்னது, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் முதலில் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, இப்போது நாளடைவில் பொருளாதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் மிகவும் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற காரணத்தால், அந்தச் சமுதாயங்கள் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? மிகவும் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக, சமுதாய ரீதியாக அடிதளத்திலே இருக்கின்ற மக்களுக்கு சலுகைகள் வழங்க ஒரு குழுவை அமைத்து அவர்களுக்கு சமநீதி வழங்க, இதைப் பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30.]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் எழுப்பிய கேள்வியின் இரண்டாவது பகுதிக்குப் பதில் இந்த அரசு அப்போதைக்கப்போது பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்பது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்கள் சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை வைக்கும்போது அரசு தீர்க்கமாகப் பரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்தும் அதற்கு புள்ளிவிவரங்கள் சேகரித்து பட்டியலில் சேர்ப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகும் சில சமுதாய மக்கள் இப்படிப்பட்ட பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கடைசியில் சொன்னது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கொ. சின்னசாமி : பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும் பிற்பட்டோர் நல விடுதியில் மிகவும் பிற்பட்ட மாணவர்களைச் சேர்ப்பதில் ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றனவா?





மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் மொத்தம் எத்தனை சதவிகிதம் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்? குறிப்பிட்ட அளவு ஜனத்தொகையினர் அவ்வாறு இருப்பார்களானால் மிகவும் பிற்பட்டோர்களுக்கு தனிச் சலுகைகள் அளித்து விடுதிகளில் இடம், வேலைவாய்ப்புகள் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களுக்கான தனிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தச் சமுதாய மாணவர்கள் பற்பட்ட மாணவர்களுக்காக நடைபெறுகிற விடுதிகளில் தங்கிப் படிக்கும் வாய்ப்புக்கள் அவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்கள் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதைப்பற்றிய புள்ளிவிவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

திரு. ப. சந்திரன் : தமிழ்நாடு அரசு நடத்துகிற மாணவர் விடுதிகளை பிற்பட்ட மாணவர் விடுதி, தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி என்று பிரிவுபடுத்தி நடத்துவதன் காரணமாக படிக்கின்ற மாணவர்களுக்கு மத்தியில் அப்படிப்பட்ட எண்ணங்களை வளர்ப்பது நல்லதா ? ஆகவே, அரசு மாணவர் விடுதி என்று போட்டு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடம் கொடுக்கவும், சலுகைகள் வழங்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதொரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதைப்பற்றி அரசு பரிசீலித்து செயல்படுத்த முடிவு எடுக்கும்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக நடத்தப்படுகிற விடுதிகளில் போதுமான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் சேராதிருந்தால் காலியான ஸ்தானங்களை பின்தங்கிய மாணவர்களுக்கு ஒதுக்க அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : விதிகளின்படி அரசால் நடத்தப்படுகிற எந்தவிடுதியிலும் அந்த அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டு, விழுக்காடு பிரகாரம் ஒதுக்கிய பிறகு காலி இடங்கள் இருக்குமானால் அந்த இடங்களை மற்ற பிற்பட்ட சமுதாய மாணவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யலாம் என்று ஏற்கெனவே அரசு உத்திரவிட்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட சம்பவங்களைப் பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ராமநாதன் : இந்த விடுதியில் சேரவேண்டுமென்று மனுப்போடும் மாணவர்களில் பலர் சேர்க்கப்படாமல் விடப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? மனுக்கள் போட்ட அத்தனை மாணவர்களையும் விடுதியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : விண்ணப்பம் செய்கிற எல்லா மாணவர்களுக்கும் விடுதியில் இடம் கொடுப்பது என்பது முடியாத காரியமாகும். ஒரு விடுதியை ஆரம்பிக்கும் போது விடுதியில் எவ்வளவு மாணவர்களைச் சேர்க்க முடியும் என்று அரசு உத்தரவிட்டு அதற்கான நிதியைத் தருகிறது. இந்நிலையங்களில் சேருவதற்கு விண்ணப்பம் வருகிற நேரத்தில் ஆராயப்பட்டு, நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு போதுமான இடங்களைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## சுற்றுலாத்துறை பணியாளர்கள்

* வினா எண். 344—திரு. ரா. மார்க்கபந்து :—மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத் துறையில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத்துறையில் பணியாளர்கள் யாரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சென்னை—பூம்புகார் சுற்றுலாப் பேருந்துகள்

* வினா எண். 345—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விடுமுறை நாட்களில் சென்னையிலிருந்து பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத்தலைவர் அவர்களே, பூம்புகாரிலே கலைக்கூடம் கட்டப்பட்ட பிறகு சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் சென்று வருகிறார்கள். எனவே பூம்புகாரையும் மற்ற இடங்களையும் இணைத்து பேருந்துகளை விடுவதற்கு சுற்றுலாக் கழகம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்னாலே நடத்திக்கொண்டிருந்த ''பேக்கேஜ் டூர்'' சிக்கனச் சுற்றுலா என்ற அடிப்படையில் பூம்புகாரையும் இணைத்து அந்தச் சுற்றுலா பயணம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் அதிகமான பயணிகள் விரும்பாத காரணத்தாலே அவைகளைக் குறைத்து 10 நாட்கள் சுற்றுலா என்று இருந்ததை 7 நாட்கள் என்று மாற்றிவிட்ட காரணத்தால் இப்போது பூம்புகாருக்குப் போகாமல் அந்தப் பேருந்து சென்று கொண்டிருக்கிறது. மீண்டும் அதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு சுற்றுலாக் கழகத்திற்கு சுற்றுலாத் துறை அறிவிக்கும்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, விடுமுறை நாட்களிலே சென்னையிலிருந்து பூம்புகாருக்குச் செல்ல அதிகப் பயணிகள் சேரவில்லை என்றார்கள். சென்னையிலிருந்து மற்ற சுற்றுலா இடங்களுக்கு எத்தனை பேருந்துகள் விடப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தலைவர் அவர்களே இப்போது 7 நாட்கள் என்ற முறையில் 3 சுற்றுலா பேருந்துகள் விடப்படுகின்றன. அதைப்போல் இன்னொன்று, பெங்களூர் பகுதிக்கு 3 சுற்றுலா பேருந்துகள் விடப்படுகின்றன.

திரு.என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்பொழுது பூம்புகாருக்கு சுற்றுலா மூலமாகச் செல்லக்கூடியவர்களின் தொகை குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன். முன்பொரு தடவை சொன்னேன். பூம்புகார் சரிவரக் கவனிக்கப்படவில்லையென்பதை அமைச்சர் அவர்கள் நேரிலே சென்று அறிந்து அதைச் சரியாகப் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோருகிறேன்.

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே கருதி நானும் கடந்த மாதத்திலே நேரிலேயே சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். விரைவில் அதைப் பாதுகாப்பதற்கும் மேலும் சிறப்புக்களைச் செய்வதற்கும் அரசு, சுற்றுலாத் துறை, முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக் கூடம் என்று அங்கே கட்டப்பட்டிருந்தாலும் அதற்குக் காரணமாக இருந்த கண்ணகி சிலை அங்கே இல்லை. சேரன் செங்குட்டுவன் வடித்த கண்ணகி சிலை கேரள மாநிலத் திலே இருக்கிறது, அதை இங்கே கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அங்கே இலக்கிய அடிப்படையில் பல்வேறு சிலைகளும் படங்களும் வைக்கப்பட்டு இருக்கின்றன. எவை எவை வைக்கப்படவில்லை எவை தேவை என்பது எல்லாம் முழுமையாகச் சிறப்பிக்கிறபோது மாற்றியமைக்கிறபோது கவனத்தில் எடுத்துச் கொள்ளப்படும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, நாட்டினுடைய பல்வேறு மாநிலங்களிலேயிருந்தும், உலகத்தின் பல்வேறு நாடுகளி லிருந்தும் சுற்றுலா பயணிகளும் பக்தர்களும் வந்துபோகின்ற சிறந்த நகரமாக இராமேஸ்வரம் இருக்கிறது, அதை சுற்றுலா நகரமாக ஆக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துவிடுவதைப்பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும். என்றாலும் இராமேஸ்வரத்தை மிகச் சிறந்த சுற்றுலா தல மாக்க அரசிடத்திலே அடிப்படைத் திட்டங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரிசனக் குடியிருப்புகளுக்கு வீட்டுவரி.

வினா எண் 346—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அரிசன காலனி வீடு களுக்கு அரசு மதிப்பீட்டுப்படி வீட்டு வரி விதிக்கப்படுவது உண்மையா?



1979 மார்ச் 12]

(ஆ) ஆம் எனில், வீட்டுவரி கட்ட முடியாமல் மக்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) வீட்டுவரியை தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) அரிசனக் காலனி வீடுகளுக்கு பொதுவான தனிச் சலுகை எதுவும் கிடையாது. ஆனால் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தினரால் ஊராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் கட்டிக் கொடுக்கப் பட்ட வீடுகளுக்கு அரையாண்டுக்கு ரூ. 5 மட்டும் வரி விதிக்கு மாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இம்மாதிரி தகவல்கள் அரசு அளவிற்கு வரவில்லை.

(இ) இத்தகைய கருத்துரு ஒன்றுமில்லை.

[முற்பகல் 9—40]

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அமைச்சரவர் கள், ஐந்து ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டதாகச் சொன்னார்கள். ஆனால் பல்வேறு பேரூராட்சிகளிலே 4,000 ரூபாய் மதிப்பு என்ற முறையிலே வரி விதித்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் இந்த விதியின் கீழ் கொண்டு வருவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவு அளிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, எந்தப் பேரூராட்சி என்று குறிப்பிட்டால் நடவடிக்கை மேற்கொள்ள லாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, வாழ்க்கையிலே வசதியற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் குடும்பம் ஒன்றுக்கு 4,000 ரூபாய்செலவில் வீடுகளை சிலபல இடங்களில் இலவசமாகக் கட்டித் தந்தார்கள். அவ்வாறு வசதியற்றவர்களுக்கு இலவசமாகக் கட்டிக்கொடுக்கப் பட்ட வீடுகளுக்கு அரையாண்டுக்கு ஐந்து ரூபாய், அல்லது ஆண்டுக்கு பத்து ரூபாய் என்று வரி விதிக்கப்படுகிறது. இது மிகக் குறைவானது என்று அமைச்சரவர்கள் அறிவிக் கிறார்கள். இது பற்றிப் புகார் வரவில்லை என்றுகூட சொல் கிறார்கள். தொகுதி சட்ட மன்ற உறுப்பினராகிய என்னைப் போன்றவர்கள் கூட அண்மையிலே சென்றபொழுது எடுத்துச் சொன்னார்கள். அதனால் வரக்கூடியது பெரிய வருமானம்

மிகச் சாதாரண வருமானம்தான். அந்த வரு ஆல்ல், மானத்தை மனத்தில் கருதாமல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு— அந்த வரி குறைவாக இருந்தாலும், அவைகளை நீக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அரிசனப் பெருமக்களுக்குச் சலுகை வழங்க வேண்டுமென்ற காரணத்தால்தான், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தினரால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு அரையாண்டுக்கு ஐந்து ரூபாய் என்று விதிக்கப்படுகிறது. இதையும் நீக்குகின்ற உத்தேசமில்லை.

திரு. பெ.சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அரையாண்டுக்கு ஐந்து ரூபாய், அதாவது ஆண்டுக்கு பத்து ரூபாய் என்று விதிக்கப்படுகிறது. ஆனால் இதைவிடப் பெரிய வசதியான வீடுகளைக் கட்டியிருப்பவர்களுக்குக் கூட, கிராமப்புறங்களில் மதிப்பீடு இல்லாமல் அவர்களே கட்டிக்கொண்டிருப்பதால் குறைந்த வரிதான் விதிக்கப்படுகிறது. இது அரசாங்கம் கட்டித் தருவதால் 4,000 ரூபாய் மதிப்பீடு என்ற வகையில், ஆண்டுக்கு பத்து ரூபாய் என்று கேட்கப்படுகிறது. இதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் அல்லது அறவே நீக்க வேண்டும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, குறைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே. வருவாய்க்கு வழியில்லாதவர்களுக்குக் கட்டித் தரப்பட்ட வீடுகளுக்கு வரியைக் குறைக்க இயலாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள், இந்த அமைச்சரவையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து கிலோ தரப்பட்ட அரிசியை ஐம்பது கிலோவாகத்தரும் தாராள மனப்பான்மை கொண்டிருக்கும் அமைச்சரவை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விதிக்கப்படும் இந்த வரியால் மிகக் குறைவான வருவாய்தான் கிடைக்கும் என்ற அடிப்படையில், இது பெரிய வருவாயாக அமையாது என்ற அளவில், இதை நீக்குவதற்கு (குறுக்கீடு) இதைப்பற்றித் திரும்பத் திரும்பக் கேட்டால், பூசை செய்தால் பலன் கிடைக்கும் என்பதால் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டதுதான், அதே பதிலைத்தான் தரப் போகிறார். நேரத்தைச் சுருக்கலாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.





திரு. செ. சிவசாமி: அதே கேள்வியைத்தான் கேட்க நினைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 347.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது மாதிரி, அடிக்கடி கேட்டால் ஏதாவது கிடைக்குமா என்ற ஆவலில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள், நீங்கள் ஏன் அதை மறுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஏற்கனவே கேட்ட கேள்வி. அதற்கு அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. மறுபடியும் அதே கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதற்காகத்தான் வேறு கேள்விக்குப் போனேன்.

## உடுமலை வட்டத்தில் வீட்டுவரி.

* வினா எண் 347—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் உடுமலை தாலூகா மடத்துக்குளம் பேரூராட்சிக்கும் மற்றும் சில பேரூராட்சிகளுக்கும் வீட்டு வரிகளை உயர்த்த அரசு கட்டாய உத்திரவுகளை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த பேரூராட்சிகள் எவை? எவ்வளவு வரி உயர்வு கோரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பேரூராட்சிகள் அதிகப்படியாக வரி விதிக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லி உத்தரவுகள் வந்துள்ளதாகவும், அவர்கள் ஜனங்களிடத்திலே அதிக வரி கட்ட வேண்டுமென்று அந்தப் பேரூராட்சிகளுடைய சில அதிகாரிகள் கேட்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்ட ஜனங்களிடமிருந்து அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லையா? எந்தயிடத்திலும் பேரூராட்சிகள் வரியை அதிகமாக விதிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது கிடையாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பேரூராட்சிகளின் சட்டப்படி அப்படி உத்தரவிட அரசால் இயலாது. ஆனால் பேரூராட்சிகளில் அதிகயாக வரி விதிக்கப்பட்டிருக்கின்றன என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அந்த புகார்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு அறிவுரை வழங்கியிருக்கிறது.

திரு. எஸ். வி. இராமசாமி: தலைவரவர்களே, வரி உயர்வுக்கு ''எக்ஸார்பிடன்ட் ரேட்ஸ்'' ஆக இருக்கிறது என்று பேரூராட்சி இந்த ஆட்சிக்குக் கொடுத்திருக்கின்ற மனுவின் மீது பரிகாரம் தரும் வகையில், அப்படி ஸ்டே வேண்டிக் கொடுத்திருக்கும் மனுவின்மீது பரிகாரம் கொடுக்க உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது பற்றி எந்தத் தகவலும் இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, தேர்தல் நடக்காத காலத்தில், இதேபோன்ற ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு இப்படி வரி போடுவதைத் தடுத்து நிறுத்த, தேர்தல் நடக்கும் வரையில் நிறுத்திவைக்க அரசு முயற்சி செய்யுமா? அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தேர்தல் நடக்காத காலம் என்பது உண்மை. ஆனால், பேரூராட்சி, நகராட்சிகளின் நிர்வாகம் நடக்க வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்தமாதிரி பேரூராட்சி மன்றங்கள் அதிகப்படியான வரியை இந்த எல்லை வரைக்கும் விதிக்கலாம் என்ற மாதிரி ஏதாவது நிர்ணயிப்புகள் அரசாங்கத்தில் உண்டா? அல்லது அவர்கள் நினைத்த மாதிரி எந்த அளவுக்கு விதிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் விதிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 5 ஆண்டுக்கொருமுறை வரி திருத்தம் நடத்தப்பட வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. ஆனால், வரி அதிகமாக இருக்கிறது என்று கருதுவார்களானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அதை நிறுத்தி வைக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறது.



1979 மார்ச் 12]

திரு. சி. பழனிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 'வரி உயர்வு செயல்படுத்தப்படுகிறது. இப்பொழுது, நகராட்சிகளுக்கு 9 ஆண்டுகள் ஆகியும் அதுபோல் செயல்படுத்தப்படவில்லை. பேரூராட்சிகள் வரியை உயர்த்த வேண்டுமென்று தீர்மானம் போட்டும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியும், அவர் அந்த உத்தரவை ரத்து செய்து விட்டார். பேரூராட்சிகளுடைய ஜனநாயக முறைப்படி அந்தத் தீர்மானத்தை ரத்துசெய்வதுதான் முறையா? வரி உயர்வு அளவை குறைந்த அளவு இத்தனை பர்சென்ட் என்று சொல்லி, பேரூராட்சியைக் கேட்காமல், (மணியடிக்கப்பெற்றது) ரிவிஷன் ஆபீசர்ஸ் தங்கள் இஷ்டப்படி செய்வதை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படி, நியாயத்திற்கு விரோதமாக வரி உயர்த்தப்பட்டிருக்குமானால் அரசு அதிலே தலையிட்டு நடவடிக்கையை நிச்சயமாக மேற்கொள்ளும். அதே நேரத்தில், பேரூராட்சிகளுடைய நிதிநிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதும் சில அடிப்படைச் செலவுகளுக்குக்கூட சில பேரூராட்சிகள் வசதியற்று இருக்கின்றன என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும்—தி.மு. கழக ஆட்சிக் காலத்திலும் படிப்பகங்கள், நூலகங்கள், இவைகளுக்கெல்லாம் நகராட்சி வரிகள் விதிக்கப்படவில்லை. ஆனால், தற்பொழுது மாயூரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களது பெயரால் இருக்கிற பகுத்தறிவு மன்றத்தினுடைய படிப்பகக் கட்டிடத்திற்கு ஏராளமான வரியினை நகராட்சிபோட்டிருக்கிறது. எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும் மறுத்திருக்கிறார்கள். எனவே, ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே உள்ளதையே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பின்பற்றப்பட்டு வந்தது. அதைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆவன செய்ய முன் வருமா என அறியலாமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஏராளமான கேள்விகளைப் போட்டு பழக்கப்பட்ட கிட்டப்பா அவர்கள் இதற்கு ஒரு தனிக் கேள்வி போடக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, செலக்ஷன் கிரேடு பேரூராட்சிகளில் அதுவும் குறிப்பாக பஞ்சாயத்துக்களுடைய பஞ்சாயத்துக்களில், அதிகாரிகள் ஆலோசனையைக் கூடப் பெறாமல் தங்களுடைய இஷ்டத்திற்கு வரிகளைப் விதிப்பதும் அதனால் ஜனங்கள் மத்தியிலே கடுமையான எதிர்ப்புகள் ஏற்படுவதும், அதனால் ஜனங்கள் ஆர்ப்பாட்டம்

நடத்துவதும் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இன்றைக்குக் கோயம்புத்தூர் மாவட்டத்திலே பரவலாக இருக்கின்றன. அந்த அளவில் ஸ்பெஷல் ஆபீசர்கள் நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்துக் களைக் கலக்காமல் எத்தனை இடங்களில் வரி விதித்திருக்கி றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவான குற்றச் சாட்டாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக் கிறார்கள். ஆனால், கோவை மாவட்டத்தில் 46 பேரூராட்சி களிலே வ'ரி திருத்தம் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதிலே, ஏறத்தாழ 44 பேரூராட்சிகளிலே யிருந்து எந்தப் பிரச்னையும் இல்லை என்பதும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத் திலே எத்தனை பேரூராட்சிகள் அதிக வரி விதித்திருக்கின்றன? அந்த வரி உயர்வை எதிர்த்து எத்தனை பேரூராட்சிகள் உயர்நீதி மன்றம் சென்றிருக்கின்றன? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி கோவை மாவட்டத்தைப் பொறுத்தது. கோவை மாவட்டத்திலே ஒரு பேரூராட்சி உயர்நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்திருக் கிறது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, பல பேரூராட்சிகளில் ஏற்கனவே உள்ள வரிகள் வசூலிக்கப்படாமல் பல காலமாக 'அரியர்ஸ்' நிற்கும்போது, புதிதாக வரியைப் போடுவதால் சிரமம் இருக்காதா? அதுவும் வசூலிக்கப்படாவிட்டால், அதனை அரசு எந்த அடிப்படையில் வசூலிக்க முயற்சி எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, பல பஞ்சாயத்துக் களிலே அங்கேயிருக்கக்கூடிய ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூட வசதியில்லாத நிலைமையிலிருக்கிறார்கள். எனவே, வரி விதிக்க அவசியம் ஏற்பட்ட காரணத்தால், பல இடங்களிலே வரியை உயர்த்தி இருக்கிறார்கள். அப்படி வரி உயர்த்தும்போது, வீடுகளின் மதிப்பை வைத்து வரி விதிக்கிறார்கள். அதை விட்டு விட்டு, அங்கே வாழக்கூடிய மனிதர்களின் மதிப்பை வைத்து வரி விதிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதற்காக வரி விதிக்கவில்லை. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரி திருத்தம் செய்யப்படுகிறது. அவ்வளவுதான்.

[முற்பகல் 9—50]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை வீட்டு வரி முறை பரிசீலனை செய்துமாற்றப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் வீட்டு வரியை கிராம ஒன்றியங்களுக்கும் மாற்றியமைப்பதற்கு பரிசீலனை செய்ய அரசு ஏதாவது வழி செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பேரூராட்சியாக இருக்கிறபோது டிவிஷன் ரிவிஷன் போடப்பட்டிருக்கிறது. இன் றைக்கு அவைகளை இரண்டிரண்டாகப் பிரித்து கிராம ஊராட்சி யாக ஆக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அந்தடிவிஷன் ரிவிஷனுக்கு வரிகள் மீண்டும் இல்லாமல் செய்ய ஏற்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? நெல்லை மாவட்டத்தில் உள்ள விசுவ நாதபுரம் என்ற பேரூராட்சியில் வரியை ரிவைஸ் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கூட இங்கே கேட்டிருக்கிறார். அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்ளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பேரூராட்சியைக் குறித்து கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. புகார்கள் வந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிகளுக்கு விதிக்கப்படும் வரி வீதங்கள் முறையாக இல்லாமல் சில இடங்களில் பாதிக்கப்படுகின்ற நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. ஆகவே, பத்தாயிரம் பெறுமான வீடு களுக்கு இன்ன வரி, இருபதாயிரம் பொறுமான வீடுகளுக்கு இன்ன வரி என்று ஒரு வகையான வரி விதிப்புத் தொகைய அரசு நிர்ணயம் செய்தால், மாநிலங்களில் அமுல் நடத்துவதற்கும் சுலபமாக இருக்கும். இந்த முயற்சியை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுடைய தனி அதிகாரங்களை பறிக்கக்கூடிய செயல்களில் அரசு இறங்குவதற்கில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பு கொள்கையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதனுடைய ஒட்டு மொத்தமான கருத்து வரி விதிப்பு நடவடிக்கைகள் முறைபடுத்தப் படாமல் இருக்கிற நிலைமை பேரூராட்சிகளில் நிலவுகிறது என்று தெரிகிறது. இதனை தற்பொழுது பேரூராட்சிகளுக்கு ஏற்கனவே உள்ள முறையை மாற்றி புதிதாக ஒரு வரி விதிப்பு முறையை செயல்படுத்த வேண்டும் என்று பரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள முறை சரியானதுதான். ஆனால் சில இடங்களில் அவை சரிவர அமுல் நடத்தப்படவில்லை. அதைப் பற்றி புகார்கள் வருகின்றன. அந்தப் புகார்கள் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Water tanks purchased by Madras Corporation.*

* Q. No. 348—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a large number of steel tanks are to be acquired by the Madras Corporation for Water Storage in Madras City ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

## வீராணம் திட்டம்.

* வினா எண் 349— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் திட்டத்திற்காக இதுவரை அரசு செய்துள்ள செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1978 மே மாதம் வரை ரூ. 22,66,39,000.00 செலவு செய்யப்பட்டுள்ளது.





திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்லுகின்ற வழிகளிலேயெல்லாம் இதற்கென தயாரிக்கப்பட்ட குழாய்கள் எல்லாம் பாதைகளில் போடப்பட்டிருக்கின்றன—இவைகள் சீர்கேடான முறையில் கிடக்கின்றன. அந்த குழாய்களை உபயோகப்படுத்தக்கூடிய முறையில் விவசாயிகளுக்கு எடுத்துக் கொள்ள அரசு சம்மதம் தருமா ? அல்லது அவைகளை அப்புறப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக உலக வங்கித் தலைவர் அவர்கள் நமது முதலமைச்சரை கண்டு பேசினார். உலக வங்கித் தலைவர் அவர்கள் இந்த வீராணம் திட்டத்திலே சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று சொன்னார். இந்தத் திட்டத்திற்கு உருக்குக் குழாய்களை பயன்படுத்தினால்தான் உலக வங்கி இந்தத் திட்டத்திற்காக மேலும் உதவி செய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறார். உருக்குக் குழாய்களைப் பயன்படுத்தினால் மேலும் 199 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீராணம் திட்டத்திற்கு உருக்குக் குழாய்களைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிறபோது இருக்கிற சிமெண்ட் குழாய்களை எதற்குப் பயன்படுத்துவதாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது அங்கேயிருக்கும் குழாய்களை உபயோகிக்க முடியாது, பயன்படுத்த முடியாது என்பதுதான் வல்லுநர்கள் கருத்து. எனவே, சென்னை நகருக்கு 2½ டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ.144 கோடியும் மற்றும் கழிவு நீர் வசதிகள் செய்ய ரூ. 55 கோடியும் செலவு செய்ய வேண்டும். ஏற்கனவே ரூ. 22,66,39,000 வரை செலவழிக்கப்பட்டுவிட்டது. மேலும் ரூ. 199 கோடி செலவழிக்கவேண்டுமா என்பதைப் பற்றி அரசு ஆழமாக ஆலோசனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற போது, அந்த வீராணம் திட்டம் பீசிபிளிடி உள்ள திட்டமா என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அந்த வீராணம் திட்டம் பயன் பெறும் திட்டம்தான். அது பீசிபிளிடியான திட்டமாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்து இருக்கிறது. அதற்குப் பிறகும் ஏதோ அந்தக் குழாய்கள் பயன்படுத்த முடியாது,

உருக்குக் குழாய்கள் போட்டால்தான் பணம் உலக வங்கி கொடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உலக வங்கி அப்படிப்பட்ட நிபந்தனைகள் போட்டிருக்கலாம். ஆனால், அங்கேயுள்ள குழாய்களைப் பயன்படுத்தி நிச்சயமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அப்படிப்பட்ட கருத்தை குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட குழு அறிவித்து இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அவைகளை உபயோகிக்க முடியும் என்பது முன்னாள் முதலமைச்சரின் கருத்து, ஆனுல் இப்போது இருக்கிற ஆட்சியின் கருத்து உலக வங்கியின் பரிந்துரையை பரிசீலித்து முடிவு எடுக்கலாம் என்பதாகும்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியே வேறு. அமைச்சர் அவர்கள் திசை திருப்பி பதில் சொல்கிறார். முன்னாள் முதலமைச்சரின் கருத்து என்று கூறுகிறார். நான் கேட்டது அது அல்ல. குடியரசுத் தலைவர் ஆட்சியில் குழு அமைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அல்ல. கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்தவுடன், அந்த ஆட்சி ஒரு குழுவை அமைத்து, அந்த வீராணம் திட்டம் பீசிபிளிடி உள்ள திட்டம்தானா இல்லையா என்பதைக் குறித்து ஆராய்ந்து, அது பீசிபிளிடி உள்ள திட்டம்தான் என்று அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. அதன்படி ஏன் காரியங்கள் நடைபெறவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே வீராணம் திட்டத்திற்காக ரூ. 22,66,39,000 செலவு செய்யப்பட்டு விட்டது. மேலும் ரூ. 199 கோடி செலவழிக்க வேண்டுமா என்பதைக் குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே 22 கோடி ரூபாய் அளவிற்கு செலவழிக்கப்பட்டு இருக்கின்ற போது அதை நிறுத்தி வைத்து இருப்பதால் பல கோடி ரூபாய் வீணாகப்போய்விடும் என்பதை அரசு உணர்ந்து இருக்கும் என்று நம்புகிறேன். அந்தத் திட்டத்தை புதிதாக எடுத்துக் கொண்டு, உருக்குக் குழாய்கள் போடுவதற்கான செலவையும், ஏற்கனவே செலவு செய்த தொகையையும் சேர்த்து இவ்வளவு ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே செலவழித்ததைவிட, மேலும் ரூ. 20–25 கோடி செலவழித்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.





அப்படி இல்லை என்று சொல்வார்களானால், அதற்காக ஏதாவது குழு அமைக்கப்பட்டு, அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்து இருப்பார்களானால், இந்த அறிக்கையை இங்கே அவையில் வைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதைப்பற்றிய முழுக் கருத்தையும் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முழுக் கருத்தையும், ஏற்கனவே சொல்லிவிட்டாராம். அப்படியானால் இங்கே அமைச்சருக்கு வேலை இல்லை என்று அர்த்தம். ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்களிலே தவறான கருத்து சொல்லப்பட்டு, அதற்கு விளக்கம் கேட்கிறேன். கிட்டத்தட்ட ரூ. 22 கோடி அந்தத் திட்டத்திற்காக ஏற்கனவே செலவிடப்பட்டு இருக்கிறது. அந்த வீராணம் திட்டம் செயல்படுத்தக்கூடிய திட்டம் தான் என்ற கருத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் அமைக்கப்பட்ட குழு அல்ல, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட குழுவால் சொல்லப்பட்டு இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமானால், அதற்காக இன்னொரு நிபுணர் குழுவை இந்த அரசு அமைத்தார்களா? அப்படி ஏதாவது அவர்களால் அறிக்கை தரப்பட்டு இருக்கிறதா? அப்படி தரப்பட்டு இருந்தால் அந்த அறிக்கையை இங்கே அவையில் வைப்பார்களா? என்று தான் கேட்டேன். ஏற்கனவே சொல்லிவிட்டேன் என்று சொன்னால், கேள்வி நேரத்திற்கே அவசியம் இல்லாமல் போய்விடும். எனவே சொல்ல வேண்டிய பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று தலைவர் அவர்களே, தாங்கள் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வீர்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த வீராணம் திட்டத்தைப் பொறுத்த வரையில் உலக வங்கி நிபுணர்கள் ஸ்டடி செய்து கொடுத்த ரிப்போர்ட் அது. அவர்கள் இரும்புக் குழாய்கள் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு திட்டங்களையும் அதில் சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 200 கோடி செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தகவலைத்தான் அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே இருக்கிற பைப்புகளைப் பயன்படுத்தலாம் என்பதிலே இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று, பொறியாளர் திரு. ஜி. எஸ். இராமசாமி அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்ட குழு. அவர்கள் கொடுத்து இருக்கின்ற முடிவு அந்தப் பைப்புகளை பயன்படுத்தலாம் என்பது. ஆனால் அதே நெருக்கடி

காலத்தில், ஆளுநர் ஆட்சி காலத்தில், மத்திய சர்க்காரிலிருந்து அனுப்பப்பட்ட குழு வந்து பார்த்து அவர்கள் 3 வகையாக அதைப் பிரித்து, அவர்கள் ஒவ்வொன்றிற்கும் எந்த அளவிற்கு கூடுதல் செலவாகும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது தான் இன்றைய நிலை.

[முற்பகல் 10–00]

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிபுணர் குழு அறிக்கை கொடுத்தாலும் அரசாங்கம் தான் நிறைவேற்றக் கூடிய வல்லமையைக் கருதித்தான் திட்டங்களை ஏற்றுக்கொள்ள கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் ஒரு பக்கம் இருக்க, இன்னொரு பக்கம் கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டு வருவது பற்றி பேச்சு நடை பெறுகிறது. புதியத் திட்டம் செயல்பட வேண்டுமானால் பெரிய தொகை தேவைப்படாதா ? ஏற்கெனவே உள்ள திட்ட அடிப் படையில் நிறைவேற்ற முடியாதா ? புதிய முறையில் நிறைவேற்ற முயற்சி செய்வதால் அரசுக்கு பெருத்த இழப்பு ஏற்படாதா ? அப்படி இழப்பு ஏற்படாமல் இருக்க உடனடியாக காரியம் நடக் கும் வகையில் மறுபடியும் ஒரு நிபுணர் குழுவை அமைத்து ஆலோசனைப் பெற்று விரைவில் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால் உலக வங்கி கடன் கொடுக்கிறது என்றால் அதற்கு அவர்கள் சொல்கிற நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு ஸ்டாண்டர்டு வைத்திருக்கிறார்கள் ; அந்த ஸ்டாண்டர்டை நாம் ஏற்றுக்கொண்டால்தான் கடன் அல்லது மற்ற உதவிகளை அளிப்பார்கள். ஆகையால், நம்மு டைய நாட்டின் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்து புதிய முறையில் செய்யக் கூடிய காரியமாக இது இருக்கிறதா என்பதை அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 2½ டி.எம்.சி. தண்ணீர் கொண்டுவர மேலும் 200 கோடி ரூபாய் செலவிட வேண்டுமா என்பதையும் கிருஷ்ணா, பெண் ணாற்றிலிருந்து கொண்டுவர பாசிபிலிட்டி, பீசிபிலிட்டி பற்றியும் இவை எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, கேட்ட கேள்வியி னுடைய தொடர்பான விளக்கத்தை அளிக்க அமைச்சரவர்கள் மறுக்கிறார்களா அல்லது தயங்குகிறார்களா என்று புரியவில்லை. நானும் பேராசிரியரும் கேட்டது ஏற்கெனவே 20 கோடி ரூபாய் அளவுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதே குழாய் களை வைத்து, தொடர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மேலும் எவ்வளவு செலவாகும்? உலக வங்கி கடன் கொடுப்பது





அல்லது பண உதவி செய்வது என்றால் அவர்கள் சில நிபந்தனை களைப் போடுவார்கள். அவர்கள் ஏற்கனவே கடன்கொடுக்க அதிகமான நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள். மத்திய அரசு கிணறு தோண்டுவதற்கு கடன் வழங்குவதற்குக்கூட இவ்வளவு அடிக்கு அப்பால் இருந்தால்தான் கடன் கொடுப்போம் என்று நிபந்தனை போட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களுடைய உதவி இத்திட்டத்திற்கு வேண்டுமானால்உருக்குக் குழாய் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணம் தேவை இல்லை என்று மாநில அரசு சொல்லி, இப்போது இருக்கிற குழாய்களைக்கொண்டே திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பது கேள்வி. இந்தத் திட்டம் நிறைவேற்றப் படாமல் இருப்பதால் கடந்த 3 அல்லது 3½ ஆண்டுகளாக நாள் ஒன்றுக்கு 50,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் என்ற வகையில் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த இழப்பைச் சரிக் கட்ட இந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்குவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை மேற்கொள்வதில் இரண்டு பிரச்சனைகள் இருக்கின்றன. ஒன்று தொழில் நுட்பப் பிரச்சனை. இந்தப் பைப்புகளைத் தொடர்ந்து பயன்படுத்தினால் அவைகள் தொடர்ந்து பயனளிக்குமா என்று பார்க்க வேண்டும். அது பற்றி இரு வேறு கருத்துக்களை அதே நிபுணர் குழு தந்திருக்கிறது.

குறிப்பாக, மத்திய சர்க்காரிலிருந்து அமைக்கப்பட்ட குழு வினர்— எனக்கு சரியாக நினைவு இல்லை—இந்த பைப்புகள் மூலம் தண்ணீரை கொண்டு செல்ல முடியாது என்ற வகையில் தான் ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அதுவும் சுமார் 70 கோடி, 80 கோடி ரூபாய் —சரியாக ஞாபகம் இல்லை— அளவுக்கு வருகிறது. ஆக. தொழில் நுட்ப ரீதியாக இந்த பைப்புகள் நமக்கு பயன் தருமா என்பது ஒன்று இரண்டாவதாக இவ்வளவு செலவில் தண்ணீரை கொண்டுவந்து சென்னை மாநகருக்கு வழங்குவதில் 'காஸ்ட் பெனிஃபிட் ரேஷியோ' சரியாக இருக்குமா என்ற பிரச்சினை வருகிறது. கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவுக்கு செலவாகிறது. அந்த அளவுக்கு செலவு இந்த 2½ டி.எம்.சி. தண்ணீரை கொண்டு வர வேண்டுமா என்ற எண்ணம் ஏற்படுகிறது. மொத்தத்தில் ஒரு பிரச்சனை 'டெக்னிக்கல் ஃபீசிபிலிட்டி' - இரண்டாவது 'காஸ்ட் பெனிபிட் ரேஷியோ'. இவை இரண்டையும் பார்த்து முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். திட்டத்தை நிறைவேற்றுவது பெரிதல்ல. அத்திட்டம் பலன் அளிக்கவேண்டு மென்ற அடிப்படையில் அரசு ஆராய்ந்து வருகிறது. ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னால் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் கேள்வி நேரம்....

[1979 மார்ச் 12

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஒரு முக்கியமான கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்ட காரணத்தால் கேள்வி கேட்டவருக்கே கூட துணைக் கேள்வி கேட்க நான் அனுமதிக்கவில்லை. (திரு. மு. அம்பிகாபதி எழுந்தார்.)

திரு. சாதிக் பாட்சா அவர்களுக்குக் கொடுத்தால் நான் திரு. மு. அம்பிகாபதி போன்றவர்களுக்கும் கொடுக்க வேண்டி வரும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஒரு டெக்னிகல் க்ளாரிபிகேஷன் கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. சாதிக் பாட்சா அவர்களைக் கேள்வி கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நேரம் இல்லாத காரணத்தால்தான் சொன்னேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் எப்போதும் கேள்வி கேட்கிறபோது மிகவும் சுருக்கமாகத்தான் கேட்கிறேன். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் இன்ஜினியராக இருப்பதால்தான் நான் கேட்கிறேன். வேறு அமைச்சராக இருந்தால் நான் கேட்க மாட்டேன். இருந்தாலும் இப்போது நான் கேட்கவில்லை. அமைச்சரவர்களிடம் தனி யாகவே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் பத்து நிமிடங்கள் நீட்டிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்தத் திட்டங் களுக்கு என்ன செலவானது ? சென்னைக்கு வரப் போவது எந்தத் தண்ணீர், கிருஷ்ணா நதித் தண்ணீரா அல்லது வீராணம் தண்ணீரா ? அது எப்போது வரும். உலக வங்கி சிமென்ட் குழாய்களுக்குப் பதிலாக உருக்குக் குழாய்கள் போட வேண்டும் என்றெல்லாம் ஆலோசனை சொல்கிறது. பிறகு வேறொரு யோசனை சொல்லும். இப்படியே காலம் ஆகிறதே. ஆகவே எந்தத் தண்ணீர் எப்போது வரும் என்பதை அமைச்சரவர்கள் உறுதியாக அறிவிக்க முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே மூலக் கேள்வி எவ்வளவு செலவானது என்பதுதான். மற்றவை தொடர்பில்லாத துணைக் கேள்விகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 12]

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த வீராணம் திட்டத்திற்கு 22 கோடி ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அப்படி எல்லாம் செலவு செய்து போடப்பட் டிருக்கின்ற குழாய்களிலே சாலை ஓரங்களில் சின்னஞ்சிறு ஏழை எளிய மக்கள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் அந்த இரண்டு குழாய்களையும் ஒன்றாகச் சேர்த்து வீடுகள் கட்டுகிற வகையில் ஏழை எளியவர்களுக்கு வீராணம் வீடு என்று கட்டித்தர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள், இந்த வீராணம் திட்டத்தை அமல் நடத்துவதற்கு நிபுணர் குழு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் இந்தத் திட்டத்தைப் போடும் போது நிபுணர் குழுவின் மூலமாக ஆராய்ந்துதானே போட்டிருப் பார்கள். அப்படி ஆராய்ந்து போட்டிருக்கின்ற சமயத்தில் அந்த நிபுணர் குழுவில் யார் யார் இருந்தார்கள் என்பதைப் பார்த்து, அமல் படுத்த முடியாத திட்டத்தைப் போட்ட அப்பேர்ப்பட்ட பணியாளர்களிடம் விசாரணை நடத்தப்பட் டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, இந்தத் துணைக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, எந் தெந்த வகையில் செலவு செய்யப்பட்டது. எந்தெந்த வகையில் அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மேலும் தொடர்ந்தால் நஷ்டம் அதிகமா அல்லது தொடராவிட்டால் நஷ்டம் அதிகமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, எந்தெந்த வகையில் செலவு செய்யப்பட்டது என்பதற்கான தகவலை மட்டும் தருகிறேன். முன் தகைவுறு கற்காரைக் குழாய்கள், குழாய் பதித்தலும், இணைத்தலும், அழுத்தம் குறைக்கும் தேக்கங்கள் முதலியன ஆகியவற்றிற்கு செலவு ரூ. 4.52 கோடி. இயந்திரங்கட்கு முன் பணம் ரூபாய் 4.50 கோடி நீர் எடுக்கும் நிலையம் மற்றும் நீரேற்றும் நிலையங்கள் ரூபாய் 0.90 கோடி. வடக்குத்தில் உள்ள நீர் சுத்திகரிக்கும் நிலையம் ரூபாய் 0.75 கோடி. நில

ஆர்ஜிதம் மற்றும் சாலை அமைத்தலுக்கு ரூபாய் 2.65 கோடி. குழாய் பதிக்க பள்ளம் வெட்டுதல் ரூபாய் 1.05 கோடி. ப ரி அமைப்பு, எஃகு கருவிகள், சில்லரைச் செலவினங்கள் ஆகியவற்றுக்கு ரூபாய் 1.94 கோடி. ஏற்கெனவே வாங்கப்பட்டு தற்போது கையிருப்புள்ள பொருட்கள் அதாவது மிகு இழுவிசைக் கம்பி, எஃகு தகடுகள், எஃகு கம்பிகள், கருங்கற்கள் ஆகியவற்றின் மதிப்பு ரூபாய் 6.35 கோடி. ஆக மொத்தம் ரூபாய் 22.66 கோடி செலவு செய்யப்பட்ட தொகை.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல கோடி ரூபாய் செலவில் நடத்தப்படுகின்ற இந்தத் திட்டம் தோல்வி அடைகின்ற வகையிலே இதனுடைய மதிப்பீடுகளையும், முறைகளையும் அமைத்துத் தந்திருக்கின்ற, அதிகாரிகள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அதுமட்டுமல்லாமல் மேற்கொண்டு இந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகின்ற தொகையினைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10—10.]

மாண்புமிகு திரு .எஸ். இராகவானந்தம் : இதுபற்றிய நடவடிக்கைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டும் வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற வினாக்களுக்கான விடைகள் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

## புலிவானந்தல் குடிநீர்த் திட்டம்.

*வினா எண் 350—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கலசப்பாக்கம் தொகுதி, புலிவானந்தல் கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1975-ல் துவக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் முடிவு பெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

(இ) அத்திட்டம் எப்போது முடிவடையும் ?

---

உடுக்குறியிட்ட வினா எண் 350 முதல் 357 வரை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சடிக்கப் பெற்றுள்ளன.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்

(அ) ஆம்.

(ஆ) விரைவில் வேலையை முடித்துக் கொடுக்கும்படி ஒப்பந்தக்காரரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இரண்டு மாதங்களில் முடிவுறும்.

## தென்னாற்காடு மாவட்டத்தில் சிறிய பேருந்துகள்.

*வினா எண் 351—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன், திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் சிறிய பேருந்து வழித் தடங்கள் இதுவரை யாருக்காவது அளிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) எத்தனை வழித் தடங்கள் நடப்பாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம். அளிக்கப்பட்டுள்ளது. 1977-ம் ஆண்டிற்கு முன் 14 வழித் தடங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது. அவற்றில் தற்போது 9 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் (ஜீப் வண்டிகள்) ஓடிக் கொண்டு இருக்கின்றன. மீதி 5 வழித் தடங்களில் ஓடிய சிறிய பேருந்து வாகனங்கள் பெரிய பேருந்து வாகனங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) நடப்பு ஆண்டில், 20 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் ஓட்டுவதற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 10 சிறிய பேருந்துகள் (ஜீப் வண்டிகள்) ஓட ஆரம்பித்துள்ளன. மீதி 10 வழித் தடங்களில் சிறிய பேருந்து வாகனங்கள் விரைவில் உரிமையாளர்களால் விடப்படும்.

*வினா எண் 352—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமங்களை இணைக்க மினி பஸ் விடும் திட்டப்படி சங்கராபுரம் தொகுதியில் எந்தெந்த கிராமங்களுக்கு மினி பஸ் விடும் உத்தேசம் உள்ளது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) அரசம்பட்டு, தியாக துருகம், டி. பாண்டலம், எஸ். கொளத்தூர், வாணையாம்பட்டு, சித்தேரிப்பட்டு, குலங்குறிச்சி, பள்ளகச்சேரி, கலயநல்லூர், மூங்கில் துரைப்பட்டு, பாவந்தூர். மேலபழங்கூர், பகண்டை, அரியலூர், அத்தியூர், சம்போஜி, மோட்டாம்பட்டி, புதுப்பாளையம், ஏந்தல், மரூர், மாடம்பூண்டி, லால்பேட்டை, கள்ளக்குறிச்சி, பழைய திருவாங்கூர், பால், நாரோலை, மேலப் பழங்கூர், சித்தல், சோழம்பட்டு, நெடுயானூர், சேஷசமுத்திரம், எஸ். பி. பாளையம், ஊராங்கனி, சிட்டாந்தாங்கல், புத்திரப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு மினி பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திம்மாபுரம் அரசு பழத்தோட்டம்.

*வினா எண் 353—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியிலுள்ள திம்மாபுரம் அரசுப் பழத்தோட்டம் இலாபத்தில் நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அப்பழத் தோட்டத்தை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. தற்சமயம் மேற்படி பழத் தோட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கம் ஏதும் இல்லை. என்றாலும் இந்தப் பண்ணையின் வேலைகளைத் தீவிரப்படுத்தி அதிகமான பழக் கன்றுகளை உற்பத்தி செய்து அதிக இலாபத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருதையாற்றின் குறுக்கே அணை.

*வினா எண் 354—திரு. கே. சௌந்திரராசன்:— மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரியலூர் பகுதியில் மருதை ஆற்றின் குறுக்கே அணை கட்டி பாசனம் பெருகிட வழி வகுக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். இந்தப் பகுதியிலுள்ள மருதையாற்றின் நீர் உப்புத் தன்மை உள்ளதாக இருப்பதால் இதுபற்றி ஆராய ஒரு உயர் மட்டக் குழு அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை கிடைத்த பிறகுதான் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

மாரங்கியூர் பாசனக் கால்வாய்.

*வினா எண் 355—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம், மாரங்கியூர் பெண்ணையாற்று நீர் பாசனக் கால்வாய் (கிரேடுவால்) பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதனை முழுமையாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை. திட்டமிட்டபடி அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

சிதம்பரம் பால் வழங்கு யூனியன்.

*வினா எண் 356—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் பால் வழங்கும் யூனியனில் 7 இலட்ச ரூபாய் நட்டம் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) நட்டம் வராமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மேற்படி யூனியனில் 1976–77-ம் ஆண்டில் மொத்த நட்டம் ரூபாய் 7,70,332.52–ம் நிகர நட்டம் ரூபாய் 44,591·46-ம் ஏற்பட்டது. மேற்படி யூனியனில் 1977–78-ம் ஆண்டுக்கு தணிக்கை நடை பெற்று வருகிறது.

(ஆ) (1) ரூபாய் 6,00,000 செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிர் பதன சாதனங்கள் 1971-ம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாள் முதல் பல காரணங்களால் இயங்காமையினால் அதற்காக வாங்கப்பட்ட கடனுக்கு வருடா வருடம் வட்டி செலுத்த வேண்டி யுள்ளது.

(2) முன்னாள் அரசு பால் நிறுவனத்திற்குப் பால் சேகரித்து அனுப்பியதில் ஏற்பட்ட குறைவு, பால் கெட்டுப் போதல், தர மான பால் அனுப்பாமை.

(இ) (1) 1977–78-ல் மேற்படி யூனியனுக்கு பால் கொள் முதல் அதிகரிக்க அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 4 அரிசன சங்கங்களின் 204 அங்கத்தினர்களுக்கு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் மூலம் ரூ. 3,06,000 கடனும், அரிசன நல மான்யத் திட்டத்தின் கீழ் ரூ. 1,02,000 நிதியுதவியும், மற்றும் 6 சங்கங்களின் 111 அங்கத்தினர்களுக்கு ரூ. 1,11,000 அரசுக் கடனும் வழங்கப்பட்டு உள்ளது.

(2) யூனியன் பால் உற்பத்தி அதிகரித்து, குளிர் சாதன இயந்திரம் இயங்க ஆரம்பித்தால் நட்டம் சிறிது சிறிதாகக் குறைய வாய்ப்புள்ளது.

கோவை மாவட்ட பால் வழங்கு சங்கம்.

*வினா எண் 357— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட கூட்டுறவு பால் வழங்கும் சங் கத்தில் விநியோகிக்கப்படும் பால் அளவு என்ன ?

(ஆ) பால் விநியோக முறையை மாற்றியுள்ளதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) கோவை மாவட்ட பால் வழங்கும் சங்கம் என்று ஏதும் இல்லை. ஆயினும் கோவை கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் என ஒன்று இயங்கி வருகின்றது. இது தற்போது தினசரி 20,300 லிட்டர் பாலை பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.



(ஆ) கோவை தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்கள் முன்னிலையில் 1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25-ம் நாளன்று தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கோவை கூட்டுறவு பால் விநியோக ஒன்றிய நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி மிதி வண்டியில் பால் விநியோக முறையை மாற்றி பால் பூத் (milk booth) மூலம் விநியோகம் செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டது. இது அரசுக்குத் தெரியும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தன்னிலை விளக்கம்.

மத்திய அரசாங்க மின்சாரத் துறை அமைச்சர் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டில் மட்டும் கையொப்பமிட்டு புத்தாண்டு வாழ்த்து அனுப்பியது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9-ம் நாளன்று எதிர்கட்சித்தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மத்திய அமைச்சர், மின்சாரத் துறை அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். அது சம்பந்தமாக நான் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறபோது மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்தில் தமிழ்நாட்டிலுள்ள எம்.பி.-க்கள் அனைவருக்கும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே கையெழுத்திட்டு அனுப்பியிருக் கிறார்கள். தமிழ் இடம் பெறவில்லை, மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் ஏன் தமிழில் கையெழுத்து போடவில்லை, தமிழ் என்ன பாவம் செய்தது என்று கூறிய தோடு அந்தச் செய்தி அனைத்துப் பத்திரிகைகளிலும் அன்றைய தினமே விளம்பரம் செய்யப்பட்டது.

குறிப்பாக மாலை முரசு பத்திரிகையில் மத்திய மந்திரி திரு. பா. இராமச்சந்திரன் இந்தியில் கையெழுத்து போடுவதா என்ற கேள்வியோடு இந்த அளவிற்கு தலையங்கங்கள் இட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆக, அந்தச் செய்தியால் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் ஒரு தவறுதலான கருத்தை எதிர்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார்கள் என் பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் தங்களிடம் காட்டியதுபோல் மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் இந்தியில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தாண்டு வாழ்த்தை அச்சடித்து அனைத்து பாராளுமன்ற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 12

உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தமிழிலே தமிழ்நாட்டிலிருந்து போகிற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள் அதை நான் இங்கே படிக்கிறேன். ''தங்களுக்கு எனது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். பா. இராமச்சந்திரன்'' என்று தமிழில் எழுதி தமிழில்தான் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இது, மினிஸ்டர் பார் எனர்ஜி என்ற தலைப்பில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

அதோடு கூட மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ தவறுதலாக இதை இங்கே கூறிவிட்டார்கள் என்று எடுத்துக் கொள்வதற்கில்லை. காரணம், 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7-ம் நாள் முரசொலியில் இந்தியில் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்தினை, அதன் போட்டோஸ்டெட் காப்பி எடுத்து முரசொலிப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியிலும் ஆங்கிலத்திலும் வாழ்த்து என்று தலைப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது. இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அமைச்சர் திரு. பகுகுணா அவர்களின் புத்தாண்டு வாழ்த்தில் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதி ஆங்கிலத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். பெட்ரோலிய அமைச்சரும், முன்னாள் உத்தரப் பிரதேச முதல்வரும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவரும் ஆங்கிலத்திலேயே எழுதி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டிருக்கிறார் என்றும் போட்டிருக்கிறார்கள். இந்தியை தாய் மொழியாகக் கொண்ட உ.பி.-க்காரர் இப்படி ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுகிறார், ஆனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் இந்தியில் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்று ஒப்புக்கூறி ஒரு தவறுதலான கருத்தை தமிழ்நாட்டு மக்களிடையே பரப்பியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். திரு. பகுகுணா அவர்கள் கூட ஆங்கிலத்திலும் மட்டும் அல்ல, ஆங்கிலத்திலும், இந்தியிலும், துளுவிலும் இப்படி மும்மொழியிலும் கையெழுத்திட்டு அச்சிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே மத்தியில் இருக்கிற அமைச்சர்கள் மும்மொழித் திட்டத்தை உண்மையாகவே கடைப்பிடிக்கிறோம் என்ற வகையில்— குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கின்ற மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்கின்ற வகையில், தமிழிலும் கையெழுத்திட்டு தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இவ்விபரத்தை தங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 12]

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே மும்மொழிப் பிரச்சினை குறித்து நண்பர் பாண்டியன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதுகுறித்து நடந்த விவாதத்திற்கிடையில் நான் ஒரு சில கருத்துக்களை குறிப்பிட்டேன். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஜனதாக் கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் சில விளக்கங்களை தந்தார். அந்த விளக்கங்களுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன், ஆனால் நான் தவறான தகவல்களை தரவில்லை என்று சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அமைச்சர் அவர்களுடைய புத்தாண்டு வாழ்த்துச்செய்தி தமிழ்நாட்டிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட போது, அந்த முறையில் வந்த புத்தாண்டு வாழ்த்துச் செய்தியைத்தான் முரசொலி பிளாக் செய்து வெளியிடப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறனுக்கு அனுப்பப்பட்ட புத்தாண்டு வாழ்த்து செய்தியில், இந்தி, ஆங்கிலம் இரண்டும் தான் இடம் பெற்றிருந்தது, அதைத்தான் பிளாக் செய்து போடப்பட்டிருந்தது.

அந்த நேரத்தில் சென்னைக்கு வந்திருந்த அமைச்சர் நிருபர்கள்
இராமச்சந்திரன் அவர்கள் உடனடியாக
கேட்ட கேள்விக்கு நான் தமிழிலும் கையெழுத்து போட்டு
அனுப்பியிருக்கிறேன் என்று சொல்லவில்லை. அப்படி
சொன்னதாக எந்த பத்திரிகையிலும் வரவேயில்லை. அவர்
ஆங்கிலத்திலும் இந்தியிலும் கையேழுத்து போட்டு அனுப்பி
யிருந்த வாழ்த்து செய்திதான் பிளாக் செய்து வெளியிடப்
பட்டிருந்தது. ஆனால் இப்போது—தமிழிலும் கையெழுத்து
போட்டு புத்தாண்டு செய்தி அனுப்பப்பட்டதாக தெரிவிக்
கிறார்கள்— இதில் 12, ஜன்பத், புதுடெல்லி என்றுதான்
இருக்கிறது. இது எந்த ஆண்டுக்கு என்று தெரியவில்லை,
இந்த ஆண்டுக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துச்செய்திதானா
என்பது எனக்கு தெரியாது. அப்போது அமைச்சர் அவர்கள்
இந்த விளக்கம் தந்திருப்பார்களேயானால் நான் இதைப்
பற்றி இந்த அவையிலே பேச வேண்டிய அவசியமே ஏற்பட்
டிருக்காது. மின்சாரத்துறை அமைச்சர் திரு. பா. ரா.
அவர்கள் இந்த விளக்கத்தை அப்போதே கொடுத்திருப்பார்
களேயானால் இந்த நிலைமையே ஏற்பட்டிருக்காது. மிக
காலதாமதமாக நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இந்த விளக்கத்தைத்
தந்திருக்கிறார்கள். எப்படியோ தமிழில் கையெழுத்து போட
வேண்டும் என்கின்ற உணர்வு ஏற்பட்டு இருக்கிறது
என்பதை நான் பாராட்டுகிறேன். இந்தியிலே கையெழுத்து
போடக்கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். மூதறிஞர்
ராஜாஜி சொன்னது போல், இந்திக்கு கொஞ்சம்

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 12

வழிவிட்டாலும், ஆங்கிலத்தை அகற்றிவிட்டாலும் இந்தி வந்து நுழைந்துவிடும் என்று வாதிட்டிருக்கிறார்கள். அந்த வகையில்தான் இதை இங்கு எடுத்துக்கூறினேனே தவிர தவறான தகவலை நான் இங்கு சொல்லவேண்டும் என்று சொல்லவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : இப்போது சொல்லப்பட்ட புத்தாண்டு வாழ்த்துச் செய்தி எந்த ஆண்டுக்காக போடப்பட்டது என்று கேட்கப்பட்டது, 1980-ஆம் ஆண்டுக்காக இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ர. ஜெபமணி அவர்கள் பேசுவதற்கு எழுந்தார். ....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன விளக்கம் கொடுக்கப் போகிறீர்கள், சுருக்கமாகச்சொல்லுங்கள்.

திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அமைச்சர் பா. ரா. அவர்கள் நிருபர்களுக்கு சொல்லவில்லை என்று சொன்னார்கள். இங்கு வந்திருந்த அவர்கள் அமைச்சர் பெரம்பூரில் நடந்த பொதுக்கூட்டத்திலே அந்த கார்டுகளை எல்லாம் காட்டி விளக்கமாக பேசினார்கள். எங்களுக்குப் பத்திரிகைகள் இல்லை, அதனால் அந்தச செய்தி வரவில்லை. இது போதாதா, பத்திரிகை நிருபர்களை எல்லாம் அழைத்துச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? தமிழ் உணர்வைப் பற்றி சொல்கிறார்கள், தமிழை வளர்த்தவர்களே நாங்கள் தானே, எங்களுக்கு தமிழ் உணர்வு வரவேண்டும் என்று சொல்கிறார்களே, ஆண்டவனேதான் காப்பாற்றவேண்டும். இந்தியை யாரும் பலாத்காரமாக புகுத்தவில்லை. இந்தியையும் படியுங்கள் என்று தான் சொல்கிறோம். இந்தியை படிக்கவில்லை என்றால் நிச்சயமாக அது தேசியத்தை பாதிக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் கையெழுத்து இடுவதா, அல்லது தமிழில் கையெழுத்து இடுவதா என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். கையெழுத்து என்பது ஒரு அடையாளம் போன்றது தான், பாங்கு முதலியவற்றில் இந்த முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழில் கையெழுத்து போட வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 மார்ச் 12]

[முற்பகல் 10—20]

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மொழிப் பிரச்னையில் கல்வி அமைச்சர் கையெழுத்து இடுவது என்பது மனிதன் அடையாளமாகப் போடுகின்றான் என்ற அளவிலே சொன்னார்கள். எந்த மனிதனும், தாய் மொழியில் கையெழுத்திடுவதை விரும்புவான். அதற்கு மாறான நிலையை, தமிழ் நாட்டில் சிலர் மேற்கொள்ளும் காரணத்தால், இந்தப் பிரச்னை வருகிறது. இந்த இக்கட்டான கட்டத்தில், கையெழுத்து என்பது அடையாளமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லுகின்றபோது, அதிலிருந்து ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடும். காரணம், அந்த அடையாளம் எந்த மொழியிலும் இருக்கலாம். ஆனால் உணர்வு பூர்வமாக அந்த அடையாளம் இருந்தால்தான் நல்லது. அப்படி அமைய தமிழ்மொழியிலேதான் தமிழர்கள் கையெழுத்திட வேண்டும். அப்போதுதான் ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்களிடம், மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்த அடிப்படைக் காரணத்தினாலே தான் இந்த அரசு தமிழிலேயே கையெழுத்து போட வேண்டுமென்கிற உத்தரவைப் போட்டிருக்கிறது. தமிழ் மக்கள் யாருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல என்ற நிலையைத்தான் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தியில் கையெழுத்துப் போடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஒருவேளை தமிழ் நாட்டில் ஆட்சிபுரிகின்றவர்கள் அல்லது ஆட்சியைப் புரிந்தவர்கள், இந்தியில் போடுவது தவறு என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது எனக்கு தெரியாது. இருந்தாலும், மத்திய அரசில் அமைச்சராக இருக்கின்ற ஒருவர்; மும்மொழிக் கொள்கை இந்த நாட்டிலே இருக்கவேண்டுமென்கிற அடிப்படையில்தான், அவர் அமைச்சராக பதவியேற்கும்போது, அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சத்திய வாக்கு மூலம் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தியிலே கையெழுத்து இடுவது, எந்த முறையில் தப்பு என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கினால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இப்படி விவாகத்திலே இறங்கவேண்டாம். உங்கள் கருத்தைச் சொல்லி உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரை வாதத்திற்கு அழைக்காதீர்கள். நேரம்தான் வீணாகும்.

[1979 மார்ச் 12

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, ஜனதா
சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பாராளுமன்ற
ப்பினருக்கு புத்தாண்டு வாழ்த்து தமிழிலே வந்தது என்று
ல்லிவிட்டு, அதற்கு அடுத்தாற்போல் மத்திய அமைச்ச
மிருந்து மறுப்பு அவருக்கு வந்திருக்கிறது என்று சொல்லி
டால், எந்த சந்தேகமும் இல்லாமல், விளக்கமாக
லோரும் எப்படி புரிந்துகொள்ள முடியும். எந்த உறுப்
ருக்கு தமிழ்நாட்டிலே அப்படி அனுப்பியிருக்கிறார்கள்?

திரு. ஜே. ஜேம்ஸ் : தமிழ்நாட்டிலே இருந்து சென்றிருக்-
ற தண்டபாணி என்கிற எம். பிக்கு அத்தகைய வாழ்த்தை
ப்பியிருக்கிறார்கள். அந்தக் கார்டைத்தான் நான் இங்கே
டினேன்.

திரு. துரை முத்துசாமி : தமிழ் நாட்டிலே 39 பாராளு
ற உறுப்பினர்களும், ராஜ்ய சபை உறுப்பினர்களும்
க்கின்றார்கள். ஒரே ஒரு ஜனதா உறுப்பினருக்கு மட்டும்
வாறு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தகவல் சொன்னால்,
சரியான தகவல் கொடுத்ததாக ஆகாது.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) செஞ்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் தேதி அன்று தென்னாற்காடு மாவட்டம் மட்டப்பாறை என்ற கிராமத்தில் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களால் நடத்தப்பட விருந்த பள்ளி திறப்பு விழாவினையொட்டி, 1979-ம் ஆண்டு மார்ச்சு 10-ம் தேதி அன்று செஞ்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைப் பற்றியும், கழகச் சட்டப் பேரவை உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்களைக் கொலை செய்ய நடைபெற்ற முயற்சி குறித்தும், அதேபோல் பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டது, குறித்தும் அதனால் அந்தப்பகுதியில் நிலவிவரும் பதட்ட நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு—

1. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்,
2. திரு. க. அன்பழகன்,
3. திரு. துரை முத்துச்சாமி,
4. திரு. ஜே. ஜேம்ஸ்,



1979 மார்ச் 12]

5. திரு. மு. அம்பிகாபதி,
6. திரு. எம். ஏ. லத்தீப்,
7. திரு. ரா. உமாநாத்,
8. திரு. ஆர். கிருஷ்ணன்,
9. திரு. பி. ஈசுவரமூர்த்தி என்கிற சொரணம்,
10. திரு. எம். அண்ணாமலை,
11. திரு. என். வரதராசன்,
12. திரு. ஜி. கோவிந்தராசன்,
13. திரு. துரை கலியமூர்த்தி,
14. திரு. பொ. விஜயராகவன்.
15. திரு. நா. சுந்தரராஜ்,
16. திரு. ஒ. சுப்பிரமணியன்,
17. திரு. கே. கந்தசாமி,
18. திரு. மா. மணிமாறன்,
19. சேலம் திரு. மு. ஆறுமுகம்.

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பதுகுறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ற வகையில் இந்த
அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று அவசர முக்கியத்துவம்
வாய்ந்த பதட்ட நிலைமையை ஏற்படுத்தியுள்ள ஒரு நிகழ்ச்சியைக்
குறித்து அதற்கான அடிப்படையான காரணத்தை மட்டும் நான்
சொல்வதற்கு நிற்கிறேன். நல்லவேளையாக ஒத்திவைப்புத்
தீர்மானம் கொடுக்க நேரிட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.
இல்லையென்றால் இரங்கல் தீர்மானம் கொடுக்க வேண்டிய துக்க
கரமான நிலைமை இந்த அவைக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்.
செஞ்சி ராமச்சந்திரன் அவர்கள் இறந்து போகவில்லை என்பதைத்
பதைத்தான் முதலில் நான் சொல்ல விரும்புகிறேன். நல்ல
வேளையாக அப்படி ஒரு நிலைமை ஏற்படவில்லை. உயிருக்கும்
ஆபத்து இல்லையென்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்
டிருக்கிறேன். இந்த அவையின் உறுப்பினர் ஒரு
வருக்கு அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறபோது அந்த
வட்டாரத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்
தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலா
ளர் என்ற காரணத்தாலும் மக்களிடத்திலே தொடர்புகொண்டு
சுறுசுறுப்பாக இயங்குகிற ஒரு தொண்டர் என்ற அடிப்படையிலும்

அந்த வட்டாரத்தில் ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலையை அடிப்படையாக வைத்துத்தான் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்ருக ஏற்பட்டிருக்கிற மிக மிகப் பயங்கரமான ஒரு குறிப்பிட்ட நிகழ்வை அடிப்படையாக வைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அந்த வட்டாரத்தில் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்தில் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருவத்திகுன்னம் ஊராட்சியில் மதுரா மட்டப்பாறை என்ற கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டு அதைத் திறந்து வைப்பதற்கு ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர், பற்றுள்ளவர் என்ற காரணத்தால் நான்தான் அதைத் திறக்க வேண்டுமென்று அவர் விரும்பி—நான் அல்ல—என்னால் திறந்து வைக்க வேண்டுமென்று விரும்பி தீர்மானித்து என் பெயரையும் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் பெயரையும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பெயரையும் போட்டு ஒரு விளம்பரத்தைச் செய்திருக்கிறார்கள். அது 11ஆம் தேதி நடைபெறுவதாக இருந்தது. அவ்வாறு 11ஆம் தேதி திறப்பது தவறு என்று மாவட்ட ஆட்சித் தலைவரோ, டி.டி.ஓ.வோ, பி.டி.ஓவோ பொறுப்பில் இருக்கிறவர்களோ | தெரிவிக்கவில்லை. ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் திறந்து வைப்பதாக இருந்த நேரத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் திறந்து வைக்கிறார் என்பதால் ஆத்திரப்பட்ட அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்—இன்றைக்கு ஒன்றியத் தலைவர் அல்ல—11ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நடைபெறாமல் தடுக்க முதல் நாளே பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்க ஆட்களைக் கூப்பிட்டுக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதுகுறித்து தாசில்தாரும், வேறு ஒரு அதிகாரியும் ‘நீங்கள் இப்படி திடீரென்று திறந்து வைப்பது முறையல்ல’ என்று சொல்லியும் அவர்கள் திறந்து வைக்க முற்பட்டபோது அந்த ஊராட்சி மன்றத் தலைவர் ‘நாங்கள் அல்லவா தீர்மானம் போட்டவர்கள்; அதற்குமாறாக நீங்கள் திறப்பதா?’ என்று சொல்லி குறுக்கே தடுத்து மறியல் செய்வதுபோல் படுத்துவிட்ட காரணத்தால் பின்பக்கமாகப் போய் திறந்து வைத்ததாகப் பெயர் செய்தார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்ற நிலையில் செஞ்சியில் இருந்த சட்டமன்ற உறுப்பினர் அங்கு சென்று காவல் துறையினரைச் சந்தித்து அந்த நிகழ்ச்சி நடைபெறுவதைத் தடுக்க முற்படுகிறார்கள், நிச்சயமாக நாளைக்கு அந்த நிகழ்ச்சி நடைபெறும் பள்ளிக்கூடத்தை நாங்கள் திறந்து வைக்கப் போகிறோம் என்று தெரிவித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். ஆளுங்கட்சியினர் சட்ட விரோதமாக பின்புறமாகச் சென்று திறந்திருக்கிறார்கள்; அரசாங்க அலுவலர்கள் ஏற்றுக்கொண்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சி





அல்ல. பின்புறமாகச் சென்று திறந்து வைத்ததாகப் பெயர் செய்துவிட்டுத் திரும்பி வருகிறபோது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நீங்களும் நடத்த வேண்டாம், அவர்களும் நடத்த வேண்டாம் என்ற முறையில் ஏதோ ஒரு வகையில் சமாதானம் செய்ய முயற்சித்திருக்கிறார்கள். அதற்குப்பின் அவர்கள் திரும்ப வருகிறார்கள் காரில். அவர்கள் பெயரை நான் சொல்லத் தேவையில்லை. அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கிறார். காரில் வரும்போது செஞ்சி ராமச்சந்திரனின் காரைப் பார்க்கிறார்.

[முற்பகல் 10-30]

செஞ்சியில் சாலை ஓரத்தில் காரை நிறுத்தி வைத்துவிட்டு கழகத் தோழர்களிடத்திலே இளைஞர்களிடத்திலே அவர் பேசிக்கொண்டிருந்தபோது காரிலே வருகிறவர்கள், அவரைத் தொலைவிலேயே பார்த்துவிட்டு, அவன்தானடா மூல காரணம், அவன் மீது ஏற்றடா காரை என்று சொன்னதன் காரணத்தால் அந்தக் காரை ஓட்டிவந்த டிரைவரே அந்த உணர்ச்சிக்கு ஆளாகி செஞ்சி இராமச்சந்திரன் மீது, நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரின் மீது தங்களுடைய காரைக் கொண்டுவந்து உரையும் வகையில் ஏற்றியிருக்கிறார்கள். அந்தக் கார் வந்து மோதிய அந்த வேகத்திலே இந்தக் காரினுடைய கைப்பிடிகள் எல்லாம் கூட அடித்து எறியப்பட்டிருக்கின்றன. அந்தக் காரினுடைய பேனட் மோதித் தாக்கியதன் காரணமாக செஞ்சி இராமச்சந்திரன் தூக்கியெறியப்பட்டிருக்கிறார். உடனே பக்கத்திலே இருந்த தோழர்கள் அவரைத் தூக்கியிருக்கிறார்கள். வேகமாகக் காரைக் கொண்டுவந்து நின்றுகொண்டிருந்தவர் மீது மோதச் செய்து அவரைக் கொலை செய்யும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எந்த சட்டமன்றச் உறுப்பினராக இருந்தாலும் அவரைக் கொலை செய்ய வேண்டுமென்பதற்காக கடைத் தெருவிலே ஓரத்திலே நின்று கொண்டு இருந்தவரை மோதி அவர்மீது ஏற்றிவிட்டுப் போய்விடலாம் என்று கருதுவார்களானால் ஊரிலே இருக்கின்ற எந்த பெரிய மனிதர்களும் இப்படிப்பட்ட ஆபத்துக்களுக்கு உள்ளாக நேரிடும். இடித்துவிட்ட கார் அங்கே நிறகவில்லை. மக்கள் அந்தக் காரைத் துரத்தியிருக்கிறார்கள், கல் எறிந்து இருக்கிறார்கள், அதற்குப் பிறகு வேறு ஏதேதோ நடைபெற்றிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக என்ன ஆயிற்று என்பதை அரசாங்கம் தான் தெரிவிக்க வேண்டும்.

காருடன் நின்று கொண்டிருந்த ஒரு எம்.எல்.ஏ.-வை காரைவிட்டு மோதித் தாக்கிவிட்டு—அதுவும் நடுத்தெருவிலே நின்ற கார் என்றால் கூட நான் சந்தேகப்படுவேன்—ஓரத்திலே காருடன் நின்றிருந்தபோது தாக்கிவிட்டு ஓடிவிடுகிறார்கள் என்றால்—நல்லவேளை அந்த இடத்திலே நான் இல்லை என்றுகூட எண்ணினேன்—இன்றைக்கு மின்சாரத்துறை அமைச்சர் பெயரும்

இராமச்சந்திரன் தான், இப்படி இராமச்சந்திரன்களுக்கு எல்லாம்
இந்தக் கதி வரக்கூடாது என்று நான் மனதார விரும்புகிறேன்.
தாக்குவது, சட்டமன்ற உறுப்பினரை அடிப்பது, 10 பேர்கள்
இருக்கிற இடத்திலே தகராறு ஏற்படுவது என்பது வேறு. எந்த
அரசியல் கட்சியாக இருந்தாலும் யாருடைய துணையில் இருந்தா
லும் எந்த அதிகாரியின் தயவு இருந்தாலும் திட்டமிட்டு
தொடர்ந்து வந்து காரைக் கொண்டுபோய் இடிப்பது என்பதைப்
போன்ற பதட்டம் ஏற்படுத்தும் நிலை மிக முக்கியமான
நிகழ்ச்சி. அதைவிட சபாநாயகர் அவர்களே வேறு எதுவும்
இருக்கமுடியாது என்று நம்புகிறேன்.

பள்ளியினுடைய திறப்புவிழா நிகழ்ச்சியிலே நான் கலந்து
கொள்ளவேண்டுமென்ற அந்தத் தீர்மானம் சரியற்றது என்று
அறிவித்திருப்பார்களானால் நான்கூடப் போய் இருக்க
மாட்டேன். பள்ளிக்கூட திறப்பு விழாக்களுக்கோ மற்ற நிகழ்ச்சி
களுக்கோ போகவேண்டுமென்று விரும்புகிறவன் அல்ல நான்.
அந்த ஆர்வம் உள்ள வயதை உடையவன் அல்ல. அந்தப்
பஞ்சாயத்து நிறைவேற்றிய தீர்மானம் தவறாக இருந்தால் தெரி
விக்க வேண்டியவர்கள் அதிகாரிகள். அப்படி அதிகாரிகளும்
தவறு செய்திருந்தால் கோர்ட்டிலே அதற்காக 'ஸ்டே' தடை
ஆணை வாங்கியிருக்கலாம். அந்தத் தீர்மானத்தைத் தவறு
என்று அறிவித்துவிட்டு அரசாங்கத்தின் சார்பாக ஆளுங்கட்சியின்
சார்பாக விழாவை' நடத்தியிருக்கலாம். மேலே இருக்கின்ற
ஆளுங்கட்சியினருக்கு இது தெரிவிக்கப்பட்டிருக்க முடியும் என்று
நான் நம்பவில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற
உறுப்பினருடைய உணர்வு, காரணமாக அது என் உரிமை என்று
சொல்லி அதற்கான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பது
அந்தப் பகுதியிலே ஒரு ஆத்திரமூட்டும் நிலைய ஏற்படுத்தி
யிருக்கிறது. அது மட்டுமல்ல, மற்ற நிகழ்ச்சிகளையும் அங்கே—
நான் அதைவிட முக்கியமாகக் கருதுகின்ற மற்ற நிகழ்ச்சிகளை
யும் நடத்தமுடியாத அளவிற்கு—144 போட்டு தடை செய்திருக்
கிறார்கள். பகலிலே இரண்டரை மணியளவிற்கு கலைஞர்
அவர்களுக்கு தொலைபேசியிலே செய்தி வந்திருக்கிறது. செஞ்சி
இராமச்சந்திரன் மீது காரை ஏற்றிவிட்டார்கள், அவர் என்ன
ஆவார் என்று சொல்லமுடியாது, மருத்துவ மனைக்குக் கொண்டு
போகப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. அந்த
நிகழ்ச்சி ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் மணிக்கு நடைபெற்
றிருக்க வேண்டும். அந்தக் காவல் நிலையத்திலே, ஆளுங்கட்சி
யைச் சேர்ந்தவர்கள் நடைபெற்றவற்றை வேறு விதமாக வேண்டு
மென்று சொல்லுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. பகல்
ஒன்றரை மணிக்கு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு காரணமாக இருந்த
வர்கள் இரவு இரண்டு மணிக்குத்தான் கைது செய்யப்பட்டிருக
கிறார்கள்.





அந்தத் தாக்குதலை நடத்தியவர் ஊரில்தான் இருந்தார்.
அந்த ஊரைவிட்டு வேறு எங்கும் போய்விடவில்லை. நான்
எட்டு மணிக்கு செஞ்சிக்குப் போய்ச் சேர்ந்தேன். பொதுக்
கூட்டம் நிறுத்தப்பட்டதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.
அங்கிருந்த நண்பர்கள் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று
சொன்னார்கள். நான் அவர்களிடத்தில், ஒரு மாவட்டச் செய
லாளர் அடிபட்டுக் கிடக்கும்பொழுது வீரம் காட்டாதீர்கள் என்று
தடுத்து அனுப்பினேன். வெளியூரிலிருந்து 50 பேர், 100 பேர்
வந்திருந்தார்கள், அவர்கள் என்னைப் பார்த்தார்கள். திரு.
இராமச்சந்திரனை மருத்துவ மனையிலே பார்க்கச் சென்ற
பொழுது அவர் அங்கே இல்லை, ஐந்தரை மணிக்கே கடலூருக்கு
அவரை அனுப்பியிருக்கிறார்கள். அவர் ஆறரை மணி, ஏழு மணி
சுமாருக்கு அங்கு போய்ச் சேர்ந்திருப்பார். காவலர்கள் சிலரை
நடைபெற்றவைப் பற்றிக் கேட்டேன். அவர்கள், இப்படி ஒரு
அநீதி நடைபெறக்கூடாது, நடைபெற்றுவிட்டது, ஆனால்
இராமச்சந்திரன் பிழைத்துக் கொள்வார் என்று நம்புகிறோம்
என்று சொன்னார்கள்.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு 8 மணி முதல் 10 மணி
வரையில் நான் டிராவலர்ஸ் பங்களாவில் இருந்தேன். நண்பர்
கள் ஒவ்வொரு செய்தியாகச் சொன்னார்கள். கூடியவரையில்
அவர்களை அமைதிப்படுத்திவிட்டு இந்த நிகழ்ச்சி பற்றி அரசாங்
கம் தக்க நடவடிக்கை எடுக்கச் செய்யக்கூடிய வாய்ப்பு நமக்
கிருக்கிறது. ஆத்திரப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு,
பத்தரை மணிக்குப் புறப்படும் வரையில் காவல் நிலையத்துடன்
தொடர்பு கொண்டு டி.எஸ்.பி. இருக்கிறாரா, எஸ்.பி. இருக்
கிறாரா, மாவட்டக் கலெக்டர் அந்தப் பகுதியில் இருக்கிறாரா
என்று அறிந்து கொள்ள விரும்பினேன். அவர்கள் இருந்தால்
முறையான செய்தியை அறிந்து கொள்ளலாம் என்ற முறையில்
தொடர்பு கொள்ள விரும்பினேன். எங்கள் தோழர்கள் காவல்
நிலையத்துடன் தொடர்பு கொண்ட பொழுது அங்கிருந்தவர்கள்
எஸ்.பி. இருக்கிறார், டி.எஸ்.பி. இருக்கிறார் என்று பதில் அளித்
தார்கள். ஆனால் அன்பழகன், எம்.எல்.ஏ., பேச வேண்டு
மென்று சொன்னவுடன் வைக்கப்பட்ட போன் அதற்குப்பிறகு
எடுக்கப்படவே இல்லை. நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர்,
அதிகாரிகளை அடிக்கடி சந்தித்துப் பேசிப் பழக்கப்பட்டவன்
அல்ல.

ஆனால் இப்படியொரு நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகு,
அதில் உள்ள நியாயம் என்ன, உண்மை என்ன என்று அறிந்து
கொள்ள வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. மாலையிலே,
பேசுவதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்
டம் நிறுத்தப்படுகிறது. அதற்காக நான் வருத்தப்படவில்லை.
ஆனால் அந்தக் கூட்டம் நடக்குமிடத்தில் இருந்த 200

டியூப்லைட்டுகள் மாலை நான்கு மணிக்கு உடைக்கப்படுகின்றன.
அமைக்கப்பட்டிருந்த மேடை கொளுத்தப்படுகிறது. எல்லாம், ஒரு
கட்சியின் ஆதரவில் செய்த காரியம் என்பதைத் தெளிவாகச்
சொல்வதற்கு எங்களிடத்திலே ஆதாரம் இருக்கிறது, ஆனால்
எங்களுடைய ஆதாரம் இந்த அவையிலே எடுபடுமோ, எடு
படாதோ தெரியாது. அங்கு மேடை கொளுத்தப்பட்ட பிறகு,
அந்த மேடையைப் போட்ட தொழிலாளி தன்னுடைய பணத்தி
லிருந்து போட்ட மேடை, அதில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது:
என்னைக் காப்பாற்றுங்கள் என்று என்னிடத்தில் முறையிடு
கிறார். காவல் நிலையத்தில், என்ன செய்தி என்று கேட்ப
தற்காக டெலிபோன் செய்தால் என்னிடத்தில் பேசக்கூட
யாரும் தயாராக இல்லை. காவல் நிலையம் ஆளுங்கட்சிக்குத்
தான் சொந்தம் என்ற ஒரு எண்ணத்தில், எதோ ஒரு சூழ்நிலை
யில், மீறி அன்பழகனிடத்தில் பேசினால் நம் மீது குற்றம்
வந்து விடும் என்ற கருத்தில் யாரும் பேசவில்லை.

நான் பத்தேகால், பத்தரை மணிக்கு அங்கிருந்து கடலூ
ருக்குப் புறப்பட்டேன், செஞ்சி இராமச்சந்திரனின் நிலை புரியாத
நிலையில். அப்படிப் புறப்படும் வரையில் பக்கத்து அறையில்
தங்குவதாக இருந்த அதிகாரிகள் கூட வரவில்லை. அதற்குப்
பிறகு வந்திருக்கிறார்கள். என்னைப் பார்க்க வந்த தோழர்
களை டி.பி. யில் தங்கிவிட்டுக் காலையிலே செல்லும்படி சொல்லி
விட்டுச் சென்றேன். இரவு ஒரு மணிக்கு அவர்களைக் கைது
செய்திருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்ததைக்கூட
பெரிய பிரச்னையாக நான் கருதவில்லை. ஆனால் அவர்கள்
மீது வழக்கு ஜோடிக்கும் அளவிற்கு மூளை எப்படி வேலை
செய்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். போலீஸ்
காரனின் மூளையைப் புரிந்து கொள்ள முடியும் ஆசிரியராக
இருந்த என்னால். அந்த முறையில், முதல் கட்டத்தில் நடந்த
நிகழ்ச்சிகளையே, காலத்தை மாற்றி, ஒன்றே முக்கால் மணிக்கு
நடந்ததை மூன்று , மூன்றரை மணிக்கு நடந்ததாகவும்,
அதற்கு முன்கூட்டியே பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற
தாகவும், முன்னால் கட்ட வேண்டிய குதிரையை
வண்டிக்குப் பின்னால் கட்டினால் வண்டி ஓடாது என்ற
எண்ணத்தில், அந்தவழக்கி ல்ஓரளவுக்கு நியாயம் கிடைப்பதற்குப்
பதிலாக வேறுவிதமான நிலைமைகளுக்கு ஆளாகிவிடும் என்று
சந்தேகிக்கின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. நல்லவேளை
யாக நான் நிச்சயமாக நம்புகிறேன், சைக்கியேட்ரிஸ்ட்
டிடம் இதில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப்போக
மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், அந்த அளவிற்கு, எனக்குக்கூட விவரம் தெரி
விக்க முன் வரவில்லை. நான் அமைச்சராக இருந்தவன், ஒரு
கட்சியின் பொதுச் செயலாளர், எந்த போலீஸ் அதிகாரியின்





யோக்கியதைக்கும் என்னுடைய யோக்கியதை குறைவானது
அல்ல, எனக்கு அந்த விவரங்களைச் சொல்லி, அதில் எனக்குத்
திருப்தி ஏற்பட்டிருந்தால் இந்த உணர்ச்சியோடுகூட நான்
பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இந்தச் செய்தி
யைச் சொல்லிவிட்டால் சட்டமன்றத்தில் சொல்லிவிடுவார்.
ஆகவே, இவரிடத்தில் பேச்சு வைத்துக் கொள்ளக்கூடாது என்று
காவல் துறை கருதினால் அவர்களுக்கு உள்நோக்கம் இருக்கிறதா
அல்லவா என்பதை ஆளுங்கட்சியினரும், அமைச்சர்களும்தான்
தீர்மானிக்க வேண்டும். இங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்
பினர்களுக்கே உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முடியும் என்ற
நிலையைக் காணும்போது அது ஒரு தொடர்கதையாக வரு
கிறதோ என்று சந்தேகிக்கிறேன். அதற்காக நான் யாரையும்
குற்றஞ்சாட்டவில்லை. 'அட்மாஸ்பியரைச்' சந்தேகிக்கிறேன்.
அதற்காகவும் நான் யாரையும் குற்றஞ்சாட்டவில்லை.
அப்படித் துணிச்சலாகக் காரியம் செய்துவிட்டால் தப்பித்து
விடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பொது
மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள், அது வேறு. ஆனால் அரசாங்கத்
திற்கு மாபெரும் கடமையிருக்கிறது. அந்தக் கடமை இந்த
அரசு பொறுப்பாகச் செய்கிறதா என்று அறிய இந்தப் பிரச்
னையை அவையின், அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர
வேண்டிய கடமையிருப்பதால், இதில் இன்னும் பலரும் வாதிக்க
வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்ட காரணத்தால்— ஏற்படக்
கூடிய காரியம் அல்ல, ஏற்பட்டுவிட்ட காரியம்—எனவே,
இதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டும். இந்த அவையை
ஒத்திவைப்பது வழக்கம் இல்லை என்றாலும், ஒத்திவைக்காம
லேயே ஒத்திவைக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அப்படி
ஒத்திவைக்காமலே ஒத்திவைப்பதைவிட, ஒத்திவைத்துவிட்டு
அந்த அடிப்படையிலே விவாதிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டு
மென்று நான் கேட்டுச்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே,
மாண்புமிகு எதிர்கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள்,
அவர்களுக்கு வந்த தகவலை இங்கே குறிப்பிட்டார்கள். எனக்கு
வந்த தகவலின்படி அங்கே நடந்திருக்கிற சம்பவம், சட்ட
மன்ற உறுப்பினர் அங்கே தாக்கப்பட்டிருக்கிறார், பாராளுமன்ற
உறுப்பினரும் போலீஸ் ஸ்டேஷனிலே தாக்கப்பட்டிருக்கிறார்.
எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், விழாவிலே கலந்து
கொள்ளச் சென்ற அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.
இந்த நிகழ்ச்சிக்கு என்ன முக்கிய காரணம் ?

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
தொகுதி அமைப்பாளருடைய பெயர் பத்திரிகையிலேயோ,
கல்லிலேயோ இல்லையென்ற காரணத்தால்தான் அந்த

விழாவிலே இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்பட்டதாக எனக்கு வந்த தகவலிலிருந்து தெரிய வருகிறது. நான் முன்னமே குறிப்பிட்டேன், இப்படிப்பட்ட விழாக்கள் நடைபெறும்போது, என்ன வரையறைகளை, வரம்புகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று அரசாங்கம் அறிவிக்குமானால், இப்படிப்பட்ட நிலைமைகள் வராது என்று. அதற்கு மேலாக அங்கே உள்ள நிலைமையென்னவென்றால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருடைய சினிமா கொட்டகை தாக்கப்பட்டிருக்கிறது, கார் நொறுக்கப்பட்டிருக்கிறது ; இப்படிப்பட்ட நிலைமையிலே மிகவும் பதட்டமான நிலைமை இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, அனைத்துத் தரப்புப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, மக்களுடைய பாதுகாப்புக்கு வழி இல்லாத மிக அசிங்கமான நிலைமை நிலவுகின்ற காரணத்தாலே, சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டுகிற காரணத்தாலே, இப்படிப்பட்ட நிலைமைகள், அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இல்லையென்று சொன்னால், யாருக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று பொதுமக்களுடைய மத்தியிலே பீதியான நிலைமை இருக்கிற காரணத்தால், இந்த நிலைமைகளை விரிவாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சனையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, எதிர்கட்சியைச் சேர்ந்த செஞ்சி இராமச்சந்திரன் அவர்களை நேற்றையதினம் தாக்கியதாக, ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக துணைத் தலைவரவர்கள் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேரடியாக அது சம்பந்தமாக தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையென்று சொன்னாலும், பத்திரிகை வாயிலாகவும், எதிர்கட்சித் துணைத் தலைவரவர்கள் கூறியதிலேயிருந்தும் தெரிய வருவதைப் பார்க்கின்ற பொழுது, உண்மையிலே இது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதனை நிச்சயமாக நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். எதிர்கட்சியினருக்கு இம்மாதிரி நடப்பது இது முதல் தடவை அன்று, இதற்கு முன்னதாகவும் இந்த ஆட்சியில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று இந்த மாமன்றத்தில் நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம், ஆக, இந்த அளவுக்குச் சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்க இந்த அரசு தவறியிருக்கிற காரணத்தாலும், அது மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் நிச்சயமாக இது ஒரு மோசமான சூழ்நிலை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், என்னைக் கேட்டால், ஏற்கெனவே, நம்முடைய "முதலமைச்சர





வர்கள் கூறியிருக்கிறார்கள். மக்கள் பார்த்துக்கொள்வார்கள்
என்று. அவ்வாறு கூறியதன் விளைவாக, எந்தக் காரியத்தை
யும் மக்களே பார்த்துக்கொள்கின்ற அளவுக்கு வந்து விட்டார்கள்.
அப்படி ஆளுங்கட்சியிலே உள்ள மக்கள் பார்த்துக்கொள்வார்கள்
என்று சொன்னால், எதிர்க்கட்சியிலே உள்ள மக்களும் பார்த்துக்
கொள்ள வேண்... நிலைதான் ஏற்பட்டுவிட்டதா என்பதையும்
நான் கேட்கக் ...மைப்பட்டிருக்கிறேன். ஆக, இந்த அளவு
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இது இருக்கிறது.
ஆகவே, தாங்கள் இந்தச் சட்ட மன்றத்தின் இதர அலுவல்
களை ஒத்தி வைத்து, மேலும் இம்மாதிரி நிகழ்ச்சிகள்
நடைபெறா வண்ணம் அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்
கிறது என்பதை அறிய இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன்
அவர்கள் தாக்கப்பட்ட காரணமாக இரண்டு விஷயங்களை
நாம் பார்க்க வேண்டும். ஒன்று, அந்த பஞ்சாயத்து போர்டு
தீர்மானம் போட்டால், அவர்களுக்கு தீர்மானத்திற்கான
உரிமையை அளிப்பது உண்டா இல்லையா என்பது, மற்றொன்று
உறுப்பினர் பெயரை இணைத்திருக்க வேண்டும், கலந்திருக்க
வேண்டும் என்பது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு
விழாவிலே திறந்து வைக்கக்கூடிய சூழ்நிலையில் அழைத்
திருக்கும் போது, பிரதம மந்திரி அவர்களை அழைத்து வந்து,
மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் முதல் நாள் அதே
விழாவினை திறந்து வைத்தால் உங்களுக்கு என்ன உணர்வு
இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்த
வர்கள் ஒரு விழாவிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு
நிகழ்ச்சியை திறந்து வைக்கிறார்கள் என்றால், அது அனுமதிக்கப்
படுகிறது. அப்படி திறந்து வைத்தவர்களின் பெயர்கள்
பொறிக்கப்படுகின்றன. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு,
எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்கிறார்கள்
என்றுசொன்னால் அதனை தடுப்பதற்கு எல்லா விதமான முயற்சி
யும் செய்யப்படுகிறது என்ற நிலை இப்பொழுது இருந்து வரு
கிறது. இந்த பஞ்சாயத்தைப் பொருத்தவரையில் எதிர்
கட்சிக்காரர்களை மன்னார்குடியிலே ஒரு நீர்த்தொட்டி திறந்து
வைக்க அழைக்கப்பட்டதாலும், சட்டமன்ற உறுப்பினர் பெயர்
விடப்படுகிறது. செஞ்சியில் ஒரு சட்ட மன்ற உறுப்பினர்
வீதியிலே நடந்து கொண்டிருக்கும்போது கார் ஏற்றித் தாக்கப்

பட்டார் என்று சொன்னால், அப்புறம் அந்தக் கார் ஓடி விட்டதாம்—இப்படிச் சொன்னால், யார் யாரை வேண்டுமானாலும் கொலை செய்யலாம், எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று இல்லை—யாரை வேண்டுமானாலும் யார்வேண்டுமானாலும் கொலை செய்யலாம். பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுவிடும். இதைபற்றி பகிரங்கமாக விசாரிப்பதற்கு உயர்நீதி மன்றத்தினுடைய நீதிபதிகளைக் கொண்டு, விசாரிக்க வேண்டும்.

அண்மையில் கூட இரண்டு பேர் கொலை செய்யப்பட்ட போது, தமிழகத்திலே இருக்கிற கம்யூனிஸ்டுகளையெல்லாம் நக்ஸலைட்டுகள் என்று கைது செய்தீர்கள். பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் படுகொலைக்காக ஒருவரை கைது செய்திருக்கிறார்கள். எனவே, உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டு முறையாக பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அதுபற்றி விளக்கமாக விவாதிப்பதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர்கள் கலந்து கொள்கிற சில விழாக்களிலே, சில நாட்களிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் சிலர் அழைக்கப்படாமலேயே விழாக்கள் நடத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு இந்த அவையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்படுகின்ற நேரத்திலே எல்லாம் விழாக்களுக்கு ஏற்பாடு செய்கிறவர்கள் செயல்கள் இது, அது தவறாக, இருந்தாலும் அது விஷயத்தில் அரசு ஆலோசனை தான் சொல்ல முடியும் தவிர அவர்களை கட்டாயப்படுத்த முடியாது என்கிற அளவிலே இங்கே பதில்கள் தரப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் அந்த அமைப்பு ஒரு கட்டடத்தை திறக்க முறையாக தீர்மானத்தை நிறைவேற்றி, அதனை முறையாக நடத்தி அழைப்பிதழ்கள் அச்சடித்து இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்திருக்கிற இதிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் அந்தத் தொகுதியுடைய சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அழைக்கப்படவில்லை. அவருடைய பெயர் அழைப்பிதழிலே சேர்க்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சுந்தரராஜன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார். நான் நேற்றைய தினம் அங்கே சென்றிருந்தேன். அங்கே விசாரணை செய்த அடிப்படையில் நான் பேசுகிறேன். அந்த ஒரே காரணத்திற்காக அந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் அவர்களையும் முன்னாள் தலைவர் அவர்களையும், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் தற்கால தலைவரையும் பயமுறுத்தி, எங்களுடைய பெயர் சேர்க்கப்படாததால் அதை நாங்களே திறந்து வைக்கிறோம்





என்று, அந்த ஊர் மக்கள் தடுத்தும் கேளாமல், முன்னாலே மக்கள் இருந்தால் நாங்கள் பின கதவு வழியாக திறக்கிறோம் என்று சொல்கிற நிலைமையை நாட்டிலே பாராட்டுவார்கள் என்று சொல்ல முடியாது. அந்த தொகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரை தலைமை வைத்து நடத்துவது இப்படிப்பட்ட நிலைமைகள் நமக்கும் நாட்டுக்கும் நல்லதா என்பதை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 10—50]

இன்னொன்று, திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்களை நிச்சயமாக கொலை செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு செய்து இருக்கிறார்கள். அதிலே கிரிமினில் கான்ஸ்பிரசி இருக்கிறது. அதற்கு நோக்கம் இருக்கிறது. அதற்கு நோக்கம் என்னவென்றால் அவர்களுடைய பெயர் அங்கே சேர்க்கப்படாத காரணத் தால் கோபமுற்று இருக்கிறார்கள். ஒன்று, இரு தரப்பினரை யும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறபோது அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் ஆளும் கட்சியில் இருக்கலாம், எதிர்க் கட்சியிலும் இருக்கலாம். ஒரு நிகழ்ச்சியில் பங்குகொள்ள உரிமை இருக்கிறது எனறு சொன்னாலும் அதற்காக உரிமை கொண்டாட முடியாது. ஒரு நிகழ்ச்சியில் அந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொள்ள உரிமை பெற்று இருக்கிறார் என்றாலும், ஒரு நிகழ்ச்சியை நடத்துகின்றவர்கள், எந்த வகையில் அதை நிறை வேற்ற வேண்டும் என்று தீர்மானிக்கிறார்களோ அந்த வகையில் தான் அதனை நடத்தப்போகிறோம் என்று சொல்கிற நேரத்தில், அதனைப் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் வேறு காரணமாக செஞ்சி நகரத்திற்கு வந்து தோழர்களோடு பேசிக்கொண்டு இருந்தபோது தொடர்ந்து வந்து அவர்கள் வந்த காரை திரு. செஞ்சி இராமச் சந்திரனை நோக்கி அவர்கள் வேகமாக விட்டு இருக்கிறார்கள். என்றால், அவர்களைக் கொலை செய்ய வேண்டும், திரு செஞ்சி இராமச்சந்திரனை கொலை செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு சதி செய்யப்பட்டு இருக்கிறது என்பதை மற்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும், தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு சட்ட மனற உறுப்பினருக்கே இந்த கதி என்றால், அவர் என்ன குற்றம் செய்தார்? அங்கே இருக்கிற ஒன்றிய ஆணையாளர், ஒன்றியத் தலைவர் ஆகியோர் இருவரும் சேர்ந்து நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களைக் கொண்டு அந்தப்பள்ளிக்கூடத்தை திறந்து வைப்பது என்று முடிவு எடுத்து இருகிறார்கள். அவர் பள்ளிக்கூடத்தை திறந்து வைக்கக்கூடாதா? பள்ளிக்கூடம் திறந்து வைப்பது இருக்கட்டும். எத்தனை இதயங்களில் அவர் கல்வி யின் கண்களை திறந்து இருக்கிறார் என்பதை இந்த நாடே

அறியும். அவர் கல்லூரியில் பேராசிரியர்... ...ந்து எத்தனை இதயங்களில் ஒளிமயமான கல்வி உணர்வுகளை திறந்து வைத்து இருப்பார். அதற்கு இந்த முடிவா?

அரசாங்கம் இதனைச் சாதாரணமாகக் கருதக்கூடாது. இதிலே அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறது. அரசாங்கம் திட்டமிட்டுச் செய்தது என்று சொல்லவில்லை. இது குறித்து முறையாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்பதற்காக, எல்லா விவரங்களையும் சொல்லி, பிரச்சினையைக் குறித்து நானே நேரடியாகச் சென்று விவரங்களைத் தெரிந்து வைத்து இருக்கிறேன் என்ற காரணத்தால், நானும் மற்றவர்களும் விரிவாக பேச வேண்டிய அவசியம் இருப்பதால், இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, இந்தத் தீர்மானத்தை இந்த அவைமுன் முன்மொழிகிறேன.

*<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த சம்பவங்கள் குறித்து எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விவரமாகக் கூறியிருக்கிறார்கள். இது மிகவும் சீரியஸ்ஸான விஷயம். பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பள்ளிக்கூடத் திறப்புவிழா, அந்தத் திறப்பு விழா எப்படி நடத்துவது என்பது குறித்து முன்கூட்டியே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் ஒன்றியத்தின் அதிகாரியாக இருக்கும் ஆணையாளர் இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார். தங்களுடைய பெயர்கள் அதிலே இல்லை என்று சொன்னால் அந்த ஆணையாளரை கூப்பிட்டு இந்த அரசு எல்லோரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி சமாதானப் படுத்தியிருக்கலாம். அதைச் செய்யத் தவறிவிட்டு, எப்படியாவது அந்த விழாவை தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது வேறு விதமாகச் செய்ய வேண்டும் என்பதற்கு இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவது சரிதானா? அதுவும் முன்கூட்டியே இப்படி நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறபோது, அதுஅரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கும், அரசும் இதை முனகூட்டியே அறியும். ஆகவே, அந்த அவகாசத்தை வைத்து அரசாங்கம் இந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை தடுத்து இருக்கலாம். அதோடு தீர்மானம் போட்டபடிதான் அவர்கள் இன்விடேஷன் அடித்து இருக்கிறார்கள். அப்போது நாடாளுமன்ற உறுப்பினரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அந்த முறையை அவர்கள் கையாண்டு இருக்கலாம். அதை விட்டு விட்டு அத்துமீறிய செயலில் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இந்த நிகழ்ச்சிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இது ஒன்று.





கரும்பலகையில் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பொறிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொண்டார்கள், இப்போது பொறிக்கப்பட்டு விட்டதா? பொறிக்கப்படவில்லை. வேறு விஷயம் அல்லவா பொறிக்கப்பட்டு வந்து இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்தப் பிரச்சினை அதோடு மட்டும் நிற்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் கூறியது மாதிரி அந்தச் சம்பவம் செஞ்சிக்கு 7 மைலுக்கு அப்பால் நடந்தது. ஆனால் செஞ்சி நகரத்திற்கு வந்து திரு. செஞ்சி ராமச்சந்திரனை பார்த்து காரை செலுத்தியிருக்கிறார்கள். அதற்குத் தேவை என்ன? ஆகவேதான் சொல்கிறேன, இது திட்ட மிட்டு சதி செய்யப்பட்டது. நல்லவேளை அங்கே இருந்தவர்கள் அவரை வேறு வகையில் தூக்கிக்கொண்டு விட்டார்கள். அதனால் தான் எலும்பு முறிவு ஏற்பட்டதோடு போய்விட்டது. இல்லாவிட்டால் நிலைமை வேறு விதமாகப் போய் உயிர் பிரிந்து போகும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கும்.

இரண்டாவதாக, சட்டத்தை தன் கையிலே எடுத்துக் கொண்டு, தாக்குதல் நடத்தியிருக்கின்ற செய்தி வந்திருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்ன என்று பார்த்தால், எனக்குத் தோன்றுகிறது. இன்றைக்கு இருக்கிற ஆளும் கட்சி பத்திரிகைகளில் எதிர் கட்சிகளையும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியையும் சேர்ந்த உறுப்பினர்களின் மீது ஆத்திர மூட்டக்கூடிய வகையில் சில கட்டுரைகளை சிலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை ; அது உங்களுக்குத் தெரியும். இது ஒரு காரணமாக இருக்கலாம். இது செஞ்சியோடு நிற்கிற காரியமல்ல ; இந்தப் போக்கு பல்வேறு இடங்களுக்கு பரவக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : செஞ்சியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். வேறு இடங்களுக்குப் போக வேண்டாம்.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u> : இப்படிப்பட்ட நிலைமைகளை அனுமதித்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் பல்வேறு இடங்களுக்கும் பரவி விடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடும். அப்படி ஏற்பட்டால் ஜனநாயகம் பாழ்பட்டுப் போகும். பள்ளிக் கூட திறப்பு விழாவை ஆளும் கட்சியினரை வைத்துத்தான் செய்ய வேண்டும் ; அப்படி இல்லை என்றால் இப்படித்தான் செய் தோம் என்று திட்டமிட்டு செய்கின்ற காரியங்களை அனுமதித் தால் இந்த நிலைமை நாடு பூராவும் வேறு விதமாக பரவிவிடக் கூடிய நிலைமை நிச்சயமாக ஏற்படும். எதிர்க் கட்சிக்காரர் கள் பொறுமையாக இருக்க வேண்டும். எப்படிப்பட்ட ஆத்திர மூட்டும் செயல்களில் ஆளும் கட்சியினர் ஈடுபட்டாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். வேண்டுமென்ற முறையில் காரியங்

கள் நடக்குமானால். நாட்டில் அமைதி இருக்க முடியாது. ஆகவே, இதுபற்றி விரிவாகப் பேசி, ஒரு முடிவு காண, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி ; தலைவரவர்களே, செஞ்சியில் சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்களைக் கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அவர்மீது காரை மோதி காயம் ஏற்படுத்தி, அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைப்பெற்று வருவதாக இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு பின்னணியாக இருந்தது, பட்டப்பாறைகிராமத்தில் இருந்த பள்ளியைத் திறக்க வேண் வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவரை வைத்து திறக்க வேண்டுமென்று முதலிலே திட்டமிட்டு இருந்ததாகவும், அதை மாற்ற ஆளும் கட்சியினர் முயற்சி செய்து, தாங்களே திறக்க வேண்டுமென்று நினைத்து ஒரு நாள் முன்கூட்டியே நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திறந்து வைத்ததாகவும் அதன் விளைவாக பல சம்பவங்கள் நடைபெற்றதாகவும் இங்கே பேசினார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்த வரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல பத்திரிகைகளில் பல்வேறுவிதமான செய்திகள் வந்திருக்கின்றன. அதனால் நான் அதைப்பற்றி விவாதிக்க ரூல் 42-ன் கீழ் என்னுடைய தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். ''தினகரன்'' பத்திரிகையில் தந்த செய்தி ஒருவிதமாக இருக்கிறது. தினத்தந்தி பத்திரிகையில் வந்த செய்தி இன்னொருவிதமாக இருக்கிறது. தினத்தந்தியில் இதற்கான ஒரு பின்னணியையும் அமைத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் அந்த பள்ளிக்கூடத்தை திறந்து வைத்துவிட்டு, அதன் பின்னால் இந்திரா காங்கிரைசச் சேர்ந்த பெருமாள் நயினார் என்பவர் திரு. வேணுகோபால் காரை ஓட்டிவர, திறப்பு விழாவுக்கு ஆட்சேபம் தெரிவிக்கின்ற வகையில் அவர் கார் முன்னால் மக்கள் மறியல் செய்து, அந்த காரை கல்லால் எறிந்து சேதப்படுத்தியிருக்கிறார்கள். கல்லெறிபட்டு, அந்த நாடாளுமன்ற உறுப்பினர் நெஞ்சிலே காயம் ஏற்பட்டது என்று தினத்தந்தியில் செய்தி போட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால், செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய கார் அருகிலே நின்று நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, பின்னால் வந்த கார் ஒன்று வேகமாக மோதி அவருக்கு காயம் ஏற்பட்டு, நண்பர்களுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் காயம் ஏற்பட்டது





என்று மற்றொரு பத்திரிக்கையில் செய்தி வந்தது. செய்திகள் எப்படி இருந்தாலும் ஜனநாயக மரபுப்படி, ஜனநாயக கடமையை ஆற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார் ; அவரை கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள்.

இதிலே இருக்கிற பின்னணியைப் பார்க்கிறபோது, ஆளும் கட்சிக்காரர்கள் திறப்பு விழா நடத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில மக்களைத் தூண்டிவிட்டவர் செஞ்சி இராமச்சந்திரன் ; ஆகவே, அவரை கொலை செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு, அவர்மீது காரை மோதச் செய்தார்கள்; அந்த சூழ்நிலையை உருவாக்கினார்கள் என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

அடுத்தபடியாக, மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் கல்லெறியப்பட்டு, காயம் ஏற்பட்டிருக்கிறது ; அவருடைய காருக்கும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த முக்கியமான ஒரு நபர் அந்தக் காரை ஓட்டிச் சென்றிருக்கிறார். இதன் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. அதன் பிறகு அந்த இந்திரா காங்கிரஸ்காரருடைய தியேட்டர் சினிமா கொட்டகையும் தீ வைக்கப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது.

[முற்பகல் 11--00.]

இது தொடர் கதையாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஏதோ ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று கட்சி சார்புடைய பிரச்னை மாத்திரமல்ல இது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கும் அரசியல் காரணம் இருக்கிறது என்ற சந்தேகம் பலருக்கு எழுந்து குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன.

இதே போல பல இடங்களில் மக்களுடைய பிரதிநிதிகளின் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடிய சூழ்நிலைகள் இருந்து வருகின்றன. இந்த சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் உயிருக்குக் கூட ஆபத்து விளைவிக்கப்பட்டது. இந்த அளவுக்குச் சூழ்நிலை வளருமேயானால் யாருக்குமே பாதுகாப்பு கிடையாது என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஜனநாயகத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுவதை மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆளும் கட்சியினர்

ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் எதிர்க் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தோடு செயல்படுவார்களேயானால் அது மிக வேதனைக்குரியது. இதையெல்லாம் அமைச்சரவை கவனிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக எந்தக் காரணமும் இருக்கக்கூடாது. அந்தத் தொகுதி மக்கள் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று பார்க்காமல் அந்தந்தத் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் விழா நடத்துவதற்குரிய வகைகளில் அரசு பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அது மாத்திரமல்ல. இதற்கெல்லாம் காரணம் என்ன என்ற உண்மை நிலையை இந்த மன்றம் நாட்டு மக்களுக்கு உணர்த்துகிற வகையில் மேற்கொண்டு இங்கே விசாரணை நடத்துவதற்கு மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

*திரு சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய முன்தினம் செஞ்சி தொகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் செஞ்சி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியும், அவரைக் கொல்வதற்குரிய முயற்சிகள் நடந்தன என்ற செய்தியும் உண்மையிலேயே ஜனநாயகத்திலேயும் பொது வாழ்க்கையிலேயும் நம்பிக்கை கொண்ட அத்தனைபேரும் கவலைப்படக் கூடியனவாகும். தாக்கப்பட்டவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர் என்பது இங்கே பிரச்சினை இல்லை. பொது வாழ்க்கையில் ஈடு பட்டிருப்பவர்களுக்கு எத்தகைய பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பினை அவர்கள் ஆற்றக் கூடிய நேரத்தில் அவர்களுக்கு இத்தகைய இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களால் கதை-வசனம் எழுத பட்டு மந்திரி குமாரி என்ற ஒரு திரைப்படம் வந்திருந்தது. அந்தப் படத்தில் பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால், புலி ஆட்டைக் கொல்லாமல் இருந்தால், கொக்கு மீனைக் கொத்தாமல் இருந்தால் நானும் கொலை செய்யாமல் இருப்பேன், கொள்ளை அடிக்காமல் இருப்பேன் கொலை செய்வது ஒரு கலை என்று திரு. எஸ். ஏ. நடராஜன் அவர்கள் சொல்வதாக ஒரு காட்சி வருகிறது. அந்தக் காட்சி என்னுடைய நினைவுக்கு வருகிறது. அவர்கள் அதனை ஒரு கற்பனையாகத்தான் வடித்திருக்கிறார்கள். அந்த மாதிரி கற்பனைச் சம்பவங்கள் போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம், அதாவது



கொலை செய்வது எல்லாம் கற்பனைக் கதைகளில் இருக்கலாமே ஒழிய நாட்டிலே அடிக்கடி நடக்கின்ற உண்மை நிகழ்ச்சியாக ஆகக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தாக்கப்படுபவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பது பிரச்சினை அல்ல. இந்த நாட்டில் இந்த மாதிரி சம்பவங்கள் ஒரு சங்கிலித் தொடர் போல அடிக்கடி நாட்டிலே இப்போது நடைபெறுகின்றன. இம்மாதிரி நடந்தால் தமிழ் நாட்டினுடைய அரசியல் அமைதிக்கும் ஆரோக்கியத்திற்கும் எதிர்காலத்திலே ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் ஆகவே நடந்திருக்கின்ற இந்த சம்பவத்தை விசாரிக்க ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மை நிலையைக் கண்டறிய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மிகவும் அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு இன்றைய சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானமாக இருக்காது, இது இரங்கற் தீர்மானமாக ஆகியிருக்கலாம், அந்த அளவிற்கு கொலை முயற்சி செஞ்சியில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு இந்தப் பேரவை உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது உண்மையிலேயே அத்தகைய ஒரு இரங்கற் தீர்மானம் வருவதற்கு நிச்சயமாக நாங்களும் அனுமதித்து இருக்க மாட்டோம். அந்தச் சூழ்நிலை இருக்கக்கூடாது என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களைப் பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும் என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அதேபோல் நான் இன்னொன்றையும் தெரிவிக்கவிரும்புவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்களைப் பற்றியும் அதேபோல் ஒரு இரங்கற் தீர்மானம் நாடாளுமன்றத்தில் வரக்கூடிய ஒரு சூழ்நிலையையும் நிச்சயமாக பேராசிரியர் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என்பாருமை நண்பர், சட்டமன்ற உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியுமோ அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்களைப் பற்றியும் நிச்சயமாக பேராசிரியர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே இந்தப்

பிரச்னையை அணுகுகிறபோது, என்ன நடந்தது
நாம் பார்க்கிற அதேநேரத்தில் எந்தக் காரியம் நடந்தது என்பதை
வன்முறையில் கொண்டுபோய் விடுமானால் நடந்தாலும் அது
நிலைமைகளை வளர்த்துவிடும் என்பதற்கு இது எந்த அளவிற்கு
ரணம். ஆங்கிலத்தில் சொல்வார்கள் "violence is a ஒரு சிறந்த உதா
weapon" என்று. வன்முறை என்பது இரண்டு double-edged
குறிப்பிடுவார்கள். அதேபோல் எந்த முனைக் கத்தி என்று
கொண்டு போகும் என்பதை நாம் அளவிற்கு அந்த நிலைமை
வேண்டும். இங்கே ஒருகணம் நிச்சயமாகச் சிந்தித்துப்பார்க்க
என்பதையும் இன்னொருவர் ஒருவர் சட்டமன்ற உறுப்பினர்
யும் நாம் மறந்து நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் என்பதை
தோமானால் உண்மை என்ன, சம்பவத்தைத் தொகுத்துப் பார்த்
நாம் நன்றாகப் புரிந்துக் நிலைமைகள் என்ன என்பதை
சட்டமன்ற உறுப்பினரும் கொள்ள முடியும். ஏனென்றால்,
நாடாளுமன்ற உறுப்பினரும் அதே தொகுதியைச் சேர்ந்தவர்,
அவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள் அதே தொகுதியைச் சேர்ந்தவர்.
பேர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று பார்ப்பதைவிட இரண்டு
படையில் நாம் அந்தப் பிரச்னையை அணுகுவோமானால் என்ற அடிப்
என்ன நடந்தது என்பதை நமக்கு நிச்சயமாக எடுத்துக்காட்டும். அங்கு
செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் திருவதிக்குன்னம்
ஊராட்சியின் பெயர். அந்த ஊராட்சி என்பது
பாறை என்பது சிற்றூர். அந்தச் சிற்றூரில் எல்லையில் மட்டப்
ஒன்றியத்தின் சார்பில் துவக்கப் பள்ளிக் கட்டடம் அந்த ஊராட்சி
பட்டுள்ளது. அந்தப் பள்ளிக் கட்டடத்தை கட்டி முடிக்கப்
வேண்டுமென்று அந்தத் தொகுதி சட்டமன்ற திறந்து வைக்க
இராமச்சந்திரன் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை உறுப்பினர் செஞ்சி
வைத்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த பேராசிரியரை
பாடு செய்து அதை சட்டமன்ற உறுப்பினர் நிகழ்ச்சியை ஏற்
யில் பேராசிரியர் வந்து திறந்து வைக்கவும் அவர்கள் தலைமை
ஒன்றியத் தலைவர் திரு. பெருமாள் நயினார் முன்னாள் ஊராட்சி
என்று அந்த நோட்டீஸ் அச்சடிக்கப்பெற்று முன்னிலையிலும்
பள்ளிக்கூட நிகழ்ச்சி இருந்தது. இதற்கிடையில் 11-ம் தேதி அந்தப்
ஒன்றிய ஆணையாளர் இந்த நிகழ்ச்சியை அந்த ஊராட்சி
ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடம் ஏற்பாடு செய்த
"இந்த நிகழ்ச்சியை எங்களைக் சொல்லியிருக்கிறார்கள்,
அரசாங்கத்தைக் கலக்காமல் செய்கிறீர்கள், கலக்காமல் செய்கிறீர்கள்,
நிகழ்ச்சி வேண்டாம்" என்று சொல்லியதோடு தயவு செய்து இந்த
களுக்கு ஒரு அறிவிப்பும் ஒன்றிய ஆணையாளர் மட்டுமல்ல, அவர்
திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு 7—3—1979 அவர்கள் அளித்
அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு

'திருவதிக்குண்ணம் மதுரா மட்டப்பாறையில்
செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டடமானது ஊரா இருக்கும்
நிதி, ஊராட்சி ஒன்றிய நிதியைக் கொண்டு கட்டி முடிக்க பள்ளிக்



கட்டடத்தை திருவந்திக்குண்ணம் ஊராட்சி தலைவரான தாங்கள் 11—3—1979-ல் அதிகார பூர்வமாக திறக்க விழா நடத்த ஏற்பாடுகள் செய்து அதற்கான அழைப்பும் அந்த அழைப்பில் நிகழ்ச்சி நிரலும் அச்சிடப்பட்டிருப்பது எனது கவனத்திற்கு வந்திருக்கிறது.

மேலும் செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆணையராகிய என் பெயரை என்னைக் கேட்காமலும் என் சம்மதத்தைப் பெறாமலும் திறப்பு விழா அழைப்பிதழில் போடப்பட்டுள்ளதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.

மேற்படி பள்ளிக் கட்டடமானது அரசு மானியத்திலிருந்தும், ஊராட்சி ஒன்றிய பங்குத் தொகையிலிருந்தும் கட்டப்பட்டுள்ளதே தவிர பஞ்சாயத்து பணத்திலிருந்து கட்டப்படவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவருக்கும் அக்கட்டடத்திற்கும் ஏதும் சம்பந்தம் இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட ஒரு பள்ளிக் கட்டடத்தை ஊராட்சி ஒன்றிய நிர்வாகிகளின் ஒப்புதல் பெறாமல் திறக்க முற்படுவது சட்ட புறம்பான ஒரு காரியமாகும்.... என்று எழுதியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-10]

இன்னும் கடிதம் போகிறது; நேரிலும் சொல்லியிருக்கிறார்கள். எழுத்து மூலமாக சொல்லியிருக்கிறார்கள். ஏற்பாடு செய்ய வேண்டியது ஊராட்சி. ஒன்றியம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தெரிவிக்காமல், ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதி பெறாமலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இதே பள்ளிக்கூடத்தை திறந்து வைக்க வேண்டும் என்று வேறு சிலர் முயற்சி எடுத்து அவர்களும் ஒரு நோட்டீஸை போட்டிருக்கிறார்கள். அதிலே நாடாளுமன்ற உறுப்பினர் திறந்து வைப்பது என்றும், அந்தப் பகுதியிலுள்ள தேவநாதன் என்பவர் தலைமை வகிப்பது என்றும், பெருமாள் நயினார் முன்னிலை என்றும் நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது. பெருமாள் நயினார் அவர்களின் பெயர் இரண்டு நோட்டீஸ்களிலும் இருக்கிறது. (குறுக்கீடு) ஆம். இரண்டு இடங்களிலும் பெருமாள் நயினாரின் பெயர் இடம் பெற்றிருக்கிறது. அவர் காமன் ஃபாக்டராக இருக்கிறார். இப்படி அவர்களும் ஒரு நோட்டீஸை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அதிகாரிகள் இரு தரப்பாரையும் அணுகி பேசி, தயவு செய்து இந்த நிகழ்ச்சிகள் வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சரி என்று சட்டமன்ற உறுப்பினரும் சொல்லியிருக்கிறார். பின்னால் டெப்யுடி சூப்பிர

அவருடைய பெயர் கல்லிலே பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலேதான் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அதுவல்ல பிரச்னை. ஆனால், வன்முறை எந்த அளவுக்கு இதிலே போயிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். செஞ்சி சட்ட மன்ற உறுப்பினர் தாக்கப்பட்ட செய்தி பரவியதும், உடனே அங்கேயுள்ள பெருமாள் நயினார தியேட்டர் தாக்கப் படுகிறது ; அந்தத் தியேட்டரைக் கல்லால் அடித்திருக்கிறார்கள். இதன் காரணமாக, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. இரு தரப்பாரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இரு தரப்பார் பேரிலும் வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. செக்ஷன் 307-ம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு சிறு தீப்பொறி எந்த அளவுக்கு பெரும் பிரச்னையாகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதே தவிர, இதிலே இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய ஒரு பிரச்னை இல்லை. இதிலே கட்சி மாச்சரியங்களுக்கும் இடமில்லை. என்ன சூழ் நிலையில் இது ஏற்பட்டது என்று சொன்னால், ஒரு சாரார் இந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள் ; மற்றொரு சாரார் போட்டியாக தாங்கள் நடத்த வேண்டுமென்று விரும்புகிறாாகள். இந்தப் போட்டியில் எம்.எல்.ஏ.யும் எம்.பி. யும் இருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்தவர்கள் இந்த கல வரத்தில் ஈடுபட்டதுதான் இதற்குக் காரணம். ஆகவே, இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று அவசிய மில்லை என்று கூறி, அமைகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளின் சார்பாக கொடுக்கப்பட்ட இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது கருத்துக்கள் சொன்னதை யொட்டி, மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சர் சில விளக்கங்களை அளித் தார்கள். அவர்கள் அளித்த விளக்கத்திலே இருக்கிற ஒரு முரண்பாடான சூழ்நிலையை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

11ஆம் தேதியன்று ஆம்தப் பள்ளிக்கூடத்தை பேராசிரியர் திறந்து வைப்பார்கள் என்று அழைப்பிதழ், அந்த ஊராட்சி மன்றத் தலைவர், பெரியசாமி என்கிறவர் பெயரில் வெளியிடப் பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-20.]

'அது முறையல்ல ; அரசாங்கச் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கூடம், எனவே, அதைப் பேராசிரியர் திறந்து வைக்கிற நிகழ்ச்சியை அனுமதிக்க முடியாது' என்று ஆணையாளர் 7 ஆம் தேதி கடிதம் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக்



கடிதம் எழுதியது முறையானதா என்பதை இந்த அரசு ஆலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல் கிறேன், சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழ கத்தின் நிர்வாகத்தில் இருந்த போது எல்லா வட்டத்தினுடைய கவுன்சிலர்களும் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்தவர்கள், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருந்தாாகள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர்கள் இருக் கும் வட்டத்தில் எல்லாம் பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள் இவைகள் எல்லாம் பெருந்தலைவர் காமராஜரைப் போன்ற வர்களை அழைத்து திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மேயர்கள் தலைமை வகித்திருக்கிறார்கள். எனவே, அந்தந்த வட்டாரத் திற்கு உட்பட்ட பொறுப்பிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இணைந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த ஊராட்சி மன்றத்தில் இருக்கிற ஒரு பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைக்க பேராசிரியர் அழைக்கப்பட்டிருக்கிறார். அந்த நிகழ்ச்சி கூடாது என்று ஆணையாளர் 7ஆம் தேதி உத்தர விடுவது நியாயந்தானா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

சட்டப்படி அது சரியாக இருக்கலாம், இந்த அளவுக்குக் கடுமையாக 11ஆம் தேதி பேராசிரியர் அங்கு வந்து கட்டடத்தை திறந்து வைக்கக் கூடாது என்று ஆணையாளர் உத்தரவிட வேண்டிய அவசியம் ஏன் வந்தது ? 10ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சி பஞ்சாயத்து யூனியன் அதிகாரியால் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியா என்றால் இதுவும் இல்லை. அதிலே கீழே போடப் பட்டிருக்கும் அழைப்பாளர் பெயர், கிராமவாசிகள், ஊர் மக்கள் என்ற பெயரால் ஒரு நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டு அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் திறந்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் நியாயந் தானா என்பதை அரசு யோசித்துப் பார்க்க வேண்டும். அவர் களே ஒத்துக் கொண்டார்கள், நண்பர் செஞ்சி ராமச்சந்திரன் அவர்கள் மீது காரை விட்டு மோதியது உண்மை என்பதை ஒத்துக் கொண்டார்கள். அப்படிக் குற்றம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்களு டைய குற்றச்சாட்டு அவர் ஒருவர் மாத்திரம் அந்தக் காரில் இல்லை. அந்தக் காரில் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தத் தொகுதியின் ஆளும் கட்சி அமைப்பாளரும் இருந்தார்கள் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அமைச்சரே சொன்னார், போலீஸ் ஸ்டேஷனில் இருசப்பன் பெல்டால் நாடாளுமன்ற உறுப்பினரை அடித்தார் என்று குறிப்பிட்டார். அந்த இருசப்பன் மீது மாத்திரமல்ல, அடி பட்டு மருத்துவமனையில் கிடக்கிறாரே செஞ்சி ராமச்சந்திரன் அவர் மீதும் 307 செக்ஷன்படி வழக்கு இன்றைக்கு பதிவு

செய்யப்பட்டிருக்கிறது. இது எந்த வகையில் நியாயம்? அடிபட்டவர்கள் மீது 307, 302 செக்ஷன்களின்படி வழக்குப் போடுவது சரிதானா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், நாடாளுமன்ற உறுப்பினருக்கு இரங்கல் தீர்மானமா, சட்ட மன்ற உறுப்பினருக்கு இரங்கல் தீர்மானமா என்றால் இரண்டையும் அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள்.

திண்டிவனத்தில் ஒரு சர்வ கட்சிக் கூட்டம்; முகமது அலி அவர்களுடைய நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் பேராசிரியர், அப்துல் லத்தீப், திண்டிவனம் ராமமூர்த்தி, அந்த நாடாளுமன்ற உறுப்பினர் வேணுகோபால் ஆகியோர் பேசியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவருடைய உடல் நலம் பாதிக்கப்படவில்லை. கூட்டத்தில் பேசியிருக்கிறார் வேணுகோபால் என்ற அந்த நாடாளு மன்ற உறுப்பினர்.

நான் கேட்க விரும்புவது, அடிபட்டு, காயம்பட்டு கடலூர் மருத்துவமனையில் இருக்கிற செஞ்சி ராமச்சந்திரன் மீது 307 செக்ஷன் மீது வழக்குப் போட்டிருப்பது என்ன காரணம்? அரசாங்கத்திலிருந்து முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ தூண்டி விட்டு அப்படிச் செய்யச் சொல்லுகிறார்கள் என்று குற்றம் சாட்டவில்லை.

அருமை நண்பர் அம்பிகாபதி, அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த கோவிந்தராஜன் அவர்கள் கந்தசாமி அவர்கள் சுட்டிக் காட்டியது போல் கடந்த கால சம்பவங்களை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இப்படிப்பட்ட துணிவு, எதையும் செய்யலாம், யாரும் கேட்க மாட்டார்கள், தப்பிவிடலாம் என்ற துணிவு, இந்த ஆட்சியில் இரண்டாண்டுக் காலமாக இருந்து வருகிறது. எனவே, பல நண்பர்கள் இங்கே எடுத்துக் காட்டியதற்கு இணக்கமாக உயர் மட்ட நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த இந்த அரசு இணங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேராசிரியர் கலந்து கொள்கிற நிகழ்ச்சிக்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்து எழுதலாமா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது பேராசிரியர் கலந்து கொள்வதற்கு நிச்சயமாக மறுப்புத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அந்த ஊரிலுள்ள நிலை அப்படி. ஒரு பிரிவினர் பேராசிரியரை வைத்து நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். இன்னொரு பிரிவினர் வேண்டாமென்று வற்புறுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது முறைதானா என்று பார்க்க வேண்டியது எந்த அதிகாரியினுடையவும், அதிகாரி யாராக இருந்தாலும் அவருடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மு. கருணாநிதி : ஒரு பிரிவினர் விரும்பாவிட்டால் அந்த நிகழ்ச்சியை நடத்தக் கூடாது என்று சொல்ல அதிகாரி கடமைப்பட்டுள்ளார் என்றால் இனிமேல் ஆளுங்கட்சி நடத்தக் கூடிய நிகழ்ச்சியை, இன்னொரு கட்சியினர் விரும்பவில்லை என்ற காரணங்காட்டி, அதிகாரிகள் தடைப்படுத்திவிடலாம் அல்லவா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விரும்பாவிட்டால் என்பதைவிட கலவரமான சூழ்நிலை ஏற்படுமானால் அதிலே முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ள வேண்டாமென்று அதிகாரிகள் அறிவிக்கலாம். வேண்டுமானால் ''விரும்பாவிட்டால்'' என்ற வார்த்தைக்குப் பதிலாக ''கலவரமான நிலைமை'' என்று வைத்துக் கொண்டால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

307 வது செக்ஷன் ஏன் இரு தரப்பிலும் போடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். காரிலே போகிற போது கல்லால் எறிவதற்கு சட்ட மன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் தான் காரணம் என்று பாராளுமன்ற உறுப்பினர் தன்னுடைய புகாரிலே தன்னைக் கொலை செய்ய முயற்சித்தார், தன்னைக் கல்லால் எறிந்தார்கள் என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பிலேயும் புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கொடுத்த புகார்களின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எப்.ஐ.ஆர். பாஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட் அடிப்படையிலே என்ன நடந்தது என்று ஆராய வேண்டியது காவல் துறையினருடைய கடமை. இன்வெஸ்டிகேஷனிலே தான் என்ன நிலைமை என்பதை காவல் துறையினர் அறிந்து கொள்ள முடியும். இரண்டு தரப்பிலேயும் எப்.ஐ.ஆர். கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. காவல் துறையினரின் இன்வெஸ்டிகேஷன் முறையாக நடைபெற்று வருகிறது. ஆகவே நீதிவிசாரணை தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் பேசும்போது நாடாளு மன்ற உறுப்பினர் சர்வகட்சிக் கூட்டத்திலே, அந்த நிகழ்ச்சியிலே பேராசிரியர் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே கலந்துகொண்டார்கள் என்று சொன்னார்கள். ஏதோ அடிபடாமல் தப்பித்தது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது என்பதை எதிர்கட்சித் தலைவர் ஒப்புக்கொள்வார்கள். சட்டப் பேரவை உறுப்பினர் பற்றி எப்படி இருக்கிறார் என்று கேட்கப்பட்டது, எலும்பு முறிவு இல்லை. துடையிலே காயம் இருக்கிறது, கீழே விழுந்ததால் இடுப்பில் அடிபட்டு அவர் உட்காரமுடியவில்லை. அவருடைய நிலைமை திருப்தி அளிப்பதாக இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் சொல்லும்போது சில விளக்கங்களைச் சொல்லி நிலைமை திருப்தி அளிக்கக்கூடியதாய் இருக்கிறது என்று சொன்னார்கள். என்ன திருப்தி என்று தெரியவில்லை. பாதிக்கப்பட்டவரின் உடல்நிலை நம்மை எல்லாம் நிம்மதிக்கு ஆளாக்குகிற வகையில் இருக்கிறது என்ற முறையிலே சொன்னார்கள். இன்னொன்று. இரு தரப்பிலேயும் 307 செக்ஷன் போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொன்னார். காவல் துறையினருக்கு இருக்கிற கடமை இப்படி இரு தரப்பின் பேரிலும் 307 போடுவது என்ற முறை நாம் என்று அப்படி ஒரு எண்ணத்தை அது உண்டாக்கிவிடும் என்று கருதுகிறேன். கல்லெறிந்தது தான் முதல் நிகழ்ச்சி என்பதுபோல் அவர்கள் சொன்னார்கள், ஆனால் திருவல்லிபுத்தூரிலே கல் எறிந்தால் அதற்கு இந்த 307 வது செக்ஷனோ அல்லது வேறு எதுவுமோ போடப்படவில்லை. அதுவும் பொதுமக்கள் செய்கிறார்கள் என்று வருமானால் யாரோ செய்த தவறு தான் என்பதை மறுக்காமல் தவறுக்கு ஒரு நடவடிக்கை உண்டு என்ற முறை வேண்டும். காவல் நிலையத்திற்கு யாரோ சிலர் வந்துவிட்டுப் போனார்கள், ஆனால் கல்லெறிந்தவர்கள் என்று சொல்லப்படுகிற முறையிலே அவர்கள் 307க்குள்ளாகிறார்கள். அதே நேரத்திலே காரிலே சென்று செஞ்சி இராமச்சந்திரன் மீது காரை மோதியவர்கள் மீதும் 307 என்று போடுகிறார்கள், இப்படி செய்வது ஏதோ வழக்குக்கு வழக்கு, மல்லுக்கு நிற்பது என்ற வகையிலே போடப்படுகிறதோ என்று எண்ணக்கூடிய நிலைமைக்கு ஆளாக்கிவிடும். சந்தேகத்திற்கு இடம் தந்துவிடும். இது எப். ஐ. ஆர்தான் என்று சொல்லப்பட்டது சில நேரங்களிலே எப்.ஐ.ஆர். என்று சொல்கிறபோது First Information Report என்பது First Prepared Report தான் என்ற நிலைமை உருவாகிறது.

[முற்பகல் 11-30]

பத்து மணி, ஒன்பது மணி வரையில் இந்த ரிப்போர்ட் பதிவாகவில்லை என்று செஞ்சியிலிருந்தபோழுது நான் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட ஒரு நிலைமையில், வேண்டுமென்றே குற்றச்சாட்டு சொல்வதாக ஆகிவிடக்கூடாது என்று என்னை நான் கட்டுப்படுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சந்தேகத்திற்கு இடங்கொடுக்கிறார்கள், அதனால் வேறு விதமான விளைவுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம். நாங்கள் கேட்கிற பொழுது ஒத்துக்கொள்ள முடியவில்லை என்றாலும் கூட, நாளைக்குக்கூட இந்த விவரங்களைக் கண்டு இதற்கு பதிலைச் சொல்லலாம். சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக அரசு இயங்குகிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இதை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எதிர்கட்சிக்கு குற்றம் சாட்டுவதற்கு உரிமை இருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னது, இரு தரப்பாரும் புகார் கொடுத்திருக்கிறார்கள், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போலீஸார் விசாரித்து வருகிறார்கள். போலீஸ் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருவதற்குள்ளாகவே எந்தெந்த செக்ஷன்களைப் போடலாம் என்று நாம் தீர்மானிப்பது நிச்சயமாக முறையாகாது. ஆகையால் இதிலே சந்தேகத்திற்கு எந்தவிதமான இடமும் இல்லை. இதில் யார் தவறு செய்தார்கள் என்பதைக் காவல் துறையினர் நிச்சயமாகக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பார்கள். எங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்து நீதி விசாரணையை எதிர்க்கட்சி வற்புறுத்தாது என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நாங்கள் நீதி விசாரணை வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறோம். எத்தனை முறை வற்புறுத்தினாலும் அமைச்சரின் பதில் இதுவாகத்தான் இருக்கும் என்று அறிகிறேன். எனவே, நீதி விசாரணைக்கு இணங்காத காரணத்தினால், அதே நேரத்தில் சில முக்கியமான மசோதாக்கள் இருப்பதால்— இது குறித்து அடையாள பூர்வமாக எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க இப்பொழுது வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## (ஆ) நல்லி பாளையத்தில் அரிசன சிறுமி கொலை செய்யப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம், சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், காந்தி ஆஸ்ரமம் அஞ்சல், நல்லிபாளையம் என்னும் ஊரிலுள்ள அரிசன வகுப்பைச் சேர்ந்த இராமன் என்பவருடைய மகள் ராஜாத்தி என்னும் 15 வயது சிறுமியை உயர் குடியிலுள்ள ஒருவரது வீட்டுத் தண்ணீர் எடுத்துக் குடித்ததினால் அடித்துக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க

பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. எம். அண்ணாமலை, திரு. என். வரதராசன், திரு. ரா. கிருஷ்ணன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன், எம். அண்ணாமலை அவர்கள்.

* திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, துன்பகரமான இந்த நிகழ்ச்சியை இந்த அவையின் பரிசீலனைக்குக் கொண்டு வரும் வாய்ப்பளித்தமைக்காக முதலில் நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டம், நல்லிப்பாளையம் என்ற அரிசனத் தெருவில், ராஜாத்தி என்ற அரிசனச் சிறுமி, அதாவது புதுபாளையம், காந்தி ஆஸ்ரமம் அஞ்சலைச் சேர்ந்த பெரியண்ண கவுண்டரின் மாட்டுக் கொட்டகையில் வைத்திருந்த மண் குடத்திலுள்ள தண்ணீரைக் குடித்துவிட்ட காரணத்திற்காக 19—12—1978 ஆம் தேதி பிற்பகல் இரண்டு மணி அளவில் அந்தச் சிறுமி அடித்துக் கொல்லப்பட்டு, சோளத் தோட்டப் போரில் மறைத்து வைக்கப்பட்டு, இரவிலே கிணற்றில் போடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை அறிந்த ராஜாத்தியின் தகப்பனார் ராமன் அவர்கள் காவல் அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்து, கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் அங்கு விசாரணைக்கு வந்த போலீஸ் அதிகாரிகளால் அந்த அரிசன மக்களால் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை. அவர்களால் எழுதி வைக்கப்பட்டிருந்த ஒரு காகிதத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் படித்துக் காட்டச் சொல்லியும் கூட படித்துக்காட்டப்பட வில்லை.

இதையடுத்து பிரேதம் பிரேத பரிசோதனைக்கு வருகிறது. அந்தப் பிரேத பரிசோதனை செய்ய 20ஆம் தேதி கொண்டு வருகிறார்கள். அதையடுத்து 21 ஆம் தேதி இராஜாஜி நூற்றாண்டு விழாவிற்காக வருகை தந்த ஆளுநரிடத்தில் சென்று இந்த முறையீட்டைச் செய்து, தன்னுடைய குமாரத்தி அடித்துக் கொல்லப்பட்டார், இதற்கான புகார்கள் மீது விசாரணை செய்ய வந்த போலீஸ் அதிகாரியால் இது சரியாக விசாரிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி நீதி கோரி மனு கொடுக்கப்பட்டது. அப்பொழுது ஆளுநரால், மாவட்ட ஆட்சித் தலைவரையும், போலீஸ் அதிகாரிகளையும் நேரிலே வைத்துக்கொண்டு நீதி வழங்கப்படும் என்ற உறுதி சொல்லப்பட்டது. அதையொட்டி 21 ஆம் தேதி அந்தப் பிரேத பரிசோதனை செய்து, அந்தப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் அவர்கள் இந்தப் பிரேதம் இயற்கையான மரணம் அடைந்தது, அடித்துக் கொல்லப்பட்டது அல்ல என்ற சான்றிதழைக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அந்த பெரியண்ண கவுண்டர் மேல் எந்தவிதமான





வழக்கும் தொடரப்படவில்லை. அதை அடுத்து, நேரடியாக 5 ஆம் தேதி அமைச்சர்களுக்கும் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் மனு கொடுக்கப்பட்டது. அதை அடுத்தடுத்து கொடுத்தன் காரணமாக அந்த ஊர் முழுவதுமே கட்டுப்பாடு செய்யப்பட்டு 20 மைல் சுற்றளவுள்ள வெளி வேலை செய்யக்கூடாது என்றும் ஆள் வைத்திருந்த அனைவரும் நீக்கப்பட்டு, அந்த ஆட்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்தை உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. குறிப்பாக, அந்தக் கிராமத்தில் 77 குடியிருப்புகளில் 124 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், இந்த அளவுக்குத் துன்பங்கள் பட்டுள்ளார்கள். இதற்கிடையிலே இரவில் தோட்டங்களில் உள்ள வீடுகளின் மேல் கல்லெறியப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அண்ணாமலை, ஒத்திவைக்கவே தேவையில்லை போலிருக்கிறது, சுருக்கமாகச சொல்லுங்கள்.

திரு. எம். அண்ணாமலை : இந்த அளவுக்கு வேலை கொடுக்கப்படாமலிருந்தது மட்டுமல்ல, உணவுப் பண்டத்திலும் ஏதோ கலந்து வைக்கப்பட்டு அங்கே அதனைத் தின்ற 30 கோழிகள் செத்தன. இந்தக் கொடுமையான நிலைமையில், கடந்த ஒரு மாத காலமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். ஆகவே, அந்த அளவுக்கு அதிகாரிகளும் சரி, சம்பந்தப்பட்ட இலாகாவும் பரிகாரம் காணவில்லை. இந்த நிகழ்ச்சியில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதாரணமாக, மொட்டை பெட்டிஷன் போட்டாலும், ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று (மணியடிக்கப்பெற்றது) மொட்டை பெட்டிஷன் போட்டாலும் கூட அந்தப் பிரேதத்தைத் தோண்டி பரிசோதனை செய்து, இது அடிபட்டதா, 'அல்லவா என்று சோதனை நடத்தக் கூடியதை பார்த்துள்ளோம். இதற்கு இவ்வளவு பெரிய இயக்கம், நீண்ட உண்ணாவிரதம் இருந்தும் அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணாதது மட்டுமல்ல, அந்த மக்களின் மீது 107-வது பிரிவின்கீழ் வழக்கு தொடரப்பட்டிருக்கிற காரணத்தால், இன்றைக்கு மக்களுக்கும் எந்தப் பாதுகாப்பும் அற்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்த அவையின் இதர அலுவலல்களை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் நல்லிப்பாளையம் கிராமத்தில் பெரியண்ண கவுண்டர் என்பவர் இருக்கிறார். அவருடைய வீட்டில் ராஜாத்தி— ராமனுடைய மகள் ராஜாத்தி, அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர்—வேலை செய்து

வந்தார். பெரியண்ண கவுண்டர் பயன்படுத்துகிற மண் டானையில் நண்ணீர் எடுத்ததனால், பெரியண்ண கவுண்டர் கோபமுற்று அந்த ராஜாத்தியை அடித்து கன்னத்தில் அறைந்திருக்கிறார். ராஜாத்தி அதற்குப் பிறகு ஆடு மேய்க்கச் சென்றிருக்கிறார். ஆனால் திரும்பவில்லை. மறுநாள் 20—12—1978 காலை தோட்டத்து கிணற்றில் ராஜாத்தியினுடைய உடல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனே பிரேத பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். பிரேத பரிசோதனையில் டாக்டர் கொடுத்திருக்கின்ற சர்ட்டிபிகேட் ஆனது எந்த விதமான காயமும் இல்லை, என்பதாகும். இச் சம்பவத்தில், மருத்துவ அதிகாரி, நீரில் மூழ்கியதால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்தைத் தெரிவித்திருக்கிறார். மனம் நொந்து கிணற்றில் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் என்று பஞ்சாயத்தார் கருத்து தெரிவித்துள்ளனர். பிரேத விசாரணையின்பொழுது சந்தேகம் எதுவும் எழுப்பப்படவில்லை. இச்சம்பவத்தில் முறைகேடுகள் எதுவும் நடந்ததாகச் சந்தேகம் இதுவரையில் ஏற்படவில்லை.

ஆனால், பெரியண்ண கவுண்டர்தான் செல்வி ராஜாத்தியைக் கொலை செய்து விட்டார், என்று ராஜாத்தியினுடைய தகப்பனார்—ராமன் என்பவர்— புகார் கொடுத்து அதன் அடிப்படையில் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் 9—2—1979 முதல் திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்னால் 2, 2 பேராக தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நிலைமை அமைதியாகவே இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனையில் என்ன நடந்தது என்று அப்பொழுது யாரும் சொல்லவில்லை, சொல்ல முடியவில்லை. அதற்குப் பிறகு கொலையாக இருக்கலாம் என்று ஒரு புகார் மட்டும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த வழக்கைப் பார்க்கிறபொழுது இது குறைந்த பட்சம் 'அன்டச்சிபிலிட்டி ஆக்டிலே' யாவது வரவேண்டும். இதுபற்றி அரசு ஆராயும். ஆகவே, இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பிறகு மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்திவைக்க தேவையில்லை என்பதால் தீர்மானம் நிராகரிக்கப்படுகிறது.

82 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையின் முன் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.



(4) ஒழுங்குப் பிரச்னை.

விவசாயிகளுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பெறுவது பற்றி கொடுக்கப்பெற்றுள்ளன அறிவிப்பை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நாங்கள் கொடுத்த தீர்மானம் மிக முக்கியமானது, அதை விட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடித்துக்கொண்டு அதை எடுத்துக் கொள்ளலாம். இந்த அவையின் அலுவல்களை குறிப்பிட்டபடி நான் முடித்தாக வேண்டும். இந்த மது விலக்கு மசோதா முக்கியமானது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த விஷயம் தான் மிக முக்கியமானது. மதுவிலக்கு விஷயம் அல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கோரிக்கை எனக்குப் புரிகிறது. மதுவிலக்கு மசோதா இரண்டு நாட்களுக்கு மேலாக நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் முக்கியமானது. அலுவல் ஆய்வில் குறிப்பிட்டிருப்பதை நான் முடித்தாக வேண்டும். நேரம் வேறு இல்லை. அதனால் இதை நாளைக்கு விவாதித்துக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எங்களை இங்கே நம்பிக்கையுடன் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். ஒரு நாள் நீர் பாய்ச்சவில்லை என்றால் மகசூல் எல்லாம் சாவியாகிப் போய்விடும். இது எவ்வளவு முக்கியமானது என்று நீங்கள் உணர்ந்து பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி நாளைக்கு விவாதம் வைத்துக் கொண்டால், போதுமான தகவல்களை நானும் சேகரித்து வைத்துக் கொள்வேன். அதற்குள் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது ; ஒரு நாளில் என்னவாகிவிடும் ?

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, விவாதம் இன்றைக்கே வைத்துக் கொள்ள வேண்டும். அமைச்சர் மானால் விளக்கத்தை நாளைக்கு வைத்துக் கொள்ளட்டும்

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நாங்கள் ருக்கு திரும்பிப் போக வேண்டும். எங்களை திரும்ப விட மாட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஒரு நாள் நீர்ப் பாய்ச்சவில்லை என்றால் விவ சாயம் எவ்வளவு பாதிக்கும் ? இது முக்கியமானது இல்லை, மது விலக்கு மசோதா தான் முக்கியமானது என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் என்ன எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் குறிப்பிட்டிருக்கிறது. இன்றைக்கு ஏற்கனவே $11\frac{3}{4}$ ஆகி விட்டது. இன்றைக்கு நான் மது விலக்கு மசோதாவை எடுத்தாக வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்கள் தயவுசெய்து நேரத்தைப் பற்றி பார்க்காமல், விஷயத்தின் அவசரத்தைப் பார்க்க வேண்டும். மது விலக்கு முக்கியமானது அல்ல. இந்த விஷயம் மிக முக்கியமானது.........

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, நாளைக்கு வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம். எங்களுக்கு வேண்டியது எல்லாம் மின் துண்டிப்பு இருக்காது. மின் இணைப்பை உட னடியாக கொடுக்கப்படும் என்று அமைச்சரை உறுதி கூறச் சொல்லுங்கள்; அதுபோதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுந்தரராஜ், பாப நாசம் சௌந்திரராஜன், திரு. முத்தையா, திரு. ஆறுமுகம், அனைவரும் தயவு செய்து உட்காருங்கள். சுந்தரராஜ் அவர்கள் கேட்பது எங்களுக்குப் புரிகிறது. நீங்கள் கேட்பதை அமைச்சரும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறார். அவர் குறிப்பு இல்லை, நாளை சொல்வதாக சொல்கிறார். அவரை பதில் சொல் லும்படி கட்டாயப்படுத்த என்னால் முடியாது. அவர் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பது எல்லாம் அதிகமாக விவரங்கள் தேவையில்லை. எங் களுக்கு வேண்டியது உத்தரவாதம் தான். மின்சாரம் துண் டிப்பு இல்லை என்று சொன்னால் போதும்.

**திரு. சோ. அழகர்சாமி :** காலம் தாழ்த்தினால் மாகுல் அனைத்தும் சாவியாகிவிடும். நான் அதற்காகத்தான் கேட்கிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே மின் கட்டணம் செலுத்தாவிட்டால் மின்சாரம் துண்டிப்பது மின்சார வாரியத்தின் விதிகளுக்குட்பட்ட கடமை. யார் யாருக்கு விவசாயிகளைப் பொறுத்த வரையில், மின் துண்டிப்பு சம்பந்தமாக அறிவிப்புகள், டிஸ்கனெக்ஷன் நோட்டீசுகள் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் மின் துண்டிப்பு நடைபெறுகிறது. மற்றவர்களுக்கு மின் துண் டிப்பு நடைபெறவில்லை. ஆகவே, அவர்களுக்கும் மின் துண் டிப்பு நடத்தக் கூடாது என்று கட்டுப்படுத்துவது நியாயமல்ல.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, ரூ. 3, ரூ. 2 கட்ட வேண்டிய விவசாயிகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப் படுகிறது. மேட்டூர் அலுமினிய தொழிற்சாலை லட்சக்கணக் கில் மின்சார பாக்கி வைத்த போது ஏன் இந்தச் சட்டத்தை அவர்களுக்குப் பொருந்தச் செய்யவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியையும் மீறி, ஜப்தி செய்ய மாட்டோம் என்று சொன்ன வாக்குறுதியையும் மீறி, ஜப்தி நடைபெறுகிறது. அதற்காக அவர்கள் வரி கொடா இயக்கம் நடத்துகிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களும் சேர்ந்து தான் நடத்துகிறார்கள்.

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னதை அமைச்சர் கேட்டு இருப்பார். இரண்டாவது முறையாகச் சொல்ல வேண்டாம். உட்காருங்கள். திரு. அழகர்சாமி, அமைச்சர் சொன்னதற்குப் பின்னால் தங்களுடைய விளக்கம் என்ன ?

**திரு. சோ. அழகர்சாமி :** எங்களுக்குத் திருப்தி அளிக்க வில்லை. அமைச்சர் சொல்வது சரியல்ல. விவசாயிகளுக்கு மின் துண்டிப்பு செய்த காரணத்தால் அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்கள் கூட காய்ந்து போய்க் கொண்டிருக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர் நாசமாகிப் போய்விடும். 3 வருஷ பாக்கியை தற்போது வசூலிப்பது எந்த வகையில் நியாயம். ஆகவே, நாங்கள் இதை எதிர்த்து வெளி நடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு அமைச்சர் பதில் திருப்தி அளிக்காததால் நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மின் துண்டிப்புப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. தலைவர் அவர்களும், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விவசாயம் செய்து கொண்டு இருப்பவர்கள். வெளியிலே மக்கள் மத்தியில் இன்று எந்தவிதமான உணர்வுகள் இருக்கிறது என்று சொன்னால், அமைச்சர் அவர்களும் புரிந்து கொள்ளவேண்டும், பேரவைத் தலைவர் அவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று விவசாயிகள் மத்தியில் நாங்கள் எல்லாம்—நாங்கள் எல்லாம் விவசாய மக்களிடமிருந்து ஓட்டுப் பெற்று வந்த பிரதிநிதிகள்—விவசாயிகளுக்காக சரியாக வாதாடவில்லை என்று குறை இருக்கிறது. இன்று இருக்கும் நிலை என்னவென்றால் தொழிற் சங்கத்தில் ஏதாவது ஒரு சிறிய பிரச்னை என்றால்கூட சபையையே ஒத்திவைக்கக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்படுகிறது. ஆனால் விவசாயிகள் பிரச்னை என்றால் சாதாரணமாகச் சொல்லி எங்களை உட்கார வைத்து விடுகிறீர்கள். அரசாங்கம் முடிவு சரி என்று வாதிடலாம். ஆனால் விவசாயிகள் மத்தியில் அந்தக் கருத்து சரியல்ல என்று தெரிகிறது. இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன்பே நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கலாம். இரண்டு தீர்மானங்கள்தான் என்றால், அந்த இரண்டில் இதை ஒன்றாக எடுத்துக் கொண்டு இருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்த மன்றத்தில் அது குறித்து விவாதிக்கப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்று கூடி, ஒரு முடிவு எடுத்து அதன் மீது அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கை தந்தார்கள். அதன் மீது அதிருப்தி இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அதைச் சொல்லிவிட்டு, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். விவசாயிகள் பிரச்னையில் அக்கறை காட்டவில்லை என்று பேரவைத் தலைவரைப் பார்த்துச் சொல்லவேண்டாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்தச் சபையே அக்கறை காட்டவில்லை என்று சொல்கிறேன். இது மிகவும் முக்கியமான விஷயம். அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு முடிவு சொல்லியாக வேண்டும்.

(மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் எழுந்தார்).



திரு. கே. கந்தசாமி : கட்சித் தலைவர்கள் கருத்து சொன்ன பிறகு அமைச்சர் பதில் சொன்னால் நல்லது.

[முற்பகல் 11-50].

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்காவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினோம். இவ்வளவு சூடான ஒரு பிரச்சனையாக அது இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, இதை மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, விவசாயிகள் சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை உடனடியாக எடுத்துக்கொள்வதுதான் சாலச்சிறந்தது. காரணம் அது அரசாங்கத்திற்கும் உதவியாக இருக்கும் ; விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிப்பதாக இருக்கும். ஆகையால் அந்தத் தீர்மானத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, சர்வ கட்சித் தலைவர்களைக் கூட்டிவைத்து பேசி, விவசாயிகள் பிரச்சனைமீது எடுக்கப்பட்ட முடிவை சட்டமன்றத்தில் அறிவிக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது திருப்திகரமாக இல்லாததால் விவசாயிகள் ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் இது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனையாக இருக்கிறது. மற்ற எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் விட இதை முக்கியமானதாக கருத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இன்றைக்கு மதுவிலக்கு திருத்த மசோதாவை சீக்கிரம் முடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இதை நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று தாங்கள் சொன்னீர்கள். இன்றைக்கே இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தாங்கள் சொன்னால் அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் ; நாளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும் நாங்கள் அதற்கு கட்டுப்படுகிறோம். அரசு தரப்பிலே நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 12

சொன்னதற்குக் காரணம், இன்னும் சொஞ்சம் விரிவான முறையில் விவரங்களை சேகரித்துக் கொடுக்கலாம் என்ற நோக்கத்தில்தான் அப்படிச் சொல்லப்பட்டது. அதனால் இதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்று சொல்கின்ற குற்றச் சாட்டு சரியானது அல்ல. தங்களுடைய முடிவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இதைக் கண்டித்து ஒரு கட்சி வெளிநடப்பு செய்துவிட்டதால் இதை நாளைக்குத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அப்படியானால் நாங்களும் வெளியேற வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பிரச்சனையைப் புரிந்து கொள்ள வேண்டும். யார் இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்களோ அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நான் சொன்னதன் உட்கருத்து தங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். மேலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும் இந்த பிரச்சனையில் திருப்தி அளிக்காததால் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அதைப் போன்று திராவிட முன்னேற்றக் கழகமும் வெளிநடப்புச் செய் திருக்கிறது. அவர்கள் இருவரும் வெளிநடப்புச் செய்த பிறகு, இப்போது இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் கேட்கின்ற வாய்ப்பு இருக்காது. ஆகையால் நான் சொன்னபடி, நாளைக்கு எடுத்துக்கொள்வதுதான் நல்லது.

திரு. கே. கந்தசாமி: அவர்கள் அருகில்தான் இருக்கிறார்கள்; அவர்களை அழைத்துப் பேசினால் நல்லது.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. நா. சுந்தரராஜ் ஆகியோர் எழுந்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாரிமுத்துவும் பேச வேண்டுமென்கிறார்கள். நீங்களும் பேச வேண்டுமென்கிறீர்கள். யாராவது ஒருவர் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். நீங்கள் உட்காருங்கள் உங்கள் தலைவர் மாரிமுத்து அவர்கள் பேசட்டும்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, தாங்கள் கூறிய கருத்துக்கு மாறுபாடு இல்லை. என்றாலும் எதிர்க்கட்சியினர் 'வாக் அவுட்' செய்திருந்தாலும் அருகில்தான் இருக்கிறார்கள். அவர்களை........



1979 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முடிவை அடிக்கடி மாற்றுவது சரியல்ல; நல்லதும் அல்ல. இந்தத் தீர்மானத்தை நாளை எடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்து விட்டாலும் (குறுக்கீடு), திராவிட முன்னேற்றக் கழகமும் வெளிநடப்புச் செய்துவிட்டாலும் மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் தங்களுடைய உணர்வுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளே இன்றைக்கு போதுமானது. நாளையதினம் நிச்சயமாக இதை விவாதிக்கிறோம். நேரம் அதிகம் இல்லாததால், தாங்கள் தீர்ப்பு அளித்துவிட்டபடியால் இந்தத் தீர்மானத்தை நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அமைச்சர் அவர்களுடைய பதில் திருப்தி அளிக்காததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் (இ) உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சரவர்களின் பதில் திருப்தி கரமாக இல்லாததால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் எதை விரும்புகிறார்களோ, இன்றைக்கு நாட்டுக்கு எது தேவையோ அந்த முக்கியமான பிரச்சனைபற்றியது இந்த ஒத்திவைப்புத் தீர்மானம். அதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்று எல்லோரும் வேண்டிக்கொண்டோம். இருந்தபோதிலும் அதற்கு இசைவு கிடைக்காததால், விவாதத்திற்கு தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாததால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நானும் வெளிநடப்புச் செய்கிறேன் (வெளிநடப்பு செய்தார்).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. சு. பாலன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்கள் இப்போது குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 12

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது விவசாயிகள் மத்தியிலே மின் துண்டிப்பு என்பது மிக அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதிக முக்கியத்துவம், வாய்ந்த இந்த நிகழ்ச்சி குறித்து இங்கே விவாதிப்பதற்கு முன்னுரிமை தந்து எடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நான் சார்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கின்ற வகையில் நாங்களும் வெளி நடப்பு செய்கிறோம்.

(உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்).

## (5) அறிக்கை அளித்தல்.

வாடகைக்கார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணங்கள் மாற்றியமைக்கப் பெறுவது குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிக்கிறேன்.

சமீபத்தில் மைய அரசு அறிவித்துள்ள வரிவிதிப்பால் பெட்ரோல் விலை உயர்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் வாடகைக்கார், மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களின் கட்டணங்களைக் கீழ்க்கண்டவாறு உடனடியாக உயர்த்த அனுமதிக்க 1939-ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் விதி 43, துணை விதி 1-ன் கீழ் மாநிலப் போக்குவரத்து ஆணையருக்கு ( State Transport Authority ) ஆணையிட அரசு முடிவு செய்துள்ளது.

டாக்சியின் குறைந்த பட்ச கட்டணத்தை தற்போதுள்ள ரூபாய் 1·70-ல் இருந்து ரூ. 1·90 ஆக உயர்த்தவும், ஒரு கிலோ மீட்டருக்கு தற்போதுள்ள 90 பைசாவை 1 ரூபாயாக உயர்த்தவும், ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்தபட்ச கட்டணத்தை தற்போதுள்ள 80 பைசாவில் இருந்து 1 ரூபாயாக உயர்த்தவும், ஒரு கிலோ மீட்டருக்கு தற்போதுள்ள 40 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்தவும், 22 குதிரை சக்திக்குக் குறைவான சுற்றுலா டாக்ஸி வாகனங்களைப் பொறுத்தவரைக்கும் சமவெளிப் பகுதியில் தற்போதுள்ள 90 பைசாவை ஒரு ரூபாயாக உயர்த்தவும், மலைப் பகுதியில் தற்போதுள்ள ஒரு ரூபாயை ரூ. 1·20 ஆக உயர்த்தவும், 22 குதிரை சக்திக்கு மேற்பட்ட சுற்றுலா டாக்ஸி வாகனங்களுக்கு சமவெளிப் பகுதியில் தற்போதுள்ள





ஒரு ரூபாயை ரூ. 1·20 ஆக உயர்த்தவும், மலைப்பகுதியில் தற்போதுள்ள ரூ. 1·20 ஐ ரூ. 1·40 ஆக உயர்த்தவும், குளிர் சாதன அமைப்புள்ள டாக்ஸிகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 20 பைசா கட்டண உயர்வு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இவ்வாணை அரசிதழில் வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் பொதுமக்களும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் மோட்டார் வாகன விதி முறைகளின்படி அரசு உள்துறை செயலருக்கு தங்கள் ஆட்சேபணை மனுக்களையும், கருத்துக்களையும் தெரிவிக்கலாம். அவ்வாறு வரப்பெற்ற ஆட்சேபணை மனுக்களையும் கருத்துக்களையும் பரிசீலித்து உள்துறை செயலர் நேர்முக விசாரணை செய்ததின் அடிப்படையில், தற்போது உடனடியாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ள புதிய கட்டண விகிதங்கள் மோட்டார் வாகனச் சட்டம் விதி 43 (1) (c) (i)-ன் கீழ் உறுதிப் படுத்தப்படுவது பற்றி ஆணை பிறப்பிக்கப்படும்.

## (6) கவன ஈர்ப்புகள்.

### (அ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறை ஆவணங்கள் குறித்து

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த, 1920 மற்றும் 1930 ஆம் ஆண்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள் அழிந்துவிட்டதன் காரணமாக, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவதற்கான சான்றிதழைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

[நண்பகல் 12.00]

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, the Freedom Fighters including the ex-I.N.A., Personnel and their dependents viz., the widow, the minor son who has not attained the age of 18 years, and the unmarried minor daughter who has not attained the age of 21 years are being granted Freedom Fighters pension by the Government. For this purppose, the Freedom Fighters should produce extracts from the "Convicts, Register" in support of their claim for having suffered imprisonment for not less than three months in connection with the freedom movement, the last compaign of which was launched between 1942—44. In case, the Freedom Fighter is not able to produce jail extracts, the concerned Jail Superintendents are addressed to furnish relevant extracts relating to the Freedom Fighter.

In cases where the imprisonment was undergone in the jails in other States, those Governments are also addressed for obtaining the jail extracts.

2. As regards the alleged destruction of records relating to the Freedom Fighters in the Central Prison, Tiruchirappalli, the Inspector-General of Prisons, Madras in consultation with the Superintendent, Central Prison, Tiruchirappalli has reported as follows :—

The prison records containing information about Freedom Fighters confined in the Central Prison, Tiruchirappalli in 1920s to/930s were *not destroyed* since according to the rules, the Convict Registers are permanent records. The persons arrested in connection with the freedom struggle were not only confined in the Central Prison, Tiruchirappalli but also in the erstwhile Borstal School at Thanjavur, which was specially functioning as Special Jail for detention of political prisoners then. It was subsequently handed over to the Department of Certified Schools (now known as Approved Schools under the control of Director of Correctional Administration). At that time, all records pertaining to the political prisoners were transferred to the Central Prison, Tiruchirappalli sometime between 1930 and 1940. The particulars about the records so transferred are not, however, available in the Central Prison, Tiruchirappalli. Usually the Prison Certificates required by the Freedom Fighters are furnished to them with reference to the available records but in certain cases certificates could not be furnished as some of the registers have become so bad due to very frequent handling and due to fair wear and tear. Further, due to efflux of time, some of the registers have been torn, though they have been preserved safely. Even though some registers are in good shape, yet some other registers are in bad condition as the leaves of them were bad in quality. The Convict Registers in prisons are used very frequently and handled by several persons from the time of admission to the date of discharge for writing admission particulars, identification marks, transfer to hospitals, releases on bail, release on parole, leave etc., with the result they naturally get spoiled after long usage. Notwithstanding this, the Superintendent, Central Prison, Tiruchirappalli as far as possible has taken all efforts to preserve the existing registers in the present condition to prevent any further damage by moths, white ants, etc., etc.,

3. Only in the abovementioned inevitable circumstances and also due to long passage and efflux of time, the Superintendent, Central Prison, Tiruchirappalli was not able to furnish information regarding imprisonment of certain Freedom Fighters of the early 1920s and 1930s.



4. The Government are taking the utmost care to ensure that the rightful claimant is not deprived of the political Pension. In case of non-availability of jail records, the Co-prisoner certificate produced by a Freedom Fighter from an ex-Minister/Chief Minister is also taken into consideration for grant of pension. The Court judgements, if available, are also taken into account for proof of having suffered imprisonment for the prescribed period. The imprisonment particulars recorded in the "Who is who of Freedom Fighters, Tamil Nadu" based on the verification of original documents, are also treated as acceptable evidence *in lieu* of jail extracts. The number of cases in which the request for grant of Political Pension to Fredom Fighters were rejected solely due to non-availability of the extract of the Convict Register, will be therefore very negligible.

If the hon. member Thiru Sadiq Pasha is pleased to furnish any other mode of proof in respect of the imprisonment already undergone for a period of three months or more, the suggestion is welcome; such a mode of proof is also welcome.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னுடைய கேள்வி, அந்த சென்ட்ரல் ஜெயில் ரிக்கார்ட்ஸ் அழிந்துவிட்டனவா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் தமது விளக்கத்தில் 1920—30 ரிக்கார்ட்ஸ் அளிக்கப்படவில்லை என்று சென்ட்ரல் ஜெயில் சூப்பரின்டென்ட்டென்ட் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

"Office of the Superintendent,
Central Prison, Tiruchirappalli,
Dated : 21—2—1979.

Sub. :—PRISONS—Central Prison, Tiruchy—Freedom Fighter Thiru A. Sivaramakrishnan—Jail Certificate requested—Regarding.

திரு. சிவராமகிருஷ்ணனின் மனைவி தைலம்மாள் சர்டிபிக்கட் கேட்டு விண்ணப்பம் செய்கிறார்கள்.

Ref. Your letter, dated 18th January 1979.

The records relating to the year 1931 referred to in your letter have been damaged and was eaten by the white ants beyond recognition.

என்று கரையான் சாப்பிட்டு விட்டது என்று திட்டவட்டமாக சென்ட்ரல் ஜெயில் சூப்பிரன்டன்ட் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கரையான் புற்றெடுத்து கருநாகப் பாம்பு வந்தது போல் இப்போது கருநாகப் பாம்பு தான் வந்திருக்கிறதோ என்று நினைக்கிறேன். . . . . . . . . .

"Hence. it is regretted that the certificate requested by you could not be furnished."

என்று கேட்டிக்காரிக்கலாக தைலம்மாளுக்கு பதில் கொடுத்து விட்டு இங்கு அமைச்சர் அவர்களுக்கு தவறான தகவலையும் அனுப்பியிருக்கிறார். . . . .

It has not been destroyed

என்று சொல்லி இருக்கிறார். ஆனால் இங்கு திட்டவட்டமாக தவறான தகவலை தந்திருக்கிறார். நிச்சயமாக இந்த சூப்பிரன்டன்ட் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிகவும் வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது, வருந்தத் தக்கதாக இருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் 'கோ-பிரிஸினர்ஸ்' சர்டிபிகேட் கொடுத்தால் ஒப்புக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள், அவர்களோடு இந்த கோ-பிரிஸினர்ஸை எங்கே போய் கண்டுபிடிப்பது, ஆகவே இந்த கோரிக்கையை ஸிம்பத்தடிக்-காக பரிசீலனை செய்து சர்டிபிக்கேட் இல்லாவிட்டாலும், இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது வேறு அதிகாரிகள் மூலமாகவோ விசாரித்து, இந்த தியாகியுடைய குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தவறான தகவல் தந்த சென்ட்ரல் ஜெயில் சூப்பிரன்டன்ட் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தகவலை ஐ. ஜி.க்கு ரெபர் செய்துதான் தெரிவிப்பார் என்று நினைக்கிறேன். . . .

I. G. of Prisons is also liable for giving wrong information to the House. I request the Hon. Minister to take appropriate disciplinary action against these Officers.

The HON. THIRU K. NARAYANASWAMY: So far as this aggrieved freedom fighter's wife is concerned, even if a certificate by the hon. member thiru Sadiq Pasha who was himself a Minister of this State is given after due enquiries provided the was a co-prisoner which I am sure he would do, I undoubted be say he will do it, such a certificate would meet the ends of justice





## (ஆ) 'கோ 40' என்ற புதிய ரக அரிசி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள், மு. அம்பிகாபதி, உ. சுப்பிரமணியம், சி. கோவிந்தராசன்', செ. இராமலிங்கம், ப. சந்திரன் இவர்கள்—"கோ. 40 என்ற புதிய ரக அரிசியை சாப்பிட்ட தஞ்சை மாவட்ட மக்கள் பெரும்பாலோருக்கு ரத்த பேதி கண்டுள்ள அபாய நிலைபற்றி விவாதிக்க—" மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, "கோ 40 என்ற புதிய ரக அரிசியை சாப்பிட்ட தஞ்சை மாவட்ட மக்கள் பெரும்பாலோருக்கு ரத்த பேதி கண்டுள்ள அபாய நிலை பற்றி விவாதிக்க" என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரம் கோட்டத்தில் 1976–77 ஆம் ஆண்டு சில முற்போக்கு விவசாயிகள் கோ 40 (இராசராசன்) என்ற புதிய நெல் ரகத்தினை சாகுபடி செய்ய ஆரம்பித்தனர். இந்த ரகத்தின் நல்ல விளைச்சலைக் கண்டு 1977–78 ஆம் ஆண்டு சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் மாயவரம் மற்றும் கும்பகோணம் கோட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டது. அவ்வாறு பயிரிடப்பட்ட இரண்டு ஆண்டுகளிலும் அரிசியின் தன்மையைப் பற்றியோ, உடல்நலக் குறைவு பற்றியோ எந்தவிதமான குறையும் இல்லை.

2. இந்த ரகம் 1977-ல் வெளியிடப்பட்டது. சமைக்கும் தன்மையில் நுகர்வோரின் ஒப்புதல் பெற்றதோடல்லாமல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மனையியல் உணவுத் துறையில் அரிசியின் சிறப்புத் தன்மைகள் பற்றி ஆய்வு நடத்தப்பட்ட பின்பு தான் இந்தரகம் வெளியிடப்பட்டது. இந்த ஆய்வில் எந்தவிதமான நச்சுத் தன்மைகளும் இல்லை என அறியப்பட்டது.

3. மேலும் இந்த அரிசியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேதியல் பிரிவில் எலிகளுக்கு உணவாகக் கொடுத்து ஆராய்ந்ததில் உயிரினங்களுக்கு இந்த ரக அரிசியால் எந்த விதமான தீமைகளும் இல்லை என அறியப்பட்டது.

4. கோ. 40 ரகத்தின் விளைச்சலையும் அதன் அரிசியின் தன்மையையும் பற்றி உணர்ந்த தஞ்சை மாவட்ட விவசாயிகள் இவ்வாண்டு சுமார் 30,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி

செய்தனர். இந்த சம்பா பட்டத்தில் கோ. 40 சாகுபடி செய்த விவசாயிகளையும், இந்த அரிசியைச் சாப்பிட்ட மக்களையும் தொடர்பு கொண்டதில் அவர்கள் எந்தவிதமான வயிற்று கோளாறுகள், மற்றும் வயிற்றுப்போக்கு, இவைகளினால் துன்பம் அடைந்ததாகத் தெரிவிக்கவில்லை.

5. பூச்சி மருந்துகளால் கெடுதல் ஏற்படும் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. ஏனெனில் நெல்லுக்குத் தெளிக்கும் பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மைகள் தெளித்த 15 நாட்களுக்கு மேல் தானியத்தில் இருப்பதில்லை.

6. மேலும் தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வரும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இந்த அரிசிச் சாதம் சாப்பிட்டதால் பேதி கண்டுள்ளதாக எந்த நோயாளியும் அங்கு வரவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோ. 40-ராஜ ராஜன் நெல்லை பயிரிட்ட விவசாயிகள் அத்தனை பேரும் நசிந்து விட்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 7 கலம், 8 கலம் கூட விளையவில்லை. ஒரு வேளை விளையாதது நல்லதாகப் போய்விட்டது. அது மட்டுமல்ல, இந்த அரசியை சாப்பிட்ட பலர் பல்வேறு தனிப்பட்ட மருத்துவர்களிடமும், தனிப்பட்ட மருத்துவ மனைகளிலும் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ரத்த பேதி எப்படி, எதனால் ஏற்பட்டது என்பது கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. எனவே இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடுகொடுப்பதோடு, சாப்பிட்டு கஷ்டப்படுபவர்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த நெல்லையும் தடை செய்ய அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

[பிற்பகல் 12—10].

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, கோ. 40, அல்லது இராஜ ராஜன் என்னும் நெல் ரகம் தஞ்சை மாவட்ட விவசாயிகளால் மிகவும் பிரசித்தி பெற்ற நெல் ரகமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அதிகம் விளைச்சலைக் கொடுக்கின்ற தன்மையின் காரணமாக, விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த நெல் ரகத்தை அதிகம் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், வேறு மருத்துவ மனைகளிலே அவ்வாறு சாப்பிட்டதன் காரணமாக, வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு, அதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையிலே இதுவரை அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை. மேலும், இந்த



அரிசியைத் தடை செய்யும் நோக்கம் இந்த அரசுக்கு எழவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மீண்டும் தீவிரமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கோ. 40, இராஜ ராஜச் சோழன் நெல்லைச் சாப்பிட்டவர்களுக்கு ஒன்றும் ஆகவில்லை, அந்த நெற்களை எலிகளுக்குக் கொடுத்துப் பார்த்ததில், எலிகள் சாகவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எலிகள் அந்த நெல்லைச் சாப்பிட்டு, சாப்பிட்டு 'இம்மியூன்' ஆகியிருக்குமென்று நினைக்கிறேன். அதைச் சாப்பிட்ட மனிதனுடைய உடற் கூற்றுக்கு அது பொருத்தமானதாக இல்லை. உடம்புக்கு கோளாறு ஏற்பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்படா விட்டாலும், தனிப்பட்ட முறைகளிலே சிகிச்சை செய்து கொண்டிருக்கலாம். இராஜ ராஜச் சோழன் நெல்லை, உற்பத்தி செய்தால் அதிகமாக விளைச்சல் கிடைப்பதில்லை என்று இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கூட எடுத்துக் கூறினார்கள். அப்படி விளைச்சலும் கிடைக்காத, சாப்பிட்டால் தீங்கு விளைவிக்கக்கூடிய அந்த ரக நெல்லை அரசாங்கமே கொள்முதல் செய்வதுடன் மீண்டும் பரிசீலனை செய்து, அதை எந்தவிதமாக மாற்றலாம் அல்லது எந்த வேறு வகை நெல்லைக் கொடுக்கலாம் என்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இந்த ரக நெல்லை எலிகள் சாப்பிட்டதால், மீண்டும் மீண்டும் சாப்பிட்டதால், 'இம்மியூன்' ஆகியிருக்கும் என்கிற கருத்தைத் தெரிவித்தார்கள். எலிகள் அந்த நெல்லைச் சாப்பிட்டு சாகவில்லை. மனிதரும் சாப்பிட்டால் கண்டிப்பாக யாரும் இறக்க மாட்டார்கள் என்ற கருத்தை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனாலும், இதுவரையிலே யாராவது இப்படிப்பட்ட நெல்லைச் சாப்பிட்டதன் காரணமாக, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்களா என்ற விவரம் இதுவரையில் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. மேலும், இதற்குப் பின்னால் பல்வேறு புதிய ரக வீரிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஆண்டில் ஏறத்தாழ 14 ரக வீரிய வித்துக்கள் வெளியிட்டிருக்கிறோம். அவைகளிலேகூட ஏதையாவது விவசாயிகள் பயிரிடலாம். கோ. 40 ரகத்தைத் தான் பயிரிட வேண்டுமென்ற நிலை இல்லை. அநேக புதிய ரகங்களைப் பயிரிடலாம். இந்த கோ. 40ஐப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்மீண்டும் மீண்டும் அரசினுடைய கவனத்திற்குகொண்டு வந்திருக்கின்ற காரணத்தால், இதைப்பற்றி தீவிரமான பரிசீலனை செய்து, இந்த நெல்லை மீண்டும் பயிரிடலாமா, வேண்டாமா என்ற கருத்தை ஆராய்ச்சி கழகம் மூலமாக பரிசோதித்து, அவர்கள் கருத்தைப் பெற நாங்கள் முயற்சியை எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த புதியரக நெல் கோ. 40, இராஜ ராஜச் சோழன் நெல்லைச் சாப்பிட்டவர்கள், தஞ்சை மாவட்டத்திலே குறிப்பாக, குடந்தை கோட்டத்தில் பலபேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இராஜ ராஜச் சோழன் ரக நெல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்களே சாப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.

அதோடு மட்டுமல்ல, கருணா ரக நெல்லைக் குறை சொன்னீர் கள். சி.ஓ. 40 ராஜராஜன் நெல் நோயால் பாதிக்கப்படும்போது பூச்சி மருந்து எவ்வளவுதான் தெளித்தாலும் கூட நோயைப் போக்க முடியவில்லை. தஞ்சை மாவட்ட விவசாயிகள் அதி காரியை அணுகி அதைப் பற்றிக் கேட்டபோது இதற்கு மேல் அந்த நோயைப் போக்குகின்ற மருந்து இல்லையென்று தெரிவித் தார்கள். ஆகவே, இந்த நெல்லை உற்பத்தி செய்கிறவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஏக்கர் ஒன்றுக்கு பத்து மூட்டை நெல் கூட கண்டுமுதல் இல்லாத அளவுக்கு ஆயிரக்கணக் கான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ராஜ ராஜன் நெல்லைத் தடை செய்ய வேண்டும், அது சம்பந்தமாக தீவிர விசாரணை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப் பினர் அருமை நண்பர் ராமலிங்கம் அவர்கள் கருணா என்ற நெல்லைக் குறை கூறியதாகக் குறிப்பிட்டார்கள். அந்த நெல்லை நாங்கள் குறை கூறவில்லை. கருணா என்ற பெயர் இருக்கக் ...ாது என்றுதான் ஏற்கனவே இந்த மன்றத்தில் கூட கடந்த ...ாடில் எடுத்துக் கூறினேன். அரசியல்வாதிகளின் பெயர்கள் ... வீரிய நெல் விதைகளுக்கு இருக்கக்கூடாது. ஆராய்ச்சி ...களின் பெயர்களை வைத்துக் கொள்ளலாம் அல்லது கூட்...சிக் கழகத்தின் பெயரை வைத்துக் கொள்ளலாம் என்று ஆ...ச் சொன்னேன். கருணா நெல்லின் தன்மை எப்படி இந்... என்பது மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கம் அவர் யாள... நன்றாகத் தெரியும். அதை விவசாயப் பெருங்குடி ஆரா... அதிகமாக உற்பத்தி செய்வதில்லை. சி.ஓ. 40, நெல் எடுத்...க விளைச்சல்கொடுப்பதில்லை, அதிகமான மகசூல் இல்லை பட்ட...ற காரணங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர் களுக்...ர்ந்திருக்கக்கூடிய தொகுதியில் பல விவசாயப் பெருங்குடி மக்க...ரிமக்கள் அதைச் சாப்பிட்டு வாந்திபேதி, ரத்த பேதி, வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது என்று எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல் இதைப் பற்றி இந்த அரசு தீவிர மாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. செ. இராமலிங்கம் : அரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய் என்பது போல் அமைச்சர் அவர்கள் சொல்வது இருக்கிறது. கருணா என்று எந்த அரசியல்வாதியும் கிடையாது..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். டிஸ்கஷன் எங்கோ போகிறது.

திரு. ப. சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சி.ஓ. 40 என்ற ரக நெல் சாப்பிடுவதால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் ரத்த பேதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற கருத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தப் பயிரைப் பூசசிகள் பாதிக்கும்போது தடுப்பதற்கு பூச்சி மருந்துகள் கூட சரியாக இல்லை, பூச்சிகள் இம்யூன் ஆகிவிட்டது போன்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன, விளைச்சலும் அதிகமாக இல்லை, ஆகவே, இந்தப் பயிரைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே சொன்னது போல் பல புதிய ரகங்கள் இப்போது வந்து கொண் டிருக்கின்றன. அந்த ரகங்களைப் பயிரிட்டால் விளைச்சல் அதிக மாக கிடைக்கும். குறிப்பிட்ட ரகத்தின் பெயரை மாற்றியதற் காக மாண்புமிகு ராமலிங்கம் அவர்கள் அரண்டவன் கண் ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொன்னார்கள். நாங் கள் ஒளியில்தான் இருக்கிறோம், இருளில் இல்லை. நாங்கள் உண்மையில் யாரைக் கண்டும் பயப்படவில்லை. நாங்கள் ஒளி மிகுந்த கண்களோடுதான் இருக்கிறோம். ஒளிமிகுந்த கண் களோடு பார்க்கின்ற காரணத்தால் நல்ல உணர்வோடு பார்க்கிற காரணத்தால் அதனால் நல்ல மாதிரியான சூழ்நிலைகளைத் தமிழகத்தில் ஏற்படுத்திக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்குத் (திருத்த) சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

[பிற்பகல் 12-20]

*திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டத்தை இங்கே இன்ட்ரட்யூஸ் செய்தபோது ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே

'The cases of illicit distillation and sale of intoxicating liquors and drugs, it is found, are on the increase every year.' என்று

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 மார்ச் 12

இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் காரணங்களின் அடிப்படையிலே இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமல் படுத்த நாம் முனைந்து இருக்கிறோம். அந்த அடிப்படையிலே இங்கே வைக்கப்பட்டிருக்கிற மசோதாவிலே சில திருத்தங்களைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும். அப்படிச் செய்தால் சாதாரண, அடித்தளத்திலே உள்ள மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

'That is the spirit in which the enactment was introduced in this House. If any other provisions were to be laid down, contrary to the spirit my humble submission is, the provisious contraty to objects and reasons would be struck down in the Court of Law.

ஆகையால் நீதிமன்றத்தில் இது நிற்கமுடியாது என்ற காரணத்தாலே ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் நேற்றுக் குறிப்பிட்டதைப் போன்று இந்தச் சட்டத்தை நிரந்தரமாக அமல்படுத்தவேண்டுமென்றால் சில திருத்தங்களைக் கொண்டு வந்தாக வேண்டும்.

4 (1) (jj) என்ற சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே கமிஷன் என்பது மட்டும் இருக்கிறது, அதோடு 'ஆர் இன்டன்ஷனல் ஒமிஷன்' என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலமாக இந்தச் சட்டத்தை அமல் படுத்தத் தயங்குகிற அதிகாரிகளை, அல்லது இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு விரோதமாக இருக்கிறவர்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அல்லது

4 (1) (jjj) என்ற முறையிலே இன்னொரு அமென்ட்மெண்ட்டை கொண்டுவந்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

The Police Officer within the meaning of Section 314 (A), for any of the offence committed as in 4 (1) (k) should be placed under suspension for the first and for the second and third offence, the serious consequence should be dismissal.

என்று ஒரு திருத்தத்தையும், இரண்டாவது திருத்தமாக

The village Munsif and Karnam under the provisions of 4 (1) (K) for the first offence should be a warning and for the second and third should be suspension and dismissal.

என்ற ஒரு திருத்தத்தையும் இரண்டு திருத்தங்களையும் இதிலே சேர்த்துக் கொள்வதன் மூலம் அதை அமல்படுத்த முடியும். அதை அமல்படுத்த முடியவில்லை என்று சொன்னால்



1979 மார்ச் 12] [திரு. ரா. மார்க்கபந்து]

இந்த அரசாங்கமானது கன்சர்ன்டு டிபார்ட்மெண்ட்டுகளுக்கு போலீஸ், ரெவின்யூ டிபார்ட்மெண்ட்களுக்கு இதை அமல் படுத்தவில்லையென்றால் உங்களை தண்டிக்கக்கூடிய முறை இருக்கிறது. என்று அந்த அதிகாரிகளுக்கு எக்ஸிக்யூடிவ் இன்ஸ்ரக்ஷன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 4 (1) j-வுக்கு

4 (i) (k) (ii. a) has to be deleted என்று தந்திருக்கிறேன். காரணம் இதை அமல் படுத்தவேண்டுமென்றுதான் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே அரசாங்கம் தந்திருக்கிறதே ஒழிய அதிலே புதிய பிரச்சினையைக் கொண்டு வரக்கூடாது.

4 (k) (2a) என்ற திருந்தத்தை தருவதன் மூலமாக The spirit of the Act என்பது ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்க்கு அதனுடைய பர்வியூவிற்கு அப்பாற்போய்விடும் என்பதால் It will be definitely struck down if it is taken up to the court என்ற முறையிலே அதைத் திருந்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே பழைய சட்டத்திலே உள்ள புரவிஷன்களை அப்படியே நிறுத்திக்கொண்டால் சரியாக இருக்கும். 4 கேபிடல் ஏ கொடுத்திருக்கிறீர்கள், அதற்கு நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். 4 கேபிடல் ஏ என்பதும் இந்த ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் பர்வியுவிற்கு அப்பாற்போவதால் அதையும் திருந்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இருக்கிற சட்டமே போதும். ஆனால் அதிலே ஒரு திருத்தம் Six months, or with fine என்று ஏற்கனவே இருக்கிற சட்டத்திலே 'ஆர்' என்ற வார்த்தையை எடுத்துவிட்டு 'அன்ட்' என்ற வார்த்தையைப் போட்டால் நீங்கள், நினைக்கிறபடி சட்டத்தை நிறைவேற்றமுடியும். ஆகவே புதிததாகக் கொண்டுவரப்படுகிற 4 கேபிடல் ஏ என்பதை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

14 வது பிரிவுக்கு 4 (4) என்று புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 மார்ச் 12

'Notwithstanding anything contained in sub-sections (1) to (3), the Collector or other Prohibition Officer in charge of the district or any other officer authorised by State Government in that behalf, shall detain the animal, vessel, cart or other vehicle used in the commissioner of an offence against this Act till the case is disposed of'

இந்த முறையிலே சட்டத்தை தந்திருக்கிறீர்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கேசை எடுத்துக் கொண்டால் ட்ரையல் நடக்கிறது, அப்பீலுக்குச் செல்கிறது the revision lies to the District judge இப்படிக் குறைந்தபட்சம் வழக்கு முடிவதற்கு கிரிமினில் வழக்கு ஓராண்டுக் காலம் ஆகும். உதாரணத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். ஒரு மாட்டு வண்டியிலே கடத்திச் சென்றால், liable for confiscation அது டிஸ்போசலான பிறகுதான் அந்த மாடுகளை, மிருகங்களை, கார் போன்றவைகளை விடுதலை செய்ய வேண்டு மென்று சட்டத்தைக் கொண்டுவந்தால் It will be liable for damages and deterioration as well மிருகங்கள் போன்றவற்றை வைத்துக்கொண்டிருந்தால் அரசாங்கத்திற்குத்தான் அது பாரத்தைக் கொடுக்கும். எனவே, ஏற்கனவே வைத்திருக்கின்ற சட்டத்தை வைத்து, Even during the pendency of the trial, these eategories can be released என்ற முறையிலே அந்த provisions-களை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

14 -A there is an amendment ஒரு திருத்தம்

Owner of animal, vessel, cart or other vehicles deemed to be guilty in certain cases என்ற புதிய திருத்தத்தைத் தந்திருக் கிறீர்கள். அதன் மூலம் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டு விடக்கூடும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். காரணம், இந்தச் சட்டத்திலே இருக்கின்ற ஒரு பாதுகாப்பு, ஏற்கனவே ஒரு பொருளானது இந்தக் குற்றம் செய்யப் பயன்படுத்தப்பட்டால் It is liable for confiscation and apart from that the person who indulges in such an offence is also liable for conviction என்ற முறையிலே இந்தச் சட்டமும் 14 (a)-ஐ எடுத்து விடுவது சரியாக இருக்கும்.



1979 மார்ச் 12] [திரு. ரா. மார்க்கபந்து]

மற்றும் 15 (c) என்பதிலே non-bailable offence-certain offences are non-bailable என்று சொல்வதிலே மூன்றாண்டுக் காலமும் அதற்குமேலும் இருக்கின்ற குற்றங்களை non-bailable என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தை முழுக் கப் பார்த்தால், எந்தவொரு பிரிவும் மூன்றாண்டுக்குக் குறைந்த தண்டனை கொடுப்பதாக இல்லை. எல்லாக் குற்றங்களுக்கும் மூன்றாண்டுக்கு மேற்பட்ட தண்டனையாக இருப்பதால் 4 (i) (j) and 4 (A) possession ஆகிய இவைகளை bailable offence ஆக செய்து, ஏற்கனவே, சட்டத்திலே இருக்கின்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை போதும் என்பதை and என்பதைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் 15 (c) என்ற புரொவிஷனையும் சேர்த்திருப்பார்களேயானால் அது சேட்டிஸ் பை ஆகும் அளவிற்கு இருக்கும். 4 (1) ஜெ பொச ஷனை மட்டும் குறைந்த பட்ச தண்டனை கொண்டு வர வேண்டு மென்ற காரணம், குடித்திருக்கிறார் என்று அழைத்துச் சென்று மருத்துவ அதிகாரி அவர் குடிக்கவில்லை என்று சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், Police officers would foist a case on the persons who have been arrested. என்ற டென்டென்சியைக் குறைக்கும் வகையில் 4 (1) ஜே, 4 (1) ஏ, 4 (ஏ) என்பதையும் நீங்கள் குறைக்க வேண்டுமென்று சொல் கிறேன். 16 (2) அண்ட் 24 என்பதிலும் இருக்கின்ற புரொ விஷன்களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பர்மிட்டிலே லைசென்சிங் கண்டிஷன் மீறப்படுமானால் கடுந் தண்டனை விதிக்கும் வகையிலே, Presumption of that liquor is illicit variety இருக்கும். அதையும் நீக்கி விடுவது சாலச்சிறந்தது. 41 (பி) ஐ எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த புரொவிஷன் ஆனது நம்முடைய சட்டத்திட்டங்களுக்கும் அல்லது அரசியல் சாசனத்திற்கும் வேறுபட்டு இருப்பதால் 41 (பி) என்பதையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 52 (பிபி) என்பது, Probationary Offenders Act will not be made applicable of this Act என்று தந்திருப்பது. மரண தண்டனை அல்லது ஜென்ம தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டவர்களுக்கு மட்டும் இந்த விதி பொருந்தாது என்று இருப்பதால் மதுவிலக்குச் சட்டத்திலே ஆட்பட்டவர்களுக்கு Probationary Offenders Act பயன்படக்கூடாது என்று சொல்வது சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கும். ஆகவே, அதை எடுத்து விட வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, 52 (இ) புரொவிஷன் இருக்கிறது. அது எக்ஸ்ராடிஷன் என்று சொல்வார்கள். நாடு கடத்தும் முறையிலே இருக்கின்ற சட்டத்தை இந்தச் சட்டத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் It is completely out of the spirit of this enactment என்று சொல்லி 52 (இ) புரொவிஷனை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

அதே நேரத்திலே இதை அமுல் படுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறபொழுது, சில விதிமுறைகளை நீங்கள் கடைப் பிடித்தாக வேண்டும். தடை செய்யப்பட்ட மதுவா என்று கண்டுபிடிக்க ஸ்டேட் பூராவுக்கும் ஒரே ஒரு லாபரேட்டரி இருக்கிறது. டிஸ்டிரிக்ட் வாரியாக லாபரேட்டரி ஆரம்பிப்பதன் மூலமாக, தேங்கிக் கிடக்கிற வழக்குகளைச் சீக்கிரம் முடிக்க வாய்ப்பிருக்கும்.

அதே நேரத்திலே பொதுவாக, இன்டிபென்டட் விட்னஸஸ் மகஜர்கள் தயார் செய்கிறார்கள். இதிலே, வழக்குமன்றத்திலே, போலீஸ் ஆபிசரே—அவர் மட்டும் சாட்சி சொல்லி விட்டால் குற்றம் நிரூபணமாகி விடுகிறது என்ற காரணத்தாலே (மணியடிக்கப்பெற்றது). I am giving only the salient points.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள், உங்களுக்குப்பின்னால் 4 பேர் பேச வேண்டியிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து: 'பில்' லிலே கூட 'ரெஸ்டிரிக்ட்' செய்தால் எப்படி? இதில் கூட, சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாவிட்டால், வேறு எதற்கு அய்யா நாங்கள் வருகிறோம். வெறுமனே, பொம்மை மாதிரி கையைத் தூக்கிவிட்டு போகலாமே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரத்தையும் பார்க்க வேண்டும், நீங்கள் பேசிக்கொண்டே போனால், மற்றவர்கள் பேசவேண்டாமா?

திரு. ரா. மார்க்கபந்து: மற்றொன்று, இதிலே இருக்கிற ஆபத்தைச் சொல்கிறேன். அந்த ஆபத்திலே மாட்டிக்கொள்கிற மக்கள் சாதாரண மக்கள். போலீசார், வழக்கு மன்றத்தில்,



நான் அவர் குடிப்பதைப் பார்த்தேன், அவரிடத்திலேயிருந்து மதுவைக் கைப்பற்றினேன் என்று சாட்சி சொல்லி, மகஜர் தயாரித்தால், தண்டனை வழங்கப்படும் என்று இச் சட்டத்தில் இருக்கிறது.

At least it must be corroborated by an independent witness.

என்ற முறையில் நீங்கள் "இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள்தான் இந்த மதுக் குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பது மிகப் பரவலாகப் பேசப்படுகிறது, உண்மையும் கூட. ஆகவே, நான் சொல்கிறேன்,

There should be a special squad at the district level.

அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கோ, மற்றவர்களுக்கோ, யாருக்கும் தெரியாத அளவு குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிக் குற்றத்தைக் கண்டுபிடித்தால், போலிஸ், காவல் துறை, வழக்குப் பதிவு செய்து தண்டனை வழங்குகின்ற முறையை அமுல்படுத்த முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, There should be a vigilance party over the police என்ற முறையிலே நீங்கள் அமுல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன், இதை எல்லாம் செய்யவில்லை என்றால் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படுபவர்கள், வசதி படைத்தவர்கள் அல்ல, சாதாரண மக்கள், நடுத்தர மக்கள்தான். இந்த ஆட்சியால், சாதாரண மக்களை, பழி வாங்குகின்ற நிலைமைக்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்ற நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது. பணக்காரன் தப்பித்துக் கொள்கிறான். ஏழை அகப்பட்டுக் கொண்டு தண்டனை பெறுகிற அளவுக்கு நீங்கள் ஆக்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

மத்திய அரசு, 1977-க்குப் பிறகு மதுவிலக்குக் கொள்கையை அமுல் படுத்துகிற மாநிலங்களுக்குத்தான் Compensatory தொகை தருவோம் என்று சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் 1977-க்கு முன்னாலேயே நாங்கள் அமுல் படுத்தியிருக்கிறோம். ஆகவே 50 சதவீதம் காம்பன்சேஷனாவது கொடுங்கள் என்று மத்திய அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த வேண்டும். மத்திய அரசாங்கம் நம்முடைய வேண்டுகோளுக்கிணங்கவில்லை என்றால், ஒரு மணி நேரத்திற்கு "டோக்கன்" ஆக, "லிப்ட்" செய்து, மீண்டும் அமுல் படுத்துங்கள். 1977-க்கு முன்னாலே இருந்து மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்தி வருகிற இந்த அரசுக்குக்

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 மார்ச் 12

கட்டாயமாக, மத்திய அரசு உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் வலியுறுத்த வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு மசோதாவை வரவேற்கின்ற நேரத்தில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறிப்பாக 'The presumption is liquor consumed is of illicit variety.' என்பதை குற்றவாளிக்கு எதிராக இருப்பதாகச் சுட்டிக் காட்டினார்கள். சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே அவர்கள் இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட் இந்திய சாட்சி சட்டத்தின் 101 லிருந்து 106வது பிரிவு வரை பார்ப்பார்களேயானால் யாரிடம் பர்டன் ஆப் புரூப். அதாவது யாரிடம் நிரூபிக்கப்பட வேண்டிய நிருபணம் இருக்கிறது என்பதைத் தெரிந்துக் கொண்டிருப்பார்கள். குறிப்பாக 101ல்

'Whoever desires any Court to give judgement as to any legal right or liability dependent on the existence of facts which he asserts, must prove that those facts exist.'

இதை யார் மீது எந்த நிருபணத்தை இந்தச் சட்டத்தில் போட்டிருக்கிறார்கள். என்பதை நான் ஒரு உதாரணத்தின்மூலம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'A' desires a Court to give judgement that 'B' shall be punished for a crime which 'A' says 'B' has committed. 'A' must prove that 'B' has committed the crime.

(b) 'A' desires a Court to give judgement that he is entitled to certain land in the possession of 'B', by reason of facts, which he asserts and which 'B' denies, to be true. 'A' must prove the' existence of those facts.

அதுமட்டுமல்ல

Section 103. The burden of proof as to any particular fact lies on that person who wishes the Court to believe in its existence, unless it is provided by any law that the proof of that fact shall lie on any particular person.



1979 மார்ச் 12] [திரு. பி. எச். பாண்டியன்]

இங்கே நம்முடைய 41-வது பிரிவை எடுத்துப் பார்க்கும் 'இல்லிசிட் டிரக்' அதாவது சட்டத்திற்குப் புறம்பான மதுவை அருந்தியிருந்தால் அதைப்பற்றி அருந்தியவர்தான் நிரூபிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்கிறது. அதாவது, அருந்தியவர் அவர் அருந்தியது சட்டத்திற்குப் புறம்பான மது அல்ல என்றோ, இல்லாவிட்டால் அவர் மது பெர்மிட் வைத்திருப்பதாகவோ மருத்துவரின் அனுமதியோடு அருந்துவதற்கு லைசன்ஸ் உள்ளது என்றோ நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிப்பது அவருடைய பொறுப்புத்தான். அது மட்டும் அல்ல 103-வது பிரிவை எடுத்துப் பார்க்கும்போது, அதற்கு ஒரு உதாரணத்தையும் நான் இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(a) 'A' prosecutes 'B' for theft and wishes the Court to believe that 'B' admitted the theft to 'C'. 'A' must prove the admission.

'B' wishes the court to believe that at the time in question, he was elsewhere. He must prove it.

அந்த எடுத்துக் காட்டைப் பொருத்த அளவில் இந்த 41-வது பிரிவின்கீழ் யார் அதை நிரூபிக்க வேண்டும் என்பதை இந்தச் சட்டம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மது அருந்தியவர்கள் நான் அருந்தியது சட்டத்திற்குப் புறம்பானது அல்ல என்று நிரூபித்துக் காட்டுவதற்கு இந்தச் சட்டம் இடம் தருகிறது. இந்தச் சட்டத்திற்கு 'நான்பெயிலபிள்' என்று இருப்பது ஏன் என்று கேட்டிருக்கிறார்கள். 'நான்-பெயிலபிள்' ஆக பல குற்றங்கள் இந்தியச் சட்டத்தில் இருக்கின்றன. இருந்தபோதிலும் கொலைக் குற்றம் மற்றும் பல கொடிய குற்றங்களுக்கு, நீதிமன்றத்தில் வழக்காடுகிற நேரத்தில், 431-வது பிரிவின்கீழ் நீதிபதியின் உத்தரவில் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதற்காக, அவர்களை பல்வேறு வழக்குகளில் சிறைபடுத்துவதற்காக இங்கே இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்திய பீனல் சட்டத்தில் 511 சட்டங்கள் இருக்கின்றன. அவர்களைப் பழி வாங்குவதற்காக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரத்தேவையில்லை. இந்தக் குற்றத்தை யார்மீது போட்டாலும், இந்திய பீனல் கோட் சட்டத்தின்கீழ் பெறப்படும் தண்டனையை விட அதிகமாகப் பெற்றுவிட முடியாது. இதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'acquisition of wealth disproportionate to his income'

யாராவது அவரது வருமானத்தைவிட அதிக சொத்து சேர்த்து இருந்தால் அவர்மேல் வழக்குத் தொடர முடியும். அந்த

41-வது (பி) பிரிவின்படி அவர்தான் அந்தச் சொத்தை சம்பாதித்த விதங்களை எடுத்துக் காட்டவேண்டும். இதுபோல் பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. பல்வேறு தலைவர்களை உள்ளடக்கக்கூடிய சட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும் யார் மீதும் இது போன்ற வழக்குகளைத் தொடங்கவில்லை, என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களைப் பழிவாங்குவதற்காக இது போன்ற 3 ஆண்டு காலம் தண்டனை கொடுக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவரத் தேவை இல்லை. ஆகவே, ஏழைகள் வாழ வேண்டும் என்பதற்காக, சமுதாய வளர்ச்சியை நன்முறைப்படுத்துவதற்காக இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-40]

இதுபோன்ற சட்டங்கள் நாட்டின் வளர்ச்சிக்காக, சமுதாய வளர்ச்சிக்காக என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, யாரைப் பாதுகாக்கவோ, பழிவாங்கவோ இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. பழிவாங்க பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, நம்முடைய இந்த மசோதாவை நீங்கள் எல்லாம் இந்த நேரத்தில் ஆதரித்தாகவேண்டும்.

இங்கே சில உறுப்பினர்கள் சொன்னார்கள். நாடுகடத்தப் படுவார்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக என்று. இந்த மது விலக்குச் சட்டத்தின்மூலமாக யாரைவேண்டுமானாலும் நாடு கடத்திவிடுவார்கள் என்று இங்கேயுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே எக்சிகியூட்டிவ், ஜுடிசியரி, லெஜிஸ்லேச்சர் என்று 3 பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் சாட்சிகளைக் கலைத்து விடுவார்கள் என்ற ஐயததில் அந்த ஊரை விட்டுப் போகக்கூடாது என்று சொல்லி ஒரு ஊரைக் குறிப்பிட்டு அங்கே இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்படுவதை சமுதாயத்திற்கு செய்யப்படுகிற நன்மைக்காக என்று எடுத்துக்கொள்கிறோம். நாடுகடத்தப் படுவதாக யாரும் நினைப்பது இல்லை. ஆகவே, மக்கள் நல் வாழ்வுக்காகத்தான் இப்படிச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதைச் சொல்லி இந்த சட்டத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கொள்கை அளவில் மதுவிலக்குச் சட்டத்தை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்து இருக்கிற மசோதாவைப் பார்க்கிறபோது இது ஒரு சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக வழிவகை செய்யுமா





என்று ஐயப்பாடு ஏற்படுகிறது. மது விலக்கை தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். இந்த மசோதாவின் நோக்கம். ஆனால் இன்று இருக்கின்ற மசோதா தீவிர சட்டமாக இந்த மாநிலத்தில் கடந்த சில மாதங்களாக அமல் நடத்தப்படுகிறது. கடந்த சில மாதங்களாக இருக்கும்படியான நிலையை எண்ணிப்பார்க்கிறபோது தீவிர மசோதாவாக இருந்தாலும் சரி, அது சட்டமாக மாற்றி அமைக்கப்பட்டாலும் சரி, இந்த மசோதாவால் நாம் நிச்சயமாக எதிர்பார்க்கிற சமூக சீர்திருத்தம் ஏற்படாது என்பதை சொல்லிக்கொள்கிறேன். காரணம், அதை அமல்படுத்துவதற்காக நாம் ஏற்று இருக்கிற மெஷினரியை எண்ணிப்பார்க்கிறபோது, நிச்சயமாக அது நல்ல முறையில் அமல்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து. இந்த நாட்டில் கள்ளச் சாராயம் சர்வ சாதாரணமாக நடமாடுகிறது. எல்லா நகரத்திலேயும் எல்லாக் கிராமத்திலேயும் மிகவும் எளிய முறையில் சுலபமாக அது கிடைக்கிறது. அதிலே குறிப்பாக எங்கெங்கே போலீஸ் நிலையங்கள் இருக்கின்றனவோ அதற்கு அருகாமையிலேயே அது உற்பத்தி செய்யப்பட்டு, வினியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் இவர்களுக்கும் போலீஸ் இலாகாவில் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதாக எனக்குத் தகவல். மாமூலாக போலீஸ் நிலையங்களுக்கு இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் சாதாரணமாக மாமூல் கொடுக்கிறார்கள் என்ற அடிப்படையில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கும் அதை விற்பதற்கும் அனுமதிக்கப்படுகிறது. இந்த நிலை இருக்கிறபோது இப்போது சட்டத்தின் விளைவாக இந்த தீய பழக்கத்தை நம்முடைய நாட்டிலிருந்து எப்படி அகற்ற முடியும் என்பதை இந்த அரசு நன்றாக ஆலோசிக்க வேண்டும். ஆகவே நான் முதன் முதலில் கூறிக்கொள்ள விரும்புவது போலீஸ் இலாகா மூலமாக நிச்சயமாக இந்த அரசு மது விலக்குச் சட்டத்தை அமல் படுத்த வேண்டாம். அதற்குத் தனியாக பிரிவை ஏற்படுத்தி, மது விலக்குக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்களை வைத்து அமல் படுத்தினால் இந்தப் புதிய சட்டமே தேவையில்லை, ஏற்கெனவே இருக்கிற சட்டமே போதுமானது என்பது என்னுடைய கருத்து. இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிற முறையைப் பார்க்கிறபோது 5 ஆண்டு, 3,000 ரூபாய் இன்னும் சொல்லப்போனால் குற்றங்களுக்காக நாடு கடத்தல் வரையிலும் தண்டனை விதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இது சாதாரணமாக யாரைப் பாதிக்கும் என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வளவு பயங்கரமான தண்டனையை விதித்திருக்கிறோம் என்றால் வசதி படைத்தவர்கள் நிச்சயமாக இந்தச் சட்டத்திற்கு உட்பட மாட்டார்கள். பல்வேறு வகைகளிலே அவர்கள் தப்பித்துக்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 12

கொள்வார்கள். சட்டத்தை அமல் நடத்துகிற அரசுக்கு
அது நன்றாகத் தெரியும். எந்த அளவுக்குத் தீவிரம் காட்டு
கிறார்களோ அந்த அளவுக்கு ஏழை எளிய மக்கள் தான் பாதிக்கப்
படுவார்கள். ஏழை எளிய மக்களைத்தான் இந்தச் சட்டம்
தாக்கும், பாதிக்கும் என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

நாடு கடத்துகிறோம் என்றால் நிச்சயமாக வசதி படைத்த
வர்கள் அல்லது சமுதாயத்தில் நல்ல நிலையில் இருக்கிறவர்கள்
இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட மாட்டார்கள்; ஏழை
எளிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தில் இரண்டுவகை தண்
டனை —டபிள் ஸ்டான்ட்—இருக்கிறது. பப்ளிக் சர்வண்ட்
என்று குறிப்பிடப் படுகிறவர்களுக்கு ஒரு முறை, மற்றவர்களுக்கு
ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சட்டத்தின்
முன்னால் எல்லா மனிதர்களும் சமம்

All are equal before the Law.

என்பது அடிபட்டுப் போகிறது. பப்ளிக் சர்வண்ட் என்று
சொல்லும்போது அரசு ஊழியம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள்.
இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சர் உட்பட இப்போது
பப்ளிக் சர்வண்ட் என்று உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்
பட்டிருக்கிறது. பப்ளிக் சர்வன்ட் என்று இந்தச் சட்டத்தில்
கூறப்பட்டிருக்கின்ற இவர்களை போலீஸ் இலாகாவினர்
நெருங்குவார்களா ? இந்த மதுவிலக்குச் சட்டத்தின்படி அவர்
கள்மீது வழக்குப் போடுவார்களா என்பதை மாண்புமிகு சட்ட
அமைச்சர் எண்ணிப்பார்க்க வேண்டும். அரசியலில் இருக்
கின்றவர்கள், குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது
வேறு பெரிய உத்தியோகத்தில் இருக்கிற அதிகாரிகளை இந்த
போலீஸ் அதிகாரிகள் இந்தச் சட்டத்திற்கு உட்படுத்த மாட்
டார்கள்; வழக்கு பதிவு செய்ய அவர்களுக்குத் துணிச்சல் வராது
என்பதைத் தைரியமாகச் கூறமுடியும்.

குறிப்பாக பலர் இப்போது பச்சை குத்துவதில் தீவிரமாக
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ஆளும் கட்சி
யைச் சேர்ந்தவர்கள் பச்சை குத்திக் கொண்டிருந்தார்கள்.
இப்போது மற்றவர்களும் பச்சை குத்திக் கொள்வதில் தீவிரமாக
இருக்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்கு
வந்துவிட்டார்கள் என்று நீங்கள் எண்ணிவிட வேண்டாம்.
இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பச்சை குத்திக்
கொள்கிறார்கள். பச்சை குத்திக் கொள்கிறவர்கள் மீது அதி
காரிகள் வழக்குப்போட மாட்டார்கள். ஏனென்றால் பச்சை
குத்திக்கொண்டவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்கள் என்று



1979 மார்ச் 12] [திரு, ஜே. ஜேம்ஸ்]

அவர்கள் எண்ணிக் கொள்வார்கள். ஒரு சட்டத்தைக் கொண்டு
வரும்போது சந்தேகத்திற்கு இடமில்லாமல் அதை செயல்படுத்த
வேண்டும். நியாயமாக, நீதியாக சட்டத்தை அமல்படுத்த
வேண்டும். ஆளும் கட்சியினர், மற்றவர்கள் என்ற எண்ணம்
வரக்கூடாது. ஆனால் போலீஸ் அதிகாரிகள் இந்தச் சட்டத்
தைச் செயல்படுத்தும்போது நிச்சயமாக ஆளும் கட்சிக்காரர்
களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அதேநேரத்தில் தங்களுக்கு
வேண்டாத எதிர்கட்சிக்காரர்களைத் துன்புறுத்துவதற்காக,
பழி வாங்குவதற்காக, இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்று
நான் குற்றஞ் சாட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக போலீசார் இந்தச் சட்டத்தை அமுல்
படுத்த முயலும் போது லஞ்ச லாவண்யம் எந்த அளவுக்கு
நடக்கும் என்பதை கூறவேண்டிய அவசியம் இல்லை. கிராமங்
களில் இப்போது என்ன நடக்கிறது என்பதை ஆளும் கட்சியைச்
சேர்ந்தவர்கள் கூட நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்த
அவசரச் சட்டம் வருவதற்கு முன்னால் போலீஸ் நிலையத்தில்
ஜாமீனில் விடுவதற்கு 25 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற
மாமூல் இருந்தது. ஆனால் இந்தச் சட்டத்தில் ஜாமீனில்
விடக்கூடாது என்று விதி இருக்கிற காரணத்தால் கேஸ் பதிவு
செய்தால் ஜாமீன் கிடையாது. கேஸ் போடாமல் இருக்க
கேசுக்கு 500 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிலை இப்போது
ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆக, சாதாரண போலீஸ்
காரர் ஒரு கேசில் 500 ரூபாய் சம்பாதிப்பதற்கு வழிஏற்படு
கிறது. ஒரு போலீஸ் அதிகாரி 2,500 ரூபாய் வரை சம்பாதிப்பதற்கு
நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, எந்த அளவுக்கு
இந்த சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும்; மது
விலக்கை ஒழிக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அந்த
அளவுக்கு லஞ்ச லாவண்யமும் அதைப்போன்ற பல முறைகேடு
களும் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கிளாஸ் 41(பி)-ல் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள்
'it shall be presumed until the contrary is proved, that such
liquor or intoxicating drug is an illicit variety,

இது சாதாரண சட்டத்திற்கு முரண்பட்டது என்பதைச் சட்ட
அமைச்சருக்கு நான் கூற வேண்டியதில்லை.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 12

'The accused is considered to be innocent until he is proved to be guilty'. That is the presumption in the ordinary law.

இதற்கு மாறாக, இந்த 'பிரசம்ஷன்'—இந்த சமூகத்தைத் திருத்துவதற்கு கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத்தினால் ஏற்படுத்த முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–50.]

நாம் சமூக நீதி வரவேண்டும், சமூக சீர்த்திருத்தம் ஏற்பட வேண்டும் என்று விரும்பி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் கூட இந்தப் பகுதி சட்டத்திலே இருப்பது நல்லதல்ல. அதை சமூக நீதி என்று சொல்வதற்குப் பதிலாக சமூக அநீதிதான் ஏற்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த கிளாஸ் இதிலே இருப்பதால், வசதி படைத்தவர்கள் வேண்டுமானால் வழக்கறிஞர்களை வைத்து வாதாடி தப்பித்துக் கொள்ள வாய்ப்புகள் இருக்கலாம், ஆனால் ஏழை எளியவர்கள் பாதிக்கப் படுவார்கள். ஆகவே ஏழை எளியவர்கள் இந்த மாதிரி வழக்குகளில் ஈடுபடுகின்ற சூழ்நிலையிலே அவர்களுக்கு இந்தக் கிளாசினால் நிச்சயம் தீங்கு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 52 பி.பி. என்ற ஒரு கிளாஸ் இந்தச் சட்டத்திலே இருக்கிறது.

No person convicted under this Section shall be released on probation on admonished.

என்று இருக்கிறது. சாதாரணமாக எப்படிப்பட்ட குற்றம் செய்தவர்களுக்கும் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகும் கூட அவர்களை விடுவிக்கின்ற ஒரு விதிவிலக்கு உண்டு. அந்தச் சாதாரண விதிவிலக்கு கூட இந்தச் சட்டத்தில் இல்லை என்பது நல்லதல்ல. இப்படிப்பட்ட கிளாஸ்களைப் புகுத்தி இருப்பது வரவேற்கத் தக்கதல்ல.

அடுத்து 52 இ என்ற பகுதியில் செக்ஷன்5 செக்ஷன் 6 ஆகியவற்றில், இந்த முறையில் குற்றம் செய்தால் அவர்களைத் தண்டிப்பது மாத்திரமல்லாமல் தண்டனைக்காலம் தீர்ந்தபிறகு வேறொரு இடத்திற்கு அனுப்புகின்ற நிலைபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது மூன்றாண்டு 5 ஆண்டு என்று தண்டனை விதிக்கப்பட்டு அது தீர்ந்த பிறகும் கூட அவர்களை அவர்கள் வசிக்கின்ற இடத்திலிருந்து இன்னொரு பகுதிக்கு மாற்ற வேண்டும்



1979 மார்ச் 12] [திரு. ஜே. ஜேம்ஸ்]

என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது டபுள் பனிஷ்மென்டாக இருக்கிறது. இது நடைமுறைக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். தண்டனைக் காலம் முடிந்த பிறகு நாடு கடத்துவது விரும்பத்தக்கதல்ல.

அடுத்து பனைமரத் தொழிலாளர்கள் இந்த சட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால் அவர்கள் பதனீரில் லைம் போடாமலே கூடச் சாப்பிடுவார்கள். இது அவர்களுடைய வழக்கம். அப்படி அந்த முறையில் சாப்பிட்டால் கூட இந்தச் சட்டத்தின்படி அவர்கள் ஏதோ கள் சாப்பிட்டதாகக் கருதப்படுவர். அப்படி அவர்கள் மீது போலீஸ் வழக்கு தொடர்ந்தால் அந்த ஏழைத் தொழிலாளர்களால் வழக்கு நடத்த முடியாத நிலை ஏற்படும். ஆகவே இந்தச் சட்டம் பனைமரத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பாதிக்கப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை இவ்வளவு தீவிரமாக அமல்படுத்தவேண்டும் என்று சொல்லப்படுகிற அதே நேரத்தில் அரிஷ்டம் என்ற ஒருவகை மது அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. அதற்கு லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. மதுவைச் சாப்பிடுவதை விட அதிக ஆபத்து அந்த அரிஷ்டத்தைச் சாப்பிடுவதால் ஏற்படுகிறது. இருந்தாலும் கூட அதனை அருந்துவதற்கு லைசென்சு கொடுக்கப்படுகிறது. இந்த நிலையைப் பார்க்கின்ற போது இந்த அரசுக்கு உண்மையிலேயே மதுவை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றுதான் தெரிகிறது என்பதைத் கூறிக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவதாகச் சொன்னால், அரிஷ்டத்திற்குரிய அந்தச் சட்டத்தையும் கேன்சல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கொள்கை அளவில் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன் என்றாலும் நான் குறிப்பிட்ட சில காரணங்களால் அந்த கிளாஸ்களை மாற்றவேண்டும் என்று தங்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒவ்வொரு கட்சிக்கும் வாய்ப்பு கொடுத்துக்கொண்டு வருகிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் சுருக்கமாகப் பேசி முடித்துக்கொண்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் முன்னதாகவே பேசி முடித்துவிட்டார். இருந்தாலும் இரண்டொரு

கருத்துக்களை மட்டும் நான் சொல்லி மிகக் குறுகிய நேரத்தில் முடித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையிலும் மது விலக்குக் கொள்கையை ஆதரிக்கக்கூடிய ஒருகட்சி. மதுவிலக்கை தீவிரமாக அமல் நடத்தவேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்து மாறுபாடு கிடையாது. இருந்தாலும் இந்தச சட்டம் மிகக் கடுமையானதாக இருக்கிறதே, இந்தக் கடுமையான சட்டத்தின் மூலமாக மட்டும் மது விலக்கு அமலாக்கப்பட்டு விடுமா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மதுவைச் சாப்பிடுகிறவர்கள் மிகச் சாதாரணமான ஏழை மக்கள், சேரிவாழ் மக்கள் ஆவார்கள். இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இந்தப் பழக்கத்திற்கு அடிமைப் பட்டு அதைக் குடித்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எடுத்த எடுப்பிலேயே சிறை தண்டனை என்று போட்டால் சிறைகள் தான் நிரம்புமே தவிர குடிப்பவர்கள் குறையமாட்டார்கள். நான் சமீபத்தில் சிறை சென்றிருந்தேன். நான்கு நாட்கள் சிறையில் இருந்தேன். சென்னை சென்ட்ரல் ஜெயிலில் விசாரிக்குக்கிறபோது பெரும்பகுதி குற்றவாளிகள் மதுவிலக்குக் குற்றவாளிகள்தான் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நீங்கள் எதற்காகச் சிறை சென்றீர்கள்.

திரு ஏ.ஆர். மாரிமுத்து: திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சிறைப்படுத்தியபோது மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டேன். ஆக, சென்னை மத்தியச் சிறைச்சாலையில் கணக்கெடுததுப்பார்த்ததில் இரண்டாயிரத்துக்கு அதிகமான பேர்கள் மதுவிலக்குக் குற்றத்திற்காக உள்ளே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த இரண்டாயிரம் பேர்களும் சேரிவாழ் மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், தெருக்களில் பிளாட்பாரங்களில் படுத்திருப்பவர்கள். இந்த மாதிரி ஆட்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களால் வக்கீல் வைத்து வாதாட முடியாது. அதற்கு சக்தியற்றவர்கள். சக்தியிருந்து குடிப்பவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். எப்படித் தப்பித்துக்கொள்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். இது பகிரங்கமான இரகசியம். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல முடியாது. ஆகவே ஏழைமக்கள்தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிச் சொல்வதால் அவர்கள் குடிப்பது சரி என்று நான் சொல்லவில்லை. ஏதோ ஒரு பழக்கத்திற்கு அடிமையாகிக் குடிக்கிறார்கள். ஆகவே பிரசாரத்தின் மூலம், அதன் தீமையை எடுத்துச் சொல்வதன் மூலம், வாயால் சொல்வதின்



மூலம் குடிப்பதிலிருந்து அவர்களைத் திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமே தவிர அவர்களை சிறையில் தள்ளக்கூடாது. காய்ச்சுவதால்தான் குடிக்கிறார்கள். அப்படி காய்ச்சுபவர்களுக்கு அதிகமான தண்டனை கொடுத்தால் பலபேர்கள் குடிப்பது நின்றுவிடும். ஆகவே காய்ச்சுபவர்களுக்கு, அதை விற்கக்கூடிய வியாபாரிகளுக்கு கடுமையான தண்டனை கொடுத்து அதை நிறுத்துவதற்கு முயற்சிப்பது நல்லது. இப்போது அதற்கான தண்டனை ஏழு ஆண்டுகள், பத்தாண்டுகள் என்று இருக்கிறது. அதைக் குறைக்க முடியுமா என்று பார்க்கலாம். காய்ச்சுபவர்களுக்கு நிச்சயமாக சிறை தண்டனை விதிக்கலாம். ஆனால் குடிப்பவர்களை அபராதம் விதிப்பதோடு விட்டால் அது இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு இருக்கக்கூடிய சங்கடத்தைத் தீர்க்க உதவும். குடிப்பது சரி என்று நான் சொல்லவில்லை. ஒரு தடவை குடித்தால் கொஞ்சம் அபராதம், இரண்டாவது முறை குடித்தால் இரண்டு மடங்கு அபராதம் விதிக்கலாம். மூன்றாவது முறை குடித்தால் ஒரு மாதம் சிறைத் தண்டனை என்று விதிக்கலாம். இப்போது தான் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அந்தப்பாரம் அவர்கள் தலையில் விழுகிறது. ஜாமீன் கிடையாது. ஆகவே, இப்படிப்பட்ட கடுமையான முறையில் தண்டனை இருப்பதால் ஏழை எளிய மக்கள்தான், சேரிவாழ் மக்கள்தான், சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள்தான் 99¾% பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தால் இந்தச் சட்டம் இவ்வளவு கடுமையாக இருத்தல் கூடாது. ஆகவே இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடுமையான செக்ஷன்ஸ் இருப்பதால் இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்களை, குடிப்பவர்களை திருத்தக்கூடிய முறையில் இருக்க வேண்டும். அவர்களை ஒரேயடியாக தண்டிக்கக்கூடிய அளவிற்கு வைப்பது அரசாங்கத்திற்கு நல்லதல்ல. அதனால் அரசாங்கத்தினிடம் சாதாரண மக்களுக்கு வெறுப்புணர்வு கொள்ளும் சூழ்நிலை வரும். இந்த அவசரச் சட்டம் வந்து ஆறு மாதங்கள் இருக்கும் என்று கருதுகிறேன். இதனால் எவ்வளவு பணக்காரர்கள் உள்ளே போயிருக்கிறார்கள், எவ்வளவு ஏழைகள் போயிருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்துப்பார்த்தால் எல்லோருமே ஏழைகளாகத்தான் இருப்பார்கள். ஆகவே நான் ஏழை எளிய மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். குடிப்பது நல்லது என்று சொல்லவில்லை. ஆனால் படிப்படியாக ஒருவரை திருத்திக்கொண்டுவரவேண்டும். இந்தச் சட்டத்தை இவ்வளவு கடுமையாகப் போடுவதினால் திருந்திவிடுவார்கள் என்று யாரும் கருதவேண்டாம். ஆகவே இதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

[1979 மார்ச் 12

*திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மதுவிலக்குச் சட்டத்தினுடைய தண்டனைகளை கடுமையாக்கிக்கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை இந்த சமுதாயத்தின் சார்பாக எதிர்க்கவேண்டிய ஒரு நியாயமான அடிப்படையில் நான் இன்றையதினம் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்குக் கொள்கை நல்லறிவாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க கொள்கை என்றாலும் மதுவிலக்குக் கொள்கையில் எந்த நல்லறிவாளரும் வெற்றிபெறவில்லை என்பது நாடறிந்த ஒரு உண்மையாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்ச் சமுதாயத்தில் மது அருந்துவது என்பது அந்தக் காலத்துச் சூழ்நிலையில் சமுதாயத்திற்கு கேடாக இல்லாத அளவில், வீரத்திற்குத் துணை செய்வதாகக் குறிப்பிடுகிற அளவிற்கு இலக்கியங்களில் எல்லாம் கள் குடிப்பது என்பதும் அரசன் போருக்குப் போகும்போது வீரர்களுக்கு கள் வழங்குவது என்பதும் அதற்காக விழா கொண்டாடுவதும்—உண்டாட்டு விழா நடத்துவதும் வழக்கில் இருந்தன.

[பிற்பகல் 1-00]

அந்தக் கள்ளின் தரத்தில் வேண்டுமானால் வேற்றுமை இருக்கலாம். அப்போது சொல்லப்பட்ட தொடரை நினைவூட்டுகிறேன்.

தேள் கடுப்பன்ன நாட் படு தேறல்

என்று சொல்லுகின்ற ஒரு காலத்தில் அது அநாகரீகமாக எண்ணிப் பார்க்கப்பட்டதா என்று பார்த்தால் பொதுவாக இல்லை என்றே கூறலாம். அப்போதிருந்து மக்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தகாரணத்தால், அப்போது வறுமையின் கொடுமை இல்லாத சூழ்நிலையில் இது ஒரு அநாகரீகமாக கருதப்படவில்லை, ஆனால் சான்றோர்களுடைய உணர்வு—மனிதன் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும். தெளிவான சிந்தனையோடு இயங்க வேண்டும். மனிதன் என்ற உணர்வோடு வாழ வேண்டும் என்பதால்—வள்ளுவருடைய உயர்ந்த கருத்துக்கள் பிறந்தன.

''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்''

என்று கள் உண்பவர்கள் நஞ்சு உண்பவர்களேயாவர் என்ற கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.



1979 மார்ச் 12] [திரு. க. அன்பழகன்]

'' ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி ''.

கள் உண்பவனைக் காணும் தாயாலும் தாங்க முடியாது. அதே கொடுமை செய்பவர்கள் சான்றோர் முகத்திற்கு எதிரில் நிற்பதை அவர்கள் எப்படி ஏற்பார்கள் என்கின்ற கவலையை இழிவினை இது எடுத்துக் காட்டுகிறது.

'' உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டா தார் ''.

நல்லவர்களால் வேண்டாமென்று ஒதுக்கப்படலாமென்றால் கள்ளை உண்ணலாம் என்ற கருத்தையும்,

'' உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார் ''.

இந்த வள்ளுவருடைய குறள், யார் மதித்தாலும் இல்லையென்றாலும் கள் உண்பவர்கள் தன்னுடைய அறிவையும் புகழையும் இழந்து விடுவர் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

'' களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீ இயற்று . . . ''

என்று நீருக்குள் மூழ்கியிருப்பவனை விளக்கு ஒளியால் எப்படித் தேட காண இயலாதோ அதைப்போல குடித்தவன், மது மயக்கத்தில் இருப்பவனுக்கு அதன் தீமையை உணர்த்த முடியாது என்றும் கூறுகிறது குறள். குடிப்பவன் மனிதத் தன்மையை இழந்து விடுகிறான் என்ற கருத்துக்கள் எல்லாம் வள்ளுவர் காலத்திலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் காலம் வரை சொல்லப்பட்டு வந்ததாகும். உத்தமர் காந்தி அவர்களால் வற்புறுத்தப்பட்டு வந்தது. ராஜாஜி அவர்களால் போற்றப்பட்டது மதுவிலக்கு. மதுவிலக்கு என்பது சமுதாயத்தில் நல்லறிவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான கருத்து என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பாக மதுவிலக்கை மதிப்பவன் என்கின்ற முறையில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சிறந்தது, மதுமயக்கு மிகவும் தாழ்ந்தது. மது மயக்குதான் மது அருந்துபவர்களுக்குக் காரணமாக இருக்கிறது என்று சொன்னால்—அதற்குக் காரணம் மதுவிலக்கை ஆதரிப்பதாகச் சொல்பவர்கள்கூட அத்தனை பேரும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. வள்ளுவர் குறட்பாக்களைப் படித்தவர்கள், அவர்கள் பெரிய கவிஞர்களாக இருந்தாலும் அவர்கள் மது

விலக்கை ஏற்றுக் கொள்வதில்லை. அதிகாரத்தில் உள்ளவர்களும் படித்தவர்களும் தங்களுடைய வாழ்க்கையில் மதுவிலக்கைப் பின்பற்றவில்லை. எல்லா நீதிபதிகளுமே இதை ஏற்றுக் கொள்கிறார்களா என்றால் பலர் மதுவிலக்கை ஏற்றுக் கொள்ள வில்லை. படித்தவர்கள் மட்டுமல்ல, சமுதாயத்தில் வசதி படைத்த நிலையில் இருப்பவர்களில் பெரும்பாலோர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு மேலும் நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை. மதுவிலக்கு என்பது மனிதனுக்குச் சிறந்தது. மனிதனுக்கு நன்மை செய்கிறது என்று சொல்லி வாதாட முடியுமே தவிர, மது அருந்துவது என்பதை அறவே போக்கிட முடியும் என்று கூற முடியவில்லை. மது அருந்துவது என்பது எங்கேயிருந்து ஆரம்பிக்கிறது என்பதைப் பார்க்கும்போது இது பழக்கத்தின் அடிப்படையிலேயே உருவாகிவிடுகிற ஒன்று. அதன்பின்னால் அதிலிருந்து தப்புவித்துக் கொள்ள முடிவதில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல், மது குடித்துப் பழகியவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை என்பதை நாங்கள் பெரிதும் மதித்த கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களே இப்போது நான் மது குடிக்கவில்லை மது என்னைக் குடிக்கிறது என்று கூறி தன்னைத் தானே இதற்கு பலியிட்டுக் கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டேமறைந்தார் என்ப தையும், சட்டம் அந்த நிலையில் எதையும் செய்ய முடியவில்லை என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சட்டத்தின் மூலம் இந்தக் காரியத்தை முடித்து விடலாம் இதில் வெற்றி கண்டு விடலாம் என்று கருதி இந்த அரசாங்கம் இதைச் செய்யுமானால், நான் அரசுக்குச் சொல்லிக் கொள்வேன். இதில் இந்த அரசாங் கத்தின் முதல் தோல்வியும் முடிவான தோல்வியும் இந்த சட்டத்தினாலே ஏற்படும் என்பதை மேலும் இந்தச் சட்டத் தினால் ஏற்படும் விளைவுகளையும் இந்த ஆட்சி எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சீர்திருத்தச் சட்டம் ஏதுவாக இருந்தாலும், சமுதாயத்தை தீண்டாமை கொடுமையிலிருந்து ஜாதி வேற்றுமையிலிருந்து, மூட நம்பிக்கையிலிருந்து இன்னும் குறிப்பாகச் சொல்வதாக இருந்தால், திருட்டு முதலான குற்றங்களிலிருந்து, பெண்களை விபச்சாரக் குற்றத்திலிருந்து-சட்டங்கள் தடுத்து மாற்றிவிடவில்லை என்பதை நினைவூட்டுகிறேன். சட்டத்தின் மூலம், மன மாற்றம் ஏற்படுகிறதா என்பதைப் பார்க்கும்போது, இத்தகைய குற்றங்கள் தவறுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விபச்சாரக் குற்றம் என்பது சமுதாயத்தில் மிகவும் தண்டிக்கத் தக்க குற்றம் என்றாலும் கூட, சமூகப் பெரியவர்களும் பேரறிஞர் அண்ணா அவர் களும் சமுதாயச் சூழ்நிலை காரணமாகத்தான் விபச்சாரம் போன்ற குற்றங்களில் வழுக்கி விழக் கூடிய நிலை, அல்லது



பிழைப்புக்காக இதில் ஈடுபடுகிற தேவை ஏற்படுகிறது. அந்த நிலைக்கு ஆளாகாமல் இவர்களை பாதுகாக்க வழி கண்டால் ஒழிய, விபச்சாரக் குற்றத்திற்குக் கடும் தண்டனை கொடுப்பதால் மட்டும் சமுதாயத்திலிருந்து விபச்சாரத்தை போக்கி விட முடியாது என்று கூறியிருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இந்த சமுதாயம் தான் அவர்களை உற்பத்தி செய்கிறது. அவர் களாகவே உற்பத்தியாவதில்லை, இந்த சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் வாழ்கின்ற மக்கள் — அவர்களுக்குள் ஏற்படுன்ற மனக் குமறல்கள் கொந்தளிப்புகள்—வறுமையின் கொடுமைகள் —தாழ்வான நிலைமைகள்—வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படு கின்ற கஷ்டங்கள் இத்தகைய நிலைமைகள் காரணமாகத்தான் சிலர் இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகிறார்கள். இப்படிப்பட்ட கவலைகள் எல்லாம் சேர்ந்து குடிக்கும் தீய பழக்கத்திற்கு அவர் களை ஆளாக்கி விடுகிறது.

மக்கள் அந்தத் தீய பழக்கத்திற்கு ஆளாகிறபோது, அதை வைத்து சில பேர் பிழைக்க கூடிய நிலைவந்து விடுகிறது. அப்படிப் பிழைக்கச் சிலர் முற்படுகிறபோது, அவர்கள் நடத்துகின்ற அந்த முறையைப் பார்க்கும்போது, அவர்கள் ' எக்ஸ்பிளாயிடிங் கம்யூனிடி ' யைச் சேர்ந்தவர்கள், இதன் மூலம் பொருள் சேர்க்க, தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுகிறார்கள். ஆகவே, இந்தச் சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கின்றவர்களும் உருவாகிறார்கள். அந்தச் சுரண்டிப் பிழைக்கின்றவர்களை நம்பி பிழைக்க வேண்டியவர்களும் பலர் இருக்கிறார்கள்.

நான் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்க விரும்புவதெல்லாம், இந்தச் சமுதாயத்தில் மதுவிலக்கை ஏற்றுக் கொள்வதற்கேற்ற மனப்பக்குவம் இல்லாதபோது, இந்தச் சமுதாயத்தில் உள்ளவர்களைக் கொடுமையாக தண்டிப்பதற்கு, இந்தக் கடுமையான சட்டத்தின்மூலம், தப்ப முடியாமல் சிக்க வைத்து தண்டிப்பதற்கு நம்முடைய மனசாட்சி இடம் தருகிறதா என்பதேயாகும்.

அது மட்டுமல்ல, இந்த சமுதாயத்தை சீர்திருத்த வேண்டு மென்று இராஜாஜி அவர்களால் சட்டம் கொண்டு வரப்பட்டு, பொதுவாக இது போற்றப்பட்டு, இடையிலே ஏற்பட்ட மாநில பொருளாதார நிலை காரணமாக, கைவிடப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு கைவிடப் பட்டு, மறுபடியும் அது கொண்டு வரப்பட்டுள்ள ஒரு தொடர்பான நிலையை எண்ணிப் பார்க்கின்றபோது, இந்தச் சட்டம் இருக் கிறதே தவிர, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, ஏற்படுகின்ற குறைபாடுகள் காரணமாக, இந்தச் சட்டம் ஏறத் தாழ துருபிடித்த சட்டமாக, பயனற்ற சட்டமாக ஆக்கப்பட்டி ருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 12

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் குறைகள் எப்படி ஏற்பட்டது என்றுகேட்டால், இங்கே நான் படித்த ரிப்போர்டைச் சொல்கிறேன். High level committee for the strict enforcement of prohibitition of Tamil Nadu என்ற அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்த அளவிலே, நான் புரிந்துகொண்ட உண்மை என்னவென்றால், இருக்கின்ற சட்டமே போதுமானது. ஆனால் நடைமுறைப்படுத்துவதில் ஏராளமாக குறைபாடுகள் இருக்கின்றன என்பதாகும். அந்தப் பெரிய குறைபாடுகளுக்குக் காரணம், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல், இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்ற முயற்சித்ததே அந்த ஒத்துழைப்பைப் பெறுவதற்குரிய வழி முறையில் தொடர்ந்து செயல்படவில்லை. அரசாங்கம் மது விலக்கின் அவசியத்தைப்பற்றி மக்களிடத்திலே தகுந்த பிரசாரம் செய்யவில்லை. செய்தி, மற்றும் விளம்பரத்துறை இலாகாவும் போதிய பிரசாரம் செய்யவில்லை. வேறு துறைகள் மூலமாகவும் பிரசாரம் நடைபெறவில்லை. இன்னும் சொல்லப் போனால், அரசாங்க அதிகாரிகள் அனைவரும் மனப் பூர்வமாக இதனை நடைமுறைப்படுத்தவில்லை. கிராமப்புறங்களிலேகூட மக்களுக்கு இதை விளக்குகின்ற முறையிலே, அவர்கள் ஒத்துழைப்பைப் பெறுகின்ற வகையிலே கிராமவாரியாக குழுக்கள் அமைக்கப்பட வில்லை. நம்முடைய அரசின் பலகீனம்தான் இவற்றுக்கெல்லாம் காரணம்.

தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு மதுவிலக்குத் திட்டம் என்ற திட்டம் உருவாயிற்று. அந்தத் திட்டத்தின்படி, ஒரு போலீஸ் அதிகாரி அங்குள்ள பாமர மக்கள் முதல், பஞ்சாயத்துத் தலைவர்வரை, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, கிராமக் குழுக்கள் அமைத்து, இந்த மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி வெற்றி பெறும்வகையில் செயல்பட்டார்கள். இந்தக் குழுவின் அறிக்கையிலேகூட, அந்தத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்தினால் மதுவிலக்குச் சட்டத்தின் நோக்கம் வெற்றி பெற முடியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டத்தால் மட்டும், வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை இந்த அறிக்கையில் தரவில்லை. பொதுமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு வழி வகைகள் கையாளப்படவில்லை, ஏற்கனவே இதுவரையில் அந்த முறை கையாளப்படாத நிலையில் சட்டத்தைக் கடுமைப் படுத்துவது என்பது, ஓட்டைத் தகரக் குவளையில் தண்ணீர் எடுத்தால், தண்ணீர் கீழே ஒழுகிப் போய் விடுகிறது, எனவே அதைவிட கனமான இரும்பு ஓட்டைக் குவளையில் தண்ணீர் எடுக்கிறபோது, தண்ணீர் வந்து விடும் என்று கருதுவதுபோல் உள்ளது. கனமாக இருந்தாலும், தகரக் குவளையைப் போன்று ஓட்டை அதிகமாக இருப்பதால் தண்ணீர் வராது என்பதை உணர வேண்டும் எனவே இது பயன் விளைவிக்காது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைவிட இருக்கின்ற சட்டத்தையே



1979 மார்ச் 12] [திரு. க. அன்பழகன்]

நிறைவேற்றுவதற்கு தகுந்த வழிகாண வேண்டும். அப்படி நிறைவேற்றுவதற்கு, வக்கு வழியில்லாத அரசாங்கம், உங்கள் அரசாங்கமாக இருந்தாலும் சரி, எங்கள் அரசாங்கமாக இருந்தாலும் சரி, இராஜாஜி அவர்கள் காலத்திலே இருந்த அரசாங்கமானலும் சரி, சமுதாய அமைப்பிலே இருக்கின்ற குறைபாடுகளையும் நடைமுறை படுத்துவதில் உள்ள குறைகளையும் மறந்து விட்டு, சட்டத்தை மட்டும் கடுமையாக்கிட விரும்பி கொண்டு வருவது, அதற்காக இப்படி ஒரு அவசரச் சட்டம் கொண்டு வருவது தவறானது. சட்டத்தைக் கொண்டு வர உங்களுக்கு அதிகாரமில்லை என்று நான் சொல்லவில்லை. அவசரச் சட்டமே கூடாது என்றும் நான் சொல்லவில்லை. இந்தச் சட்டத்தைப்பற்றி இங்கே விவாதிக்கின்றபோது, இங்கே ஏற்பட்டுள்ள உணர்வுகளைப் பார்க்கின்ற போது அது விளங்கும். இந்த வரிசையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும், இந்தச் சட்டம் எவ்வளவு கடுமையானது, எந்த அளவுக்குத் தேவையற்றது, பயனற்றது. குறைபாடுகள் உள்ளது எந்த அளவுக்குச் சமுதாயத்தைப் பாதிக்கும் என்று எடுத்துக் காட்டியுள்ளனர். ஆளும் கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், அந்த உணர்வை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் திட்டவட்டமாக அறிவேன்.

[பிற்பகல் 1-10]

இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் கூடப் பரிசீலிக்கப்படாமல் கொண்டு வரப்படுமானால் என்ன ஆவது, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களே,. இதை முழுவதுமாக பரிசீலித்துக் கொண்டு வந்திருக்க முடியாது பரிசீலனை என்று சொல்வது சட்ட அடிப்படையில் இருக்கிற வார்த்தைகளை மட்டும் வைத்துப் பரிசீலனை செய்வது என்பது அல்ல. வார்த்தைகள் மட்டுமல்ல. அதனால் ஏற்படுகிற விளைவுகள் பரிசீலிக்கப்பட வேண்டும், அதனால் ஏற்படுகிற பலன் பரிசீலிக்கப்படவேண்டும்; ஏற்கெனவே இருக்கிற சட்டம் தந்த அனுபவத்தை வைத்துப் பரிசீலிக்கவேண்டும். அப்படிப் பரிசீலித்தால் சட்டத்தைக் கடுமையாக்குதன் மூலம் பலன் கிடைக்காது என்ற உண்மை தெரியும்.

உயர்மட்டக்குழு தந்திருக்கிற அறிக்கையில் தரப்பட்டிருக்கிற கருத்துக்களை எழுதி வைத்திருக்கிறேன். முழுவதும் எடுத்துக்கூற நேரம் இருக்காது. நாட்டுமக்களில் 100-க்கு 10 அல்லது 12 பேர் குடிப்பழக்கத்திற்கு இரையாகியிருக்கிறார்கள். என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதுவேகூட சில கிராமங்களைப் பொறுத்தவரை 100-க்கு 80பேர் இருப்பார்கள். நகரத்தைப் பொறுத்த வரை 100-க்கு15 பேர் இருப்பார்கள்

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சில சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 80 பேர்கள் இந்தப் பழக்கத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களில் சில பகுதியினர், சில பகுதிகளிலுள்ள உழைப்பாளிகள், சில வட்டாரத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், உழைப்பாளி மக்கள் குடிப்பழக்கத்திற்கு பெருமளவுக்கு இலக்காகியிருக்கிறார்கள் என்ற கருத்து சொல்லப்படுகிறது. எனக்குத் தோன்றுகிற புள்ளிவிவரப்படி 100-க்கு 20, 25 பேர் இதற்கு இரையாகியிருக்கிறார்கள். இன்னொரு உண்மை—கல்லூரி மாணவர்கள் வாழ்கிற விடுதிகளில் வெளிநாட்டு மாணவர்களின் பழக்கத்தாலோ, தொடர்பாலோ, சூழ்நிலையாலோ இந்தப் பழக்கம் ஓரளவு அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. வேறு சில கொடிய பழக்கங்களும் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பெத்தடின் ஊசி போட்டுக்கொண்டால் தண்டனை முறை இல்லை. மருத்துவ முறையில் அது போடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் கடந்து என்னுடைய நண்பர் ஒருவர் தாண்டிப் போய்விட்டார். இந்த ஊசி போட்டுக் கொள்வதற்காக டாக்டர் சர்ட்டிபிகேட் பெறுவதற்கு தவறான முறையில் சர்ட்டிபிகேட் பெற்று இந்த ஊசியைப் போட்டுக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு ஆளானது எனக்குத் தெரியும். அதை நானே அறிந்தவன். மது குடிப்பதைவிடகொடுயான பழக்கங்கள் எல்லாம் இருக்கின்றன. நண்பர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். சிறையில் நான்கு நாட்கள் இருந்தேன். பெரும்பாலும் இந்தக் குற்றத்திற்கு ஆளாகி வந்தவர்கள்தான் அதிகம் என்று சொன்னார்கள். சிறைக்குள்ளே வாழ்கின்றவர்களில் சிலர் 'சிறைக்கஞ்சா சிங்கம்' என்று சொல்லப்படுகிறார்கள். அதாவது சிறைக்கு உள்ளே தாராளமாக கஞ்சா கிடைக்கிறது. ''சிறை கஞ்சா சிங்கம்'' அப்படி இருக்கிற நிலைமைகளை எல்லாம் பார்க்கிறோம், நான் கூட 10, 11 மாதங்கள் சிறையில் இருந்தவன், நல்ல வேளையாக எனக்கு அந்தப் பழக்கம் ஏற்பட வாய்ப்பு இல்லை. வழி இல்லை. நானும் அந்தச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்திருந்தால் நானும் அப்படிப்பட்ட குற்றவாளியாகத்தான் இருந்திருப்பேன். மனிதன் எப்போது குற்றவாளியாகிறான் என்பது சூழ்நிலை சந்தர்ப்பத்தைப் பொறுத்து அமைகிறது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை சிறைச்சாலைக்குள்ளே இருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி மது குடிப்பவர்கள் உள்ளே கொண்டு செல்லப்படுகிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்திற்கு எதிராக சிறைச்சாலைக்குள்ளே மது கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அப்படி ஒரு நிலைமை இருக்கும்போது எதை நினைத்து எதைச் செய்வது? 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது





போல்தான் இருக்கிறது'. யார் மீதோ வருகிற கோபத்திற்காக மனைவியை அடிக்க வேண்டுமா? ஏதோ சில பேருக்குக் கடுமையான தண்டனை கொடுப்பது என்ன முறை? நம்மைச் சேர்ந்வர்களே கள்ளச் சாராயம் தொழிலைச் செய்கிற நிலைமை; ஆனால் அதற்கு பலியானவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் நிலமை. இது சாக்கடை ஓரத்தில் இருந்து கொண்டு கொசுவை ஒழிக்கக் கூடிய வேலையைச் செய்வது போல் இருக்கிறது. இது சாக்கடை என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு மன்றத்தில், ஒழுக்கத்தைப் பற்றி திருவள்ளுவர் கூறிய கருத்துக்களைப்பற்றி நான் பேசிய பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்— 'அன்பழகன் அவர்கள் பேசிய கருத்துக்கள், வள்ளுவருடைய கருத்துக்களை எடுத்துக் காட்டிப் பேசியது நன்றாகத்தான் இருந்தது. வள்ளுவர் சொன்ன கருத்துக்களை இந்தச் சமுதாய அமைப்பில் எப்படி நடைமுறைப்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும்போது அரசியலில் இருக்கும் நம்முடைய பொறுப்பு மகத்தானது. சமுதாயத்திற்கு அந்தத் தகுதியை உண்டாக்க வேண்டும். வெறும் ஒழுக்க உபதேசம் மட்டும் நாட்டுக்குப் பயன்படாது.'

இந்த நாட்டில் தோன்றாத அளவில், துறவிகள், ஞானிகள், வழிகாட்டிகள் உலகத்தில் வேறு எங்கும் பிறக்கவில்லை. வீட்டுக்கு வீடு சாமி மடம், அந்த அளவுக்கு பக்தி இருக்கிறது. என்றாலும் தவறு செய்கிற நிலைமை சமுதாயத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அவ்வளவு பேர்கள் தோன்றிச் செய்ய முடியாத ஒன்றை இந்தச் சட்டம் நிறைவேற்றிவிடாது. மாறாக அந்தச் சமுதாயத்திலே இன்னொரு பெரும் குறைபாட்டை உண்டாக்கும். தமிழ்நாட்டில் வாழும் நாலரை கோடி மக்களிலே ஏறத்தாழ 80 லட்சம் பேர்கள் குடிக்கிறார்கள். குடிப் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். அப்படிக் குடிக்கிறவர்களிலே கைது செய்யப்பட்டு நீதி மன்றத்திலே மூன்று மாதங்கள் தண்டனை முதல் முறைக்கு, அடுத்த முறைக்கு 6 மாதம் என்று இந்தச் சட்டத்தினால் தருகிறீர்கள். 3 மாதம் தண்டனை மட்டுமல்ல ஆயிரம் ரூபாய் அபராதமும் உண்டு என்று சொல்கிறீர்கள். புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. தனியாகப் பேசுவதாக இருந்தால் கடைசி வரையில் நான் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்.

1975—76 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 3,50,000 பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது. அவைகளைப்படிக்க நேரம் இல்லை. அப்படி 3 லட்சத்துக்கு 50 ஆயிரம் பேர்கள் தான் தண்டிக்கப்படுகிறார்கள் என்கிறபோது 30 அல்லது 25 ஆயிரம் பேர்கள் மினிமம் தண்டனை, சட்டத்திலேயுள்ள குறைந்த பட்சத் தண்டனையைப்

பெற்றவர்கள். மற்றவர்கள் எல்லாம் மினிமம் பனிஷ்மென்ட் கூட தரப்படாமல் ஏதோ ஒரு வகையிலே அவர்கள் எல்லாம் ரூபாய் ஐம்பதோ, அல்லது நூறோ கட்டிவிட்டுப் போகிற தண்டனைதான் வழங்கப்பட்டிருக்கிறது. நீதிபதிகள் எல்லாம் அறிவற்றவர்கள் என்று கருதமுடியுமா? நீதிபதிகளையெல்லாம் கட்டாயப்படுத்தி, குறைந்த அளவு 3 மாதம் தண்டனை கொடு என்று சொன்னால் நியாயம் உண்டா? 3 லட்சத்து 50 ஆயிரம் பேர்களையும் சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள் என்றால் சிறைச்சாலையிலே அவ்வளவு பேர்களுக்கும் நீங்கள் இடம் வைத்திருக்கிறீர்களா? நாலரைக்கோடி மக்களிலே, 80 லட்சம் பேர்கள் கைதுசெய்யப்பட்ட வேண்டியவர்கள், ஆனால் 3½லட்சம் பேர்கள் தான் கைது செய்யப்படுகிறார்கள். 3½ லட்சம் பேர்களிலேயும் அபராதம் விதிக்கப்பட்டவர்கள் போக 30 ஆயிரம் பேர்களைத்தானே சிறைக்கு அனுப்பமுடியும், இது தானே நிலைமை, புள்ளி விவரம் நமக்குக் தருகிற தகவல். இன்றைக்குத் திடீரென்று இந்தச் சட்டத்தைப் போட்டு 80 லட்சம் பேர் அல்லது 60 லட்சம் பேர் குடிக்கிறார்கள் என்றால் ஒரு ஆண்டிலே 60 லட்சம் பேர்களைக் கைது செய்து தண்டிப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு சக்தியுள்ளது என்று கூறமுடியுமா? தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு கைதுசெய்யமுடியுமா? அப்படியிருக்குமானால் காவல் துறை வேலை பார்க்கமுடியுமா? அவர்களை ஒரு வேளை அப்படிக் கட்டாயப்படுத்தினால் ஒருவேளை அவர்கட்கு வரும் வருமானம் இந்த நாட்டிற்கு வரும் வருமானத்தைவிட அதிகமாக இருக்காதா? குடித்தவர்களை கைது செய்கிறபோது, நான் இனி குடிக்கவில்லையென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டு போலீஸாரிடம் சொல்லி பத்தோ இருபதோ கொடுத்துவிட்டுப் போவதில்லையா. அது பாவமல்ல, வாங்குகிறவர்களைப்பற்றி நான் ஆத்திரப்படவுமில்லை, கொடுக்கிறவர்களைப்பற்றி நான் கோபப்படவும் இல்லை. அந்தப் பத்து ரூபாய், 20 ரூபாய் இந்த 3 மாதத்திலே என்ன ஆகியிருக்கிறது என்றால் உடனே கடன் வாங்கியாவது 100 அல்லது 200 கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 100 என்று நான் சொன்னேன், திரு மாரிமுத்து அவர்கள் பேசும்போது 200 என்று சொன்னார்கள். அப்படிக் கொடுத்துவிட்டால் தப்பிக்கமுடியும் என்ற நிலை. குடிப்பது தப்பு தான், லஞ்சம் கொடுப்பது தப்பு தான். தவறு செய்துவிட்டு தப்பிக்கவேண்டிய நிலைமை இருப்பதால் காவல் துறையினருக்கு 200 ரூபாய் தருகிற சூழ்நிலைவருகிறபோது பாதிக்கப்படுவது யார், ஏழை தான் பாதிக்கப்படுகிறான். எதையாவது அடமானம் வைத்தாவது அதைக் கொடுத்துவிட, கடனை வாங்கியாவது கட்டிவிட வேண்டுமென்று குடியானவன் கருதுகிறான். 3 மாதம் தண்டனை சாதாரணக் பட்சம் என்கிறீர்கள், 3 மாதத்திற்கு மேல் குறைந்த அபராதம் வேறு என்கிறீர்கள், 3 மாதம் இல்லாவிட்டால் ஆயிரம் ரூபாய் அபராதம் என்பதை மாற்றி 3 மாத தண்டனையும், அபராதமும் என்றும் ஆறுமாதமும் அபராதமும் இந்தத் துறைப் பொறுப்பில் உள்ளவருக்கு என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தண்டிக்கிறபோது ஒரு ஏழையினுடைய எத்தனை மாத வருமானத்தை இந்த அரசாங்கம் தண்டனை மூலமாகப் பெறப் போகிறது? இதனால் ஏழை பாதிக்கப்படுவதில்லையா? அந்த ஏழையினுடைய வருமானம் என்ன? சராசரி மாதம் 100 ரூபாய் தானே. இங்கே இருக்கின்ற நண்பர்களின் உறவினர்களோ எஸ்.டி. சோமசுந்தரத்தின் உறவினரோ அல்லது கிருஷ்ணசாமியின் உறவினரோ அல்லது வீரப்பன் உறவினரோ அல்லது என்னுடைய உறவினரோ பலரும் ஏழைகளாக இருக்கக்கூடிய நிலைமை தான். ஒரு முறை சிக்கிக் கொண்டால் 1,000 ரூபாய் அபராதம் கொடுக்கவேண்டுமென்றால் இதைவிடக் கொடுமை வேறு இருக்கமுடியாது. அவர்களுக்கு எல்லாம் அவ்வளவு கடுமையான தண்டனை வழங்க அவ்வளவு பெரிய உத்தமர்கள் நம்மிலே யாரும் இல்லை. பத்துப் பேர்கள் குற்றவாளிகள் இருக்கிறார்கள் என்றால் அதிலே எட்டுப் பேர்கள் குற்றவாளிகளாகச் சிக்கிக் கொள்கிறார்கள் என்றால் மற்றவர்கள் பயப்படுகிற நிலைமை இருக்கும்.





[பிற்பகல் 1-20.]

பத்து குற்றவாளிகளில் ஒருவர்தான் சிக்கிக் கொள்கிறார் என்றால் அதைபற்றிப் மற்றவர்கட்கு பயம் ஏற்படாது. நான் மறுபடியும் சொல்கிறேன். ஒரு காலத்தில் நில உச்சவரம்பு சட்டம் சென்னை நகருக்குக் கொண்டு வரப்பட்டபோது அந்த மத்திய அரசின் சட்டத்தில் நான் எவ்வளவு குறைகளைக் கண்டேனோ அவ்வளவு குறைகளையும் சேர்த்து இந்தச் சட்டத்தில் காண்கிறேன். அந்தச் சட்டம் ஏன் தூக்கி எறியப்பட வேண்டும் என்று குறிப்பிட்டேனோ Dracomian Law என்று, அதாவது கறுப்புச் சட்டம் என்று கருதினேனோ அதைப்போலவே இப்பொழுதும் நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகின்ற அல்லது தண்டிக்கப்படுகின்ற நிலைமைகளுக்கு ஆளாகின்ற குற்றவாளிகள் நூற்றுக்கு இருபது பேர்தான் கைது செய்யப்படுவார்கள், நூற்றுக்கு எட்டு, பத்து பேர்தான் தண்டிக்கப்படுவார்கள், நூற்றுக்கு 80 பேர், 90 பேர் தப்பித்து விடுவார்கள் என்றால் அந்த நிலையில் சட்டம் பயன்தராது. ஒரு ஊருக்குள்ளே இருக்கின்ற முருகனோ, குப்பனோ, கந்தனோ, கறுப்பசாமியோ குடித்தார்கள் என்றால்— நான் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, தெரியாத காரணத்தால் சொல்கிறேன்- அப்படி நான்கு பேர் குடித்திருந்தால், அதில் ஒருவருக்கு மட்டும் தண்டனை என்றால், அவர்கள் என்ன நினைப்பார்கள். சமுதாயம் என்ன நினைக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவன்தான் சிக்கிக் கொண்டான், நாம் சிக்கவில்லை என்ற நிலையில், ஒரு சமூக சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்பொழுது, சிக்கிக் கொண்டவர்கள்

மிகச் சிலராகவும், சிக்கிக் கொள்ளாதவர்கள் மிகப் பலராகவும் இருக்கின்ற நிலையில் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது, அதில் சமுதாயத்துக்கு நியாயம் கிடைக்காது என்ற சூழ்நிலை இருந்தால், அப்படிப்பட்ட நிலையில் அந்தக் குற்றத் திற்குக் குறைந்த தண்டனை விதிப்பதுதான் முறையாக இருக்கும்.

இங்கே பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார், ஒரு குழந்தை செய்து விட்ட தவறுக்காகப் பிரம் பால் அடிப்பதுதான் நியாயமாக இருக்கும், உலக்கையால் அடிக்கக் கூடாது என்று சொன்னார். இராஜாஜி அவர்கள் எழுதிய கதை ஒன்று '' ஜெயராமன் '' என்ற தலைப்பில், '' தமிழரசு.'' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் முக்கியமான பகுதியை விட்டு விட்டார்கள். அந்தக் கதையில்: அந்தப் பையன் பள்ளிக்கூடம் போவேன் என்று வாதாடவில்லை. நான் படித்துப் பார்த்தேன், நான் பொதுவாக கதை படிப்பவன் அல்ல, இது இராஜாஜி எழுதிய கதையாக இருப்பதால் படித்துப் பார்த்தேன். குடித்துவிட்டு வந்த தந்தை பையனை அடிக்கும் பொழுது உலக்கையால் அடிக்க பிள்ளை இறந்து விட்டதாகவும். .

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, நானும் கதை படிப்பது வழக்கமில்லை. ஆனால் அந்தக் கதை யைப் படித்துப் பார்த்தேன். பள்ளிக்கூடத்திலே அந்தப் பைய னைக் கிண்டல் செய்கிறார்கள். கிண்டல் செய்யப்பட்ட பிறகுதான் அவன் வீட்டிற்குப் போகிறான். எனவே பள்ளிக் கூடம் போனதாக இருக்கிறது.

<u>திரு. க. அன்பழகன் :</u> 30 நாள் பள்ளிக்கூடம் போன பின் னர், போகவில்லை என்று இடையிலே புள்ளி புள்ளியாக வைத்தி ருக்கிறார்கள். நான் அந்தக் கதையின் நோக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். உலக்கையாலோ, அல்லது கடப்பாறையாலோ அடிக்கக் கூடாது என்பதை ஒத்துக் கொள்கிறேன். குடிப்பதைப் பற்றி இராஜாஜி அவர்கள் சொன்ன விளக்கம் முழு அளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர் திரு. கந்தசாமி என்று கருது கிறேன், பிரம்பால் அடிக்க வேண்டுமே தவிர, உலக்கையால் அடிக்கின்ற காரியத்தில் ஈடுபடக்கூடாது என்று சொன்னார்கள். அதற்கு மேல் அந்த வார்த்தைகளை வைத்துக் கொண்டு எவ் வளவோ பேசலாம். ஆனால் நான் அதற்குள் போக விரும்ப வில்லை. ஆனால் அப்படி இந்தச் சட்டத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் எல்லோரையும் தண்டிக்கக் கூடிய அளவிற்குச் சமூக சூழ்நிலை அமையாதபோது அரசாங்க இயந்திரத்திற்கு



அதற்கான சக்தி இல்லாதபொழுது எல்லோரையும் கைது செய்
வது என்பது முடியாத நிலையில் ஏன் இந்தக் கடுமை ? சட்ட
மறுப்பு இயக்கத்தைப் போல, காய்ச்சுகிறவர்கள் எல்லோரும்,
குடிக்கின்றவர்கள் எல்லோரும் வெளிப்படையாகவே அறிவித்து
விட்டுச் செய்தால் என்ன செய்ய முடியும் ? அரசாங்கத்தின்
சக்தி, அரசாங்கத்தின் நல்ல நோக்கம் பயன் அற்றதாகிவிட்டது
என்று அறிவிக்கின்ற நிலைமைதான் ஏற்படும். 80 இலட்சம்
பேர்களுக்குத் தண்டனை என்று சொன்னால், தமிழ்நாடே
சிறைச்சாலை என்று சொல்லிவிட வேண்டிய நிலைமைதான்
வரும். தொடர்ந்து தவறு செய்பவர்கள் இருந்தால் ஊரை
விட்டு, மாவட்டத்தை விட்டுக் கடத்தலாம் என்ற கருத்தும்
வருகிறது. திரு. பாண்டியன் அவர்கள், அப்படியெல்லாம்
சட்டம் இருக்கலாம் என்று ஆளுங்கட்சியின் சார்பிலே பேசினார்
கள். நாடு கடத்துகின்ற காலமே போய்விட்டது. இப்
பொழுது நாட்டிலே ஆட்சி நடத்துகின்றவர்கள் நாடுகடத்தப்
படுகின்ற காலமே தவிர, அது நாங்கள் ஆட்சி நடத்துபவர்
களாக இருந்தாலும் எங்களைத்தான் நாடு கடத்துவார்களே தவிர,
மனிதனை நாடு கடத்தி திருத்தும் வழி ஏற்கப்படவில்லை.
கொலை செய்த குற்றத்திற்காகக் கூட தூக்குத் தண்டனை
விதிப்பது என்பது நியாயம்தானா என்று வாதிக்கும் கட்டம்
வந்திருக்கிறது. நான் இது சம்பந்தமாக எந்தக் கருத்துக்கும்
இது வரையில் வராதவன். தண்டனையே வேண்டாமென்று
சொல்பவன் அல்ல நான். ஆனால், நான் சொல்ல விரும்புவது
என்னவென்றால், மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி இங்கே நம்
முடைய திரு. சதாசிவம் அவர்கள் குழு தெரிவித்தது, இந்தச்
சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு உரிய கடை
மையை இருக்க வேண்டிய பங்கினைச் சரியாக நிறைவேற்ற
வில்லை என்பது ஆகும்.

. . . . . The object of the enforcement effort should be to win over those who are given to drinking rather than punishing them- the addicts victims of a bad habit, Some of them do not know the harm they are causing to themselves and to their families . . . . . . . The regulatory agencies also have to play a role but their role shoud be secondary. They should concentnate their attention on the exploiters than on the exploited.

யார், யார் இதைத் தொழிலாக வைத்து, வியாபாரமாகச் செய்து பணம் சம்பாதிக்கிறார்களோ, அவர்கள்மீது செலுத்தப் பட வேண்டிய கவனம், செலுத்தப்படவில்லை. இந்தச் சட்டத்

திலே அந்தப் பகுதியைக் கடுமையாக்குவதிலே வருத்தம் இல்லை.
குடிப்பவன் சாதாரண மனிதன். குடிப்பவனுக்கு விற்பவன்
தொழிலாகச் செய்கிற தவறு செய்பவன். காய்ச்சுகிறவன்
சமுதாயத்தைக் கெடுப்பவன். காய்ச்சுபவனுக்குப் பல ஆண்டு
தண்டனை போடுங்கள், எனக்கு வருத்தம் இல்லை. விற்
பவனுக்குச் சில ஆண்டு போடுங்கள், நான் தடுக்கவில்லை.
குடிப்பவனுக்கு கடுமையான தண்டனையா ? ஏனென்றால்,
யார், யார் குடிக்கிறார்கள் என்பது நமக்கே, சில நேரத்திலே
தான் தெரிகிறது. ஆகவே, குடிப்பவன்மீது அவசரப்படாதீர்
கள். நாட்டிலே ஏழை மக்கள் நிலை கள் குடிக்கிற அளவுக்கு
இருக்கிறது என்ற கருத்தை பெரியார் அவர்களே எடுத்துச்
சொன்னார். குடிக்கலாம் என்பதற்காகச் சொல்லவில்லை.
குடிக்க வேண்டிய நிலைமை ஏழைகளுக்கு இருக்கிறது என்று
பெரியாரவர்கள் ஒரு காலத்திலே சொன்னார்கள். மதுவிலக்கு
நல்லதுதான். ஆனால், வசதியற்றவர்களுக்கு வயிற்றுக்குப்
போதுமான உணவு கிடைக்காமல், சத்துள்ள உணவு கிடைக்கா
மல் இருக்கிறது. ஆகவே, அவர்கள் கள் குடிப்பது தவிர
வேறு வழியில்லை என்று பெரியாரவர்கள் பேசினார்கள், நான்
பக்கத்திலே இருந்தவன். இதை அவர் சொன்னது, குடிக்கச்
சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. அவனுடைய ''வறுமை
நிலையும் அதன் கொடுமையும்'' அந்த அளவுக்கு இருக்கிறது
என்பதற்காகச் சொன்னார். கள்ளிலே கிடைக்கிற 'ஈஸ்ட்'
என்ற சத்துதான் குழந்தைகளுக்கு, சோம்பிப் போகிற; ஊனம்
அடைகிற அந்த நிலையிலே இருக்கிற குழந்தைகளுக்கு நல்லது,
அந்தக் கள்ளை புகட்டுவது நல்லது என்று ஒரு காலத்திலே
சாதாரணமாக பணக்காரன் வீட்டுப் பிள்ளைகளுக்கும் புகட்டி
இருக்கிறார்கள், முதலியார் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கொடுத்
திருக்கிறார்கள். ஆக, அந்த வகையிலே என் வாயிலும் கள்
போயிருக்கும்.

மயக்கம் தருகிற பொருள்களுக்குள்ளே ஒரு கிரேடேஷனை
ஒருதரப்பிரிவு முறையை இந்த அரசாங்கம் இதுவரையிலே
எடுக்கவில்லை. கள்ளுக்கு இருக்கிற சட்டங்கள், சாராயத்துக்கு
இருக்கிற சட்டங்கள், பெதடினுக்கு இருக்கிற சட்டங்கள், அபி
னுக்கு இருக்கிற சட்டங்கள், பதநீருக்கு இருக்கிற சட்டங்கள்,
இன்னும் ஒவ்வொன்றுக்கும் உள்ள போதை அளவையும் பார்த்து,
வெவ்வேறு சட்டங்கள் போடுங்கள். கிராமத்திலே தென்னை
மரத்திலே கள்ளை இறக்குகிற சூழ்நிலை இருக்கலாம். பதநீரா,
கள்ளா என்று சந்தேகிக்கிற சூழ்நிலை இருக்கிறது. பெரும்
பாலோருக்கு, பதநீர் குடிப்பது நல்லது என்று மருத்துவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், சந்தேகப்படக்
கூடிய சூழ்நிலையிலே சமுதாயத்தை ஏன் குற்றவாளியாக ஆக்கு
கிறீர்கள். எது, எது குடித்தால் நல்லது என்பது குறித்து
சமுதாயத்திலே கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆட்டு மூத்தி
ரம் மிகச் சிறந்த மருந்து என்ற கருத்து நிலவுகிறது. ஆடு,





மூலிகை உண்ணுகிற காரணத்தாலே அதனைச் சிறந்த மருந்து
என்று ஏற்றுக்கொள்கிறார்கள். சமுதாயத்திலே, சில விஷப்
பொருள் மருந்தாகிறது, சில நல்ல பொருள்கள் விஷப் பொரு
ளாகின்றன. இதிலே இருக்கிற வேற்றுமையை முழு அளவுக்கு
நாம் சரியாகச் சொல்ல முடியாது.

குடிப்பவர்களை நம்முடைய பக்கம் திருத்த விழைகிற நேரத்
தில், அவர்களுடைய மனதை மாற்ற வேண்டிய நேரத்தில்,
50 வயது, 55 வயது, 60 வயது உள்ளவர்கள்—என் வயதும்
57 தான்—குடித்துப் பழகியவர்கள், அதிலேயிருந்து விலக முடியா
மல் அவதிப்படுகிற காட்சியை அண்மையிலே தொலைக் காட்சி
யிலே நான் கண்டேன். சகஸ்ரநாமம் நடித்தார் அந்தக் காட்சி
யில். மது குடிக்கக்கூடாது என்று மகன் தடுக்க அவருடைய
மனைவி, அவரது கைகால் நடுங்கும் நிலை கண்டு அவர் குடிக்கக்
கூடிய உயர்ந்தவகை மதுவை தடுக்காதீர்கள் என்று வாதாடு
கிறாள், மகன் முடியாது என்று வாதாடுகிறான். நான் அக்
காட்சியைப் பார்த்தேன். மனைவியும் மகனும் கண்டிக்கிறார்
களே, அப்படி வீட்டுக்கு வீடு, வாசற்படிக்கு வாசற்படி, ஒவ்
வொரு குடும்பத்திலும் இருக்கிற நிலைமையில், மிகப் பரிதாப
மான சூழ்நிலையிலே எத்தனையோ ஏழைக் குடும்பங்கள்
இருக்கின்றன.

என்னுடைய தந்தையார் காந்தீயக் கொள்கையுடையவராக
இருந்த காலத்தில் அவர் ஒரு திருமணத்தை நடத்தி வைத்தார்.
திருமணம் ஆனபின் அந்த மணமகன் குடித்துவிட்டு வீட்டுக்கு வரு
வார். இதைக் கேள்வியுற்ற என்னுடைய தந்தையார் அவரை
அடித்து திருத்தப் பார்த்து—அந்த அளவுக்கு அக்குடும்பத்தை
எனது தந்தையாருக்குத் தெரியும்—முடியாமல் போய், அதற்குப்
பின்னால் அவர் குடித்துவிட்டு வீட்டிற்கும் போவதில்லை
என்ற நிலைமையில், அவருடைய மனைவி, என்னுடைய தகப்ப
னாரைப் பார்த்து, என் வீட்டுக்காரர் குடித்தாலும் பரவாயில்லை,
விட்டுவிடுங்கள், தயவுசெய்து அவர் வீட்டுக்கு வரட்டும் என்று
வேண்டிக் கொண்ட நிலைமையை நான் பார்த்தவன் 7, 8
வயதில். எனவே, நான் சொல்வது, சமுதாயத்தினுடைய
மொத்தக் குறை இது. அதற்குச் சட்டத்தை மட்டுமே நீங்கள்
முழு அளவு நம்பி, சட்டத்தைக் கடுமையாக ஆக்கிவிட்டால்,
அந்தப் பேராபத்தான சட்டத்தை முறையோடு நிறைவேற்றும்
பொறுப்பை தாங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்
டும். வேறு பல விஷயங்களைச் சொல்லலாம் என்றாலும்,
ஒன்றை முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன். ''பப்ளிக்
சர்வன்ட்'' என்பது யாரைக் குறிக்க வேண்டுமென்று முதலமைச்
சரவர்கள் பேசினார்கள். அப்பொழுது எல்லோருக்குமே ஒரு
எண்ணம் ஏற்பட்டது ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொடர்ந்து நாளை பேசுங்கள்.

திரு. க. அன்பழகன் : நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்றால், இப்பொழுதே பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நாளை தொடர்ந்து பேசுங்கள்.

திரு. க. அன்பழகன் : நாளைக்கு பேசும்படி அவைத் தலைவரவர்கள் தெரிவிக்கிற காரணத்தால் நான் தெரிவித்த கருத்தை இன்னும் தெளிவாக நாளை தெரிவிப்பேன் என்ற நம்பிக்கையோடு இந்த அளவோடு இப்போது முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## (8) பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

## இணைப்பு

[270 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 341க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) மொத்தம் 8 கோரிக்கைகள், அரசுக்கு வந்தன, அவைகள் வருமாறு :—

1. ஊழியத் தொடர்ச்சியுடன் தொடர்ந்து 180 நாட்களுக்கு மேல் பணிபுரிந்து வரும் விவசாயச் சேவைகூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள், உழவர் சேவைக்கூட்டுறவுச்சங்கங்களின் ஊழியர்கள், கூட்டுறவு விவசாய வங்கியின் ஊழியர்கள் அனைவரையும் பணியில் உடன் நிரந்தரப்படுத்த வேண்டும். கூட்டுறவு பயிற்சியில்லாது பணிபுரிந்துவரும் அனைத்து ஊழியர்களையும் அவர்களது பணிக் காலத்தையே நேரடிப் பயிற்சியாக அறிவித்து சகலசலுகைகளையும் உடன் வழங்க வேண்டும். பயிற்சி இல்லாதவர்கள் என்று எந்த ஊழியரையும் வேலை நீக்கம் செய்யக் கூடாது.



2. கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள செயலாளர், எழுத்தர், உதவியாளர் விற்பனையாளர் மற்றும் ஏவலர், இரவு காவலர் போன்ற பதவிகளுக்கு, அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்து, இவர்களது பணியினை மையப்படுத்தி, ஒரே நிறுவனக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதுடன் மத்திய கூட்டுறவு வங்கிகள் சங்கங்களை இணைத்துக் கொள்வது போல், சங்கங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களையும் மத்திய கூட்டுறவு வங்கியின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பணி சம்பந்தமான சங்க சிறப்புத் துணை விதி மூலம் அமுல் செய்யும் நடைமுறையினை ரத்து செய்து, சட்ட ரீதியான வேலைப் பாதுகாப்பு, சம்பளம் போன்றவைகளுக்காக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

4. மத்திய கூட்டுறவு ஊழியர்களுக்கு உள்ளது போன்ற தற்செயல்விடுப்பு, ஈட்டியவிடுப்பு, மருத்துவ விடுப்பு, உதவி மற்றும், படிப்பு விடுப்பு போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டும்.

5. கூட்டுறவுச் சங்கங்களில் மத்திய வங்கியினால் நியமனம் செய்யப்படும் ஊழியர்களுக்கு, சங்கம் நட்டத்தில் இருந்தாலும் போனஸ் வழங்கும் முறையினை எங்களுக்கும் அமுல் செய்ய வேண்டும். மற்றும் பயணப்படி, கடன்கள், முன்பணங்கள் வழங்க வேண்டும்

6. கூட்டுறவுச் சங்கங்களிலும், வங்கிகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு பொதுப் பணித் தேர்வில் முன்னுரிமை தந்து 60 சதவீதம் இடங்களை கட்டாயமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

7. கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு உரம், பூச்சி மருந்து விற்பனை இனங்களுக்கு அந்தந்த உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் வழங்கும் ஊக்குவிப்பு போனஸ் எல்லா ஊழியர்களுக்கும் சம அளவில் வழங்குவதுடன், உர விற்பனை கமிசன் கணக்கிடும் முறையிலும் மாற்றம் செய்து, ஊக்குவிப்பு போனஸ் என்று தனியாக குறிப்பிட வேண்டும். இதுவரையில் வழங்கிய ஊக்குவிப்பு போனஸ் தொகையினை திரும்பச் செலுத்த, தணிக்கையில் மறுக்கப்பட்ட தொகையினை உடன் ஊழல் செய்வதை நிறுத்தி, அதனை வர வேண்டிய இனத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்.

8. சங்கங்களின் தற்போது அத்தியாவசிய பொருட்கள் விற்பனை சம்பந்தமான எந்தவித முறையான அமைப்பு முறைகளும் இல்லை. எடைகுறைவு, இயற்கையில் ஏற்படும் எடை இழப்பு

போன்ற இனங்களை பரிசீலனை செய்து அரசு தனது நுகர் பொருள் வாணிப கழகங்களுக்கு அமுல் செய்யும் முறையினை உடனடியாக கூட்டுறவுச் சேரவைச் சங்கங்களுக்கும் அமுல் செய்ய வேண்டும். இதன் மூலம் நியாயமற்ற முறையில் பழி வாங்கப் பட்ட ஊழியர்கள் மீதான நடவடிக்கையினை வாபஸ் பெற்று ஊழியர்கள் நலன் காக்கப்பட வேண்டும்.

(இ) அவைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் வருமாறு :—

கோரிக்கை 1 :

கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணியாளர் நியமனம் செய்வதும்
அவர்களின் பணிவரையறை தொடர்புடைய மற்ற தன்மைகளும்
கூட்டுறவுச் சங்கங்களால் கடைப் பிடிக்கப்பட்டு வரும் பணியாளர்
களின் பணி வரையறை தொடர்புடைய சிறப்புத் துணைவிதி
களினால் முறைப்படுத்தப்பட்டவை அத் துணைவிதிகளின்படி
ஒருவர் சங்கத்தின் எந்த வேலைக்கு நியமனம் செய்யப்
பட்டாலும் சாதாரணமாக மொத்தம் ஓராண்டுவரை தகுதிகாண்
பருவத்தில் இருப்பார். இது முடிந்த பிறகு, அவருடைய பணியும்
நடத்தையும் நிறைவுள்ளதாக இருக்குமானால் அப்பணியில்
அவர் உறுதிப் படுத்தப்படுவார். மேலே கண்ட விதிகளின் படி
தான் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்களை உறுதிப்படுத்த
முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பது அவசியமென கருதப்படுகிறது. சிறப்புத் துணைவிதிகளில் சொல்லப்பட்டுள்ள தகுதிகளை அடையா திருந்தாலும், கூட்டுறவுப் பயிற்சி பெறாமல் இருந்தாலும் எந்தப் பணியாளரையும் பணியில் தொடர்ந்து வைத்திருக்க இயலாது. கூட்டுறவுப் பயிற்சி பெறாத பணியாளர்கள் இருப்பார்களானால் அவர்கள் தங்கள் சொந்த செலவிலேயே இரண்டாண்டுகளுக்குள் பயிற்சி பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

கோரிக்கை 2 :

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் உரிமையுள்ள ஒரு தனிப் பகுதியாகும். அவற்றின் பணியாளர்களின் சம்பள விகிதங்களை அச்சங்கங்களின் நிதி நிலையைப் பொறுத்துதான் அமைக்கவேண்டி யுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் தாங்கிக் கொள்ளும் நிதிநிலை தகுதியைப் பொறுத்துதான் அதனுடைய பணியாளர்களின்



உயர்ந்த சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதன்படி 1977 நவம்பர் திங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன :—

சம்பளம் பெறும் செயலாளர்— ரூ. 175—5—225—7½—300 மற்றும் அறுதி அகவிலைப்படி ரூ. 75.

எழுத்தர்கள்— ரூ. 150—3—180—5—230 மற்றும் அறுதி அகவிலைப்படி ரூ. 50.

கோரிக்கை 3 :

இக்கோரிக்கையில் உள்ளவைகளை கூட்டுறவு சங்கப் பதிவாள
ருக்கே அதிகாரம் அளிக்க, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின்
சட்டத்திலேயே ஒரு விதியமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில்
இருக்கிறது.

கோரிக்கை 4 :

சங்கப் பணியாளர்களுக்கு தற்செயல்விடுப்பு, ஈட்டியவிடுப்பு
மற்றும் மருத்துவ விடுப்பு போன்றவைகளை அனுமதிக்க
கூட்டுறவு சங்கங்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பணிவரை
யறைகள் தொடர்புடைய சிறப்புத் துணைவிதிகளே வகை
செய்கின்றன.

கோரிக்கை 5 :

மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு, போனஸ்
கொடுப்புச் சட்டப்படி (Payment of Bonus Act.)
போனஸ் வழங்கப் படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் பணி
யாற்ற அனுப்பப்படும் மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்
களுக்கும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் போனஸ் தரப்படுகிறது.
அவ்வாறு தரப்படும் போனஸ், அவர்கள் பணியாற்றும் கூட்டுறவுச்
சங்கங்களால், ஆதாயத்தோடு இயங்குமானால், மத்திய வங்கி
களுக்குஈடுசெய்யப்படுகின்றன. இல்லையெனில் மத்திய வங்கிகளே
அதை ஏற்றுக்கொள்கின்றன, போனஸ் சட்டத்தின் தேவைகள்
ஏற்றுக் கொள்ளப்படுமானால், கூட்டுறவுச் சங்கங்களின் பணி
யாளர்களும் போனஸ் பெறத் தகுதியுள்ளவர்கள்.

கோரிக்கை 6 :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு தான்
அரசுப் பணிகளுக்கு தேவையானவர்களைத் தேர்வு செய்கிறது.
அப் பணிகளுக்குத் தேவையான தகுதியுடையவர்கள் அவைகளுக்கு
விண்ணப்பிக்கலாம்.

கோரிக்கை 7 :

இக்கோரிக்கையில் கண்டுள்ள ஊக்குவிப்புத் தொகைகள் தரும் வழக்கம் இப்போது நடைமுறையில் இல்லை.

கோரிக்கை 8 :

ஆதார கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் குழுக்களே கூட்டுறவுத் துணைப்பதிவாளரைக் கலந்தாலோசித்து எடைக் குறைவு மற்றும் இயற்கையில் ஏற்படும் எடை இழப்பு ஆகியவைகளை நிர்ணயம் செய்யலாம்.

---

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்கிழமை, 1979 மார்ச், 13-ம் நாள்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகியகால வினா எண் 12 திரு. சி. இராமநாதன்.

(மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எழுந்திருக்கிறார்)

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. துரை முத்துசாமி : இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன், என்னுடைய பெயர் சொல்லப்படவில்லை என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேறு ஏதோ கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள்.

திரு. துரை முத்துசாமி : இல்லை, நான் இதற்கும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, உங்கள் பெயரையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். குறுகியக்காலக் கேள்வி எண் 12, திரு. சி. இராமநாதன், திரு. துரை முத்துசாமி.

[1979 மார்ச் 13

## நெய்வேலியில் கிடைக்கும் நிலத்தடி நீர்

குறுகிய கால வினா எண். 12

திரு. இ. சி. ராமநாதன் : திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் தொகுதியில் நெய்வேலியில் வெட்டப்படும் இரண்டாவது சுரங்கத்தினால் வெளியேற்றப்படும் நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த நீரை தீவனூர் விருத்தாசலம் அணைப் பகுதி விவசாயிகளுக்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) நெய்வேலியில் இரண்டாவது கட்டமாக சுரங்கம் வெட்டப்படுவதால் கிடைக்கும் மொத்த நிலத்தடி நீர் அளவினை ஆய்ந்து, அதில் உபரியாகக் கிடைக்கும் தண்ணீரைப் பாசனம் மற்றும் சென்னை நகரக் குடிநீர் தேவைகளுக்கு முழு அளவில் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் பற்றி தமிழக அரசுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது, அக்குழு அதனுடைய விரிவான அறிக்கையினை அரசுக்கு 1978-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அனுப்பியுள்ளது. அந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிற வகையிலே அந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பாசன வசதிக்காகவும், குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகவும் அதனை ஆராய்வதற்கு அந்தக் குழு அமைக்கப்பட்டு, அது அறிக்கை கொடுத்துள்ளது. அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் கட்ட சுரங்கம் வெட்டும்போது வெளிப்படக் கூடிய நிலத்தடி நீரை நல்ல முறையில் பயன்படுத்துவது சம்பந்தமாக அந்தக்குழு ஏதாவது அறிக்கை கொடுத்துள்ளதா? அதைப் பயன்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது, திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது.



1979 மார்ச் 13]

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது ? அந்தக் குழுவிலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் ? அந்த வேலைத் திட்டத்தின் மதிப்பீடு என்ன என்பதையெல்லாம் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு ஏற்கனவே 1978 மார்ச் மாதத்திலே அமைக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை கடந்த 1978 நவம்பர் மாதத்திலேயே கொடுக்கப்பெற்றிருக்கிறது, அந்த அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. இதனால் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்கிற ஆய்வை அரசு எடுத்துக்கொண்டு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடுகள் இவ்வறிக்கையில் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்
களே, மூலக்கேள்வி, நெய்வேலியில் வெட்டப்படும் இரண்டாவது
சுரங்கத்தில் வெளியேற்றப்படும் நிலத்தடி நீரைப் பாசனத்
திற்கு உபயோகப்படுத்துவதற்கு உத்தேசம் ஏதும் அரசுக்கு
உண்டா என்பது. ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் கூறும்
போது சென்னை நகரக் குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்தும்
பரிசீலனையும் உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். முதல்
விஷயம், அந்த நீரைப் பாசனத்திற்கு பயன்படுத்துவதாக
இருந்தால் எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு கிடைக்கும் ?
பண்ருட்டி, கடலூர் தாலுக்காக்களுக்கும் கொண்டுபோகப்படுமா?.
இரண்டாவது, குடிநீர் என்று வரும்போது சுரங்கம் வெட்டப்
படுவதால் கிடைக்கும் நிலத்தடி நீரில் 'சிலிக்கா' என்று
சொல்லப்படுகிற இராசாயனப் பொருள் இருப்பதாகவும், அந்த
நீரைக் குடித்தால் வயிற்றுநோய் ஏற்படுவதாகவும் சொல்கிறார்
கள். எனவே பாசனத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு,
சென்னைக்கு இந்த நீரைக் கொண்டு வரும் திட்டத்தைத் தடை
செய்தால் நலமாக இருக்கும் என்பதை அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதன்
மூலமாகக் கிடைக்கக்கூடிய தண்ணீர் பாசன வசதிக்கு மட்டும்
இல்லாமல் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, தொழிற்சாலை
களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்க முடியும். அதே நேரத்தில்
எவ்வளவு தண்ணீர் கிடைக்கக்கூடும் என்று துல்லியமாகக் கணக்
கிட்டு தற்போது அறிய முடியாது என்று இதன் ஆய்வுக்குழுவின்
அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த தண்ணீரில் சிலிக்கா
என்ற இரசாயனப் பொருள் இருப்பதாக நிபுணர் குழு அறிக்கை
கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், தண்ணீரைக் குடிநீருக்காக

அனுப்பும் போது அதனைப் பாதுகாக்கப்பட்ட தண்ணீராகத்தான் (புரொடெக்டட் வாட்டர்) கொடுக்கவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தீயணைப்புப் பணிகளுக்குப் புதிய வாகனம்

* வினா எண். 360.— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தீயணைப்புப் பணிகளுக்காக சுமார் 18 லட்சம் ரூபாயில் ஒரு வண்டி வாங்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதனை புனர் ஆலோசனை செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சென்னை மாநகருக்குப் பயன்படுவதற்காக சிறப்பு வகை தீயணைப்பு வண்டியை, அதாவது, '' ஸ்னோர்கல் '' தீயணைப்பு வண்டியை புதுடில்லி. பொருள் வழங்கல்—விற்பனைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தின் மூலமாக வாங்குவதற்காக தீயணைப்புத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

(ஆ) இதனை மறுபரிசீலனை செய்யும் கருத்து ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, என்னுடைய நத்தம் தொகுதியில் உள்ள சாணார்பட்டி, கொட்டாம்பட்டி யூனியன்களில் தீயணைப்புப் பணிகளைத் தீவிரமாகச் செய்யப் போதிய வசதிகள் தற்போது இல்லை. ஆகையால் அங்கே இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'ஸ்னோர்கல்' தீ அணைப்பு எஞ்சின் பல மாடிக் கட்டடங்களில் தீ பிடித்தால் அணைக்கப் பயன்படுத்தப்படுவதாகும். இந்த எஞ்சினை வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய சர்க்காரை அனுமதி கேட்டிருக்கிறோம். இந்த மாதிரியான தீ அணைப்பு எஞ்சின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குத் தேவைப்படாது. அங்கு தீ அணைப்பு நிலையம் அமைக்க அரசு தனியாகக் கவனிக்கும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : அங்கே தீ அணைப்பு நிலையம் இப்போது இருக்கிறது. இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்குவதுபற்றி கேட்டேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, இந்த தீ அணைப்புப் படையிலே, கிணறு குளம் போன்றவற்றில் தவறி விழுந்துவிடுகிறவர்களைத் தேடி எடுப்பதற்கு, தண்ணீரில் மூழ்கித் தேடுவதற்குத் தேவையான கவசம் இல்லை என்று சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியில் ஒருவர் தவறி விழுந்துவிட்டபோது, அவரைத் தேடிப்பார்க்க இந்த கவசம் இல்லாததால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கவசம் வாங்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, தீ அணைப்புப் படையில் பணியாற்றும் ஊழியர்கள் இன்றைக்கு 8 மணி நேர வேலைக்குப் பதிலாக 10 மணி, 15 மணி நேரம் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வண்டி வாங்குகிற பிரச்சனை ; தொழிலாளர் பிரச்சனை அல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தீ அணைப்பு நிலையம் தாலுகாவிற்கு ஒன்று என்ற வீதத்தில் இருக்கிறது. சில தாலுகாக்களில் ஏராளமான கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால், 20, 30 மைல் தூரம் போய் தீ அணைப்புப் பணியைச் செய்ய வேண்டியிருப்பதால், இந்த தீ அணைப்பு வண்டி போய்ச் சேருவதற்கு முன்னால் குடிசைகள் எரிந்துவிடுகின்றன. ஆகையால் அதிகமான கிராமங்கள் இருக்கின்ற தாலுகாக்களுக்கு 'சப் தீ அணைப்பு நிலையம்' அமைக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தேவைக்கும் நிதி நிலைமைக்கும் ஏற்ப அவ்வப்போது தீ அணைப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் புதிதாக 20 தீ அணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் தீ அணைப்பு நிலையமே இல்லாத முதுகுளத்தூரில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு இடத்திற்கும் இருக்கிறதா என்று கேள்வி கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம். திரு. அரங்கநாதன் கேட்டதைப்போல சில குறிப்

பிட்ட பிரச்சனைகளைச் சொல்லி வேண்டுமானால் கேட்கலாம். அந்த ஊரில் உண்டா, இந்த ஊரில் உண்டா என்று கேட்டால் அமைச்சரிடம் அதற்கான பதில் இருக்காது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரிய நகரங்களான மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற இடங்களில் பல மாடிக் கட்டடங்கள் உயர்ந்து வருகின்றன. இன்றைக்கு இருக்கிற வசதிகளைக்கொண்டு அவைகளில் ஏற் படுகிற தீயை அணைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நவீன தீ அணைப்பு இயந்திரத்தை அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கவும், அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிற பெரிய தொழிற் சாலைகள், நூற்பாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகளுக்கும் இந்த வசதியை விஸ்தரிக்கவும் அரசு தொடர்ந்து முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த தீ அணைப்பு எஞ்சின் விலை 18, 22, 442 ரூபாய் ஆகிறது. இதை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. ஆகவே, மத்திய அரசின் ஒப்புதலோடு அவர்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. முதலில் இந்த ஒரு எஞ்சினை வாங்கிப் பார்ப்போம். அதன் அனுபவத்தைப் பார்த்து, மற்ற வைகளைப் பார்ப்போம்.

## குடியாத்தம் காவல் நிலையக் கட்டடம்.

* வினா எண் 361— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியாத்தம் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் புதிதாகக் கட்ட வேண்டுமென்று கருதி எப்போது இடிக்கப்பட்டது ?

(ஆ) இதற்கான புதிய கட்டடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) குடியாத்தம் நகர் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் அரசு ஆணை எண் 2459 உள்துறை நாள் 22.9.72-ன்படி இடிக்கப்பட்டது. தற்போது, இக்காவல் நிலையம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் புதிய கட்டட வேலைக்கான தடை உத்தரவு நீக்கிய பிறகு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது. இருப்பினும், இதன் அவசியத்தை உணர்ந்து இது பற்றிய வரைவுப் படம் மற்றும் மதிப்பீடுகள் அடங்கிய செயற் குறிப்புகளைக் காவல் துறைத் தலைவர் அனுப்பியிருக்கிறார். இவை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



[முற்பகல் 9.10]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தக் கட்டடம் இடிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேலாகிறது. அங்கே டவுன் போலீஸ் ஸ்டேஷனும் தாலுகா போலீஸ் ஸ்டேஷனும் வாடகை கட்டடத்தில்தான் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் கட்டி இருக்கின்ற கட்டடங்களுக்கு வாடகையைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமா ? அல்லது உடனடியாக அரசு சொந்தக் கட்டடத்தை கட்டி அதில் காவல் நிலையத்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலை வரவர்களே, டவுன் போலீஸ் ஸ்டேஷன், தாலுகா போலீஸ் ஸ்டேஷன், சர்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ் இந்த மூன்றுக்கு மாகச் சேர்த்து கட்டடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபாய் 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. அதாவது கிட்டத்தட்ட 3 இலட்ச ரூபாய். இந்தத் திட்டத்திற்கு அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வாடகை என்கிற அளவில் நகரக் காவல் நிலையத்திற்கு 120 ரூபாயும் ரூரல் காவல் நிலையத்திற்கு 250 ரூபாயும் தான் தருகிறோம். ஆகவே முதலீடு என்று பார்க்கிறபோது இந்த வாடகை குறைவானது தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். குடியாத்தம் தொகுதி என்ற காரணத்தால் அனுமதி வழங்கப்படவில்லையா ? அதற்கு மனம் இல்லையா ? மற்றப் பகுதிகளுக்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்படுமா? ஏன் இந்தப் பாகுபாடு? மேலும் அங்கே இருக்கக் கூடிய காவல் துறையினருக்கு வீடுகள் போதிய அளவு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் காவல் துறையினருக்கும் சேர்த்து வீடு கட்டக் கூடிய அளவுக்கும் உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1969-லேயிருந்து இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனம் இல்லையா என்று கேட்டார்கள். இதுவரையில் ஒருவேளை மனம் இல்லை என்ற சூழ்நிலை இருந்தாலும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் தொகுதியின் சார்பாக வந்து இருக்கிற போது இந்த அரசுக்குக் கட்டாயம் மனம் உண்டு. ஆக இந்தத் திட்டத்தை விரைவில் அனுமதிப்பதற்கு அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 மார்ச் 13

சேரன்மாதேவியினை தாலுகாவாக உயர்த்தல்.

* வினா எண்—362 திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

சேரன்மாதேவியை தனித் தாலுகாவாக ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, சேரன்மாதேவியை தனி வட்டமாக ஆக்க வேண்டும் என்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, பெரியார் அவர்கள் சீர்திருத்தக் கருத்தைப் பரப்புவதற்கு இந்த சேரன்மாதேவி மிக உறுதுணையாக இருந்தது. ஆகவே பெரியார் நூற்றாண்டாகிய இந்த ஆண்டில் அதனைத் தனித் தாலுகாவாக ஆக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் அரசு கவனமாக எண்ணிக்கொண்டிருக்கிறது. ஆகவே விரைவில் ஒரு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு இடம் ஒதுக்கீடு.

* வினா எண்—363 திரு. எஸ். கணேசன் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பக்கிங்காம் கால்வாய்க்கு மேற்கே ரயில் நிலைய விஸ்தரிப்புக்கு அவசியமான நிலத்தைத் தர மாநில அரசு ஒத்துக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 42.03 ஏக்கர் நிலத்தை ரூபாய் 2.70 கோடிக்கு இரயில்வே இலாகாவிற்குக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : சென்ட்ரல் ஸ்டேஷன் விஸ்தரிப் புக்காக பக்கிங்காம் கால்வாயின் மேற்குப் பகுதியில் நிலத்தை அளித்திருப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதில் மூர் மார்க்கட்டும் அடங்கியிருக்கிறதா ? மூர் மார் கட்டில் இப்போது வியாபாரம் செய்துவரும் வணிகப் பெரு



மக்கள் இந்தத் திட்டத்தினால் மிகவும் பாதிக்கப்படுவதாக அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மூர் அங்காடியை இடிக்கவேண்டிய சூழ்நிலை வந்தால் அவர்களுக்கு வேறு தகுந்த இடத்தை அளிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : மூர் மார்க் கட்டில் ' உள்ளவர்களுக்காக தனி அங்காடி, கடைகள் கட்டி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் விரைவில் இந்தத் திட்டத்தோடு சேர்த்து ஆரம்பிக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ரெயில்வே விஸ்தரிப்பிற்காக மூர்மார்க்கட் மற்றும் மிருகக்காட்சிசாலை ஆகிய இடங்களை மத்திய அரசுக்குக் கொடுக்கக்கூடிய நேரத்தில் வட சென்னையில் கண்ணப்பர் திடலில் ஜனதா ஹோட்டலை மூன்று கோடி ரூபாய் அளவில் கட்ட மத்திய அரசுக்கு நிலம் கொடுக்க மாநில அரசு முன்வந்திருக்கிறது. இதனால் ரெயில்வே விஸ் தரிப்புத் திட்டம் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம் : மக்களின் நலனைக் கருதி மாநில அரசு மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்ற உதவுவதற்கு முன்வந்திருக்கிறது. அதேபோன்று நீண்ட காலமாக இருந்த கோரிக்கை, மத்திய ரெயில்வே நிலையத்தினை விரிவு படுத்துவது சம்பந்தமாக அதற்காக நிலம் கொடுக்கப்படுகிறது. அதேபோல் ஏழை எளிய மக்கள் தங்குவதற்கும், அவர்களுக்கு உணவு விடுதி சரியாக இல்லாத காரணத்தால் ஜனதா ஹோட்டலைக் கட்ட மத்திய அரசு முன்வருகிறபோது அதற்கு நிலம் கொடுக்க மாநில அரசு முன்வந்திருக்கிறது. இரண்டுக்கும் சங்கடம் இல்லாத வகையில் பேசி முடித்துக் காரியங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. தீ. சு. நல்லதம்பி : மூர் அங்காடியை வேறு இடத்தில் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விரைவில் என்றால் எவ்வளவு சீக்கிரம் என்பதையும், நேற்று முன்தினம்—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சர் அவர்களை வைத்து நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கூட அடுத்தாண்டு சுற்றுலா விற்காக பெரியதொரு நிகழ்ச்சியை தமிழ்நாட்டில் நடத்தப் போவதாகச் சொல்லியிருப்பது பத்திரிகை வாயிலாகத் தெரிய வருகிறது. அந்நிலையில் இந்த மூர் மார்க்கட்டை நல்ல நிலையில் அதே இடத்தில் அல்லது அருகாமையில் உள்ள வி. பி. ஹாலைச் சுற்றியுள்ள இடத்தில் அமைப்பதற்கு அமைச் சரவையும், அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தர வாதத்தை அளிப்பார்களா?

[1979 மார்ச் 13

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மூர் அங்காடியில் இன்று கடைகள் வைத்திருப்பவர்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னால் அவர்களுக்குக் கட்டடத்தைக் கட்டி அவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டுத்தான் அப்புறப்படுத்துவோம் என்று நான உறுதியளிக்கின்றேன்.

சுற்றுலாத் துறையின் கீழ் உள்ள ஓட்டல்கள்.

* வினா எண். 364 திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுலாத்துறை நிர்வாகத்தில் தற்பொழுது ஓட்டல்கள் ஏதேனும் இயங்கி வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கே?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தில் உணவு விடுதி தனியாக ஏதும் இல்லை. ஆனால் இத்துறையைச் சார்ந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உணவு விடுதி வசதியுடன் கூடிய 13 சுற்றுலா மாளிகைகளும் 1 சாலை ஒர விடுதியும் இயங்கி வருகின்றன.

(ஆ) சுற்றுலா கழகத்தின் கீழ் இயங்கி வரும் சுற்றுலா பயணிகள் விடுதிகள்;

(1) மாமல்லபுரம்
(2) சிதம்பரம்
(3) தஞ்சை
(4) திருச்சி
(5) மதுரை
(6) இராமேஸ்வரம்
(7) கன்னியாகுமரி } கன்னியாகுமரி
(8) கேப் ஹோட்டல் }
(9) திருச்செந்தூர்
(10) ஒகேனக்கல்
(11) உதகை
(12) ஏற்காடு
(13) கொடைக்கானல்

சுற்றுலா கழகத்தின் கீழ் இயங்கிவரும் சாலை ஒர விடுதி இராணிப்பேட்டை.



1979 மார்ச் 13]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : இந்த 13 இடங்களில் நடக்கிற சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடக்கும் உணவுவிடுதிகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமில்லை என்றால் அவை யாரால் நடத்தப்படுகின்றன? அவை லாபகரமாக இயங்குகிறதா? முக்கியமாக நான் எம். எல். ஏ.க்கள் சார்பாகக் கேட்க விரும்புகிறேன், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு நாங்கள் 1.30 மணிக்குச் செல்கிற போது முதல் தண்டனை பெறுவது சாப்பாடு அருந்துவது தான். எனவே எம்.எல்.ஏ. ஹாஸ்டல் உணவு விடுதியை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்து நடத்தி நல்ல தரமான உணவு வழங்குவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த 13 இடங்களிலேயும் சுற்றுலாத் துறை நடத்தவில்லை. அவற்றை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது என்று முன்னாலே விடையளித்திருக்கிறேன், லாப நஷ்டம் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஏழு இடங்களில் நஷ்டம் வந்துகொண்டிருக்கிறது என்றும் இப்போது முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட பிறகு மற்ற ஆறு இடங்களிலும் லாபம் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் மற்ற இடங்களில் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

[முற்பகல் 9.20]

அடுத்த கேள்வி, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சுற்றுலாக் கழகத்தின் சார்பில் உணவு விடுதிகள நடத்த இயலுமா என்று கேட்டிருக்கிறார்கள். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில்—சுற்றுலா அடிப்படையில் விடுதிகள் அமைக்கப்படுகின்றன. இங்கு தனியாக உணவு விடுதிகள் நடத்துவது என்பது சட்டவரம்பிற்குள் வருமா என்பது தெரியவில்லை. பேரவைத் தலைவர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் விரும்புவார்களேயானால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அங்கு உணவு விடுதி நடத்த இயலுமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள். பேரவைத் தலைவரிடம் இருக்கின்ற இந்த உரிமையையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா?

திரு. வி. கே. கோதண்டராமன் : அசைவ சாப்பாடு எல்லாம் அவ்வளவு மோசமாக இருக்கிறது, அதற்காகத்தான் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத்தான் வயதாகிவிட்டதே, இனிமேல் அசைவ உணவு சாப்பிடாதீர்கள், சைவ உணவை சாப்பிடுங்கள். (சிரிப்பு)

[1979 மார்ச் 13

திரு. மு. அம்பிகாபதி : சின்னசேலம் சுப்பிரமணியன் அவர்கள் சொன்ன கருத்தை நான் வலியுறுத்துவதோடு, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கும் விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு சலுகை கட்டணம் வசூலிப்பது பற்றி அரசு ஆலோசிக்குமா, அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கேள்விக்கு முன்பே இந்த மாமன்றத்தில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகின்ற விடுதிகள் லாப நஷ்ட கணக்கின் அடிப்படையில்-கடன்களைப் பெற்று முதலீடு செய்து இந்த விடுதிகள் நடத்தப்படுவதால், இவற்றில் மற்ற 'கன்ஸெஷன்', சலுகை, வசதிகள் தர இயலாது என்று முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை நிர்வாகம் அல்லது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தர்மபுரி மாவட்டத்தில் ஓசூரில் ஒரு ஹோட்டல் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா? ஆமென்றால் எவ்வளவு முதலீடு செய்யப்படும்? எப்போது இது அமலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் சாலை அருகில் பயணிகள் தங்கும் வசதிக்காக சாலை ஓர விடுதி ஒன்று அமைய வேண்டும் என்று திட்டமிட்டு, விரைவில் அது செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்காகத் தங்கும் விடுதிகளும் உணவு விடுதிகளும் மாமல்லபுரத்தில் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. இதே போன்று ஒரு தங்கும் விடுதி மாமல்லபுரத்தின் அருகில் உள்ள கோவளத்தில் கட்டுவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா? அத்துடன் ஹோட்டல் விடுதியும் அங்கு கட்டுவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாமல்லபுரத்தில் தங்கும் விடுதி நடந்து கொண்டிருக்கிறது என்று தான் சொல்லியிருக்கிறேன். புதிதாகக் கட்டும் அறிவிப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. இப்போது, கோவளத்தில் நடைபெற்று வருகிற ஒட்டலிலேயே சரியான வியாபாரம் ஆகாமல் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட தங்கும் விடுதியும் உணவு விடுதியும் அங்கு கட்ட இப்போது உத்தேசம் இல்லை. கோவளத்தின் அருகே ஒரு இடத்தில் பயணிகள், போக்குவரத்தின் போது. தங்கி



1979 மார்ச் 13]

இளைப்பாறுகிற பூங்கா—மற்றுமுள்ள வசதிகள்—போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு சுற்றுலாத் துறை ஆலோசித்து வருகிறது.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகள் லட்சக்கணக்காக வருகின்ற திருக்கழுக்குன்றம் திருநகரில் சுற்றுலா விடுதி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா விடுதிகளை அமைப்பது என்பது, அவர்கள் வந்து தங்குகின்ற இடங்களில் தான் அமைக்கப்படுகிறது. அங்கங்கு போய் பார்த்து ஆண்டவனை வணங்கிவிட்டு, ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் தங்கிச் செல்கின்ற இடங்களில் எல்லாம் சுற்றுலா விடுதிகளை அமைப்பது எந்தவிதமான பயனையும் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே நடத்தப்படுகின்ற 13 விடுதிகளில், எந்த ஊரிலுள்ள விடுதிக்கு ஆண்டு வருமானம் அதிகமாக இருக்கிறது? அது ஊட்டியாக இருக்குமென்று கருதுகிறேன். அப்படியிருந்தால், மேலும் கூனூர், கோத்தகிரி போன்ற இடங்களில் சுற்றுலா விடுதிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீலகிரி உறுப்பினர் கூறுவதுபோல், இன்றையதினம் நீலகிரி மாவட்டத்திலே ஊட்டியிலே இருக்கின்ற சுற்றுலா விடுதியிலே ரூ. 2,09,463 கடந்த ஆண்டு லாபம் வந்திருக்கிறது. என்றாலும், மேலும் இதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் யோசனைப்படி, கூனூரிலே இப்படிப்பட்ட சுற்றுலா விடுதி அமைப்பது என்பது நல்ல யோசனைதான். விரைவிலே அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே, சாத்தனூர் அணைக்கட்டிலே இப்படிப்பட்ட சுற்றுலா விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏற்கனவே இருக்கின்ற சுற்றுலா விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலே இதுவரை சுற்றுலாத் துறையினரால், கட்டப்பெற்ற சுற்றுலா விடுதிகள் எதுவும் இல்லை. என்றாலும், அந்த இடத்திலே சுற்றுலா விடுதிகள் அமைத்தால், அது பலன் தருமா, லாபகரமாக இயங்குமா என்ற அடிப்படையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதைப் பரிசீலிக்கும்.

[1979 மார்ச் 13

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சித் துறையினரால் நடத்தப்படுகின்ற விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு சலுகை அளிக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்கு ஏற்கனவே, நான் விடை அளித்திருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே பஞ்சாலைத் தொழிலாளி ரூ. 900 சம்பளம் வாங்குகிறார். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் ரூ. 500 சம்பளம் என்றாலும், ரூ. 250 தான் சம்பளமாகப் பெறுகிறார்கள் என்பது தெரியும். எனவே, இதைப்பற்றி மறுபடியும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் ஒரு சிறந்த உண்மையை, மகிழ்ச்சிகரமான செய்தியை, அதாவது நம்முடைய மாநிலத்தில் பஞ்சாலைத் தொழிலாளிகள் ரூ. 900 சம்பளம் வாங்குகிறார்கள் என்ற செய்தியை, இந்தக் கேள்வியின் மூலம் நாட்டிற்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளிலே குறைந்த வசதிகள், குறைந்த படுக்கைகளே இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் இந்த விடுதிகளை எதிர் நோக்கி வருகின்றபோது, அவர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே அமைக்கப்பட்ட இந்த விடுதிகளில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு வருகின்ற நேரங்களில் ஒருவேளை வசதி செய்ய முடியாமல் போக நேருமோ என்ற அடிப்படையில்தான், அப்படிப்பட்ட பொறுப்பை எற்றுக்கொள்வதற்கு இயலாது என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கருதுகிறது.

மங்களமேடு அருகில் உள்ள ரஞ்சன் கோட்டை.

(* வினா எண். 365—) திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், மங்கள மேடு அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிகு ரஞ்சன் கோ யினை சுற்றுலாத்தலம் ஆக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) இப்பெருங்கோட்டையினை வேறு வகையில் பயன் படுத்திட ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(அ) எதுவும் இல்லை.



1979 மார்ச் 13]

திரு. எஸ். வி. இராமசாமி : தலைவர் அவர்களே, இராபர்ட் கிளைவ், திப்பு சுல்தான் போன்றவர்களால் கட்டப்பட்டு, உண்மையிலேயே புராதானமாக இருக்கின்ற இந்தக் கோட்டையை 'புரொடெக்டட் மான்யூமென்ட்' என்பதாக பராமரித்து, அதற்கு அருகாமையில், சுற்றியுள்ள 100 ஏக்கர் பரப்பளவில் அரசு பழத் தோட்டம் வைப்பதற்கோ அல்லது அந்த இடத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கவோ பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோட்டையைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தால், அது பயனுற்றதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கோட்டை திருச்சி—சென்னை நெடுஞ்சாலையில் 67 கிலோ மீட்டர் திருச்சியிலிருந்தும், இந்த இடத்திற்கு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரம் உள்ளே செல்ல வேண்டும். இந்தக் கோட்டையானது 100 அடி உயரமுள்ள ஒரு பாறையின் மீது அழகுடன் அமைந்துள்ளது. கோட்டையின் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 88 ஏக்கர் ஆகும். இக்கோட்டையின் ஒருபுறம் சின்ன ஆறு ஓடுகிறது. இக்கோட்டை ஒரு பாதுகாப்பு அரணாக கட்டப்பட்டிருப்பது கோட்டையின் அமைப்பு முறையிலிருந்தும், அமைந்துள்ள இடத்தைப் பொருத்தும் விளங்குகின்றது. இக் கோட்டையைக் சுற்றி 70 அடி அகலமும், 15 அடி ஆழமும் கொண்ட அகன்ற அகழியானது வெட்டப்பட்டுள்ளது. கோட்டையின் மதில் சுவர்களிலும், கோட்டையின் உச்சிப் பகுதிகளிலும் எதிரிகளை மறைந்திருந்து தாக்குவதற்காக ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோட்டையில் நிதி வைப்பு ரகசிய அறைகளும், கருவறைகளும், வற்றாத ஊற்றுகளும், பெண்கள் குளிப்பதற்காக தனிக் குளங்களும், ஆபத்துக் காலங்களில் வெளியேறுவதற்காக ரகசிய வழிகளும் நிறைந்து, பார்ப்போரை பல நூற்றாண்டுகளுக்குப் பின் நோக்கி இழுத்துச் செல்லும் கற்பனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது இந்தப் பகுதி, மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருக்கிறது.

[முற்பகல் 9.30]

அது ஒரு 400 ஆண்டுகளுக்கு முன்னால் மராட்டிய மன்னர் வழியில் வந்த ரஞ்சித்சிங் என்பவரால் கட்டப்பட்டு அவருடைய பெயரில் இந்தக் கோட்டை விளங்குகிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை மிக விரைவில் அந்தப் பகுதியை நம்முடைய மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கான வழிவகைகளுக்கான விவரங்களைத் தரும்படி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

[1979 மார்ச் 13

## சிறைச் சாலைகளில் வழங்கும் செய்தித் தாள்கள்

* வினா எண். 366 திரு. கே. சௌந்தரராஜன் : திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறைச்சாலைகளில் எந்தெந்த செய்தித்தாள்கள் வழங்கப்படுகின்றன?

(ஆ) அண்ணா, தென்னகம் இதழ்கள் வழங்க அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (அ) The Tamil dailies 'Dinamani', 'Swadesamitran', 'Navasakthi,' 'Anna', and 'Thennagam', and also the English Daily 'The Hindu' are now being supplied at Government cost in the prisons. (Swadesmitran" has not resumed its publication.)

(ஆ) Does not arise.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படும் பத்திரிகைகளில் அண்ணா, தென்னகம் போன்ற பத்திரிகைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மூலக் கேள்வியிலேயே அண்ணா, தென்னகத்தோடு முரசொலி. விடுதலை, நம்நாடு, தீக்கதிர், தினகரன், அலை ஓசை போன்ற பத்திரிக்கைகள் வழங்கப்படுமா என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பத்திரிகைகளை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா?

The HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, The Tamil Dailes 'Dinamani 'Navasakthi,' 'Anna, 'Thenagam', and also the English Daily 'The Hindu' are now being supplied at Government cost in the prisons. 'Swadesamitran' has not resumed its publication. It has also been directed to be supplied at Government cost in the prisons.

திரு. செ. சிவசாமி: சிறைச்சாலகளில் பத்திரிக்கைகளைக் கொடுக்கக்கூடிய நேரத்தில் ஒருசில நியூஸ்களை கறுப்பு மையால் அடித்துக் கொடுக்கிறார்கள். கைதிகள் புரட்சி செய்து விடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக அப்படிச் செய்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

The HON. THIRU K. NARAYANASWAMY : I would dequest the hon'ble Member to put a separate question so that I might elicit the necessary details from the concerned department. So, I would request the Hon'ble Member to give specific and clear details.



1979 மார்ச் 13]

திரு. என். கிட்டப்பா: தற்போது மத்திய சிறைச்சாலைகளில் சிறைத்துறையின் மூலமாக அளிக்கப்படுகின்ற செய்தித்தாள்களைத் தவிர ஏனைய செய்தித்தாள்களைச் சொந்தப் பொறுப்பில் வாங்க அனுமதிக்கப்படுகிறார்கள். இருந்தாலும் தினத்தந்தி, மாலை முரசு போன்ற பத்திரிகைகளைக்கூட அவ்வாறு வாங்க அனுமதிக்கப்படவில்லை. அந்த அளவுக்கு என்ன பயங்கரமான செய்திகள் அதிலே வெளிவருகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

THE. HON. THIRU K. NARAYANASWAMY : 'Dinathanthi' is not prevented from being purchased by the prisoners. These are journals and they are now allowed to be purchased by the prisoners. The following newspapers and magazines are allowed to be purchased by the prisoners:- The Madras Mail, The Hindu, The Indian Express, Murasoli, Namnadu, Navamani, Mathruboomi, Chandrika, Swathanthra Barathi Andhra Patrika, Andhra Prabha, Nowjavan, Dinathanthi, The Times of India, Illustrated Weekly, The Cnristian Herald, Blitz, Link, Swaraj: a, Kalaimagal, Janasakthi, Kumudam, Thikkadir, Kerala Pathrika, Malayalarajyam, Rani Girakulasami, Prabhat, Kathangali, Then 'Subhoda' and 'Vikadavinodhini'.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, அண்ணா, தென்னகம் போன்ற அகில இந்திய அண்ணா தி.மு.க. வின் பத்திரிகைகளை அனுமதிக்கிறபோது அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கட்சிப் பத்திரிகைகளும் அங்கே அனுமதிக்கப்படுமா? அதோடு, தமிழகத்திலே சாதாரண மக்கள் வாங்கிப் படிக்கிற எல்லா தமிழ் பத்திரிகைகளையும் அங்கே படிப்பதற்கு வசதிகளை அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I would request the hon'ble Member to give a list of the dailies that are in his mind and certainly I will pass on the entire list for serious consideration of the Government.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை இந்திரா காந்தி கைதுசெய்யப்பட்டபோது நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம். அங்கே கைதிகளுக்கு சினிமா படம் காட்டப்படுவதில்லை. வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களுக்குத் தான் சினிமா படம் காட்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. 'பல்லாண்டு வாழ்க' சினிமா படத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஜெயிலராக நடித்து, சிறைத் தண்டனை பெற்றவர்களை திருத்துவதற்கு முயற்சி செய்கிறார். ஆகவே சினிமாவையே நம்பி ஆட்சிக்கு வந்த இந்த அரசு அங்கே சினிமா காட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The two supplementaries put by the hon'ble Member have nothing to do with the newspapers.

[1979 மார்ச் 13

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்குக் கிடைத்த விவரங்களை இங்கே குறிப்பிட்டார்கள். அந்த விவரத்திலே கீதாஞ்சலி என்று இருப்பதை கதாஞ்சலி என்று அறிவித்து இருப்பதைப்பற்றி அவர்களே குறிப்பிட்டார்கள். எனக்கு இருக்கிற அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன், தினத்தந்தியை நாம் விரும்புவதா வேண்டாமா என்ற பிரச்சினை தவறு, ஆனால் தினத்தந்தி, மாலை முரசு போன்ற பத்திரிகைகளை சொந்தத்திலேகூட அவர்கள் வாங்கிக் கொள்ள அனுமதிப்பதில்லை என்பதை நான் அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HCN. THIRU K. NARAYANSWAMY ; I am thankfull the hon.'ble Member for the suggestion. The mistake is my departments mistake. I own the mistake and I take the responsibility.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போமி சில பத்திரிகைகள், புததகங்கள் சென்ஸார் என்ற பெயரால் சென்ஸார் செய்யப்படுகின்றன. சென்ஸார் என்ற பெயரால் பல மாதங்கள் கூட குறிப்பிட்ட கைதிகளுக்கு கிடைக்காமல் தேக்கி வைக்கப்படுகின்சன, ஆனால் அதே நேரத்திலே மூட நம்பிக்கையுள்ள புத்தகங்கள் எல்லாம் உடனடியாக வழங்கப்படுகின்றன. முற்போக்கான கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள் சென்ஸார் என்ற பெயரால் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The small discourse of the hon'ble Member has nothing to do with the main question.

திரு. ரா. ஜெபமணி : தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய பத்திரிகைப் பட்டியலைப் படித்தார்கள். ஆனால் 'துக்ளக்' எல்லோராலும் பிரியப்பட்டு படிக்கப்படுகிற பத்திரிகை. அதை ஏன் அவர்கள் படிக்கவில்லை? அதை அவாகள் சொந்தத்திலே் வாங்கிர் கொள்ள அனுமதிக்கப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : We are not contemplating any change of capital. Never the less we wilt consider the suggestion of buying 'Tughlak'.

திரு. க. அன்பழகன் ; தலைவர் அவர்களே, துக்ளக் பெயர் நினைவுக்கு வந்தவுடனே மிக அதிகமான சுவையை, மிகப் பெரிய மகிழ்ச்சியைப் பெறமுடியுமானால் சிறைச்சாலையிலே உள்ளவர்களுக்கு அது எவ்வளவு பெரிய மாமருந்தாக இருக்கும். படித்துப்



1979 மார்ச் 13]

படித்துச் சிரித்துக் கொண்டே இருப்பார்கள், அவர்கள் சிரித்துக் கொண்டிருக்க அந்தப் பத்திரிகையை அரசின் சார்பிலே வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The suggestion will be very seriously considered and I may assure the hon'ble Members of this House that an element of humour in life is very very essential, at least in the life of prisoners also.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, நான் தான் மூலக் கேள்வி போட்டேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்போது பார்த்தேன். தாங்கள் இருக்கையில் இல்லை.

## சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்

*வினா எண். 367 திரு. என். கிட்டப்பா திரு. சேலம் மு. ஆறுமுகம் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் சரபோஜி சரஸ்வதி மகால் நூல்நிலையத்தினைப் பராமரிக்க மத்திய அரசு மானியத் தொகை வழங்கி வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(ஆ) அதன் விவரப்பட்டி * அவை முன்னால் வைக்கப்பட்டது.

திரு என். கிட்டப்பா; தலைவர் அவர்களே, தஞ்சை சரபோஜி சரஸ்வதி மகால் நூல் நிலையத்தைப் பராமரிக்க அதற்கு மத்திய அரசு மானியத் தொகை அளிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதனுடைய பராமரிப்பு மாநில அரசிடத்திலே இருக்கிறதா அல்லது மத்திய அரசினிடத்திலே இருச்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மாநில அரசினுடைய பராமரிப்பில் இருந்தால் முறைப்படி அதை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி அரசு அறிவிக்குமா?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம் 1918 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அறக் கட்டளையின்படி தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலக நிர்வாகக் குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

---

[* 504ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

இக்குழுவிற்கு தஞ்சை மாவட்ட ஆட்சியர் தலைவர். மேலும் இக் குழுவில் தஞ்சை மாவட்ட நீதிபதி, தஞ்சை மன்னர் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர், தஞ்சை மன்னர் வாரிசால் நியமனம் செய்யப் பட்ட ஒருவர், தஞ்சை மாவட்ட பொது மக்களின் சார்பில் ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, தஞ்சை சரஸ் வதிமகால் நூல் நிலையத்தில் உள்ள அரிய பல நூல்களை இன்றைய தினம் தமிழக அரசு மலிவு விலையில் அச்சிட்டுப் பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த நூலகம் தற்போதுள்ள அரிய சிறந்த நூல்களைப் பாதுகாப்ப தோடு, அரிய சுவடிகளைப் புத்தகமாக வெளியிட்டுப் பெரிதும் பொது மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் இருக்கும் பழங்காலச் சுவடிகளை மைக்ரோ ஃபிலிம் மூலமாக எடுத்துப் பாதுகாத்து வைப்பதற்காக வெளிநாட்டிலேயிருந்து இலட்சம் ரூபாய் செலவு செய்து இயந்திரம் வாங்கப்பட்டு, அது வேலை செய்யாமல், அதற்குரிய ஆட்களை நியமிக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்த இயந்திரம் அப்படியே இருக்கிறது. இதனால் அது கெட்டு விடாதா? எனவே உடனடியாக அந்த இயந்திரத்தை இயக்குவதற்கு ஆட்களை நியமிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் டெபுடி லைபரரியன் போஸ்ட் நீண்ட நாட்களாகக் காலியாக இருக்கிறது. அதை உடனடியாக ஃபில் அப் செய்ய அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, செ, அரங்கநாயகம்: தலைவரவர்களே. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அச்சடித்துத் தந்துள்ள விடையில் 1974-75ஆம் ஆண்டுக்கு அச்சகம் நிறுவுவதற்கு ரூபாய் 50,000, கட்டடத்தை விரிவாக்குவதற்கும், புத்தகம் கட்டுவதற்கும் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாயும் மானியம் வழங்கியிருப்பதாகச்சொல்கிறார்கள். அச்சகம் நிறுவி, எத்தனை பிரதிகளை புத்தகமாக இதுவரையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?





மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுகுறித்து விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரமாக சொல்லலாம்.

திரு சொ. ந. பழனிசாமி: பேரவைத் தலைவரவர்களே, சரஸ்வதி மகால் நூல் நிலயத்தில் தற்பொழுது எத்தனை நூல்கள் உள்ளன? அவற்றில் இந்திய மொழிகளில் உள்ள நூல்கள் எத்தனை? நூல் நிலையத்தைப் பராமரிக்க தொல்பொருள் இலாக்காவால் என்னென்ன பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நூலகத்தில் சுமார் 30,000 ஒலைச் சுவடிகள் உள்ளன. அவற்றுள் 24,000 சுவடிகள் வடமொழிகளிலும், ஏனையவை தமிழ், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உள்ளன. மேலும் இந்நூலகத்தில் தஞ்சை மன்னர் சரபோஜி சேர்த்து வைத்த நூற் பிரதிகளும், ஆங்கில நூல்களும் உள்ளன. இங்குள்ள ஒலைச் சுவடிகள், இசை, நாடகம், தத்துவம், மருத் துவம், மற்றும் சமய சார்புடையனவாயுள்ளன. இவை களைப் பராமரித்து வருகிறோம்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சோற்றால் மடை அடைத்த சோழ வளநாட்டின் தலை நகரமாக உள்ள தஞ்சாவூரில் இருக்கின்ற சரபோஜி சரஸ்வதி மகால் பழுதுபட்டும், இருள் அடைந்தும் இருக்கிறதே, அங்கு ஒளி வசதி செய்யவும், பழுது பார்க்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977-1978-ம் ஆண்டில் 2.5 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது, 1978-1979-ம் ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, இந்நூலகத்தில் சில கூடுதல் பணி யிடங்களை ஏற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உள்ள சில பணி யிடங்களை மேல் நிலைப்படுத்துவதற்காகவும், தொடரும் செல வினமாக ஆண்டுக்கு ரூபாய் 60,000-ம் முதலீட்டுச் செலவினங் களுக்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 3.5 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கும். வருகைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பதால் தமிழக அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏதும் இல்லை. ஏற்கனவே செலவிட்டு வரும் மானியத் தொகையான ரூபாய் 1.25 இலட்சத்தை இனி மேலும் தொடர்ந்து வழங்கி வரும். இந்த அடிப்படையில் அந்த நூலகம் நல்ல முறையிலே பராமரிக்கப்படும்.

திரு. சேலம்மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் அரிய பல வைத்திய நூல்கள் பிற மொழி களில் இருக்கின்றன. அவைகள் தமிழ் மொழியில் வெளியிடப்

படவில்லை. ஆகவே, மதிப்புமிக்க அந்தப் பிரபலமான பிற மொழியில் இருக்கின்ற நூல்களைச் சிறப்பான முறையில் தமிழில் வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

## Representation from St. Peter's High School Teachers Association

* Q. No. 368 Thiru R. UMANATH: will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether any representation has been received recently from the Teachers Association, St. Peter's High School, Thanjavur, alleging prevention of teachers by management of C.S.I. Schools from exercising their fundamental right to seek any remedy in a court of law; and

(b) if so, the action taken by the Goverment thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,

(அ) ஆசிரியர் சங்கத்திடமிருந்து எந்தவித முறையீடும் வரவில்லை. ஆனால், சில ஆசிரியர்கள் சில குறைபாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

(ஆ) அந்த அடிப்படையிலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

## சென்னை மாநகராட்சிப் பணிகளுக்குத் தேர்வு

* வினா எண். 369— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகராட்சித் துறையில் உள்ள பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தனியாக சர்வீஸ் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலே மட்டுமல்ல, மதுரை போன்ற மாநகராட்சிகளிலும், ஏனைய தமிழகத்திலே உள்ள அத்தனை நகராட்சிகளிலும் அதைப்போல் ஊராட்சிகளிலும் புதிதாகத் தேவைப்படும் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க தமிழக அரசு தனியே நிறுவனம் ஒன்றை அமைத்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

## ஆரூர் ஒன்றியத்திற்கு புதிய ஜீப் வண்டி.

*வினா எண்: 370—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய ஜீப் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தற்பொழுது உபயோகத்திலுள்ள ஜீப் பயனற்றதென்று ஒதுக்கிய பின் புதிய ஜீப் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஆரூர் ஒன்றிய ஜீப்பை ரிப்பேர் செய்து ஓட்டிக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். ஜீப்புகள் "அக்ரோ சர்வீஸ் டெப்போ" க்களில்தான் 'ரிப்பேர்' செய்யப்படுகிறது. அப்படி செய்யும்போது, சிறிய ரிப்பேருக்குக் கூட, தனியார் பட்டறைகளிலே வசூல் செய்யும் தொகையைவிட இருமடங்கு, மும்மடங்கு அதிகமாக இந்த டெப்போக்களில் வசூலிக்கப்படுகிறது என்ற புகார் அரசுக்கு வருகிறதா? சின்ன ரிப்பேருக்குக் கூட மாதக்கணக்கில் காலங் கடத்துவதை அரசு அறியுமா? அதற்குப் பரிகாரம் காண அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய அந்தக் கருத்தினை யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## பெருந்துறையை நகராட்சியாக்கல்.

*வினா எண்: 371—டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து பெருந்துறையை நகராட்சி ஆக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : நகராட்சிகளின் ஆய்வாளரின் பரிசீலனையில் உள்ளது.

[1979 மார்ச் 13

## Wages of tannery workers.

* Q.No. 372 Thiru N.KITTAPPA: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether settlement has been made regarding the wages of tannery workers in this State about the 16th May 1978; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை *அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழில் மிகப் பெரிய அளவுக்கு அன்னியச் செலா வணியைச் சம்பாதிக்கும் தொழிலாக இருக்கிறது. இதிலே வேலை செய்யும்படியான தொழிலாளர்கள் சுண்ணாம்பில் கையை வைத்து மிகப் பெரிய இரசாயனப் பொருள்களைக் கையாள்வதால், அவர் கள் கைகள் குஷ்டரோகிகளைப் போல் காட்சி அளிப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, ஒப்பந்தம் ஏற்பட்டாலும் இடையிலே னகயுறைகள் கொடுக்க வசதி செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், குடியிருப்பு வசதியற்றுத் துன்பப்படுகிற நிலையிருக்கிறது. ஆகவே, ஒப்பந்தத்திற்கு இடையிலே, அவர்களுக்குக் குடியிருப்பு களைக் கட்டித் தர ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஒப்பந்தம் ஏற்பட்டதைப் பற்றி. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி 17-5-1978; கால அளவு 2 ஆண்டு; ஒப்பந்தம் ஏற்பட்ட விதி, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3).

திரு.நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, சென்னை நகரிலே குரோம்பேட்டையிலேயிருக்கிற குரோம் லெதர் கார்ப்பரேஷன் 9 மாதமாக மூடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன் காரணமாக, தொழிலாளர்கள் 9 மாதமாக வேலையில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி வேறு. இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

*.....505-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற் றுள்ளது.



1979 மார்ச் 13]

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஒப்பந்தம் படிப்பதற்கு ரொம்ப அழகாக இருக்கிறது. வருஷம் ஒன்றுக்குக் கூலி உயர்வு கிடைக்கிறது. 'டிரஸ்' கிடைக்கிறது என்றெல்லாம் இருக்கிறது. அந்தத் தொழில் திடீர், திடீரென்று செத்துப் பிழைக்கக்கூடிய அளவு இருக்கிறது. அந்த நிலைமையிலே 2, 3 மாதம் மூடப்படு கிறது. மறுபடியும் திறக்கப்படுகிறது. ஆகவே, 'பெர்மனன்ட்' தொழிலாளி இல்லையாதலால் உனக்கு இந்தச் சலுகையெல்லாம் கிடையாது என்ற சூழ்நிலை இருப்பது கனம் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும்—தெரியுமா (சிரிப்பு). ஆகவே, விஷயத் திலே கனம் அமைச்சரவர்கள் இந்த ஒப்பந்தத்தின்படி இந்தச் சலுகையெல்லாம் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூலக்கேள்வி. ஊதியத்தைப் பொறுத்தது, ஒப்பந்தத்தைப் பொறுத்தது.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, 374 இரண்டும் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பட்டது.

## ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள்.

* வினா எண் 375—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கத் திட்டமுள்ளதா?

(ஆ) காவிரியாற்றுப் பாசனப் பகுதிக்கும் கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும் இக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் என்பது மிகவும் முக்கியமானது. முறையாகப் பாசனம் பெற்றதால்தான் நல்ல முறையிலே விளையும் என்கிற அடிப்படையில் காவிரியாற்றுப் பாசன பகுதிக்கும், கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும், இதை பரிசீலிக்கிறோம் என்று சொல்லப்பட்டது. துரிதமாக ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அதற்கு அரசு முயற்சி செய்யுமா? எந்த அடிப் படையில் அந்தக் குழுக்கள் அமைக்கப்படும்? சர்வகட்சி முறையில் எல்லாக் கடசிகளுக்கும் சரியான அளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு பகுதிகளிலே குறிப்பாக, காவிரியாற்றுப் பாசன பகுதி, பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனப் பகுதி, பெரியாறு, வைகை பாசனப் பகுதி போன்றவைகளை முன்னால் வைத்து அவைகளுக்கு ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கிறது. அதற்காக அவைகளைப் பாசன பிரிவு நதிப் பிரதேசமாகப் பிரித்து பின்னர் ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவைகள் மீண்டும் மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்திற்குள் முடித்துத் தரவேண்டும் என்கின்ற அடிப்படையிலே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயக்கட்டு ஆலோசனைக் குழு என்று அமைக்கப்படுவது காவிரி போன்ற ஜீவநதி ஆற்றுப் பகுதிகளுக்கு மட்டுமா அல்லது கிணறுகள், ஏரிகள், பாசனத்திற்கு உபயோகப்படும் கிணறுகள், ஏரிகளுக்கு தனியார் ஆயக்கட்டு உரிமையாளர் களுக்கும் இத்தகைய ஆயக்கட்டு அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அறிவிக்க முடியும்ா? அப்படி அமைக்காவிட்டால் எல்லா இடங்களுக்கும் இந்த ஆலோசனைக் குழுக்கள் அமைத்து பரிசீலனை செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்பாசனப் பகுதிகளை மையமாக வைத்துத் தான் இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அந்த ஆலோசனை குழுக்களில் சர்வ கட்சித் தோழர்களும் இடம் பெறுகின்ற முறையிலே அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 376.

திரு. மு. அம்பிகாபதி : தயவுசெய்து இன்னொரு கேள்வி சார், தண்ணீர் விஷயமாச்சே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியை ஆரம்பித்தாயிற்றே. தனிக் கேள்வியாகப் போடுங்கள். பிறகு, வைத்துக் கொள்ளலாம்.

## ஆழியாறு நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண் 376 திரு. ரா. அய்யாச்சாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் ஆழியாறு அணையின் கொள்ளளவு குறைவாக இருப்பதால் அதிகமான தண்ணீர் கடலிலே போய் வீணாகக் கலப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க மீண்டும் ஒரு அணை கட்டும் உத்தேசம் உள்ளதா?



1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) ஆளியாறு அணையின் கொள்ளளவு ஆளியாறு நீர்ப் பிடிப்பு பகுதியிலிருந்து வரும் அதிகமான தண்ணீரைத் தேக்கவும் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்ட நீர்த்தேக்கங்களிலிருந்து திருப்பிவிடப்படும் தண்ணீரில் ஒரு பகுதியை ஆளியாறு நீர்த்தேக்கத்தின் வழியாக பொள்ளாச்சி, வேட்டைக்காரன் புதூர் கால்வாய்களின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆழியாறு நீர்த் தேக்கத்தின் தற்போதைய கொள்ளளவு (3864 மி. கன அடி) குறைவு என்று அரசு கருதவில்லை.

(ஆ) இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த ஆளி யாறு திட்டத்தைப்போலவே, ஆனைமலை ஆறு என்று ஒரு திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகின்றேன். ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயல் படும் என்று அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் அது இரண்டு மாநிலங்களுக்கிடையில் இருக்கக்கூடிய பிரச்சனை. கேரளம், தமிழகம் இரண்டும் சேர்ந்து செய்ய வேண்டிய முடிவு இது. அது குறித்து, கடந்த டிசம்பர் மாதத்தில் 19, 20 தேதி களில் தமிழக அமைச்சர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். கேரள அரசாங்கம் அதனுடைய இடமளியாறு திட்டத்தை முடித்து விட்டு, ஆனைமலையாறு திட்டத்தை எடுத்து விவாதிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், இடமளியாறு திட்டம் இன்னும் துவக்கப்படாமலேயே 6, 7 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் கேரள அரசாங்கத்திற்கு எழுதிக் கேட்டிருக்கிறோம். இடமளியாறு திட்டத்தை அவர்கள் எடுத்தாலும் எடுக்கா விட்டாலும், ஆனைமலையாறு திட்டத்தைப் பற்றி ஆலோசனை யில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேரள அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கான ஒப்பந்தங்கள் கூட நம் இரு மாநிலங்களுக்கிடையே இருக்கிறது. அதனால் கூடிய சீக்கிரத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஆளியாறு அணைத் திட்டத்தில் ஆயக்கட்டு ஏக்கர் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த அளவிற்குக் கூட பாசனம் கொடுக்கப்பட வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். அந்த நிலைமையில் மேலும் 1 லட்சம் ஏக்கருக்கு மேல் பாசனத்தை ஏற்றுவதற்கும், அதற்கான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருவதும் அமைச்சருக்குத் தெரியும். இவற்றையெல்லாம் நிறைவேற்றவே பற்றாக்குறை இருப்பதால், தண்ணீர் கொள்ளளவு அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டம் பற்றிச்சொல்லியிருக்கிறார்கள். ஆளியாறு அதிலே ஒரு பகுதியாக இருந்து கொண்டு இருக்கிறது. பரம்பிக் குளம்-ஆளியாறு பாசன வசதிக்கு திட்டமிடும்போதே, 2½ லட்சம் ஏக்கர் என்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே இருந்த அரசு, அதற்குப் பின்னாடி வந்த இந்த அரசும் பாசன வசதியை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும் வகையில் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளியாறு கொள்ளளவு ஏறத்தாழ 3,864 மில்லியன் கனஅடியாகும். ஒரு வருஷத்திற்கு ஏறத்தாழ 7 மில்லியன் கன அடி தண்ணீர் அங்கே ரோநது முறையில் நிறுத்தப்படுகிறது. அதன் மூலமாகப் பாசன வசதி பெறும் அளவிலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மீண்டும் உயர்த்துகிற எண்ணம் இந்த அரசின் ஆய்வில் இல்லை.

## பாவனர் வடிகால் திட்டம்.

*வினா எண் 377—திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பாவனர் வடிகால் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் சிபாரிசு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை செயல்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு, துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த பாவனர் வடிகால் திட்டம் சிதம்பரம் வட்டத்தில் மிகவும் முக்கியமான வடிகால் திட்டமாகும். முன்பொரு வடிகால் திட்டம் 7 கோடி ரூபாய் அளவிற்குப் போடப்பட்டு, அது நேராகக் கடலில் கலப்பதற்கு வகைசெய்யப்பட்டது. அந்தத் திட்டம் ஆராயப்பட்டு வருகிறதா? இப்போது ஒரு மாற்றுத் திட்டம் அமைத்து இருப்பதாகத் தெரிகிறது. அதாவது தற்போது பெருமாள் ஏரியில்



இருந்து வடியக்கூடிய தண்ணீர், 4 அடி பள்ளத்தில் உடனடியாக விழுந்து பரவனாறு வழியாக வடிகிறது. அதை பெருமாள் ஏரியின் வடக்குப் பகுதியில் வடிமுனை அமைத்து கடலில் கலக்கும் வகையில் செய்ய ஒரு திட்டம் புதியதாகத் தயாரிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தின் விவரம் என்ன? அதைப் பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் துரை கலியமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் அரசின் பரிசீலனைக்கு இன்னும் வரவில்லை. அவர்கள் விவரமாகத் தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய பதிலைச் சொல்கிறேன்.

## கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

* வினா எண் 378—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பலமான தலைக்காயங்களுக்கு சிகிச்சையளிக்க விசேஷ பிரிவு இல்லாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், கோவை நகரில் இம்மருத்துவ மனையில் இப்பிரிவு (Neurology Department) ஏற்படுத்த ஆலோசனை உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, விடை ஆம்; தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். அவர் சொன்ன பதில் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே கோயம்புத்தூர் மருத்துவ மனையில் தலைக்கு ஏற்படும் காயங்களுக்கு ஒரு நல்ல வார்டு தயார் செய்து, 32 படுக்கைகள் தயார் செய்து, எக்ஸ்ரே மெஷின் வாங்கி வைத்து, ஸ்டாப் சாங்ஷன் ஆகாததால், டாக்டர்கள் மற்றவர்கள் சேவை செய்யாமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதை தொடங்குவதற்கு ஸ்டாப் சாங்ஷன் உடனடியாகச் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். பிறகு, இரண்டுக்கும் சேர்த்து துணைக்கேள்விகள் போடலாம்.

[1979 மார்ச் 13

* வினா எண் 379—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மகப்பேறு பிரிவில் தேவையான அளவு கட்டில்களை அதிகரிக்க உத்தேசம் உண்டா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே போட்ட கேள்வியைத்தான் மீண்டும் போடுகிறேன். அங்கே கோவையில் ஒரு ஆக்சிடென்ட் யூனிட் ஏற்படுத்தப்பட்டு, 32 படுக்கைகளும் தயார் செய்யப்பட்டு, எக்ஸ்ரே மிஷின்கள் புதிதாக வாங்கி வைக்கப்பெற்று, டாக்டர்கள் இருந்தும் ஸ்டாப்கள் இல்லாததால் வேலை செய்யாமல் இருக்கிற நிலையை மாற்றி உடனடியாக அங்கே வேலை துவங்க ஸ்டாப் சாங்ஷன் செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 10.00)

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தலைக் காயங்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்க விசேஷ பிரிவு எதுவும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பொதுவாக விபத்துக்களில் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க 30 படுக்கைகள் வசதி கொண்ட விபத்து சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைக் காயங்கள் உட்பட இதில் அடங்கும். இந்த விபத்துப் பிரிவில் நியமிக்கப்படும் வல்லுநர்கள், அவர்கள் பொதுவாக பட்ட மேல்படிப்புப் படிக்கும்போதே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கவும் போதிய பயிற்சி பெறுகின்றார்கள். ஆகவே, அங்கே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஆதார வசதிகள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறதே தவிர, வேறு குறைபாடு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும்போது அவரது பேரவைச் செயலர் பதிலளிப்பது குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் இருக்கும்போது அவருடைய செயலாளர் பதில் சொல்லலாமா? அப்படிப் பதில் சொல்ல விதி இருக்கிறதா?



1979 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்லலாம். இரண்டுபேரில் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். பதில் அளிக்கின்ற உரிமை அமைச்சர்களின் பேரவைச் செயலர்களுக்கு இருக்கிறது. அதற்கு விதியும் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : விதி எங்கே இருக்கிறது? ஏற்கெனவே இருக்கின்ற நம்முடைய ரூலில் அப்படி கிடையாது. ரூல் இருக்கிறது என்றால் எப்போது திருத்தினீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Rule 2 (m); "Minister" includes any Deputy Minister or Parliamentary Secretary to whom a Minister may delegate his functions" என்று இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் பார்லிமென்ட் விதியைப் படிக்கிறீர்கள்; நம்முடைய விதியில் எங்கே இருக்கிறது? நம்முடைய விதியை இன்னும் திருத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பேரவை விதிகள்தான்.

•

### (3) தகவல் கோரல்

#### (அ) துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிப்பது குறித்து.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : சட்டமன்றத்தில் கேள்வி நேரம் மிக முக்கியமான ஒன்று. முக்கியமான கேள்விகளில் கூட எங்களுக்கு கேள்வி கேட்க உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் கேட்கும்போது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கேள்வியில் துணைக்கேள்விக்கு நீங்கள் என்னுடைய கவனத்தை ஈர்க்கவில்லை. என்னுடைய கவனம் ஈர்க்கப்பட்டிருந்தால் நிச்சயமாக உங்களுக்கு அனுமதி அளித்திருப்பேன். வினாக்கள்-விடைகள் பகுதிக்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒரு மணி நேரம் தான். அதற்குள் நான் கேள்விகளை முடிக்க வேண்டும், சரியாக 10.00 மணி ஆகிவிட்டதால் நான் அடுத்த நிகழ்ச்சிக்கு வந்துவிட்டேன். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த கேள்வி நேரத்தில்தான் மக்களுடைய முக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கிறது. அதனால்தான் அத்தனை அங்கத்தினர்களும் இங்கே இருக்கிறார்கள். முக்கியமான கேள்விகளுக்கு, நேரம் இல்லாவிட்டாலும், தங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இதற்கு முன்னால் அனுமதி அளித்திருக்கிறீர்கள். தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. தயவுசெய்து இந்தக் குறிப்பிட்ட கேள்வியில் இன்னும் சில துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னால் இருந்த வழக்கத்தை நான் மாற்றியிருக்கிறேன். சரியாக 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்துவிட்டு, மீதி கேள்விகள் இருந்தால் அதற்கான பதிலை அவைக் குறிப்பில் அச்சிட்டுக் கொள்ளும் முறையை இப்போது கையாண்டு வருகிறேன். கடந்த சில நாட்களாக அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கியமான கேள்வி என்று நீங்கள் கருதி, என்னுடைய கவனத்தை உரிய நேரத்தில் ஈர்த்திருந்தால் நிச்சயமாக அனுமதி தந்திருப்பேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கடைசியாக நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில்கூட 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்து விடுவேன் என்று சொன்னீர்கள். அப்போது நாங்கள் முக்கியமான கேள்விகளாக இருந்தால் ஏற்கனவே உள்ள வழக்கத்தை கையாளலாம் என்று சொன்னோம். ஏற்கெனவே இருக்கிற வழக்கத்தின்படி 10 அல்லது 15 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுக்கலாம் என்று ஆலோசனை சொன்னோம். தாங்களும் அதைப் பரிசீலிக்கலாம் என்று சொன்னீர்கள். ஆகவே, அந்த வகையில் தங்களுடைய தீர்ப்பை சற்றுத் தளர்த்தி, வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : என்னைப்போன்ற புதிய அங்கத்தினர்களுக்கு துணைக் கேள்விகள் கேட்கப் போதுமான வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். என்னுடைய கவனத்தை சரியான முறையில் ஈர்த்திருந்தால் துணைக் கேள்விக்கு வாய்ப்பு அளித்திருப்பேன். இனிமேல் ஏற்கெனவே இருந்த வழக்கத்தின்படி, தேவைப்பட்டால் 5 அல்லது 10 நிமிடங்கள் நீட்டித்துக் கொள்கிறேன். இப்போது வேறு நிகழ்ச்சிக்கு வந்துவிட்டதால் நாளையிலிருந்து அந்த முறையைக் கடைப்பிடிக்கிறேன்.

## (ஆ) விவசாயிகளுக்கு மின்—இணைப்புத் துண்டிப்பு குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் மின் துண்டிப்பை எதிர்த்து நாங்கள் எல்லாம் எங்கள் கட்சியின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், காங்கிரஸ் கட்சியினரும் வெளிநடப்பு செய்தோம். இப்போது சேலம் மாவட்டத்தில் பலபடியும் மின் துண்டிப்பை எதிர்த்து, பலர் கைதாகி இருக்கிறார்கள். ஆர்பாட்டங்கள், கிளர்ச்சிகள் அங்கே தொடர்ந்து நடைபெறுகின்றன. அரசு சலுகை அறிவித்து இருக்கிறது. 3 வருஷ தவணைகளை 3 வருஷங்களில் கட்டலமே என்று அறிவித்தும், இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னால



பல்வேறு இடங்களிலே மின் துண்டிப்பு நடைபெற்று வருகிறது. இது அரசுக்குத்தெரியாதா?அரசாங்கம் சொன்ன உடனே கட்டவேண்டும் என்று சொல்லி இப்படி மின்சாரத்தைத் துண்டித்துவிட்டார்கள். மேலும் துண்டித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தினேன். உயர்மட்டக்குழு வேறு நடந்துகொண்டிருக்கிறது. அது பத்து, பதினைந்து, நாட்களிலே முடிந்துவிடும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் இவ்வாறு அறிவித்த காரணத்தால் அறிவிக்கப்பட்ட சலுகைகளின்படி கட்டுவதற்குக் கூட நேரம் இல்லாத அளவில் இருக்கின்றபோது மின்சாரத்தைத் துண்டித்ததால் மேலும் பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மிகப் பதட்டமான இந்தச் சூழ்நிலை குறித்து விவாதிப்பதற்கு நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கே இந்தப் பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு, அதை எடுத்துக் கொள்ளாத நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தனர். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளிநடப்பு செய்தனர். 'அதை இன்று எடுத்துக்கொள்ள முடியாது, நாளை எடுத்துக்கொள்ளலாம்', என்று நான் சொல்லியும் நீங்கள் வெளி நடப்பு செய்தீர்கள். ஆகவே இன்றைக்கு இதனை எடுத்துக் கொள்ள இயலாது. வேண்டுமானால் அமைச்சரவர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால் சொல்லட்டும்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, நேற்றைக்கு இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்கப் பட்டபோது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் தான் இதனை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். தாங்களும் அவ்வாறுதான் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் நான் இதுபற்றிச் சொன்னபோது, அதாவது நேரம் இல்லாத காரணத்தால் இதனை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னதற்கு திரு அழகர்சாமி அவர்கள் அதனை இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி அதைப்பற்றிய விளக்கத்தையும் தந்துவிட்டு வெளி நடப்பு செய்தார்கள். மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் அப்போது வெளி நடப்பு செய்தார்கள். ஆகவே அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில் நாங்கள் வெளி நடப்புச் செய்யவில்லை. அதுபற்றிப் பேசப்படும்போ

[திரு. என். சங்கரய்யா] [1979 மார்ச் 13

நாங்கள் இங்கே இருந்தோம். ஆகவே டெக்னிகலாகப் பார்த்தால் கூட எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் கொடுத்திருந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் தனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தாங்கள் அறிவித்ததைப் போல இந்தப்பிரச்சினை எழுப்பப்பட்டபோது ஒரு சில எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்திருந்தாலும் அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். இதனை ஒரு முன் உதாரணமாக தம்முடைய சட்டமன்றப் பேரவையில் ஆக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று தங்களின் மேலான கனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு முறை தள்ளி விடப்பட்டு விட்டது. ஆகவே வேண்டுமானால் விதி 82-ன் கீழ் அறிக்கை தரலாம்; (கூச்சல் குழப்பம்) சரி இன்றைக்கு வைத்துக் கொள்வோம்.

திரு. என். கிட்டப்பா : தலலவரவர்களே, இதனை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் இன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று சொல்லிவிட்டேனே.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### விவசாயிகளுக்கு மின்—இணைப்புச் சலுகைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9. 3. 79 அன்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக அறிவித்தது 8—3—1979 தேதிய சர்வகட்சிக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்கு முரணாக உள்ளதால் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான மற்றும் பதட்ட நிலை பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டு திரு. சோ. அழகர்சாமி, திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி, திரு. செ. சிவசாமி, திரு. பி.ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. என். வரதராஜன், திரு. ரா. கிருஷ்ணன் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. நா. சுந்தரராஜ், திரு. செ. சதாசிவம், திரு. தெ. இரா. இராஜாராம் நாயுடு, திரு. கே. கந்தசாமி, திரு. கெ. சொக்கலிங்கம், திரு. ஆறுமுகம், திரு. ரா. மார்க்கபந்வ திரு. ப. சந்திரன், திரு. பெ. சு. திருவேங்கடம்,



1979 மார்ச் 13] [பேரவைத் தலைவர்]

திரு. புலவர் கா. கோவிந்தன், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக இதற்கு முன்னால் ஏற்கனவே கிளப்பப் பட்டு, 7ம் தேதி அன்று கிளப்பப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எட்டுப் பேர்கள் பேச இருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப் பிரச்சினை பற்றி விரிவாகத் தெரிந்திருக்கிறது இந்த அவை. வேறு மசோதாக்களும் இருப்பதால் உறுப்பினர்களை என்னுடன் ஒத்துழைக்கும்படி கோருகிறேன். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : ஒத்துழைப்பது மட்டுமல்ல. பல பேர்கள் பேசவேண்டியிருக்கிறது என்பது மட்டுமல்ல. இது பல லட்சக்கணக்கான விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயம். எதிர்க் கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும், விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து பேசும்போது இருந்த உணர்வுகளுக்கு மாறாக இருக்கிறது. தம்ழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பூராவும் பலவிதமான நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால், அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மீறப்பட்டிருப்பதால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் பூராவும் நிறைவேற்றப்படாததால், சென்ற ஆண்டு ஜூன் மாதம் விவசாயப் பிரதிநிதிகளுடன் பேசி ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு மாறாக, அதைச் சரியாக அரசாங்கம் அமல்படுத்த தவறியதால், அந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு பண்டங்கள், பாத்திரங்கள், ஆடுமாடுகள், பம்ப் செட்டுகள் இவற்றை ஜப்தி செய்திருக்கிற காரணத்தால் ஆத்திரம் ஏற்பட்டு அரசாங்கத்தை எதிர்த்து வரி கட்டுகிறவர்கள் கூட வரி கட்டாமல் நிறுத்திவிட்டார்கள். இப்போது அதிகப்படியாக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

போன ஜூனில் மின்கட்டணம் 12 பைசா, 14 பைசா என்று ஒத்துக்கொண்டோம். அதற்கு மேலும் சில கட்டணங்கள் கட்ட வேண்டிய நிலையில் விவசாயப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். ஹார்ஸ் பவருக்கு இவ்வளவு என்று கட்டணம் விதிக்கப்படுகிறது. மூன்று எச்.பி.க்கு ரூ.4, ஐந்து எச்.பி.க்கு ரூ.5 என்று கட்ட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதோடு மீட்டருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4 கட்ட வேண்டியிருக்கிறது. பத்து எச்.பி.யாக இருந்தாலும் சரி அல்லது மூன்று எச்.பி.யாக இருந்தாலும் சரி, நூறு யூனிட்கள் உபயோகித்தாலும் சரி அல்லது ஆயிரம் யூனிட்கள் உபயோகித்தாலும் சரி ஒரே மாதிரிக் கட்டவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதிதாக ஏதாவது சொல்லவேண்டும் என்றால் சொல்லுங்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: சிறிய விவசாயிகளுக்கு, நூறு யூனிட்கள் உபயோகிப்பவர்களுக்கு 25 பைசா, பெரிய விவசாயிகளுக்கு 15 பைசா என்ற நிலையிருக்கிறது. பூச்சிகளை விரட்ட விளக்குப் பொருத்தி வைத்து லைட் போட்டால் ரூ. 1·35 ஆக இப்படிப் பல கட்டணங்களை விவசாயிகள் கட்ட வேண்டியிருக்கிறது. விவசாயிகள் உயர்மட்டக் குழு சீக்கிரத்தில் தனது அறிக்கையைத் தர இருக்கிறது. ஒரு மாத காலத்திற்குள் கொடுத்துவிடுவார்கள். எனவே அந்தக் குழுவின் அறிக்கை வருவதுவரையில் மின் துண்டிப்புக் கூடாது என்று அனைவரும் சொன்னோம். ஆனால் மின் இணைப்புத் துண்டிப்பதன் காரணமாக இன்றைக்கு சேலம், கோவை மாவட்டங்களில் பெரிய கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று உண்ணாவிரதமிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரிய கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எங்கெங்கு மின்சாரத் துண்டிப்பு செய்திருக்கிறார்களோ அங்கெல்லாம் மீண்டும் மின் இணைப்புக் கொடுத்து, உயர்மட்டக் குழுவின் அறிக்கை வருவது வரை மின் துண்டிப்புச் செய்யக் கூடாது—இன்று மின் துண்டிப்பின் காரணமாக மகசூல் கிடைக்காது, சாவியாகிறது—இன்று வற்புறுத்துவதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே பேசியதைப் பேசாமல் சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இது அரசாட்சிக்கு இப்போதுள்ள சிக்கலான நிலையில் வழி கொண்டுபோவதற்காக உள்ள தீர்மானம் என்றுநான் நான் இத்தீர்மானத்தைப் பார்க்கிறேன். ஆக, இந்த முக்கியமான பிரச்னை மீது தமிழ்நாட்டில் ஒரு கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. சர்வக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைவரும் ஒரளிற்கு இன்றைக்கு நிலைமையைச் சமாளிப்பதற்காக மின் இணைப்புத் துண்டிப்பு வேண்டாமென்று கேட்டுக்கொண்டோம். அதற்குப் பின்னால் அமைச்சர் அவர்கள் இவ்வாறு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். மூன்று பிரச்னைகளை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கட்டண மாறுதல் வேண்டாம் ஏற்கனவே முடிவு செய்ததே இருக்கட்டும். இன்று விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். மூன்று ஹார்ஸ் பவர் மோட்டார் இருந்தால் ரூ. 4 கட்டவேண்டும்மாதம் ஒன்றுக்கு பிக்ஸ்ட் ரேட் ரூ.3-75 கட்டவேண்டும். ஆக, ரூ. 7.75 கட்டவேண்டு 100 யூனிட் செலவழித்திருந்தால் ரூ.14 கட்டவேண்டும். ஆகவே இது ஒரு பெரிய தண்டனையாக இருக்கிறது என்று கருதுகிறார்கள். அத்துடன் விவசாயத்துக்காக விளக்குகளை உபயோகப்படுத்தும்





போது அதற்கு 35 பைசா கட்டவேண்டியிருக்கிறது. இதற்கும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்குள்ள கட்டணமே வசூலிக்கவேண்டும். மேலும் 1977 ஆம் ஆண்டு இந்த உச்ச மட்டக் குழு அமைக்கப்பட்டது. இதற்கு முன்னால் முன்னுரிமை கொடுத்து 14,12 பைசா என்று வசூலிப்பதை அமல் நடத்தினார்கள்.

இது போன்ற சலுகை எல்லா கட்டணங்களுக்கும் இருக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்கிறார்கள். இப்போது அரசு ஒரு மாதக் கட்டணத்தை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்று கேட்கிறது. அதைப்போன்று கேட்கின்ற நேரத்தில் மேலும் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் மின் துண்டிப்பைச் செய்வது விவசாயிகளுக்கு ஆத்திரமூட்டுவதாக இருக்கிறது. மேலும் ரீ-கனக்ஷனுக்காக மூன்று ஆண்டுகளாகக் கட்டணம் செலுத்தாதவர்கள் அவர்களுக்கு போதிய விளைச்சல் இல்லை. இதன் காரணமாக, கடன் பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக கட்டணம் செலுத்தவில்லை, இந்த நிலையில் இப்போது போய் மின்துண்டிப்பை செய்வது விவசாயிகளை ஆத்திரமூட்டுகின்ற நிலையாகும். மேலும் இப்போது உடனடியாக பழைய பாக்கியையும் சேர்த்துக் கட்டவேண்டும் என்று சொன்னால் அது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே முக்கியமாக மின் துண்டிப்புக் கூடாது. அடுத்து ரீ-கனக்ஷனுக்காக கட்டணம் வாங்கக் கூடாது, இந்த இரண்டு சலுகைகளையும் உடனடியாகக் கொடுக்க வேண்டும். அத்துடன் உச்ச மட்டக் குழுவுக்கு ஒரு மாத நீட்டிப்பு கொடுத்து, இந்தச் சலுகைகளைப்பற்றியெல்லாம் பேசித் தீர்க்கலாம். இந்த சலுகைகளை எல்லாம் அளித்து விட்டுப் பின்னால் மின் கட்டணத்தைக் கட்டவேண்டும் என்று சொல்வதாக இருந்தால் விவசாயிகள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தயாராக இருப்பார்கள். இந்த நிலையில் இதைப்பற்றி விரிவாகப் பரிசிலனை செய்வதற்காக இந்தத் தீர்மானத்தின் மீது விவாதிக்க வேண்டும். மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்ற என்பதை வற்புறுத்துகிறேன்.

• திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் 82-து விதியின் கீழ் கொடுத்த அறிக்கை இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மின் கட்டணத்தை வசூலிக்கின்ற நேரத்தில் தமிழகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலுள்ள விவசாயிகளும் ஒரு அதிர்ச்சியான நிலையில் இன்று அவர்களுடைய எதிர்ப்பைநி தெரிவிக்கின்றந் லையில் அர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மின்கட்டணம் பற்றி முன்பு பேசிய நேரத்திலும் இந்த மின்கட்டணத்தைக் குறைக்கின்ற காலத்திலேயும் இந்த மின் கட்டண பில்லில் போடக்கூடிய பல்வேறு பிரச்னைகளைப்பற்றிப் பேசியிருக்கிறோம். விவசாயிகள் சங்கத் தலைவர்கள் கூறுகின்ற கருத்துக்களை எல்லாம் அப்பேசாச்

வலியுறுத்தியிருக்கின்றார்கள். மீட்டர் வாடகை என்று வசூலிக்கின்ற தொகை, சர் சார்ஜ், அத்துடன் லைட் போட்டிருந்தால் அதற்கு கட்டணம், இப்படிப் பல்வேறு வகையான கட்டணம் பில்களில் போடுவதின் காரணமாக, விவசாயிகள் அதிகமான கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் வேறுபாடு இருக்கின்ற சூழ்நிலை ஏற்படுவதின் காரணமாக இவைகள் எல்லாம் மறு பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கைகளில் பிரதிபலிக்கின்றன. அமைச்சர் அவர்கள் சமீபத்தில் சட்டமன்றத்தில் கூறுகின்ற நேரத்தில் தொழிற் சாலைகளுக்கு மின்கட்டண பாக்கிக்காக டிஸ்கனக்ட் செய்தோமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் கூச்சல் போட மாட்டார்களா என்று கேட்டார்கள். 5000 தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய சில தொழிற்சாலைகளில் சுமார் 20 கோடி ரூபாய் அளவுக்குப் பாக்கியிருக்கிறது என்பதையும் நாம் புள்ளிவிவரமாகக் காண்கின்றோம். ஆனால் இன்றைக்கு ஒரு கோடி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக 7 கோடி ரூபாய் அளவுக்கு மட்டும் பம்பு செட்டுகள் மூலம் மின்சார கட்டணம் பாக்கியிருக்கின்றது. அரசின் இந்த எண்ணத்தை முறியடிக்க விவசாயிகளின் இயக்கம் வலுவடைந்து வருகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் உயர் மட்ட குழுவின் பரிந்துரைகள் வருகின்ற நேரத்தில், இந்த மின்சாரக் கட்டணத்தை எல்லாம் அரசு ஆராய்ந்து அதற்கு ஒரு நல்லதொரு முடிவு எடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு மின்சாரத்தைத் துண்டிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். மேலும் தவறுதல் வட்டியாக ஒரு ரூபாய்க்கு இரண்டு பைசாவாக விதிக்கப்படுகிறது. இவைகளை எல்லாம் மனதில்கொண்டு இதற்கு ஒரு வழிவகை செய்யவேண்டுமானால் விவசாயிகளுடைய பிரச்னைபற்றி நீண்டதோர் விவாதம் நடத்த வேண்டும். அதற்காக சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கந்தசாமி. இருக்கையில் இல்லை. கா. புலவர் கோவிந்தன்,

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு விவசாயிகள் தாங்கள் பயிரிட்டு, பயிரிட்டுக் கடனாளியாகக்கூடிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்ற துயரமான நிலையில், தங்களுக்குச் சில சலுகைகள் வேண்டுமென்று பொதுவாக இந்த அரசுக்குக் கோரிக்கை வைத்து போராடிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அறிந்து, அதை நிறைவேற்றி வைக்கின்ற வகையில் ஒரு உயர்



மட்டக் குழுவை அரசாங்கம் நியமித்தது. அந்த உயர்மட்டக் குழு தன்னுடைய ஆய்வுரையின் ஒரு பகுதியை அரசுக்கு அளித்து, இந்த அரசும், உயர்மட்டக் குழுவும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்கிடையில் தமிழ்நாட்டு விவசாயிகளுக்குக் கொடுத்துவந்த மின்சாரத்தைத் துண்டிக்கின்ற முயற்சியை அரசு மேற்கொண்டது. அதன் காரணமாக, தமிழகத்திலே ஒரு பெரிய கிளர்ச்சி எழ, அந்தக் கிளர்ச்சி தமிழ்நாடு சட்ட மன்றத்திலேயும் இடம்பெற்றதன் காரணமாக, கடந்த 8 ஆம் தேதியன்று அரசு, உயர்மட்டக் குழு, விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல், சட்டமன்றத்திலே உள்ள எல்லா எதிர்க் கட்சிகளையும், தமிழகத்திலே உருவாகியுள்ள சிறிய, பெரிய கட்சிகளிலே உள்ள அத்தனை பேரையும் கொண்ட ஆலோசனைக்கு ஏற்பாடு செய்தது அரசு. அந்தக் கூட்டத்தில் தொடக்க நேரத்திலே நான்கைந்து மாதங்களுக்கு முன் இந்த அரசுக்கும், உயர்மட்டக் குழுவுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக, கலந்துகொண்ட அரசியல் கட்சிகளின் சார்பிலே, கலந்துகொண்ட அத்தனை உறுப்பினர்களும் தெரிவித்த கருத்து இதுதான். உயர்மட்டக் குழுவிற்கும், உங்களுக்கும் இடையே என்ன ஒப்பந்தம் ஏற்பட்டது என்று எங்களுக்குத் தெரியாது. உயர்மட்டக் குழுவின் இறுதி அறிக்கை இன்னும் 15 நாட்களுக்குள் வருமென்று தெரிவிக்கப்படுகிறது. அந்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு, இப்போது கூட்டியுள்ளது போல், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியவர்கள் கொண்ட ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அதிலே ஒரு முடிவு எடுக்கின்ற வரையில், தமிழகத்திலே இப்படி மின்சாரத்தைத் துண்டிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்ட அத்தனை அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்து இதுதான்.

அப்போது முதலமைச்சர் அவர்கள் நாளை அவையிலே ஒரு அறிக்கை அளிப்பதாகச் சொன்னார்கள். அப்போது நாங்கள் சொன்னோம், இங்கே சட்டமன்றத்திலே உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் இடம் பெற்றிருக்கிறோம், எனவே, அந்த அறிக்கையை இங்கேயே அறிவிக்கலாம் என்றோம். அதற்கு அவர்கள், அது உரிமைப் பிரச்னையாக ஆகிவிடும் என்றார்கள். அனைத்துக் கட்சிகளின் சார்பிலே நாங்கள் சொல்கிறோம், அப்படி அவையிலே பிரச்னை எழுப்பவில்லை என்றும், இப்போதே அறிவிக்கலாம் என்றும் சொன்னோம். மறுநாள் இந்த அவையிலே அறிக்கை அளிப்பதாகச் சொன்னார்கள். அதன்படி இந்த அவையிலே அறிக்கையை அறிவித்தார்கள். அந்த அறிக்கையிலே, அங்கே எடுத்துப் பேசப்படாத பொருள் பற்றியும் அறிவிப்பு வந்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள், அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்ட அரசியல் கட்சிகள் எல்லாம் அரசு வெளியிட்டுள்ள அந்த அறிக்கைக்கு ஒப்புதல்

அளித்ததாக ஒரு எண்ணம் வரக்கூடாது. ஆனால், அப்படி ஒரு எண்ணம் வரக்கூடிய அளவிற்கு இந்த அறிக்கை வந்திருக்கிறது. ஆகவே, இந்த அரசு எல்லா அரசியல் கட்சிகளையும் கலந்து கொண்டு ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று வந்தாலும், அந்த அரசியல் கட்சிகளின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இங்கே தெளிவாக்க வேண்டிய நிலையிலே நாங்கள் இருக்கிறோம்.

விவசாயிகளுக்கு 12 காசு 14 காசு என்றெல்லாம் சொல்லப்படுகிறது. சிறிய விவசாயி 12 காசு கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. என்னிடம் ஒரு கார்டு உள்ளது. அந்த சிறிய விவசாயி 38 யூனிட்டுகள் உபயோகித்தற்கு, பில் ரூ.13-55 என்று வந்திருக்கிறது. அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு யூனிட்டுக்கு 35 பைசா என்றாகிறது. 12 பைசா என்பது இல்லை. உண்மையிலே 35 பைசா கட்டக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது. அப்போது இந்த விவசாயி எவ்வளவு வருத்தப்படுவான் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த 'பில்' எப்படி போட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. 'ராங்' பில்லா என்பதை அறிய விரும்புகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : சரியான பில்தான். பணம் கட்டாத பில் அல்ல. சென்ற மாதம் பணம் கட்டிவிட்ட பில் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் யூனிட்டுக்கு 14 காசை 12 காசு ஆக்குங்கள் என்றும், மீட்டர் வாடகையை 4 ரூபாய் என்று இருப்பதை 2 ரூபாய் என்று ஆக்குங்கள் என்றும் போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் போராட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று எண்ணிப்பார்த்தால் அணைக்கட்டுப் பாசனத்தில் விவசாயி பயிரிடும்போது ஒரு ஏக்கர் நெல் பயிருக்கு ஒரு போகத்திற்கு 40 ரூபாய்க்கு மேல் தண்ணீர் தீர்வை கட்டுவதில்லை. ஆனால் ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு போகம் நெல் பயிரை மின்சார மோட்டார் வைத்துப் பயிர் செய்தால் ஏறத்தாழ 120 ரூபாய் மின்சாரக் கட்டணமாகக் கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏறத்தாழ 80 ரூபாய் அதிகமாக மின் மோட்டார் வைத்துப் பயிர் செய்கிறவர்கள் கட்ட வேண்டியிருக்கிறது. நான் விவசாயப் போராட்டத்திற்குத் தலைமை வகித்திருந்தால் மின்சார மோட்டார் வைத்துப் பயிரிடுகிறவர்களுக்கும் யூனிட் அளவில் கட்டணத்தைப் போடாமல் அணைக்கட்டுப் பாசனத்திற்கு வசூலிக்கப்படுகிற ஏக்கர் 1-க்கு ஒரு போகத்திற்கு 40 ரூபாய் கட்டணத்தைத்தான் இதற்கும் விதிக்க வேண்டுமென்ற முறையில்தான் போராட்டத்தை நடத்துவேன்.

அனைத்துக் கட்சிகளும் மொத்தமாகக் கூடி, உயர்மட்டக் குழு அறிக்கை இறுதியாக வந்ததற்குப் பிறகு, இதுபற்றி முடிவு செய்யலாம் அதுவரை முன்பு இருந்தது போலவே நிலைமை



இருக்கவேண்டுமென்று கூறி இதுபோன்ற பிரச்னைகளை விவாதிப்பதற்காக அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாடு முழுவதும் விவசாயிகளுக்கு மின்இணைப்பு துண்டிக்கப் பட்டிருக்கும் காரணத்தால் விவசாய மக்கள் மத்தியில் பெரிய குழப்பம் விளைந்திருக்கிறது. மின் கட்டண பாக்கிகளை வசூலிப்பது பற்றி சென்ற ஆண்டே விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்டு இந்த அரசு பேச்சுவார்த்தை நடத்தியபோது அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிரதிநிதிகள் இந்த அரசு மின் கட்டண பாக்கியை தவணை முறையில் வசூலிக்கலாம் என்ற வகையிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள், தமிழகம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரணத்தால் உடன டியாக நடவடிக்கை எடுக்காமல் இப்போது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. விவசாயிகள் பிரச்னையை பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கத் தயாராக இல்லை.

எனவே, இந்தப் பிரச்னையைத் தெளிவாக ஆலோசிக்க வேண்டும். விவசாயிகள் பிரதிநிதிகள் என்பவர்கள் கோட்டையில் குளு குளு அறைக்குள் சென்றபோது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு வெளியே சென்று விவசாய மக்களிடத்தில் தவறான தகவல்களைக் கொடுத்து விவசாய மக்களைத் தூண்டுதலுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள், போராட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த மாதம் 8-ம் தேதி நடந்த கூட்டத்தில் தவறான முறையில் ஒத்துக்கொண்டு விட்டார்கள். தவறை ஒப்புக் கொண்டிருந்தால் இந்தப் பிரச்னைக்கு அன்றே தீர்வு கண்டிருக்கலாம். தங்கள் சுய கவுரவத்தை விடத் தயாராக இல்லாதவர்கள் விவசாயிகளுடைய நலனில் அக்கறை இல்லாது ஒத்துக் கொண்டு வெளியே தெரிவிக்க முடியாத வகையில் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஏற்கனவே விவசாயிகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கும் இடங்களில் உடனடியாக மின் இணைப்பு கொடுத்து ஒரு சுமுகமான நிலைமைக்கு வழிவகுக்கும் வகையில் இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிற்கு மிக முக்கியமான, ஜீவாதாரமான ஒரு பிரச்னையைப்பற்றித்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம். நம்முடைய ஒட்டுமொத்தமான பொருளாதாரமே இதிலே அடங்கியிருக்கிறது. கிராமப் பொருளாதாரம்தான் விவசாயப் பொருளாதாரம் என்பதுதான் நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரம் ஆகும். இந்த விஷயத்தில் ஜாக்கிரதை யாக அணுகுமுறைகளை அரசாங்கம்கையாள வேண்டும்

என்ற முறையிலே விளக்கங்களைச் சொல்வதற்குத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒன்று, விவசாயிகள் மின்கட்டணத்தை 2,3 ஆண்டுகளாகக் கட்டமுடியாத சூழ்நிலை நிலவி வந்தது. அது ஒரு உண்மை, அதனுடைய அடிப்படையிலே அரசாங்கம் மின் இணைப்பைத் துண்டித்தது. இந்த இரண்டு காரணங்களால் தான் சர்வ கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு கூட்டத்தை அரசு கூட்டியது. அந்தக் கூட்டத்திலே மின்சார இணைப்பைத் துண்டிப்பதற்கான காரண காரியங்களையெல்லாம் ஆராய்ந்து உடனடியாக அவர்களுக்கு மின் இணைப்பைத் தர வேண்டுமென்பதற்காகவும் அதே நேரத்திலே அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை எந்த வகையில் வசூலித்தால் அவர்களுக்குச் சாதகமாக இருக்கும், அவர்களுடைய பளு குறையும் என்பதை ஆராய்வதற்காகவும் அல்லது அதிலே ஒரு பங்கை விட்டுக் கொடுக்க முடியுமா, ரைட் ஆப் செய்ய முடியுமா என்பதை ஆராய்வதற்காகவுந் தான் அந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்திலே அந்த விளக்கங்களையெல்லாம் நாங்கள் எடுத்துச் சொல்லிவிட்டு வெளியே வரும்போது அரசாங்கம் நியாயமான முடிவை எடுக்கும், அதே நேரத்திலே துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பு மீண்டும் கொடுக்கப்படும் என்ற உணர்விலேதான் நாங்கள் எல்லாம் வெளியே வந்தோம். ஆனால், அதற்கு மாறாக மின்னிணைப்பு துண்டிக்கப்படுவதும், துண்டிக்கப்படும் மின்னிணைப்பு மீண்டும் கொடுக்கப்பட அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததும், மீண்டும் பணத்தை வசூலிக்க ஜப்திகள் தொடர்கின்றன. கெடுபிடிகள் நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதும் இதனால் பெரிய கொந்தளிப்பிலே விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால் சர்வ கட்சிக் கூட்டமே அர்த்தமில்லாமல் போகிறது; இந்த அவையில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகச் சொல்லப்படுகிற விளக்கங்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்களும் அர்த்தம் இல்லாமல் போகிறது. ஆகவே அரசாங்கம் இதிலே தெளிவுகளிவோடு நடந்துகொள்ளவேண்டும், விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும், அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் அரசாங்கத்திற்கு வரவேண்டுமென்பது ஒரு பக்கம் உண்மையாக இருந்தாலும்கூட அந்தப் பணத்தை வசூலிப்பது நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தையே நிலைநிறுத்திவிடும் என்று ஆகுமானால், அதனால் அந்த 9 கோடி ரூபாய் நஷ்டமானாலும் பரவாயில்லை, அந்த 9 கோடிக்காக விவசாயிகளிடத்திலே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி நாட்டிலே பெரிய குழப்பத்தை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. அதனால் மேலும் மேலும் பல பிரச்சினைகள் உருவாகும் என்ற விளக்கங்களை எல்லாம் அரசாங்கத்திற்கு தந்து அதன்மூலம் ஒருநிவாரணம் தேட வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்து இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆர அமர ஆராய்ந்து முடிவெடுக்க மற்ற அலுவல்களையெல்லாம் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சம்பந்தமான இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நான் முதலில் சில விளக்கங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழக விவசாயிகள் பெரும்பாலானவர்கள் இத்தகைய போராட்டங்களிலே ஈடுபடுவது இல்லை, வரிகொடா இயக்கத்திலே ஈடுபடவில்லை, மின்சாரக் கட்டணம் கட்டுவதிலேயும் ஒழுங்காகத்தான் கட்டுகிறார்கள். உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான பாதகத்திற்கும் இது கொண்டு செல்லாது. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் தமிழ்நாட்டில் பாசன வசதி பெறுகிற நிலங்கள் அதன் மூலம் உணவு உற்பத்தி என்று வருகிறபோது, 3 வகையாக அவைகளைப் பிரிக்கலாம், 3 வகையும் சமமாகத் தான் இருக்கின்றன. ஒன்று ஆற்றுப்பாசனம், கால்வாய்ப் பாசனம், இன்னொரு வகை ஏரிப்பாசனம், மூன்றாவது, பம்பு செட்டுகள். மூன்றும் சமநிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. மூன்றில் ஒரு பகுதிதான் மின்சாரத்தைப் பெறுகிறது. மூன்றில் ஒரு பகுதி என்று சொல்கிறபோது சுமார் 8 அல்லது 9 லட்சம் பம்புசெட்டுகள் தான் மின்சாரத்தால் இயங்குகின்றன. இந்த 9 லட்சம் பம்புசெட்டுகளில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாதவர்கள், ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் லட்சம் பேர்கள்தான். விவசாயம் என்று வருகிறபோது அல்லது விவசாயிகள் என்று நாம் பேசுகின்றபொழுது, தமிழகத்திலே இந்த வரிகொடா இயக்கம் என்றோ, மின் கட்டணத்தைச் செலுத்தமாட்டோம் என்றோ சொல்கிறவர்களுடைய தொகை சிறுபான்மை தொகை, ஆகவே இந்தப் பிரச்சினை ஒட்டுமொத்தமாக விவசாயிகள் பிரச்சினை அல்ல, தமிழகத்திலே உள்ள மக்களைப் பாதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒன்றே முக்கால் இலட்சம் பம்பு செட்டுகளிலே கூட மின் கட்டணம் செலுத்தாதவர்கள் என்ற அந்த வகையிலேயும்கூட இப்பொழுது மின் கட்டணத்தை செலுத்த ஆரம்பித்திருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்பொழுது சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளையும் கூட்டி, எங்களோடு பேசி, அதற்குப் பிறகும் மின் துண்டிப்பு தொடர்ந்து நடைபெறுமேயானால் இந்த சர்வ கட்சிக் கூட்டத்திற்கு அர்த்தம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அர்த்தம் இருக்கிறது. எப்படி அர்த்தம் இருக்கிறது என்றால், இரண்டாண்டுகளாக மூன்றாண்டுகளாக மின் கட்டணத்தைச் செலுத்தவில்லை, ஆகவே ஒட்டுமொத்தமாக அவர்கள் செலுத்த வேண்டி இருக்கிறது, ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய், மூன்றாயிரம் ரூபாய் என்று செலுத்த வேண்டி வருகிறது. சர்வ கட்சித் தலைவர்கள் கூடிய அந்தக் கூட்டத்தில் நாம் என்ன முடிவெடுத்தோம் என்றால், அந்தக் கட்டணப் பளு, 'பர்டன் ஆஃப் அரியர்ஸ்', அதைத் தாங்க முடியாது, ஆகையினால் அதை எளிதாக்கி அவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் சர்வ கட்சிக்

கூட்டத்தில் பேசப்பட்டது. அந்த அடிப்படையிலே நாம் எடுத்த இந்த அறிவிப்பை இந்த அவைக்குத் தந்து, இந்த மாதத்திற்குரிய கட்டணத்தைக் கட்டினால் போதும், 30 ரூபாய், 40 ரூபாய் என்று எவ்வளவு வருகிறதோ இந்த மாதத்திற்கு, அந்த பில் தொகையைக் கட்டினால் போதும், இதற்கு முன்னால் உள்ள பாக்கிகளை வருகின்ற ஏப்ரல் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு மாதத்திற்குரிய தொகையைத் தொடர்ந்து கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, பணத்தைக் கட்ட வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கிறது. இது சர்வ கட்சிக் கூட்டத்தில் பேசிய பேச்சின் விளைவு. ஆகவே அது அர்த்தமுள்ள சர்வ கட்சிக் கூட்டம்தான் என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆனால், இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். சரி, கொடுக்கின்றவர்களுக்கு ஒரு வாய்ப்பு தர வேண்டாமா, தொடர்ந்து மின் துண்டிப்பை நடத்திக்கொண்டு போகின்றீர்களே, நியாயமா என்று கேட்கப்பட்டது. அந்த நியாயம் எங்களுக்கும் புரிகிறது. மின் துண்டிப்பு நடத்தப் பட்ட எண்ணிக்கை அதிகம் இல்லை. மேட்டூர் மின் திட்டத்தில் 255 பேர்களுக்கு மின் துண்டிப்புக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. நோட்டீஸ் அனுப்பிய உடனேகூட நம்முடைய விவசாயிகளில் 66 பேர்கள் பணத்தைக் கட்டி விட்டார்கள். ஆகவே, அவர்கள் யாரும் கட்டக்கூடாது என்ற கருத்திலே இல்லை. அவர்களே உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இருக்கிறார்கள், 255 பேர் இதுவரை கட்டாதவர்கள். அவர்களுக்கு மின் துண்டிப்பு செய்யப்படும் என்று நாம் அறிவித்தவுடன் 66 பேர் கட்டி விட்டார்கள். 187 பேர்களுக்குத்தான் நாம் அந்த மின் துண்டிப்பைச் செய்தோம். அப்படி மின் துண்டிப்பு செய்யப்பட்ட பிறகு மேலும் 9 பேர் பணம் கட்டினார்கள். அவர்களுக்கு சர்வீஸ் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டது. பைகாரா சிஸ்டத்திலே 250 பேர்களுக்கு நோட்டீஸ் தரப்பட்டது, எட்டு பேர்கள் பணம் கட்டினார்கள். 123 பேர்களுக்குத்தான் துண்டிக்கப்பட்டது. ஆகவே, இதுவரையிலும் மொத்தம் துண்டிக்கப்பட்டது 310 பேர்களுக்குத்தான். ஆனால் கட்டாதவர்கள் ஒன்றே முக்கால் இலட்சம் பேர்கள். ஆகவே, மின் துண்டிப்பு பலயிடங்களிலே நடைபெற்றுவிட்டது, விவசாயிகள் மத்தியிலே ஒரே கொந்தளிப்பு என்று கருதத் தேவையில்லை. (குறுக்கீடு). சேலம் மாவட்டத் திலே 187 பேர்கள் மேட்டூரிலே, பைகாராவிலே 123 பேர்கள். கோயம்புத்தூர் மாவட்டத்திலே. ஆகவே, பெரிய கொந்தளிப்பு என்ற முறையில் ஏற்பட்டது என்று கருதத் தேவையில்லை.

ஆனால் அதே நேரத்தில் இவ்வளவு சலுகைகளை நாம் அறிவித்திருக்கிறோம். அதோடு மட்டுமல்ல, இது அறுவடைக் காலம். அதுமட்டுமல்ல, விவசாயிகள் தங்களால் இயன்ற





ஒத்துழைப்பைத் தந்து நாம் டிஸ்கனெக்ட் செய்யப்போன பொழுது அவர்கள் பணம் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள், ஆகவே, இந்த வரிகொடா இயக்கம், மின்சாரக் கட்டணத்தைக் கட்டினால் ஊரிலே உள்ளே நுழைய விடமாட்டேன் என்று சொல்லும் இயக்கம் இவைகளுக்கு விவசாயிகள் மத்தியிலே இடமில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மின் கட்டணம் வசூலிப்பதை இந்த நேரத்தில் நடத்தலாமா என்ற கருத்தை அரசு தீவிரமாகப் பரிசீலித்தது. அதோடு மட்டுமல்ல, இவ்வளவு சலுகைகளை தந்திருக்கிறோம். இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களும் இந்த நேரத்தில் கட்ட முன் வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல, அறுவடை காலமாக இருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும் இங்கே குறிப்பிட்டார்கள் 15 நாட்களுக்கு இந்தப் பிரச்னை வேண்டாமென்று. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 15 நாட்களுக்கு அல்ல, மூன்று வாரங்களுக்கு—இன்றி லிருந்து ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதி வரையில், மூன்று வாரங் களுக்கு அறுவடைக்காலம் வரையில் நிச்சயமாக மின் துண்டிப்பு இராது என்ற செய்தியை என்னிடத்தில் தந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பணம் கட்டுவதிலேயும் சலுகை, மின் துண்டிப்பையும் இப்பொழுது நிறுத்தியிருக்கிறோம். இதைப் பயன்படுத்திக்கொண்டு பொறுப்புள்ள விவசாயிகள் நிச்சயமாக பணம் கட்டுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது.

மற்றபடி இந்த மீட்டர் வாடகையைப் பற்றியதாக இருந்தாலும் சரி, ஃபிக்செட் சார்ஜ் ஆனாலும் பேசிப்பேசித் தீர்ந்து போன பிரச்னை.

[முற்பகல் 10-40]

ஆகையினாலே, தீர்ந்து போன, ஏற்கனவே முடிவெடுத்த ஒரு பிரச்னையில் திரும்பத் திரும்ப நாம் பேசிக்கொண்டிருப்பது நல்லதல்ல. உங்களுக்கெல்லாம் தெரியும், மின்சார வாரியம் கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு கூடுதலாக நாம் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதேபோல், மற்ற, மற்ற இடங்களிலேயிருந்து மின்சாரம் வாங்க நாம் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஓரளவுக்கு அந்தச் சுமையை விவசாயிகள் தாங்கத்தான் வேண்டும். ஆகவே, இந்தச் சூழ் நிலையைக் கருதி நான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்வது, விவசாயச் சங்கத் தலைவர்களையும் அதேபோல் விவசாயிகளையும் கேட்டுக் கொள்வது, இந்த மின்சாரக் கட்டணத்தை எளிதாகக் கட்ட வாய்ப்பிருக்கிற காரணத்தால் தொடர்ந்து கட்ட வேண்டுமென்றும், அவர்களிடம் இந்த அரசு அதிக அக்கறை கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில், 3 வார காலத்திற்கு— இன்றிலிருந்து—நிச்சயமாக மின் துண்டிப்பு இராது என்பதைத்

தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மேலும் இதிலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்ற காரணத்தினால் இந்த அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : ஒரே ஒரு விளக்கம். ஏற்கனவே துண்டிக்கப்பட்டிருக்கிற 310-க்கும் திரும்ப இணைப்பு தரப்படுமா?

திரு. சோ. அழகர்சாமி : இப்பொழுது துண்டிக்கப் பட்டிருக்கிற இடங்களில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் தனியாகப் பேசுங்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானம். அமைச்சரது பதிலுக்குப் பிறகு விவாதம் வேண்டாம்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

## (5) அறிவிப்பு.

### விதி 82-ன் கீழ் அமைச்சரது அறிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதியின் கீழ் அளிக்கப்படவிருக்கிற அறிக்கை தயாராக இல்லாததால், அந்த அறிக்கை நாளை தரப்படும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, அறையிலே சொன்னீர்கள். நெசவாளர் சம்பந்தமாக எடுத்துக் கொள்கிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், அதை எடுத்துக் கொள்ள வேண்டும். பரமக்குடியிலும், கும்பக் கோணத்திலும், நெசவாளர்கள் கைதாகியிருப்பதால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னது உண்மை. அறிக்கை அமைச்சரிடம் முழுமையாக வராத காரணத்தினால், இன்றைக்கு விவரங்களை முழுமையாக சேகரித்து, நாளைக்கு அவசியம் தந்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நாளைக்கு அவசியம் எடுத்துக்கொள்ளப்படும்.





## (3.) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) உறுப்பினர்களின் அறிவிப்புகள் குறித்து

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, நான் 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் வரும், இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வரும். இதையே எடுத்துக்கொள்வதால், மற்ற நிகழ்ச்சிகளெல்லாம் தடைப்படுகின்றன.

திரு. நா. சுந்தரராஜ் : உண்ணாவிரதம் இருக்கிறார்கள் 10 நாட்களாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், உட்காருங்கள். அறிக்கை இன்னும் தயாராகவில்லை. வந்த பிறகு நான் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போலீசாரால் அவமானப் படுத்தப்பட்டார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை என் ஆய்விலே இருக்கிறது. எனக்கு அது தெரியும். ஆய்வு முடிந்த பிறகு தெரிவிப்பேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவமானப்படுத்தப்பட்டது சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அப்பிரச்னை பற்றி எழுப்பியதைத் தாங்கள் கேட்கவில்லையென்று கருதுகிறேன். இதே கேள்வியை அவர் கேட்டதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத்
தலைவரவர்களே, நான் 19—2—79-லே இரண்டு கவன
ஈர்ப்பு தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அதிலே ஒரு தீர்மானம்
குறித்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேச
வாய்ப்பிருக்கிறது என்று சொல்லப்பட்ட காரணத்தால் எடுத்துக்
கொள்ளப்படவில்லை. அதனை நானும் ஒத்துக்கொண்டேன்.
ஆனால் விஷக்காய்ச்சல் சம்பந்தமாக கொடுக்கப்பட்டிருந்த
மற்றொரு தீர்மானம் பற்றிக் கேட்டபோது அறைக்கு வா,
அறைக்கு வா என்றுதான் சொல்கிறார்களே தவிர இந்த
அவையில் ஏன் வைக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறைக்கு வா, அறைக்கு வா என்றெல்லாம் மரியாதை இல்லாமல் சொல்லி இருக்க மாட்டார்கள். நீங்கள் கொடுத்த தீர்மானத்திற்குரிய பதில் தயாரானதும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (6) கவன ஈர்ப்புகள்.

### (அ) நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்து.

திரு. கே. உச்சி : துணைத் தலைவரவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 4, 25 ஆகிய தேதிகளில் வீசிய புயலாலும் மழையின் காரணமாகவும் மற்றும் நிலச்சரிவினாலும் உயிர்கள், கால்நடைகள் இழப்பு மற்றும் விவசாய நிலங்கள் சேதம் அடைந்துள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) துணைத் தலைவர் அவர்களே, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், குறிப்பாக 4, 5 மற்றும் 24, 25 நாட்களில் பெய்த பெரு மழையின் காரணமாக வெள்ளமும் நிலச்சரிவுகளும் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டன.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் 98 பேர் உயிர் இழந்தனர். 811 கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. புயல் எச்சரிக்கைப் பற்றி விவரம் முன்னதாகவே கொடுக்கப்பட்டதால், இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தினால் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. ஆனால், கறவைப் பசுக்கள் 6 இழக்கப்பட்டன.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,941 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில், 130 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 545 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில் 75 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. மொத்தமாக 35 கிராமங்களைச் சார்ந்த 44,771 குடும்பங்களில் உள்ள 1,53,153 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,500 ஏக்கரில் இருந்த உருளைக்கிழங்குப் பயிர்களும், 1,500 ஏக்கர் காய்கறி பயிர்களும், மற்றும் 1,400 ஏக்கரில் இருந்த



பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. காய்கறி விதைகளும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இலவசமாக வழங்கப் பட்டுள்ளன.

மாநிலத்தில் பாதிக்கப்பட்ட சாலைகளை நடப்பாண்டில் (1978-79)-ல் செப்பனிட அரசு ரூ. 500 இலட்சங்கள் அனுமதித்துள்ளது. இவற்றில், நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப் பட்ட சாலைகளைச் செப்பனிட அனுமதிக்கப்பட்ட தொகையின் விவரங்களாவன :—

| | (ரூ. இலட்சங்கள்) |
|---|---|
| அரசுச் சாலைகள் | 70.00 |
| ஊராட்சி சாலைகள் | 15.00 |
| நகராட்சி சாலைகள் | 48.50 |
| மொத்தம் .. | 133.50 |

நீலகிரி மாவட்டத்தில் மழையாலும், வெள்ளத்தாலும் அநேக வீடுகள் பாதிக்கப்பட்டதாலும், அரசு ஊழியர் உட்பட குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தர வசதியுள்ளவர்கள் முன் வராததாலும், தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்திற்கு இது போன்றவர்கள் குடியிருக்க வீடுகள் கட்டுமாறு கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம், உதகமண்டலம், கூனூர், கூடலூர், கோதகிரி ஆகிய இடங்களில் வீடு கட்டும் திட்டங்கள் அதன் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது எனத் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ. 400/-க்கு அதிகமாகாத வகையில் முன்பணம் கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்பணத்தை 10 மாத தவணைகளாக வட்டியின்றி வசூலிக்கப்படும். இது தவிர, குளிர்கால கம்பளி ஆடைகள் வாங்க முன்பணம் ரூ. 300/- கொடுக்கப்பட்டுள்ளது. இதனை 20 மாதத் தவணைகளாக வசூலிக்கப்படும். இதற்கு வட்டி உண்டு. கட்டாய சேமிப்பு நிதியிலிருந்து (ADADA) பணத்தை வழங்கவும் உத்தரவிடப் பட்டுள்ளது. இச்சலுகைகள் நீலகிரி மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கும், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து நகர்ப்புறக் குழுக்கள் ஆகியவற்றில் ஆசிரியர்கள் உட்பட எல்லா பணியாளர்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

[திரு. பி. முசிரிபுத்தன்] [1979 மார்ச் 13

மற்ற தானியப் பயிர்களும், மழையினால் அடித்துச் செல்லப் பட்டும், அழுகியும் போயின. இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தால் 470 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமடைந்தன. மொத்தம் பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு ரூ. 375 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு முறை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட 7,836 பேர்கள், 28 நிவாரண முகாம்களில் தங்கினர். அவர்களுக்கு 1,05,390 உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. 4,552 பேர்களுக்குத் துணிகள் வழங்கப்பட்டன. 1,500 பேர்களுக்கு தலா 5 கிலோ அரிசியும், ½ லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப் பட்டன. குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும், முகாம்களில் பால் வழங்கப்பட்டது. பல சமூக நிறுவனங்களும், மற்றும் அறக்கட்டளை அமைப்புகளும் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தனர்.

காலரா தடுப்பு ஊசிகள் 1,93,849 என்ற எண்ணிக்கை யளவுக்குப் போடப்பட்டுள்ளன. 6,289 பேர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. ஈ தடுப்பு நடவடிக்கையாக, 1,600 மில்லி லிட்டர் ''நுவான்'' மருந்து தெளிக்கப்பட்டது.

இந்தியச் செஞ்சிலுவை சங்கம், சப்பானில் செய்த 150 கூடார அமைப்புகளை வழங்கியது. உதகமண்டலத்திலும், கூக்கல்துறையிலும் வீடிழந்து, தங்க இடமில்லாமல் இருந்தவர்கள் இக்கூடாரங்களில் தங்கினர். உதகமண்டலத்தில் மஞ்சன் கோரையில் 27 கூடாரங்களும், ஏரிச் சாலையில் 17 கூடாரங்களும் கூக்கல்துறையில் 42 கூடாரங்களும், ஆக மொத்தம், 86 கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

உழவர்களுக்கு நிவாரணம்—அரசு ஆணையை எதிர் பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவை என்று அறிவிக்கப்பட்ட இடங்களில், நிலவரி, உள்ளூர் செஸ், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் சேரவேண்டிய ஏனைய தொகைகள் வசூலிப்பதை நிறுத்திவைக்க ஆணைகள் பிறப்பித்துள்ளார். குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் தொகைகளை நடுக்காலக் கடனாக மாற்றவும், நடுக்காலக் கடன்களை தாமதமாகத் திருப்பிச் செலுத்துவதற்குமாக அணாவாரியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மணல் அடித்துப்போன நிலங்கள், மணலடித்துத் தூர்ந்து போன கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி, சிறு உழவர் களுக்கு அரசுச் செலவில் செய்து தரப்பட்டுள்ளது. பிறருக்கு, இது தொடர்பாக 50 சதவீத உதவித் தொகை ஏக்கருக்கு ரூபாய் 1,000/- உச்சவரம்புடன் வழங்கப்பட்டுள்ளது.

உருளைக் கிழங்கு விதைகள் விலையில் 25 சதவீத உதவி ஏக்கருக்கு ரூ. 250/- உச்சவரம்புடனும், ஒவ்வொரு உழவருக்கும் குத்தகைதாரருக்கும் ரூ. 1,000/-க்கு மேற்படாமலும்



1979 மார்ச் 13]

[முற்பகல் 10–50]

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சருடைய செயலர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் என்னென்ன பணிகள் செய்யப்பட்டு உள்ளன என்பதைப் பற்றி எல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள். இருப்பினும், முதலமைச்சர் அவர்கள் அங்கே சுற்றுப்பயணம் செய்தபோது அந்தப் பணிகள் எல்லாம் போர்க்கால வேகத்தில் நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் கிட்டத்தட்ட 4-5 மாதங்கள் ஆகியும் கூட அந்த நிவாரணப் பணிகள் மிகவும் மந்தமான நிலையில் நடந்து கொண்டு இருக்கின்றன. அதைத் துரிதப்படுத்த இந்த அரசு முன்வருமா? அடுத்து, அங்கே அனா வாரி சர்டிபிகேட் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செயலர் சொன்னார். அந்த அனாவாரி சர்டிபிகேட் என்றால் என்ன? அது யாரால் வழங்கப்படுகிறது, எதற்காக வழங்கப்படுகிறது என்பதை விளக்க வேண்டும். அங்கே வீடுகள் இழந்தவர்கள் ஜப்பான் நாட்டு உதவியுடன் அளித்த டென்ட்டுகளில் வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே பனிகாலம் முடிந்து, இப்போது மழை காலம் தொடங்க இருக்கிறது. பனிக்காலத்தில் அவர்கள் மிகுந்த வேதனையை அனுபவித்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அங்கே ஜப்பான் தர்ம ஸ்தாபனம் இனாமாக வீடு கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. அதற்கு அனுமதி கேட்க, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கவில்லை என்று தெரியவருகிறது. அதற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வதோடு, வீடு கட்டித்தர அரசு உடனடியாக முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிவாரணப் பணி என்பதற்கும் முற்போக்கு பணி என்பதற்கும் வித்தியாசம் உண்டு. நிவாரணப் பணி என்பது வெள்ளம், புயல் வருகிறபோது செய்யப் படும் பணிகளைக் குறிக்கும். அந்தப் பணிகள் செய்து முடிக்கப் பட்டு விட்டன. நிவாரணப் பணிகள் முடியவில்லை என்று உறுப்பினர் சொல்கிறார்கள். நிரந்தரப் பணிகள் எல்லாம் செய்வதற்கு அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அவைகள் நிறைவேற்றப்படும். அனாவாரி சர்டிபிகேட் என்றால் ஒரு நிலத்தில் விளைச்சல் எவ்வளவு என்று பார்க்கிறபோது குறித்த இடத்தில் வருவாய்த்துறை அதிகாரி சென்று அந்த இடத்தில் அறுவடை எவ்வளவு என்று பார்த்து, மகசூல் கணக்கிட்டு கொடுக்கும் அந்த கணக்கிடுவதற்குத்தான் அனாவாரி சர்ட்டிபிகேட் என்று பெயர். எப்படி கணக்கிடுகிறார்கள், எப்படி அதற்கு நிவாரணம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு போர்ட் ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கிறது. அதன்படி கொடுக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : அணா பைசா முறையில் இல்லாமல் அதை நயாபைசா முறையில் கொடுத்தால் என்ன ?

[1979 மார்ச் 13

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத்தலைவர் அவர்களே, அந்த அணாவரி சர்ட்டிபிகேட்டில் அணா பைசா தான் போட்டு இருக்கிறார்கள். அதிலே மாற்றம் என்பது உங்களுக்குத் தெரியும். அணா என்கிறபோது, நார்மல் விளைச்சல் 12 அணா என்று சொல்லப்படுகிறது. சில பேர் நார்மல் விளைச்சல் என்றால் 1½ அணா என்று தெரியாமல் கூட இருந்தார்கள். சில அதிகாரிகள் கூட இருந்தார்கள். நார்மல் விளைச்சல் என்பது 12 அணாதான். இதற்கு முன்னால் இருந்த அரசு இரண்டணா விளைச்சல் என்று சொன்னால் வரியை தள்ளுபடி செய்து கொடுத்துக்கொண்டு இருந்தது. திராவிட முன்னேற்றக்கழக அரசு வந்த பிறகு அதை 2½ அணாவோ, 3 அணாவோ என்று ஆக்கினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு அதை 6 அணா என்று ஆக்கியிருக்கிறது. 6 அணா என்றால் 50 சதவீதம் அதாவது 37 பைசா விளைச்சல் வந்தால், அதாவது 20 கலம் விளைகிற இடத்தில் 10 கலம் விளைச்சல் வந்தால், அல்லது குறைவாக வந்தால், நிலவரி, தண்ணீர்த் தீர்வை முதலியவை விளைச்சல் இல்லை என்று சொல்லி தள்ளுபடி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி: துணைத் தலைவரவர்களே, அங்கே வீடு இல்லாமல் இருப்பவர்களுக்கு சில தர்ம ஸ்தாபனங்கள் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அனுமதி கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியிருக்கிறார். இதுவரை அனுமதி வரவில்லை. ஆகவே, உடனடியாக அந்த அனுமதியை வழங்க நடவடிக்கைஎடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

## (ஆ) வெற்றிலைக் கொடிக்கால்களில் பரவும் கொடிய நோயைத் தடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், எம். அண்ணாமலை, நா. பழனிவேல், தே. ஞானசிகாமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ரா. கிருஷ்ணன்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, "தமிழகத்தில் குறிப்பாக திருநெல்வேலி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் வெற்றிலைக் கொடிக்கால்களில் கொடிய நோய் பரவியுள்ளதன் காரணமாக, வெற்றிலைப் பயிரிடும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்நோயை ஒழிக்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,123 ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்பட்டது. அதில் செங்கோட்டை வட்டத்திலுள்ள ஆயக்குடி கிராமத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலைக் கொடிக்கால் பயிர் 'ஸ்கேல்ஸ்' மற்றும் 'அபிட்ஸ்' என்ற பூச்சிகளால் தாக்கப்பட்டது. இதைத்தவிர திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆத்தூர் கிராமத்தில் உள்ள ஒரு ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் 'டவ்னி மில்டியூ' என்ற பூச்சியினால் தாக்கப்பட்டது. வேளாண்மைத் துறையினரால் உரிய நேரத்தில் பூச்சித் தடுப்பு முறைகள் எடுக்கப்பட்டு, வெற்றிலைக் கொடிக்கால் பூச்சிகளாலும் மற்றும் பயிர் நோய்களிலிருந்தும் தாக்கப்படுவதிலிருந்து காக்கப்பட்டது.

1978–79 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் 799 ஏக்கரில் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடப்பட்டது என்று கூறப்படுகிறது. மேலும் இந்தப் பகுதியில் இப்பயிர் பூச்சி மற்றும் பயிர் நோய்களாலும் தாக்கப்படவில்லை,

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில் பூச்சி தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா? அதோடு நிலத் தீர்வை போன்றவற்றை ரத்து செய்யவும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே விவசாயத் துறையின் மூலம் தகுந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வெற்றிலைக் கொடிக்கால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டு ஏதாவது சலுகை அளிக்க வேண்டியிருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

* திரு. எம். அண்ணாமலை: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி, தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடியில் நோய் ஏற்பட்டு, அந்த நோய்களைத் தடுக்க விவசாயத்துறையின் மூலம் மருந்து அடிக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மருந்து அடிக்கப்பட்டதா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அங்கே விவசாயிகளாகவே மருந்து அடித்தும், பூச்சிகள் அழியாமல் வெற்றிலைக் கொடிக்கால்தான் அழிந்துபோயிருக்கிறது. அடித்த மருந்து பூச்சிகளைக் கொல்லவில்லை. அதற்குக் காரணம் அடிக்கப்பட்ட மருந்து வீரியம் குன்றியதாக இருக்கிறது.

இந்த வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடியில் இரண்டு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. ஒன்று வெற்றிலை சாகுபடிக்கு மழைக் காலத்திலும் ஆபத்து, வறட்சிக்காலத்திலும் ஆபத்து இருக்கிறது. வருஷத்தில் இந்த இரண்டு ஆபத்துக்

களைக் கடந்து சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களைத் தவிர வேறு சில பகுதிகளிலும் வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, பூச்சிகளைக் கொல்ல அடிக்கக்கூடிய மருந்துகள் வீரியம் குன்றியிருப்பதால் நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லட்டும்.

திரு. எம். அண்ணாமலை : எனவே அடிக்கக்கூடிய மருந்து வீரியம் இல்லாமல இருப்பதால். அதை பரிசீலித்து இனிமேல் அடிக்கும் மருந்து நல்ல வீரியம் உள்ளதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படுமா ? அதோடு ஏற்கெனவே நேர்ந்துள்ள பெரும் இழப்புகளால் பெரும் கஷ்டத்தில் இருக்கிற சாகுபடியாளர்களால் மேலும் மருந்து வாங்க சக்தி இல்லாமல் இருப்பதால், இலவசமாக மருந்து அடிக்க, நோயைப்போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, மருந்துகள் சரியான முறையில் வீரியம் குன்றாமல் இருக்கின்றனவா என்பதை ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னால்தான் அந்த மருந்துகள் டெப்போக்கள் மூலம் விற்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீரியம் குன்றிய மருந்துகளை எந்த டெப்போவிலாவது விற்றால், அதுபற்றி அரசுக்கு உடனடியாகத் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

நெல்லை, தென்னாற்காடு மாவட்டங்கள் தவிர வேறு சில மாவட்டங்களிலும் இதைப்போன்ற பயிர் பூச்சிகள் வெற்றிலைக் கொடிக்கால்களை தாக்கியிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் எல்லாம் வேளாண்மைத் துறையினர் அடிக்கடி பார்வையிட்டு, நடவடிக்கை மேற்கொண்டதால் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேலும் இதுபோன்ற நோய்கள் எங்காவது தோன்றுவதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால் மீண்டும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

[முற்பகல் 11-00]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வெற்றிலைக் கொடிக்கால் திருநெல்வேலி மாவட்டத்திலே பல பகுதிகளிலே உற்பத்தி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட நோய் வெற்றிலைக் கொடிக்காலில் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருகிறார்கள். இதனை அமைச்சரவர்களே ஒப்புக் கொண்டார்கள். ஆகவே இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற



வகையில் அங்கே ஒரு துணை இயக்குநரை நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ? இந்த வெற்றிலைக் கொடிக்கால் சம்பந்தப்பட்ட வகையில் ஒரு தனி அமைப்பினை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு விவசாயத்துறையில் உள்ள அதிகாரிகளாகிய டெபுட்டி அக்ரிகல்சர் ஆபீஸர்ஸ், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆகியோரே இவைகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு தனி அலுவலரை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவு.

## தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1979) (தொடர்ச்சி).

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்படுவது நியாயம் அல்ல என்பதற்கான காரணங்களை நேற்றைய தினம் ஓரளவுக்கு நான் விளக்கி இருக்கிறேன். அப்போது புள்ளிவிவரங்களைக் காட்டாமல் மொத்தமாக ஒரு கருத்தை நான் சொன்னேன். அது மட்டுமல்லாமல் ஆளுநர் உரையிலே பேசுகின்றபோதும் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி ஆனந்தவிகடனில் எழுதப்பட்டிருந்ததை நான் எடுத்துக் காட்டினேன்,

இன்றைய தினம் திரு. சதாசிவம் அவர்கள், முன்பு நீதிபதியாக இருந்தவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் 1975-76 ஆம் ஆண்டில் எவ்வளவு வழக்குகள் மதுவிலக்கு குற்றத்திற்காகத் தொடரப்பட்டன என்பது முதலான விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 1975-76 வது ஆண்டிலே அவ்வாறு தொடரப்பட்ட வழக்குகள் 4,46,546. அந்த வழக்குகளிலே தண்டனை பெற்றவர்கள் 3,78,846. தண்டனை என்பது அபராதமாக விதிக்கப்படுவதும் உண்டு. அந்த முறை தண்டமாக அபராதமாக விதிக்கப்பட்டு தண்டனை பெற்றவர்கள் 2,95,641. சிறைச்சாலையிலே விதிக்கப்பட்டு தண்டனை பெற்றவர்கள் 50,073. அந்த 50 ஆயிரம் பேரிலும் சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள் தண்டனையைவிடக் குறைவாகப் பெற்றவர்கள் குறைந்தபட்சத் 34,764 பேர்தான். எனவே தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள் 13 சதவீதம் தான். இவர்களிலும் குறைந்தபட்ச தண்டனை பெற்றவர்கள் நூற்றுக்கு 4 பேர்தான். அதாவது 'out of which 4% only were awarded the minimum punishment' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீதிபதிகள் குற்றவாளிகளைத் தண்டித்திருக்கிறார்கள். உண்மையிலேயே கைது செய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு நான்கு பேர் தான் சட்டத்தின் அளவு தண்டிக்கப்படுகின்ற நிலை இருந்தது

தெளிவாகிறது. ஆகவே இருக்கின்ற சட்டத்திலே ஒருவேளை அக்கரை இல்லை என்று சொன்னால் இருக்கின்ற சட்டத்தை செயல்படுத்துவதிலே மேலும் அதிக அக்கரை காட்டி அதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமே தவிர, அவ்வாறு நிறைவேற்ற வேண்டுமே தவிர இதற்காக அதாவது இருக்கின்ற சட்டத்தையே சரியான அளவிலேயும் முறையிலேயும் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் புதியதாக கடுமையான சட்டம் ஒன்று கொண்டு வரப்போகிறோம் என்று சொல்வது பொருத்தமானதாக இல்லை. ஆகவே இருக்கின்ற சட்டத்தை சரியான அளவிலே செயல்படுத்த வேண்டுமே தவிர கடுமையான தண்டனைகளோடு சட்டம் கொண்டு வருவது ஏற்றதாக இல்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல் நேற்றைய தினம் 'என்போர்ஸ்மென்ட் மெஷினரி' எப்படிச் செயல்படுகிறது என்பதுபற்றி அந்த அறிக்கையில் உள்ள ஒரு குறிப்பைப் படித்துக் காட்டினேன். மக்களின் மனமாற்றத்திற்கு வழி செய்வதைவிட, அதில் முயற்சி எடுத்துக்கொள்வதைவிட, அதிகப்படியாக தண்டிப்பதில் அக்கறை காட்டுகிறது அரசு என்று சொன்னேன். காவல் துறை மக்களை தண்டனைக்குரியவர்களாக்குவதில் அக்கறை காட்டுகிறது. நீதித் துறை குறைந்தபட்சத் தண்டனையும் தரவில்லை. காவல் துறை, பொது மக்களிடம் பழகுகிற துறை, குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் காட்டுவதில் அக்கறை காட்டுகிறது. நீதித்துறை அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று கருதப்பட்டாலும்கூட இவ்வளவு தண்டனை வேண்டியதில்லை தேவை இல்லை என்று ஏற்கனவே உள்ள சட்டத்தைக் கூட முழு அளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை, நிறைவேற்றவில்லை. ஆக, இந்தச் சூழ்நிலையில் அரசின் எண்ணம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி விளக்கும் போது The objective of the State Government in the context of social welfare policy like prohibition should be to reform than to punish என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர, மனப்போக்கை மாற்ற மிகப் பெரிய அளவிற்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமே தவிர தண்டிப்பதல்ல தகுந்த வழி என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. While it is trying on the one hand to save people from the evil influences it should at the same time provide opportunitics for the reform of those who have been thrown into the net. We would therefore suggest the setting up of the alchohol clinics என்ற ஒரு கருத்தும் இடம் பெற்றிருக்கிறது. குடிப்பழக்கத்திற்கு ஆளாகிவிட்டவர்கள் அந்தப் பழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள தேவையான அளவிற்கு அவர்களுக்காக ஆல்கஹால் க்ளினிக், குடிப்பழக்கம் உள்ளவர்கள் அந்தப் பழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, மது அருந்தும் மனப்பான்மையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, இத்தகையக் க்ளினிக்ஸ் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தும்





இருக்கிறது. அதேபோல் இப்படிப்பட்ட காரியங்களுக்காக அரசு
நிதியிலிருந்து தகுந்த அளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற
கருத்தும் இருக்கிறது. அந்த அறிக்கையில் liberal provision in
the State Budget on propaganda for prohibition is suggested என்று
தெரிவிக்கிறார்கள். இந்தக் குற்றம் எப்படி வளர்கிறது என்பது
பற்றி விளக்கிச் சொல்கிறபோது இந்த அறிக்கை அந்தத் தொழில்
செய்து அதில் சம்பாதிப்பவர்கள் அவர்கள் மட்டும் சம்பாதிக்கி
றார்கள் என்று கருதமுடியாது என்ற கருத்தையும் high profits in
llicit trade, சட்ட விரோதமான வணிகத்தில் உயர்ந்த
லாபம் என்னும் தலைப்பில் எடுத்துக் குறிப்பிடுகிறார்கள்.
While the profit margin is very high it is not to be imagined that
the entire proceeds are to be pocketed by the illicit distiller or the
vendor as he has to satisfy and silence the enforcement machinery, the
forest guards, etc., என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில்
தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்து, மதுவிலக்குச் சட்டத்திற்கு
மாறாக, இந்தச் சட்டத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடு
படுகிறவர்கள் ஏராளமான அளவிற்குப் பணம் சம்பாதிக்கிறார்கள்
என்று சொன்னாலும் அப்படிச் சம்பாதிக்கிற பணம் அவர்களுக்கு
மட்டும் போய்விடவில்லை. அதில் ஒரு பகுதி அந்தச் சட்டத்தை
நிறைவேற்றுகிற பொறுப்பிலுள்ளவர்களுக்குப் போகிறது என்ற
கருத்தும் அந்த அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. அதுமட்டு
மல்ல. அந்த அறிக்கையில் இன்னொரு பகுதியில் நான் கண்ட
கருத்தினையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மது காய்ச்
சுகிற அல்லது கலக்கிற இந்தக் காரியங்களில் ஈடுபடுகிறவர்கள்
காவல் துறையோடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு வகையான
உடன்பாடு காரணமாக தண்டனைக்குரியவர்களாக ஒரு சிலரை
அனுப்பி வைக்க ஒப்புக்கொண்டு அவர்களுக்கு ஒரு ஊதியம்
கொடுத்து தண்டனைக்கென்று ஆள்களை அனுப்புகிறார்கள்.
அப்படி தண்டனைக்கு ஆள்களை அனுப்ப, அவர்கள்
ஆள்களைப் பிடிக்க தேவையில்லாத அளவிற்கு காவல் துறையோ
அல்லது அது சம்பந்தமான துறையோ ஏதோ ஒரு வகையில்
தண்டனை பெற்றுக் கொள்வதற்கான ஆட்களையும் நாங்களே
எடுத்துக் கொள்கிறோம், மொத்தப் பணத்தையும் எங்களிடம்
கொடுத்து விடுங்கள் என்று பெற்றுக்கொள்ளும் பழக்கமும் ஒரு சில
இடங்களில் இருக்கிறது என்ற கருத்தும் இருக்கிறது. நான்
தெளிவாகச் சொல்ல விரும்புவது, ஏற்கனவே உள்ள சட்டத்தை
முறைப்படி நிறைவேற்றக் கூடிய ஒரு நிலை இன்றைக்கு இல்லை,
நிறைவேற்றவும் நம்மால் முடியவில்லை. நிறைவேற்றுகிற
அளவிற்கு அரசாங்கத் துறை அதற்கேற்ற அளவிற்கு தன்
கடமையைச் செய்யவில்லை. அதற்குள்ள தண்டனை போது
மானதாக இருக்கிறது, அந்தத் தண்டனையே கொடுக்கப்பட
வில்லை. அப்படித் தண்டிக்க வேண்டிவரும்போது அதன் விளை
வாகப் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்
தான் இருப்பார்கள். குற்றம் புரிகிற மிகப் பெரிய செல்வாக்கு
படைத்தவர்கள் பத்து பேர்கள் இருந்தால் அதில் ஒருவர்தான்
சிக்குவார். ஆனால் ஏழைகள் 70 சதவிகிதம் சிக்குவார்கள்
ஆனால் குற்றம் செய்கிறவர்கள் எல்லோரும், அவர்களை

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 13

என்றைக்காவது ஒரு வழக்கில் ஈடுபடுத்த முடியுமா என்றால், 1975–76-ல் நான்கு லட்சம் பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னாலும் அந்த ஆண்டு குடிப்பவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தால் 50-60 லட்சம் பேர் இருப்பார்கள். அந்த அறிக்கையில் இருப்பது இது. The evidence of the witnesses establishes beyond doubt the fact that notwithstanding the total prohibition in the State the drinking habit is fairly widespread particularly among the poorer sections of the society என்ற கருத்துப்படியும்,

(முற்பகல் 11-10)

"thus taking the State as a whole the percentage of such people may not exceed 10 to 12% though they are spread all over the State" என்ற கருத்துப்படியும், அவர்கள் சொல்லியிருக்கிற அளவே பெரிது. இப்படி வழக்கில் சிக்காதவர்கள் 80 சதவிகிதம், சில சில பகுதிகளில் இதற்குச் சற்றுக் கூடுதலாகவும் இருக்கிறார்கள். வேண்டுமென்றால் குற்றஞ் செய்பவர்களில் 100–க்கு 80 முதல் 85 வரை சிக்காதவர்கள் இருக்கலாம். மீதமுள்ள சிக்கிக்கொள்கிற நூற்றுக்கு 10, 15 பேர்கள் தான் இன்றுள்ள சட்டத்தால் தண்டிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகப் போதிய அளவு இதில் பலன் காண முடியவில்லை என்ற கருத்தும் இருந்து வருகிறது. அதே நேரத்தில் இதை விசாரிக்கின்ற நீதிபதிக்கு ஏற்படுகின்ற உணர்வு காரணமாக இப்படிப்பட்ட வழக்குகள் வருகின்ற நேரத்தில் இவற்றை 'ரொட்டீன் கேஸாக' வழக்கம் போல் எடுத்துக்கொள்ளப்படுகின்ற வழக்குகளாகக் கருதி விசாரிக்கப்பட்டு முடிந்து விடுகின்றன. நீதிமன்றத்திற்கு இதன் தொடர்பாக அதிகமாக வழக்குகள் வருகின்ற நேரத்தில் நீதிமன்றங்களின் முறையான பணிகளுக்குக் குறைபாடு ஏற்படுத்துகின்றது என்ற கருத்தும் இருந்து வருகிறது.

காவல்துறைக்கு இதில் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்த மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்றுகின்ற நேரத்தில் குந்தகமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் அவர்களுக்கு இடம் தரப்படுகிறது. இத்துடன் வேறு சில பொறுப்புகள் இருப்பதால் அவர்கள் அவற்றைச் சரியாக நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகிறது, அதன் விளைவாக இப்படிப்பட்ட பொறுப்புகளில் அவர்கள் கவனம் செலுத்த முடியாத நிலைமை ஏற்படுமானால், அரசாங்கத்தினுடைய கடமை, மக்களுக்கு வழங்க வேண்டிய நியாயமான நீதியை வழங்க முடியாத அளவுக்கு குந்தகம் ஏற்படுகிறது. ஒரு பக்கம் சமுதாயத்திற்குக் காவல் துறை ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்ய முடியாத அளவுக்கு—நெருக்கடியான ஒரு தொல்லை ஏற்படும். இன்னொரு பக்கம் இந்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலைமை. அதற்கு மேல் ஏற்கனவே இருந்து வந்த சட்டத்தையே செயல்படுத்த இயலாத நிலைமை, அதைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய கருவிகள், வாய்ப்பு வசதிகள் இல்லாத நிலைமை, அப்படியே செயல்படுத்தினாலும் இதனால் சிறைச்சாலைகளில் எத்தனை பேர்களை வைக்க முடியும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்—குறைந்த அளவு எண்ணிக்கையிலேயே அனுப்பும்படி காவல்துறை நீதித்துறையைக் கேட்டுக் கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமை—ஆக போதிய அளவுக்குச் சிறைச்சாலைகளில் இடம் கிடையாது. எனவேதான் மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முற்படுகின்ற நேரத்தில்—முன்னாள் முதலமைச்சர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறினது போல்—



[1979 மார்ச் 13] [திரு. க. அன்பழகன்]

''அரசாங்க நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் கொள்கை வெறியர்களாக இருக்கக்கூடாது. பிரத்தியட்ச நிலைமைகளை உணர முயல வேண்டும். கண்கூடாகக் காணும் உண்மை நிலைமைகளைத் தெளிய வேண்டும். எது சரி, எது தவறு என்பதனை நம்நாட்டு மக்களின் நன்மை அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்து இயங்க வேண்டும். கொள்கை வெறியர்களாக இருப்பது சுலபம். நாட்டு நிர்வாகத்தை நடத்த மிக உயர்தரமான திறமை வேண்டும்.''

இது அனைவருக்கும் சேர்த்துத் தெரிவித்த கருத்துத்தான். ஆகவே, இந்தச் சட்டத்தை மட்டும் நம்பி நாம் இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்றி விட முடியாது. சமுதாயத்தை எண்ணற்ற பல நல்ல கொள்கைகளின் மூலம், காப்பாற்றிட முயற்சிக்கலாம், இதற்காகக் கொண்டு வரப்படுகின்ற சட்டம் கடுமையாக இருத்தல் கூடாது, சட்டத்தை எளிதாக வைத்துக் கொண்டிருப்பது தான் நல்லது. இந்தச் சட்டத்தை ஏற்கனவே அவசரச் சட்டமாகக் கொண்டு வந்தபோது, நெருக்கடி காலத்தில் திடீரென்று சில சட்டம் கொண்டு வந்தபோது ஏற்பட்ட எண்ணம் தான் இப்போதும் இச்சட்டம் வருகின்ற நேரத்தில் ஏற்படுகின்றது. முக்கியமாக பப்ளிக் சர்வன்ட் என்று குறிப்பிட்டிருப்பதில் - பப்ளிக் சர்வென்ட் என்றிருந்தால் தண்டனை இரண்டு மடங்காகத் தரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடித்தவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்ற அளவில் இதில் பப்ளிக் சர்வென்ட் யார் என்று குறிப்பிடுகிற பொழுது. 'Public Servant' means— any police officer or any prohibition officer. or any other officer of the State Government authorised by or under this Act to exercise all or any of the powers or perform all or any of the duties under this Act என்று ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றுகிற பொழுது, பப்ளிக் சர்வென்ட் என்று வருகின்ற பிரிவில் எல்லா அரசாங்க ஊழியர்களையும் குறிக்காமல் இச்சட்டத்தை நிறைவேற்றுகின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்ற அரசாங்க ஊழியர்கள் மட்டுமே என்றுள்ளது. அரசாங்க ஊழியர்கள் என்று வரும் போது—அரசாங்கத்தில் பணிபுரியும் எல்லா ஊழியர்களுமா என்று பார்த்தால் இந்த இலாகாவில் பணிபுரியும் ஊழியர்கள் மட்டும்தான் என்ற கருத்து வருகிறது. பொதுவாக அரசாங்க

[திரு. க. அன்பழகன்] [1979 மார்ச் 13

ஊழியர்கள், அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறுகின்ற அத்தனை பேரும் பப்ளிக் சர்வென்ட் தான் என்று உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் காரணமாக முதலமைச்சரிலிருந்து, சட்ட மன்ற உறுப்பினர்களிலிருந்து அரசாங்க ஊழியர்கள் அனைவரும் பப்ளிக் செர்வென்ட் என்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது. அது நியாயமா அல்லவா என்பது ஒரு புறம் இருந்தாலும் கூட, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பொறுத்த வரை நிச்சயமாக இதைப் கட்டுப்படுத்தத்தான் செய்யும். ஆகவே பப்ளிக் சர்வென்ட் என்று சொல்லுகின்ற போது, அரசாங்கத்துறையிலுள்ள அத்தனை பேரையும் உட்படுத்தாமல், இந்தக் குறிப்பிட்ட துறையிலுள்ளவர்களை மட்டும் குறிப்பிட்டு சொல்லுகிற பொழுது, அதில் ஒரு வேற்றுமை, அநீதி ஏற்படுவதையும் கூற விரும்புகிறேன். இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் தவறு செய்தால், இரண்டு மடங்கு தண்டனை என்றிருக்கிறது. ஆனால், அவர்கள் ஆற்றக்கூடிய பணியின் பொறுப்புக்கு 'ரெஸ்பான்சிபிலிடி' அல்லது அவர்கள் கடமைக்கு மாறான காரியங்கள் செய்தால், அதாவது ஒரு குற்றவாளியைத் தப்பிக்க வைக்கின்ற காரியம் போன்ற காரியங்களைச் செய்தால், அதற்குத் தண்டனை கடுமையாக்கப் படுகின்றதா என்று பார்த்தால், இந்த விதிமுறையிலே அப்படி கடுமையாக்கப் படவில்லை. அவர்களுக்குத் தரப் படுகின்ற கடமைகளிலே தவறு செய்தால், அதற்குத் தண்டனை கடுமையாக்கப்படவில்லை.

பொதுவாக, இங்கே 'பப்ளிக் சர்வென்ட்' என்று குறிப்பிட்டவர்கள் அந்தத் துறையிலே நிறைவேற்ற வேண்டிய கடமை தவறுக்கு என்றிருந்தால் அது நியாயமாக இருக்கும். ஆனால், குற்றவாளிகள் செய்கின்ற காரியங்களிலே உடந்தையாக இருந் தால், அதற்கு தண்டனை மிகுதியாக்கப்படவில்லை, இந்த இலாகாவிலும், வேறு துறையிலேயும் உள்ள அதிகாரிகளுக்கு அதே காரியங்கள் செய்தால் இரண்டு மடங்கு தண்டனை உண்டு என்றும் இருக்க வேண்டும். இப்படி 'பப்ளிக் சர்வென்ட்' என்று போட்டிருப்பது, அரசாங்கத்திலே இருக்கின்ற வேறு அதிகாரிகள் அதே தவறைச் செய்வார்களானால், அவர்களுக்கு 6 மாதம் என்றும், சாதாரண குடிமகனுக்கு அதே தவறைச் செய்தால் 3 மாதம் என்றும் ஆகிவிடும். எனவே, இப்படி 'பப்ளிக் சர்வென்ட்' என்பதற்குத் தரப்பட்டிருக்கிற 'டெபனிஷனே' முறை கடந்து போடப்பட்டிருக்கிறது. ஒரு நேரத்திலே, முதலமைச்சர் அவர்கள் கருத்துப்படி இது எல்லோரையும் உட்படுத்தும் என்று கருதக் கூடிய நிலை இருந்தது. எனவேதான் குறிப்பிட விரும்புகிறேன், இந்த 'பப்ளிக் சர்வென்ட்' என்ற தொடர் பயனற்றதாகி விடும்; பொருத்தமற்றதாகி விடும்; அர்த்தமற்றதாகி விடும்.

அது மட்டுமல்ல. இப்படி ஒரு முறை தவறு செய்து தண்டிக்கப்பட்டு, மறுபடியும் அதே தவறை அவர் செய்தால், தண்டனை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. முதல் முறை அந்தத் தவறைச் செய்து விட்டு, குற்றவாளியாக இருக்கும்



1979 மார்ச் 13] [திரு. க. அன்பழகன்]

ஒருவர், காவல் துறையிலே இருக்கும் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் என்று எடுத்துக்கொண்டால் குடித்துவிட்டு அதற்காக 6 மாதங்கள் தண்டனை பெற்று விட்டு, மறுபடியும் அவர் சப் இன்ஸ்பெக்ட ராக இருப்பாரா? அப்படி மறுபடியும் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தால், அது அந்த டிபார்ட்மெண்டுக்கே இழுக்கல்லவா? The morality of the Department will totally go. அந்த இலாகா விற்கே மரியாதை போய்விடும். அப்படி 6 மாதங்கள் தண்டிக்கப் பட்ட ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மறுபடியும் வேலையில் இருக்க மாட்டார். ஆனால், நான் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்கு உட்படுகிறேன். அப்படி அந்த சப்-இன்ஸ்பெக்டர் வேலையில் இருந்து, மறுபடியும் தவறு செய்தால் ஒரு ஆண்டு தண்டிக்கப் படுவார் என்ற இந்தச் சட்டத்தின் நோக்கத்தினை ஏற்றாலும் இந்தச் சட்டத்திலே உள்ள விதிகளுக்கு நான் மாறுபடுகிறேன். ஏன் அப்படி மாறுபடுகிறேன் என்றால், சட்டத்தின் நடை முறையை இது கேலி செய்வதாக உள்ளது. இந்தச் சட்டத்தின் விதிகள் நம்மைக் கேலி செய்கின்றன. ஒரு முறை தவறு செய்த எந்த அதிகாரியும், இப்படித் தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகின்ற நிலை இருக்கும்போது 'பைன்' அபராதம் செலுத்துவது என்றாலும் அது வேறு, மறுபடியும் அவர் அந்தத் தவறைச் செய்தால் இரண்டு மடங்கு தண்டனை என்று சொல்லுகிற இந்த முறை சட்ட விதிகளுக்குப் பெருமை தருவ தாக இல்லை.

இந்த 'பப்ளிக் சர்வென்ட்' என்னும் சொல் இலாகா தொடர் புடையவர்களை மட்டுமே குறிப்பிடுகிறது. ஆனால், அந்த இலாகா தொடர்புடைய காரியங்களிலே தவறு செய்தால், அதற்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படவில்லை; தண்டனை உயர்த்தப்படவில்லை. ஆனால், இந்த இலாகா நிறைவேற்ற வேண்டிய கடமையில் தவறு செய்கிறவர்களுக்குத் தண்டனையை உயர்த்தாமல், இந்த இலாகாவிலே உள்ளவர்கள் இத்தகைய தவறை மீண்டும் இரண்டாவது முறையாகச் செய்தால் அவர்களுக்கு இரண்டு மடங்கு தண்டனை என்று சொல்கிற அடிப்படையிலே வரும்போது, இந்த அரசாங்கம் அப்படித் தண்டிக்கப்பட்டவர்களையும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் என்ற ஒரு கருத்து வருகிறது. அதற்கு மேலும் இந்தக் குற்றங்களுக்கு ஆளானவர்களுக்குச் சாட்சிகள் தேவை யில்லை என்றும் விதிகளிலே இடம் பெற்றிருக்கிறது.

இதைத் தவிர, இந்தச் சட்டத்திலே ஆங்கிலத்திலிருந்து, தமிழில் மொழி பெயர்ப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. 'அனிமல்' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு, ஒரு இடத்தில் 'விலங்கு' என்றும், மற்றொரு இடத்தில் 'கால்நடை' என்றும் வருகிறது, அதேபோல், 'வெகிகிள்' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு, ஒரு இடத்தில் 'ஊர்தி' என்றும், மற்றொரு இடத்தில் 'வாகனம்' என்றும் வருகிறது. இப்படி சொற்களை சட்டத்திலே பயன் படுத்துவது சரியல்ல. பேச்சாக இருந்தால், ஒவ்வொரு இடத்

திலும் ஒரு மாதிரியாக இருக்கலாம். ஆனால், இது சட்டம். சட்டத்திலே எல்லா இடங்களிலும் ஒரு கருத்துக்கு ஒரே சொல்லைப் பயன்படுத்த வேண்டும். இன்னும் சொல்லப் போனால் இப்போது திருத்தப்பட்ட இந்தப் புதிய சட்டத்திலேகூட ஏற்கனவே உள்ள சட்டத்தின் தொடர்கள், நீக்கப்படவேண்டியவை இடம் பெற்றிருக்கின்றன. அவைகளையெல்லாம் படித்துக் காட்ட நேரமில்லை.

(முற்பகல் 11-20)

ஆனால் சாட்சிகள் இல்லாமல் குற்றச்சாட்டை விசாரிக்கலாம் என்றால் எப்படி நியாயம்? ஏதோ மலைப் பகுதிகளில் காய்ச்சுகிறவர்களைப் பிடிக்கும்போது சாட்சிகள் கிடைக்காது என்பது உண்மைதான்; நீதிமன்றத்தின் முன்னால் சாட்சிகளுக்குப் பதிலாக அந்தப் பாத்திரம் கொண்டு வந்து காட்டப்படுகிறது. காய்ச்சிய கலக்கல் அல்ல; ஒரு பானைதான் — 'வெஸல்' காட்டப்படுகிறது. கலக்கல் முதலான பெயர்கள் எல்லாம் எனக்குச் சரியாக நினைவு வராது. அவற்றை அழித்துவிட்டுக் காட்டலாம் என்று இருக்கிறது. நீதிமன்றத்தில் ஒரு பானையை வைத்துக் கொண்டு 90 வழக்குகள் நடைபெறுகின்றன. ஒரே பானைதான். இது எல்லோருக்கும் தெரியும். இப்போது சட்டத்தைக் கடுமையாக்கிவிட்டு சாட்சி தேவையில்லை என்று கூறி விட்டு வெறும் பாத்திரத்தைக் காட்டினால் போதும் என்று சொன்னால் நீதிமன்றம் எதற்கு? நீதிமன்றம் இருப்பதே சாட்சிகளை விசாரிப்பதற்குத்தான். வழக்கறிஞர்கள் இந்த வழக்கில் வாதாட எங்கே இடம் இருக்கிறது? சட்டமன்றத்தில் வாதிட இடம் இருக்கிறதே தவிர வழக்கு மன்றத்தில் இனி இப்படிப்பட்ட வழக்குகளில் வாதிடுவதற்குத் தேவை கிடையாது. சாட்சிகள் இருந்தால்தான் குறுக்கு விசாரணை நடத்த முடியும். காவல் துறையினர் குற்றவாளி என்று சொல்லிவிட்டால் நீதிபதி உடனே தண்டனை தர வேண்டும்.

இன்னொரு இடத்தில் இப்படிப்பட்ட வழக்குகளில் பெயில்-ஜாமீன் முறை தேவையில்லை என்ற கருத்து வருகிறது. மூன்று ஆண்டுக்கு மேல் தண்டிக்கப்படுகிற வழக்காக இருந்தாலும் பெயில் தேவையில்லை என்ற கருத்து வருமானால், காவல் துறையினர் கை வைத்த உடனே அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டு குற்றவாளிகளாக்கப்படுகிறார்கள். காவல் துறையினரால் கைது செய்யப்படுகிறவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று சொல்ல முடியாது. குற்றவாளிகள் அல்லாதவர்களையும் அவர்கள் பிடிக்கக் கூடிய நிலை ஏற்படலாம். காய்ச்சுகிறவன் காய்ச்சி எடுத்துக் கொண்டு போய்விடுகிறான். அந்த இடத்திற்கு வேறு ஒருவன் யாரையோ தேடிக் கொண்டு வருகிறான். அந்த இடம் அரசாங்கப் புறம்போக்காக இருக்கும். யாருக்கும் சொந்தமான நிலம் அல்ல. அந்த இடத்திற்கு வருகிறவனைக் கைது செய்தால் அவன்





உண்மையான குற்றவாளியாக இருக்க முடியாது. குற்றவாளி அல்லாதவன் பிடிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த அவையிலே பேசிய நண்பர் சொன்னார்—ஏற்கனவே வழங்கப்படும் பொன்மொழிதான் அது. 100-க்கு 99 குற்றவாளிகள் கூடத் தப்பித்துக் கொள்வதற்கு இடம் இருக்கலாம், ஆனால் ஒருவர் கூட குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்படுவதற்கு இடம் இருக்கக்கூடாது என்று அதுதான் நவீன சட்டத்தின் நோக்கமாக இருக்கவேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டது. சாட்சி தேவையில்லை என்று சொல்லிவிட்டு நீதிமன்றத்திற்கு ஏன் போக வேண்டும்? நீதிமன்றங்களுக்குப் போகாமல் ஆங்காங்குள்ள சப் இன்ஸ்பெக்டர்களோ அல்லது இன்ஸ்பெக்டர்களோ தண்டனை கொடுத்து விடலாம் என்று கூட நீங்கள் சொல்லிவிடலாம். நீதிமன்றம் விசாரித்து தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொல்வதற்கு தேவையே இல்லை. சாட்சிகள் விசாரிக்கத் தேவையில்லை, காய்ச்சப்படுகிற பொருள்களைக் கொண்டு வந்து காட்டத் தேவையில்லை; சாட்சிகள் இல்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய தேவையில்லை. காவல் துறையினர் பிடித்து விட்டாலே தண்டனை பெறுவது தவிர வேறு வழி இல்லை. அந்த அடிப்படையில்தான் பெயில் தருவதும் இனி இல்லையென்ற கருத்து வருகிறது. மிகப் பெரிய கொலைக் குற்றம் செய்தவர்கள் கூட நீதிமன்றத்திற்கு வந்து பெயிலில் போகலாம் என்று இருக்கும்போது இதிலே ஜாமீன் முறை கிடையாது என்று சொல்லும் போது நீதிமன்றத்திற்கு வேலையே இல்லை.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. 'சம்மரி டிஸ்போசல்' என்ற பகுதி வருகிறது. உடனுக்குடன் தீர்ப்பளிப்பது அல்லது முடிவு வழங்குவது என்பது. மூன்று மாதத்திற்கு மேற்படாத தண்டனை வழங்கப்பட வேண்டியவர்களுக்கு, அவர்களே விசாரித்து 500 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம் என்ற கருத்து வருகிறது.

'as a result of such trial no sentence except a sentence of fine shall be imposed.' என்று இருக்கிறது.

சம்மரி டிஸ்போசல் என்பதற்கு இந்தச் சட்டத்திலே எங்கே இடம் இருக்கிறது? எங்கே வழி இருக்கிறது? விதியைப் பயன்படுத்த எங்கே வாய்ப்பு இருக்கிறது? குறைந்த பட்சம் 3 மாத தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் வழங்க வேண்டும் என்றால் அது எத்தனை குடும்பங்களை அழித்து விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நன்மைக்காக நான்கு மடங்கு தீமையைச் செய்துவிடக் கூடாது.

மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெற வேண்டுமென்ற ஒரு நோக்கத்திற்காக எத்தனையோ குடும்பங்கள் அழிந்து விடும் நிலை உருவாகிறது. அந்தத் தண்டனையைக் குறைக்க இடமில்லாமல் இருக்கும் போது 'சம்மரி டிரயல் ஆப் சர்டன் அபன்ஸஸ்' ஏன் இடம் பெறவேண்டும்? அப்படிப்பட்ட

முறை இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதினால் அதற்குச் சட்ட விதிகளை மாற்ற வேண்டாமா? குற்றம் செய்கிறவர்களுக்கு, இரண்டாவது முறை, மூன்றாவது முறை குற்றம் செய்கிறவர்களுக்குத் தண்டனை என்று வழங்கப் படுகிறபோது ஊர் கடத்தல் அல்லது மாவட்டததை விட்டு கடத்துகிற ஒரு விதி இதிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விதி என்ன பலனைத் தரும்? இன்றைக்கும் கூட நமக்குத் தெரியும், பல பேர் அவரவர்கள் ஊர்களிலே அல்லது மாவட்டங்களிலே தண்டனை பெற்று குற்றவாளிகளாக அங்கே வாழ்வதற்கு அவமானப்படுவார்கள், ஆனால் மற்ற இடங்களிலே அவர்கள் போய் ராஜா போல் வாழ்கிறார்கள், பல பேர்கள் தங்களுடைய சொந்த ஊரிலே குற்றவாளிகளாக இல்லாமல் சென்னை மாநகரத்திலே பெரியவர்களாக வாழ்கிறார்கள் என்ற நிலைமை இருக்கத்தான் செய்கிறது; தங்களுடைய சொந்த ஊரிலோ அல்லது மாவட்டத்திலோ குற்றவாளிகள் என்று வாழ்வதற்கு விரும்பவில்லையே தவிர அந்த ஊரைவிட்டு அல்லது அந்த மாவட்டத்தை விட்டு வெளியேறி வாழ்வதற்கு விரும்புகிறார்கள் பலர் என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். அந்தக் காலத்திலே இருந்தது அந்தமானுக்கு அனுப்புவது என்ற முறை. அப்போது அந்தமான் இருந்த நிலைமை அப்படி, நாடு இருந்த நிலைமையும் அப்படி, ஆனால் இன்றைக்கு அந்தச் சட்டம் பயன்படாது.

இந்த அரசின் சார்பிலே நீதிபதிகளால் தண்டிக்கப்படுவார்களானால் பலபேர் வேறு இடங்களைத் தேர்ந்து எடுத்து அங்கே சென்று வாழக் கூடும். திருடுகிறவர்களும், கொலை செய்கிறவர்களும் கூட தாங்கள் திருடுவதற்கும் மற்ற குற்றங்களைச் செய்வதற்கும் தாங்கள் இருக்கிற இடங்களைத் தவிர, வேறு இடங்களைத் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகவே ஊரை விட்டு கடத்துகிற அளவிற்கு, வேறு மாவட்டத்திற்குக் கடத்துகிற அளவுக்கு இந்தச் சட்டத்திலே விதி தேவையில்லை என்பதை நான் மிகவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சட்டம் என்பது ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் என்பது ஒரு பிரகாசமான விளக்கு, அந்தப் பிரகாசமான விளக்கை ஏழைகளால் பெறமுடியாது என்று சொன்னார்கள். இந்த வழக்குகளிலே 100-க்கு 90 பேர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். ஆகவே அவர்கள் இந்தப் பிரகாசத்தைப் பெறமுடியுமா? வக்கீலின் வாதம் என்ற அந்தப் பிரகாசம் அடியோடு அவர்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமல்ல, இப்போது அந்த இருட்டறையிலே காற்றுப் புகமுடியாத நிலைமை வேறு ஏற்பட்டிருக்கிறது. பெயில் இல்லை என்று சொல்கிறபோது, குறைந்த பட்சம் இவ்வளவு தண்டனை கொடுத்தாக வேண்டுமென்று சொல்கிறபோது, வழக்கை விசாரிக்க சாட்சிகள் தேவையில்லை என்று சொல்கிறபோது—தவறு செய்துவிட்டு தப்பிப்பார்கள் என்ற காரணத்திற



காக தவறு செய்யாதவர்களோ, அரசியல் கட்சி மாறுபாடு
கொண்டவரோ பிடிக்கப்பட்டு விடுகிறார் என்று வைத்துக்
கொள்ளுங்கள், அவர் தப்பிப்பதற்கு வழி கிடையாது, குடித்திருக்
கிறார் என்று டாக்டர் சர்டிபிகேட் கொடுத்துவிட்டால். அதற்குப்
பின்னர் அவர் குடிக்கவில்லை என்று நிரூபிப்பதற்குச் சட்டத்திலே
வழி இல்லை—இந்தச் சட்டத்திலே சமுதாயத்திலே உள்ள
குறை என்று கருதப்படுகின்ற குடிப்பழக்கத்தை, அடியோடு
ஒழிப்பதாகக் கருதிக்கொண்டு தவறு செய்யாதவர்கள் தண்டிக்கப்
படுகின்ற நிலைமையை ஏற்படுத்துகிறோம். தண்டனையைக்
கடுமையாக்குவதன் காரணமாக கள்குடிக்கிறவருக்கும் கடுமையான
தண்டனை, சாராயம் குடிக்கிறவருக்கும் கடுமையான தண்டனை,
கலக்கலைக் குடிக்கிறவருக்கும் கடுமையான தண்டனை என்று
இருப்பது சரியல்ல, சில வேற்றுமைகள் இருக்கவேண்டும். பதநீர்
குடித்தவர் ஒருவர்மீது அவர் கள் குடித்தார் என்று வழக்குப்
போடுகிற நிலைமை இருக்கிறது, கொஞ்சம் எளிதாகவும் அவரவர்
குடித்திருக்கக்கூடிய குடிக்கு ஏற்பவும், சட்டமும் தண்டனையும்
இருக்கவேண்டும்.

கள் குடிக்கிறார்கள் என்ற நிலைமை வருகிறபோது, அவர்கள்
மீது வழக்குகள் வருகிறபோது கிராமம் கிராமமாக—ஒவ்வொரு
கிராமத்திலேயும் 20 பேர்களாவது கள் குடிக்கிறவர்கள் இருக்கிறார்
கள் என்றால்—அந்த 20 பேர்களையும் ஒவ்வொரு கிராமமாகச்
சென்று ஒவ்வொரு முறையும் தினம் தினம் போலீஸாரால் பிடிக்கப்
படுகிற நடைமுறை எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும்
போலீஸார் சென்று, கிராமம் கிராமமாகச் சென்று, 10, 20
பேர்களை ஆங்காங்கே பிடித்துக்கொண்டு வந்து இன்னொரு
ஊரில் உள்ள நீதி மன்றத்திற்குக் கொண்டுபோய் அவர்களுக்குத்
தண்டனையை வாங்கித் தருவதைவிட அந்தந்தக் கிராமங்
களிலேயே பஞ்சாயத்து நீதிமன்றம், அல்லது கிராம நீதிமன்றம்
என்ற முறையிலே அமைத்து அதன் மூலமாக அவர்களுக்கு
அபராதம் விதிப்பதற்கு முயற்சிக்கலாமே தவிர இவ்வளவு பெரிய
சுமைகள் தேவையில்லை. நான் சொல்வது இரண்டு வகையான
குற்றங்களாக இவை பிரிக்கப்படவேண்டும். ஒன்று மக்களிடையே
உள்ள பழக்கத்தால் கள் குடிக்கும் பழக்கம், இன்னொன்று
போதையை அதிகப்படுத்த வேறு சிலர் தவறான முறையில்
தயாரித்து அதை மக்கள் வாங்கிக் குடிக்கிற குற்றம்.

(முற்பகல் 11-30)

கலக்கலைக் குடித்தவர்களுக்கு வேண்டுமானால் தண்டனையைக்
கடுமையாக்காமலே முன் இருந்த தண்டனையைத் தரலாம்,
நீதிமன்றத்தில் நிறுத்தலாம். அப்பொழுதும் சாட்சி தேவை.

அதற்கடுத்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்ன
வென்றால், இந்தக் குற்றச்சாட்டில் பல தடவை ஆளானவர்
களுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பது என்பது ஏற்றுக்

கொள்ளத் தக்கதுதான் என்றாலும்கூட, கிராமங்களிலே இருக்கின்ற 55 வயது 60 வயது ஆனவர்களை இந்தச் சட்டத்திலிருந்து விலக்கப்பட முடியுமா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிப் பழக்கத்திற்கு ஆளான 55 வயது, 66 வயது ஆனவர்களைச் சட்டத்தால் திருத்த முடியாது. எப்படி 24 வயதுக்கு உட்பட்டவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால் ப்ரொபேஷன் என்ற முறையில் விடப்படலாம் என்று வைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல, 55 வயது, 60 வயது, 65 வயது என்று அந்த எல்லை எதுவாக இருந்தாலும், குறிப்பிட்ட அந்த வயதுக்கு மேற்பட்டவர்கள் பலர் அந்தப் பழக்கம் இல்லாமல் வாழ முடியாது என்ற நிலையில், 30 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அந்தப் பழக்கத்திற்கு இரையாகி விட்டவர்களை இனிமேல் திருத்தி வாழச் செய்ய முடியாது என்பதை உணரவேண்டும். 50 வயதுப் பெண் விதவை என்றாலும் மறுமணம் கிடையாது, தேவைப்படாது. அதைப்போல 60 வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய அவசியத்தை மேற்கொள்ளக்கூடாது. கிராம நீதிமன்றம் அமைப்பது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும். எளிய தண்டனையைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். அதன்மூலம் சமூக சீர்திருத்தத்திற்கு வழிவகை செய்ய முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதில் உள்ள சில விதிமுறைகள் எனக்கு உடன்பாடாக இருந்தாலும் பெரும்பாலான விதிமுறைகள் என்றால் ஏற்க முடியாதவையாக உள்ளன. சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்கின்றன. நேற்று பேசிவிட்டுச் சென்ற பிறகு திரும்பவும் எண்ணிப் பார்த்தேன். அந்தச் சட்டத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த எண்ணத்தின் அடிப்படையிலே சொல்கிறேன், இங்கே சில திருத்தங்களைத் தந்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று, பொதுமக்களின் கருத்தறிய, 'பப்ளிக் ஒபினியனை' மக்களிடத்திலிருந்து பெற இதைச் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை இங்கே ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை. அடுத்து, இந்தச் சட்டமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அடங்கிய பொறுக்குக் குழுவிற்கு, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதில் உள்ள நியாயத்தை நான் வரவேற்கிறேன். சூழ்நிலை இந்தச் சட்டத்திற்கு இடம் தருகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சூழ்நிலை என்று நான் சொல்லும்பொழுது அதைச் சற்று விவரமாகப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டிலே ஒரு சட்டம், பாண்டிச்சேரியிலே ஒரு நிலை, 'ஆந்திராவிலே ஒரு சட்டம், கர்நாடகத்திலே ஒரு நிலை இன்று இருக்கிறது. இப்படி அகில இந்திய சூழ்நிலை ஒரே விதமாக இல்லாதபொழுது, இன்றைக்குப் பீகார் மாநிலத்திலே மது விலக்கைக் கொண்டு வரலாம் என்று முடிவெடுக்க போகிறார்கள் என்ற கருத்து வந்து "இண்டியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலே அதைப்பற்றிக் கருத்துச் சொல்லும் பொழுது, இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய வல்லமையோ,



திறமையோ பீகார் மாநில அரசுக்கு இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று தலையங்கம் எழுதியிருக்கிறது. அகில இந்திய அளவிலே பார்க்கும்பொழுது, நாம் இதில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறோமோ அந்த அளவிற்கு மற்றவர்கள் காட்டு வதாக நான் எண்ணவில்லை. இதற்காக நாம் ஏற்றுக் கொண்டிருக் கின்ற இழப்பு சாதாரணமானது அல்ல. நூறு கோடி ரூபாய் வருமான இழப்பு என்பது சாதாரணமான இழப்பு அல்ல. அரசாங்கத்திற்கு இதனால் நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு காவல் துறை இந்தக் கடமையைச் செய்ய 10 கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் அதிகம் செலவாகும் வகையில் காவல்துறைக்கு அதிகமாகச் செலவிட்டும் அது கண்ணியத்தை இழக்கும் அளவிற்கு இந்தச் சட்டம் ஒரு காரணமாக அமைந்து நீதிமன்றங்களில் இத்தகைய வழக்குகளை விசாரிக்கும் வேலையும் மிகுதியாகி அதிகமாகி நீதிமன்றக் கடமைக்கும் குந்தகம் ஏற்பட்டு, சமுதாயமும் சீர்திருந்துவதற்குப் பதிலாக, முன்பு குடித்து அழிந்தான், இப்பொழுது வழக்கிலே அழிந்தான் என்று சொல்லும் நிலைமைகளை ஏற்படுத்தி விடக்கூடாது.

குடிப் பழக்கம் என்ற சொல்லை இரண்டு வகையாகப் பயன் படுத்தலாம். குடியில் நல்ல பழக்கம் இருந்தால் குடிப்பழக்கம் என்றுதான் சொல்கிறார்கள். குடிக்கிற பழக்கத்திற்கும் குடிப் பழக்கம் என்று பெயர். குடும்பத்தோடு ஒட்டி வந்த பழக்கம் என்பதால் குடிப் பழக்கம் என்ற பெயர் இதற்குப் பிறந்து விட்டதோ என்னவோ தெரியவில்லை. அப்படிப்பட்ட பரம்பரைப் பழக்கம் தவறுதான் என்றாலும்கூட, அதை இவ்வளவு கடுமையாக தண்டித்து விடும் அளவிற்கு என்னுடைய மனச்சாட்சியின்படி நமக்கு உரிமை இல்லை.

பென்சிலைச் சீவுவதற்காகத் தேங்காயை உரிக்கும் அரிவாளைப் பயன்படுத்தக்கூடாது. பென்சிலைச் சீவுவதற்கு அதற்கான கத்தியைத்தான் பயன்படுத்த வேண்டும். ஆனால் இந்தச் சட்டம் பென்சிலைச் சீவுவதற்குத் தேங்காயை உடைக்கும் அரிவாளைப் பயன்படுத்துவதைப் போல் இருக்கிறது. அரிவாளைக் கீழே போட்டுவிட்டு இதற்குத் தேவையாக இருக்கின்ற கருவியைப் பயன்படுத்துவதுதான் சரியாக இருக்கும். நான் கூறிய காரணத்தை நீங்கள் ஏற்காவிட்டாலும், நிச்சயமாக நம்புகிறேன், என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. இந்தச் சட்டம் நியாயம் அல்ல, நேர்மையான சட்டம் அல்ல, உங்களுக்கு இடையூறு செய்யக் கூடிய சட்டம். ஒரு நண்பர்கூட நேற்று நான் பேசிவிட்டு வெளியிலே சென்றபொழுது கேட்டார், இந்த அரசாங்கத்திற்கு இவ்வளவு ஆதரவாக யோசனைகளைச் சொல்லுகிறீர்களே என்று. நான் அரசாங்கத்திற்காகச் சொல்லவில்லை, சமுதாயத்திற்காகச் சொல்கிறேன். சமுதாயம் வாழ்வதற்காக இந்த அரசு செய்கிற காரியங்களிலே, எந்த, எந்தக் காரியங்களிலே ஆலோசனை சொல்ல வேண்டுமோ, அவற்றில் என்னுடைய ஆலோசனையை, என்னுடைய அறிவுக்கு எட்டிய அளவில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் பேசியது உங்களுக்குச் சரி என்று தோன்றி

பயன்பட்டால் நான் மகிழ்ச்சி அடைவேன். நான் பேசியது பயன் படவில்லையென்று நீங்கள் கருதினால் இந்தச் சமுதாயம் வேதனைப்படும். எனவே, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த 3, 4 நாட்களாக இந்தப் பேரவையினுடைய பெரும்பான்மையான கவனத்தைக் கவர்ந்து, நாட்டு மக்களுடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிற மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்துகின்றவிதமாகக் கொண்டு வரப் பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை மிகக் கடுமையானதாக இருக் கிறது என்றும், இந்தச் சட்டத்தின் வாயிலாகப் பெரும்பான்மை யானவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் இங்கே பேசிய பல் வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள் என்றாலும், நான் அவர்களுடைய பேச்சையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்ததில் சட்டத்திலே கடுமையிருக்கிறது என்று சொன்ன அவர்களுடைய வாதத்திலேதான் கடுமை இருந்ததே தவிர, சட்டத்திலே எந்த விதமான கடுமையும் இல்லையென்பதை நான் முதலிலே கூற விழைகிறேன். மதுவிலக்கை அமுல்படுத்துகிற பிரச்னைகளில் இந்தச் சட்டம் கடுமையானது என்று சொல்வார்களானால், நான் அவர்களுக்கு ஒன்றைக் கோடிட்டு காட்ட இங்கே ஆசைப் படுகிறேன். இஸ்லாமிய நாடுகளாக இருக்கிற லிபியா, சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இன்றைக்கு இந்த மது விலக்கை அமுல்படுத்துவதற்காகச் செயலாக்கப்பட்டிருக்கிற பல்வேறு சட்டதிட்டங்கள் மிகக் கடுமையானவையாக இருக்கின்றன என்பதோடு மட்டுமல்ல, சில சட்டங்களைப் பார்க்கிற நேரத்தில் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டவைகளாகக் கூட அங்கே இருக் கின்றன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

ஆகவே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் யாரோ ஒருவருக்குப் பாதுகாப்பைத் தேடுவதற்காக என்று சொல்லப்பட்ட எண்ணத்தைப் போலல்லாமல், இந்த நாட்டிலே, இந்தச் சமுதாயத்திலே, வாழ்ந்து கொண்டிருக்கிற அடிந்தள மக்களாக இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், உழைக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள், இப்படிப்பட்டவர் களெல்லாம் சமூகப் பாதுகாப்புப் பெற வேண்டுமென்பதற்காகத் தான் பொருளாதாரப் பாதுகாப்புப் பெற வேண்டுமென்பதற் காகத்தான் நல்வாழ்வு பாதுகாப்புப் பெற வேண்டுமென்பதற் காகத்தான் இந்தச் சட்டத்தை இந்த அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்கிற அதே நேரத்தில் ஒன்றை நான் மிகத் தெளிவாகக் கூறியாகவேண்டும். சட்டங்கள் உருவாக்கப்படுகிற நேரத்தில், அந்தச் சட்டங்கள் மக்களுக்காக இருக்க வேண்டுமே தவிர மக்களைச் சட்டங்களுக்காக இழுத்துச் செல்லக்கூடாது என்ற ஒரு தத்துவத்தினுடைய விளக்கமாகத்தான் இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள் இருக் கிறார்கள் என்பதை நான் மெத்தப் பெருமையோடு இங்கே எடுத்துக் கூற விழைகிறேன். இதை நேரடியாகவே காணுகின்ற





வாய்ப்பை இந்த நாட்டிலேயிருக்கிற மக்கள் சென்ற ஆண்டு வந்த கடும் வெள்ள நேரத்திலே சந்தித்தார்கள். திருச்சி மாவட்டமும், தஞ்சை மாவட்டமும் பெரும் அளவு பாதிக்கப் பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட வீட்டிலே குடி இருந்தவர்களுக்கு நஷ்ட ஈடுத் தொகை தரவேண்டுமென்ற நேரத்திலே, அன்றைக்கு திருச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடத் திலே மக்கள் நேரடியாக முறையிட்ட நேரத்தில், அதிகாரிகள் எல்லாம் எடுத்துச் சொன்னவை, சட்டம் வீட்டின் சொந்தக் காரர்களுக்குத்தான் கொடுக்க இடம் தருகிறதே தவிர, வீட்டிலே குடியிருப்பவர்களுக்குத் தர வகை செய்யவில்லையென்பதாகும்.

அந்நேரத்தில், அச்சட்டங்கள் தேவையில்லை, இந்தச் சட்டங்கள் மக்களுக்காக இ க்கவேண்டுமென்ற அந்தத் தத்துவத்தை அன்றைக்கு எடுத்துச் சொல்லி, அத்தகைய ஆக்கப்பணியிலே இன்றைக்குச் சமுதாயத்திலே இருக்கிற மக்களுக்காக, சட்டத்தை உருவாக்குகிற தன்மையிலே இருக்கிற தமிழக அரசு, மக்களுடைய எதிர்கால நல்வாழ்வை எண்ணித்தான் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக் கூறுகின்ற நேரத்தில், அவரவர்கள் விருப்பு வெறுப்புக்கு விட்டுவிட வேண்டுமென்று கூறுகின்ற வாதத்தை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை அழிக்க நினைப்பதை நிச்சயமாக நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு முதலாளி, ஒரு தொழிலாளியைப் பழி வாங்க நினைப்பதை நிச்சயமாக நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதைப் போல் ஒரு சமுதாயம் நல்ல முறையில் வாழவேண்டுமென்பதற்காக நாம் கொண்டு வருகிற எந்தவிதமான சட்டமாக இருந்தாலும் அந்தச் சட்டத்தைப் பார்த்தவுடனே, அந்தச் சட்டம் கடுமையாக இருக்கிறது என்று சொல்வார்களானால், நான் நிச்சயமாக ஒரு உதாரணத்தைக் கூறமுடியும். ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்கு உடல் நலம் இல்லையென்று மருத்துவரிடத்திலே கேட்டு, அந்த மருத்துவர் தருகின்ற மருந்தை குழந்தைக்கு ஊட்டப்போகிற நேரத்தில், மருந்து கசக்கும் என்ற எண்ணத்தில் வாயை இறுக மூடிக் கொண்டு குழந்தை அழ ஆரம்பித்தால், அந்த அழுகையைப் பார்த்து. குழந்தை அழுகிறதே என்று மருந்தைத் தராமல் விட்டு விடுவாளேயானால் தாய் என்ற ஸ்தானத்திலேயிருந்து அந்தத் தாய் இறங்கி விடுகிறாள் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டை நான் சொல்லவேண்டிய தேவையில்லை. அழுதாலும் குழந்தை யினுடைய உடல் நலத்தைக் கருதி அந்தக் குழந்தையினுடைய வாயிலே மருந்தைப் புகட்டுகிற தாய்தான் உண்மையிலே தாய், பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயாக இருக்க முடியும் என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

[திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்] [1979 மார்ச் 13

(முற்பகல் 11-40)

ஆகவே அத்தகைய தாய் உணர்வோடு, தாய்ப் பாசத்தோடு இன்றைக்குக் கொண்டு வரப்பட்டது தான் இந்தச் சட்டம் என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு இத்தகைய சட்டத்தினாலே, சிறையில் கூட்டம் நிரம்பி வழியும், சிறையில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் வருவதைத் தடுத்து விட்டால் குடி மறைந்து விடாது, சிறைச்சாலையில் கூட்டம் குறைந்து விடாது என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னபோது, குடிப்பழக்கம் என்பது, குடிக்கின்ற பழக்கம் என்று எடுத்துக் கொள்ளாமல் நல்ல குடும்பத்தினிடையே வந்த பழக்கம்—குடிப்பழக்கம் என்ற முறையிலே மாறுவதற்கு ஒரு வாய்ப்பையும் இந்தச் சட்டம் நிச்சயமாக உறுதி தரும் என்பதையும், அந்த நம்பிக்கையை நாம் நிச்சயமாகப் பெறுவோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறியாக வேண்டும்.

குடிப்பழக்கத்தினால் தனி மனிதன் பாதிக்கப்படுகிறான், ஒரு குடும்பம் பாதிக்கப்படுகிறது. ஒரு தனி மனிதன் பாதிக்கப்படுகிறான் என்ற அளவிலே சொல்வார்களேயானால் சைகலாஜிகல் என்று சொல்லக்கூடிய விதத்திலே, மெடிகல் என்று சொல்லக்கூடிய விதத்திலே, சோஷியலாஜிகல் என்று சொல்லக் கூடிய விதத்திலே இப்படி மூன்று விதங்களிலே பாதிக்கப்படுகிறான் என்பதை நான் இங்கே எடுத்துக் கூறியாக வேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று அன்றைக்கு ஆரம்பத்திலே உலகப் பெரியார் காந்தியார் அவர்கள் எழுப்பிய நேரத்திலே கூட பல்வேறு விதமான எதிர்ப்புச் சக்திகள் இந்த நாட்டிலே மூண்டெழுந்தன என்பதை நாம் உணர்வோம். குடியை நாமாக நீக்கிவிட முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால் சமுதாய நல்வாழ்வு முன்னேற்றமடைய வேண்டுமானால், இத்தகைய குடிப்பழக்கத்தை நீக்கித்தான் ஆகவேண்டும்.

நம்மையெல்லாம் வழி நடத்திச் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்கள், கர்ம வீரர் காமராஜ் அவர்கள் அத்தனை பேரும் மது விலக்கை முழுமையாக ஆதரித்தார்கள். மது விலக்கை அமுல் படுத்த வேண்டும் என்று தந்தை பெரியார் தமக்குச் சொந்தமான ஒரு காட்டையே வெட்டி விட்டார். அது எல்லோருக்கும் தெரியும். மது விலக்கை ரத்து செய்யவேண்டும் என்று யாரும் இந்த நாட்டிலே சொன்னதில்லை. அப்படிச் சொல்லி இந்த நாட்டிலே தலைவர்களாக யாரும் இருக்கமுடியாது என்பது கடந்த கால வரலாற்றிலே புதைந்து கிடக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான் மது விலக்கை ஆதரித்து பேசுகின்ற இந்த நேரத்தில் சில கோட்பாடுகளை எடுத்துக் காட்டியாக வேண்டும். அந்தக் கோட்பாட்டை எடுத்துக் காட்டும்போது, இந்த அரசு இந்தக்



1979 மார்ச் 13] [திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்]

திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்றே கொண்டு வரவில்லை,
நீண்ட காலமாக இந்த நாட்டிலே கொண்டு வரப்படாமல்
இருந்த, கொண்டு வரப்படவேண்டும் என்ற திட்டத்தைத்தான்
இன்றைக்கு இந்த அரசு செய்திருக்கிறது என்பதை இங்கே நான்
எடுத்துக்கூற விரும்புகிறேன்.

குடித்தவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையை கொஞ்ச
மாவது குறைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். மற்ற
சட்டங்களை, குற்றங்களுக்கான தண்டனைகளை எடுத்துப்
பார்க்கும்போது இது குறைவான தண்டனை தான். வெளிநாடு
களிலே கூட மதுவைக் கொஞ்சம் கொஞ்சமாக விலக்கவேண்டும்
என்று முயற்சி செய்கிறார்கள், அங்கேயெல்லாம் இரவு நேரங்
களில் வேகமாகச் செல்லக்கூடிய எந்தக் காரோட்டியையும் தடுத்து
அவர் மதுவை அளவுக்கு அதிகமாக அருந்தியிருக்கிறார் என்று
நிரூபிக்கப்படுமேயானால் அவருக்கு உடனடியாகக் கடுமையான
தண்டனை அளிக்கப்படுகிறது. இந்த நிலை இன்றைக்கு மேல்
நாடுகளில் இருக்கிறது. அது மட்டும் அல்ல. விமானத்திலே
போகிறவர்கள் பாதுகாப்புக்காக விமானத்தை ஓட்டுகிறவர்கள்
48 மணி நேரத்திற்கு முன்னாலே தன்னுடைய குடியை நிறுத்தி
யாக வேண்டும் என்று ஆய்வு போடப்பட்டு இன்றைக்கும் விமான
கூடத்தில் அமுல் நடத்தப்படுகிறது என்பதை நான் இங்கே
எடுத்துக்கூற விரும்புகிறேன். இதற்கு வேடிக்கையாக அறிஞர்
ஒருவர் சொன்னார், விமானத்தை ஓட்டுபவன் ஒரு தவறு
செய்கிறான் என்று சொன்னால், அந்தத் தவறே முதல் தவறாக
வும், கடைசி தவறாகவும் இருக்கும் என்று எடுத்துச் சொன்னார்.

நான் இப்படிக் கூறுகிற அதே நேரத்தில், 1937-ம் ஆண்டு
மது விலக்குச் சட்டத்தை முன் மொழிந்து மூதறிஞர் ராஜாஜி
அவர்கள் உரையாற்றினார்கள். அந்த உரையை நாம் இந்தக்
காலத்திலே எண்ணிப் பார்ப்போமானால் அது எவ்வளவு முக்கியத்
துவம் வாய்ந்தது என்பதை நாம் உணர முடியும். அவர் பேசுகிற
நேரத்தில் குறிப்பிட்டார், ''இந்தத் தீமையை ஒழிக்க வேண்டு
மென்பதில் எல்லோருக்கும் உடன்பாடு தான். ஆனால், இதை
எப்படி நிறைவேற்றுவது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.
இந்த அரசு இந்த விஷயத்தில் கொண்டுள்ள கருத்து என்ன
என்பது எல்லோருக்கும் தெரியும். நான் கூற விரும்புவது
எல்லாம் இது தான். இந்தச் சட்டம், ஒன்று நமது மாகாணத்தின்
அல்லது நமது அரசின் புகழை நிலைநாட்டும் அல்லது அழிக்கும்.

எனவே, இந்த மாமன்றத்தை நான் வேண்டுவதெல்லாம்
எங்களுக்கு இந்த முயற்சியில் ஈடுபட ஒரு வாய்ப்புத் தாருங்கள்.
அரசை நடத்துவதற்கான நிதியைத் தேடுவதில் பிரச்னைகள்
உள்ளது என்பதை நான் மறுக்கவில்லை. அதைக் குறைத்துக்
கூறவுமில்லை. முஸ்லீம் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்து
இந்தக் கருத்தை வரவேற்றார்கள். முஸ்லீம் அல்லாதவர்கள் பலர்
எதிர்ப்பு தெரிவித்தார்கள். இவ்வாறு அவர்கள் தங்கள் கருத்துக்
களை வெளியிட்டதனால் எங்களுக்கு ஊக்கம் அளிப்பதாகவே
உள்ளது. இந்த மக்களின் கருத்துக்களை அவர்கள் பிரதிபலிப்ப

தாகவே எடுத்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதில் கஷ்டம் இருக்கிறதென்றால் குற்றப் பரம்பரை யினர்களையும் சமூக விரோதிகளையும் சட்டத்தைக் கொண்டு அடக்கி வைப்பதில் உள்ள கஷ்டத்தை விட இது ஒரு பெரிய கஷ்டமாக இருக்காது என்று கூறுகிறேன்.'' என்று 1937-ம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஆங்கிலத்தில் உரையாற்றி யதன் தமிழாக்கம் தான் நான் படித்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

அது மட்டுமல்ல, 1974-ம் ஆண்டு இன்று எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு கலைஞர் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ''மது விலக்குக் கொள்கையை ஒத்தி வைக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டபோது அதற்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் பலமான மறுப்புகள் தெரிவிக்கப் பட்டன. தோழமைக் கட்சிகளின் சார்பிலும் நம்முடைய முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல்—

''நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு''

என்ற வகையில் இடித்துக் காட்டப்பட்டது.

ஆயினும் அன்றைக்கு இருந்த பல்வேறு நிலைமைகளை நான் இந்த மாமன்றத்தில் எடுத்து விளக்கி—''இப்போது மது விலக்கை ஒத்தி வைப்பது தவறு என்றாலும் வேறு வழி இல்லை'' என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொண்டேன். பிறகும் நான் அன்று பேசிய பேச்சுக்களின் அவைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால், எதிர்க்கட்சி, தோழமைக்கட்சி யோசனை களுக்கு மதிப்பளித்த அதே நேரத்தில் அவர்களுடைய உணர்வு களுக்கு மதிப்பளிக்கிறோம் என்ற வார்த்தையைத் தெரிவித்து மது விலக்கை ஒத்தி வைத்தது முதல் இன்னாள் வரை—நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே குறிப்பிட்டதைப் போலவும், துணை மானியக் கோரிக்கையில் எடுத்துச் சொன்னது போலவும், அண்ணல் காந்தியடிகள் நெறி நின்ற அண்ணா அவர்கள் அமைத்த அரசு ஏதோ ஒரு முள் தன்னுடைய நெஞ்சில் குத்தியது போன்ற உணர்வோடுதான் இந்த மது விலக்குக் கொள்கையை ஒத்தி வைத்ததில் இருந்து இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.'' ஆகவே, ஒரு முள் நெஞ்சில் குத்தியது என்பதை இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாக கூறியிருக் கிறார்கள்.

அதே போல, மது விலக்குக் குறித்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957-62 ஆம் வருட காலத்தில் சட்டசபையில் பேசினார். ''மது குடித்து விட்டு, தெருவில் அலங்கோல மாகவும், அநாகரீகமாகவும் நடக்கும் கலகங்களும்,



கலவரங்களும் மது விலக்கு அமுலாகியுள்ள காலத்தில் காண வில்லை. இந்த ஒரே ஒரு காரணத்திற்காகவேணும், மது விலக்கைச் சிறிதும் தளர்த்தக் கூடாது-வேறு சில மாநிலங் களைப் போல மது விற்பதற்கு வழி செய்தலும் கூடாது'' என்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, மது விலக்கைப் பற்றி முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் 1968-ல் பிரகடனம் செய்தார்கள். 'மது விலக்குப் பற்றி சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அகில இந்திய மதுவிலக்கு மாநாடு நடைபெற்றது. அண்ணா, காமராஜ், சுசிலா நய்யார் ஆகியோர் கலந்து கொண்டனர். மது விலக்கு மாநாட்டில் அறிஞர் அண்ணா பேசியதன் சாரம். 'தமிழ்நாட்டில் மது விலக்கு அமல் செய்யப்பட்டு இருக்கிறது. மது விற்பனை மூலம் கிடைக்கும் பல கோடி ரூபாய்கள் வருமானம் இல்லை. இந்த வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடு செய்யவில்லை. இதே சமயம் மது விற்பனை நடக்கும் மாநிலங்கள் மது விலக்கைக் கொண்டு வர மத்திய அரசு உதவும். வருவாய் இழப்பை ஈடுசெய்து வரும் என்று கூறப்படுகிறது. ஆனால், ஏற்கனவே—மது விலக்கில் முழு நம்பிக்கை வைத்து அமல் செய்துவரும் தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு மத்திய நிதி உதவி இல்லை என்று மறுக்கப் படுகிறது'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள். அதோடு மட்டும் அல்ல. அண்ணாவை விட்டு நீங்காத பழக்கம், நிருபர் கேள்வி கேட்க பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில் அளித்தார். மது விலக்கு குறித்து உங்களது திட்டவட்டமான கொள்கை என்ன? அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில், ஒரே வாக்கியத்தில் பதில் சொல்கிறேன். பாதியைச் சொல்கிறேன் மீதியை நீங்கள் (நிருபர்கள்) முடியுங்கள் பார்க்கலாம் என்று சொல்லி I am addicted to........என்று சொன்னார். நிருபர்கள் உடனே 'snuffing' என்றும் 'playing cards' என்றும் பல விதமாகச் சொன்னார்கள். பின்னர் அண்ணா சொன்னார், I am addicted to prohibition.

(முற்பகல் 11.50)

மது விலக்குப் பழக்கத்திற்கு நான் அடிமை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். கெட்ட பழக்கத்திற்கு அடிமை என்பது வழக்கம். ஆனால் அண்ணா அவர்கள் மது விலக்குக்கு அடிமை என்று எடுத்துச் சொன்னார்கள். அது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த சொல் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அண்மையிலே மருத்துவர்கள் எல்லாம் கூட இரண்டு குழு வினராகப் பிரிந்து, ஒரு குழுவினர் மது விலக்குத் தேவை என்று வாதிட்டார்கள். இன்னொரு குழுவினர் மதுவிலக்குத் தேவை யில்லை என்று வாதிட்டார்கள். இப்படி வாதிட்டுக் கொண்டிருக்கும்போதே ஒரு கட்சியைச் சேர்ந்தவர் இன்னொரு கட்சிக்குப் போய் வேண்டும் என்றும் வேண்டாம் என்றும்

வாதிட்டார்கள், இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் இந்தத் தமிழ்நாடு கண்டுகொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

மதுவுக்கு பழக்கமாகிவிட்ட 60 வயதுக்காரர் அந்தப் பழக்கத்தைக் கைவிட மாட்டார், அவரால் நிறுத்த முடியாது என்று பேராசிரியர் அவர்கள் இங்கே கூறினார்கள். 60 வயதுக் காரரைக் காப்பாற்ற முடியாது என்று சொன்னாலும் வளர்ந்து வரும் சமுதாயத்தின் நலனை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தின் மூலம் இந்த வளரும் சமுதாயம் மதுப் பழக்கத்திலிருந்து மீட்கப்படுகிறது.

ஒரு தாய் மதுப்பழக்கத்திற்கு ஆளாகி இருந்தால், அந்தத் தாயின் கருவிலே இருக்கின்ற குழந்தை பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுகிறது. கை, கால் முடமாகலாம்; கண் பார்வை மங்கலாம்; வளர்ச்சி கூட தடைபடலாம் அல்லது குறையலாம் என்று மருந்துவத் துறை ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது.

ஒரு தந்தைக்கு மதுப்பழக்கம் இருந்தாலும் அத்தகைய பயங்கர நோய்கள் அவர்களுக்கு உருவாகின்ற குழந்தைகளுக்கு ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது என்று இன்றைக்கு மருத்துவத் துறையிலே இருப்பவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். அதை இந்த நாட்டுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மதுப் பழக்கத்திற்கு ஆளானவர்களுக்கு ஏற்படும் வியாதியை ஒரு வியாதி என்று யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. எல்லாவிதமான வியாதிகளும் அவர்களுக்கு ஏற்படுகிறது. இந்தக் கொடிய மதுப்பழக்கம் இதயத் துடிப்பைப் பாதிக்கிறது; இதயத்தைப் பாதிக்கிறது; வீக்கம் ஏற்படுகிறது; மூளை பாதிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் முக்கிய மான உறுப்புகளிலே ஒன்றான லிவர் வீங்கி, சீழ் பிடித்து, 'சிரோசிஸ்' என்று சொல்லக்கூடிய கொடிய நோய் ஏற்படும் சூழ் நிலையை இந்த மதுப்பழக்கம் ஏற்படுத்துகிறது.

மதுவை அதிகமாக அருந்துபவர்களுடைய மூளை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மூளை ஒரு முக்கியமான பகுதி. சென்டர்ஸ் என்று சொல்லக்கூடிய, ஜங்க்ஷன் என்று சொல்லக்கூடிய இடம் மூளையாக அமைந்திருக்கிறது. சென்டர்ஸ் என்று சொல்லக் கூடிய அந்த இடம் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கப்படுமானால் மற்ற உறுப்புகள், மற்ற பகுதிகள் ஒவ்வொன்றாகக் கெட்டு விடும், செயலிழந்துவிடும் என்று இன்றைக்கு மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நீண்ட நாட்களுக்குப் பின்னால்தான் அத்தகைய குறைபாடு ஏற்படும் என்றாலும் ஆரம்பத்திலேயே இந்தப் பழக்கத்தை நிறுத்திவிடுவதுதான் சிறந்த முறை என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். மதுப்பழக்கத்திற்கு ஆளான ஒருவர் இடை





யிலே அந்தப் பழக்கத்தை நிறுத்திக் கொண்டால் 'கார்டியாக்' என்று சொல்லக்கூடிய இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் குறைகின்றன என்று தற்போது மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு பிரச் சனைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்த பின்னால்தான் மக்களுடைய நல்வாழ்வுக்கும், அவர்களுடைய உடல் நலத் திற்கும் ஏற்ற வகையில், நல்வாழ்வைப் பேணுகின்ற வகையில் இன்றைக்கு இந்த மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறோம். இதைப் பார்த்து யாரும் பயப்படத் தேவையில்லை, பயப்பட வேண்டிய அம்சங்கள் எதுவும் இதிலே நிச்சயமாக இல்லை. இந்தச் சட்டம் யாரையும் பயப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்படவில்லை.

பட்டுக்கோட்டை வட்டாரத்திலே சர்வகட்சி சார்பிலே அமைக்கப்பட்ட ஒரு மதுவிலக்குக் கமிட்டி செயல்பட்டுக் கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் கமிட்டியினர் ஒன்றாகச் சேர்ந்து இத்தகைய ஒரு மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுலாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஒரு மாநாடு நடத்தினார்கள். தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் கூட அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு பேசி னார்கள். அப்போது அங்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு நல்ல மதுவிலக்குச் சட்டத்தை விரைவிலே இந்த அரசு கொண்டுவர இருக்கிறது; அது கொஞ்சம் கடுமையாக இருக்கும் என்று சொன்னபோது கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்து அதை வரவேற்றார்களே தவிர அது கடுமையான சட்டம்; அந்தச் சட்டம் வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை.

இன்றைக்கு மது ஒழிப்புக் கமிட்டியிலே சர்வ கட்சியின் சார்பில் சுமார் 70 பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலே தென்னிந்திய நல உரிமைச் சங்கம், சுய மரியாதை இயக்கம், திராவிடர் கழகம் போன்ற இயக்கங்களில் உறுப்பினராக இருந்த திரு. எஸ். பாப்பையன் அவர்கள்தான் இன்றைக்குத் தலைவராக இருக்கிறார்கள்.

அடுத்து திரு. எஸ். வைத்தியலிங்கம். இவர் ஜனதா இயக்கத்தைச் சேர்ந்தவர். இவரும் உறுப்பினராக இருக்கிறார். பெருந்தலைவர் காமராஜர் உயிருடன் இருந்தபோது நடத்திய போராட்டங்களில் பங்கு பெற்றவர். குறிப்பாக 72-ல் நடந்த விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைத் தண்டனை பெற்றவர்.

அடுத்து திரு. ஆர். வி. சோழவேந்தன். இவர் பட்டுக் கோட்டை நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவர். இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகரச் செயலாளரின் கோரிக்கையின்படி மதுவிலக்குக் கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்தவர்.

அடுத்து அந்த மதுவிலக்குக் கமிட்டியிலே பின்வருபவர்கள் கமிட்டிச் செயலர்களாக இருக்கின்றனர். திரு. ஏ. வைரக்கண்ணு என்பவர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் நகரச் செயலாளராக இருக்கிறார். 1972-லே நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் சிறை சென்றவர். அடுத்து திரு. எஸ். ஏ. சர்மா என்கிற அருணாசல சர்மா. இவர் ஜூலை 30-ல் மது ஒழிப்பு மாநாடு நடக்கும்போது இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் இருந்தவர். தற்போது இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சியின் நகரச் செயலாளராக இருப்பவர். இவர் 22 வருட காலமாக கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பவர். அடுத்து திரு. ஆர். மாரிமுத்து. இவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகர துணை அமைப்பாளர். அடுத்து திரு. துரைமாணிக்கம். இவர் தஞ்சை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர். அடுத்து திரு. கருப்பையா இவர் ஜனதாக் கட்சியின் நகரச் செயலாளர்.

அடுத்து திரு. தம்பி எஸ். திருச்சிற்றம்பலம் என்பவர் இக்கமிட்டியின் பொருளாளராக இருக்கிறார். இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில பொதுக்குழு உறுப்பினர் இவர் தஞ்சை மது ஒழிப்பு மாநாட்டில் கேடயம் பெற்றவர் இவரைக் கமிட்டியில் இருந்து ராஜினாமா செய்ய நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வற்புறுத்தியும் இதுவரை மது ஒழிப்பு கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்யாமல் தொடர்ந்து கமிட்டி பொருளாளராக இருக்கிறார். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் இருக்கிறார்.

அடுத்து செயற்குழு உறுப்பினர்களில் முக்கியமானவர்களைப் பற்றிச் சொல்கிறேன். திரு. தீப்பொறி எஸ். இராமசாமி என்பவர் ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சாளர். இவரை மது ஒழிப்புக் கமிட்டியிருந்து ராஜினாமா செய்யச் சொன்னதால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து ராஜினாமா செய்துவிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவர். அடுத்து திரு. ஏ. முருகேசன். இவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். திரு. சுப்பிரமணியம் என்பவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர். திரு. சி. அடக்கலம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர். திரு. டி. கே. சீனிவாசன், இவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, இத்தக் கமிட்டியிலே பல கட்சிகளையும் சார்ந்தவர்கள் அங்கம் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஆர். சோழவேந்தன் அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள் என்றால் நான் இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அதாவது பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையைக் காப்பாற்றுவதற்கு பாடுபட்டாரோ, அதாவது எத்தனை கோடியினை இழந்தாலும் தெருக்கோடியிலே இருக்கின்றவர்கள் மதுப்பழக்கத்திற்கு ஆளாக விட மாட்டேன் என்று அண்ணா அவர்கள் கொண்டிருந்த இலட்சியத்தைக் காப்பாற்ற மனமில்லாமல், இந்த மாதிரி





மதுவிலக்குக் கமிட்டியிலே உறுப்பினராக இருப்பதே பாவம் என்று கருதக்கூடியவர்களாக இருக்கிறார்களே என்று தான் எண்ணவேண்டியிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மதுவினால்
ஏற்படுகின்ற தீமைகளைப் பற்றி எல்லாம் மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சரவர்கள் மருத்துவ ரீதியிலே இதுவரையில் அரிய
விளக்கங்களை இங்கே தந்தார்கள். அதிலே நாங்கள் குறுக்கிட
விரும்பவில்லை. எங்கள் கட்சியினரோ, அல்லது பேராசிரியர்
அவர்களோ எடுத்து வைத்த கருத்திலே நாங்கள் இந்த மது
விலக்குக் கொள்கையை எதிர்க்கிறோம் என்கிற வாதத்தை
வைக்கவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற சட்டம் போதுமானது.
புதிதாக ஒரு அவசரச்சட்டம், கடுமையான சட்டம் தேவை
இல்லை என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம். அது
மாத்திரமல்ல. இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு
வியாசர்பாடியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிற
போது தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அமைச்ச
ராக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், நிச்சயமாக
ஓராண்டு காலம் தண்டனை தருகின்ற அளவுக்கு சட்டம்
வருகிறது என்று மத்திய அமைச்சரை வைத்துக்கொண்டு ஒரு
வாக்குறுதியினைத் தந்தார். அது எல்லா பத்திரிகையிலேயும்
வந்திருக்கிறது. எனவே, அவர் சொன்ன வாக்குறுதிக்கேற்ப
அதற்குரிய பகுதி இந்தச் சட்டத்திலே இடம் பெறவில்லை.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத்
தலைவரவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்ச
ரவர்கள் இந்த மது விலக்கினை அமல்படுத்துவதற்கு, அது
தீவிரமாக செயல்படுவதற்கு உரிய சட்டத்தைக் கொண்டு
வருவோம் என்றுதான் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்
கிறார்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு இந்தச் சட்டம்
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினால் பாதிப்பு
ஏற்படும் என்று சொல்வதைவிட .....

[நண்பகல் 12-00]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான்
கேட்பது, அவசரச் சட்டம் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு
முன்னால் வியாசர்பாடியில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு
நிகழ்ச்சியில் அறிவித்தார்கள், அந்த அறிவிப்பில் இந்தச்
சட்டத்தில் அமைச்சர்களும் ஈடுபடுத்தப் படுவார்கள், அவர்க
ளுக்கும் இந்தச் சட்டப்படி ஒரு ஆண்டு தண்டனை கிடைக்கும்
என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தாரா, இல்லையா?
அது இச்சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, நான் அறிவித்த கொள்கையிலிருந்து இந்த
அமைச்சரவை பின்வாங்கவில்லை, அப்படி இந்தச் சட்டத்தில்

சந்தேகம் ஏற்படும் என்ற நிலைமை இருக்குமானால் நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல் சட்டம் மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் மாற்றுவதற்காகத்தான் இதை ஒரு ஆய்வுக் குழுவிற்கு, பொறுக்குக் கமிட்டிக்கு, செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இங்கே அதைத் தெரிவிக்கக்கூடிய வகையில் சட்ட அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அதை விளக்கிச் சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் அதற்கான அமெண்ட்மெண்ட் இப்போதே அவையில் வினியோகிக்கப்படவேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Enhanced punishment has been provided for second offences committed by 'public servants' as defined under Clause 14-A of Sec. 3 and persons other than public servants, that is, private persons, Ministers also will come within the ambit of that Clause and no Minister can be outside the ambit of that definition.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியிருக்கும்போது குறிப்பிட்டு முதல் அமைச்சர் அவர்கள் ஏன் அதை அறிவித்தார்கள் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டம் வருவதற்கு முன்னால் பேசியதை இப்போது ஏன் அவர்கள் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. மீண்டும் சொல்கிறேன். எல்லோரையும் சேர்த்திருக்கிற நிலைதான் இருக்கிறது. சட்டம் வருவதற்கு முன்னால் சொன்னதை, அப்படி ஏன் சொன்னார்கள் என்று இப்போது கேட்பது எப்படிப் பொருத்தம் என்று தெரியவில்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இது மதுப் பிரசங்கமோ, மலைப் பிரசங்கமோ. 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' அல்லது பொதுமக்கள் என்பதில் அமைச்சர்களும் சேருவார்கள் என்றால் அதைத் தனியாக மென்ஷன் செய்யத் தேவையில்லையே. அரசாங்க அதிகாரிகளும் பொதுமக்கள்தான். அப்படியிருக்கும்போது ஏன் அவர்களை மட்டும் 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' என்று சொல்லி, அதுவும் போலீஸ் ஆபீசர்கள், புரொஹிபிஷன் ஆபீசர்கள் என்று ஏன் பிரித்துக் காட்ட வேண்டும்? ஏன் அமைச்சர்களையும் அதில் இணைக்கக் கூடாது? பொது மக்கள் என்றால் அமைச்சர்களும், அதிகாரி





களும் அதில் வரமாட்டார்களா? ஏன் ஆபீசர்கள் என்று தனியாகப் போடவேண்டும்? ஆகவே இது முரண்பாடாக இருக்கிறது. இவ்வளவு பெரிய சட்டமேதைக்கு அது எப்படித் தெரியாமல் இருக்கும்?

திரு. அ. ரகுமான்கான் : ஐ. பி. ஸி. செக்ஷன் 21-ல் 'பப்ளிக் சர்வென்ட்ஸ்' எனபதற்குத் தெளிவாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். 'பப்ளிக் சர்வன்ட்ஸ்க்கு' ஒரு தண்டனை 'பப்ளிக் சர்வெண்ட்ஸ் அல்லாதவர்களுக்கு' ஒரு தண்டனை என்று சொல்லும்போது, 'போலீஸ் ஆபீசர்ஸ்', 'ப்ரொஹிபீஷன் ஆபீஸர்ஸ்' அதர் ஆபீசர்ஸ், 'ஆத்தரைஸ்ட் பை கவர்ன்மென்ட்' என்று தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. கிரிமினல் ப்ரொசீஜர் கோடில் 'பப்ளிக் சர்வன்ட்ஸ்' என்பதற்கு டெபனிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மலைப்பிரசங்கம் செய்யாமல் சட்டத்தைப் பற்றி சொன்னால் சௌகரியமாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே. பப்ளிக் சர்வன்ட்ஸ் என்று சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதை நான் புரிந்து கொண்ட அளவிற்கு அதன் ஸ்பிரிட்டைச் சொல்கிறேன். பப்ளிக் சர்வன்ட்ஸ் என்பதற்கு தெளிவாக விளக்கம் தரக்கூடிய க்ளாஸ் இருக்கிறது. வேலியே பயிரை மேய்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிற அல்லது நிறைவேற்றுகிற அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றுதான் போலீஸ் ஆபீசர்ஸ், ப்ரொஹிபிஷன் ஆபீசர்ஸ் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

It is self-explanatory and self-sufficient என்ற விவரத்தை தங்கள் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியானால், ஹைக்கோர்ட் ஜட்ஜ் பப்ளிக் ஸெர்வென்ட் இல்லையா, . . . . அமைச்சர்கள் பப்ளிக் ஸெர்வென்ட் இல்லையா ?. .

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எதிர்க்கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற திருத்தங்கள் இந்த அவசரச் சட்டத்தை நீக்கவேண்டும் என்பது. அதற்குப் பதிலாக இதை தீவிரப்படுத்தாமல் சட்டத்தை தளர்த்தவேண்டும் என்கிற நிலையைத் தான் நாம் இப்போது வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. துரைமுருகன் : திரு. கூத்தக்குடி அவர்களுக்கு நான் மாறுபட்டு பேசவில்லை. நமது சட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை நான் எதிர்பார்க்கிறேன். பப்ளிக் ஸெர்வென்ட் என்பதில் பொதுமக்களும் வருவார்கள், அந்த

அடிப்படையில், அமைச்சர்களும் வருவார்கள், அமைச்சர்கள் என்று தனியாக குறிப்பிட வேண்டிய தேவையில்லை என்று சொன்னார்கள். அப்படி எடுத்துக் கொண்டால், அமைச்சரும் பொதுமக்களில் ஒருவர் தான். பப்ளிக் சர்வெண்டும் பொது மக்களில் ஒருவர் தான். அப்படியென்றால் பப்ளிக் ஸெர்வென்ட் என்று பிரித்து தனியாகத் காட்டுவானேன்? அதற்கும் இதற்கும் ஏன் முரண்பாடு இருக்க வேண்டும்? இதற்கு சட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, in my reply I will give a detailed answer to the question raised by the hon. Member Thiru Rahman Khan and Thiru Duraimurugan, but for the present it will be sufficient for me to say this much. This definition does not over-ride the definition under the Indian Penal Code. Section 21 of Indian Penal Code defines who is a public servant and there are, to the best of my knowledge, (I will tell from my memory) ten clauses. It has not been provided for in this Act notwithstanding any other definition under any other law. Therefore, it is open to any man to contend here, as X or Y, who are Ministers, or Judges or Magistrates or any other officer or categories who fall within these ten clauses of Section 21. It is open to you to contend he is a public servant. We have made special provision because you have attributed bribery against law enforcement officers. Some of you have attributed collusive action in profiteering. Some of you have attributed even participation in illicit distillation. So this Government was very anxious that the law enforcement officers found drinking must be punished doubly and therefore, they have made this distinction.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தின் அடிப்படையில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 'பப்ளிக் ஸெர்வென்ட்' என்ற பரவலான பொருள் தரும் ஒரு தொடரை இதில் உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக 'ஆபீஸர் கன்ஸர்ன்டு' அல்லது 'என்போர்ஸ்மென்ட் அஃபிஷியல்ஸ்' என்ற தொடரை உபயோகித்திருக்கலாம். இப்படிப்பட்ட அளவிற்குத் தான் இப்போது கொடுக்கப்பட்டுள்ள 'பப்ளிக் ஸெர்வென்ட்' என்பதற்கான டெபினிஷனில் தெளிவாக்கப்படுகிறது. வெறும் 'பப்ளிக் ஸெர்வென்ட்' என்று வரும்போது, அதில் அமைச்சர் உட்பட்டவரா, இல்லையா என்ற கேள்வி வருகிறது. ஆகவே, இதில் 'பப்ளிக் ஸெர்வென்ட்' என்று கூறப்பட்டிருப்பதற்குப் பதில் 'என்போர்ஸ்மென்ட் அஃபிஷியல்ஸ்' என்கிற பொருத்தமான சொற்றொடரை ஏன் பயன்படுத்தக்கூடாது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து இதை வளர்க்கவேண்டாம், நீங்கள் குறுக்கிட்டு கேட்டது போதும். தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்..





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இந் நாட்டில எல்லோரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப் படையில்தான் இந்தச் சட்டத்தை....

THIRU M.A. LATHEEF: Mr. Speaker, Sir, Some of the provisions of the Bill are of very serious consquences and of deeper implications. What I submit is that the Hon. Law Minister should give some deep thought to this. I was very much surprised to hear the explanation given by the Hon. Law Minister. I do not know what are the reasons which prompted the Hon. Law Minister to give such reasons. The question is whether you can treat persons in similar circumstances in dissimilar fashion. Will it not offend equality before law and offend Article 14?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், நீங்கள் இனிமேல் பேசப்போகிறீர்கள், அப்போது இந்தச் சந்தேகங்களை எல்லாம் கேட்கலாம். இப்போது முடித்துக் கொள்ளுங்கள்.

THIRU M. A. LATHEEF: Therefore, I would like to get a clarification from the Hon. Minister whether this will not offend Article 14 and to what extent it is repugnant to Article 14 of the Constitution.

(பிற்பகல் 12-10)

The other one is whether in view of the clear violation of the provisions of Article 14, this Legislature is competent to enact this law which has been precluded under Article 13 of the Constitution. These are the main questions.

The other questions emanate only from the answer given by the Hon. Minister on this point. That is why we press that there are so many legal implications in this Bill which should be gone into deeper and then only it should be made a statute. Otherwise it will be struck down by the Court. What is the use?....

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, I am thankful to the many hon. Members of this House, particularly Thiruvalargal Ambikapathy, Rahman Khan, R. Krishnan, Kandaswamy, Sundararajan, Durai Murugan, Latheef Sahib, K. Suppu, Margabandhu, Pandiyan, James, Marimuthu, Professor Anbazhagan and Hon. Soundararajan, the Health Minister. I am really grateful to the number of ideas and particularly some of the suggestions made by the Hon. Members which will be duly weighed and considered by the Government at any appropriate time, if circumstances warrant.

I would like to answer one after another and in a brief skeleton summary because if I want to answer point by point in such detail as has been done by the speakers, I would really need the time that has been occupied by all the Members put together.

It is undoubtedly a paramount necessity for me to tell this House respectfully that this socio-economic measure has been devised for promoting the social good of Tamil Nadu. By invoking my beloved brother Amarar Anna's name, I plead that he was addicted to prohibition. I must say in the light of the speech of the Health Minister Thiru Soundararajan that there is no difference of opinion about the need for prohibition. With this startling proposition with which we are starting our discussion, I must straigh away say, barring I think Thiruvalargal Ambikapathy and Krishnan, every one of the Members prefaced their speeches and criticisms by welcoming prohibition. I would very much like to know whether Thiruvalargal Ambikapathy and R. Krishnan are opposed to the prohibition policy itself. In their speeches they never made it clear that they welcome prohibition. I think they made no indication about their harty's stand in respect of the issue of prohibition..

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, இது ரொம்பவும் முக்கியமான பிரச்னை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்தப் பிரச்னையிலே எல்லா அங்கத்தினர்களும் புரிந்துகொள்ளக்கூடிய அளவிலே தமிழிலேயே சொன்னால் நல்லது. இந்த மசோதாவிலே சொல்லப் பட்டிருக்கிறது, 'மெம்பர் இன் சார்ஜ்' தான் இதை 'மூவ்' பண்ணவேண்டும், அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று இருக்கிறது. இதற்கு முதல் அமைச்சர் அவர்கள்தான் 'மெம்பர் இன் சார்ஜ்' அவருடைய அழகு தமிழைக் கேட்க ஆவலாய் இருக்கின்றார்கள். எனவே, தமிழ் தெரிந்த முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: May I remind the hon. Member, Thiru Suppu, that there was a discussion....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் ஆங்கிலத் திலும் பேசலாம். தமிழிலும் பேசலாம் என்று இருக்கிறது.

திரு. க. சுப்பு : ஏற்கெனவே சுகாதார அமைச்சரைப் பேச விட்டீர்கள், அவர் ஒன்றும் அமெண்ட்மென்ட் கொடுக்கவில்லை. மெம்பர் இன் சார்ஜ் ஆப் தி பில் அவர் இல்லை. டைம் கூடப் பார்க்காமல் பேச விட்டீர்கள்.





In the Rules it is quite clear. According to Rule 94, no motion that a Bill be taken into consideration or be passed shall be made by any Member other than the Member-in-charge of the Bill.....

யார் இன் சார்ஜ் ஆப் தி பில்லோ அவர்தான் பதில் சொல்ல வேண்டுமென்று விதி இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாவிட்டால் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் எப்படிப் பேசலாம் என்று கேட்டார்கள். அவரும் உறுப் பினர் என்ற முறையில் பேச வாய்ப்பு உண்டு. அவையில் ஆங்கிலத் திலும் பேசலாம் என்று விதி இருக்கிறது.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Member-in-charge of the Bill–It is the Law Minister who moved the Bill. So, the Law Minister is replying to the discussion. Where is it stated that the Chief Minister should reply to the discussion ? The Rules are very clear in the sense that the Member who moves the Bill has a right to reply. It is the Law Minister who has moved the Bill and he has every right to reply.

திரு. க. சுப்பு : மெம்பர் இன் சார்ஜ் ஆப் தி பில் என்று சீஃப் மினிஸ்டர் பெயரை அஜெண்டாவில் போட்டிருக்கிறீர்களே.

THE HON. THIRU K. NARAYANASWAMY May I respectfully remind....

MR. SPEAKER: "Rule 2 (1) (i) 'Member-in-charge of a Bill ' means–(i) in the case of a Government Bill, any Minister" என்றுதான் போட்டிருக்கிறது. அவர் பதில் சொல்வதில் தப்பு இல்லை.

திரு. மு. அம்பிகாபதி ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் குடிப்பழக்கம் உள்ளவர்கள் அங்கத்தினர்களாகச் சேர முடியாது. இது எங்கள் கட்சியின் நிலை. இரண்டாவது, இத்தகைய சட்டங்களின் மூலம் நிச்சயமாக மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்த முடியாது என்பது எங்கள் கட்சியின் நிலை; அமைச்சர் அவர்கள் பதிலுக்குப் பிறகு திருத்தத்தைக் கொடுத்தவன் என்ற முறையில் சில விளக்கங்களைச் சொல்ல பின்னால் வருகிறேன்.

திரு. என். சங்கரய்யா ; மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எங்கள் கட்சியின் உறுப்பினர் ஆர். கிருஷ்ணன் அவர்கள் இந்த மசோதாவின் மீது பேசும்போது கட்சியின் நிலை என்ன என்று சரியாகச் சொல்லவில்லை என்று சொல் னார்கள். இந்த மசோதாவை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்த முயன்றபோதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

கட்சி இந்தச் சட்டத்தை எதிர்த்திருக்கிறது. உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த மசோதாவின் மூலம் கொண்டு வரப்படுகிற புதிய சட்டமானது சாதாரண மக்களை மிகவும் பாதிக்கும் என்ற காரணத்தால் வன்மையாக எதிர்க்கிறது என்ற கொள்கையைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

மதுவிலக்கு என்பதை சட்டத்தின் மூலமாகக் கொண்டுவர முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதவில்லை. மற்ற பிரச்சாரங்கள் மூலமும் மக்கள் மனதைத் திருத்துவதன் மூலமுந்தான் இதுபோன்ற சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது எங்கள் கட்சியின் நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY : I am obliged to both the Members for the clarification.

Professor Anbazhagan was elaborately quoting from Sadasivam Committee's Report. But I would respectfully submit to this House that the 1937 Act may be sufficient in some respects. but the Government felt like this. Barring only a few years of interregnun this Act has been continuously in force from 1937. I think for only

[பிற்பகல் 12-20]

2 or 3 years, it was not in force. Now what is the actual salvation that has been achieved by the continuous existence of this Act from 1937 with the old provisions as that Act contained. There was not really much success in the enforcement of, Prohibition. Therefore, the Government thought that it should be enforced a little more stringently along with the recommendations made by Sadasivam Committee in its report in Chapter 8 dealing with the provisions of the Prohibition Act. About this, the Learned Judge, Shri Sadasivam, says "Soft-pedalling cases against distillers and bootleggers and passing sentences of petty fines, not really in conformity with the spirit of the Prohibition Act, by Magistrates could not be attributed to any defect in the Act or the Rules. The law breakers came to enjoy and wield influence and command respect in Police stations and Courts. Public apathy developed into total disregard. Social workers had no voice. There was all round demoralisation. It is, however, heartening to witness a change in the atmosphere, approach and attributes now. We do hope that the sense of purpose and definite direction for stricter and more effective enforcement of prohibition will continue ". I shall read only the headings and not the detailed recommendations. 'Deterrent punishment for possession' for sale recommended. Offences of import, export, etc. should be more severely punished. Offences of keeping stills, etc., should be covered





by Section 4(1)(i). Terms of imprisonment and quantum of fine should be raised. Please remember there is another recommendation pertaining to empowering of Magistrates to award enhanced punishment. It has also been recommended that Magisrates should be empowered to award enhanced penalty. Enhancement of the punishment for the offences under sections 5 and 24 has been recommended. There is another recommendation pertaining to confiscation of vehicle and they said that it should be made mandatory and not discretionary. The powers of confiscation of vehicles should be vested in Collectors. We have given this power to Courts. The Courts are now vested with these powers. That Committee had also suggested drastic punishment for offences involving illicit liquor likely to cause death or grievous hurt. Special legislation for the detention of bootleggers has been recommended. In fact, they have recommended to enlarge and diversify the scope of bootleggers' illicit and unlawful activities and thus, thrive on breaking the law. It has, therefore, been represented that the provisions of the MISA should be amended to include Prohibition offences also. They have also recommended that the Government of India should be moved to take action for the application of COFEPOSA and if necessary, to amend the Constitution. They had also suggested that mahajar witnesses should not be necessary in certain cases. There were some comments made on this and a suggestion was made that it should be omitted. That is section 32. Later, it was said that the Legislature has considered this aspect of the case and provided under Section 15(c) of the Prohibition Act that certain offences alone shall be non-bailable. It should be noted that even in respect of non-bailable offences the Court has jurisdiction to release on bail, having regard to the facts and circumstances of the case. There is really no need to extend the scope of section 15 (*c*) of the Tamil Nadu Prohibition Act.

Another recommendation is that in regard to provision for entry, search and seizure in the absence of witnesses under certain circumstances and it is suggested that a provision is necessary. Maintenance of history sheets and master register has been recommended. Provision for externment of prominent bootleggers is another recommendation. Enlargement and greater use of Section 52-A of the Prohibition Act has also been recommended. The scope of extension of the Probation of Offenders Act was also discussed by them. It was suggested that this should be done through several social and welfare agencies and penal legislation should be directed mainly against the manufacturers and traffickers of illicit liquor. Such persons should not be given the benefit of the Probation

of Offenders Act. This was the observation made by the Committee. The burden of proving consumption of non-prohibited varieties of liquor should be on the accused. I will read only one sentence. "The Learned Judge says that the Act should be amended to provide that the burden of proving that the liquor consumed was not of an illicit variety, should be cast on the accused. Effective action is necessary to end official misconduct." In regard to this you have all made some complaint. I shall read only one sentence from the Report "We could, therefore, like to emphasise once again the need for improvement of the human element in the enforcement organisation, which in this context, would include the judiciary also".

Hon. Speaker, Sir, I have proved the need for stricter legislation, which provides for more severe punishment, from this Report of what is called the High Level Committee for the stricter enforcement of Prohibition in Tamil Nadu. The amendments suggested by this Committee headed by Justice Sadasivam have been incorporated in the Bill. Therefore, necessary changes have been brought forward in the amending Ordinance and in the Bill. I have already made my submission in regard to the definition of "Public Servant". I have nothing more to add. There was some criticism in regard to 4 (1) (J) and 4A. We are now concerned with the Bill which contains Section 4-A providing for enhanced punishment. The punishment mentioned in Section 4-A comes into effect on the date on which it is brought. A person is punishable with fine and imprisonment. There were criticisms about conspiracy and it was said that there was a danger of political parties—politicians—being punished under this. My submission is this. In the 1937 Act itself, there was such a provision. This was also gone into by the Sadasivam Committee. It has not been brought into existence by this Government. It has been there from 1937. About the onus of proof, Latheef Saheb had made some comments on that. I may respectfully submit to this House that in A. S. Krishna's case this question was raised in regard to Article 14 and Section 4 (2), of the 1937 Act was upheld by the Supreme Court—A.I.R. 1957 SC page 297.

"The Madras Prohibition Act is both in form and substance a law relating to intoxicating liquors, falling within Entry 31 of the Provincial List. The presumptions in Section 4 (2) are not presumptions which are to be raised in the trial of all criminal cases, as are those enacted in the Evidence Act. They are to be raised only in the trial of offences under Section 4 (1) of the Act. They are, therefore, purely ancillary to the exercise of the legislative power in respect of Entry 31 in List II. So also the provisions relating to search, seizure and arrest in Sections 28 to 32 are only with reference to offences committed or suspected to have been committed under the Act. They have no operation generally or to offences which fall outside the Act and are, therefore, ancillary to the legislation. The Madras Prohibition Act is thus in its entirety a law within the exclusive competence of the Provincial Legislature, and the question of repugnance under Section 107 (1) does not arise." About Article 14, they have given this opinion. "The contention, therefore, that there is no reasonable relation between the presumption and the offence is, in our opinion, based on misreading of the Section." Later on the learned Judges concluded by saying that there is no violation of the Article 14.



(பிற்பகல் 12-30)

There is another case reported in A.I.R. 1958 SC 61, Vaidyanatha Iyer's case.................

THIRU K. KANDASAMY. I would like to get clarification from the Honourable Law Minister . . . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY : I will not take much time. I will reply you. In the Sadasivam's Committee's report at page 51, it has been stated that the burden of proving that the liquor consumed was not of an illicit variety should be cast on the accused. Just because a man is charge-sheeted, it does not mean that he must prove that he is innocent. The prosecution has yet to discharge the burden of proof viz., that 'X' or 'Y' or 'Z' has consumed liquor. It is only after that proof by the Prosecution the burden of proof will be shifted to the accused that what he has taken is not of an illicit variety. Therefore, it would be clear that the burden of proving is still on the Prosecution. This is the law of the land. This is what has been laid down by the Supreme Court. I have already quoted from Sadasivam's Committee's report to state that there was no need for Mahajar, particularly in cases of illicit distillation, and that has been incorporated in Clause 32 of the present Bill.

Some doubt has been raised by Prof. Anbazhagan about "Public Servant".

THIRU K. KANDASAMY : We entirely agree with the spirit of the Government, in bringing forward this legislation. Our difficulty is about the practical execution of the law without affecting the innocent people.

நீராகாரம் குடித்தவனைக் கூட ஒரு போலீஸ் அதிகாரி. அன்ஸ்க்ருப்லஸ் அதிகாரி, அவன் குடித்திருக்கிறான் என்று சொன்னால், அதை மறுத்து, அவன் சாராயம் குடிக்கவில்லை யென்று சொல்வது சிரமம்.

Therefore, the onus of proof should lie on the Prosecution as before.

சட்டமா, சட்டத்திற்குப் புறம்பானதா என்பது எங்களுடைய பிரச்னை இல்லை.

The Government has got the right in bringing forward any legislation. It is within the powers of the Government. But practically innocent people are very likely to be punished by unscrupulous people.

ஆகவே. நிரூபிக்க வேண்டியது பிராசிக்யூஷன் தரப்பு என்று மாற்றினால், நிரபராதிகளுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்பது தான் எங்களுடைய கருத்து.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I will make it clear that the burden of proof is still on the Prosecution. For example, if 'A' or 'B' or 'C' consumes liquor and after proving that he has taken liquor, then the presumption is—please remember the word "presumption"—the burden is shifted to the accused to prove that he has not taken any illicit variety.

Thiru K. ANBAZHAGAN : I request the Honourable Law Minister to explain the method by which the person is expected to prove that he has taken only liquor.

THIRU K. ANBAZHAGAN : I request the Honourable Law instance. Now suppose, a man consumes a small quantity of medicinal preparation containing alchohal. Alchohal is liquor. There is no difficulty about this. A Sub-Inspector catches hold of a person and says that he has taken liquor. Now, we see the burden is upon the accused to prove that the liquor is not of illicit variety. If I were to defend him as a Lawyer appearing for the accused, I will say that he has taken a small dose of Waterbury's compound. This is only a permissible liquor and there is, therefore, no illicit variety involved. This is one example.



Then about the definition of the word "Public Servant" it has also been asked how a Public Servant can commit another offence under the Bill. I will give you an example. A Sub-Inspector indulges in illicit distillation. There is sufficient proof for this and he has also been dismissed. Please remember, there is a procedure in the Civil Services Regulation. Under the Civil Services Regulation, you have got to give notice and a reasonable opportunity. You cannot straightaway dismiss him. You have to give a reasonable opportunity. By way of a writ he will get a stay order from the Court. So only by stages you can do. First, the Government have to issue a notice stating that "why you should not be dismissed" and that you must give a reasonable opportunity and give him 2 to 3 weeks, time to explain. If this is not done, he will go to court with the order of dismissal and plead before the court that he has not been given a reasonable opportunity. On the strength of this he will get a stay order from the court. In the meantime he can commit another offence which will be quite exceptional. But there is a possibility. In the course of a trial which normally takes six months he can commit another

(பிற்பகல் 12-40)

offence, a second offence. Suppose he is under suspension, he can still go to a Court and get a stay. If I am engaged in practice, I can go to the Court on behalf of my client and plead that under Article 226 my client is under trial and please give stay orders. The trial is still going on. Therefore, such a contingency is not at all beyond the possibility or an actuality.

THIRU K. ANBAZHAGAN: Will it not be possible for the Honourable Minister to amend the Clause so that the Government servants or the public servants can be placed under suspension even at the first instance without the permission of the Court.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Even when I opened my speech I told that some of the valuable suggestions of the Hon. Members will be considered by the Government n due course. I am only answering the Hon. Member's criticism that a public servant cannot commit a second offence. There are possibilities of the public servant committing a second offence. I can give you any number of instances. But let us give some thought to this.

There were some criticisms particularly about the provision of "removal of persons". When a man is removed or expelled atleast from the place where he works, there will be some kind of a

social stigma. In another place he may have a respectable position. The Government have included this provision for four reasons. This provision is made only to remove a person from one district to another district, from Madras City to any district in mofussil or other area specified in such order. This can be done only after 3 repeated offences are committed. The third characteristic is, the power is not vested in any executive authority. It is vested only with a Judicial authority. The fourth point is that the Judicial Authority has got to exercise its discretionary powers. Only he *"may"* and not *"shall"* and it is a discretionary power. The discretionary power must always be exercised fairly and judiciously, according to Criminal Jurisprudence. These are the 4 points. There is no danger of any man being thrown out of the State. No illicit distiller or a bootlegger will be sent out to other States. Supposing A, B and C are offenders under this Act, "A" does illicit distillaton, "B" does the carrying, "C" does the selling, the offenders will be removed only from the place of their engaging themselves in the illicit distillery to some other place and not out of the State.

திரு. ஆ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார் —

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்ததும் கடைசியில் கேளுங்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் பேசலாம்.

THIRU A. RAHMANKHAN : Point of Order, Sir. I would like to know from the Hon. Minister why this banishment is made as a Judicial discretion ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This has been recommended by the Sadasivam Committee. And I would like to say " Banishment " is too strong a word. It is not " Banishment ". It is only "removal ". Let us all remember that the Madras City Police Act has got a provision for " removal ". Under Section 51(a) of the Madras City Police Act there is one provision to remove a person from one district to another. I wish to point out to this House that there is one principal financier or illicit distiller. He instigates " A " to do the illicit distillation work, " B " for carrying and " C " for selling. " A " may have some group of men, " B " may have another group of men and "C" may have another party of Sales Agencies. Now this is the principal man, who is now doing his business in Madras. He is the person to be removed. By such removal he cannot get the same facility of A, B, C's help easily. Please remember he cannot do the business because his connections are severed.



THIRU S. J. SADIQ PASHA : Clause 20 says if a person is gain convicted of the same offence the court may, if it thinks fit, t the time of passing the sentence of rigorous imprisonment on uch person, also by order direct such person to remove himself after the expiry of such sentence outside the City of Madras or any listrict in mofussil or other area specified in such order and the Judge can also order him to go to Maharashtra or Mysore. It is not stated in the Act that the Judge can order him to go within Tamil Nadu State only. So the Judge can take refuge under this Section and order a man to go to Bangalore or Pondicherry.

THE HON. THIRU K. NARAYANASWAMY : The person subjected to such removal order certainly will not be sent to Pondicherry. Let us forget about the words " Banishment ", " Externment " and all that. English is a language of certain nuances. Several English words have got different meanings. Even a synonym cannot do justice to another English word. Therefore it is only " removal ".

I have also mentioned that as far as the burden of proof is concerned the Prosecution has got the responsibility for prooving. As far as the Constitutional validity is concerned I am afraid my dear friend Latheef must understand me in the proper light. I am not arrogant enough to underestimate his knowledge of Constitutional law, but I very respectfully say he has referred to Article 194, am I right ?

THIRU M. A. LATHEEF: Article 194 which confers Constitutional competence on this House to legislate.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Article 194, my learned friend has referred. I would not have referred to that now but for his intervention and reference this morning. With reference to Articles 194, 13 and 14 I beg have to tell him, already I have mentioned that the Law that has been found to be *intra vires* and for that purpose I will give the quotation: I will quote the relevant Section. The old Madras Act was enacted when Rajaji was there and Sections 100 (2) and 100 (3) of the Government of India Act of 1935 which empowered the provincial Legislature the power to legislate were included in the Provincial list II, entry 31—liquors and list III, entry 19—intoxicating drugs. Therefore that has been upheld by the Supreme Court, in A. S. Krishnan's case. This comes under Article 246(2) and not 194. I respectfully tell you with the greatest respect to you. If I am in the wrong, you correct me any day. I tell you with the greatest respect to you.

If I am in the wrong, you correct me any day. I tell you with utmost humility that I challenge you to go and try the legality of the Act under the Articles mentioned by you. I tell you on the floor of the House that Article 246 (2) vests this Legislature with the power to legislate. List 2, entry 8, is the subject matter of legislation. List 3, entry 64 and 19 cover the intoxicating drugs.

[பிற்பகல் 12-50]

One or more points have been mentioned. Separate mention was made about vehicle. I may respectfully submit that the Sadasivam Committee has referred to that. There was some criticism relating to 'deeming provision' guilty coming under clause 9. Let us take the case of an innocent man who lends his vehicle. All that he has to show is that he has taken "due care" in the prevention of the commission of the crime. If he establishes that before the Court, the Court cannot 'deem him to be guilty' in the matter of confiscation of vehicle. Therefore, there will be confiscation. He will not be deemed to be guilty. If he proves that he had taken due care in the prevention of the commission of crime, the 'deeming fiction' in legal parlance will disappear. I beg leave to tell the House that there will be no confiscation.

I want also to mention about the other thing which has been said in the report of Sadasivam Committee.

THIRU M. A. LATHEEF: I want to intervence because I want to mention the consequential corollary. Constitutionally. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நேரம் இல்லை, கடைசியில் பேசலாமே,

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I cannot accept the proposition of the hon. Member. He is entitled to his own view of Constitutional law and about the provision made here. That is a different matter. I am not in the position of a Judge here ; I am only a legislator today. If I were a Judge, I know how to meet the argument of the hon. Member.

THIRU K. ANBAZHAGAN : I request the Hon. Minister to be a Judge over this matter for the time being.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I am taking a judicial view of this matter. In fact may I say—I do not want to tell it so openly—there has been a kind of murmur that





I am still functioning as a Judge. But my judicial fairness has not deserted me.

There was some kind of criticism about Section 15 (A) providing for the offences which are non-bailable. It was said they were punishable with more than 3 years' imprisonment and therefore there was no purpose in summary trial. I would respectfully submit to the House that a cursory analysis of the entire Act in the background of law, would reveal that Sections 6, 8, 9, 10 and 11 are still bailable offences. Even if summary powers are given, the Summary Court can only impose fine and no imprisonment. It is there in Clause 10. I want to make that clear.

THIRU K. ANBAZHAGAN : May I know whether under this Bill, it is possible for a person to be punished only with fine without any imprisonment.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Let me make it clear. I am only saying that Sections 6, 8, 9, 10 and 11 are bailable offences. They can be tried summarily. There is no summary power that has been invested now. That is only a summary provision. Nothing more than that.

THIRU K. ANBAZHAGAN : Even for simple drinking, there is no bail.

THE HON. THIRU K. NARAYANASWAMY : May I say it is non-bailable. It is punishable with six months and for first offence with 3 months. I think so far as first offence is concerned, under Schedule I, Part II Criminal Procedure Code, it becomes bailable.

Lastly, Sir, with your permission I want to read a paragraph from the Sadasivam Committee's report.

"We find that the success in the enforcement of Prohibition has varied from place to place and from time to time. Thus, when a particular officer took charge of enforcement in a district or a police station enforcement became more effective. We have been repeatedly told that by witnesses, for the stricter enforcement of the Prohibition laws and rules. We only wish to highlight the point that the same suggestion has been repeated in the case of judicial officers also. It has been pointed out that if in certain areas or at certain times the enforcement has not been satisfactory

or effective, it was not due to the Prohibition laws standing in the way. This is not to say that there is no need for modification, change or improvement in the Prohibition laws and rules. We only wish to highlight the point that the best of the laws and rules will have no effect, if they are not used properly and adequately by a machinery which is devoted to the cause of Prohibition and is determined to make a success of it. We would, therefore, like to emphasis once again the need for the improvement of the human element in the enforcement organisation, which in this context, would include the Judiciary also. For this purpose both the carrot and the stick may have to be used. A sense of social obligation and desire to help the Government achieve its goal of total Prohibition has to be created. This is not an easy task. Various methods will have to be employed by the Government to secure this objective. Again, the methods and the strategy will have to be changed and modified from time to time. We do hope that Government will give serious consideration to this problem.

So it is clear that various methods will have to be employed to make Prohibition a success. Sir, this Government will consider all the suggestions made by hon. Members in due course of time, in harmony with the spirit of what is stated by the Sadasivam Committee as such. Thank you, Vanakkam.

THIRU M. A. LATHEEF: Sir, I am very much interested in the strict enforcement of prohibition in the State and therefore I am the first person to support the Government in making prohibition a success. What I submit is that as a private person, as a Muslim, I am very happy that this Bill has been brought forward for enactment. But as a lawyer I am much worried whether this Bill, which has been brought before the House, will stand judicial scrutiny in the Courts.

[பிற்பகல் 1-00]

My objections are these. The Hon. Minister was referring to the concept of presumption. Under the criminal jurisprudence the presumption is that every accused is an innocent person, unless it is otherwise proved. That is the well-established legal convention and presumption. The legal presumption is that every accused is innocent, unless it is otherwise proved. But in this case what the Hon. Law Minister brought forward before this House is that every accused is an offender, unless it is otherwise proved. So, this is





contrary and stands against the well-established judicial presumption and also opposed to natural justice. Therefore, the Hon. Law Minister may kindly think over this question—he was a Judge—whether such a presumption can be allowed to have its place in the very important Bill as the one under consideration.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; தயவு செய்து சுருக்கமாக சந்தேகத்தை கேளுங்கள். 'ஒன் பை ஒன்' என்று சொல்லிக் கொண்டே போனால் எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் பேசிக்கொண்டேயிருக்கலாம் சுருக்கமாக முடித்துவிடுங்கள்

THIRU M. A. LATHEEF: The other question is with regard to equality before law. The Hon. Minister was referring to Article 246(2) that gives powers to the Parliament as well as to the State Legislatures to bring forward any Bill with respect to the matters listed in the Union List. So, therefore, whatever that is brought forward here, it should be conditioned and subject to the provisions under Article 194 and Article 13. In AIR 1959 the Supreme Court has clearly held you kindly refer to the decision. . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சுருக்கமாகக் கேளுங்கள், எல்லோரும் சந்தேகங்களை கேட்க வேண்டும். நீங்கள் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் மற்றவர்களுக்கு வாய்ப்பு எப்படி கொடுப்பது?

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> ; இது சட்டபிரச்சனையாக இருப்பதால் தான் இந்தச் சந்தேகங்களை கேட்கிறேன்

The Hon. Thiru K. NARAYANASWAMY: Two points have been raised by Thiru Latheef Saheb. One is about the burden of proof and the other is about the Constitutional law provisions. I have already submitted that so far as Constitutional law provisions are concerned, he is entitled to have his view and I have absolutely no objection. If he thinks his view is correct, let him embrace that view. I have absolutely no objection to that.

As regards the second point, I have already explained at some great length even by an example about the initial burden that must be discharged by the prosecution and the prosecution alone, and not the accused. Then only, after that burden of the onus of proof is discharged initially by the Prosecution, the burden of proof regarding rebuttal of presumption is on the accused and not beyond that. There is no other burden that is cast on the accused.

[1979 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள். தயவு செய்து உட்காருங்கள். இப்படியே நீங்கள் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருப்பீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : சீக்கிரமாக முடித்து விடுகிறேன். இது முக்கியப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப்அவர்களுக்கு எல்லாமே முக்கியமான பிரச்னைதான். உங்களுக்கு மட்டும் வாய்ப்புகொடுத்துக் கொண்டிருக்க முடியாது. அப்படி எல்லோருக்கும் நான் வாய்ப்புக் கொடுக்கவேண்டும். ஆகவே தயவு செய்து உட்காருங்கள், அமைச்சரிடம் ஏதாவது கேள்வியாகக் கேட்க வேண்டுமென்றால் சீக்கிரமாகக் கேளுங்கள்.

திரு. எம். ஏ, லத்தீப் ; சீக்கிரமாக முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே, இதில் அடிப்படையான பல பிரச்னைகள் இருக்கின்றன. நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார்கள். அதைப்போல் அவர்கள் சொல்வதையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன், இதில் பல சட்டப் பிரச்னைகள் வருகின்றன. என்னுடைய கவலையெல்லாம் இதுபோன்ற சட்டங்கள் கோர்ட்டுக்குச் சென்றால், அங்கு இவைகள் செல்லுபடியாகாத நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்கின்ற கவலை தான். ஆகவே தான் இதில் பல பிரச்னைகளை யோசிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே தான் இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்கிறோம். செலக்ட் கமிட்டிக்கு விட்டால், இதைப்பற்றி ஆர அமர இருந்து பிரச்னைகளைப்பற்றி விவாதிக்க முடியும். செலக்ட் கமிட்டிக்கு விடாவிட்டால் இதை நான் எதிர்க்க வேண்டியிருக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற மதுவிலக்கு அவசரச் சட்டத்திற்கு ஆதரவாக, வலுவாக சட்டத்துறை அமைச்சர் அவர்களும், சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். இந்த மது விலக்கு அவசரச் சட்டத்தை, பயங்கரச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்பதை வற்புறுத்தி நாங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆகவே அதைப்பற்றிப் பேசுவதற்கு போதிய நேரம் ஒதுக்கவேண்டும், ஒன்று. அடுத்தது, இந்தச் சட்டம் முக்கியமான சட்டம் என்பதால்தான் நான்கு நாட்களாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பயங்கரமான சட்டத்தைக் கொண்டுவருவது ஆளும் கட்சிக்கு நல்லதல்ல, ஆட்சிக்கும் நல்லதல்ல. ஆகவே இதை வாபஸ் பெற வேண்டும் என்று கோருகிறோம். இந்த முக்கியமான விஷயத்தை விளக்கமாகச் சொல்வதற்கு நேரம் வேண்டும்....



1979 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடம் கேள்வியாகக் கேளுங்கள், கேட்பதையும் சுருக்கமாகக்கேட்டுமுடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டம் மிகவும் பயங்கரமானது. தேவையற்றது. மதுவிலக்கு என்பது தேவைதான். ஆனால், இதை இப்படிப் பயங்கரமான ஒரு சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்த முடியாது என்பது எங்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை. இங்கேகூட, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள், குடிப் பழக்கத்தைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால், சோவியத் யூனியனிலே பிற இடங்களிலே இதனால், இப்படிப் பட்ட குழந்தைகள் பிறப்பதாகத் தகவல் இல்லை. இன்னும் இப்படிப் பல்வேறு உண்மைகளையெல்லாம் சுகாதார அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த விவரங்களிலே ஒரு முக்கியமான விஷயம், கடந்த கால நிதிநிலை அறிக்கைகளைப் பார்த்தால். இந்த மதுவிலக்கினால் கடந்த 5 ஆண்டுகளில் 582 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அதேபோல் வரும் 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 990 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட இருக்கிறது என்றும் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கும்போது, பழைய மதுவிலக்குச் சட்டத்திலேயே கள்ளுக்கு விதிவிலக்குகள் வேண்டுமென்று மக்கள் சொல்லும்போது, அதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யாமல், இந்தச் சட்டத்தை இன்னும் கடுமையாக்கிக் கொண்டு வருவது என்பது சரியல்ல. இந்தச் சட்டத்தின் மூலமாக இதை அமுல்படுத்த முடியும் என்கிற நம்பிக்கை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிச்சயமாகக் கிடையாது. பிரசாரத்தின் மூலமாக, அதுவும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடும், அதைப் பிரசாரத்தின் மூலமாகச் செய்ய முடியுமே தவிர, நிச்சயமாகச் சட்டத்தின் மூலமாகச் செய்ய முடியாது என்று நாங்கள் விவாதித்துக் கொண்டிருப்பதால், இந்தப் பயங்கரமான நாடு கடத்தும், கொடுமைகள் மிக்க, ஏழைகளை மேலும் ஏழைகளாக்குகின்ற, இத்தகைய அபாயகரமான சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு எஸ். ஜே. சாதுக் பாட்சா : தலைவர் அவர்களே, விளக்கத்திற்காக கேட்க விரும்புகிறேன். செக்ஷன் 7-லே,

Punishment for conspiracy என்பதிலே, when two or more persons agree—to commit or cause to be committed any offence.. இந்த செக்ஷன்படி இரண்டு அல்லது மூன்று பேர்கள் கூடிப் பேசினால் அது 'கான்ஸ்பிரசி' என்று சொல்லப்படுகிறது.

Mere agreement is enough. நான், திரு எட்மண்ட், திரு கிருஷ்ணசாமி ஆகிய மூன்றுபேரும் இன்றையதினம் காலையிலே, சாராயம் காய்ச்சுவதாகப் பேசினோம் என்று வைத்துக் கொண்டால், எங்களிலே யாராவது ஒருவர்போய் வெளியே சொன்னால், அது சதிக் குற்றமாகி விடும். அதாவது 120 (பி).

There should be some overt act. Mere agreement is not enough. (குறுக்கீடு) அப்படி நான் செய்ததாகச் சொல்லவில்லை. நெருங்கிய நண்பரைப்பற்றி அப்படிச் சொல்ல மாட்டேன். உதாரணத்திற்காகச் சொன்னேன்.

120 (ஏ) விலே, இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள் (1) சட்டத்திற்கு முரணான ஒரு செய்கையை, அல்லது (2) சட்டமுரணான வழியில் சட்ட முரணானது அல்லாத ஒரு செய்கையை, செய்ய உடன்படும்போது, அல்லது செய்விக்கும் போது அத்தகைய உடன்படிக்கை ஒரு குற்றமுறு சதி என வழங்கப்படும்—criminal conspiracy.

ஆனால், குற்றம் ஒன்றைச் செய்வதற்கான ஓர் உடன் படிக்கையைத் தவிர மற்ற உடன்படிக்கை எதுவும், அவ்வுடன் படிக்கையல்லாமல், செய்கை ஏதேனும் அவ்வுடன்படிக்கையைத் தொடர்ந்து, அத்தகைய உடன்படிக்கையின் தரப்பினர் ஒருவரால் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வர்களால் செய்யப்பட்டாலன்றி, குற்றமுறு சதி ஆகாது;

There should be some overt act. Mere preparation is not enough.

மூன்று பேர்கள் இப்படிக் கூடிப் பேசினாலே ஆபத்து என்று இருக்கிறது. குற்றங்களுக்கு உட்பட்டவராக, உடன்பாட்டிற்கு உட்பட்டவராக, 'கான்ஸ்பிரசி' என்று கருதக் கூடிய அளவுக்கு சட்டமிருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இப்படி மூன்று பேர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவதே ஆபத்து, 'கான்ஸ்பிரசி' என்றால், இதிலே போலீஸ் காரர்கள் பொய்யான வழக்குகள் போடுவதற்கு வாய்ப்பிருக் கிறது. எனவே, இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து, ஐ. பி. சி.-யிலே உள்ள செக்ஷன்கள் 120 (ஏ), 120 (பி) என்று இரண்டு விதிகள் இருக்கின்றன. இவைகள் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து இருக்கின்றன. அவைகளையாவது இதிலே சேர்க்க வேண்டும்.

They have stood the test of time. They may be accepted and the hon. Minister's proposal may be deleted.

திரு கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வைத்தீப் அவர்கள், மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் தெரிவித்ததுபோல், இன்னும் இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதுபோல், இதிலே பல கடுமையான, தண்டனைக்குரிய விதிகள் இருக்





கின்றன. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே 'கன்வின்ஸ்' ஆகவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதிலே மாற்றங்கள் தேவை என்று சொல்லப்படுகிறது. அன்றையதினம், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டதுபோல.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தீர்மானம் கொடுத்தது திரு. அம்பிகாபதி தான். மறுபடியும் பதில் சொல்லுகிற வாய்ப்பு அவருக்கு உண்டு. மற்றவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமானால், கேள்வியாகப் போட்டு, அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாமே தவிர, நீண்ட பேச்சாகப் பேசக்கூடாது. (குறுக்கீடு.) மற்றவர்கள் கொடுத்திருப்பது திருத்தம். திரு. அம்பிகாபதி அவர்கள் கொடுத்தது தீர்மானம்.

[பிற்பகல் 1-10]

திரு. கே. கந்தசாமி: கேள்வியாகக் கேட்கிறேன். இது ஆர்டினன்சாக் கொண்டு வரப்பட்டதால் ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் சட்டம் செல்லுபடியாகாது என்ற சட்ட சிக்கலைச் சொல்லுகிற காரணத்தால் அட்வைசரி கமிட்டி என்ற முறையில் ஹை லெவல் கமிட்டி போட்டுப் பரிசீலித்து நிறைவேற்ற முன்வருவார்களா? இரண்டாவது கேள்வி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்று. இரண்டு, மூன்று என்று பத்து கேள்விகள் கூடக் கேட்கலாம். எல்லோருக்கும் இந்தச் சட்டம் முக்கியமானது என்றால் எனக்கு நேரம் முக்கியம்.

திரு. கே, கந்தசாமி: பெருத்த வருவாய் நஷ்டம் ஏற்பட இருக்கிறது. 1977-க்கு முன்னால் மதுவிலக்கை அமல் நடத்தக் கூடிய மாநிலங்களுக்கு 50 சதவிகிதம் மானியம் கொடுக்க மறுக்கிறார்கள். டெக்னிகலாக ஒரு நாள் அல்லது ஒரு மணி நேரத்திற்கு மதுவிலக்கை ரத்து செய்து விட்டு அடுத்தாற்போல் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்து 50 சதவிகித மானியத்தை ஏன் பெற முயற்சிக்கக்கூடாது?

திரு. ப. சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவசரச் சட்டத்திலே 4 காபிடல் ஏ என்ற பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவிலே, போதையிலே இருப்பவர்களுக்கு ஜெயில் தண்டனை அல்லது ஃபைன் என்று இருக்கிறது அவசரச் சட்டத்திலே. அதைத் தற்போது திருத்தி அமைக்கிற வகையில் 'ஜெயில் தண்டனையும் ஃபைனும்' என்ற வகையிலே திருத்தி அமைத்திருக்கிறார்கள். அந்த 4 காபிடல் ஏ செக்ஷனில் இப்போது 'நான்—பெயிலபிள்' ஆக ஆக்கியிருக் கிறார்கள். அதிகமாக மது அருந்தியதால் போதையில் இரு

[திரு. ப. சந்திரன்] [1979 மார்ச் 13

பவர்களை அந்த நிலைமையில் காவல் துறை அதிகாரி கைது செய்வாரானால் அவரைக் காவல் நிலையத்தில் வைக்க முடியாது. அதிகமாக மது அருந்தியவர் சில நேரத்தில் இறப்பதற்குக் கூட வழிவகை உண்டு. தற்கொலை செய்து கொண்டு விடுகிற நிலைகூட ஏற்படுவதுண்டு. ஆகவே, இந்தப் பிரிவை பெயிலபிள் ஆக ஆக்கித் தண்டனையை வேண்டுமானால் ஜெயில் தண்டனையுடன் ஃபைனும் என்ற வகையில் மாற்ற அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: My respectful submission to this House is this. After answering my hon. friend, I will also further elucidate other points. If the suggestion of the hon. Member is accepted, it will lead to rendering 4 (1) j illusory, because a man is arrested and taken away. The prosecuting authorities will say that he has consumed some illicit liquor, please give him punishment. Charge sheet is filed. Then the defending lawyer would cross-examine and they would be helpless and for reasons the doctor would oblige. Then the accused would escape. That was the reason for putting this provision.

With regard to another point raised by Professor Anbazhagan I am sorry that under the old Act I said that it was three months. I am sorry it is three years. Section 4-A in the Bill provides for punishment for three years. therefore, it becomes non-bailable. This is an erroneous impression. I am sorry for that.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டம் என்பது எல்லாம் சமூக சீர்திருத்தச் சட்டம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடியது, சமூக சீர்திருத்தச் சட்டமானது முறையாக அமல்படுத்தப்பட வேண்டுமென்றால் சமுதாய மாற்றம் என்ற அடிப்படையில்தான் முடியுமே தவிர சமுதாய மாற்றம் இல்லையென்றால் அமல்படுத்த முடியாது. இப்போது இல்லிஸிட் டிராபிக் ஆக்ட், விபசாரத் தடுப்புச் சட்டம் இந்த நாட்டிலே இருக்கிறது, அந்தச் சட்டத்தின் மூலமாக கடுமையான முறையிலே தண்டித்தால் அமல்நடத்த முடியாது. சோஷலிச நாடுகளிலே விபச்சாரம் இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது எல்லோராலும். ஆகவே, சமுதாய மாற்றம்தான் இவைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது. ஆகவே 40 ஆண்டுகளாக அமல்படுத்த முடியாத சட்டத்தை இப்போது கடுமையாக்குவதால் மட்டும் அமல்படுத்தி விட முடியாது என்பதால் குறைந்த பட்சம் இதை பொறுக்குக் கமிட்டிக்காவது விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 13]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்தை மீறிய குற்றம் செய்த குற்றவாளிகளை கிரிமினல் குற்றவாளிகளோடு சேர்த்து அடைத்து வைக்கிறார்கள். அப்படியில்லாமல் அவர்களைத் தனிச் சிறையிலே அடைத்து மறுபடியும் அவர்களுக்குப் போதனை செய்யக்கூடிய ஏற்பாட்டை சட்டத்தில் கொண்டு வருவார்களா? கள்ளச்சாராயம் காய்ச்சி விட்டு சிறைக்குப் போகிறவர்கள் வேறு தொழிலுக்குச் சென்று பிழைக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் வங்கிகள் அல்லது மற்றவற்றின் மூலமாக உதவி செய்ய முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : These suggestions wil be examined by Government shortly in course of time.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சதாசிவம் தந்திருக்கிற அறிக்கையிலே சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளையெல்லாம் எடுத்துக்காட்டி நிர்வாகத்திலே எப்படி எப்படிக் குறைபாடுகள் உருவாகின்றன என்பதை எடுத்துக் காட்டி, சமுதாயம் எப்படி மாற்றப்படவேண்டும் என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி இவையெல்லாம் செய்யப்பட முடியாத நிலையில் சட்டம் மாற்றப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்று உணர்கிறேன். மற்றவைகளுக்கு எல்லாம் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படமுடியாத நிலையில், சூழ்நிலையை மாற்ற முடியாதபோது, சமுதாயத்திலே உள்ள நிலையை மாற்றாதபோது, அட்மினிஸ்ட்ரேஷனில் லக்குனா ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியாதபோது, சட்டத்தை மட்டும் கடுமையாக வற்புறுத்தாமல் இருக்க அரசு முன்வருமா?

திரு. க. சுப்பு : ரொம்ப ஷார்ட்டாக முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களுக்கு விதி தெரியும். தீர்மானம் கொடுத்தவருக்குத்தான் சந்தேகங்கள் கேட்பதற்காகத்தான் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது, சுருக்கமாக முடித்துவிடுகிறேன் என்று சொல்கிறீர்கள், எதற்காகச்சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், அப்படிச் சொல்லிவிட்டு 5 நிமிடம் எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான். ஆனால் விதி அப்படியல்ல, விளக்கம் மட்டும் ஏதாவது கேளுங்கள்.

திரு. க. சுப்பு : அப்படியென்றால் 'டு எலிசிட் பப்ளிக் ஒபினியன்' என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதிலே என்னைப் பேசவிடுங்கள், அப்படியென்றால் நான் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு, உங்கள் கட்சியின் சார்பாக 2, 3 பேர்கள் பேசியிருக்கிறார்கள். நீங்கள் திருத்தம் கொடுத்து இருக்கிறீர்கள், அதனால் தாங்களும் பேசி

யிருக்கிறீர்கள், ஆகவே, பேச முடியாது. எல்லோருக்கும் வாய்ப்பைப் பகிர்ந்து கொடுக்கிற நிலைமையைப் பார்த்து, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. க. சுப்பு : இங்கே எல்லா எதிர்க்கட்சிகளும் ஏதாவது ஒரு முறையில் இதைத் திருத்த வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள், அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற கட்சி இங்கே கிடையாது. அந்த அடிப்படையிலே இதை செலக்ட் கமிட்டிக்கு விடுவதற்கு இந்த அரசாங்கம் முன் வருமா?

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய சட்ட அறிவின்மீது எனக்கு அபாரமான மதிப்பு உண்டு. ஆனால் அவருடைய பதிலில் எனக்குத் திருப்தியில்லை என்பதால் சுருக்கமாக இவைகளைச் சொல்லிவிடுகிறேன். மூன்றாவது தடவை அந்தக் குற்றத்தைச் செய்தால் ஜட்ஜ் வேறு ஊருக்கு அவரை அனுப்பலாம் என்று சொன்னார்கள். அந்த அதிகாரம் ஜட்ஜுக்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஜுடிஷியரிக்கு இல்லாத பவரை ஏன் கொண்டு போய்த் தரவேண்டும்! ஊரை விட்டு அனுப்புவதும், அனுப்பாததும் அவருடைய டிஸ்கிரஷனரி பவர் என்று சொன்னால் மினிமம் பனிஷ்மெண்ட் 'நாட் லெஸ் தேன் சிக்ஸ் மன்த்ஸ் பார் எ பெர்சன் அதர் தேன் தி கவர்ன்மெண்ட் சர்வன்ட்' கொடுத்தே ஆகவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1–20]

இவ்வாறு ஒரு ஜட்ஜை அங்கே போட்டு நறுக்குவானேன். இங்கே மட்டும் டிஸ்கிரிஷனரி பவரைக் கொடுத்து இருக்கிறார்கள், ஆனால் வேறு ஒரு செக்ஷனில் ஆறுமாதம் தண்டனை கண்டிப்பாகக் கொடுத்தேயாக வேண்டும் என்று சொல்வதன் மூலம் I can tell you Sir by this Act you are usurping the legetimate functions and powers of the Judiciary என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் ஆறு மாதங்கள் தண்டனை கொடுப்பதும், ஆறு நாட்கள் தண்டனை கொடுப்பதும் ஜட்ஜின் டிஸ்கிரீஷனரி பவர். இது ஒன்று, அடுத்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றுதான், அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. துரை முருகன் அவர்கள் வழக்கறிஞர், இ. பி. கோ. அதாவது ஐ. பி. சி.யிலே சில குற்றங்களுக்கு either fine or punishment or both என்று இருக்கிறது, சில குற்றங்களுக்கு both fine and imprisonment என்று இருக்கிறது அதாவது சில குற்றங்களுக்கு அபராதமோ அல்லது



தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கும் அதிகாரத்தை நீதிபதிக்குக் கொடுக்கிறது. சில குற்றங்களுக்கு தண்டனை வழங்கும்பொழுது அபராதமும், தண்டனையும் கொடுக்கவேண்டுமென்று சொல்வதில், mandatory அதைக் கட்டாயம் நீதிபதி செய்ய வேண்டும். அங்கே டிஸ்கிரிஷனரி பவர் இல்லை.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் வழக்கறிஞராக இருந்தவர். இன்டியன் பீனல் கோடில், எந்த இடத்திலேயாவது shall not be less than, எவ்வளவு வருஷம் என்று இருக்கிறதா. லார்ட் மெக்காலேயைவிட நாம் என்ன பெரிய ஆட்களா?

THE HON. BLE THIRU K. NARAYANASWAMY : For instance. I would like to enlighten the hon. ble Member, Thiru K. Suppu, that so far as the offence of murder is concerned it shall be punishable with death or imprisonment for life.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். மதிப்பிற்குரிய எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்னதோடு முடிந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தண்டனையும் அபராதமும் இரண்டும் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். தண்டனை ஆறு மாதம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம், அல்லது இரண்டும் சேர்த்துக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஜட்ஜ் தண்டனை கொடுக்கும்பொழுது ஆறு மாதம் கட்டாயம் கொடுத்தே ஆக வேண்டுமென்று இல்லை. மூன்று மாதமும் 500 ரூபாயும் கொடுக்கலாம். அது அவருடைய பவர். ஆனால் இதில் அப்படியில்லை. ஆறு மாதம் தண்டித்தே தீர வேண்டுமென்பதுதான் நியாயமா என்பது என் கேள்வி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மதுவிலக்குச் சட்டத்தில் எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம், ஆனால் இந்தச் சட்டத்தில் சில தவறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதற்கு சட்ட அமைச்சரவர்கள் விளக்கம் தரவில்லை. ஆகவே, உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த சட்டத்திலே, "14-A where any animal vessel, cart or other vehicle is used in the commission of any offence under this Act and is liable to confiscation the owner thereof shall be deemed to be guilty of such offence and such owner shall be liable to be proceeded against and punished accordingly unless he satisfies the court that he has exercised due care in the prevention of the commission of such an offence. அதாவது யாராவது ஒருவரின் வாகனத்திலே மது விலக்குக் குற்றத்தை, சாராயம் கடத்துவதைச் செய்தால் வண்டியின் சொந்தக்காரர்களும் உள்ளே போக வேண்டும். உதாரணத்திற்குச்

சொல்ல வேண்டுமென்றால், அமைச்சரின் சொந்தக்காரர் அமைச்சரின் காரைப் பயன்படுத்தி மதுவிலக்குக் குற்றத்தைச் செய்தால் அமைச்சரும் உள்ளே போக வேண்டும்.

Due care செய்திருக்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அமைச்சருக்குச் சொந்தமான காரிலே மாவீரன் கடத்தினால் அமைச்சரும் உள்ளே போக வேண்டும்.

THE HON. BLE THIRU K. NARAYANASWAMY: I have already answered this question. If due care had been taken in the matter of prevention of the crime the fiction of deeming guilty will disappear and along with that, there will be no confiscation.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதில், மது விலக்கு வேண்டுமென்பதில், ஆளுங்கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சிகளுக்கும் மற்ற கட்சிகளுக்கும் உடன்பாடு இருக்கிறது என்பது எல்லோருக்கும். தெரிகிறது. ஆனால், இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு நிரபராதிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களோ என்ற பயம் பரவலாக ஆளுங்கட்சியிலே இருப்பவர்களுக்கும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கும் இருப்பதால் (குறுக்கீடு) எல்லோருக்கும் இருக்கிறது....(மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசாதீர்கள். கேள்வி கேளுங்கள், உரை நிகழ்த்த முடியாது.

திரு. ர. ஜெபமணி: இரண்டு வார்த்தை சொல்லித்தானே கேட்க வேண்டும். நான் பேச ஆரம்பித்தவுடனே மணி அடித்து விடுகிறீர்கள்.

சட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்பதில் யாருக்கும் பாகுபாடு இல்லை. ஆனால் அந்தச் சட்டம் நிரபராதிகளைத் தாக்கி விடுமோ என்ற பயம் இருப்பதால், இவ்வளவு பெரிய நல்ல சட்டத்தை, நல்ல உள்ளம் கொண்டவர்கள் கொண்டு வரும்போது, அதை எல்லாக்கட்சிகளையும் கொண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஆற அமர ஆலோசித்துச், செய்தால் சரியாக இருக்கும். ஆகவே, எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கொண்ட செலக்ட் கமிட்டிக்கு இதை விடுவதுதான் சாலப் பொருந்தும், நாட்டுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதை அமைச்சர் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வாக்கெடுப்பு.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, வாக்கெடுப்பைப் பற்றி ஒரு சந்தேகம் கேட்கிறேன். இதிலே எல்லோரும் சுயேச்சையாக வாக்குப் போடுவதிலே (குறுக்கீடு)



விவகாரம் இல்லை. ஆகவே, சுயேச்சையாக வாக்குப்போட (குறுக்கீடு) அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அம்பிகாபதி அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பெறுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி:

''ஆளுநர் அவர்களால் 30-9-1978 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1978) இப்பேரவை நிராகரிக்கிறது:

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. சுப்பு அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பெறுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி—

''That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L. A. Bill No. 13 of 1979) be circulated for eliciting public opinion''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். அதோடு, இதை டிவிஷனுக்கு விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, சட்டசபை விதிகளை நாங்கள் தெரிந்து கொள்ளமுடியாது போலிருக்கிறது. ரகசிய வாக்கெடுப்பு விடவேண்டுமென்று நான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையின் மரபு, ஆதரிப்போர் 'ஆம்' என்க, வரிசைவாரியாக நிற்க வைத்து, எதிப்போர் 'இல்லை' என்க என்று சொல்லும்படி கேட்டு, அந்த எண்ணிக்கையைப் பார்த்து முடிவு சொல்வதுதான் வழக்கம்.

[பிற்பகல் 1.30]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, மணி 1½ ஆகிவிட்டதால் வாக்கெடுப்பு எடுப்பதை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. அம்பிகாபதி அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். இன்னும் மசோதாக்கள் நிறைய இருக்கின்றன, ஐந்து நிமிடங்களுக்குள் டிவிஷனை முடித்துக் கொள்கிறேன்,

பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

The question is —

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill 1979 (L. A. Bill No. 13 of 1979) be referred to a Select Committee of the House consisting of...... Members (List of members will be given later) with instructions to report to the House before 22-3-79."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தீர்மானம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பெற்று வாக்கெடுப்பு நடைபெற்றது.

எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பில் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

## ஆதரித்தவர்கள்

1. திரு. சோ. அழகர்சாமி
2. திரு. கே. கந்தசாமி
3. திரு. எம். ஏ. லத்தீப்
4. திரு. கா. அப்புனு கவுண்டர்
5. திரு. இரா. ஆதிசாமி
6. திரு. மு. அம்பிகாபதி
7. திரு. கூத்தகுடி ச. சண்முகம்
8. திரு. ப. சந்திரன்
9. திரு. ர. ஜெபமணி
10. திரு. கொ. இராமசாமி
11. திரு. பொ. விஜயராகவன்
12. திரு. செ. சிவசாமி
13. திரு. பொ. உத்திராபதி
14. திரு. வீ. கே. கோதண்டராமன்
15. திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு
16. திரு. ரா. கிருஷ்ணன்
17. திரு, என். வரதராஜன்
18. திரு. எம். அண்ணாமலை
19. திரு. தே. ஞானசிகாமணி
20. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்



1979 மார்ச் 13]

21. திரு. மு. கருணாநிதி
22. திரு. க. அன்பழகன்
23. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
24. திரு. என். சங்கரய்யா
25. திரு. என். கிட்டப்பா
26. திரு. கு. ரமணி
27. திரு. சி. கோவிந்தராசன்
28. திரு. சி. ஆறுமுகம்
29. திரு. மு. அரங்கநாதன்
30. திரு. மு. செல்வராஜ்
31. திரு. க. சுப்பு
32. திரு. ரெ. இராசமாணிக்கம்
33. திரு. செ. இராமலிங்கம்
34. திரு. கோ. இளங்கோவன்
35. திரு. கே. உச்சி
36. திரு. எஸ். கணேசன்
37. திரு. ப. சுந்தரம்
38. திரு. கே. சுப்ரவேலு
39. திரு. அ. செல்லப்பா
40. திரு. அ. செல்வராசன்
41. திரு. புலவர் கா. கோவிந்தன்
42. திரு. கெ. சொக்கலிங்கம்
43. திரு. வ. துலுக்காணம்
44. திரு. பெ. சு. திருவேங்கடம்
45. திரு. துரை முருகன்
46. திரு. அ. நடராசன்
47. திரு. எஸ். நடராசன்
48. திரு. தி. சு. நல்லதம்பி
49. திரு. மொ. பரமசிவம்
50. திரு. து. புருஷோத்தமன்
51. திரு. ப. பொன்னுரங்கம்
52. திரு. மா. மணிமாறன்
53. திரு. எஸ். மணிமுடி
54. திரு. மா. மீனாட்சிசுந்தரம்
55. திரு. கூ. ச. முருகேசன்
56. திரு அ. ரகுமான்கான்
57. திரு. வி. ரகுராமன்
58. திரு. த. வேணுகோபால்

## எதிர்த்தவர்கள்

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. ப. உ. சண்முகம்
3. திரு. மு. அப்துல்ரசாக்
4. திரு. இரா. அமிர்தராஜ்
5. திரு. ரா. அய்யாசாமி
6. திரு. அ. க. அரங்கநாதன்

7. திரு. வி. அர்சுனன்
8. திரு. தி. அன்பழகன்
9. திரு. இல. ஆறுமுகம்
10. திரு. கே. என். கே. இராமசாமி
11. திரு. எஸ். ஜே. இரமாசாமி
12. திரு. எஸ். வி. இராமசாமி
13. திரு. கே. ஜே. உய்யகொண்டான்
14. திரு. கி. எத்திராஜ்
15. திரு. வி. கருப்பசாமி பாண்டியன்
16. திரு. ம. கண்ணன்
17. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
18. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
19. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்
20. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி
21. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்
22. திரு. துரை கோவிந்தராசன்
23. திரு. எம். வின்சென்ட்
24. திரு. ஆனூர் ஜகதீசன்
25. திரு. பி. முசிறிபுத்தன்
26. திரு. கா. வே. கந்தசாமி
27. திரு. ஆர். காளியப்பன்
28. திரு. வே. கருணாமூர்த்தி
29. திரு. செ. கிருஷ்ணன்
30. திரு. நா. கிருஷ்ணன்
31. திரு. பி. கிருஷ்ணன்
32. திரு. கி. பெ. காந்தமுத்து
33. திரு. ப. குருசாமி
34. திரு. போ. கோபாலன்
35. திரு. மு. ரெ. கோவிந்தன்
36. திரு. கா. நா. சண்முகம்
37. திரு. ஆர். சண்முகம்
38. திரு. ஆர். சந்திரசேகரன்
39. டாக்டர் கே. சமரசம்
40. திரு. சோ. சாது செல்வராஜ்
41. திரு. தா. சாமிக்கண்ணு
42. திரு. பொ. சிகாமணி
43. திரு. வி. கொ. சின்னசாமி
44. திரு. க. இரா. சின்னராசு
45. திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்
46. திரு. கே. ஜே. சுப்பிரமணியம்
47. திரு. மா. சுப்பிரமணியம்
48. திரு. ஆர். சி. சுப்பிரமணியம்
49. திரு. டி. சுப்பிரமணியம்
50. திரு. வ. மு. சுப்பிரமணியம்
51. திரு. கா. செங்கோடன்
52. திரு. கு. அ. செங்கோட்டையன்
53. திரு. சீ. செல்வராஜ்



[பிற்பகல் 1—40[

54. மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம்
55. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து
56. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்
57. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
58. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
59. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்
60. திரு. ஐசரிவேலன்
61. திரு. எம். ஏ. ஜெயவேலு
62. திரு. ஆ. வெள்ளைச்சாமி
63. திரு, ரா. கா. சு. தண்டபாணி
64. திரு. பா. கோ. கிட்டு.
65. திரு. இ. தமிழரசன்.
66. திரு. இரா. அருணாசலம்.
67. திரு. ந. தனசேகரன்.
68. திரு. இரா. தாமரைக்கனி.
69. திரு. ப. துரைசாமி.
70. திரு. சு. மா. துரைசாமி.
71. திரு. கா. நாச்சிமுத்து.
72. திரு. எஸ். பட்டாபிராம்.
73. திரு. ஏ. எம். பரமசிவன்.
74. திரு. சு. பழனிசாமி.
75. திரு. பி. எச். பாண்டியன்.
76. திரு. கே. பாலாஜி.
77. திரு. அ, பாலுச்சாமி.
78. திரு. எம். பெரியசாமி.
79. திரு. என். பெருமாள்.
80. டாக்டர் ஏ. பொன்னுசாமி.
81. திரு. ஆர். மணிமாறன்.
82. திரு. க. மருநாசலம்.
83. திரு. சி. மாணிக்கம்.
84. திரு. எஸ். முத்துசாமி.
85. திரு. இரா. முத்தையா.
86. திரு. பொ. முனுசாமி.
87. திரு. எஸ் முனிரத்தினம்.
88. திரு. யா. சை. மு. யூசுப்.
89. திரு. கோ. ரகோத்தமன்.
90. திரு. நு. ராமசாமி.
91. திரு. பி. ராமதாஸ்.
92. திரு. சி. ராமநாதன்.
93. திரு. செ. மெ. ராஜு.
94. திரு. வி. கே. ராஜு.
95. திரு. சு. முத்துசாமி கரையாளர்.
96. திரு. ஓ. சோ. வேலுச்சாமி.
97. திரு. பொ. தங்கவேலு கவுண்டர்.
98. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
99. திரு. மு. சௌந்தரராஜன்.

100. திரு. கே. சௌந்தரராஜன்.
101. திரு. என். குப்புசாமி.
102. திரு. சௌ. வே. வரதராஜன்
103. திரு. ச. மு. வாசன்.
104. திரு. கே. வடிவேலு.
105. திரு. நா. சுந்தரராஜ்.
106. திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி.
107. திரு. ரெ. வீ. சவுந்திராஜன்.
108. திரு. ஏகாம்பர ரெட்டி.
109. திரு. ச. சதாசிவம்.
110. திரு. து. ராமசாமி.
111. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.

## நடுநிலை வகித்தவர்கள்

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானத்திற்கு ஆதரவாக 58 வாக்குகள். எதிராக 111 வாக்குகள். ஆகவே தீர்மானம் தோல்வியுற்றது.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு விடாமல், மேற்கொண்டு பிரிவு வாரியாக ஆய்வு நடத்துவதற்கு எடுத்துக்கொள்ள இருப்பதால், இதிலே உள்ள பல கடுமையான தன்மையுள்ள பிரிவுகளை விவாதிக்க சரியான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால், மேற்கொண்டு இந்த சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள எங்களுடைய கட்சி விரும்பவில்லை என்ற காரணத்தால், மார்க்கிஸ் கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(பின்னர் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையில் திடமான நம்பிக்கை கொண்டதும். மது விலக்குச் சட்டம் ஏற்கனவே இருக்கிற சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தினால் போதும் என்று கருதுவதுமான திராவிட முன்னேற்றக்கழகம், இன்று கொண்டுவந்துள்ள இந்த அவசரச் சட்டம் தேவையில்லை என்று கூறியும், இது நடுத்தர மக்களையும், உழைப்பவர்களையும், ஏழைஎளியவர்களையும் மிகவும் பாதிக்கும் என்று எடுத்துச் சொல்லியும், இது செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று வற்புறுத்தியும், அரசு இணங்காத காரணத்தால், இதற்கு மேற்கொண்டு பிரிவு வாரியாக நடக்கும் விவாதத்தில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை என்று கூறி, வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக்கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்)



திரு. சோ. அழகர்சாமி : அதே காரணங்களுக்காக எங்களுடைய கட்சியும் வெளிநடப்பு செய்கிறது.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்)

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, மது விலக்கை நிறைவேற்றுவதைப் பாராட்டுகிறோம் என்றாலும், செலக்ட் கமிட்டிக்கு விடவில்லையென்றாலும் அட்வைசரி கமிட்டி போடவேண்டும் என்று கேட்டேன். அந்த அறிவிப்பாவது வரும் என்று எதிர்பார்த்து, வாக்-அவுட் செய்யாமல், சபையில் அமர்ந்து இருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மது விலக்கை நிறைவேற்ற இன்றைய சட்டத்தின் மூலக் கொள்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். மது விலக்கு மிகத் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று அரசு நினைக்கும் நினைவில் பங்கு கொள்கிறேன். ஆனால் அரசியல் சட்டத்தின் விதிகளில் சேர்க்கப்பட்டு இருப்பதாலும், அதைக் கொண்டே தீவிரமாக அமல் செய்ய வழிவகைகள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், இதில் கண்டுள்ள கஷ்டங்கள் நீக்கப் படாத காரணத்தாலும், இந்தப் பிரச்சினையில் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்)

திரு. ப. சந்திரன் : தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கையில் உழைப்பாளர் கட்சி அழுத்தமான நம்பிக்கை கொண்டு இருக்கும் கட்சி. அதிலே சிறிது மாற்றம் வேண்டும் என்பதற்காக மற்றவர்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று கேட்டோமே தவிர கொள்கையளவில் நாங்கள் எங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி : ''தமிழ்நாடு, 1979-ஆம் ஆண்டு மது விலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேறப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

உறுப்பினர்கள் எவரும் கொடுத்திருந்த திருத்தங்கள் யாவும் திரும்பப் பெற்றனவாகக் கருதப் பெற்றன. திரு. க. சுப்பு அவர்களின் திருத்தங்கள் இருக்கையில் இல்லாததால், பேரவை விதி 76 (2) இன் கீழ் தள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

[பேரவைத் தலைவர்] [1997 மார்ச் 13

பிரிவு-24

The Hon. THIRU K. NARAYANASWAMI : Sir, I move the following Amendment,

"In clause 24, for sub-clause (2), *substitute* the following sub-clause, namely :—

(2) Not withstanding such repeal anything done or any action taken (including any penalty, forfeiture or punishment incurred) under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act:

Provided that in respect of offences under Section 4-A of the principal Act committed before the date of the publciation of this Act in the *Tamil Nadu Government Gazette* the punishment shall be as provided in section 4-A of the principal Act as in force immediately before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது;

பிரிவு 24, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1·50)

பிரிவு 1

The Hon. THIRU K. NARAYANASWAMI : Sir I move the following amendment :

for clause 1, *substitute* the following clause, namely :—

" 1 Short title and commencement:— (1) This Act may be called the Tamil Nadu prohibition (Amendment, Act, 1979.

(2) This Act, except section 4, shall be deemed to have come into force on the 3rd October, 1978 and section 4 of this Act shall come into force of the date of the publication this Act in the *Tamil Nadu Government Gazette*.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு—1 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.



1979 மார்ச் 13]

The Hon. THIRU K. NARAYANASWAMI : Sir, I move :— "That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 13 of 1979), as amended, be passed.

Mr. Speaker, Sir, I have also to make one announcement of policy. The suggestion made by the hon. Member Thiru Kandasami, that the Government may be pleased to appoint an Advisory Committee to watch the working of this Act will be considered seriously and earnestly by the Government.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது. சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

117. பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்த மையச் சமையற் கூடப் பராமரிப்புப் பட்டறையில், பொருள்கள் மேலாளர், பணிப்பொறியாளர் ஆகியப் பதவிகளைத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளர் அமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர் அமைப்பு—எம்) துறையின் 24-11-1978-ஆம் தேதியிடப் பெற்ற 1310 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*69. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979).

---

9-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது

[1979 மார்ச் 13

## இணைப்பு I

[409-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 367க்கான விடையைக் காண்க.)

கடந்த ஐந்தாண்டுகளில், மைய அரசு, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகத்துக்காக வழங்கிய மானியங்களின் விவரம் :—

| | | |
|---|---|---|
| 1. 1973-1974 திட்டத்தின் கீழ் புத்தகங்கள், மரச் சாமான்கள், அலுமினியம், ஏணி முதலியன வாங்க. | ரூ. | 60,000 |
| 2. 1974-75 பாதுகாப்புக்கான சாதனங்கள் | ரூ. | 50,000 |
| மரச்சாமான்கள் வாங்க .. | ரூ. | 50,000 |
| 3. நகல் எடுக்கும் கருவி வாங்க (Reprography equipment) .. | ரூ. | 1,00,000 |
| 4. கையெழுத்துப் பிரதிகளை புத்தகமாக.. வெளியிடுவதற்கு. | ரூ. | 1,00,000 |
| 5. அச்சகம் நிறுவுவதற்கு .. .. | ரூ. | 50,000 |
| 6. கட்டிடத்தை விரிவாக்குவதற்கு .. | ரூ. | 50,000 |
| 7. புத்தகம் கட்டுவதற்கு (Re-binding of books) .. .. | ரூ. | 50,000 |

இந்நூலகம் மேலும் நல்ல முறையில் செயல்பட அக்கறை கொண்டு இந்நூலக அபிவிருத்திக்காகத் தேவையான நிதி உதவியை நிர்ணயிக்க, மைய அரசு 1977–78-ல் ஒரு வருகைக் குழு (Visiting Committee) அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி, 1977-78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட செலவினங்களுக்காக ரூ.2.5 லட்சம் நிதி உதவியளித்துள்ளது.

| | | |
|---|---|---|
| (அ) கட்டிடங்களை பழுது பார்த்து புதுபிக்க | ரூ. | 1,00,000 |
| (ஆ) புத்தக அடுக்கம் வாங்க | ரூ. | 50,000 |
| (இ) இரசாயன பொருள்கள் வாங்க | ரூ. | 35,000 |
| (ஈ) மைக்ரோ பிலிம் வாங்க | ரூ. | 15,000 |
| (உ) அச்சகத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்க. | ரூ. | 50,000 |

இத்துடன், 1978-79 ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்நூலகத்தில் சில கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உள்ள சில பணியிடங்களை மேல் நிலைப்படுத்துவதற்காகவும், தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 60,000-ம், முதலீட்டுச் செலவினங்களிக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 3.5 லட்சம் வரை நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது.



1979 மார்ச் 13]

## இணைப்பு II

[414-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 372 க்கான விடையைக் காண்க]

(அ) தமிழ்நாட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சென்னை தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 17-5-1978 அன்று உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

(இ) உடன்பாட்டின் நிபந்தனைகள் பின்வருமாறு:—

(1) வேலை அளவுக்கேற்ப கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் 2—5—1978 முதல் தொழிலாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 1·80-ம் 2-5-1979 முதல் நாளொன்றுக்கு ரூ. 3·00-ம் தவிப்பட்ட ஊதிய உயர்வாக நிர்வாகம் கொடுக்கும்.

(2) வேலை அளவுக்கேற்பக் கூலி பெறும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையில் 9—3—78 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையையொட்டி ஊதியம் கொடுக்கப்படும்

(3) தற்போதைய ஆண்டு ஊதிய உயர்வு வீதம் தொழிலாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 காசாக உயர்த்தப் பெறும்.

(4) நிரந்தரத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2 ஜதை உடைகள் (பெண் தொழிலாளிக்கு சேலையும், ரவிக்கையும், ஆண் தொழிலாளிக்கு அரைக்கை சட்டையும், அரைக்கால் சட்டையும்) வழங்கப்படும்.

(5) 1978-ம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதி முதல் அகில இந்திய சராசரி விலைவாசிப் புள்ளியின் (அடிப்படை 1960) 300 புள்ளிகளுக்கும் மேற்பட்டு அதிகரித்த ஒவ்வொரு ஐந்து புள்ளிக்கும் 5 காசு என்ற வீதத்தில் தொழிலாளர்களுக்கு அகவிலைப் படியை நிர்வாகம் கொடுக்கும்.

(6) தொழிலாளர்கள் 2—5—1978-ல் கொடுத்த வேலை நிறுத்த அறிவிப்பில் எழுப்பிய பிற கோரிக்கைகளை [illegible]

(7) இந்த உடன்பாடு 17—5—1978 முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் செயலில் இருக்கும்.